# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

# ஆண்டறிக்கை

# 2018

தேசிய கணக்காய்வு அலுவலகம்

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வச் சின்னம்

### இந்த உத்தியோகபூர்வச் சின்னத்திற்காக பயன்படுத்திய குறியீடுகளிலிருந்து பின்வரும் அர்த்தங்கள் நிருபனமாகின்றன.

- சின்னத்தில் மேலே காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் மூலம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது
- அதன் நடுவிலுள்ள தராசு மூலம் சுகந்திரமும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள இரண்டு ஒலிவ் கிளை சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள  தாவர இலை மூலம் தேசிய கலாச்சாரம் பிரதிபலிக்கின்றது.

## எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

## எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

## எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்
2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல
3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

## எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்



# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செய்தி

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு உரித்தாகவுள்ள பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டினை பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பேணிவருவதற்காக சுதந்திரமான பரிசோதனையினை நடாத்துதல் மற்றும் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் என்பன அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணியாக உள்ளது. இப் பணியினை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற எனது அறிக்கைகளின் ஏழாவது தொகுதியாக இந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய அறிக்கைகளை பின்வரும் ஏழு தொகுதிகளின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.*

| | | |
|---|---|---|
| *முதலாம் தொகுதி* | - | *அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்* |
| *இரண்டாம் தொகுதி* | - | *அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள்* |
| *மூன்றாம் தொகுதி* | - | *நியதிச்சட்டமற்ற நிதியங்கள்* |
| *நான்காம் தொகுதி* | - | *வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்* |
| *ஐந்தாம் தொகுதி* | - | *மாகாண சபைகள்* |
| *ஆறாம் தொகுதி* | - | *உள்ளூராட்சி அதிகாரசபைகள்* |
| *எட்டாம் தொகுதி* | - | *செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள்* |
| *ஒன்பதாம் தொகுதி* | - | *அரச கம்பனிகள்* |
| *பத்தாம் தொகுதி* | - | *விசேட கணக்காய்வு அறிக்கைகள்* |

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதனது பதவியணியினருக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவரது சுதந்திரத்தினை செயற்பாட்டுப் பரப்புகளில் மாத்திரமன்றி நிதி மற்றும் நிர்வாகத்திலும் பாதுகாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, 2015 திசெம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவினால் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையிலுள்ள பதவியணியினரின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதிவிநீக்கங்கள் இந்த ஆணைக்குழுவினால் இடம்பெறவேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 யூலை 17 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வித்தல் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 ஆகஸ்ட் 01 முதல் செயல்வலுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையினை தாபிக்க

முடியாத நிலையேற்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையினதும் பெறுமதிமிக்க பங்களிப்பை அமைச்சரவை உணர்ந்துள்ளமையாலும் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவை என்ற பெயரில் புதிதாக சேவையொன்றை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறித்த இரண்டு சேவையினைதும் உத்தியோகத்தர்களை உள்ளீர்த்தல் செய்யும் பொறுப்பு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதிமீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செயவதற்குமானதொரு சட்டமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தொழிலிருந்து எழுகின்ற அழுத்தங்கள் உள்ளிட்ட சவால்மிக்க மற்றும் நாள்தோரும் மாற்றத்திற்குள்ளாகின்ற சுற்றாடலை எதிர்கொள்ளும் விதத்தில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தை தாபித்தல் முக்கியமானதாக உள்ளது. தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் அமுலாக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையாகவுள்ள கணக்காய்வுப் பதவியணியினருக்கான சேவைப் பிரமாணக் குறிப்பினை உருவாக்குவதற்கு இது வரை முடியாது போயிருந்தது. இதன் காரணமாக கணக்காய்வுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு தடையேற்பட்டுள்ளதுடன், பதவியணியினருக்கு பதவியுயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் இழக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுப் பணிகளை மேற்கொண்டு மதிநுட்பமான மேற்பார்வை மற்றும் புலனாய்வுகளை முன்னெடுப்பதற்காகவும் கணக்காய்வின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கு ஏற்ற விதத்திலும் 63 பிரிவுகளின் கீழ் கணக்காய்வு மற்றும் உதவிச் சேவைகளை ஒழுங்கமைத்து அலுவலகத்தின் ஒழுங்கமைத்தல் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் முக்கித்துவமிக்க கடமைப் பணிகளை கருத்திற்கொண்டும் அரசாங்கத் துறை தற்போது முகங்கொடுத்துள்ள சிக்கல்களை புரிந்துகொண்டும் பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகம் எதிர்பார்க்கின்றது. கணக்காய்வு அறிக்கைகளை பயனுள்ளவையாகவும் வினைத்திறன் மிக்கவையாகவும் வழங்குவதற்காக அலுவலகத்தின் வினைத்திறனை தொடர்ச்சியாக முன்னேற்றுவதற்கும் மீளாய்வுசெய்வதற்கும் அலுவலகம் பொறுப்புடன் செயற்படவேண்டியுள்ளது. இறுதியாக அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுச் சுதந்திரமானது அலுவலகத்தின் பயனுள்ள பிரதான ஆயுதம் என்பது தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வுத் திணைக்களத்தின் கடமைக்காக தம்மை அர்ப்பணித்துள்ள பதவியணியொன்றுடன் வேலை செய்தல் எனக்கு கிடைத்த கௌரவமாக உள்ளதுடன் அவர்களது கடமைகளை வினைத்திறனாக செயலாற்றலுடன் நிறைவேற்றுவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன், பொது முயற்சிகள் குழுவினதும் பொதுக் கணக்குகள் குழுவினதும் தலைவர்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள், துணையாக நின்று கணக்காய்வுப் பணிகளில் ஈடுபட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம், கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள், திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளிற்கு உதவியாக இருந்த சனாதிபதியின் செயலாளர் அடங்கலான சனாதிபதி செயலகத்தின் பதவியணியினர், நிதி அமைச்சின் செயலாளர் அடங்கலான பதவியணியினர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு உள்ளிட்ட நிர்வாகத்திற்கு உதவிபுரிந்த ஏனைய அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு பங்களித்த சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராளுமன்றத்தினதும் பொது மக்களினதும் தேவைகளிற்கு அமைவாக எனது கணக்காய்வுகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதில் நான் மிக்க ஆர்வத்துடன் செயற்படுகின்றேன்.

**டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
2019 ஒக்தோபர் ஆந் திகதி

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| எமது ஒழுங்கமைப்பு | 01 | பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 249 |
| சட்டரீதியான நிறைவேற்றல்கள் | 04 | சுற்றுலா | 253 |
| எமது நிறுவனக் கட்டமைப்பு | 12 | நகர அபிவிருத்தி | 257 |
| பதவியணியினர் பயிற்சி | 16 | கைத்தொழிலும் வர்த்தகமும் | 262 |
| தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துதல் | 20 | வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் | 268 |
| பாராளுமன்றத்திற்கு உதவுதல் | 20 | போக்குவரத்து | 271 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படுகிழன்ற மிகை அறவீடு | 23 | சமூக வலுவூட்டலும் நலனோம்பலும் | 279 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு | 25 | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | 283 |
| விசேட புலனாய்வுக் கணக்காய்வும் மக்கள் பிரதிநித்துவக் கணக்காய்வும் | 48 | தொடர்பாடல் | 286 |
| 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் | 61 | உயர் கல்வி | 290 |
| 2018 இல் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள் | 69 | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 296 |
| திரட்டு நிதியம் | 103 | பெற்றோலிய வள அபிவிருத்தி | 300 |
| பொதுப் பாதுகாப்பு | 121 | கிராமியக் கைத்தொழில் அலுவல்கள் | 307 |
| அரசாங்க தொழில் முயற்சிகள் | 125 | நகர்த் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் | 315 |
| உள்ளூராட்சி அதிகாரசபைகள் | 135 | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளம் | 321 |
| வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள் | 141 | விவசாயம் | 324 |
| வங்கியியல் | 147 | கலாச்சார அலுவல்கள் | 331 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | 167 | சிறைச்சாலைகள் மற்றும் புனரமைத்தல் நடவடிக்கைகள் | 335 |
| காணி அலுவல்கள் | 174 | அரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன் | 339 |
| கல்வி | 179 | மாகாண சபைகளின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் | 345 |
| தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 186 | மேல் மாகாண சபை | 353 |
| சுற்றாடல் | 192 | மத்திய மாகாண சபை | 355 |
| வெளி விவகாரம் | 195 | தென் மாகாண சபை | 358 |
| வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் | 198 | வட மாகாண சபை | 360 |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளம் | 202 | வடமேல் மாகாண சபை | 363 |
| சுகாதாரம் மற்றும் போசாக்கு | 208 | வட மத்திய மாகாண சபை | 365 |
| வெகுசன ஊடகம் | 219 | ஊவா மாகாண சபை | 368 |
| சட்டமும் ஒழுங்கும் தெற்கு அபிவிருத்தியும் | 223 | சப்ரகமுவ மாகாண சபை | 371 |
| துறைமுகங்கள் மற்றும் கப்பற் செயற்பாடுகள் | 227 | கிழக்கு மாகாண சபை | 376 |
| நெடுஞ்சாலைகள் | 233 | | |
| அனர்த்த முகாமைத்துவம் | 239 | | |
| விளையாட்டு அலுவல்கள் | 244 | | |

## எமது வரலாறு

முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஆரம்பத்தினை பிரித்தானியர் காலத்தின் ஆரம்பப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 1776 இல் தீவினை கைப்பற்றி 3 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 1779 ஆம் ஆண்டின் போது ஆரம்ப பகுதியில் சிசில் ஸ்மித் என்பவர் கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்துள்ளமை ஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது. அன்று முதல் இலங்கையின் உயர் கணக்காய்வு நிறுவனமாக 40 கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திர நிறுவனமொன்றாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்/தேசிய கணக்காய்வு அலுவலகம் தொழிற்பட்டு வருகின்றது.

## கணக்காய்விற்காக எமக்குள்ள அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு முதன்மையாக கிடைத்துள்ளது. அது 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளில் மிகவும் விரிவாக உள்ளது.

கம்பனியொன்றின் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்று கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வைத்திருக்குமாயின் அக் கம்பனிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த அதிகாரம் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டு கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41 (ஆ) என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள ஆணைக்குழுக்கள், நிர்வாகத் திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், ஏதாவது ஏழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதுமாக கருதப்பட்டுள்ள எந்தக் கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை வைத்திருக் கின்றதோ அக் கம்பனிகள் எவற்றையும் அவற்றின் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.”

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ள அதிகாரம் கீழே காட்டப்பட்டுள்ள சட்ட விதிகளில் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

- அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II
- மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க
- மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு
- மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு
- நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு
- பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு
- கமநல அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க

கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு

- விளையாட்டுச் சங்கங்களைக் கணக் காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் கடமைகளையும் புரிவதற்கு அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றது. தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது.

## எமது சேவை பெறுனர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லை அரசியலமைப்பினால் தெளிவு படுத்தப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கான அத்துடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரின் கடமைகளை மேற்கொள்ளும் போதும் கையளிக்கும் போதும் சகல புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளையும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் களஞ்சியங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும், கணக்காய்வினை மேற்கொள்வதற்கும் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பத்தொன்பதாவது திருத்தச்சட்டத்தில் கம்பனிகளையும் உள்ளடக்கி அது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள எமது சேவை பெறுனர் அடிப்படை பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| அமைச்சுக்கள் | 51 |
| திணைக்களங்கள் | 96 |
| மாவட்டச் செயலகங்கள் | 25 |
| கூட்டுத்தாபனங்கள் | 204 |
| அரசாங்க கம்பனிகள் (பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டவை) | 141 |
| அரசாங்க வங்கிகள் | 10 |
| நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 60 |
| வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள் | 164 |
| ஏனைய சுயாதீன நிறுவனங்கள் | 23 |
| மாகாண சபைகள் | 09 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | 341 |
| கமநல சேவை நிலையங்கள் | 561 |
| விளையாட்டுச் சங்கங்கள் | 64 |
| மாகாண சபைகளிலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் | 253 |
| மாகாண சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் | 44 |
| **மொத்தம்** | 2046 |

## எமது நோக்கெல்லை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பாகம் ஐ இலுள்ள 3 முதல் 5 வரையான பிரிவுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் நோக்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய,

- கணக்காய்வாளர் தலைமையதிபதியினால்
    - திரட்டு நிதியத்தினாற் பெறப்பட்ட எல்லா வருமானங்களையும் திரட்டுநிதியத்திலிருந்தான எல்லாச் செலவினங்களையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்;
    - செலுத்தீடு செய்யப்பட்டனவாகக் கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகளில் காட்டப்பட்ட பணங்கள், அவை எந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது பொறுப்பிக்கப்பட்டுள்ளனவோ அந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங்களுக்காகச் சட்டமுறையாகக் கிடைக்கக்கூடியனவாகவிருந்தன மற்றும் ஏற்புடையற்பாலனவாகவிருந்தன என்பதை நிச்சயித்தல் வேண்டும்;
    - செலவினமானது அதனை அனுமதிக்கின்ற அதிகாரத்துக்கு இசைந்தொழுகுகின்றதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்; அத்துடன்
    - ஒவ்வொரு கணக்காய்விலும், வருமானம், செலவினம், கொடுக்கல்வாங்கல் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.
- கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வொன்றின் நோக்கெல்லை, கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகள், நிதிகள், நிதிநிலைமை மற்றும் பகிரங்க நிதியினதும் ஆதனங்களினதும் புத்திசாலித்தனமான முகாமைத்துவம் என்பனவற்றைப் பரிசோதனை செய்வதனை உள்ளடக்கும்.
- இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, எடுத்துக்கூறப்பட்ட விடயங்கள் பற்றிய கணிசமான எண்பிப்புடன் சேர்த்து பொதுமக்கள் எவராலும் எழுத்தில் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் ஒரு கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பானதுமான ஏதேனும் விடயத்தைப் பரிசோதனைசெய்யலாம் என்பதுடன் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லை தீர்மானிக்கப்படுவதுடன், இது தொடர்பில் அவர் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய,

- ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், 29ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியக் கணக்காய்வு அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படும் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.
- இலங்கைக் கணக்காய்வு நியமங்களில், நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள், தொழில்நுட்பக் கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்பட்டிராதவிடத்து, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது, அத்தகைய கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாக வேண்டிய உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை, உள்'ர்த் தேவைப்பாடுகளுக்கொவ்வ அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கலாம்.
- பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE)

ஆகியவற்றாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழி காட்டப்படுகின்றார்.

## எமது சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் அரசியலமைப்பினால் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் மீதான அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**“கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவிவகித்தலும் வேண்டும்.”**

நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம்.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு அமைச்சரினதும் அல்லது அரசாங்க அலுவலகத்தினதும் மேற்பார்வைக்கு உட்படுவதில்லை.

## சட்டரீதியான நிறைவேற்றுதல்கள்

### சட்டரீதியான நிறைவேற்றுதலுக்கான தேவைப்பாடுகள்

கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்ட போதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுநர்களால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் மட்டுப்படுத்தல் இல்லாமலாக்கப்பட்டிருந்தது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்திற்கோ தனிநபருக்கோ முற்றாக கடப்பாடு இன்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவராயும் அவர் இருத்தல் வேண்டும். பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. மீளாய்வாண்டு வரை கணக்காய்வு தலைமை அதிபதி அவரின் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியிலேயே ஒத்துழைப்புடன் அவர் தங்கியிருக்க வேண்டியுள்ளதுடன், திணைக்களத்திற்கான மூலவள ஒதுக்கீடு திணைக்களம் எதிர்நோக்குகின்ற இடர்களுடன் பிணைந்தவையாக காணப்படவில்லை. ஏனைய முன்னேறிய பொதுநலவாய நாடுகள் போல் அல்லது இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் நீதித்துறைக் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்படுவதோ அல்லது அங்கீகரிக்கப்படுவதோ இல்லை. அவரது வரவு, செலவுத் திட்டம் தொடர்பாக நிறைவேற்றுனர்களது கட்டுப்பாடுகளிலிருந்து விலகும் வகையில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதன் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது பதவியணியினரதும் நிர்வாகச்

சுதந்திரத்தை பாதுகாத்தல், பதவியணியினரது நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் தொடர்பாக விடயங்கள் தொடர்பிலான நிர்வாகம் தேசிய கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், அரசியலமைப்பின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி "அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பான விசேட பட்டியலில்" சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டுள்ள சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க தடைகளாக இருந்துள்ளன.

ஐக்கிய இராச்சியத்தின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் ("இன்டொசாய்") 1977 இன் "லீமா பிரகடனத்தில்" அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 30 ஆண்டுகளிற்குப் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலின் போதான (2007 மெக்சிகோ) மெக்சிகோ பிரகடனத்தில் அரசாங்க நிறுவனங்களின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரம் தொடர்பாக நிரந்தரமான பின்வரும் 8 விடயங்கள் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளன.

### கொள்கை 1

அர்த்தமுள்ளதும் பயனுள்ளதுமான அரசியல மைப்பிற்கு இணங்க / நியதிச்சட்டரீதியான / சட்டரீதியான கட்டமைப்பொன்று மற்றும் அந்த கட்டமைப்பினுள் நடைமுறையில் அமுல்படுத்தப்படும் ஏற்பாடுகள் காணப்படுகின்றமை.

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய சுவாதீனத்தின் அளவினை விரிவாக காட்டும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் அவசியமாகின்றது.

### கொள்கை 2

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கல்வியியல் நிறுவனங்களின்) அங்கத்தவர்கள் தமது கடமைகளை சாதாரணமாண முறையில் நிறைவேற்றும் போது அவர்களின் பதவிகளின் பாதுகாப்பு மற்றும் சட்டச் சூழலின் சுவாதீனத்துவம்.

பின்வரும் நிலைமைகளுக்கு கட்டுப்படும் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களினதும் கல்வியல் நிறுவனங்களின் அங்கத்தவர்களின் நியமனம், மீள் நியமனம், வேலை வாய்ப்பு, பதவி நீக்கம் மற்றும் ஓய்வூதியம் பெறல் தொடர்பான நிபந்தனைகள் குறித்த சட்டங்களை இயற்றுதல் மூலம் விசேடமாக காண்பிக்கப்பட வேண்டும்.

- அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படும் நடைமுறையின் மூலம் சுவாதீனத்துவத்தை சான்றுறுதிப்படுத்தும் நியமனங்கள், மீள் நியமனங்கள் அல்லது பணி நீக்கம் (அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுவாதீனத்துவம் மற்றும் தொடர்புடைய ISSAI II வழிகாட்டி கோவை மற்றும் சிறந்த நடைமுறைகள்).
- தமது கட்டளைகளை (Mandate) எதிர்ப்புகளின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தும் அச்சமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான முறையில் போதியளவான நீண்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையுடன் மேற்கொள்ளப்படும் நியமனங்கள்; மற்றும்
- தமது கடமைகளை உரிய முறையில் நியாயமான முறையில் நிறைவேற்றும் போது கடந்த காலத்தில் அல்லது தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு பணியொன்றை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் முறைப்பாடொன்றின் போதான தடைகாப்பு. (Immune)

### கொள்கை 3

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பணிகளை நிறைவேற்றும் போது

போதியளவில் பரவலாக்கப்பட்ட கட்டளை (Mandate) மற்றும் பூரணமான விருப்புரிமை.

பின்வரும் பணிகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம், அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

- பொது நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களை பெற்றுக்கொண்ட நபரொருவர் அல்லது நலனாளியொருவரால் அவற்றை பாவனைக்கு உட்படுத்தல் தொடர்பான அதனது நாளாந்த தன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது கணக்காய்வுக்கு உட்படுத்துதல்.
- அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல்.
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பில் சட்டரீதியான மற்றும் நியாயத்தன்மை;
- நிதி முகாமைத்துவத்தின் மற்றும் அறிக்கையிடலின் தரம்; மற்றும்
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் விளைதிறன்.

சட்டரீதியாக அவ்வாறு செயற்படுமாறு குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களால் அரசினது அல்லது அரச நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வுக்கு உட்படுத்த கூடாதெனினும், அவர்களது கணக்காய்வு நடவடிக்கையானது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு பூரண விருப்பத்தின் பிரகாரம் செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவர்கள் அரச நிதிய பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பாக சர்வதேச அமைப்பினதும் சர்வதேச அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் அந்த நிறுவனங்களுக்குரிய முறையில் அரசியலமைப்பு ரீதியில் விதிக்கப்படும் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பினூடாக அல்லது நிறைவேற்று ரீதியாக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளில் அல்லது தலையீடுகளில் இருந்து அந்த கணக்காய்வு நிறுவனம் விடுதலையளிக்கப்படும்;

- கணக்காய்வு பிரச்சினைகளை தேர்ந்தெடுத்தல்;
- அவர்களது கணக்காய்வினை திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்படுத்துதல், நடாத்துதல், அறிக்கையிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;
- தமது அலுவலகங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம்;
- அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தமது கட்டளையின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது தமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்;

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் தாம் கணக்காய்வு செய்யும் ஒழுங்கமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் ஏதேனுமொரு விதத்திலான தலையீடொன்று அல்லது தலையீடொன்று இடம்பெறுவதாக தென்படும் வகையில் செயற்படலாகாது.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தம்மால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கூடாதென உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் அவர்கள் நோக்கங்களுக்கமைய செயற்பட்டவாறு உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமது கடமைகளை நிறைவேற்றும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பூரணமான விருப்புரிமையின் அடிப்படையில் செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவர்கள் அரசின் நிதியங்களின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு பாடுபடும் அரச அல்லது அரச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச கணக்காளர் சம்மேளனத்தினாலும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை விதிக்கும் நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாக கொண்ட பொருத்தமான பணிகள் மற்றும் கணக்காய்வு நியமங்களைப் போன்று ஒழுக்கநெறிக்

கோட்பாடுகளும் அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் சட்டங்கள் மூலம் அல்லது சட்டங்களை உருவாக்குவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்றினை அல்லது அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் சட்ட மன்றத்திற்கு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த நிறுவனத்தால் அந்த அறிக்கைகள் பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்கு இடமளிக்க வேண்டும்.

### கொள்கை 4

தடைகளின்றி தகவல்களை பெறக்கூடியதாக இருத்தல்.

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்திற்கு சொந்தமான சட்டரீதியான பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை உரிய நேரத்தில், செம்மைத்தன்மையுடன், நேரடியாக மற்றும் சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதியளவான அதிகாரங்கள் அந்த நிறுவனத்திடம் காணப்பட வேண்டும்.

### கொள்கை 5

தமது பணிகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான உரிமையும் கடப்பாடும்

தமது கணக்காய்வு பணியின் பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பில் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகளை விதிக்கக்கூடாது. தமது கணக்காய்வு பணிகளின் பெறுபேறின் கீழ் வருடத்திற்கு ஒரு தடவையாவது அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டத்தினால் கட்டளையிடப்பட வேண்டும்.

### கொள்கை 6

கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கம் மற்றும் கால நிர்ணயத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கருத்துக்களை பொருத்தமான முறையில் கவனத்திற் கொண்டு தமது கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை குறிப்பிடலும் பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது முறையான கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கான குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் அறிவித்தலொன்று சட்டரீதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அறிக்கையிடுவதற்கு தேவையான விடயங்கள் குறிப்பாக சட்டத்தினால் நிரணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர்ந்த தமது கணக்காய்வு அறிக்கைகளின் கால நிர்ணயத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- ஒட்டுமொத்தமான முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது அரசினால் விசாரணையொன்று இல்லாத போது கணக்காய்விற்காக விசேட கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு அவற்றை நிறைவேற்ற முடியும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகளை சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய அதிகாரிகளுக்கு முறையாக சமர்ப்பிப்பதன் மூலம் கையளித்ததன் பின்னர் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளிக்க வேண்டும்.

### கொள்கை 7

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தின் பரிந்துரை தொடர்பில் விளைவுடைய பின்தொடர் பொறிமுறையொன்று காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளினை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கைகளை

மேற்கொண்டு மீள்திருத்த படிமுறைகளை எடுப்பதற்கு உரிய முறையில் சட்ட மன்றங்களுக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போன்றே உரிய முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபை போன்றவற்றின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் உரிய முறையில நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உரித்தான உள்ளக பின் தொடர் முறைமையொன்று காணப்படுகின்றது.

- பின்தொடர் நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்கு உரித்தான அரசியலமைப்பு அதிகாரங்கள் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படும் போதும் அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய பின்தொடர் அறிக்கைகள் உரித்தாகும் வகையில் சட்டமன்றத்திற்கு அல்லது அதனது ஆணைக்குழுவொன்றிற்கு அல்லது கணக்காய்வினை மேற்கொண்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

### கொள்கை 8

நிதி மற்றும் முகாமைத்துவம் / நிர்வாக தன்னுரிமை மற்றும் பொருத்தமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தேவையான மற்றும் சராசரி மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்பட வேண்டும். இந்த வளங்களை பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கோ செயற்படுத்துவதற்கோ நிர்வாகிகள் முன்வரக்கூடாது. அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தனது பாதீட்டினை அவர்களாலேயே முகாமை செய்து பொருத்தமான முறையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்.
- சட்டமன்றம் அல்லது அதன் ஆணைக்குழுவொன்று அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தமது கட்டளையினை (Mandate) நிறைவேற்றுவதற்கு தேவையான உரிய வளங்களை கொண்டுள்ளதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவரகளின் கட்டளைகளை (Mandate) நிறைவேற்றுவதற்கான படிமுறைகளை எடுப்பதற்குரிய அளவில் இல்லாதிருப்பின் அது தொடர்பில் நேரடியாக சட்டமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை அந்த கணக்காய்வு நிறுவனத்திற்கு காணப்படுகின்றது.

அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாத்திரம் தொடர்பில் குறிப்பிடுவதுடன் அவரது பதவியணியினரைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆகையால் ஏனைய நாடுகளிலுள்ளவாறு தனிப்பட்ட அதிகாரச்சட்டமொன்றினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியனரது அதிகாரமும் பொறுப்பும் வரையறுத்துக் கூறப்படுதல் வேண்டும். அத்தேவைப்பாடு 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் கிடைத்து உள்ளது.

## அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பின் 153 மற்றும் 154 ஆம் உறுப்புரைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் நிதிசார் சுதந்திரத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன்

அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவி வகித்தலும் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினை தாபித்தல். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியினை வகித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I இன் அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய 3 ஆண்டுகள் நிரந்தர பதவிக்காலத்திற்காக சனாதிபதியினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

- இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்பவற்றிற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை திணைக்களத்தின் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்றது.

- அரசாங்கத்தினால், அரச கம்பனியொன்றினால் அல்லது உள்ளுராட்சி மன்ற நிறுவனமொன்றினால் கம்பனிச் சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட கம்னியொன்றின் பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்துள்ள சகல அரச கம்பனிகளிலும் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடரயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களது சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக “பகிரங்க உத்தியோகத்தர்” *என்ற* வரைவிலக்கிணத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுனர்களின் எவ்வித தலையீடுகளுமின்றி மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகள் வழங்கப்படுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தேசிய பாதீட்டில் கூட்டிணைப்பதற்காக நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

## 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும், ஏற்பாடு செய்வதற்கும், பகிரங்க நிதி மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நோக்க விடயங்களுக்கான ஏற்பாடுகளும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான ஏற்பாடுகள் பின்வருமாறு இருந்தது.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரச நிதியங்களின் நிதிக் கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களின் பரிட்சிப்பு மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் ஏனைய விஷேட

கணக்காய்வு என்பவற்றை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடியுமான வகையில் விடயப்பரப்பெல்லை விரிவுபடுத்தப்பட்டமை.

- கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்குரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அந்த விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான சான்றுகளுடன் பொது மக்ககளிடையே எவரேனும்மொருவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அறவிடுவில்லையாராயின் அந்த விடயங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்கப்பட முடியுமாக இருந்ததுடன் அது தொடர்பாக பாரளுமன்றத்திற்குப் அறிக்கையிடப்பட வேண்டும்.
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படுவதுடன் அது சகல கணக்காய்வாளர்களுக்கும் ஏற்புடையதாகும்.
- செயலாற்றல் கணகாய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காக இலங்கை கணக்காய்வு நியமங்களின் எந்தவொரு கணக்காய்வு நியமத்தையும் குறித்துரைக்காத சந்தர்ப்பங்களின் போது உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப அவசியமான திருத்தங்களுடன் உள்ளடக்கிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட வேண்டும்.
- அரச கூட்டுத்தாபனம், அரச கம்பனிகள் தவிர ஏதாவது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அல்லது ஏதாவது கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் சுருக்கமான அறிக்கையொன்று விநியோகிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது அரசினால் அல்லது அரச கூட்டுத்தாபனத்தால் பங்குகளில் ஐப்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தைக் கொண்டு இருக்கின்ற கம்பனியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரிய பதிவேடுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த மூன்று மாதங்களுக்குள் அதன் ஆண்டறிக்கையை பிரசுரிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- உரிய கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனம் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும், நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும் பிரதியுடன் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்களினதும் நிர்வாக சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்தம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன் திறைசேரி செயலாளரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் அல்லது சபைகள் ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட வியாபார முயற்சிகள் அல்லது ஏனைய வியாபாரங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என கருதப்படுகின்ற தனது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதமொன்றை அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது

உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதாவதொரு கம்பனியிலிருந்து கட்டணமொன்று அறவிட வேண்டியிருந்தமை.

- கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்படுகின்ற இலங்கை அரச கணக்காய்வுச் சேவைக்குரிய அங்கத்தவர்களை நியமித்தல், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் என்பன ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்தமை.
- ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்படுகின்ற நபர்களின் சம்பளம் மற்றும் ஏனைய படிகளும் வேறு அதாவது நலன்களும், சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் கருத்துரைகளைப் பெற்றதன் பின்னர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த சம்பளம் திரண்ட நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக உள்ளது.
- சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறவனத்தாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைக் காண்பிக்க வேண்டியிருந்ததுடன் வினைத்திறனான கணக்காய்வை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக வேலை செய்வதற்கு தேவையான பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுடன் கூடிய சூழலொன்றை அமைத்து வழங்க வேண்டியுள்ளது.
- நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சரால் குறித்துரைக்கப்படுகின்ற கால எல்லையில் தேசிய கண்ககாய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டும். சபாநாயகரினால் தீர்மானிக்கப்படுகின்ற தினத்தின் போது அது சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர், எதிர்வரும் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தேச செயல் நிகழ்ச்சித்திட்டங்களின் வரைவொன்று தயாரிக்கப்பட்டு சபாநாயகர்கருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள், கணக்குகள் மற்றும் ஏனைய தகவல்களைக் கணக்காய்வு செய்வதற்காக சபாநாயரால் தகைமை பெற்ற சுதந்திரமான கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இந்த பணிகளுக்காக கணக்காய்வு அலுவலகம், தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனமொன்றாக கருதப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வு கட்டணங்களில் 15 சதவீதம், பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் அரசாங்கத்தால் நிதியத்திற்கு செலவு செய்யப்படுகின்ற சகல கொடுப்பனவுகள் மற்றும் சிவில் அல்லது குற்ற வழக்குகளிலிருந்து அறவிடப்படுகின்ற ஏதாவது கிரயமொன்று வருமான மூலமாகக் கொண்டு கணக்காய்வு நிதியமொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது உரிய நிர்வாக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபருக்கு ஒத்துழைப்பு வழங்குதலை புறக்கணித்தல் குற்றமாக இருந்தமை.
- தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவை என்பவற்றில் ஏதோ ஒரு உத்தியோகத்தரின் தீர்மானத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்துவதற்கு துணிதல் குற்றமாக இருந்தமை.
- சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விதியொன்றை மீறுகின்ற ஏதோ ஒரு நபர் குற்றமொன்றை புரிவாராயின் நீதிபதியின் முன் ஆஜர்படுத்தப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியின் மீது ரூபா ஒரு இலச்சத்தை விஞ்சாத தண்டப் பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்காக

சிறையிலிடுவதற்கு அல்லது அந்த தண்டப் பணம் மற்றும் சிறையிலிடுதல் என்ற இரண்டு தண்டனைகளுக்கும் கட்டுப்படுதல்.

- அரச நிதி மற்றும் கணக்காய்வு தொடர்பான துறையில் மனிதவள இயலுமையை விருத்தி செய்யும் எண்ணத்துடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்தமை

## எமது நிறுவனக் கட்டமைப்பு


கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக காணப்படுவதுடன், திணைக்களத்தின் நிதிநடவடிக்கைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 04 மட்டங்களைக் கொண்டதாகும்.

முதலாம் மட்டம் 15 பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்குவதுடன் அவர்களால் மத்திய அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் மட்டம் 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 44 பிரிவுகளை கொண்டுள்ளன. அந்த 44 பிரிவுகளுக்கு 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் பொறுப்பாக செயற்படுகின்றனர். இப்பிரிவுத் தலைவர்களிற்கு ஒப்படைக்கப்படுகின்ற கணக்காய்வு கிளைகளின் தலைமை “கிளைத் தலைவாக” கணக்காய்வு அத்தியட்சகர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரால் நிறைவேற்றப்படுவதுடன் அவர்களிற்கு குறிப்பிட்டளவு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூன்றாவது மட்டத்தில் உள்ளனர். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட விதத்தில் தங்களது கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டுள்ள கணக்காய்வுக் கிளைகள் செயற்படவேண்டிய முறையினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கிளைத் தலைவர்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் படி கிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்த உத்தியோகத்தர்கள் நான்காம் மட்டத்தில் உள்ளனர்.

இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்டநிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்ககளப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாகஅவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டாம் மட்டத்திற்கு உரித்தான பிரதான 44 பிரிவுத் தலைவர்களிலிருந்து 12 பிரிவுகளின் தலைவர்கள் மாகாண மட்டத்தில் பிராந்திய அலுவலகங்களிற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் கண்காணித்தல் மூன்று பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) இன் கீழ் வரும் தாபனக் கிளையாலும் நிதி நடவடிக்கைகளும் பிரதான கணக்காளரின் கீழுள்ள கணக்குகள் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வினை செயற்படுத்துவதற்குரிய நிறுவனக் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.


Auditor General
DAG (HUD)
AAG- 5
SAs
AEs
DAG(TND)
AAG -10
SAs
AEs
DAG(JPC)
AAG - 5
SAs
AEs
DAG(MDP)
AAG - 1
SAs
AEs
DAG(FFP)
AAG - 5
SAs
AEs
DAG(SIN)
AAG - 2
SAs
AEs
DAG(CGL)
AAG - 12
SAs
AEs
DAG(COM)
AAG - 1
SAs
AEs
DAG(SBE)
AAG- 4
SAs
AEs
DAG(SOF)
AAG-4
SAs
AEs
DAG(SPR)
AAG - 3
SAs
AEs
DAG(ADM)
Chief Accountant
Accountant
MAs
Director (Admin)
AD(Admin)
MAs
DAG(WNS)
AAG - 3
SAs
AEs
DAG(NNE)
AAG - 3
SAs
AEs
DAG(USC)
AAG - 3
SAs
AEs

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில் மதிப்பாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 நவம்பர் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஊழியர்கோப்பின் பிரகாரம், இலங்கை கணக்காய்வுச் சேவை உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்பட்டதுடன் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்கள் 1,200 ஆக காணப்பட்டனர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினை செயற்படுத்துவதற்கான தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 யூலை 27 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 2018 ஆகஸ்ட் 01 முதல் அமுலுக்குவரும் வகையில் அதிமேதகு சனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணிக்காக வரையப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பினை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் பழைய சேவைபிரமாணக் குறிப்பின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேனும் மேற்கொள்ளப்படுவதில்லை.

மேற்படிநிலமையின் கீழ், ஆண்டின் 2018 இன் ஆரம்பத்திலும் 2018 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலும் உள்ளவாறான திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியிலும் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளன.

| புதவி | 2018 சனவரி 01 இல் உள்ளவாறு | | | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | 2019 ஆகஸ்ட் 01 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியானபதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியானபதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியானபதவியணி | வெற்றிடம் |
| **கணக்காய்வு பதவியணி** | | | | | | | | | |
| மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 3 | 1 | 2 | 3 | 1 | 2 | 3 | - | 3 |
| பிரதிக் கணக்காய்வாளர் தலைமைஅதிபதி | 15 | 11 | 4 | 15 | 11 | 4 | 15 | 11 | 4 |
| உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 44 | 22 | 22 | 44 | 32 | 12 | 44 | 28 | 16 |
| கணக்காய்வு அத்தியட்சகர் | 288 | 223 | 65 | 288 | 213 | 76 | 288 | 210 | 78 |
| கணக்காய்வுபரிசோதகர் | 1200 | 1137 | 63 | 1200 | 1102 | 98 | 1200 | 1027 | 173 |
| கணக்காய்வு சாராதபதவியணி | | | | | | | | | |
| பணிப்பாளர் - நிர்வாகம் | 1 | 1 | - | 1 | 1 | - | 1 | 1 | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - | 1 | 1 | - | 1 | 1 | - |
| ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 17 | 10 | 7 | 17 | 11 | 6 | 17 | 12 | 5 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் இணைந்ததரங்கள் | 127 | 98 | 29 | 127 | 115 | 12 | 127 | 115 | 12 |
| அறிக்கை தட்டெழுத்தாளர் | 48 | 48 | - | 42 | 42 | - | 42 | 42 | - |
| கனிஷ்ட ஊழியர்கள் | 213 | 184 | 29 | 213 | 185 | 28 | 213 | 204 | 9 |
| **மொத்தம்** | **1957** | **1736** | **221** | **1951** | **1713** | **238** | **1951** | **1651** | **300** |

அட்டவணை 01 – 2018 திசெம்பர் 31 மற்றும் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணி நிலைமை

மேலே குறிப்பிட்டவாறு, 2018 ஜனவரி 01 முதல் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 439 பேரில் 221 பேர் வரையான வீச்சில் காணப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்கள் காரணமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு

ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பாரிய தடைகள் காணப்பட்டன. 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை 300 வரை அதிகரித்திருந்தது. மேலும் வெற்றிடங்களாக காணப்படும் 04 பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிபதவிகள், 16 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகள், 78 கணக்காய்வு அத்தியட்சகர்கள் பதவிகளிற்கான ஆட்சேர்ப்புகள் உத்தேச புதிய கணக்காய்வுச் சேவைப்பிரமாணக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும்.

கணக்காய்வுப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் பெறுபேறுகள் 2019 யூலை மாதம் வெளியிடப்பட்டன. கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கமைய ஆட்சேர்த்தல் தொடர்பில் ஏற்பட்ட சிக்கல் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்பப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆட்சேர்த்தல் திட்டம் திருத்தப்பட்டு கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஏனைய கணக்காய்வு சாராத பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சேவைப் பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக்கொள்ளல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணி, இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது. அப்போது காணப்பட்ட நிலைமையின் கீழ், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரு சேவைகளிற்காகவும் தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்டு இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளையும் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்தது. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர், இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து "இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை" என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள "இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை" அரசாங்கத்தினால் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி புதிய சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அரசாங்க கணக்காய்வு ஆணைக்குழு அதனை அங்கீகரித்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. புதிய சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக் கொள்வதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மிக உயர்தொழில் தரத்தில் பதவியணியினரை பேணுவதற்கான வாய்ப்பினை இது வழங்கும். அத்துடன், புதிய சேவையின் நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவாக உள்ளமையால் அத்தொழிற் பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான இயலுமை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## பதவியணியினர் பயிற்சி

அரச வளங்கள் பொருளாதார, வினைத்திறன் மற்றும் பயனுறுதியான பாவனையை சக்தியூட்டுவதற்கு தேவையான பங்களிப்பு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு தரமான மற்றும் நம்பிக்கையூட்டுகின்ற அரச சேவையை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகளை நிறைவேற்றல் சம்பந்தமாக கணக்களிக்கும் பொறுப்பு சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை பரீசீலித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தப்படுகிறது.

இந்த நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக, 1385 கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் மற்றும் 355 உதவிச் சேவைகளிற்கான உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய பதவியிணரை தற்போது கணக்காய்வாளர் திணைக்களத்தினால் பெறப்பட்டது.

நியதிச்சட்ட கடமைகளை வினைத்திறன் மற்றும் பயனுறுதியாக நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பதவியணியினர்களை தற்காலத்திற்கு பொறுத்தமான அறிவு மற்றும் திறன்களை பலப்படுத்தல் அத்தியவசியமான காரணியாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான எதிர்பார்ப்புடன் அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development CPD) வருடத்திற்கு 80 மணித்தியாலங்களை விட குறையாத உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சி பாட நெறியை பூரணப்படுத்தும் அத்தியாவசியத்தன்மை அலுவலகத்தினால் வலியுறுத்தப்பட்டது.

அதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் ஏற்பாடு செய்வதற்கும் அதற்காக அவர்களுக்கு அவசியமான உதவியை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்காக வளப் பங்களிப்பை அலுவலகத்தில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் தகுதியான, திறமையான உத்தியோகத்தர்களின் உதவியையும் வெளிவாரி விரிவுரையாளர்களின் உதவியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள் நடைமுறை பயிற்சி மற்றும் களச் சுற்றுலாக்கள் போன்ற பயிற்சி முறைகளை பயன்படுத்தி நடாத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோத்தர்களின் வினைத்திறனையும் செயலாற்றலையும் உயர்த்துதல்.
- உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு ஆற்றல் மற்றும் விவேகத்தை வழங்குதல்.
- நிதிசார்ந்த மற்றும் சேவை சட்டங்கள் தொடர்பான அறிவை வழங்குதல்.
- குழு ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோகத்தர்களின் நல்ல மனோபாவத்தை அபிவிருத்தி செய்தல்

## உள்நாட்டு பயிற்சியை வழங்குதல்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக 2018 ஆம் வருடத்திலே அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் அனைத்து கணக்காய்வு உத்தயோகத்தர்களையும் உள்ளடக்கும் வகையில் 15 தலைப்புகளின் கீழ் 51 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு அல்லாத பதவியணியினரையுடைய உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## வெளிநாடுகளில் பயிற்சி பெறுதல்


அனைத்து கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக செயலாற்றல் கணக்காய்வு சம்பந்தமாக வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில்

ஆரம்பிக்கப்பட்ட மலேசிய செயலாற்றல் கணக்காய்வு பயிற்சி வேலைத்திட்டத்திற்காக மீளாய்வாண்டிலே 462 உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்ததுடன் வேறு 09 தலைப்புக்கள் உள்ளடக்கப்படும் வகையில் 24 கணக்காய்வு உத்தயோகத்தர்கள் 23 வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

மீளாய்வாண்டிலே திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | | | | | பயிற்சி மணித்தியால எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுதித் தலைவர்கள் | கணக் காய்வு அத்தியட்சகர் | கணக் காய்வு பரீட்சகர் | கணக்காய் வற்ற உத்தியோகத்தர் | மொத்தம் | |
| | **உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | | |
| 1 | நிதிசார் கணக்காய்வு பயிற்சிகள் | 1 | - | 8 | 35 | - | 43 | 312 |
| 2 | செயலாற்றல் கணக்காய்வு பயிற்சிகள் | 2 | - | 0 | 75 | | 75 | 2,175 |
| 3 | சுற்றாடல் கணக்காய்வு பயிற்சிகள் | 1 | - | 4 | 28 | - | 32 | 232 |
| 4 | பெறுகை மற்றும் நிர்மானக் கணக்காய்வு | 4 | 11 | 78 | 633 | - | 722 | 16,858 |
| 5 | புலனாய்வுக் கணக்காய்வு பயிற்சிகள் | 2 | - | 5 | 71 | - | 76 | 2,523 |
| 6 | ஒதுக்கீட்டுக் கணக்குகள் கணக்காய்வு பயிற்சிகள் | 7 | 12 | 144 | 542 | - | 698 | 10,121 |
| 7 | தடயக் கணக்காய்வு | 3 | 4 | 32 | 43 | - | 79 | 1,871 |
| 8 | கணனி தொடர்பான பயிற்சிகள் | 8 | 1 | 14 | 204 | - | 219 | 4,815 |
| 9 | வரி தொடர்பான பயிற்சிகள் | 3 | 43 | 199 | 737 | - | 979 | 14,196 |
| 10 | நேர் மனோபாவ அபிவிருத்திச் செயலமர்வு | 13 | 42 | 212 | 1131 | - | 1,385 | 84,092 |
| 11 | வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டக் கணக்காய்வு | 1 | - | 6 | 34 | - | 40 | 290 |
| 12 | வேளிநாட்டு தூதரகங்கள் கணக்காய்வு | 1 | 10 | 66 | 262 | - | 338 | 2,450 |
| 13 | மோட்டார் வாகன இயந்திரப் பயிற்சி | 2 | 2 | 17 | 78 | - | 97 | 2,661 |
| 14 | குாணிகளை கையேற்றல் பயிற்சி | 1 | - | 7 | 38 | - | 45 | 326 |
| 15 | ஏனைய பயிற்சிகள் | 2 | 2 | 3 | 5 | - | 10 | 189 |
| 16 | கணக்காய்வு சாராத பதவியணியினர் பயிற்சி | 2 | - | - | - | 374 | 374 | 2,712 |
| | **மொத்தம்** | **55** | | | | | **5,212** | **145,823** |
| | **வெளிநாட்டுப் பயிற்சிகள்** | | | | | | | |
| 1 | செயலாற்றல் கணக்காய்வு | 6 | 8 | 80 | 374 | | 462 | 40,194 |
| 2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | 2 | 1 | 3 | 1 | | 5 | 167 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3** | தகவல் தொழில்நுட்ப பயிற்சி | 3 | 1 | 1 | 2 | 4 | 508 |
| **4** | ASSOSAI/ SAI பயிற்சிகளும் ஏனைய கூட்டங்களும் | 8 | 5 | 5 | 1 | | 348 |
| | i. 18th Meeting INTOSAI WEGA - Indonesia | | | | | | |
| | ii. ASOSAI - Assembly | | | | | | |
| | iii. SAIS - Workshop for Engaging with Stakeholders | | | | | 11 | |
| | iv. SAI - Peer Review Conference | | | | | | |
| | v. Annual Meeting of the WGPD | | | | | | |
| | vi. Asian Evaluation Week<br>vii. Integrity Seminar<br>viii.IPSASB Capacity Building Forum | | | | | | |
| **5** | அரச கணக்காய்வு முகாமைத்துவம் | 2 | 1 | 1 | 1 | 3 | 471.75 |
| **6** | அரசாங்க கணக்கீடும் நிதி முகாமைத்துவமும் | 3 | | 1 | 2 | 3 | 217.5 |
| **7** | நிர்மாண முகாமைத்துவம் | 1 | | 1 | | 1 | 145 |
| **8** | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கான நிதி மற்றும் பொருளாதார நிர்வாகம் | 4 | | 4 | | 4 | 348 |
| **9** | பட்டப்பின் படிப்பு | 1 | | 1 | | 1 | |
| **10** | சுற்றாடல் கணக்காய்வு | 1 | | 1 | 2 | 3 | 65.25 |
| | **மொத்தம்** | **31** | | | | **497** | **42,464** |







## தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

தற்போது நிலவும் வெற்றிடங்கள் காரணமாக உருவாகியுள்ள வளப் பற்றாக்குறைக்கான இடைவெளியை நிரப்பும் நோக்கிலும் நிபுணத்துவ சேவையின் தேவைப்பாட்டை குறிப்பாக அரச வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவைப்படுகின்றனர். இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைபின் 154 ஆம் உறுப்புரை மூலம் தகமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம், தொடர்புடைய அமைச்சு, மற்றும் கணக்காய்வு கம்பனிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு கட்டண குழுவின் அங்கீகாரத்தின் மீது குறித்த கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சேவைகளுக்காக 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 33.85 மில்லியன் மற்றும் ரூபா 43.38 மில்லியன் என செலுத்தப்பட வேண்டியுள்ளது. தகமை பெற்ற கணக்காய்வாளர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்கையில் அவர்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் தரம், கம்பனியில் உள்ள பங்காளர்களின் எண்ணிக்கை, அவர்களுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கணக்காய்வுப் பயிலுனர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக கம்பனியின், நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமொன்றான அவர்களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்களால் வழங்கப்படுகின்ற தொழில்சார் சேவைகளின் தரம் என்பன அவர்களை தெரிவு செய்யும் தேர்வுகளுககு உள்ளடக்கப்பட்டிருந்தன.

பொதுவாக, ஓர் குறித்த கம்பனிக்கு ஆகக் கூடிய அளவில் 05 ஆண்டுகளுக்காக ஓர் குறித்த கணக்காய்வு ஒப்படை தொடர்ந்து வழங்கப்படும்.

பிரதான 02 அரச வர்த்தக வங்கிகள் மற்றும் பத்தொன்பதாம் அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்பட்ட 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அரச உரித்தினைக் காண்டுள்ள கம்பனிகள் உட்பட 2018 மற்றும் 2017 ஆண்டுகளில் முறையே 76 மற்றும் 72 நிறுவனங்களைக் கணக்காய்வு செய்வதற்காக பொதுத் தொழிலில் துறையில் ஈடுபட்டுள்ள முறையே 23 மற்றும் 27 கணக்காய்வுக் கம்பனிகள் எனக்கு உதவி வழங்கின. மேலும் கணக்காய்வு பரீட்சகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையால் திணைக்களத்தினால் குறித்த கம்பனிகள் நேரடிக் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கும் பிரதான இரண்டு வர்த்தக வங்கிகளின் கிளைகளை கணக்காய்வு செய்வதற்காகவும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை நியமிக்காமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானம் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் ஒத்துழைப்பு பெற்றுக்கொண்ட கணக்காய்வு கம்பனிகளின் அளவு குறைவடைந்திருந்தது.

## பாராளுமன்றத்திற்கு உதவுதல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாட்டினை பாராளுமன்றம் கொண்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகமானது, பொது முயற்சிகளின் நிதிப் பராமரிப்பும் சிக்கனமும், செயற்பாட்டு வினைத்திறனமும் செயற்திறனும் மீது பாராளுமன்றத்துக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பொறுப்புடன் அரசாங்கத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளராக செயற்பட்டு பொதுக் கணக்களிப்பொறுப்பு முறைமைக்கு பிரதான பங்களிப்பினை மேற்கொள்கின்றது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 125 மற்றும் 126 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன முறையே அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு என்பவற்றின் கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. பொதுக் கணக்குகளை

பரிசோதிப்பதன் ஊடாக பொது நிதிகள் மற்றும் வளங்களினது பயன்படுத்தலைக் கருத்திற்கொண்டு சட்டமியற்றுவோருக்கு உதவுவதே இந்த இரண்டு குழுக்களினதும் வகிபாகமாகும். ஆகையால், பொதுத்துறையின் கணக்களிப்பொறுப்பு மற்றும் பயனுள்ள நல்லாளுகையினை உறுதிப்படுத்துதல் தொடர்பில் சிக்கலான வகிபாகமொன்று இந்த இரண்டு குழுக்களிற்கும் உள்ளன. இலகுவாக கூறுவதாயின், கூட்டுத்தாபனம் அல்லது பொது முயற்சியொன்றிலுள்ள கணக்காய்வுக் குழுவிற்குரிய ஒத்த சில பண்புகளை அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு கொண்டுள்ளன.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் நிலையியல் கட்டளை 125 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொது முயற்சிகள் குழுவின் கடமையாகும். அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளினதும் குழுவினால் பணிப்புரை வழங்கப்பட முடிந்த அவ்வாறான நிறுவனங்களினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், பாதீடுகளும் வருடாந்த மதிப்பீடுகளும், நிதியிடுதல்களும் முகாமைத்துவமும் மீது குழுவானது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

நிலையியல் கட்டளை 126 இன் படி, பொதுச் செலவினத்தை சமாளிப்பதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட பணத் தொகைகளின் பகிர்வினைக் காட்டுகின்ற கணக்குகள் மற்றும் குழு தேவையெனக் கருதி பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட ஏனைய கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் அரசாங்க கணக்குகள் குழுவின் கடமைப்பொறுப்பாக உள்ளது. பொதுவாக எந்தவொரு திணைக்களம், உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியியல், நிதிசார் நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவம் மீது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அரசாங்க கணக்குகள் குழுவினால் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டு குழுக்களிற்கும் உரித்தான அங்கத்தவர்களின் உப குழுக்களை நியமிப்பதற்கு அரச கணக்குகள் குழு மற்றும் அரச முயற்சிகள் மீதான குழுவிற்கு அதிகாரமுள்ளதுடன் எந்தவொரு நபரையும் அழைத்து வினவுவதற்கும் அதிகாரமுள்ளது. அத்துடன், எந்தவொரு ஆவணத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஏனைய ஆவணத்தினை பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள் மற்றும் ஆதனங்களிற்கு பிரவேசிப்பதற்குமான அதிகாரம் அவற்றுக்கு உள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினை பொருத்தமான விதத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஏற்றவாறு பாராளுமன்றக் குழுவினால் பெயரிடப்படுகின்ற 26 பாராளுமன்ற உறுப்பினர்களை குழு கொண்டுள்ளது. அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரிசோதனைகளின் பின்னர் அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுத் தரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனரா என்பது மாத்திரமன்றி அந்த பரிந்துரைகள் பயனுள்ள விதத்திலும் முழுமையாகவும் அமுல்படுத்தப்பட்டு, மிக முக்கியமாக நிதி செயற்திறன் மற்றும் சேவைகளின் தர நிலைமை தொடர்பில் நேர்சிந்தனையான மாற்றம் இடம்பெற்றுள்ளதா என்பதனை பரிசோதித்து, அமுலாக்கப்படுகின்ற செயன்முறை குறித்து குழுக்களிற்கு மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப்பொறுப்பிற்குள் உள்ளடங்குகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பிரதிநிதிகளால் விசேடமாக கணக்காய்வில் நேரடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. குழுக்களின் செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி முக்கியமான பணியொன்றை மேற்கொள்வதுடன் மீளாய்வுக்குரிய விடயம் தொடர்பில் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களையும் அபிப்பிராயத்தையும்

வெளிப்படுத்தி குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

பின்புலத்திலுள்ள தகவல்களை வழங்குதல் மற்றும் விவாதிக்கப்படுகின்ற விடயத்துடன் தொடர்புடைய கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் குழுக்களிற்கு உதவுதலே கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணியாகும். கணக்குகள் குழுக்களின் விசாரணையின் போது தகவல்களை வழங்குதல், குழுக்களிற்கு கருத்துரை தெரிவித்தல் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வினவப்பட வேண்டிய வினாக்கள் தொடர்பில் நடைமுறையொன்றை அல்லது எவையேனும் கலந்துரையாடப்பட வேண்டிய பிரச்சினை தொடர்பான பின்புலத் தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி முன்மொழிகின்றார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய அரசாங்க நிறுவனத்தின் செயற்பாட்டுச் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு ஏறத்தாழ ஒரு மாதகால அவகாசம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் நாளதுவரையாக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குழுவில் கலந்துரையாடப்படுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சிறு குறிப்பொன்றை தயாரித்துக்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் பதிலளித்தலொன்றை கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பான செயன்முன்னேற்றம் மீதான தகவல்கள் நியாயமானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அனைத்துப் பதில்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. மீளாய்வின் நிறைவின் பின்னர் தொடர்புடைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது ஆளுகைச் சபையினால் மேற்கொள்ளப்படுகிறன. கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் கருத்திலெடுக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களைக் கொண்டு சிறியளவிலான கலந்துரையாடல் குறிப்பொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்படுகின்றது. ஆகையால். குழுவின் உறுப்பினர்களிற்கு அந்த கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து கணக்காய்வுக்கு உட்பட்டுத்தப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய நிலைமையினை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். மேலும், முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களில் வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுல்படுத்தலின் செயன்முன்னேற்றம் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படுகின்றது.

2018 ஆம் வருடத்தினுள் அரச கணக்குகள் குழுவினால் 20 அரச நிறுவனங்களை பரிசோதிப்பதற்காக 22 குழு அமர்வுகளும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தொடர்பாக 04 அரச நிறுவனங்களை பரிசோதிப்பதற்காக 05 குழு அமர்வுகளும் நடத்தப்பட்டுள்ளதுடன், பொது முயற்சிகள் குழுவினால் 28 அரச நிறுவனங்களை பரிசோதிப்பதற்காக 30 குழு அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

விசேடமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளை மதீப்பீடு செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட வினாப்பட்டியலை தயார் செய்வதற்காக தேசிய கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்களினால் அரச கணக்குகள் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஓவ்வொறு மற்றும் அனைத்து அரச நிறுவனங்களும் தமது துள்ளிமையை உறுதி செய்வதற்காக கொடுக்கப்படும் பதில்களின் செல்லுபடித்தன்மையை உறுதி செய்தலின் ஊடாக கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்கள் இக் குழுவிற்கு மேலும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படுகின்ற மிகை அறவீடுகள்

இலங்கையில் 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுவதுடன், 24 மாநகர சபைகள், 41 நகரசபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் அவற்றுள் உள்ளடங்கும் இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் உரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும்.

அந்த கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களில் சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது மோசடியினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிடப்படாத விடயங்களை மிகை அறவீடு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரத்தின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான 652 தரப்பினருக்கு ரூபா 55.56 மில்லியன் தொகையான 90 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. 2019 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 6.21 மில்லியன் அல்லது 11 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் மிகை அறவீட்டினை அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

# செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு

## பிரதான கணக்காய்வு அவதானிப்புகள்

மிருகக் காட்சி சாலைகளில் மிருகங்கள் நோய்வாய்ப்படுதல்

மரக்கறிகள் மற்றும் பழங்களின் விளைச்சலிற்குப் பிந்திய சேதம்

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் குறிக்கோள்கள் அடையப்படாமை

வானிலை அவதான நிலையத்தின் ரெடார் உபகரணங்களைத் திருத்துதல் தாமதமடைதல்

மாணவர்கள் குறைவாகக் காணப்படுகின்ற பாடசாலைகளின் செயலாற்றல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்படுவதன் ஒட்டுமொத்த செயலாற்றல் பின்னடைந்துள்ளமை

லக்விஜய மின்வலு நிலையத்தின் செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்புகள்

களனி கங்கையின் நீர் மாசடைதல்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொள்கின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு

அரச நிறுவனமொன்றில், நிகழ்ச்சித்திட்டமொன்றில், செயற்திட்டமொன்றில் மற்றும் செலவின விடயமொன்றின் தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் சிக்கனம், செயற்திறன், வினைத்திறன் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள் உட்பட அறிக்கையிடல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

அரச நிறுவனங்களில் வெவ்வேறு துறைகள் தொடர்பாக ஏனைய கணக்காய்வு கிளைகளிலிருந்து சமர்ப்பிக்கப்படும். முன்மொழிவுகள் மற்றும் இந்த செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் தாக்கம் போன்ற விஷேட துறை ஊடாக சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிதிக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றன. இத்துறைக்குரிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பயிற்சியளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வு செயற்பாடுகள் தொடர்பில் அலுவலக மயப்படுத்தப்பட்ட பாதீட்டு முறைமையொன்றை செயற்படுத்தல் மற்றும் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (முநல ˚நசகழசஅயஉெந ஐனெளை௨யவழசள) நிர்ணயித்தல் மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும் இலங்கையில் தற்போது அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு முறைமையும் செயலாற்றல் குறிகாட்டி நிச்சயிக்கப்பட்டு செயற்படுத்தப்பவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு துறைக்குரிய செயலாற்றல் குறிகாட்டிகள் எம்மால் தீர்மானிக்கப்பட்டு செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதிக்குரித்தாக மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## செயலாற்றல் கணக்காய்வு

### மிருகக்காட்சிச்சாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியம் விலங்குகளின் நலனோம்பலுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்தல்

காட்டு விலங்குகளை தொகுப்பொன்றாக கொண்டு 1920 ஆம் ஆண்டின் முன் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 1936 யூலை 01 ஆந் திகதி அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிசாலை 1946 ஆம் ஆண்டின் போது சுயாதீனமான அரச திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தேசிய மிருக காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆசியாவின் பழமையான மிருகக்காட்சி சாலையான தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு மேலதிகமாக பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சிசாலை, ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் கோனபொல விலங்குணவு பண்ணை மிருகக்காட்சிசாலை திணைக்களத்திற்கு உரியவை ஆகும்.

இந்த கணக்காய்வின் நோக்கமானது மிருகக்காட்சி சாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் விலங்குகளின் நலனுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மதிப்பாய்வு செய்தலாகும். இந்த கணக்காய்வின் பிரதான அவதானிப்புக்களுக்கிடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய நேரத்திற்கு விலங்குகளுக்கு உணவு கிடைக்காமை, விலங்குகளுக்கு இடப்படும் உணவுகளை வெளியிலிருந்து வரும் விலங்குகள் உட்கொள்ளல், வழங்குநரால் உணவிற்காக மரக்கிளைகளை விநியோகிக்கும் போது அவற்றின் கருத்திற் கொள்ளப்கூடிய அளவிலான சருகுகள் உள்ளடங்கியிருந்தமையால் கிளைகளின் நிறை குறைவடையும் சந்தர்ப்பங்களை

காணக்கூடியதாக இருந்தது. விபரம் புகைப்படம் 01 இல் காண்பிக்கப்படுகின்றது.



புகைப்படம் 01 – தெஹிவல மிருகக் காட்சிசாலையில் மிருகங்களிற்கு வழங்கிய பின்னர் எஞ்சியுள்ள மரக்கிளைக் கழிவுகள்

பற்றாக்குறையான உணவின் அளவினை பூர்த்தி செய்வதற்கான நடைமுறையொன்று இல்லாதிருந்ததுடன் யானைகளுக்காக வழங்கப்படுகின்ற உணவு அவற்றின் நிறையிலான வேறுபாட்டிற்கமைய மாற்றப்பட வேண்டிய போதிலும், நிறையினை அளவிடல் இடம்பெற்றிருக்காமை ஆகியன அவதானிக்கப்பட்டன.

2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு வருடங்களினுள் தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்குரிய மிருகக்காட்சி சாலைகளில் 328 விலங்குகள் நோய் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் மரணமடைந்திருந்தன. தேதசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரிய மிருகக்காட்சிசாலைகளின் விலங்குகளின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

- தொற்றொழிப்பு வசதிகள் இல்லாதிருந்தமை.
- விலங்குகளை ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு மாற்றும் போது கால்நடை மருத்துவரின் ஆலோசனைக்கமைய செயற்பட்டிராமை.
- பிடி யானைகள் மற்றும் களிற்று யானைகளுக்கு சிகிச்சைகளை வழங்கும் போது அந்த சிகிச்சைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றிராமை.
- விலங்குகளுக்கு இலகுவாக சிகிச்சையளிப்பதற்காக விலங்குகளின் நெறிவழியொன்று (Crush) இல்லாதிருந்தமை.

விலங்குகளின் இயற்கையான நடத்தைக் கோலங்களை காட்சிப்படுத்தக்கூடிய வகையில் வாழிடமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் சில விலங்குகளுக்கு போதிய இடவசதி இல்லாதிருந்தமை, போதியளவான நிகழ்தல் முகாமைத்துவமொன்று இல்லாதிருந்தமை ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக சில விலங்குகள் தமக்கான துணை விலங்குகளின்றி உள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. தெஹிவல மிருகக் காட்சிசாலையிலும் பின்னவல யானைகள் சரணாலயத்திலும் கழிவு நீர் உரியவாறு அகற்றப்படுவதற்கு ஏற்ற விதத்தில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரம் புகைப்படங்கள் 2 மற்றும் 3 இல் காண்பிக்கப்படுகின்றன.



புகைப்படம்: 2 தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் கற்குழியில் நிறைந்துள்ள கழிவு நீர்



புகைப்படம் - 3 பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானைகளின் மடுவத்தினை சுத்தம் செய்யும் போது கழிவுநீர் வடிகாலூடாக நீர் நிலைகளுக்கு வழிந்தோடுதல்

தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பெரும் எண்ணிக்கையிலான கூண்டுகள் இற்றுப் போயிருந்ததுடன், அன்றாடம் திருத்தங்கள் செய்து பேணப்பட்டு வருகின்றன.

ஊழியர் நலனோம்பல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மிருகக்காட்சி சாலைகளால் ஈட்டப்படும் மொத்த வருமானத்தில் மூன்று சதவீதத்திற்கு குறைவான அளவானது ஊழியர்களுக்காக செலவிடப்பட்டிருந்தமை, விலங்குகளுக்கு சிகிச்சையளிக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை தடுத்து வைப்பதற்கான நெறிவழியொன்று (Crush) இல்லாதிருந்தமையின் காரணத்தால் ஊழியர்கள் விபத்துக்களுக்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பங்கள் நிலவுகின்றமை, அவ்வாறான விபத்துக்களுக்காக போதியளவான காப்பீடொன்று இல்லாதிருந்தமை, உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டிராமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமான மிருகக்காட்சிசாலைகளிற்காக விலங்குகளினதும் ஊழியர்களினதும் அனைத்து நலனோம்பல் நடவடிக்கைகளும் உள்ளடங்கும் வகையில் விரிவான மற்றும் திட்டவட்டமான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக பேணிச் செல்லல், துணைகளற்ற விலங்குகளுக்காக துணைகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல், ஊழியர்களுக்கு மிகவும் செயற்திறனான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் தமது சேவைகளை பேணிச்செல்ல இயலக்கூடிய வகையில் பயிற்சிகளை வழங்குதல், உரிய காலத்திற்கு ஒரு தடவை மருத்துவ முகாம்களை நடாத்துதல், போதுமான காப்பீடொன்றை வழங்குவதன் மூலம் அவர்களின் சேவையின் வினைதிறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 999 மில்லியன் அளவான வருமானம் ஈட்டியிருந்ததுடன், இந்த வருமானத்தில் விலங்குகளின் உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காக 27 சதவீதமும், ஊழியர் நலனோம்பல் மற்றும் மருந்துப்பொருட்களுக்காக 2.56 சதவீதமும், நிர்மாணங்களுக்காக 16 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தது. மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் தமது வருமானத்தில் முழுமையாக உழைப்பது விலங்குகளை காட்சிப்படுத்துவதனால் என்பதால் இனங்காணப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி விலங்குகளின் நலனோம்பல் மற்றும் ஊழியர் நலனோம்பல் தொடர்பில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என முடிவுரை காணப்படுகின்றது.

**இலங்கையின் காய்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்கு பின்னரான**


**சேதத்தினை குறைத்தல் மற்றும் நியாயமான விலைக்கு விற்பனை செய்வதற்கான குறித்த அரச நிறுவனங்களின் தலையீடு**

2050 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 10.5 பில்லியனாகக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான உணவு விநியோகம் 60 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டுமென்பதும் அதனுடன் இணைந்ததாக பகிர்ந்தளித்தல் மேம்படுத்தப்படுவதற்கு மேலதிகமாக அறுவடைக்கு பின்னரான சேதத்தினை குறைத்தல், தீர்மானமிக்க காரணியொன்றென சர்வதேச ஆராய்ச்சிகளின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் மரக்கறி மற்றும் பழங்கள் அறுவடை செய்த இடத்திலிருந்து நுகர்வோருக்கு கிடைக்கும் வரையிலும் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் அல்லது அருடமொன்றிற்கு சுமார் 270,000 டொன்கள் அறுவடை விரயமாகின்றமை மற்றும் அதன்மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் நட்டம் ரூபா ஒரு பில்லியன் என்பதால் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தும் காலம் உருவாகியுள்ளது.

இலங்கையின் விவசாயிகள் அறுவடை மேற்கொள்ளும் காலப்பகுதிகளில் பெருமளவில் அவற்றை விற்பனை செய்ய முடியாது அகற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே அறுவடைக்காக ஆகக் குறைந்த அல்லது நியாயமான விலையொன்று கிடைக்காமையால் விவசாயிகளால் பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளப்படும் செலவினத்தை பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலைக்கு உள்ளாகிய சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டுள்ள.

இது தொடர்பில் பணியாற்றும் விவசாய அமைச்சில் மற்றும் அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனங்கள் அறுவடைக்கு பின்னரான தொழினுட்பம் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றனர். இதன் போது அத்தியாவசியமான பயிர்கள் மற்றும் பிரதானமான பிரிவுகள் தொடர்பான ஆராய்ச்சிகள் மூலம் போதுமானளவு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் ஆராய்ச்சி அறிக்கைகளின் பரிந்துரைகள் குறித்த அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்துவதற்கும் போதியளவில் இடம் பெற்றிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

அறுவடை செய்தல் முதல் நுகர்வோரின் கைகளை சென்றடையும் வரையான அறுவடைக்கு பின்னரான சேதம் தொடர்பான செயன்முறை உரு 04 இல் காணப்படுகிறது.




உரு 04 - அறுவடை செய்தல் முதல் நுகர்வோரின் கைகளை சென்றடையும் வரையான அறுவடைக்கு பின்னரான சேதம் தொடர்பான செயன்முறை.

அறுவடை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் ஒவ்வொரு பயிருக்கும் வேறுபடுவதுடன் அந்த சந்தர்ப்பத்தை சரியான இனங்கண்டு அறுவடை மேற்கொள்ளல் பிரதானமான விடயமாகும். அதற்காக அறுவடை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் (குறிக்காட்டி) தொடர்பில் விவசாயிகள் அறிந்திராமை, அறுவடை மேற்கொள்ளும் நடைமுறை தொடர்பில் தெளிவின்மை, அது தொடர்பான பயிற்சிகள் மற்றும் உரிய உபகரணங்கள் பகிர்ந்தளித்தல் போதியளவில் இடம் பெற்றிருக்காமை, அறுவடையை தரப்படுத்தல் தொடர்பிலான நியமங்கள் ஸடதாபிக்கப்படாரமை மற்றும் அது தொடர்பான தெளிவின்மை அறுவடைக்கு பின்னரான சேசத்திற்கு தாக்கமளித்திருந்தது.

மேலும் முறையான பொதியிடலின்றி காய்கறிகள் மற்றும் பழங்கள் களஞ்சியப்படுத்தப்படல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன அறுவடைக்கு பின்னரான சேதத்தினை அதிகரிக்கும் பிரதான காரணமொன்றாகி இருந்தது. இதன் காரணமாக பொதியிடலின் போது ஏற்படும் அறுவடைக்கு பின்னரான சேதத்தினை குறைக்கும் நோக்கில் நுகர்வோர் விவகார அதிகார சபையினால் 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் அதிவிசேட வர்தமானி அறிவித்தல்கள் 2 இல் பிரசுரிக்கப்பட்டு அறிவித்தல்கள் மூலம் முறையே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 37 மற்றும் 21 வகையான காய்கறி மற்றும் பழங்கள் சேகரிக்கும் போது, களஞ்சியப்படுத்தும் போது மற்றும் கொண்டு செல்லும் போது பிளாஸ்திக் மற்றும் கனமான கடதாசி அல்லது பலகைகளினால் தயாரிக்கப்பட்ட பெட்டிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென அனைத்து உள்நாட்டு காய்கறி மற்றும் பழங்களை கொண்டு செல்வோர் பகிர்ந்தளிப்போர் மற்றும் வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் போது முதலாவது வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பொதியிடல் பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த 16 வகையான காய்கறி மற்றும் பழங்கள் அந்த தேவைப்பாட்டிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றுள் 8 வகையான காய்கறிகள் கொண்டு செல்லும் போது மற்றும் விற்பனையின் போது ஏற்படும் அறுவடை நட்டமானது ஆகக் குறைந்தது 7.68 சதவீதம் முதல் ஆகக்கூடியது 77 சதவீதம் வரை காணப்படுவதாக தேசிய அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ நிறுவனத்தினால் 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகளின் பெறு பேறுகளுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.



உரு: 05 - மீகொட விசேட பொருளாதார நிலையம் - 2018 யூன் 26 ஆந் திகதி



உரு 06 – தம்புள்ள விசேட பொருளாதார நிலையம் - 2019 மார்ச் 19 ஆந் திகதி

அறுவடைக்கு பின்னரான சேதம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிடையே போக்குவரதடது சந்தர்ப்பத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்திருந்தது. அறுவடையினை கொண்டு செலுலும் போது ஏற்புடுமத் சேதம் தொடர்பான தரவுகள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் பிரகாரம் பாரம்பரி முறைகள்

(பொலிசெக் பைகள்) மற்றும் பிளாஸ்திக் பொதியிடல் முறைகளின் கீழ் பல்வேறு காய்கறிகளை கொண்டு செல்லும் போது ஏற்படும் அறுவடை நட்டம், பிளாஸ்திக் பொதிகளின் மூலம் கொண்டு செல்லும் போது 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான வீச்சில் குறைத்துக்கொள்ள முடியும் என சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த பிளாஸ்திக் கூடைகளின் பாவனை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.



உரு: 07 தமுத்தேகம வி.ஆ.ம. 2018 யூலை 20 ஆந் திகதி



உரு: 08 மீகொட வி.ஆ.ம. – 2018 யூன் 26 ஆந் திகதி

காய்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்கு பின்னரான சேதத்தினை குறைப்பதற்காகவும், மிகை பயிர்களை விற்பனை செய்ய முடியாது அகற்றுவதனால் விவசாயிக்கு ஏற்படும் பொருளாதார நட்டத்தினை கட்டுப்படுத்த முடியுமாக உள்ளது. சில அரச நிறுவனங்களால பெரும்பாலான உற்பத்திகளின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் சந்தையில் சுழற்சியடையாமையால் அவற்றை சந்தையினுள் உட்புகுத்துவதற்கு மேம்படுத்தல் மேற்கொள்ளல் அவசியமானதாகும்.

செய்கை திட்டத்தின் ஊடாக செயற்படுவதால் ஒவ்வோர் பயிர்ச்செய்கைகளின் ஊடாக பெற்று கொள்ள கூடிய பயன்களை அதி உயர் மட்டத்திற்கு மாற்றியமைக்க முடியுமென்பதால் செய்கை திட்டத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு போகத்திலும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள் மற்றும் அளவு தொடர்பான திட்டங்களை தயாரித்து அதனை முன்னெடுப்பதற்கான தூண்டுதல்கள் விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான தூண்டுதல்களை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

விவசாய உற்பத்திகளின் சந்தை நடவடிக்கைகளை இலகுப்படுவத்துவதற்காக பிராந்திய சந்தைப்படுத்தல் மையங்களை ஏற்படுத்துவது தொடர்பாக 1988 வரவு செலவு திட்ட உரையின் மூலம் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1999 ஆம் ஆண்டு தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டமையை தொடர்ந்து குறிப்பாக மரக்கறி விற்பனைக்காக அரச மற்றும் தனியார் துறையினருடனான பங்குடமை வியாபார அபிவிருத்திக்கு சாதகமாக சுற்றுச்சூழலை ஏற்படுத்தியது.

1999 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 15 பொருளாதார மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டன. 2019 ஜனவரி 28 ஆம் திகதி பிலியந்தலை, இரத்மலானை, நுவரெலியா, கெப்பட்டிபொல, கருவாதோட்டம், மீகொட, அம்பாரை ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களுக்கு சொந்தமான காணிகளின் சட்டரீதியான உரிமை பொறுப்பான அமைச்சினால் பொறுபேறக்கப்படவில்லை.

விவசாயிகளினால் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் மரக்கறி மற்றும் பழவகைகளை சந்தைப்படுத்தும் வரை வெயில் மற்றும் மழையினால் பாதுகாப்பு பெறுவதற்காக கடைகளுக்கு முன்னால் உள்ள பகுதிகள் மறையும் வகையில் கூரையொன்றை

நிர்மாணித்த பின்னர் அறுவடையின் பின்னர் ஏற்படும் சேதங்களை குறைக்க முடிந்தது. தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் அவ்வாறான கூரையொன்று நிர்மாணிக்கப்பட்ட போதிலும் தம்புத்தேகம, வியாங்கொடை, நுவரெலியா போன்ற பொருளாதார மத்திய நிலையங்களில் அவ்வாறான பாதுகாப்பு கூரையொன்று இல்லாமையினால் அறுவடைக்கு பின்னரான சேதங்கள் அதிகரித்தன.

தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் மேலதிகமாக கிடைக்கும் விளைச்சலை ஏனைய பொருளாதார மத்திய நிலையங்களுக்கு எடுத்துச்செல்ல விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தேவையான பழ வகைகளை வழங்கவும் பொருளாதார மத்திய நிலையங்களை ஒரு வலையமைப்பாக முன்னெடுக்க தேவையான வேலைத்திட்டங்களை குறித்த அமைச்சோ பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைத்துவமோ மேற்கொள்ளவில்லை.

விவசாயம், கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடைவள அபிவிருத்தி நீர்பாசனம் கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் விலை பட்டியல் பலகைகளோ இலத்திரனியல் விலை காட்சி பலகைகளோ வைக்கப்படவில்லை.

தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் தேவைக்கு அதிகமான மரக்கறி விநியோகம் இடம்பெறும் சில காலங்களில் அவற்றை சந்தைப்படுத்த முடியாத போது அம்மரக்கறிகள் திகாம்பத்தன பகுதிக்கு அகற்றப்பட்டன. அப்பகுதியில் நடமாடும் காட்டு யானைகளினால் அகற்றப்படும் மரக்கறிகளை அவை உணவாக கொள்கின்றன. யானைகள் அந்த மரக்கறிகளை உணவாக கொள்ளும் கட்சிகள் கீழே காணப்படுகின்றன.




உரு: 09 திகம்பனத பிரதேசத்தில் பிரதேசத்தில் யானைகளால் பொருளாதார நிலையத்திலிருந்து அகற்றப்படும் காய்கறிகள் உட்கொள்ளப்படுதல் - 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி

எனினும் இக்காலப்பகுதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் மரக்கறி விலைகளில் குறைவு ஏற்படவில்லை. தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்ய முடியாத மரக்கறி வகைகளை ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கும் வலையமைப்பொன்றை முன்னெடுக்க அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை.

2014 ஆம் ஆண்டு அறுவடைக்கு பின்னர் தொழில்நுட்ப நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் கணிப்பீடுகளின் படி 11 வகையான மரக்கறிகள் 9 வலையமைப்புக்களின் கீழ் விநியோகிக்கும் போது அம்மரக்கறிகளுள் 7.68 சதவீதத்தில் இருந்து 66.45 சதவீதம் வரையிலான பகுதி மரக்கறிகள் சேதமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மரக்கறிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு எடுத்துவரும் போதும் நுவரெலியாவில் இருந்து கொழும்புக்கு எடுத்துவரும் போதும் தம்புத்தேகமவில் இருந்து கேகாலைக்கு எடுத்துச்செல்லும் போதும் நீண்டதூரம் மரக்கறி வகைகளை விநியோகிக்கும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லும் சந்தர்ப்பங்களில் அறுவடைக்கு பின்னரான சேதங்கள் அதிகரிப்பது தெரியவந்துள்ளது. இதன் அடிப்படையில் பொருளாதார மத்திய நிலையங்கள் நாடு முழுவதிலும் ஏற்படுத்தும் முரண்பாடுகளினால் விலைகளில் அதிகம் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உற்பத்தி பகுதிகளை மையமாக கொண்ட பொருளாதார மத்திய நிலையங்களில் காணப்பட்ட விலைகள், நகர்புறங்களை மையமாக கொண்டு அமைந்த பொருளாதார மத்திய நிலையங்களின் விலைகளுக்கும் இடையே வித்தியாசம் காணப்பட்டது. அந்த வித்தியாசங்கள் குறித்து போக்குவரத்து செலவீனம் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் இடைதரகர்கள் இருப்பதும் காரணமாக அமைந்தன. அத்துடன் அந்த வித்தியாசங்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் அரச நிறுவனங்கள் தலையிடவில்லை.

## பொலிஸ் வெகுமதி நிதியம்

நாட்டின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் 24 மணிநேரமும் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முழு நேர பாதுகாப்பை வழங்குவது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்புக்களின் குற்றச்செயல்களை தடுப்பது, போதை பொருள் பயன்பாட்டை ஒழிப்பது போக்குவரத்து முகாமைத்துவம், சுற்றாடல் பாதுகாப்பு, அனர்த்தங்களின் போது மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் பொதுமக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் ஊடாக பொலிஸ் திணைக்களம் செயற்படுகின்றது. விபரம் புகைப்படம் 10 மற்றும் 11 இல் காணப்படுகின்றது.



உரு: 10 வாகன முகாமைத்துவம்



உரு: 11 சுற்றாடல் பாதுகாப்பு

இவ்வனைத்து பணிகளையும் முன்னெடுக்கும் இலங்கை பொலிஸ் அதிகாரிகளை ஊக்குவிப்பதற்காக பொலிஸ் அன்பளிப்பு நிதியம் ஏற்படுத்தப்பட்டது. 1865 16ஆம் இலக்க இலங்கை பொலிஸ் திணைக்களத்தை ஏற்படுத்துவது தொடர்பான கட்டளைச்சட்டத்தின் 72 மற்றும் 73ஆம் பிரிவுகளின் கீழ் அன்பளிப்பு நிதியம் ஏற்படுத்தப்பட்டது. 1974 ஆகஸ்ட் 7ஆம் திகதி 116ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியான அறிக்கை மூலம் இலங்கை பொலிஸ் நன்கொடை நிதியம் செயற்படுத்தப்பட்டது. 1990 மார்ச் 9 ஆம் திகதி 600/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி நன்கொடை நிதியத்தின் உத்தரவுகள் மறுசீரமைக்கப்பட்டது. பொலிஸார் ஆற்றும் கடமைகளில் அரசாங்கத்திற்கு கிடைக்கும் தண்டபணத்தில் ஒரு தொகை இந்த நிதியத்தில் வைப்பிலிடப்படும். இதன் அடிப்படையில் பொலிஸ் அன்பளிப்பு நிதியத்திற்கு இரண்டு பிரதான வழிகளில் வருமானம் வைப்பிலிடப்படுகின்றது. நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் போக்குவரத்து தண்டப்பணம் என அவற்றை குறிப்பிடலாம். அத்துடன் பொலிஸ் அன்பளிப்பு நிதியத்தில் வருடாந்தம் ஏற்படும் மேலதிக தொகையை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் முதலீட்டு வருமானத்தை மேலதிக வருமானமாக கணக்கில் வைப்பிலிடப்படுகின்றது. இந்த பிரதான வருமான வழிகள் மூலம் ஈட்டும் வருமானத்தை கொண்டு பொலிஸாரை ஊக்குவிப்பதற்காக பல்வேறு சுற்றுநிருபங்கள் மூலம் விடயங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றின் கீழ் அன்பளிப்புக்கள் வருடாந்தம் வழங்க்கபடுகின்றன. சாதாரண அன்பளிப்புக்கள், போக்குவரத்து அன்பளிப்புகள், விசேட அன்பளிப்புக்கள்,

பொலிஸ் மாஅதிபரின் விசேட அன்பளிப்புக்கள், பொழுதுபோக்கு செலவீனங்கள் என பலவகையாக அவை வகைப்படுத்தப்பட்டன.

2018 ஆம் ஆண்டு தண்டப்பண வருமானமாக ரூபா 1,931 மில்லியனும் பொலிஸ் அன்பளிப்பு நிலையத்தில் வைப்பிலிடப்பட்டதுடன், அவ்வாண்டில் அன்பளிப்பாக ரூபா 885 மில்லியனும் 2018 ஆம் ஆண்டு பொலிஸ் மாஅதிபரின் உத்தரவின் படி மேலதிக நிதி கொடுப்பனவுக்காக 70 சதவிகிதமாக காணப்பட்டதுடன், செலுத்தப்பட்ட அளவு 54 சதவீதமாகும். 2018 டிசம்பர் 31 ஆம் திகதி நிலையான வைப்பாக ரூபா 9831 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு பொலிஸ் மாஅதிபரின் உத்தரவின் படி முதலீடு செய்யப்பட வேண்டிய தொகை 10 சதவிகிதமாகும். முதலீடு செய்யப்பட்டிருந்த விகிதம் 92 சதவிகிதம் ஆகும். பொலிஸாருக்கு அன்பளிப்புக்களை வழங்கும் போது தற்காலத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் அன்பளிப்புக்களை வழங்கும் எடுகோள்கள் காலத்திற்கு ஏற்ற முறையில் மறுசீரமைக்கப்படாமை, அன்பளிப்புக்களை வழங்குவதில் தாமதமடைவது, அன்பளிப்புக்கள் கிடைக்காத பொலிசார் இருப்பது, நன்கொடை நிதியத்தின் வருமானம் மற்றும் கணக்கு வைக்கும் போது பின்பற்ற வேண்டிய கணக்கு கொள்கைகள் தொடர்பான பிரச்சினைகள் இந்நிதியம் தொடர்பாக இருந்துள்ளன. பொதுமக்கள் தொடர்புபடும் சகல விடயங்களிலும் மக்களுடன் நெருங்கி செயற்பட்டு தமது சேவையை தவறின்றி நிறைவேற்றும் பொலிஸாரை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் நன்கொடை நிதியம் முறையாகவும் பயனுள்ள விதத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## வளிமண்டலவியல் நுட்பங்களை பயன்படுத்தல்

1948 ஆம் ஆண்டின் போது தனியானதொரு திணைக்களமாக தாபிக்கப்பட்ட வளிமண்டலவியல் திணைக்களம் தற்போது இடர்கள் முகாமைத்துவ அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த திணைக்களத்தால் வானிலை, காலநிலை விஞ்ஞான சேவைகளை போன்று காலநிலை அழிவுகள் மற்றும் சுனாமி தொடர்பான முன்னெச்சரிக்கை விடுத்தலுக்கான அதிகாரம் பெற்ற தேசிய நிறுவனம் ஆகும். கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக கட்டுநாயக்க, மத்தல மற்றும் ரத்மலான விமான நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் உள்ளடங்கலான 22 வெளிவாரி அலுவலகங்கள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமான ஏனைய இடங்களில் அமைந்துள்ள 16 ஒத்துழைப்பு நிலையங்களிலிருந்தும் வானிலை எதிர்வுகூறல்களை மேற்கொள்வதற்காக தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. புவியியல் அவதானிப்புகள் மற்றும் உயர் வாயு மண்டலத்தின் தரவுகளின் கண்காணிப்பிற்காக பாரம்பரிய உபகரணங்கள் மற்றும் தானியங்கி வளிமண்டல உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பாதகமான வானிலை நிலமைகளை அறிந்துகொள்ளல், அவை தொடர்பிலான தொடர்ச்சியான கவனத்துடன் இருத்தல், எச்சரிக்கை விடுத்தல், காலநிலை நிலமைகளின் மதிப்பாய்வு மற்றும் மழைவீழ்ச்சியின் அளவினை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்காக இலங்கையில டொப்லர் ரேடார் கட்டமைப்பொன்று தாபித்தல் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அதற்காக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ரூபா 400 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக 2007 மே 24 ஆந் திகதி இடர்கள் முகாமைத்துவ அமைச்சினால் உலக வளிமண்டலவியல் சங்கத்துடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. உலக வளிமண்டலவியல் சங்கத்தின் நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் ரேடார் நிலமாக தெனியாய பிரதேசத்தில் அமைந்துள்ள கொன்கல மலையின் உச்சி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த அமைவிடம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டொப்லர் ரேடார் கட்டமைப்பு 20 மீட்டர்கள் நீளமான தூண் ஒன்றில் பொருத்தப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 சனவரி 13 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திறந்த கேள்வி கோரலிலிருந்து விலகி பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு கோபுரத்தினை நிர்மாணித்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொன்கல வரையிலும் இறக்குமதி செய்யப்பட்ட ரேடார்

கட்டமைப்பின் பாகங்களை கொண்டுவரும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மண் பரிசோதனை மேற்கொள்ளாமையால் நிர்மாணங்களுக்காக அத்திவாரம் இடும் போது மண்ணில் பிரச்சினைகள் எழுந்தமை போன்ற பல்வேறு விடயங்களின அடிப்படையில் நிர்மாணப் பணிகளை இடையில் நிறுத்துவதற்கு நேர்ந்திருந்தது. திணைக்களத்தினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12 வழிகாட்டிக்கமைய நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள பணிகளை நடைமுறைப்படுத்தல், பொருட்களை விநியோகித்தல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக போதியளவிலான மேற்பார்வையொன்று மற்றும் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணங்கள் உரிய அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்தினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் வேலைப் பகுதிகளை ஒப்படைக்கும் போது ஏற்பட்டிருந்த தாமதங்கள் மற்றும் தரத்தில குறைபாடுகள் காணப்பட்டன.

உலக வளிமண்டலவியல் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 3.3 ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவுரைகளுக்கமைய டொப்லர் ரேடார் உபகரணம் உள்ளடங்களான உபகரணங்களை கொள்வனவு செய்தல் உலக வளிமண்டலவியல் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய என்டர்பிரைஸ் இலக்டிரோனிக் கோப்பரேசனுக்கு இந்த ரேடார் உபகரணத்தினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் உலக வளிமண்டலவியல் சங்கத்தினால் கையளிக்கப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதியளவில் கட்டமைப்பினை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதனை பொருத்துவதற்கு தேவையான கேப்ஸ்டனை கொண்டு வந்த வாகனம் பாதையின் ஒரு பகுதி உடைந்து அதன் சாரதியும் விபத்திற்குள்ளாகி மலையிலிருந்து கீழே விழுந்திருந்தது. அந்த காரணங்களை அடிப்படையாக கொண்டு ரேடார் கருவியை பொருந்தும் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. 2013 ஒக்தோபர் 05 ஆந் திகதி வழங்குநரின் தொழில்நுட்ப பொறியியலாளர் வருகைதந்து உபகரணத்தின் பாகங்களை பொருத்துதல் இடம்பெற்றிருந்த போதிலும், 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதி வழங்குநர் உலக வளிமண்டலவியல் நிலையத்திற்கு கடிதமொன்றினை அனுப்பி இந்த ரேடார் கட்டமைப்பிற்கு இலத்திரனியல் இணைப்பினை வழங்க முடியாதென் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பிரதிபலனாக கொன்கல வேலைத்தளத்தில் இருந்த பாகங்கள் பழுதுபார்த்தல்களுக்காக மீண்டும் உற்பத்திக்கூடத்திற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உபகரணத்தின் பாகங்கள் மீண்டும் அமெரிக்காவில் அமைந்துள்ள உற்பத்திக்கூடத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், பழுதுபார்பதற்காக அதிக செலவினம் மேற்கொள்ள நேரிடும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அந்த உபகரணத்தின் பாகங்கள் 2013 ஒக்தாபர் மாதத்தின் போது சேகரிக்கப்பட்டதன் பின்னர் பழுதுபார்ப்பதற்காக வழங்குநருக்கு அனுப்புவதற்கு 3 ½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமாகியிருந்தது. அதன் காரணமாக அந்த உபகரணங்களின் பாகங்கள் சேதமடைவதற்கு வாய்ப்புகள் காணப்பட்டது.


இதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 142.68 ஆன பெறுமதியுடனான காப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த ரேடார் உபகரணத்தின் பாகங்களை களஞ்சியப்படுத்தும் போது மற்றும் கொண்டு செல்லும் போது சேதத்திற்குள்ளாகியிருந்த போதிலும், திணைக்களத்திற்கு அதற்குரிய நட்டஈட்டினை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. மேலும், 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் இந்த உலக வளிமண்டலவியல் சங்கத்தின் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்து ஐ.அ.டொலர் 1.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. தற்போது குறித்த இடம் பாதுகாப்பாக இருந்ததுடன், உபகரணங்களின் நிலைத்ததன்மை தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. விபரம் உரு 12, 13 மற்றும் 14 இல் காணப்படுகின்றது.



உரு: 12 எந்தவொரு நபருக்கும் இலகுவில் நுழையக்கூடியவாறு வேலைத்தளத்தினை சுற்றிலும் வேலி அடைக்கப்பட்டிருந்தது.



உரு: 13 மழை நீர் கசிந்துள்ள விதம்



உரு:14 மதுபான போத்தல்கள் எறிந்து செல்லப்பட்டுள்ள விதம்

தொகுப்பாக்கப்பட்ட டொப்லர் ரேடார் கட்டமைப்பின் வெற்றித்தன்மை தொடர்பில் நிச்சயமற்ற தன்மை மற்றும் இலங்கையின் முன்னெச்சரிக்கை அறிவித்தல்கள் தொடர்பில் டொஜ்லர் ரேடார் கட்டமைப்பின் தேவைப்பாட்டின் அடிப்படையில் புத்தளம் மற்றும் பொத்துவில் காலநிலை நிலையங்கள் இரண்டின் அலுவலக வளாகத்திற்கு அண்மியதாக டொஜ்லர் ரேடார் கட்டமைப்புகள் இரண்டினை தாபிப்பதற்காக 2017 யூன் 30 ஆந் திகதி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிலையம் (JAICA) மற்றும் இலங்கை சனநாயக குடியரசுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் போது நுழைவாயில் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் இயலுமை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி மற்றும் அலைவரிசை கட்டுப்பாடொன்று, ரேடார் இல்லாது அனுப்பப்படும் அலைகள் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இந்த பணித்தளங்கள் இரண்டும் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே இதற்காக தேவையான காணியின் அளவானது திட்டவட்டமாக இனங்காணப்பட்டிராததுடன், அதற்குரிய அளவையாளர் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காணிகளை சுவீகரிக்கும் பணிகள் மிகவும் மந்தமான முறையில் இடம்பெறுகின்றமை மற்றும் புத்தளம் வேலைத் தளத்திற்கு அண்மியதாக பாடசாலையொன்று அமைந்திருந்தது.

காலநிலை நிலமைகளை தன்னியக்கமாக அளத்தல் (தரவு சேகரித்தல்), களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் 38 தன்னியக்க காலநிலை கட்டமைப்புகள் ஜப்பானின் நன்கொடையாக 2009 ஆம் ஆண்டில் கிடைத்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பொருத்தப்பட்டிருந்தன. இதற்கமைய இந்த உபகரணங்கள் நன்கொடையாக கிடைத்து நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலற்று காணப்பட்டது. பெரும்பாலான நிலையங்களில் சில மாதங்களுக்கான எவ்வித தரவுகளும் தலைமை அலுவலகத்திறகு அனுப்பப்பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் இந்த கட்டமைப்பின் செயற்பாடு அவ்வப்போது தடைப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் சரியான வானிலை தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தரவு தொடர்பாடல் வசதிகள் தடைப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலை வளிமண்டலவியல் நிலையத்தில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள AWS கட்டமைப்பில் உபகரணங்களின் பகுதிகள் தலைமை அலுவலகத்தில் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான விபரங்கள் உரு 15, 16 மற்றும் 17 இல் காணப்படுகின்றது.



உரு: 15 வாகொல்லயில் அமைந்துள்ள AWS கட்டமைப்பு



உரு: 16 காலி வளிமண்டலவியல் திணைக்களத்தில் அமைந்துள்ள யுறுளு கட்டமைப்பின் Data Logger இல் சிறு பூச்சிகள் தங்கியுள்ள விதம்.



உரு: 17 திருகோணமலை வளிமண்டலவியல் நிலையத்தில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள AWS கட்டமைப்பின் mounting pole அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விதம்

நடைமுறை மழைவீழ்ச்சி தொடர்பான கவனத்துடன் செயற்பட்டு அவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அச்சுறுத்தல் வீடுத்தலை நோக்காக கொண்டு தெரிவு செய்யப்பட்ட 05 நதிகளுக்கு அண்மியதாக தன்னியக்க மழைமானிகள் 100 இனை நிறுவும் செயற்திட்டத்திற்காக இடர்கள் முகாமைத்துவ அமைச்சினால் ரூபா 53 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. உரிய இடங்களை தெரிவு செய்வதற்காக கூடுதலான நேரம் எடுத்திருந்ததுடன், வளிமண்டலவியல் திணைக்களத்தினால் மழைமானிகளை கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாடு இனங்காணப்படுவதற்கு முன்னர் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அந்த உடன்படிக்கைகள் நடைறைப்படுத்துவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அளவுத்திருத்த சான்றிதழ் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிராததுடன், தலைமை அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த மழைமானி நீங்கலாக ஏனைய மழைமானிகளின் தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையில் ஒப்பந்ததாரரால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளின் கீழ் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்க பயிற்சிகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்ததாரரரால் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

காற்று அழுத்தம், வெப்பநிலை, அமுக்கம், காற்றின் வேகம் மற்றும் காற்றின் திசை ஆகியன தொடர்பில் தரவுகளை வழங்குதல் ரேடியோசவுன்ட் உபகரணம் மூலம் மேற்கொள்ளப்புடுவதுடன், உலக வளிமண்டலவியல் அமைப்பின் அறிவுரைகளுக்கமைய அனைத்து அங்கத்துவ நாடுகளும் நாளாந்தம் 00 UTC மற்றும் 12 UTC ஆகிய உலக நேரங்களில் மேற்கொள்ளல் அல்லது நாளாந்தம் ஒரு தடவையேனும் ரேடியோசவுன்ட் உயர் வாயு அவதானிப்பினை மேற்கொள்ள வேண்டிய போதிலும், இலங்கையில் இந்த அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுவது பி.ப 11.30 மணிக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய 03 நாட்களில் மாத்திரம் ஆகும். பலூன் ஒன்றின் ஆயுட்காலம் 12 மாதங்கள் என வழங்குநரால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 12 மாதங்களை விஞ்சிய ஆயட்காலத்துடன்னா பலூன் ரேடியோசௌன்ட் அவதானிப்புகளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும், பலூனில் ஹயிட்ரஜன் வாயுவினை நிரப்பும் போது பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.



உரு: 18 பாதுகாப்பு உடைகளின்றி பலூன்களை அனுப்புதல்



உரு: 19 பாதுகாப்பு உடைகளின்றி பலூன்களுக்கு ஹைட்டஜன் வாயுவை நிரப்புதல்

### பாரம்பரிய வளிமண்டலவியல் உபகரணங்கள்

நாடெங்கிலும் அமைந்துள்ள 500 நிலையங்களில் மழைவீழ்ச்சி தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், ஒவ்வொரு நிலையத்தினாலும், அந்த தரவுகள் மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2-18 ஆம் ஆண்டு வரையான வருடங்களில் மழைவீழ்ச்சி அறிக்கைகள் அந்த நிலையங்களினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டிருக்கவில்லை. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் ஒவ்வொரு நிலையமும் ஆகக்குறைந்தது 2 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது அந்த மழைமானிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது அஅந்த மழைமானிகள் உரிய நியமங்களுக்கமைய இல்லாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

திணைக்களத்தின் எதிர்வுகூறல் மற்றும் தீர்மானங்கள் உதவிப் பிரிவின் கீழான தேசிய வானிலை நிலைத்தினால் மக்களுக்கு, பல்வேறு தொழிற்சாலைகளுக்குரிய மக்களுக்கு மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு இயற்கையான அனர்த்தங்கள் தொடர்பான பாதகமான காலநிலை நிலமைகள் தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற இயற்கையான விபத்துகள் மற்றும் அந்த விபத்துகள் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த முன்னெச்சரிக்கைகளின் வெற்றித்தன்மை தொடர்பில் ஆராய்வதற்காக, 2018 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் மலைப்பிரதேசங்களில் ஏற்பட்ட இடர் நிலமைகள் தொடர்பிலான மாதிரியொன்றாக பரிசோதிக்கப்பட் பிரதேச செயலாளர்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளின பிரகாரம் அந்த இடர்கள் தொடடர்பீல் முன் அபாய அச்சுறுத்தல் மூலம் மக்களுக்கு அறிவித்திருக்கவில்லை.

### மாணவர்களின் எண்ணிக்கை குறைவான அரசாங்க பாடசாலைகளின் செயலாற்றல்

இலங்கையில் காணப்பட்ட குருகுலக் கல்வி முறைமையை ஆங்கிலேயர்களால் மிசெனரி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஆங்கில மிசெனரி பாடசாலைகளுக்கு மேலதிகமாக சிங்கள பௌத்த பாடசாலைகளும், அதன் பின்னர் முஸ்லிம் மற்றும் இந்து பாடசாலைகளும் உருவாகின. தற்போது தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளாக நிர்வாக ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளும் அந்த வலையமைப்பில் இணைந்துள்ளது. அதனிடையே இலங்கையிலுள்ள பெற்றோரின் அடிப்படை விருப்பானது தமது பிள்ளைகளுக்கு சிறந்த பாடசாலையொன்றை பெற்றுக்கொள்வதாகும்.

2017 ஆம் ஆண்டின் போது இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பு 10,194 அரச பாடசாலைகளையும், அரசல்லாத 859 பாடசாலைகளையும் கொண்டிருந்தது. அரச பாடசாலைகள் மாகாண பாடசாலைகள் 9,841 இனையும், 353 தேசிய பாடசாலைகளையும் கொண்டிருந்தது. அவ்வாறே அவற்றின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 4,165,964 ஆக இருந்ததுடன், மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 241,591 ஆக இருந்தது. அதற்கமைய இலங்கையின் பாடசாலைகளின் ஆசிரியர் மாணவர் விகிதமானது 1:17 ஆக கணிப்பிடப்பட்டுள்ளது. மொத்த பாடசாலைகளில் 3.5 சதவீதமானது தேசிய பாடசாலைகளாக காணப்பட்டதுடன்,

அந்த பாடசாலைகளின் மொத்த மாணவர் எண்ணிக்கையில் 19 சதவீதமானவர்கள் கல்வி கற்கின்றனர். மொத்த பாடசாலைகளில் 40 சதவீதமானது 1 முதல் 5 ஆம் தரம் வரையான (3 ஆம் தர) மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளாக இருந்த போதிலும், மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 16 சதவீதமானோர் அந்த பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்.

பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் கல்வி கற்பதற்காக அந்த பாடசாலைகளிலிருந்து வெளிப் பிரதேசங்களிலுள்ள மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக வருகின்றனர். இந்த நிலமை காரணமாக மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் அரைவாசியான அதாவது 5,161 பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளுக்காக வருகைதரும் மாணவர்களின் எண்ணிக்கை 200 இனை விட குறைவாக இருந்தது. மாணவர்களின் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக தமது பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர் விரும்பாமை, அந்த பாடசாலைகளில் கல்வி கற்க பிள்ளைகள் விரும்பாமை, அவ்வாறான பாடசாலைகள் காணப்படுகின்றமையால் பெற்றோருக்கு தமது பிள்ளைகளை பிரசித்தமான பாடசாலைகளில் சேர்ப்பதற்கு முடியாதிருத்தல், அந்த பாடசாலைகளில் உள்ள மாணவ்களின் பெறுபேறுகள் சிறந்த மட்டத்தில் காணப்படாமை, அந்த பாடசாலைகள் மூடப்படுவதை தடுப்பதற்காக பெரும் முயற்சி எடுப்பதற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு நேர்கின்றமை, பெருமளவிலான நிலப்பிரதேசமொன்று, கட்டிடங்கள் உள்ளடங்களான ஏனைய பௌதீக வளங்களை போன்றே மனிதவளங்களும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை, அவ்வாறான பாடசாலைகளை நடாத்திச் செல்வதற்காக அரசிற்கு பெருமளவான செலவினத்தை மேற்கொள்ள நேர்கின்றமை போன்ற விசேடமான பிரச்சினைகள் மாணவர்கள் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளில உருவாகியிருந்தது.

இந்த பிரச்சினைகளை குறைத்துக்கொள்வதற்காக அரசினால் பல்வேறு செயற்திட்டங்களினூடாக பல்வேறு பௌதீக வளங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், தற்போது “அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலை” செயற்திட்டம் அந்த நோக்கத்தில் செயற்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டமாகும். இந்த செயற்திட்டங்களினூடாக பாடசாலைகளின் அபிவிருத்திக்காக கட்டிடங்கள், நீர் தேவைப்பாடுகள், சுத்திகரிப்பு தேவைப்பாடுகள் போன்ற வளங்களை அபிவிருத்தி செய்வதனூடாக இந்த பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கல்விக்காக பாரியதொரு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு அல்லது அல்லது பிரசித்தி பெற்ற பாடசாலைகளின் நெரிசலினை குறைப்பதற்கு முடியாது போயிருந்தது. எவ்வாறெனினும், கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு முரணாக புதிய பாடசாலைகளை ஆரம்பித்தல் அந்த பாடசாலைகளின் அருகிலுள்ள ஏனைய பாடசாலைகள் மூடப்படும் நிலைக்கு உள்ளாகுதல், இந்த பாடசாலைகளின் ஆசிரியர் மாணவர் விகிதமானது உயர்வான பெறுமதியினை கொண்டிருந்த போதிலும், பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றிகரமாக இல்லாமை, மிகை ஆசிரியர்கள் காணப்பட்டமை, சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் விருப்பின் அடிப்படையில் இரண்டாம் பிரிவின் தொகுதியிலான பாடங்களை தெரிவு செய்ய சந்தர்ப்பம் இல்லாதிருந்தமையால் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்லல், ஆரம்ப பிரிவின் ஆசிரியர் ஒருவர் பல வகுப்புகளை சேர்த்து கற்பிக்கின்றமையால் பிள்ளைக்கு சரியான கல்வி பாடசாலை நேரத்தினுள் கிடைக்காமை ஆகிய பிரதானமாக குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறே இந்த பாடசாலைகளின் எந்தவொரு மாணவரும் இல்லாத தரங்களையுடைய பாடசாலைகளும் காணப்பட்டதுடன், சில பாடசாலைகளில் முன் பள்ளிகள் நடாத்தப்பட்டிருந்தன. அதன் மூலம் பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதனை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், மாணவர்கள் பாடசாலைகளில் சேர்வதிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே சில பாடசாலைகளின் கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், ஆய்வுகூடங்கள் ஆகிய வளங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், சில பாடசாலைகளில் புதிய பௌதீக வளங்கள்

இல்லாதிருந்தமை போன்ற விடயங்கள் இதன் போது வெளிப்படுத்தப்பட்டது.






குறைப்பயன்பாடுடைய கட்டிடங்கள் மற்றும் மைதானங்கள்


## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான அரச நிறுவனங்களின் தயார்படுத்தல்




ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் அங்கத்துவ நாடுகளால் அடையப்பட வேண்டிய 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், 169 இலக்குகள் மற்றும் 244 குறிகாட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிநிரல் மனித நேயம், பூமி மற்றும் நல்வாழ்வுக்கான ஒரு திட்டமாகும். ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளுக்கும் பொருந்தும் வகையில் இந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளும் நடைமுறை 2016 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முதல் கட்டமாக

குறித்த தரப்பினர் இது தொடர்பில் அறிந்திருத்தல் மற்றும் ஆயத்தமாக இருத்தல் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த நோக்கங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புற்ற காணப்படுவதுடன், அரச மற்றும் தனியார் ஆகிய அனைத்து பிரிவுகளினதும் பங்களிப்பின் கீழ் அந்த நோக்கங்களை அடைய வேண்டியதாக காணப்பட்டது.

அதற்கமைய 2018 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வுக்குட்படுத்தப்படும் நிறுவனங்களால் இந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையப்படுவதற்கான ஆயத்தம் தொடர்பில் பரிசோதனை செய்யும் போது உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளடங்களான அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் 11 தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 964 மொத்த நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் அறிந்திருத்தல், நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல், நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறுவனத்தின் திட்டங்களுக்கு உள்ளடக்குதல், குறிகாட்டிகளை தயாரித்தல், தரவுகளை பேணுதல், அடைவுகளை இனங்காணல் போன்ற பணிகள் நிறைவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை முறையே 173, 132, 60, 17, 6, 9 மற்றும் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்தல் பூச்சிய பெறுமதியை கொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட தேவையான நடவடிக்கைகள் நிறுவனத்தினால் நிறைவு செய்யப்பட்டிராமையால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தினை அளவிட முடியாது போனது. அதற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றல் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. விபரம் வரைபடம் 20 இல் காணப்படுகின்றது.




வரைபடம்: 20 நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான ஆயத்தம்

## சுற்றாடல் கணக்காய்வு

### லக்விஜய மின் நிலையத்தின் செயற்பாட்டு பணிகள் மற்றும் அவற்றின் சுற்றாடல் தாக்கம்.

வடமேல் மாகாணத்தின் கல்பிட்டி – துரைச்சோலை பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள 900 மெகாவோட்கள் உற்பத்தி இயலளவுடைய இலங்கை மின்சார சபைக்குரிய இலங்கையின் முதலாவது மற்றும் ஒரே நிலக்கரி மின் நிலையம் லக்விஜய நிலக்கரி மின் நிலையம் ஆகும். 2006 ஆம் ஆண்டின் போது 300 மெகாவேட்களுடன் முதலாவது கட்டமும், 2010 ஆம் ஆண்டின் போது 600 மெகாவேட்களுடன் இரண்டாவது கட்டமும் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் 900 மெகாவேட்களுடன் தேசிய மின்சார கட்டமைப்பினுள் இணைக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் தற்போதைய மின்சார உற்பத்திக்காக இலங்கை மினசார சபையின கீழ் 26 பிரதான மின் நிலையங்களின் (தனியார் மின் நிலையங்கள் நீங்கலாக) பங்களிப்பு மற்றும் மொத்த உப தளங்கள் 247 இன் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட கிகாவோட் மணித்தியாலங்கள் 14,671.2 ஆக இருந்தது. இந்த உற்பத்திக்காக லக்விஜய மின் நிலையத்தின பங்களிப்பு 34.78 சதவீதமாக இருந்தது. மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பிரதான மூலங்களான நீர், எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றுக்கிடையே நிலக்கரி மூலம் மின்சாரத்தினை உற்பத்தி செய்தல் இரண்டாவது அலகுக் கிரயம் குறைவான மூலம் ஆக இருந்தது.

இந்த மின் நிலையம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- கடந்த 04 வருடங்களின் மின்சார உற்பத்தி தரவுப் பரிசோதனையின் போது லக்விஜய மின் நிலையத்தின் பங்களிப்பின் சராசரி 32.58 சதவீதம் மற்றும் நீர் மின்சாரத்தில், எரிபொருள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான மின்சார உற்பத்தி முறையே 28.08 சதவீதம், 13.80 சதவீதம் மற்றும் 25.54 சதவீதமாக இருந்தது.

- 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் முறையே மின்சார உற்பத்தி பணியில் நீர் மின் மூலங்கள் (ர்லனசழ) மூலம் மின் உற்பத்தி மொத்த உற்பத்தியில் 37.46 சதவீதம் (4,904/13,089*100) முதல் 20.85 சதவீதம் (3,059/14,671*100) வரை குறைவடைந்திருந்தது. நீர் மூலங்களை மாத்திரம் கருத்திற்கொள்ளும் போது மின்சார உற்பத்தி 37.62 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இந்த காலப்பகுதியினுள் மின்சாரத்திற்கான கேள்வியை பூர்த்தி செய்வதற்காக எரிபொருள் (Oil) பயன்படுத்திய மின்சார உற்பத்தி 140.85 சதவீதத்தினாலும், தனியார் துறையினால் (IPP) மின்சாரத்தினை கொள்வனவு செய்தல் 47.82 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது. இலங்கை மின்சார சபையின் மின்சார உற்பத்தி மூலங்களிடையே இரண்டாவது குறைந்த அலகுக் கிரயமுடைய மூலமான நிலக்கரியை பயன்படுத்தி இந்த காலப்பகுதியினுள் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு 14.85 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது.

- மின்சார உற்பத்தி நடைமுறையின் போது ஆகக் குறைந்த கிரயத்துடன்னா மூலங்களை பயன்படுத்துவதற்கு பதிலாக கூடிய கிரயமுடைய மூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

- பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தங்களின் கீழான மாகாண சபைகளின் அதிகாரங்கள் அடிப்படையில் 1990 இன் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத்தின் ஐ ஆம் பிரிவின் 2(1) உப பிரிவின் கீழ் வட மேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. நியதிச்சட்டத்தின் 07(1) உப பிரிவின் பிரகாரம் மாகாண சுற்றாடல் மதியுரைச் சபையொன்று தாபிக்கப்பட வேண்டியதுடன், அதன் அங்கத்தவர்கள் விடயப்பொறுப்பு அமைச்சரால் நியமிக்கப்படுவர், அல்லது அவர்களிடையே நியமிக்கப்படும் ஏதேனும் அங்கத்தவரகளின் எண்ணிக்கையை கொண்டிருக்க வேண்டும். நியதிச்சட்டத்தின் 7(1)(க) பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை பிரதிநிதித்துவப் படுத்தும் அங்கத்தவர் ஒருவரும் அந்த

மதியுரை சபையினுள் உள்ளடங்க வேண்டும். 2018 மே 10 ஆந் திகதியளவில் வடமேல் மாகாண அபிவிருத்தி சுற்றாடல் மதியுரைக் குழு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் மின் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த 22 நிபந்தனைகளுடனான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கும் போது (Renewal) அந்த நிபந்தனைகளின் தேவைப்பாடு மின் நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையின் சரியான தன்மை மற்றும் பின்தொடர்தல் போதியளவில் மேற்கொள்ளப்படாது 2017 யூன் 29 ஆந் திகதி வரையிலும் அந்த அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு (Renewal) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய மின்நிலையத்தின் செயற்பாடுகளினூடாக ஏற்படக்கூடிய சுற்றாடல் அச்சுறுத்தல் நிலமைகள் தொடர்பில் உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை

மின்சார உற்பத்தி நடைமுறைக்காக நிலக்கரியினை எரிக்கும் போது பிரதானமாக் இரண்டு விளைவுகள் ஏற்படுவதுடன், அது பறக்கும் சாம்பல் (Fly Ash) மற்றும் (Bottom Ash) என இனங்காணப்படும். இந்த சாம்பலினை அகற்றும் தளமானது சுமார் 25 ஏக்கர்கள் அளவான நிலப்பிரதேசத்தினை கொண்டுள்ளது. மின் நிலையத்தில் செயற்படும் அலகொன்றின் உத்தேச ஆயட்காலம் 35 வருடங்களாக திட்டமிடல் கட்டத்தின் போது இனங்காணப்பட்டிருந்தது. இதற்கமைய 2018 ஆம் ஆண்டு முதல் முன்னோக்கி அந்த 03 அலகுகளின் 65 சதவீத செயற்திறனுடன் தொழிற்படும் எனும் எடுகோளின் அடிப்படையில் உருவாகக்கூடிய பறக்கும் சாம்பல் மற்றும் அடிச் சாம்பல் அளவானது முறையே 6,405,750 மெட்றிக் தொன் மற்றும் 1,281,150 மெற்றிக் தொன்னாக கூடும்.

மேற்குறிப்பிடப்பட்ட இந்த உப விளைவுகளை அகற்றும் நடைமுறைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டு முதல் 2018 மே 10 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் பறக்கும் சாம்பல் (Fly Ash) 425,008 மெட்டிக் தொன் அளவில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்த காலப்பகுதியினுள் எஞ்சிய பறக்கும் சாம்பல் (Fly Ash) சுமார் 443,909 மொட்டிக் தொன் அளவானது அந்த தளத்தில வைக்கப்பட்டிருந்தது. விபரங்கள் ...... வரைபடத்தில் காணப்படுகின்றது.
- லக்விஜய மின்நிலையம் மூலம் மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் பணியின் போது ஈடுபடுத்தப்படும் பிரதானமான மூலப்பொருளான நிலக்கரியில் காணப்பட வேண்டிய தரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிராமையால் சுற்றாடல் பிரச்சினைக்கு அது பிரதான காரணமாக அமைந்தது. அவ்வாறே நிலக்கரியினை எரிக்கும் போது உற்பத்தியாகும் பறக்கும் சாம்பல் மற்றும் அடிச் சாம்பல் ஆகிய உப விளைவுகளை தவிர்க்கும் நடைமுறை செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த நடைமுறை போதியளவில் நடைமுறைப்படுத்தப்படாமையால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கம் போது மின் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கிரயம் அதிகரிக்கக்கூடும். எனினும், சுற்றாடல் ரீதியான பிரச்சினையொன்றான பறக்கும் சாம்பல் தளத்தில் வைத்திருப்பதற்கு பதிலாக துரித நடவடிக்கை எடுத்து தளத்திலிருந்து அகற்றப்பட்டு

இனங்காணப்பட்ட ஏனைய உற்பத்திகளுக்காக மூலப்பொருட்களுக்காக ஈடுபடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட வெளியேறும் காற்றின் தரம் தொடர்பான நியமங்களும்கு அமைவாக மின் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பில் மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

– நிலக்கரியினை எரிக்கும் போது வெளியேற்றப்படும் வாயுக்கள் மற்றும் பார உலோகங்கள் சுழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்துபவை ஆகும். அந்த அகற்றல் நடைமுறை மின் நிலையத்தின் செயற்பாட்டுத் தன்மைக்கு பயன்படுத்தப்படும் கடல் நீர் சுத்திகரிப்பின் பின்னர் மீண்டும் கடலுக்கு விடுவிக்கும் நடைமுறை மற்றும் நிலத்தடி நீரினை தொடர்ச்சியாக கண்காணித்தல் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் வெளியேறும் வாயுக்கள் தொடர்பில் உமிழ்வு வாயுக்களிய் கற்தகம் சுருக்கத்தின பறக்கும் சாம்பல் தொடர்பில் நிலையான இலத்திரனியல் உமிழ்ப்பின் செயற்திறன் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும். மின் நிலையத்தின் பராமரிப்பு பணிகள் திட்டத்திற்கமைய மேற்கொள்ளல் மற்றும் நிலக்கரி நிலையத்தை சுற்றிழும் தற்போது காணப்படும் காற்றுத் தடுப்பினை வியாபித்தலும், தற்போது நிலையத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ள சாம்பல் கிராமத்தின் புறம் பரவுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது.

– மின் நிலையத்தின் செயற்பாடுகளில் மீன்பிடி மக்களுக்கு ஏற்படும் தாக்கத்தினை குறைத்துக்கொள்ளவம், கடலின் அடிப்பகுதியினை கண்காணித்தல் மூலம் நிலக்கரி படிந்துள்ள அளவினை குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டியதாக இருந்தது. கடல் அரிப்பினை குறைத்தல் மற்றம் கடற்கரைகளின் பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதனூடாக சுற்றாடல் தாக்கத்தினை குறைத்து சூழலுக்கு இசைவாக துறையொன்றாக தேசிய பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட மின்சார உற்பத்தி துறையொன்றாக பங்களிப்பு செய்யும் இயலுமையை அதிகரிக்க வேண்டும்.



## களனி ஆற்றின் நீர் மாசடைதல் தொடர்பான பிரச்சினைகள்

இலங்கையில் அமைந்துள்ள இரண்டாவது நீளமான நதியாகவும் நான்காவது பெரிய நீர் பரப்பினை கொண்ட களனி ஆறு மேல் மாகாணத்தில் வாழும் மக்களின் சனத்தொகையில் சுமார் 80 சதவீதமானோருக்க குடிநீரினை விநியோகிக்கும் பிரதான நீர் மூலமாகும். இந்த ஆற்றுப் படுக்கைக்கு அண்மியதாக 10,511 எண்ணிக்கையான தொழிறசாலைகள் அமைந்துள்ளதுடன், இந்த தொழிறசாலைகள் மற்றும் வீடுகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளினால் ஆற்று நீர் மாசடையும் போக்கு அதிகரித்தவாறு உள்ளது. அவ்வாறே களனி ஆற்றினை அண்மியதாக அமைந்திருந்த பிரதான முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் இரண்டின் பணிகளை மேற்பார்வையின் போது அந்த வலயங்களில் உள்ள சில தொழிற்சாலைகளின் செயற்பாடுகளிலிருந்து அகற்றப்படும் கழிவு நீர் உரிய முறையில் சுத்திகரிக்கப்படாமல் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கமையாத விதத்தில் உள்ளக நீர் நிலைகளுக்கு மற்றும் சுற்றாடலுக்க அகற்றப்பட்டிருந்தது. இடையூறு விளைவிக்கும் மற்றும் இடையூறு விளைவிக்காத கழிவுகளை அகற்றும் நடைமுறையை உரிய முறையில் முகாமை செய்யப்படாமை, கழிவுநீர் சுத்திகரிப்பின் பின்னர் எஞ்சும் சகதியினை அகற்றுவதற்கான நடைமுறையொன்று சூழலுக்கு இசைவான முறையில் மேற்கொள்ளப்பட்டிராதால் அதன் தாக்கம் இறுதியாக நீர் நிலைகளில் சேர்ந்திருந்தது. மனிதனால் களனி ஆற்றுக்கு அண்மியதாக பெற்றுக்கொள்ளப்படும் பொருளாதார நலன்களின் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்த போதிலும், ஆற்றின் சூழல் மற்றும் சுற்றாடல் பெறுமதியினை பாதுகாப்பதற்காக அனைத்து தரப்பினரதும் பங்களிப்பு குறைவடைந்திருந்தது. வலையமைப்பின மாசினை இனங்காணல், விதிகளின் பரிசோதனையின போது பிரதான பாலங்களுடனான பெரும்பாலான இடங்களில் வலையமைப்பின் தரத்தினை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகரிப்பட்ட நியமங்களை விஞ்சியிருந்தது. சுத்தமான குடிநீரினை மக்களுக்கு வழங்குவதற்காக நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மேற்கொள்ள நேரிடும் கியரம் அதிகரித்திருந்தது. சுத்தமான குடிநீரினை மக்களுக்கு வழங்குவதற்காக நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மேற்கொள்ள நேரிடும் கிரயம் அதிகரித்திருந்தது. உள்ளக நீர் நிலையங்களுக்கு கழிவு நீரினை வெளியேற்றும் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றாத தரப்பினருக்கு வழங்கப்படும் தண்டனைகளுக்காக தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை.

தொழிற்சாலை பரம்பலின் காரணமான களனி ஆற்றின் நீர் மாசடைதல் அதிகரித்திருந்தது. இதன் போது களனி மிட்டியாவத்தயில் அமைந்துள்ள பிரதான கைத்தொழில் பேட்டையான சீத்தாவாக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திற்கு வழங்கப்பட்டிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் 8 வருடமாக காலாவதியாகியிருந்தது. இந்த வலயத்தின் 37 தொழிற்சாலைகளின் கழிவு நீர் சுத்திகரிப்பிற்காக காணப்படும் பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயலளவு போதுமானதாக காணப்படவில்லை. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கிருமிகளை அழிக்கும் இயந்திரம் செயலிழந்திருந்ததன் காரணத்தால் அதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றாடல் மாசு மீண்டும் சுற்றாடல் தாக்கமொன்றாக சேர்ந்துள்ளது.

மேலும், சீத்தாவாக்கை மற்றும் பியகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் கசடினை (Sludge) அகற்றுவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று பயன்படுத்தப்பட்டிராமையால், கசடுகள் மழை நீருடன் கலந்து நீர் நிலைகள் மாசடையும் அச்சுறுத்தல் நிலவியது.

களனி ஆறு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு சுற்றுலாக்களின் போது ஆற்றின் இரு புறம் அமைந்துள்ள அத்துமீறிய நிர்மாணங்கள் காரணமாக ஆற்றுப் படுக்கைகள் அழிவுக்குள்ளாகுதல், ஆற்றின் ஓரத்தில் கட்டப்பட்டுள்ள ஹோட்டல்கள் மற்றும் அத்துமீறிய வகையில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளிலிருந்து அகற்றப்படும் திண்மக் கழிவு, மலக் கழிவுகள் மற்றும் கழிவு நீர் ஆற்று நீரில் கலக்கின்றமை, வாகனங்களை சேவைக்கு உட்படுத்தும் நிலையங்களிலிருந்து மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் அகற்றப்படுதல் ஆற்று நீர் மாசடைவதற்கான பிரதான காரணமொன்றாக அமைந்திருந்தது.




உரு: 22 - களனி ஆற்றின் இரு புறமும் அமைந்துள்ள அத்துமீறிய குடியிருப்புகள்

பட்டிவில கால்வாய் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அருகில் ஆரம்பித்து பாய்ந்து வருவதுடன், கால்வாயின் இரு புறமும் தொழிற்சாலைகள் மற்றும் வீடுகள் அமைந்துள்ளன. இந்த தொழிற்சாலைகளிலிருந்து அகற்பட்டிபடும் அனைத்து மாசுக் காரணிகள் இந்த கால்வாயினூடாக வடிந்தோடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. பல்வேறு கண்காய்வ சந்தர்ப்பங்களில் அந்த கால்வாயின் நீர் கலங்கிய மற்றும் மாசடைந்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறே இந்த கால்வாய் பட்டிவில நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு (ஐவெயமந) மிகவும் அண்மையில் களனி ஆற்றுக்கு சேர்கின்ற கால்வாயொன்றாக இருந்தது. விபரம் உரு….. இல் காணப்படுகின்றது.




உரு: 23 பட்டிவில வாய்க்கால் மாசடைந்துள்ள விதம்

களனி ஆற்றின் மோதர முதல் அம்பத்தல வரையான பிரதேசம் பாரியளவில் சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியிருந்ததுடன், மனிதர்களின் செயற்பாடுகளினால் அந்த மாசடைதல் நிகழ்ந்திருந்தது. உரிய முகாமைத்துவமின்றி குப்பைகள் கொட்டப்படுதல், ஆற்றுப் படுக்கை கழுவிச் செல்லல், ஆற்றின் ஓரங்களில் அத்துமீறிய வீடுகள் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படல் மற்றும் மலக் கழிவுகளை அகற்றுதல் போன்ற காரணங்கள் இந்த சூழல் மாசடைதலுக்கு காரணமாக அமைந்திருந்தது.



வரைபடம்: 24 - மோதர முதல் அம்பத்தலே வரையான பிரதேசங்களின் சூழல் மாசடைதல்

கடந்த 05 வருட காலப்பகுதியினுள் பெருமளவில் சேர்கின்ற சுத்திகரிப்பு நிலையமொன்று என்பதால் அம்பத்தலே மற்றும் பட்டிவில நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய இரண்டின் நீர் சுத்திகரிப்பு பணிகளுக்காக கூடுதலான இரசாயன பொருட்களை இடுதல் காரணமாக அவற்றின் சுத்திகரிக்கும் மொத்த செலவினம் அதிகரித்திருந்தது. நிரின் மாசுபடல் அதிகரித்தமையால் அதிகளவிலான இரசாயனப் பொருட்களை பயன்படுத்த நேர்ந்தது. அதற்கமைய அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மொத்த சுத்திகரிப்பு செலவினம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 879 மில்லியன் முதல் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 929 மில்லியன் வரைய அதிகரித்திருந்தது. அவ்வாதறே பட்டிவில நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்களின் அளவானது முறையே எலம் 17 சதவீதத்தினால், லயிம் 37 சதவீதத்தினால் மற்றும் குளோரீன் 74 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும், நீர் சுத்திகரிப்பு செலவினம் கிரமமாக அதிகரித்தமையால் குடிநீர் உற்பத்தியில் கிரயம் அதிகரித்து அது நுகர்வோரால் சுமக்கப்பட வேண்டியதாக இருந்தது.

புலனாய்வுக் கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவக் கணக்காய்வுச் செயற்பாடுகள்

**பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

- மகாவலி காணிகளில் கருங்கற்கள் உடைத்தெடுக்கப்படும் இடங்களை நடாத்திச் செல்லல்
- பல்தின படகுகளை கொள்வனவு செய்கையில் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிராமை
- நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றிருத்தல்
- குறைந்த விலையில் இல்மனைட் இருப்பை விற்பனை செய்தல்
- தவறான முறையில் படிகளைப் பெறுதல்
- வெளித் தரப்பினர்களிற்கு பணம் வழங்குதல்

# புலனாய்வுக் கணக்காய்வும் மக்கள் பிரதிநிதித்துவக் கணக்காய்வும்

ஆளொருவர் அல்லது குழுவொன்றினால் முறைகேடாகவோ அல்லது சட்டத்திற்கு முரணான வகைக்கு சாதகமான அல்லது நலனொன்றையோ பெற்றுக்கொள்வதற்கு உள்ள இடர் தொடர்பான அடிப்படையை பரீட்சித்தல் புலனாய்வுக் கணக்காய்விலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது மோசடிகள் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றை தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்துவது தொடர்பில் புலனாய்வு கணக்காய்வின் போது கருத்தில் எடுக்கப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 19ஆவது உறுப்புரை திருத்தத்தின் மூலம் அரச நிதியளித்தலை முறையாக முகாமை செய்வதற்காக வேண்டி அரச கணக்காய்வு பலப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு நிறுவனங்களின் கடமைகளுக்குரிய கோவைகளை பரீட்சிப்பதற்கு மேலதிகமாக புலனாய்வை விரிவுபடுத்தும் நோக்கில் பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஆணைக்குழுக்களின் வேண்டுகோள்கள், அரசாங்க கணக்கு குழு, பொது முயற்சிகள் தொடர்பான குழுக்களின் பிரதிநிதி, நிறுவனத் தலைவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் அரச நிதி முகாமைத்துவத்தை செயற்திறனாக மேற்கொள்வது தொடர்பிலும் புலனாய்வுக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஒத்ததாக திணைக்களம் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும், தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும், பௌதீக வளங்கள், துரித அழைப்பு இலக்கங்கள், மின்னஞ்சல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

விஷேட புலனாய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டின்போது முக்கியமானதும் துரிதமாக கவனத்தை செலுத்த வேண்டிய பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 23 பிரதிநிதித்துவங்கள் தொடர்பாக ரூபா 5,090.70 மில்லியனுக்கான செலவினங்களைப் பரீட்சித்த போது அரசிற்கு ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 4,114.20 மில்லியனாக இருந்தது. 2018ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்குரிய முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## மஹாவலி காணிகளில் கருங்கல் உடைக்கும் இடங்களை நடாத்திச் செல்லல்

### ஹம்பாந்தோட்டை மாவட்டம்

வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் திகதிய 03/2012 ஆம் இலக்கமுடையதுமான சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 49 குவாரிகளை நடாத்திச் செல்வதற்கு தனியார் பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மஹாவலி அபிவிருத்தி திட்ட மையப் பிரதேசத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அக் குவாரிகளுள் பெரும்பாலானவை 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதிய 13ஆம் இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானியின் கீழ் வளவ கங்கைப் படுகை விஷேட மஹாவலிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்த எல்லையில் அமைந்திருந்த வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமான சரணாலயங்கள் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமான பிரதேசத்திற்குள் அமையப்பெற்றுள்ளன.

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரினால் வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2009 மே மாதம் 06ஆம் திகதிய 1600/8 ஆம் இலக்கமுடைய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் “ஒவ்வொரு வருடத்திலும் அப்புறப்படுத்தப்படுகின்ற கருங் கற்களின்

அளவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டணம் அறிவிடப்பட வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது. கருங் கற்களை உடைப்பதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த காணிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும் கருங் கற்களின் அளவினை தீர்மானிப்பது தொடர்பான அளவுகோல்களும் கட்டணம் அறவிடப்படுவது தொடர்பான அளவு கோல்களும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் நிரூபணமாகின.

- புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் 2010ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால எல்லைக்குள் இக் கருங்கற்கள் அமைந்துள்ள இடங் களுக்கு பிறப்பிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் அரசின் பங்கை அறவிடுகையில் 1,266,991 கியூப் கருங்கற்கள் அப்புறப்படுத்தப்பட்டு ள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மஹாவலி அதிகார சபையினால் அக்காலப்பகுதியில் அவ் 49 இடங்களிலிருந்தும் 150,837 கியூப் கருங்கற்களுக்கு மாத்திரமே காணி பயன்பாட்டுக் கட்டணம் அறிவிடப் பட்டுள்ளது. அதன்படி, காணி பயன்பாட்டுக் கட்டணம் அறிவிடப்படு கையில் அவ் அரச நிறுவனத்துடன் தொடர்புகொண்டு அப்புறப்படுத்தப்பட்ட கற்களின் தொகை நிர்ணயிக்கப்படாத காரணத்தினால் இந் 49 குவாரிகளில் மாத்திரம் மஹாவலி அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூ. 1,117.50 மில்லியன் மதிப்பிலான காணி பயன்பாட்டுக் கட்டணம் அரசாங்கத்திற்கு கிடைக்காமல் போயுள்ளது.

- அந் 49 இடங்களுள் 41.83 ஏக்கர் அளவிலான 09 இடங்கள் தொடர்பில் நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் பெறப்பட்ட அளவீடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வெடி மருந்து அளவுகளின் படியே அகழ முடியும் என்பதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் முன்மொழியப்பட்ட அளவைப் போன்று 1.9 மடங்கு அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது கருங்கல்லின் அமைவிடம் தொடர்பில் வரைபடம் வரைந்து அதன் பிரகாரம் காணி பயன்பாட்டுக் கட்டணம் அறவிடும் முறையொன்று அறிமுகப்படுத்தப்படாததன் காரணத் தால் இந் 49 குவாரிகளிலிருந்தும் அப்புறப்படுத்தப்படும் கருங்கற்களின் அளவின் அடிப்படையில் கிடைக் காமல் போன முன்மொழியப்பட்ட காணி பயன்பாட்டுக் கட்டணம் ரூ. 2,407.28 மில்லியனாக காணப்பட்டது. விபரம் படங்கள் 25 மற்றும் 26 இல் காட்டப்பட்டுள்ளன.



உருப்படம் 25 – 20 ஏக்கர் நிலப் பிரதேசத்திலான பொறியியல் நிறுவனமொன்றின் கற்குவாரி



உருவப்படம் 26 தெற்கு அதிவேக வீதியில் கி.மீ. CH8+250-500 இடத்தில் மும்மொழியப்பட்ட வீதியின் மத்தியில் அனுமதியற்ற விதத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்த கற்குவாரிகள் (நில அளவையார் திணைக்களத்தின் அளவீட்டின் பிரகாரம் ஆழம் 28 மீற்றர்களாகும்)

- 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் விவகார அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட 1993 ஜூன் மாதம் 24ஆம் திகதிய 772/22 ஆம் இலக்கமுடைய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பிரகாரம் ஒரு ஹெக்டயருக்கு அதிகமான காணிப் பகுதியில் உள்ள காடு சாராத பகுதியொன்றை பிரயோசனம் ஒன்றிற்கு பாவிப்பது சுற்றாடல் சட்டத்தின் IV ஆ பிரிவின் கீழ் உள்ள கருத்திட்டமொன்றாக பெயரிடப்பட்டுள்ளது. அதன் படி சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவின் கீழான சூழல் அழுத்த மதிப்பீட்டு அறிக்கையொன்றை சமர்ப்பித்து சுற்றாடல் அனுமதியைப் பெற்று சுற்றாடல் அதிகார சபையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும், அக் கருங்கல் உடைப்பு கருத்திட்டத்திற்கான சூழல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. விபரம் உருப்படம் 27 மற்றும் 28 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.



உருப்படம்.. – அனுமதிப்பத்திர சட்டங்களை மீறி அகழ்வு மெற்கொள்ளப்பட்டுள்ள குவாரி



உருப்படம்…….. மஹாவலி காணிகளில் அனுமதியற்ற வகையில் கருங்கற்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ள புகைப்படமொன்று

- கனிய அகழ்விற்காக வேண்டி மஹாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தை குத்தகைக்கு வழங்கும் போது அவ்விடத்திற்கு புனர்வாழ்வுத் திட்டம் பெறப்படவில்லை என்பதுடன், புனர்வாழ்வு தொடர்பான பொறுப்பு, காணி அனுமதிப்பத்திரம் உரித்துடையவர்களுக்கு ஒப்படைக்கின்றவாறு உடன்படிக்கைகளில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு காணி வழங்கப்பட்டிருக்கவில்லை. 1980ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சட்டத்தின் விதிமுறைகளுக்கு இனங்க சூழல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் இக்காணிகளில் கருங்கல் உடைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி கட்டணம் செலுத்துவதை புறக்கணித்து அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலேயே தொடர்ந்தும் அனுமதிப்பத்திர காலத்தை நீடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### பதுளை மாவட்டம்

வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் திகதிய 03/2012 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையினை

அடிப்படையாகக் கொண்டு குவாரிகளை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த பதுளை மாவட்டத்தின் மஹாவலி சி வலயத்தில் கிராந்துருகோட்டையில் 03 இடங்களை பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள் நிரூபணமானது.

- கருங்கல் உடைப்புக்கு அனுமதி வழங்கப்படும் போது அவ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்ற கற்களின் அளவை தீர்மானிப்பது தொடர்பான அளவுகோல் அறிமுகப்படுத்தப்படாமை, கட்டணம் அறிவிடப்படுவது தொடர்பான அளவுகோல் தீர்மானிக்கப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் பின்வரும் வகையில் ரூ. 236.8 நட்டம் ஏற்பட்டுள்ளது.

    - சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரினால் வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைய பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதிய 1600/8 ஆம் இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் அப்புறப்படுத்தப்படும் 01 கியூப் கருங் கல்லுக்கு அறிவிடப்பட வேண்டிய கட்டணம் அறிவிடப்படாமை மற்றும் பிறப்பிக்கப்பட்ட வெடி மருந்து அளவின் அடிப்படையில் வெடிமருந்து அளவு கணக்கிடப்படாமை போன்றன புவியியல் ஆராய்ச்சி மற்றும் கனிய அகழ்வுப் பிரிவினால் அரச பங்கை அறிவிடுவதற்கு இம்முறை பின்பற்றப்பட்டது. அதன் காரணமாக 21.8 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. கணக்காய்வு ஆராய்ச்சியின் பின்னர் 2018 ஜுலை மாதம் 20 ஆம் திகதி முதல் 2019 மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 7.04 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

    - பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நிரூபணமான விடயங்களின் பிரகாரம் இம் 03 இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள கருங் கற்களின் எண்ணிக்கை 215,000 கியூப்களாகும். இதன்படி காணி உபயோகக் கட்டணம் அறிவிடப்படும் போது அப்புறப்படுத்தப்பட்ட அளவு கணக்கிடுவதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்படாததன் காரணத்தினால் அம் 03 இடங்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்காமல் போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள காணி பயன்பாட்டுக் கட்டணம் 215 மில்லியன் ரூபாவாகும்.

    - 1980 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய சூழல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமலேயே இக்காணிகளில் கருங்கல் உடைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் கட்டணம் அறிவிடுதலை புறக்கணித்தும் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலேயே தொடர்ந்தும் அனுமதிப்பத்திர காலத்தை நீடிப்புச் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

### மொரகஹகந்த திட்டம்

மொரகஹகந்த கருத்திட்டத்தினுடைய சூழல் மதிப்பீட்டு அறிக்கையின் படி அக் கருத்திட்டத்திற்கு அவசியமான கருங்கல் வனசீவராசிகளுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் நீர்த்தேக்கத்தில் மூழ்கும் பிரதேசத்தில் அமைந்திருந்த 02 இடங்களிலிருந்து பெற்றுக்கொள்வது பொருத்தம் என பரிந்துரை செய்யப்பட்டது. இது தொடர்பில் கவனம் எடுக்காமல் எலஹெர – கிரிதலை அபயபூமியின் வஸ்கமுவ தேசிய சரணாலயத்திற்கு ஊடாக மின்னேரியா மற்றும் கவுடுள்ள தேசிய

பூங்காவுக்கு காட்டு யானைகள் செல்லும் இடமொன்றில் அமைந்துள்ள 07 ஹெக்டயார் மற்றும் 30 மீற்றர் உயரத்தில் 90 பாகைக்கு அதிகமான குழி அளவில் கருங்கல் உடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பில் பின்வரும் அவதானங்கள் பெறப்பட்டன.

- மொரகஹகந்த கருத்திட்டத்தை செயற்படுத்தியதன் பின்னர் நூற்றுக் கணக்கிலான யானைகளின் சஞ்சரிப்புக்கு மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டுக்கு கீழால் எஞ்சியுள்ள 450 மீற்றர் அளவு நீளமான சூழலில் மிகவும் சிறிய நிலத்தில் அமைந்துள்ள இவ்விடத்தில் கருங்கல் உடைப்பதால் காட்டு யானை சஞ்சரிப்புக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது.

- அதன் காரணமாக காட்டு யானைகளின் பயணப்பாதை மொரகஹகந்த கருத்திட்டத்தின் கீழ் புதிய குயிெருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்கு செல்வதனால் எதிர்வரும் காலத்தில் யானை மனிதப் போராட்டம் வளர்ச்சியடைவதற்கு காரணமாய் அமைகின்றது.

- புவியியல் ஆராய்ச்சி மற்றும் கனிய அகழ்வுப் பிரிவின் அறிக்கையின் படி 2012ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இவ்விடத்திலிருந்து 1,891,950 கியுப் கருங்கல் எடுக்கப்பட்டள்ளது.

வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (45 ஆவது அத்தியாயம்) 20 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரினால் 2009 மே மாதம் 06 ஆம் திகதிய 1600/18 ஆம் இலக்கமுடைய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பிரகாரம் கருங்கல் கியுப் ஒன்றுக்கு காணி உபயோகக் கட்டணமாக 1,000 ரூபா வீதம் 1,891.95 மில்லியன் ரூபாவை அறிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- எழுச்சிபெறுவோம் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டு வீதி அபிவிருத்தி நிகழ்ச்சிக்கு இவ்விடத்திலிருந்து தொடர்ந்து கருங்கல் பெற்றுக்கொள்வதற்கு, உயர் கல்வி மற்றும் கெடுஞ்சாலைகள் அமைச்சரினால் அமைச்சரவை குறிப்பாணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

•





உருவப்படம் 29- மீற்றர் 10 க்கு 10 தட்டு முறையில் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டியபோதும், 30 மீற்றர் உயரத்தில் 90 பாகைக்கு அதிகமான ஆழத்துடன் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நிதியமைச்சரும் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரினால் இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி,

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உடன்பாட்டை வழங்கும் எனில்,
- சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதாக பெருந்தெருக்கள் அமைச்சு உடன்பாட்டினை வழங்கும் எனில்,
- திறன் மதிப்பீட்டு ஆராய்ச்சியை செய்து அது திருப்திகரமானதாக இருப்பின், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட செலவில் கருங்கல்லுக்கு சேர்க்கப்பட்டுள்ள செலவை குறைத்து செலுத்துதல் என்கின்ற விடயங்களுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக் குவாரிகளின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல பரிந்துரை செய்ய முடியாது என்பதாக வனஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி அறிவித்திருந்த போதும் வனசீவராசிகள் (நடவடிக்கை) பணிப்பாளர் 2017 மோ மாதம் 24ஆம் திகதி அவ்விடத்தில் பரிசோதனை வெடிப்பொன்றுக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

அவ் அனுமதியை பயன்படுத்தி 02 தனியார் நிறுவனங்களினால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமைச்சரவை அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கவனத்திற் கொள்ளாமல் குறிப்பிட்ட குவாரிகளது செயற்பாடுகளை மீள அரம்பித்து 73.5 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட பெறுமதியில் கருங்கற்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. வனசீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான நிலப்பகுதியில் அனுமதியற்ற செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## கண்டி மாவட்டம்

இலங்கை மஹாவலி அதிகார சபையின் திகன வதிவிட வத்தக முகாமைத்துவ அலுவலக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 03 காணித் துண்டுகள் டொலமைட் பசளை உற்பத்திக்கான சுண்ணாம்புக்கல் கனியத்தை அப்புறப்படுத்தவதற்கு 2013ஆம் ஆண்டு திகன வர்த்தக முகாமைத்தவ அலுவலகத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டது. 2009 மே மாதம் 06 ஆம் திகதிய 1600/18 ஆம் இலக்கமுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பிரகாரம் கருங்கல் கியுப் 01 க்கு 1,000 ரூபா வீதம் காணி உபயோகக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் கியுப் 01க்கு 300 ரூபா என்ற வகையில் அறவிடப்பட்டுள்ளது. புவியியல் ஆராய்ச்சி மற்றும் கனிய அகழ்வுப் பிரிவின் தகவல்களின் பிரகாரம் 2013ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அகழ்வின் மூலம் இவ்விடத்திலிருந்து 31,684 கருங்கல் கியுப்கள் அப்புறப்படுத்தப்பட்டது. அதற்காக வேண்டி ரூபா 30.18 மில்லியன் என்ற குறைந்த தொகை, காணி உபயோகக் கட்டணமாக அறிவிடப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக சூழல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமலேயே இக்காணிகளில் சுண்ணாம்புக்கல் உடைப்பதற்கான அனுமதி வழங்கட்டது. அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் கட்டணம் செலுத்துவதனை புறக்கணித்தும் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் சட்டநடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலேயே தொடர்ந்தும் அனுமதிப் பத்திர காலத்தை நீடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

## CCTV கமெரா தெகுதியை ஸ்தாபித்தல்

அம்பாரை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாகக் கட்டிடம், விவசாயப் பண்ணை, முன்பக்க நுழைவாயில், கனிணி ஆய்வுகூடம் 01 மற்றும் 02 ஆகிய இடங்களை உள்ளடக்கும் வகையில் CCTV கமெரா ஒழுங்குத் திட்டமொன்று 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரூபா 1.24 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டது. இது தொடர்பாக விலைமனுக்கள் கோரப்பட்டு குறைந்த விலைமனுத் தொகையை வழங்கிய வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. அவ் ஒப்பந்தக்காரருடன் உரிய முறையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் செயலாற்றுகைப் பிணைத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 2017 டிசம்பர் 09 ஆம் திகதியாகும் போது பொறுத்தப்பட்டிருந்த 23 கமராக்களில் 14 கமராக்கள் செயலிழந்து

காணப்பட்டன. இச் செயலிழந்த கமராக்களை தொழிற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நிறுவனத்தினால் எவ்வித நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படாமையினால் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையுமே பலனற்ற செலவாக அமைந்தது.

## பத்து மீன்பிடிப் படகுகளை உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு வழங்குதல்

மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்தினால் மீன்பிடியை அதிகரித்தல், கடலிலிருந்து கரையை நோக்கி கொண்டுவருகின்ற மீன்களின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் மீன்பிடி ஒழுங்குத் திட்டத்தை மேம்படுத்துதல் போன்றவற்றுக்கு வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனம் மற்றும் படகு உற்பத்திசெய்யும் இரண்டு தனியார் நிறுவனங்களின் மூலமாக 10 மீன்பிடிப் படகுகளை உற்பத்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான மொத்தச் செலவில் 50 வீதத்தை பயனாளிகளிடமிருந்து அறிவிடும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு வழங்கும் நோக்கில் இக்கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வெளியான கணக்காண்வு அவதானச் சுறுக்கங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

- 2016 டிசம்பர் 06ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 2017ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த 10 மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான ஒதுக்கீடு 2016ஆம் ஆண்டிற்காக வேண்டி அமைச்சின் செலவு மிகுதியின் கீழ் தயார்செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து வழங்குமாறு நிதி அமைச்சு வேண்டுகோள் விடுத்திருந்தது. அது தொடர்பான நிதியமைச்சரின் பரிந்துரைகளின் பிரகாரம் 2017ஆம் ஆண்டுச் செயற்பாடுகளுக்காக வேண்டி 2016ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளை வழங்க முடியாது என குறிப்பிடப்பட்டது. அது தொடர்பில் அவதானம் செலுத்தாமல் 2016ஆம் ஆண்டிற்காக தயார்செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 10 மீன்பிடி படகுகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான 149 மில்லியன் ரூபாவான மொத்தப் பணத்தையும் மீண்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களம் சீனோர் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

- 2016 மே மாதம் 24ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 55 அடி நீளமான மீன்பிடிப் படகு ஒன்றினை உற்பத்தி செய்வதற்குத் தேவையான அச்சு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 22 மில்லியன் ரூபா பணமும், மாதிரிப் படகு ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு 26 மில்லியன் ரூபா என்ற வகையிலும் 48 மில்லியன் ரூபா பணம் மீன்மிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்தினால் சீனோர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சீனோர் நிறுவனம் இப்பணத்தில் 0.36 மில்லியன் ரூபாவை செலவுசெய்து தற்போது பயன்படுத்தி வருகின்ற அச்சு ஒன்றை புதிதுபடுத்தி அதனைப் பயன்படுத்திக்கொண்டு 26.06 மில்லியன் ரூபாவை வெலவு செய்து 55 அடி நீளமான மாதிரிப் படகு ஒன்றை உற்பத்தி செய்தது. பயனாளிகளிடமிருந்து கருத்துக்களை பெற்றுக்கொள்ளாமல் அம் மாதிரிப் படகினை உற்பத்தி செய்ததனால் அம் மாதிரிப் படகுக்கு ஒப்பான வகையில் தங்களது மீன்பிடிப் படகுகளை உற்பத்தி செய்துகொள்வதற்கு பயனாளிகள் விரும்பவில்லை. அதன்படி மீண்டும் 13.75 மில்லியன் ரூபாவினை செலவு செய்து பிரிதொரு அச்சை உற்பத்தி செய்ய நேரிட்டது. எவ்வாறிருப்பினும், இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் அச்சுகளை உற்பத்தி செய்வதற்கு செலவான மொத்தத் தொகை 14.11 மில்லியன் ரூபாக்களாகும். அத்துடன், அச்சினை உற்பத்தி செய்வதற்கு வழங்கப்பட்ட பணத்தில் இன்னும் 7.81 மில்லியன் ரூபா பணம் எஞ்சியிருந்தது. அப்பணத்தை மீண்டும் சீனோர் நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு மீன்பிடி மற்றும் நிரியல் வள திணைக்களம் மதிப்பாண்டு இறுதியாகும் போது கூட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 26.06 மில்லியன் ரூபாவை செலவு செய்து உற்பத்தி செய்யப்பட்ட பயனாளிகளினால் நிராகரிக்கப்பட்ட 55 அடி நீளமான மாதிரி மீன்பிடிப்

படகு ஒரு வருட காலமாக செயலற்றுக் காணப்பட்டதுடன் அதன் பின்னர் வெளிநாடொன்றுக்கு 21.22 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ததனால் அரசாங்கத்துக்கு 4.83 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் அரச உதவியில் உற்பத்தி செய்யப்பட்ட இம்மாதிரிப் படகினை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பணத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ள திணைக்களத்தினால் மதிப்பாய்வு வருட இறுதியில் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2016 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் 24(அ) பந்தியின் பிரகாரம் மீன்பிடிப் படகு உற்பத்தியை தனியார் படகு உற்பத்தித் துறையினூடாக மேற்கொள்வதற்கு அரச பெறுகை அறிவித்தல் முறையை பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அத்தீர்மானத்தை கருத்திற்கொள்ளாமல் பயனாளிகளின் விருப்பத்தின் பிரகாரம் இரண்டு நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலைமனுக் கோரப்பட்டிருந்ததுடன் அவ்விரண்டு நிறுவனங்களின் மூலமும் சம அளவான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களம், வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம், தனியார் படகு உற்பத்தி உரிமையாளர்கள் மற்றும் பயனாளிகளால் கைச்சாத்திடப்பட்ட நாற்தரப்பு உடன்படிக்கையின் படி 2017 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் படகுகளை உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதியாகும் போது தனியார் படகு உற்பத்தித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 05 படகுகளில் 02 படகுகளும், சீனோர் நிறுவனகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 05 படகுகளில் 03 படகுகளும் என்றவாறு 05 மீன்பிடிப் படகுகள் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதனால் ஒப்பந்தப் பிரகாரம் இரண்டு தனியார் படகு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் அறிவிட வேண்டியிருந்த தாமதக் கட்டணமான 4.49 மில்லியன் ரூபாவினை அறிவிட்டக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட படகுகளுள் ஒரு படகு உற்பத்தியாளரின் உத்தரவாதத்திற்கு உற்பட்ட காலப்பகுதியில் தீப்பற்றி அழிந்துபோனதுடன் அது இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு என்பதும் தெரிய வந்தது. அவ்வாறிருக்கையில் சீனோர் நிறுவனத்தினால் மீளவும் படகு புதிதுபடுத்தப்பட்டு அல்லது புதிய படகு ஒன்று உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியிருந்தும், காப்புறுதியின் மூலம் கிடைத்த மொத்தப் பணமும் பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பயனாளியினால் படகுக்காக வேண்டி செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகையில் அரைவாசிப் பங்கான 12.35 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், படகின் முழுப் பெறுமதியான 24.70 மில்லியன் ரூபாவையும் பயனாளிக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் பயனாளிக்கு 12.35 மில்லியன் ரூபா பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## நிதி மோசடி மற்றும் முறைகேடுகளை மேற்கொள்ளல்

2009ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப் பின் கற்கைகள் நிறுவனத்தினால் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட 14 நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைந்ததன் பின்னர் மீள முதலீடு செய்கையில் முதிர்ச்சியடைகின்ற போது ஒருசேரப்பெற்றிருந்த (திரண்டு காணப்பட்ட) முழுப் பணமும் மீளவும் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் ஒரு பகுதி

மாத்திரம் மீள முதலீடு செய்யப்பட்டு எஞ்சிய பணத்தொகையில் 55.34 மில்லியன் ரூபா அப்போது இணைந்து பணியாற்றிய சிரேஷ்ட உதவி நிதியியல் அதிகாரியினால் கபடமான முறையில் கையாடப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிருபணமான கணக்காய்வு அவதானச் சுறுக்கங்கள் பின்வருமாறு விவரிக்கப்டுகிறது.

- நிலையான வைப்புக்கள் முடிவுறுத்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்பிடுமாறும், எஞ்சிய தொகைக்கு புதிய நிலையான வைப்பொன்றை ஆரம்பிக்குமாறும் நிறுவனப் பணிப்பாளரின் கையொப்பத்தில் வங்கிக்கு சமர்ப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ உத்தரவுக் கடிதத்துக்குப் பதிலாக குறித்த பணம் குறிப்பிடப்பட்டு “பணத்தில் செலுத்துங்கள்” என்பதாக போலியான ஆலோசணை உள்ளடக்கப்பட்ட வங்கி உத்தரவுக் கடிதம் மற்றும் போலியான முறையில் திருத்தப்பட்ட நிலையான வைப்புப் பற்றுச்சீட்டு ஆகியன முன்னாள் சிரேஷ்ட உதவி நிதியியல் அதிகாரியினால் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டு இப்பணம் பெறப்பட்டிருப்பதாக முன்னாள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

- இந்நிதி மோசடியை கணக்கிலிருந்து மூடி மறைப்பதற்கு நிலையான வைப்புக்கள் தன்னியக்க முறையில் புதிதுபடுத்தப்படும் போது திரண்ட வைப்புக்களின் மீதி மற்றும் வட்டி கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

- 03 நிலையான வைப்புக்கள் முடிவுறுத்தப்பட்டு வட்டியுடன் திரண்ட பெறுமதியான ரூபா. 3.08 மில்லியன் நிதி விஞ்ஞானப் பட்டப் பின் கற்கைகள் நிலையத்தில் வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்படாமல் மற்றும் கணக்குப் புத்தகத்தில் பதியப்படாமல் கபடமான முறையில் பணமாக பெற்ப்பட்டுள்ளது.

- 03 நிலையான வைப்புக்கள் பூரணமடைந்து முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பமாகின்ற போது திரண்டிருந்த 24.51 மில்லியன் ரூபா மீதியிலிருந்து 5.14 மில்லியன் ரூபாவின் மூலம் புதிய நிலையான வைப்பு ஆரம்பிக்கப்பட்டு, எஞ்சிய 19.37 மில்லியன் ரூபா பணம் கபடமான முறையில் பெறப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு மூன்று சந்தர்ப்பத்தில் அரசாங்க வழங்குதலின் கீழ் கிடைக்கப்பெற்ற 23.00 மில்லியன் ரூபாவில் 4.40 மில்லியன் ரூபா அரச வழங்குதல் தொகையாக கணக்கிடப்பட்டுள்ளது. எஞ்சிய 18.60 மில்லியன் ரூபாவும் நிலையான கணக்கு முவுறுத்தப்படுகின்ற போது கபடமான முறையில் பெற்றுக்கொண்ட 19.37 மில்லியன் ரூபா பணத்தை அடைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

- நிலையான வைப்பு முதிர்ச்சியடைகின்ற போது திரண்டு காணப்பட்ட 2.93 மில்லியன் ரூபா பணத்தில் 1.93 மில்லியன் ரூபா பணத்தை முன்னாள் சிரேஷ்ட நிதி ஆணையாளர் போலியான ஆவணைங்களை வங்கியில் சமர்ப்பித்து பணமாக பெற்றுள்ளார். அதன் பின்னர் அப் பணத்தை தேசிய விஞ்ஞான மன்றத்திடம் செலுத்தியுள்ளதாக காண்பிப்பதற்கு விடயப் பொறுப்பு அதிகாரியை அழைத்து செலுத்துகை வவுச்சர் ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை அது விடயம் தொடர்பான அதிகாரியிடம் வழங்கி அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு அவர் சுயமாகவே அதனை அத்தாட்சிப்படுத்தி தனது பொறுப்பில் வைத்துக்கொள்ளவோ மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்திடம் செலுத்தியிருக்கவோ இல்லை.

- நிறுவனத்தின் தேவைகளுக்காக வேண்டி வங்கியின் உத்தரவின்றி தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலையான வைப்புக்களை பணமாக்கிக்கொள்ள முடியுமான வகையில் 5.68 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பு பற்றுச்சீட்டுக்கள் 06 இனை சில காலங்களுக்கு முன்னர் தொட்டு நிறுவனத்தின் பணிப்பாளரினதும் சிரேஷ்ட உதவி நிதி ஆணையாளரினதும்

கையொப்பத்தையும் பதவி முத்திரையையும் இட்டு அத்தாட்சிப்படுத்தி காப்பகத்தில் வைத்து சிரேஷ்ட உதவி நிதி ஆணையாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

- நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான பணம் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளில் 6 மில்லியன் ரூபா முதல் 118 மில்லியன் ரூபா இடைவெளி அளவில் காணப்பட்டது. அத்தோடு அரச வங்கியொன்றில் சுகுஊ கணக்குகளில் 1 மில்லியன் ரூபா முதல் 27 மில்லியன் ரூபா இடைவெளி வரையில் கணக்கு மீதி காணப்பட்டது. அவ்வகையில் முழுத் திரவ நிலை சொத்து காணப்பட்ட போதும், நிறுவனத்தின் மேலதிக நிதியிலிருந்து வருமானம் ஈட்டுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து கணக்கில் இருந்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளும் தேவை குறித்த தெளிவொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதி மோசடி செய்யும் நோக்கில் 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிலையான வைப்புக்களுக்காக வேண்டி கிடைக்கப்பெற வேண்டிய வட்டி 16.89 மில்லியன் ரூபா வருடாந்த நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வட்டி வருமானம் கணக்கில் வைக்கப்படாமல் நிலையான வைப்புக்களில் உண்மையான திரட்டு நிதி கணக்கில் குறைவாக காட்டப்பட்டு அவ்வட்டித் தொகை வங்கியிலிருந்து பெறப்பட்டு மோசடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும், அவ்வாறு நிலையான வைப்புக்களின் வட்டித்தொகை கணக்கில் இடப்படாமலேயே நிலையான வைப்புக்களின் உண்மையான பெறுமதி குறைந்த அளவில் கணக்கில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மோசடி செய்த பணம் கணக்ககளிலிருந்து அம்பலமாவதை மூடி மறைப்பதற்கு திட்டமிடப்பட்ட வகையில் நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது.

- நிலையான வைப்புகள் முடிவுறுத்தப்பட்டு மோசடியான முறையில் பணம் மீளப் பெறப்பட்ட காரணத்தினால் 2008 மார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் கணக்காய்வு சந்தர்ப்பம் 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரை ஈட்டிக்கொள்ள முடியுமாக காணப்பட்ட வட்டி வருமானம் 24.25 மில்லியன் ரூபா தொகை நிறுவனத்திற்கு கிடைக்காமல் போயுள்ளது.

- நிலையான வைப்பினை ஆரம்பிக்கும் தேவையை தீர்மானித்தல் மற்றும் அதற்காக வேண்டி நிலையான வைப்பு விண்ணப்பங்களை தயாரித்தல், நிலையான வைப்புக்கள் முடிவுறுத்தப்பட்டு பணம் பெறும் தேவையை தீர்மானித்தல் மற்றும் அதற்காக வேண்டி வங்கி உத்தரவுக் கடிதங்களை தயார் செய்தல், நிலையான வைப்புக்களுடன் தொடர்பான வங்கிக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிலையான வைப்புக்களுடன் தொடர்பான வட்டியை கணக்கிடுதல், வட்டியை கணக்கிலிடுவதற்கு ஜர்னல் வவுச்சர்களை தயாரித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல், நிலையான வைப்பு கொடுக்கல் வாங்கலோடு தொடர்புடைய கணக்கு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக வேண்டி உள்ளக நிர்வாக ஒழுங்குகளை திட்டமிட்டு அமுல்படுத்தல் போன்ற சகல விடயங்களும் சிரேஷ்ட உதவி நிதி ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நிலையான வைப்பு கொடுக்கல் வாங்கலை செயற்படுத்துவதற்காக வேண்டி பேணப்பட வேண்டிய உபயோக ஆவணமான நிலையான வைப்பு ஆவணத்தை பேணிச்செல்லாமை மற்றும் கோப்புகளை முறையாக பேணிச்செல்லாமை, சிரேஷ்ட உதவி நிதி ஆணையாளரினால் செயற்படுத்திய நிலையான வைப்பு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும்

கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான போதிய கண்காணிப்பு முன்னெடுக்கப்படாமை மற்றும் நிறுவனத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பில் மதிப்பீடு இடம்பெறும் வகையில் உள்ளக கணக்காண்வு போதிய அளவில் செயற்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை கனிய வள நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

இலங்கையில் பொருளாதார ரீதியில் பயனுள்ள கனிய மணலை சுத்திகரிப்பு செய்து ஏற்றுமதி செய்கின்ற பிரதான நிறுவனம் ஒன்றான இலங்கை கனியவள நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விஷேட கணக்காண்வுப் பரிசோதனையில் நிருபணமான அவதானச் சுறுக்கங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக்கொள்ளாமை

  இலங்கையில் கனிய மணல் சார்ந்த உற்பத்தித் தொழிற்றுறை ஸ்தாபிக்கப்படாத காரணத்தினால் நிறுவனத்தின் உற்பத்தியான கனிய மணலுக்கு உள்நாட்டுச் சந்தையில் கேள்வி நிலவவில்லை. ஒட்டுமொத்த உற்பத்தியும் ஏற்றுமதி சந்தையை நோக்கி ஈடுபடுத்தப்பட்டது. அதன்படி, நிறுவனத்தின் உற்பத்திகள் ஜப்பான், ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றது. அவ்வாறிருப்பினும், நிறுவனத்தினால் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் இனங்காணப்பட்டு நேரடியாகவே ஆரம்பச் சந்தை ஆரம்ப உண்மையான வாடிக்கையாளர்களுக்கு இல்மனைட் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கூடாக விற்பனை மேற்கொள்ளப்பட்டதால் உயர்ந்த பட்ச வருமானத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழந்துகொள்ளப்பட்டிருந்தது.

- இல்மனைட் மெ.டொ. 9000 ஐ விற்பனை செய்தல்.

  மெ.டொ 9000 அளவான இல்மனைட் தொகையை விற்பனை செய்வதற்கான டென்டர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விற்பனை செய்தலுடன் தொடர்பான கேள்வி மனுக்களை கோருதல், விலைமனுக்களை பெற்றுக்கொள்ளுதல், தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், பெறுகைக் குழுவினரின் அனுமதியை வழங்குதல் போன்ற சகல டென்டர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளருக்கு டெண்டரை வழங்குவதற்கான சந்தர்ப்பம் அருகில் இருக்கும் போது அமைச்சின் மூலம் அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக வேண்டி அமைச்சரவை குறிப்பாணை சமர்ப்பிக்கப்பட்டது. இக்குறிப்பாணையின் மூலம் பாரியளவில் களஞ்சியங்பளில் குவிக்கப்பட்டிருந்த நிறுவனத்தில் உற்பத்திசெய்யப்பட்ட இல்மனைட் தொகை தொடர்பான நிலைமை, உலக சந்தையில் இல்மனைட் விலைமனுக்களின் பிரகாரம் டென்டர் மூலம் கூடுதல் விலை கிடைத்திருப்பதாக, முன்னர் விற்பனை செய்த விலைகளை விட கூடுதலான விலை இவ்விலைமனுவின் மூலம் கிடைத்துள்ளதாக, நிறுவனத்தின் கனிய மணல் உற்பத்தியின் வளர்ச்சி காரணமாக களஞ்சிய இட வசதிகள் குறைந்தமை, நீண்ட காலமாக களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததன் காரணமாக இடம்பெறும் வீண்விரயம், உற்பத்தி மற்றும் உற்பத்தி வளர்ச்சியின் படி விற்பனை செய்யும் தேவை போன்ற அத்தியாவசியமானதும் முக்கியமானதுமான விடயங்கள் குறித்த தகவல்கள் அமைச்சரவையின் அவதானத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை.

அத்துடன், அக்காலப்பகுதியில் டைடேனியம் டயொக்சைட் (TI02) நூற்றுக்கு 54 சதவீதத்தின் இல்மனைட் மெ.டொ 01க்கு உலக சந்தையில் 215 அ.டொ என்கின்ற உயர் விலையில் காணப்பட்டது. அவ்விலையின் அடிப்படையில் நிறுவனத்தின் விற்பனைக்கு உள்ள டைடேனியம் டயொக்சைட் (TI02) சதவீதம் நூற்றுக்கு 51.54 என்கின்ற இல்மனைட் மெ.டொ 01க்கு அ.டொ 202.89 என்கின்ற கூடுதலான விலை விலைமனுவினூடாக கிடைத்திருந்தது. இது தொடர்பில் அவதானம் செலுத்தி அவ்விலைமனு விலைக்கு நிறுவனத்தின் இல்மனைட் தொகையை விற்பனை செய்வதற்கு அனுமதியை வழங்காமல் விலைமனுவை ரத்துச்செய்வதற்கு அமைச்சின் செயலாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார். எனினும் சர்வதேச சந்தையில் இல்மனைட்டின் விலை அதிகரிக்கும் வேகத்தை கவனத்திற்கொண்டு சர்வதேச விலைமனுக் கோரலின் மூலம் இல்மனைட் தொகையை விற்பனைசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவையின் மூலம் உத்தரவு வழங்கப்பட்டது. அவ்வாறே அமைச்சரவை தீர்மானத்தின் படி, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய தீர்மானங்களை பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு வர்த்தக வாணிப அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும், அந்நடவடிக்கையை நிறைவேற்றுவதனையும் அவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. முதலாவது விலைமனுவிற்கான இல்மனைட் மெ.டொ 01க்காக வேண்டி அ.டொ 202.89 என்கின்ற கூடுதல் விலை கிடைத்திருந்த போதும், அவ்விலை நிராகரிக்கப்பட்டு பின்னர் மீண்டும் விலைமனு கோரப்பட்டதன் மூலம் அ.டொ. 163.80 என்கின்ற குறைவான விலையே கிடைத்தது. இல்மனைட் சந்தை விலை குறைந்து செல்லும் வேகத்தை கவனத்திற்கொண்டு அவ்விலைக்கேனும் இல்மனைட் தொகையை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அவ்விலைமனுவினையும் நிராகரித்தனர். சந்தை விலை மாற்றமடைவது தொடர்பில் முறையான ஆய்வோ அல்லது மதிப்பீடோ இன்றி மற்றும் தூரநோக்கற்ற நிலையில் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் தமது பொறுப்பை நிறைவேற்றுவதனை விட்டும் தவறியுள்ளார். இறுதியாக மூன்றாவது முறையாக அழைக்கப்பட்ட விலைமனுவில் இல்மனைட் மெ.டொ 01 க்கு அ.டொ 150 என்கின்ற குறைந்த விலையில் இல்மனைட் தொகையை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சினால் சரியான காலத்தில், சரியான தீர்மானத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் குறைந்த விலையில் இவ் இல்மனைட் தொகையை விற்பனை செய்ததன் காரணத்தினால் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த 72.35 மில்லியன் ரூபா என்னும் ஐ.அ.டொ. 476,010 விற்பனை வருமானம் கிடைக்காமல் போயுள்ளது.

## வெளி நிறுவனங்களுக்கு நிதி வழங்குதல்

வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் சேன்ட் நிறுவனம் அரசவளம் மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2010ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 04 அரச நிறுவனங்களுக்கு தமது குறிக்கோள்களுக்கு மாற்றமாக அந்நிறுவனங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வேண்டி 545 மில்லியன் ரூபா குறுகிய காலக் கடன் வழங்கப்பட்டிருந்தது. இலங்கை பீங்கான் தொழிற்றுறை இணைந்த சபையின் சேவையாளர்களுக்கான ஓய்வூதிய நஷ்டஈட்டை கொடுத்தல், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பற்றாக்குறையான சம்பளத்தை வழங்குவதற்கு, மக்கள் தோட்ட

அபிவிருத்தி சபையின் அவசரக் கொடுப்பனவை கொடுப்பதற்கு மற்றும் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்தின் பற்றாக்குறை சம்பளத்தை கொடுப்பதற்கும் இப்பணத்தொகை உபயோகிக்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகையை செலுத்துகையில் அரச பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பேரில் செயற்பட்டிருந்ததுடன், இக்கடன் தொகையை வழங்கியமைக்காக நிதியமைச்சினதும், அரச வியாபார திணைக்களத்தினதும் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை பீங்கான் தொழிற்றுறை இணைந்த சபையின் சேவையாளர்களுக்கான ஓய்வூதிய நஷ்டஈட்டை கொடுப்பதற்காக வேண்டி அரச வள முகாமைத்தவ கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் தவிர்ந்த இதர கடன் தொகைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை. 2018 நவம்பர் மாத இறுதியில் கடன் தொகை வழங்கப்பட்டு 05 வருடங்கள் உருண்டோடியும் குறித்த கடன் தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### கொடுப்பனவுகளை முறைகேடாக பெற்றுக்கொள்ளல்

தகவல் மற்றும் ஊடக அமைச்சின் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01ஆம் திகதிய இலக்கம் MMI/05/06/2/13-2 உடைய கடிதத்தின் பிரகாரம் “அரச நிர்வாக சுற்றறிக்கை 21/2013 இற்கு உட்பட்டதாக மாதாந்தம் விடுமுறை நாட்களில் பணியாற்றுவோர்க்கான விடுமுறை நாள் சம்பளம் கொடுப்பதற்கும், அந்நாளுக்கான வேறு எந்த கொடுப்பனவையும் செலுத்தாமல் இருப்பதற்கும், வேறு எந்த கொடுப்பனவுக்கும் அந்நாளை கணக்கிடாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும் படி” அறிவித்திருந்த நிலையில் அரச அச்சக கூட்டுத்தாபன ஊழியர்கள் 25 பேர் விடுமுறை நாள் சம்பளம் பெற்ற நாட்களின் மனித்தியாலயங்களை பயன்படுத்தி 2017ஆம் ஆண்டுக்கு 4.44 மில்லியன் ரூபாவும், 2018 மே மாதம் வரையில் 1.35 மில்லியன் ரூபாவும் உரிமையில்லாத வர்த்தக கொடுப்பனவை பெற்றுள்ளனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்
2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

- நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் படிவங்கள்
- 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று
- கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு
- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று
- 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

## நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் படிவங்கள்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இச்சுற்றறிக்கையிலுள்ள பின்வரும் அடிப்படைகளைப் பியோகித்து 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடலின் அடிப்படை

#### அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2018 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

#### அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

#### வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியிடக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கள் கிடைக்கக் கூடிய காசின் அடிப்படையில் அடையாளங்காணப்படுகின்றது.

#### சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

#### சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

#### காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2018 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று | | | |
|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட 2018 | | குறிப்பு | உள்ளபடியான 2018 |
| ரூபா | | | ரூபா |
| 140,000,000 | **வருமானப் பெறுகைகள்** | | 165,030,063 |
| - | வருமான வரி | 1 | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - |
| **140,000,000** | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 165,030,063 |
| 140,000,000 | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **165,030,063** |
| | | | |
| - | **வருமானம் அல்லாத பெறுகைகள்** | | - |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 603,800,000 |
| - | வைப்புகள் | | 20,365,300 |
| - | முற்பணக் கணக்குகள் | | 77,867,428 |
| - | ஏனைய பெறுகைகள் | | 62,339,998 |
| | பெறுமதிசேர் வரிப் பெறுவனவுகள் | | 26,380,610 |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **790,753,336** |
| 140,000,000 | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **1,955,783,399** |
| | **கழி : செலவினம்** | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | |
| **1,456,300,000** | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,464,526,249 |
| **190,200,000** | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 253,286,132 |
| **15,800,000** | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 13,771,671 |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - |
| 1,662,300,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **1,731,584,052** |
| | | | |
| | **மூலதனம் செலவினம்** | | |
| **12,500,000** | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 12,212,631 |
| **23,000,000** | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 14,834,169 |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| - | | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | | 13 | | - | |
| **87,000,000** | | மனித வள அபிவிருத்தி | | 14 | | 76,136,978 | |
| - | | ஏனைய மூலதனச் செலவினங்கள் | | 15 | | - | |
| 122,500,000 | | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | | | **103,183,777** | |
| | | | | | | | |
| | | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | | | **118,826,825** | |
| | | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | | | 24,858,261 | |
| | | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | | | 73,254,303 | |
| | | **பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவு** | | | | 20,714,261 | |
| **1,784,800,000** | | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | | | **1,953,594,654** | |
| - | | **2018 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | | | 2,188,745 | |

| **2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி சீராக்கல் கணக்கு** | | |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் கூற்றின் படி கட்டுநிதி மீதி | | 2,188,745 |
| (+) கூட்டுக | | |
| முற்பணக் கணக்கின் சீராக்கல் மீதி | 1,204,496 | |
| ஏனைய செலவின விடயங்களிற்கு வரவு வைத்தல் | 2,404,375 | 3,608,871 |
| | | 5,797,616 |
| (-) கழிக்க | | |
| முற்பணப் பெறுவனவுச் சீராக்கம் | 2,462,180 | |
| ஏனைய செலவின விடயங்களிற்கான செலவினம் | 3,335,436 | 5,797,616 |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் மீதி | | (0) |

| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | | |
|---|---|---|
| | குறிப்பு | 2018 |
| | | ரூபா |
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 126,731,812 |
| **நிதி சொத்துக்கள்** | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/ஏசீஏ-5(ஏ) | 219,416,775 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **346,148,587** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | |
| தேறிய பெறுமதி | | 205,279,869 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 126,731,812 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5(பீ) | 2,730,000 |
| | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| செலுத்த வேண்டிய VAT | | 4,542,134 |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 6,864,772 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **346,148,587** |

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காயட்வாளர் தலைமை அதிபதி
2019 பெப்ரவரி ஆந் திகதி

பிரதான நிதி உத்தியோகத்தர்
எஸ்.எம்.சீ. லக்ஷ்மி
பிரதான கணக்காயர்
2019 பெப்ரவரி ஆந் திகதி

| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | |
|---|---|
| | **2018** |
| | **ரூபா** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | |
| **மொத்த வரிப் பெறுகைகள்** | |
| **கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்** | 165,030,063 |
| **வருமானம் அல்லாத பெறுகைகள்** | 1,666,049,458 |
| **வைப்புக்கள் பெறுவனவு** | 20,365,300 |
| **பெறுமதிசேர் வரி** | 26,380,610 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | **1,877,825,431** |
| கழி – செலவினம் | |
| **ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்** | **1,820,864,723** |
| **மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்** | - |
| **வரிக் கொடுப்பனவு** | 20,714,261 |
| **வைப்புக்கள் கொடுப்பனவு** | 24,858,261 |
| **நிதிக் கிரயம் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி** | - |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | **1,866,437,245** |
| தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | **11,388,186** |
| முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல் | |
| **உரிமையினை நீக்கும் ஏற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை** | 90,540 |
| **முற்பணங்களை மீள அறவிடுதல்** | 75,405,249 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | **75,495,789** |
| **கழிக்க: செலவினம்** | |
| **கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு** | 14,834,169 |
| **முற்பணக் கொடுப்பனவுகள்** | 72,049,806 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (உ)** | **86,883,975** |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ-உ) | **(11,388,186)** |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ) | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | **-** |
| **உள்ளூர்க் கடன்கள்** | |
| **வெளிநாட்டுக் கடன்கள்** | - |
| **பெற்ற நன்கொடைகள்** | |

| | |
|---|---|
| | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - |
| *கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:* | |
| **உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்** | - |
| **வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்** | - |
| **வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றம்** | |

# 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள அவதானிப்புக்களின் பொழிப்பு

இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவம்
நூதனசாலையினையும் ஞாபனச் சிலையையும் நிர்மாணித்தல்
மருத்துவ வழங்கல்
திண்மக் கழிவு முகாமைத்துவம்
வனச் சீவராசிகள் திணைக்களத்தின் செயலாற்றல்
உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்
அரசாங்க சேவையினை டிஜஸரல் மயப்படுத்தல்
பாற் பசுக்களை இறக்குமதி செய்தல்
நெற்செய்கை உர மானிய வேலைத்திட்டம்
இலங்கையின் விளையாட்டுக்கள் மற்றும் அதன் நிர்வாகம்
வரி நிர்வாக கணனிமயப்படுத்தல் கணக்காய்வு
அரசாங்க சேவையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயலாற்றல்
தங்கம் கலந்த மணலை ஏற்றுமதி செய்தல்
சமுர்த்தி பெறுவோரை வலுப்படுத்தல்
விவசாயப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்
வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் செயலாற்றல்
தரிசுநில வயற் காணிகளை நிரப்பும் செயற்பாடுகள்
லொத்தர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு
தந்திரோபாய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனத்தின் கணக்காய்வு
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயலாற்றல்
சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு வழங்குதல்
ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முகாமைத்துவச் செயலாற்றல்
அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல்
யான்ஓயா மணல் அகழ்வு கருத்திட்டம்
மத்திய அதிவேக வீதி செயற்திட்டம்
நெல் சந்தைப்படுத்தல் சபையின் செயலாற்றுகை
நுவரெலியா மாவட்ட செயலகத் தினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல்

# 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் 08 விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 2018 ஆகஸ்ட் 01 முதல் அமுலாக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியின் பின்னர் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 19 விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அதன் படி 2018 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மொத்தம் 27 விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய கணக்கய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அரசாங்கக் கம்பனிகள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்கள் தொடர்பாக இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பொது முயற்சிகள் மீதான குழு மற்றும் அரசாங்க கணக்குகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் வழங்கப்பட்ட கோரிக்கைகளிற்கு இணங்கவும் இவ்வாறான சில விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. எனக்கு வழங்கப்பட்டுள்ள தற்துணிபு அதிகாரத்திற்கமைய ஊடகங்களில் வெளியிடுதல் அல்லது மக்கள் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேசிய மற்றும் தற்கால முக்கியத்துவமுள்ள விடயங்கள் இந்த அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

கீழே காட்டப்பட்டவாறு 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அனைத்து விசேட கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கைகளில் ……… அறிக்கைகள் பொது முயற்சிகள் குழுவின் குழுநிலைக் கூட்டத்திலும் …….. அறிக்கைகள் அரசாங்க கணக்குகள் மீதான குழுவின் குழுநிலைக் கூட்டத்திலும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கலந்துரையாடப்பட்டன. மேலும், இந்த அறிக்கைகளை பொதுமக்களின் பார்வைக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் மும்மொழிகளிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைள் தொடர்பான பொழிப்பு கீழேயுள்ள அட்டவணை 03 இல் காண்பிக்கப்பட்டுள்ளது

| | அறிக்கையின் பெயர் | அறிக்கைத் திகதி | அறிக்கையினை வெளியிடுவதற்கு பின்னணியாக அமைந்த காரணி |
|---|---|---|---|
| 01 | இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவம் | 2018.02.02 | இலங்கை குடியரசின் கடன் முகாமைத்துவம் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான அறிக்கையினை பாராளுமன்றித்திற்குச் சமர்ப்பித்தல் |
| 02 | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் மெதமூலன டீ.ஏ. ராஜபக்ஷ நூதனசாலையினையும் ஞாபனச் சிலையையும் நிர்மாணித்தல் | 2018.02.06 | நிர்மாணங்கள் தொடர்பில் தற்போது எழுந்துள்ள சர்ச்சைக்குரிய நிலைமையினையும் முக்கியத்துவத் தினையும் கருத்திற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் |
| 03 | சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ள ப்படுகின்ற மருத்துவ வழங்கல்கள் | 2018.03.14 | சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ வழங்கல்கள் மற்றும் வழங்கல் செயன்முறையிலுள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதற்கு |
| 04 | கொழும்பு மாநாகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவம் | 2018.03.16 | மீதொடமுல்ல பொதுவில்கும்புர குப்பைமேடு சரிந்து விழுந்தமையால் ஏற்பட்ட ஆதன மற்றும் உயிர்ச் சேதங்களின் பின்னணியில் எழுந்த சமூகப் பிரச்சினை |

| | | | |
|---|---|---|---|
| 05 | வனச் சீவராசிகள் திணைக்களத்தின் செயலாற்றல் | 2018.03.23 | வனச் சீவராசிகள் திணைக்களத்தினால் வனச்சீவராசிகளின் பாதுகாப்பு மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் உரியவாறு நிறைவேற்றப் படுகின்றதா என்பது குறித்து சமூகம் மத்தியில் பாரிய விவாதம் காணப்படுதல். |
| 06 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.04.23 | ஏற்பட்டுள்ள பாரிய நீர்க்கசிவு காரணமாக மோசமான சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமையால் |
| 07 | பொதுச் சேவையை டிஜிற்றல் மயப்படுத்தல் தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (தனியார்) வகிபாகம் தொடர்பான கணக்காய் வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை | 2018.05.09 | அரசாங்க சேவையை டிஜிற்றல் மயப்படுத்தல் தொடர்பில் வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (தனியார்) வகிபாகம் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிதல் |
| 08 | பாற் பசுக்களை இறக்குமதி செய்தல் செயற்திட்டம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.05.04 | தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் பண்ணைகளிற்காக 15,000 பாற் பசுக்களை இறக்குமதி செய்தல் செயற்திட்டம் மீதான செயற்திறனை மதிப்பிடுதல் |
| 09 | இலங்கையின் நெல் உர மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை | 2018.05.18 | உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனைப் பரிசோதித்தல் |
| 10 | இலங்கையின் விளையாட்டுக்கள் மற்றும் அதன் நிர்வாகம் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.05.24 | இலங்கையில் விளையாட்டுக்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சட்டப் பின்னணியினையும் அச்சட்டப்பின்னணியில் நிறைவேற்றப்பட வேண்டிய நிறுவனங்களின் கடமைப் பொறுப்புக்களையும் புலனாய்வு செய்து அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல் |
| 11 | உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் வரி நிர்வாக கணனி முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.06.14 | சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தைக் கண்டறிதல் |
| 12 | அரசாங்க சேவையின் அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகை தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை | 2018.09.05 | அரசாங்க சேவையின் அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகையின் மீது கருத்துத் தெரிவித்தல் |
| 13 | தங்கம் கலந்த மண் ஏற்றுமதி செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.09.06 | தங்க ஆபரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும் தங்கம் கலந்த கழிவு மண் (Wastage of Goldsmith Burnet Residue) ஏற்றுமதியின் போது எழுந்துள்ள சிக்கல் நிலையினை பரிசோதித்தல் |
| 14 | சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டு வதற்கான சமுர்த்தி உதவுதொகை | 2018.09.07 | சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதியினை பரிசோதித் |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்தின் பங்களிப்பு | | தல் |
| 15 | விவசாய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் ஆற்றப்பட்ட பங்களிப்பினை மதிப்பீடுசெய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.09.12 | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் பொருளாதாரத்திற்கு ஆற்றப்படுகின்ற பங்களிப்பு போதியதாக உள்ளதா என்பதனைக் கண்டறிதல் |
| 16 | வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் செயலாற்றல மீதான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.09.12 | வட மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனையும் அந்த திணைக்களத்தினூடாக பொதுமக்களுக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த சேவையொன்றினை வழங்குவதற்கு வடமத்திய மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்ததா என்பதனையும் கண்டறிதல் |
| 17 | கேகாலை மாவட்டத்தில் தரிசுநில வயற் காணிகளை நிரப்பும் செயற்பாடுகளால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை | 2018.09.28 | தரிசுநில வயற் காணிகளை நிரப்பும் செயற்பாடுகளால் ஏற்படுகின்ற தாக்கங்களைக் கண்டறிதல் |
| 18 | தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்படுகின்ற 32 ஆவது கழம்பு எயாபோர்ட் சுபர் ட்ரோ, புதிய விமான நிலைய மற்றும் டொலர் போசூன் லொத்தர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு | 2018.09.09 | கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை உலகலாவிய சுற்றுலாப் பிரயாணிகள் உள்ளங்கவரும் நிலைமாற்ற நிலையமொன்றாக மேம்படுத்துதல் மற்றும் விமான நிலையத்திலிருந்து உழைக்கின்ற வருமானத்தை அதிகரித்தல் போன்ற இலக்குகளை முன்னோக்காகக் கொண்டு அறிமுகப்படுத்திய லொத்தர்களின் மூலம் எதிர்பார்ப்புகள் அடையப்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிதல் |
| 19 | தந்திரோபாய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனத்தின் கணக்காய்வு அறிக்கை | 2018.11.01 | இந்நிறுவனத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டுள்ளதா என்பதனையும் இந்நிறுவனம் தொடர்ந்தியங்குவதன் பயனுள்ள தன்மையினையும் பரீட்சித்தில் |
| 20 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான விஷேட கணக்காய்வு அறிக்கை | 2018.11.30 | கடந்த 03 வருட காலப்பகுதியில் மேற்கொள்வ தற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நீர்க்கட்டண திருத்த முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டிருப்பின் அதன் தாக்கங்கள் பொது மக்களைப் பெருமளவில் பாதித்திருக்கும் என்பதனால் கிரயத்தை கட்டுப்படுத்தி, வருமானம் கிடைக்காத நீரின் அளவினை குறைத்து, செயற்திட்ட செயலாற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் நீர்க் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்கான காரணங்களைப் பரீட்சித்தல் இவ்வறிக்கை வழங்குவதன் நோக்கமாக இருந்தது |
| 21 | சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல் செயற்பாடு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை | 2018.11.30 | சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளை உரியவாறு மேற்கொள்தல் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயலாற்றலை மதிப்பிடுதல் |
| 22 | ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முகாமைத்துவத்தின் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை | 2018.11.30 | 2015 பெப்ரவரி மற்றும் 2016 மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சினைக்குரிய பிணை முறி விநியோகித்தல் தொடர்பாக பரீட்சிப்பதற்காக நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போதும் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கூறப்பட்ட பிணைமுறி விநியோகம் தொடர்பாக மேலதிகமாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் போதும் இது தொடர்பாக விரிவாக வினவப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட விடயங்களையும் கவனத்தில் கொண்டு நேரடி முறைமையில் திறைசேரி பிணைமுறி விநியோகித்தலை கைவிடுவதற்கு தீர்மானித்திருந்த காலப்பகுதிக்கு கூடிய கவனம் செலுத்தி நிதியத்தின் நிதி முகாமைத்துவ செயல்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. |
| 23 | அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை | 2018.12.06 | பொதுத் துறையிலுள்ள முன்னுரிமை உற்பத்தி நிறுவனமான இந்த நிறுவனத்தின் செயற்றிறனின் மைக்கான காரணங்களைப் பரீட்சிப்பதற்கும் மீண்டும் இலாபம் பெறுகின்ற நிறுனமாக மாற்றுவதற்கு இயலுமான வழிமுறைகளைப் பரீட்சித்தல் இக்கணக்காய்வின் நோக்கமாக இருந்தது. |
| 24 | யான்ஓயா மணல் அகழ்வு கருத்திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.12.27 | அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போதும் அகழ்வுகளை மேற்கொள்ளும் போதும் மேற்கொண்டுள்ள முறையற்ற தன்மை காரணமாக ஏற்பட்டுள்ள சமூக, தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக பரிசீலனை செய்தலும், அதற்கு வழங்க முடியுமான தீர்வுகளை முன்வைத்தலும் இந்த அறிக்கையின் நோக்கங்களாகும். |
| 25 | மத்திய அதிவேக வீதி செயற்தி ட்டத்தின் சாத்தியவள ஆய்வு மற்றும் அச்செயற்திட்டத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் தொடர் பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.12.28 | மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மற்றும் அச்செயற்திட்டத் திற்கான பெறுகை நடவடிக்கைகள உரியவாறு இடம்பெற்றதா என்பதனைப் பரீட்சித்தல் |
| 26 | நெல் சந்தைப்படுத்தல் சபையின் செயலாற்றுகை தொடர்பான விசேட கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை | 2018.12.28 | வினைத்திறனற்ற நிலைமைக்கு நிறுவனம் உள்ளாவதற்கான காரணங்களை பரிசீலனை செய்வதற்கும், மீண்டும் வினைத்திறனுடன்கூடிய நிறுவனமாக உருவாக்குவதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகளை பரிசீலனை செய்வதற்கும் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது |
| 27 | நுவரெலியா மாவட்ட செயலகத் தினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை | 2018.12.31 | தரமற்ற செயற்திட்டங்களும் பூரணப்படுத்தப்படாத செயற்திட்டங்களும் தோன்றுதல் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துகையில் பொது நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை காரணமாக எழுந்துள்ள பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை இனங்காணல் |

அட்டவணை 3 – 2018 இல் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

2018 இல் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் அத்தியாயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் அரச கடன் முகாமைத்துவம்

### மொத்த அரச கடன் மற்றும் மொத்த சொத்துக்கள் அறிக்கையிடல்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்ட அரச கடன் அளவு 2005 ஆண்டின் இறுதியில் ரூபா 2,142 மில்லியனாக இருந்ததுடன், அது 2016 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 8,681 பில்லியன் வரை அதாவது ரூபா 6,719 பில்லியனால் அதிகரித்து இருந்தது. அவ்வாறே 2005 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 293 பில்லியனாக காணப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அளவு (நிதிச் சொத்துக்கள் மாத்திரம்) 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1,087 பில்லியன் வரை (நிதியல்லாத சொத்துக்கள் ரூபா 347 பில்லியன் உட்பட) அதாவது ரூபா 794 பில்லியனால் மாத்திரம் அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் நாட்டின் கடன் சுமை துரிதமாக அதிகரித்துச் சென்ற போதிலும் அக்கடன் தொகை பயன்பாட்டினால் உருவான சொத்துக்கள் சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,861 பில்லியன் மொத்தக் கடன் மீதி (அரசினால் குறுங்காலக் கடனாக மத்திய வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட முற்பணம் உட்பட) ரூபா 11,839 பில்லியன் தொகையான அவ்வாண்டின் மொத்த தேசிய உற்பத்தியில 74.8 சதவீதமாக இருந்தது. மேலும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி மொத்த தேசிய உற்பத்தியின் 79.3 சதவீதமாக இருந்தது.

மொத்த தேறிய அரச கடன் (மொத்த கடன் பெறுவனவுகளில் கடன் தவணை கொடுப்பனவு கழிக்கப்பட்டதன் பின்னர்) அளவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் அரச முதலீடுகள் காணப்பட்டால் சனத்தொகை பயன்பாட்டின் மூலம் நாட்டில் அபிவிருத்தியொன்று இடம் பெற்றுள்ளதாக நிரூபணமான போதிலும் 2016 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் அரச முதலீடாக இனங்காணப்பட்ட பெறுமதி குறித்த ஆண்டில் பெற்றுக்கொண்ட கடன் அளவினை விட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த அரச முதலீட்டினுள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள், சமூக நலன்புரி தன்மையிலான அபிவிருத்தி உதவி செயற்பாடுகளுக்காக செய்யப்படும் செலவினங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் பங்களிப்பு போன்ற செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் வழங்கப்படும் மொத்த கடன் தொகையில் கருத்தில் கொள்ளக்கூடிய அளவு மீண்டெழும் தன்மையிலான செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறே நீண்டகாலமாக அரசினால் பெற்றுக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களில் கருத்திற் கொள்ளக்கூடிய அளவு கடன் தவனை மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக பயன்படுத்துவதற்கு நேர்வதால் நாட்டில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளத் தவறியிருந்தது. அதன் பிரகாரம் கடன் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பாக அரச முதலீட்டை அதிகரிக்காமை ஊடாக போதியளவு உற்பத்திக் கைத்தொழில் ஏற்படுத்தாமை மற்றும் மீண்டெழும் செலவினம் படிப்படியாக அதிகரித்தமை காரணமாக அரச கடன் சுமை நீண்ட காலமாக தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அவ்வாறே அபிவிருத்தி செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படாதிருந்தமை காரணமாக நாட்டின் நிதி ஸ்திரத்தன்மை உட்பட கடன் திருப்பிச் செலுத்தும் இயலுமையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

### தனிநபர் கடன் அளவு

மொத்த அரச கடன் மீதியினை நடு ஆண்டு சனத்தொகையுடன் ஒப்பிடும் போது 2005 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 108,908 ஆன தனிநபர் கடன் அளவு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 417,913 ஆக இருந்தது. அவ்வாறே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 373,462 தொகையான தனிநபர் கடன் அளவுடன் ஒப்பிடும் போது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ருபா 44,451 அதாவது 12 சதவீதமான அதிகரிபொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த அரச கடனில் வெளிநாட்டுக் கடன் கருத்தில் கொள்ளக் கூடியளவு (அதாவது 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவொன்று) உள்ளடக்கப்பட்டிருந்தமை மற்றும் அது தொடர்ச்சியாக அதிகரிப்பதும் வெவ்வேறு

காரணங்களினால் வெளிநாட்டு நாணயத்திற்கு ஒப்பாக ரூபாயின் பெறுமதி குறைவடைவதன் தாகத்தினாலும் தனி நபர் கடன் அளவின் உண்மையான பெறுமதி மேலும் அதிகரித்துச் செல்லும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அவ்வாறே கணக்கீடு செய்யப்படாத (நிதி ஏற்பாடு இல்லாததன் பேரில் கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக்கடன் மற்றும் திறைசேரி பிணை முறிகளில் முகப்பு பெறுமதி குறைத்து பதிவு செய்தல்) மற்றும் ஐந்தொகைக்கு வெளியே கணக்கீடு செய்துள்ள வெளிநாட்டுக் கடன் அளவு (Off Balance Sheet Items) மேற்படி கடன் மீதிக்கு உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அக்கடன் மீதிகளையும் சீராக்கியதன் பின்னர் தனிநபர் கடன் அளவு மேலும் அதிகரிக்கும்.

### வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை நிதியீட்டம் (வரவு செலவுத்திட்ட இடைவெளி நிரப்பல்)

2016 இன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நிதியீட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட மொத்த நிதியளிப்பின் மொத்தம் ரூபா 1,724 பில்லியனாக இருந்தது. இருப்பினும், உள்ளபடியான நிதியீட்டத்தின் மொத்தம் ரூபா 666 பில்லியன் ஆக காணப்பட்டது. திருத்திய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் படி, 2016 இல் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,438 மில்லியனாக இருந்த போதிலும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகளில் உள்ளவாறான பெறுமதி ரூபா 1,616 மில்லியனாக இருந்நமையால் அது திருத்திய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பாக ரூபா 822 மில்லியன் அதாவது 33.7 சதவீத குறைவொன்றாகும். 2016 ஆம் ஆண்டில் அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்த கடன் அளவு திருத்திய வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே அட்டவணை 04 இல் காட்டப்பட்டுள்ளது.

| கடன் வகை | 2016 ஆம் ஆண்டில் கடன் பெற்றுக்கொள்ளல் | | | |
|---|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டில் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி | உள்ளவாறான பெறுமதி | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுக்கு ஒப்பாக உள்ளவாறான கடன் பெறுமளவுகளின் அதிகரிப்பு | |
| | | | பெறுமதி | சதவீதம் |
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | |
| வெளிநாட்டுக் கடன் | 300 | 574 | 274 | 91.3 |
| உள்நாட்டுக் கடன் * | 2,138 | 1,042 | (1,096) | (51.3) |
| மொத்தம் | 2,438 | 1,616 | (822) | (33.7) |

அட்டவணை 04 - திருத்திய பாதீட்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான கடனின் அளவின் அதிகரிப்பு

* உள்நாட்டுக் கடனில் திறைசேரி வழங்கியதன் மூலம் பெற்றுக்கொண்ட பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது.

### நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத கடன் மீதிகள் / ஐந்தொகைக்கு வெளியே கணக்கீடு செய்யப்பட்ட கடன் (Off Balance Sheet Items)

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 8,861 மில்லியனாக இருந்த போதிலும் கடந்த சில ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மேலும் செலுத்த வேண்டி எஞ்சியிருந்த கீழே காட்டப்பட்டுள்ள ரூபா 826 மில்லியன் கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

14 கடன் கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2016 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு கடன்களிலிருந்து ரூபா 5 பில்லியன் மற்றும் 09 ஆம் இலக்க உடன்படிக்கைக்கு உரிய 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த வெளிநாட்டு கடன்களிலிருந்து ரூபா ஒரு பில்லியனாக ரூபா 6 பில்லியன் கடன் தீர்வையாகி இருந்த போதிலும் அக்கடன்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### நிதிச் செயவாற்றல்

2015 ஆம் ஆண்டில் ரூபா 2,357 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க செலவினம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,365 பில்லியன் வரை ரூபா 8 பில்லியனால் அல்லது ஒரு சதவீதத்தினைக் காட்டிலும்

குறைந்த அளவில் அதிகரித்திருந்த போதிலும், மொத்த மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 98 பில்லியன் அல்லது 5.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தில் உள்ளடங்கயிருந்த 31.5 சதவீத பொதுப்படுகடன் மீதான வட்டிச் செலவினம், 2016 ஆம் ஆண்டில் 34.5 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அதற்கமைய, 2015 ஆம் அண்டில், 2015 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினத்தில் உள்ளடங்கியிருந்த பொது முதலீட்டுச் செலவினம் மீயாள்வாண்டில் 25 சதவீதமாக குறைவடைந்திருந்தது.

2016 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டுக் கடன் மீளளித்தல்கள், மொத்தப் பொதுகடன் பெறுகைகளில் 82.3 சதவீதமாக காணப்பட்டதுடன் அதில் உள்ளடங்கியிருந்த உள்நாட்டுக் கடன் பெறுதல் ஏறத்தாழ 17.7 சதவீதமாகும். ஆனாலும், ஆண்டின் போது மீளளிக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் 20.3 சதவீதமாகக் காணப்பட்டமையால் மொத்த உள்நாட்டுக் கடன் பெறுதல்கள் உள்நாட்டுக் கடன்களை மீளளிப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை. அதற்கமைய, உள்நாட்டுக் கடன்பெறுதல்களிலிருந்து பொது முதலீடுகளை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை.

### பாதீட்டுப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீத வரம்பினை மீறியிருந்தமை

2016 ஆம் ஆண்டின் குடியரசினது நிதிக்கூற்றுக்களின் படி மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 1,488 பில்லியனானதுடன், அது 2015 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறையினைக் காட்டிலும் ரூபா 317 பில்லியன் அல்லது 27 சதவீத அதிகரிப்பாகும். 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி, உள்ளபடியான பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 666 பில்லியனாக காணப்பட்டதுடன், அது மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறையினைக் காட்டிலும் ரூபா 822 பில்லியனால் குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான பாதீட்டுப் பற்றாக்குறை மொத்தத் தேசிய உற்பத்தியான ரூபா 11,839 பில்லியனில் 5.63 சதவீதமாக காணப்பட்டமையால் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (கடப்பாடுகள்) (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (கடப்பாடுகள்) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீத வரம்பினை விஞ்சியிருந்தது.

### வரம்பினை மீறி கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (கடப்பாடுகள்) (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (கடப்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம், அரசாங்கத்தின் மொத்தக் கடப்பாடுகள் மொத்தத் தேசிய உற்பத்தியில் 80 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது. 2016 ஆம் ஆண்டின் குடியரசினது நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 9,865 பில்லியனாகக் காணப்பட்டதுடன், அது 2016 ஆம் மொத்தத் தேசிய உற்பத்தியான ரூபா 11,839 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 83.3 சதவீதமாகக் காணப்பட்டமையால் அது நிதி முகாமைத்துவ (கடப்பாடுகள்) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உச்ச கடப்பாட்டு வரம்பினை மீறியிருந்தது.

## இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மெதமூலன டீ.ஏ.ராஜபக்ஷ நூதனசாலை மற்றும் நினைவுச் சிலை நிர்மாணம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை.

அரச வளங்களை செலவு செய்து மேற்படி சிலை நிர்மாணம் (செயற்திட்டம்) முறையற்ற செயற்பாடொன்றாக 2014 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக சுருக்கமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இந்நிர்மாணம் தொடர்பாக இதுவரை உருவாகியுள்ள தர்க்க ரீதியான நிலைமை மற்றும் முக்கியத்துவம் கருதி இந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை விபரமாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

இச்செயற்திட்டத்திற்குரிய நிர்மாண வேலைகள் இலங்கை கடற்படையின் நேரடி ஈடுபாட்டுடன் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக கூட்டுத்தாபனத்தினால்

தயாரிக்கப்பட்ட ரூபா 33.94 மில்லியன் தொகையான ஆரம்ப மதிப்பீடொன்று (BOQ) காணப்பட்ட போதிலும், அது குறித்த மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு இணக்கப்பாட்டைபெற்றுக்கொண்டமைக்கு எவ்வித சான்றுகளும் காணப்படாமை. பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை மிகைத்து உள்ளவாறான செலவினம் (வரி மற்றும் வட்டியுடன்) ரூபா 81.31 மில்லியன் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய எவற்றுக்கும் செயற்திட்ட கட்டமைப்பில் திட்டங்களில் இடம்பெற்ற மாற்றங்களுக்காக மன்றத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டமைக்கான சன்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

சேவை நாடுனருக்கு கொடுப்பனவு செய்யும் போது அத்தொகை குறித்த ஒப்பந்தக்காரரின் அறிவிப்பின் பிரகாரம் ஒப்பந்த் க்காரரின் அலுலகத்திற்கு முறைப்படி வழங்கல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கணக்கிற்கு இனங்காணப்படாத நபரொருவரினால் ரூபா 25 மில்லியன் பணம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டிருந்ததாக கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளரால் (நிதி) கூட்டுத்தாபனத்தின் வங்கி கணக்கு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்படும் வரை குறித்த பணப் பெறுவனவு தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்த) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமான நிதிஏற்பாடு இல்லாமை காரணமாக ரூபா 592.79 மில்லியன் தொகையினை ஆறுமாத தவணைகள் 24 இன் மூலம் திருப்பிச் செலுத்தும் இணக்கப்பாட்டுடன் பொது திறைசேரிக்கும் பாரிய செலவின பொறுப்பொன்று ஏற்படுத்தும் வகையில் அரச வங்கியொன்றிடமிருந்து ரூபா 14,277 மில்லியனான கடனைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அரச கூட்டுத்தாபனத்தின் வரையறுக்கப்பட்ட வளங்கள் அதனது நோக்கத்திற்கு அப்பாற்பட்ட செபயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் கேள்விக்குரியதாக காணப்பட்டது.

## சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் மேறகொள்ளப்பட்ட மருத்துவ வழங்கல், வழங்கல் செயற்பாடு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கை

மக்களின் தேவைகளுக்கு பதிலளித்தவாறு கூட்டாக செயற்பட்டு முழுமையானதும், உயர் தரத்திலானதும், குணநலன் பொருந்தியதும், சமத்துவமானதும் விளைவுடையதும் நிலைபேறானதுமான சுகாதார சேவையினை இலங்கை வாழ் மக்களுகக் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அடையக்கூடிய உயர்ந்த சுகாதார மட்டத்தினை அடைதல் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் இலட்சியம் (Mission) ஆகும். சுகாதார துறைக்கான கொள்கைககளை உருவாக்குதல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சுகாதார சேவைகளை வழங்குவதற்காக நியமங்கள் மற்றும் சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குதல், மனிதவள அபிவிருத்தி, முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி, வளப்பங்கீடு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு செய்தல் போன்றன பிரதான பணிகளாக கருதப்படுவதுடன், நோயாளர் சிகிச்சை சேவைகளை வழங்குதல் மற்றும் அதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல் மிகவும் முக்கியமானது ஆகும்.

நோயாளர் சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கு தேவையான பௌதீக வளங்களிடையே மருத்துவ வழங்கல்களுக்கு இணையற்ற இடமொன்று கிடைப்பது மருத்துவ வழங்கல்கள் இன்றிய நோயாளர்களுக்கான சிகிச்சை சேவையொன்றினை பற்றி கருத முடியாததால் ஆகும்.

வரிசை அமைச்சின் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள அனைத்து மருத்துவ மனைகளிலிருந்தும் சுகாதார துறைக்கு உரிய

ஏனைய நிறுவனங்களிலிருந்தும் வழங்கப்படும் நோய் நிவாரண சேவைகளுக்கு தேவையான ஔடதங்கள், அறுவைச் சிகிச்சை பொருட்கள், ஒளித்தெறிப்பு பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்கள் மருத்துவ வழங்கல்களாக இனங்காணப்படும்.

மருத்துவ வழங்கல்களின் ஒட்டுமொத்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக பெறுகைகள், கட்டளையிடல், பொறுப்பேற்றல், வழங்குநர்களுக்கு கொடுப்பனவுகளை மேறகொள்ளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய ஒட்டுமொத்த செயன்முறையினை செயற்படுத்தல், கட்டுப்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றுக்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப்பகுதியினுள் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளினூடாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 685,152 மில்லியனாக இருந்ததுடன் அவற்றுள் 26 சதவீதம் அல்லது ரூபா 180,544 மில்லியன் மருத்துவ வழங்கல்களுக்கானதாகும். அந்த 06 வருட காலப்பகுதியினுள் மருத்துவ வழங்கல்களுக்காக செலவிடப்பட்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 165,162 மில்லியன் ஆகும். அதற்கு மேலதிகமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மருத்துவ வழங்கல்களுக்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு ரூபா 7,266 மில்லியனுக்கான பொறுப்புகளுக்கான கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த 06 வருட காலப்பகுதியினுள் அரசின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 11,404,759 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 1.4 சதவீதம் மருத்துவ வழங்கல்களுக்காகும்.

## கொழும்பு மாநகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மாநகர சபைக்கு சொந்தமான பிரதான பணியாக மக்களின் சுகாதாரத்தினை பேணிச்செல்லல், பொது மக்களின் வசதிகள், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் மாநகரத்தின் சுகாதாரமான வாழ்க்கை முறைமையை பாதுகாத்தலும் என்பதால், மாநகர சபை கழிவு முகாமைத்துவம் தொடர்பில் முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும்.

கொழும்பு மாநகர சபையினால் 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரை சபையின் அதிகார எல்லையின் கழிவுகள் புளுமென்டல் பிரதேசத்தில் அகற்றப்பட்டதுடன், “ புளுமென்டல் குப்பை மேடு” எனும் கழிவு மேடொன்று உருவாகியது. குப்பை கொட்டப்படுதல் தொடர்பான மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக உருவானமையால் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் புளுமென்டல் குப்பை மேட்டிற்கு குப்பைகளை கொட்டுதல் தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் 2009 ஏப்ரல் மாதம் முதல் மீதொட்டமுல்ல பொத்துவில் கும்புர பிரதேசத்தில் 02 ஏக்கர் பரப்பளவான நிலப்பரப்பில் 02 வருட காலப்பகுதிக்கு கழிவுகளை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சபை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை விஞ்சி 8 வரு காலம் வரை கழிவுகளை அகற்றியமையால் 23 ஏக்கர் பரப்பளவான பிரதேசம் வரையிலும் குப்பை மேடு விரிவடைந்து 2017 ஏப்ரல் 14 ஆந் திகதி குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததுடன், அந்த அனர்த்தத்தில் 32 மரணங்களுடன் பெருமளவிலான சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்தன. மீதெட்டுமுல்ல குப்பை மேடு 2018 சனவரி மாதத்தில் 2 சந்தர்ப்பங்களில் தீப்பிடித்திருந்ததுடன் அவ்வாறான இடர்களின் மூலம் சூழலுக்கு மற்றும் சாதாரண மக்களின் வாழ்க்கைக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

மாநகர சபையொன்றின் கழிவுகள் அந்த சபையின் ஆதனமொன்றாக கருத்திற்கொள்ள வேண்டிய போதிலும் கொழும்பு மாநகர சபையின் அதிகார எல்லைக்கு புறம்பான பிரதேசம் ஒன்றுக்கு அகற்றுவதற்காகவும், குப்பை மேட்டின் குப்பைகளை அழுத்துவதற்காகவும் அதிகளவான செலவினம் மேற்கொண்டு தனியார் கம்பனியொன்றின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் கழிவுகளை அப்புறப்படுத்தும் போது

சபையினால் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கள், கழிவு முகாமைத்துவம் தொடர்பில் அரசினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் நிலவும் கழிவு கொள்கை தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. சபையினால் தொடர்ச்சியாக கழிவுகளை அகற்றுவதற்காக பொருத்தமான பிரதேசம் ஒன்றின் தேடிக்கண்டறிவதற்கு மேலதிகமாக கழிவு பிரச்சினையை தீர்ப்பதற்காக இது வரையிலும் நிரந்தரமான தீர்வொன்று வழங்கப்படவில்லை. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆர்வலளர்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படுகின்ற கழிவு மீள்சுழற்சி நடைமுறைகள் மற்றும் கழிவினை சொத்தொன்றாக மாற்றியமைக்காமையால் சபையின் வருமானத்தில் கருத்தில் கொள்ளக்கூடிய ஒரு பகுதி குப்பைகளை அகற்றுவதற்காக வருடாந்தம் செலவிடப்பட்டிருந்தது. மேலும் சபையின் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு தேவையான வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 2010 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பாதீட்டில் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சபைக்கு தேவையான வாகனங்கள் அவ்வாறு கொள்வனவு செய்யப்படாது ஒரே நிறுவனத்திடம் வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றல்

இலங்கை வனவிலங்குகள் சஞ்சரிக்கும் நாடொன்றாவதுடன், இங்கு காணப்படும் வனவிலங்குகளின் முக்கியத்துவம் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பாரியளவிலான அடிப்படையொன்றாக அமைந்துள்ளது. வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் அதன் நிலவுகை தொடர்பான முழுப்பொறுப்பும் சட்டரீதியாக அரசாங்கத்திடம் உள்ளது. அந்த சட்டரீதியான உரித்தினை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 1937 இன் 2 ஆம் இலக்க, 1942 இன் 31 ஆம் இலக்க, 1944 இன் 12 ஆம் இலக்க, 1945 இன் 12 ஆம் இலக்க (469 ஆம் அதிகாரம்) வனசீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டம் மற்றும் 1949 இன் 38 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1964 இன் 44 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1970 இன் 01 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1993 இன் 49 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 2009 இன் 22 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டங்களின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கான பொறுப்பினை அரசிற்காக நடைமுறைப்படுத்துவது வனசீவராசிகள் திணைக்களத்தினால் ஆகும். வனவிலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கு புறம்பான பிரதேசங்களில் வனசீவராசி வளங்களை பாதுகாப்பதற்காகவும் சட்டரீதியான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த சட்டரீதியான அதிகாரமும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்காக வனசீவராசிகள் திணைக்களத்திற்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் வளங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தீர்மானம் எடுப்பதற்கான முழுப்பொறுப்பும் வனசீவராசிகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சூழலை பாதுகாக்கும் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன. உதாரணமொன்றாக வன பாதுகாப்பு திணைக்களம், மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு, பூகோள விஞ்ஞானம் மற்றும் சுரங்க அகழ்விற்கான பணியகம், சமுத்திர சுற்றாடல் அதிகாரசபை, கரையோர பாதுகாப்பு, கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், மீன்பிடி மற்றும் நீரியல்வள வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தை குறிப்பிட முடியும். எவ்வாறாயினும், வனசீவராசிகளை பாதுகாப்பதற்காக அடிப்படையான பொறுப்பினை கொண்டுள்ள நிறுவனமானது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகும். கடந்த சில வருடங்களாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பிலும், விலங்குகள் பாதுகாப்பு தொடர்பிலுமான பணிப்பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பாரியளவான எழுச்சியொன்று சமூகத்தில் ஏற்பட்டுள்ளவாறு உள்ளது. அதற்கான பிரதான காரணங்களுக்கான வனவிலங்குகள் மற்றும் மனிதர்களுக்கிடையேயான சிக்கல்கள் உயர்வடைதல், பெறுமதியான வளமொன்றாக

கருதப்படும் யானைகளை கொல்லுதல் மற்றும் பெருந்தொகையான யானைகளின் மரணங்கள் ஏற்படுவதை குறிப்பிட முடியும்.

மேலும், வன விலங்குகளின் சில விலங்கினங்கள் அழிவடைந்து செல்வதுடன், இன்றும் சில விலங்கினங்களின் பெருக்கமானது எல்லையினை விஞ்சி உயர்வடைந்தவாறு காணப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் (உதாரணம் : முறையே தந்தமுடைய யானைகள் மற்றும் மயில்கள்) அதற்காக தெளிவான வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை

பல தசாப்தங்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் உமா ஓயா ஆற்றுப் படுகையை அண்டியதாக பல்வேறு கற்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உமா ஓயா நீரேந்து பிரதேசத்திற்கான உள்ளக படுகையின் அபிவிருத்தி மற்றும் படுகையினுள் அபிவிருத்தி ஆகிய இரண்டு தெரிவுகளில் மிகவும் கவர்ச்சியான மாற்று வழியினை தீர்மானித்தல் தொடர்பில் பிற்காலத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இதற்கான சாத்தியவளக் கற்கையினை இரண்டு கட்டங்களுக்கு பிரித்து, முதலாவது கட்டமாக உள்ளக ஆற்றுப்படுகையினை மற்றும் ஆற்றுப் படுகையினுள் சாத்தியவள கற்கையினை மேற்கொண்டு இவற்றுள் மிகவும் பொருத்தமான மாற்று வழியினை பரிந்துரை செய்வதற்கும், இரண்டாவது கட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட மாற்று வழிதொடர்பில் விரிவான சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொண்டு, செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமையை உருவாக்கிக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சாத்தியவளக் கற்கையின் முதலாவது கட்டம் 2002 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட எஸ்.என்.சீ. லெவலின் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டதுடன், உள்ளக ஆற்றுப் படுகை முன்மொழிவினை பரிந்துரை செய்து தமது அறிக்கையினை முன்வைத்திருந்தது.

பின்னர் 2007 ஆம் ஆண்டின் போது ஈரான் அரசு மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 20 கிலோ மீட்டர்கள் நீளமான நிலத்தடி சுரங்கத்தின் மூலம் உமா ஓயாவின் நீரினை கிரிந்தி ஓயாவிற்கு திசை திருப்புதல் மூலம் தென்மேற்கு உலர் வலயத்தின் சுமார் 5,000 ஹெக்டேயர்கள் அளவான நிலப்பிரதேசத்திற்கு நீர்ப்பாசனத்தை வழங்குதல் மற்றும் நீர் மின் நிலையமொன்றினை உருவாக்குவதன் மூலம் 100 மெகா வற் இயலளவுடனான மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்காக ஈரான் அரசின் உதவியுடன், ஒப்பந்ததாரராக ஈரானின் பராப் கம்பனியை பெயரிட்டு செயற்திட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அதற்கமைய காணிகளை சுவீகரிப்பதிலான தாமதங்கள், சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதிலான தாமதங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் இந்த உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிகள் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ஈரான் அரசிற்கு தடை விதிக்கப்பட்டமையால் இந்த செயற்திட்டத்திற்கான நிதிகளை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்ததுடன், பின்னர் இலங்கை அரசினாலேயே இது வரையிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே 2014 திசெம்பர் மாதம் ஏற்பட்ட முதலாவது நீர்க் கசிவு மற்றும் 2016 திசெம்பர் மாதம் ஏற்பட்ட பாரிய நீர்க்கசிவு காரணமாக பாரியளவிலான சூழல் மற்றும் சமூக சிக்கல்கள் பலவற்றிற்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

## பொதுச் சேவையை டிஜிற்றல் மயப்படுத்தல் தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (தனியார்) வகிபாகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தந்திரோபாயங்களை திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்காக நிறுவகரீதியான கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கான தேவைப்பாடு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதனூடாக சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றும் நோக்கத்தின் கீழ் 2002 நவம்பர் 20 ஆந் திகதிய ஐசீரீ அபிவிருத்தி வீதி வரைபடம் (Roadmap) மற்றும் இலத்திரனியல்-இலங்கை எண்ணக்கருவின் வெளியீட்டுடன் தோன்றியிருந்தது. அதற்கிணங்க, 2003 ஏப்ரல் 09 ஆம் திகதிய 03/060/134/022 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் அரசாங்கத்தால் முழுமையாக உரித்தாக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக 2003 மே 12 இல் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ஐசீரீஏ) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தும் நோக்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் செயன்முறையை வழிநடத்தும் பிரதான பொறுப்பு ஐசீரீஏ இற்கு வழங்கப்பட்டுள்ளது. ஐசீரீ தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து அளவீடுகளையும் எடுப்பதற்கு 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பால் தொழில்நுட்ப அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஐசீரீஏ இற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2004 – 2014 காலப்பகுதியின் போது, உலக வங்கி மற்றும் ஏனைய வெளிநாட்டு உதவி மற்றும் அரசாங்க நிதிகளுடன் அவற்றின் கீழ் இனங்காணப்பட்ட 06 பிரதான பகுதிகள் தொடர்பில் இலத்திரனியல்-இலங்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை ஐசீரீஏ அமுல்ப்படுத்தியிருந்த அதேநேரம் செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து திரட்டிய நிதிகள் மீது முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

ஐசீரீ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கிய கூறொன்றாக அரசாங்க துறையை மீளக்கட்டமைத்தல் இனங்காணப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஐசீரீஏ இன் விடாமுயற்சியை எச்சரிக்கும் போது இலத்திரனியல்-அரசாங்க சுட்டெண்ணிற்கிணங்க (e-Government Index) 192 நாடுகளிற்கிடையில் 2012 ஆம் ஆண்டில் 115 ஆம் நிலையிலிருந்த இலங்கை 41 நிலைகளால் உயர்வடைந்து 74 ஆவது நிலையில் பாதுகாப்பாகவிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் 79 ஆவது நிலைக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 – 2016 இன் போது அவற்றின் மீது ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 5,799.9 மில்லியன் தொகையாகும். எவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம், பொதுச் சேவையை டிஜிற்றல் மயப்படுத்தல் தொடர்பில் ஐசீரீஏ இன் பொறுப்புக்கள் முறையாக கையாளப்பட்டிருக்கவில்லை என முடிவுசெய்யப்பட்டிருந்தது.

## பாற் பசுக்களை இறக்குமதி செய்தல் செயற்திட்டம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கை

2006 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட அரச கொள்கை மற்றும் மஹிந்த சிந்தனையின் பிரகாரம் பசும் பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதற்கு அதற்கு இணங்கும் வகையில் உரிய அரச வரி மற்றும் பால் உற்பத்தி இறக்குமதிகள் கொள்கை தயாரிப்பு இணங்கப்பட்டிருந்தது.

செழிப்பான பசுக்களுக்கு காணப்படும் பற்றாக்குறையை நீக்கி பால் மா இறக்குமதிக்கான கிரயத்தை குறைப்பதற்காக செழிப்பான 15,000 பசுக்களை கால்நடை வளங்கல் சபையின் பண்ணைகளுக்கு இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டது.

முதலாம் கட்டமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது 2.000 உம் இரண்டாம் கட்டமாக 2015 ஆம் ஆண்டின் போது 2,495 உமாக இறக்குமதி செய்யப்பட்ட 4,495 பசுக்களுக்கு இடையே 2015 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 2,500 பசுக்கள், அவ்விலங்குகளுக்கு ஒத்துக்கொள்ளாத சூழலில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை ரிதியகம பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக உப கடனாக பெற்றுக்கொண்ட கடன்தொகை எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலுத்துவதற்கு கால்நடை வளங்கள் சபை தவறியிருந்தது.

அவ்வாறு இருக்கையில் 2014 யூன் 20 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மூன்றாம் கட்டத்தின் கீழ் 20,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்காக அங்கீகாரத்தை வழங்கும் போது இறக்குமதி விலங்குகளை நேரடியாக பண்ணைகளுக்கு வழங்காமல் அரச பண்ணைகளின் பொறுப்பில் வைக்கப்படும் பின்னர் இரண்டாம் பரம்பரைக்குரிய பசுக்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்காமல் 5,000 பசுக்களை நேரடியாக பாற் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உரிய பெறுகை செயற்பாடு அரசிற்கு சாதகமான வகையில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பசுக்கள் இறக்குமதி இரண்டாம் மூன்றாம் கட்டங்களின் போது பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்குரிய சாத்திய வள அறிக்கை போதியளவு தொழில்சார் மட்டத்துடன் கூடியதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்திற்காக ரூபா 7.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையக்கூடிய வகையில் செயற்திட்டத்தை வழிநடத்துவதற்கு குறித்த உத்தியோகத்தர் தவறியிருந்தார்.

## இலங்கையின் நெல் உர மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

இலங்கையின் அரிசிக்காக காணப்படும் கேள்வி மற்றும் இலங்கையின் விவசாயக் கைத்தொழில் தொடர்பான வரலாறு, காலநிலை மற்றும் பூகோள ரீதியிலான முக்கியத்துவத்தின் அடிப்படையில் நெல் உற்பத்திக்காக கூடிய விருப்பம் காணப்பட்டது. இலங்கை மொத்த ஊழிய பரம்பலில் விவசாயத்துறைக்குரிய பங்களிப்பு 27% ஆக இருந்ததுடன் தேசிய வருமானத்திற்கான விவசாயக் கைத்தொழிலின் பங்களிப்பு 7.5% சதவீதமாகும். இது தவிர இலங்கை விவசாய நிலப்பரப்பில் 13.5% நெற் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் விவசாயம் தொடர்பாக அண்மைக் காலங்களில் தோன்றியுள்ள சிக்கல்கள் காரணமாக தேசிய உற்பத்திக்கு இத்துறையின் பங்களிப்பு படிப்படியாக குறைவடைந்து வரும் நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. அதற்கு பிரதான காரணங்களாக விவசாயத் துறைக்கான உள்ளீட்டு கிரயத்திற்கு (earnings) ஒப்பாக வெளியீடு குறைந்த மட்டமொன்றில் இருந்தமை மற்றும் அதன் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கை நிலை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் இருப்பதை குறிப்பிடலாம். விவசாயிகள் படிப்படியாக நெற்செய்கையிலிருந்து விலகிச் செல்வதற்கு இது காரணமொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நெல் உற்பத்திக்கு தேவையான நீர்ப்பாசன முறைமை உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உட்பட துறைக்குரிய தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை தயாரிப்பு மற்றும் அதற்குரிய பல்வேறு சேவைகளை வழங்குவது அரசின் கடமையாக இருந்தது.

2006 ஆம் ஆண்டின் போது விவசாயத்தின் பிரதான உள்ளீடாக எடுக்கப்படும் உரத்திற்கு மானிய முறையொன்றை ஏற்படுத்துவதன்

மூலம் பயிர்ச் செய்கை கிரயத்தை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அந்த நோக்கத்தை முன்னுரிமையாக கொண்டு விவசாயிற்கு ஒரு அந்தர் உரம் ரூபா 350 வீதம் வழங்குவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்ததுடன், இந்த மானிய வேலைத்திட்டம் 2015 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு வந்த போதும் 2016 ஆம் ஆண்டின் போது மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்குப் பதிலாக நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் இந்த மானிய முறைமையை மிகவும் செயற்திறனாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எனினும் 2006 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட இந்த மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்ப்பதற்கு முடியுமாக இருந்த நெல் அறுவடை அதிகரித்தல் நெல் பயிரிடப்படும் நில அளவினை அதிகரித்தல், அரிசி இறக்குமதியைக் குறைத்தல் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் உட்பட ஏனைய துறைகளில் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டு வரையில் உர மானியத்திற்காக அரசினால் செலவிடப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 24.254 மில்லியனாக இருந்ததுடன், மொத்த அரச செலவினத்தில் 1 சதவீதம் மாத்திரமாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்பு வழங்கப்படுவதுடன் இதில் மொத்த நிகழ்ச்சித்திட்டத்தினதும் வெற்றி தங்கியிருந்தது.

2016 ஆம் ஆண்டின் போது உர மானிய வேலைத்திட்டம் தொடர்பான அரசின் கொள்கை மாற்றப்பட்டதுடன் உரத்திற்குப் பதிலாக நிதியுதவி வழங்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ள விவசாயிகளுக்கு குறித்த மானிய நிதி உதவி வழங்கப்படாமை மற்றும் வழங்கப்படக் கூடிய உயர்ந்த மானியத் தொகையின் பெறுமதியை மிகைத்து நிதியுதவி கொடுக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. மேலும் வேறு ஆட்களின் கணக்குகளுக்கு பணத்தை செலவு வைத்திருந்தமை தொடர்பான தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பரீட்சிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த சிக்கனமற்ற கொடுப்பனவுகளின் பெறுமதி 2016 சிறிய மற்றும் பெரும் போகங்களுக்காகவும் 2017 சிறு போகத்திற்காகவும் மொத்தம் ரூபா 1,266,733,838 ஆக இருந்தது. மேலும் குறித்த போகத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட மானிய நிதியுதவி தொகை குறித்துரைக்கப்பட்ட திகதி கடந்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட 03 போகங்களில் அவ்வாறு தாமதமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 5,475,649,533 ஆக இருந்தது.

அவ்வாறு பணக் கொடுப்பனவு சரியான மற்றும் செயற்திறனான வகையில் மேற் கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கணனி முறைமையிலும் குறித்து பெறுபேறுகள் கிடைத்திருக்கவில்லை.

நிதியுதவி வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக தேசிய உரச் செயலகத்தின் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக உரத் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டு உர இறக்குமதி தொடர்பாக பெறுகை நடவடிக்கை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் கால நேரத்திற்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் அதன் அடிப்படை செயற்பாடாக இருந்ததுடன், பெறுகை திட்டமொன்றின் அடிப்படையில் குறித்த உரக் கொள்வனவு இடம்பெறாமையால் 2017 பெரும் போகத்தில் கடுமையான உர பற்றாக்குறையொன்றுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அது உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கு நேரடியாக தாக்கமளிக்கும் காரணமாக இருந்தது.

அதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாக உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கக் கூடிய இருந்த நோக்கங்களை நிறைவேற்றும் திருப்திகரமான மட்டமொன்று இல்லையென அவதானிக்கப்பட்டதுடன் நெற் பயிர்ச்செய்கைக்காக தாக்கமளிக்கும் ஏனைய வசதிகளின் அபிவிருத்தி மற்றும் உர மானிய கொள்கையை தொடரந்தும் செயற்படுத்துதல் போன்ற அதனுடன் இணைந்ததாக சேதனைப் பசளைத் திட்டத்தை விரிவுபடுத்துதல் இங்கு அடிப்படை தேவைப்பாடொன்றாக இனங்காணப்பட்டது.

## இலங்கையின் விளையாட்டுக்கள் மற்றும் அதன் நிர்வாகம் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை

ஒரு நாட்டின் பிரஜை உற்சாகமான, ஒழுக்கமான மற்றும் அபிமானத்துடன் உள்ள ஒருவராக மாற்றுவதற்காக விளையாட்டின் மூலம் கிடைக்கும் ஒத்துழைப்பு உண்ணதமாகும். அந்த எதிர்பார்ப்பில் ஒவ்வொரு நாடும் விளையாட்டின் வளர்ச்சிக்காக உயர்ந்த ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது.

இலங்கையும் அதனோடு இணைந்து செயற்படுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றது. அதன் பிரகாரம் விளையாட்டிற்காக தனியான அமைச்சொன்றையும் ஏற்படுத்தி விளையாட்டிற்குத் தேவையான சட்ட பின்னணியை உருவாக்குவதற்கு விளையாட்டு சட்டமொன்றை உருவாக்குதல், ஒவ்வொரு விளையாட்டிற்குரிய தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் அதற்கான நிர்வாக நடவடிக்கைகளுக்காக விளையாட்டு ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிர்வாகக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துதல், விளையாட்டு அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு அமைச்சுடன் இணைந்த பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நிதியம் போன்றவற்றை தாபித்தல், தேசிய விளையாட்டுக் கொள்கையை உருவாக்குதல் போன்ற நடைமுறைகளை இலங்கையால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் விஷேடமான அரசின் பிரமாணங்களை தயாரித்தல் மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை சட்டத்தை 06 மாதங்களுக்குள் திருத்தம் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இதுவரை குறித்த திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை விளையாட்டு அபிவருத்தியை நோக்கி மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் வெவ்வேறு செயற்பாடுகளை எடுத்திருந்த போதிலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அடைந்துள்ள வெற்றிகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக அதிகளவில் பேசப்பட்டு வந்துள்ளது. கடந்த பல தசாப்தங்களில் இலங்கை பெற்றுக்கொண்ட விளையாட்டு வெற்றிகள் தொடர்பாக கருதும் போது இது தெளிவாகின்றது. இலங்கை விளையாட்டுக்களில் அமுலிலுள்ள சட்டங்களின் பின்னணியும் அச்சட்டப் பின்னணியில் செயற்படுத்தப்பட வேண்டிய சட்ட ரீதியான நிறுவன ரீதியான கடமைப்பாடுகள் தொடர்பான புலனாய்வு ரீதியாக பரிட்சித்து அவதானிப்புக்களை சமர்ப்பித்தல் இந்த அறிக்கையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி நிர்வாக கணனி முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விசேட கணக்காய்வு அறிக்கை

இலங்கை அரச வருமானம் வரி மற்றும் வரியல்லாத வருமானத்தையும் கொண்டுள்ளதுடன் வரி வருமானத்தை நிர்வகிக்கும் பொறுப்பை கொண்ட தரப்பொன்றாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை கூறலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வரி வருமானத்தில் 65 சதவீமான அளவு நேரில் வரி வருமானமாக இருப்பதுடன் அந்நேரில் வரியில் VAT மற்றும் NBT வரி வருமானத்திற்காக கூடியளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆதலால் VAT மற்றும் NBT வரியினைச் செலுத்துவோர் வரிக் கொடுப்பனவினை தவிர்ப்புச் செய்தால் அதன் மூலம் அரசிற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் குறைவடைவதை தவிர்ப்பதற்கு முடியாது. ஆதலால் கூடிய வரி வருமானத்தை அரசிற்கு ஈட்டிக் கொள்வது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் அதனை நிறைவேற்றும் நோக்கில் அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் வேலைத்திட்டமொன்று

2002 ஆம் ஆண்டிலிருந்து 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த சுய அறிக்கை வழங்கல் மூலம் தவிர்ப்புச் செய்யப்பட்டுள்ள வரியொன்றாகையால் அது தொடர்பாக தகவல்களை அறிக்கையிடுதல், நிலுவை வரி அடிப்படையில் தண்டப் பணத்தை விதித்தல், கணனி முறைமையில் நிலுவை வரி காண்பித்தல் போன்ற முக்கியமான பல செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதுடன், 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இடைநிறுத்தி அச்செயற்பாட்டை உத்தியோகத்தர்கள் (Manually) ஊடாக மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி சுய முறைமை இடைநிறுத்தப்பட்ட காரணத்தினால் 2015 திசெம்பர் 31 இல உள்ளவாறு VAT மற்றும் NBT வரிகளிலிருந்து அறவிடுவதற்கும் தீர்வு செய்வதற்கும் ரூபா 15,283 பில்லியன் வரி மீதியொன்றும் அவ் வரி மீதி அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் கணக்காய்வின் மதிப்பீட்டின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 9,237 மில்லியன் என இந்த அறிக்கைகயில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இம்முறைமையினுள் சிறிய பெறுமதியுடன் கூடிய நிலுவை வரி மீதிகளும் பாரிய எண்ணிக்கையாக காணப்பட்டதால் ரூபா 1,000 இனை கூடிய பெறுமதியான நிலுவை வரி மீதிகள் மாத்திரம் இந்த அறிக்கை தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டது.

## அரசாங்க சேவையின் அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகை தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை

அரசாங்க துறையின் நிறுவனங்கள் பொது மக்களுக்கு தரமான சேவையை வழங்கும் முகமாகவும், அரசாங்க நிறுவனங்களை பலப்படுத்துதலையும் நோக்காகக்கொண்டு உருவாக்கப்பட்ட அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள சனத்தொகையில் 14.5 சதவீத (அரசாங்க மற்றும் அரச சார்புத் துறையின்) அலுவலர்கள் சேவையாற்றுகின்றனர். அண்மைக் காலத்தில் அரசாங்க சேவையின் எண்ணிக்கை ரீதியிலான வளர்ச்சிக்கு பட்டதாரி அபிவிருத்தி அலுவலர்களாக ஆட்சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்க காரணமொன்றாக அமைந்தது. அதற்கிணங்க, மொத்த அரசாங்க அலுவலர்களில் 41,668 பேர் அபிவிருத்தி அலுவலர்கள் என தற்போதைய ஆய்வின்படி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்க சேவையில் இணைந்த பட்டதாரிகள் நிறைவேற்றுகின்ற சேவைகளின் அளவினை மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல், வழங்கப்படும் சம்பளத்திற்கு ஏற்றவகையில் கடமை தன்மையினை தயாரித்தல், கடமையில் நிலைநிறுத்துதல், வேலைச் சூழலில் உருவாகியுள்ள அளவு மற்றும் இவ்வலுவலர்களின் சேவை எவ்வளவு தூரத்திற்கு பொது மக்களின் தேவைப்பாடுகளுடன் தொடர்புபட்டது போன்றன பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளுதல்பால் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிக்கு இணங்க, ஆட்சேர்க்கப்பட்டிருந்த அபிவிருத்தி அலுவலர்களில் 86 சதவீதத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் கலைமானி பட்டதாரிகளாக இருந்ததுடன், அவ்வலுவலர்களில் 75 சதவீதத்திற்கு கிட்டிய எண்ணிக்கையினர் பெண் அலுவலர்களாவர். அபிவிருத்தி அலுவலர் சேவை வெளிக்கள பதவியாக கருதப்பட்டபோதிலும் கிட்டத்தட்ட 22 சதவீதத்தினர் அலுவலக அலுவலர்களாக காணப்பட்டதுடன், வெளிக்கள அலுவலர் எண்ணிக்கை 78 சதவீதமாக இருந்தது. மேலும், குறித்த அலுவலர்கள் வருடத்தினுள் மேற்பார்வைக்கு உட்படுத்திய செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 02க்கும் 09க்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

அபிவிருத்தி அலுவலர்கள் பொருட்டு இடமாற்றல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருடாந்த இடமாற்றல் முறை செயற்படுத்தப்பட்டு இருக்காமையினால் ஒரே சேவை நிலையத்தில் நீண்ட காலமாக சேவையில் ஈடுபட்டிருந்தமையும் செயலாற்றுகை மீது தாக்கம் செலுத்துகின்றமையினால் அபிவிருத்தி அலுவலர் சேவைமூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என தெளிவாகியது.

## தங்கம் கலந்த மண் ஏற்றுமதி செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

தங்க ஆபரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும் தங்கம் கலந்த கழிவு மண் (Wastage of Goldsmith Burnet Residue) என குறிப்பிடப்படும் அம்மண்ணில் உள்ள தங்கத்தை அப்புறப்படுத்தவதற்காக 03 தனியார் கம்பனிகளால் பல வெளிநாடுகளுக்கு இப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததுடன் அப்போது ஏற்றுமதி செய்வதற்கு தயார்படுத்தப்பட்டும் வந்தன. இந்த பொருட்கள் ஏற்றப்பட்ட 51 கொள்கலன்கள் இதுவரை இலங்கை சுங்கத்தின் ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்த மேலும் 23 கொள்கலன்கள் சுங்கத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டன. அதில் 04 கொள்கலன்களுக்கான சுங்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டப்பணமும் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 19 கொள்கலன்களுக்காக சுங்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் மண் கலந்த கழிவுகளில் கூடிய பெறுமதியான தங்கப் பெறுமதியொன்று உள்ளடங்கி இருப்பது சந்தேகத்திற்குரியதாக இருந்ததுடன் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அங்கீகாரமொன்று இல்லாமலும் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமலும் செய்யப்படுகின்ற ஏற்றுமதிச் செயற்பாடு இலங்கை சுங்கத்தின் ஊடாக தடையேதும் இல்லாமல் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததன் மூலம் சர்ச்சைக்குரிய நிலைமையொன்று உருவாகியிருந்தது. இச்செயற்பாட்டிற்கு நேரடியாக இலங்கை சுங்கம் மற்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் ஆகிய அரச நிறுவனங்கள் தமது கடமைகளை எந்தளவு தூரம் நிறைவேற்றியுள்ளது என்பது தொடர்பாக பரிசோதனையொன்று கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை சுங்கத்தில் இடம்பெற்றிருந்த முறைகேடுகளும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் ஏற்பாடுகள் முறையாக செயற்படுத்தப்படாமை காரணமாக அரசிற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் இழக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

இச்செயற்பாட்டின் போது அந்நிறுவனங்களில் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடு உட்பட நிறுவனங்களுக்கு இடையே உரிய கூட்டிணைப்பொன்று இல்லாதிருந்தமை இந்த முறைகேட்டிற்கு காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கான சமுர்த்தி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் பங்களிப்பு

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து பல தசாப்பதங்களுக்கு மேலாக, மக்களுக்கு உதவி வழங்கும் நோக்குடன் பல்வேறு வடிவங்களிலான நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த அதேவேளை அவற்றிகக் புதியதொரு வடிவினை வழங்கி, 1995 ஆம் ஆண்டில் புதிய வடிவில் சமுர்த்தி உதவி நிகழ்ச்சித்திட்டம் ஸ்தாபிக்கப்பட்டது.

"வறுமையொழிப்பு மத்தியில் வாழ்வாதரம் மற்றும் பொருளாதார விவகாரங்களினூடாக சமுக வலுவூட்டல்" என்பதை யதார்த்தமொன்றாகச் செய்யும் எதிர்பார்ப்புடன், 2014 ஆம ஆண்டிற்கு முன்னர் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கையாளப்பட்டதுடன் வறுமையொழிப்பு மற்றும் சமுக நீதியினை உறுதிப்படுத்தும் சமுகமொன்றினை உருவாக்கும் நோக்கத்திற்கு, இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம், இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மலையக கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஆகியன ஒன்றிணைக்கப்பட்ட அதேவேளை 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன்

அதனைத்தொடர்ந்து, 2017 இன் 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினைத் தொடர்ந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாறற்ப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் தற்போது அதன் கீழ்க் காணப்படுகின்றது.

25 மாவட்ட செயலக அலுவலக பிரதேசத்திலுளள் , 332 பிரதேச செயலக பிரிவுகளின் 14,022 கிராம சேவையாளர் பிரிவுகளினை உள்ளடக்கி ஸ்தாபிக்கப்பட்டுளள் 1074 சமுக வங்கிகள் மற்றும் 332 சமுக வங்கிச் சமுதாயங்களினூடாக அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளினை மேம்படுத்தல் மற்றும் வறுமையை ஒழிக்கும் அதேவேளை சமுக நீதியினை உறுதிப்படுத்தும் நோக்குடன், சமுகத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயனாளிகளின் எண்ணிக்கை 1,388,242 என குறிப்பிடப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்ட் த்தினை அமுல்ப்படுத்தும் பொருட்டு, வலய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலுளள் சமுகங்களுக்கான ஒருங்கிணைப்பின் முறைப்படுத்தல் மற்றும் தனிநபர், குடும்பம், குழுக்கள் மறற்றும் சமுகங்களினை மேவுகை செய்வதற்காக சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான நிறுவனங்கள், சமுர்த்தி பிராந்திய நிறுவனங்கள், சமுர்த்தி மாவட்ட குழுக்கள் மற்றும் சமுர்த்தி தேசிய கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் சமுர்த்தி பயனாளிகள் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் விரிவாக்கப்பட்டிருந்தது.

குறைந்த வருமானத்தினையுடைய குடும்பங்களின் வறுமையினை ஒழித்தலுடன் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி செயற்பாட்டு வழிமுறையில் சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், அரசாங்கத்தினால் எவ்வித செலவினத்தினையும் தாங்கிக்கொள்ளாத வகையொன்றில் வருமான உருவாக்கத்திற்கு அவர்களின் நம்பகத்தன்மையிலான அதிகரித்தல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாட்டிற்கு அவர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்தலினை நோக்கியதாக அவர்களை உருவாக்கப்படுதல் என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கபட்ட ஏனைய நோக்கங்களாகக் காணப்பட்டன.

2015 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலை, சொத்துக்கள் மற்றும் வீடுகளின் தன்மை போன்ற அடிப்படைகளின் பிரகாரம் பயனாளிகளின் மீள் - இனங்காணலுக்கு புள்ளிவிபரமொன்று நடாத்தப்பட்டது. அவற்றிற்கு ரூபா 80 மில்லியன் தொகை செலவினம் ஏற்பட்டது. 519,753 மீள் - இனங்காணப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஏற்கனவே நலன்களைப் பெற்ற 1,403,021 குடும்பங்கள் உள்ளடங்களாக 1,922,774 குடும்பங்களின் பாதுகாக்கப்பட்ட தகவல் முன்னுரிமை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது அமுல்படுத்த முடியாதிருந்தது.

## விவசாய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் ஆற்றப்பட்ட பங்களிப்பினை மதிப்பீடுசெய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

இலங்கையிலுள்ள அனைத்து விவசாய நிலங்களிலிருந்து அதிஉத்தம விளைச்சலினைப் பிறப்பிப்பதற்கு விவசாய சமுகத்தினை ஊக்குவிக்க அதன் இலட்சிய நோக்குடன் செயற்படுகின்ற கமநல அபிவிருத்தி திணைக்களம், பிராந்திய மட்டத்தில் விவசாய துறை தொடர்பில் செயற்படுகின்ற முன்னோடியான நிறுவகமொன்றாக இனங்காணப்படுகின்றது. மேற்குறித்த இலட்சிய நோக்கினை மேலும் வினைத்திறனாக அடைந்துகொள்ளும் நோக்கொன்றுடன், 1999 ஆம் ஆண்டில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் (ஏ.ஆர்.பீ.ஏ) பதவி உருவாக்கப்பட்டதுடன் தற்போது 9,600 இற்கும் மேலதிகமான உத்தியோகத்தர் பலமொன்றுடன் தீவு முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 74(1) ஆம் பிரிவின் கீழ், விவசாய

அபிவிருத்தி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிகளினுள் சட்டத்தின் ஏற்பாடுகளினை அமுல்ப்படுத்துவதற்கும் கமத்தொழிலுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய அரசாங்க நிறுவகங்களுக்கு உதவுவதற்கும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியார்களினை நியமித்துள்ளார்.

தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விவசாய துறையின் பங்களிப்பு படிப்படியாக குறைந்து செல்லும் போக்கொன்று காணப்படுகின்றதுடன், கேகாலை மாவட்டத்தின் நெற் பயிர்செய்கை தொடர்பான தரவின் பிரகாரம் அறுவடை மற்றும் நெற் பயிர்ச்செய்கை நிலங்களின் விரிவாக்கலில் குறைவடைந்தும் தரிசு நிலங்களின் விரிவாக்கலில் அதிகரிப்பும் வெளிப்படுத்தப்படுகின்றது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் இலட்சிய நோக்கினை அடைந்துகொள்வதற்கு நியமிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினை முறையாக கையாளத் தவறியமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் துறையில் அவர்களின் கடமைகளினை முறையாக பூர்த்திசெய்வதற்கு அத்தகைய உத்தியோகத்தர்கள் தவறியமை மேற்குறித்த நிலமைகளுக்குக் காரணமாய் அமைந்திருந்தது என கேகாலை மாவட்டத்தில் இது தொடர்பில் நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினை முறையாக கையாள்வதற்கும் அவர்களின் செயற்பாடுகளினை கண்காணிப்பதற்கும் திடமானதொரு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளினை ஸ்தாபிப்பதற்கான அளவிடைகளினை பின்பற்றுதல், துறையில் கடமைகளினை மேற்கொள்கையில் அவர்களினால் முகங்கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகளினை முறையாக முகாமை செய்தல் மற்றும் தீர்வுகளினை கண்டுபிடித்தல், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு தொடர்ந்தும் காணப்படுகின்ற விடயங்களுக்கு கொள்கை ரீதியான தீர்மானங்களினை வழங்குதல், விவசாயத்துறையின் விரிவாக்கத்திற்கு அத்தியாவசியமாக காணப்படுகின்ற அந்த உத்தியோகத்தர்களின் ஆகக்கூடிய சாத்தியமான சேவையை உறுதிப்படுத்தல் ஆகிய வழிகள் மூலம் இது இனங்காணப்பட்டது.

## வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் செயலாற்றல மீதான விசேட கணக்காய்வு அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 வது திருத்தச்சட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் மாகாண சபைகளின் வருகையுடன், மாகாண ஆயுர்வேத ஆணையாளரொருவரின் மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தல்களின் கீழ் 1987 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தில் ஆயுர்வேத திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. குறித்த திணைக்களத்தின் அதிகார எல்லையின் கீழ் அனுராதபுரத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலை, 03 கிராமிய வைத்தியசாலைகள், மற்றும் 10 மத்திய மருந்தகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டு காலத்தில், ஆயுர்வேத திணைக்களத்தின் அதிகார எல்லையின் கீழ் வடமத்திய மாகாணத்தில் 9 ஆயுர்வேத வைத்தியசாலைகள், 32 மத்திய மருந்தகங்கள், மருந்தக உற்பத்தி அலகொன்று, மற்றும் பராம்பரிய குடிசை வைத்தியசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

வடமத்திய மாகாண சபைக்கு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நிதிசார் ஏற்பாட்டிலிருந்து வரையறுக்கப்பட்ட ஏற்பாடொன்று மாத்திரம் மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் அண்ணளவாக 3 சதவீதத்தினை அது பிரதிநித்துவப்படுத்துகின்றது. தற்போது உள்நாட்டு ஆயுர்வேத மருத்துவத்தின் மீது உள்நாட்டவர் மற்றும் வெளிநாட்டவர் அதிக ஆர்வம் காட்டியிருந்த போதிலும் ஏற்பாடுகளின் பற்றாக்குறை, மற்றும் மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை காரணமாக உற்பத்தித்திறன் வாய்ந்த சேவையொன்றினை வழங்குவதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முறையாக திட்டங்களினை தயாரிப்பதற்கு தவறியமை,

பௌதீக மற்றும் மனித வளங்களினை முறையாக முகாமைசெய்வதற்கு தவறியமை, மற்றும் தேவைகளினை இனங்காணாமை போன்ற காரணிகளும் அவற்றிற்கு பங்களித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில், உள்நாட்டு மருத்துவத்தின் சிகிச்சையினை நாடிச்செல்லும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் திருப்திபடுத்தப்பட முடியாதிருந்தன. பெறுகை நடைமுறையினை முறையாக பின்பற்றுவதிலுள்ள தோல்வி காரணமாக பொது நிதிகள் சிக்கனமற்ற முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. ஆயுர்வேத வைத்தியசாலைகளினால் அகற்றப்பட்டிருந்த திண்மக் கழிவின் முகாமைத்துவத்திற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்கத் தவறிய காரணத்தினால் திணைக்களம் பல சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது.

அதற்கமைய, மாகாண ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் ஆற்றப்பட்டிருக்காததுடன் தோற்றமளிக்கப்பட்டதுடன், அந்த திணைக்களத்தினூடாக பொதுமக்களுக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த சேவையொன்றினை வழங்குவதற்கு வடமத்திய மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்காதமை தெளிவாகின்றது.

## கேகாலை மாவட்டத்தில் தரிசுநில வயற் காணிகளை நிரப்பும் செயற்பாடுகளால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

1990 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான புள்ளிவிபரத் தரவுகள் தொடர்பான பரீட்சிப்பின் போது கேகாலை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகின்ற காணியின் ஹெக்டேயர் அளவு மற்றும் நெல் உற்பத்தி என்பன படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கான பிரதான காரணமாக மாவட்டத்தில் காணப்படுகின்ற தரிசுநில வயல்கள் முறையற்ற வகையில் நிரப்பட்டடிருந்தமை இனங்காணப்பட்டது. இந்த தரிசு வயல் நிலம் மண் நிரப்புவதை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையும், மீண்டும் பயிர் செய்வதற்கு விவசாயிகள் முன்வருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படாமையின் காரணமாகவும் உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு கேகாலை மாவட்ட செயலகத்திலிருந்து வழங்கக்கூடியதாக இருந்த பங்களிப்பு படிப்படியாக குறைவடைந்து சென்ற நிலைமையும் அவதானிக்கப்பட்டது.

பரீட்சிப்பதற்கு உட்படுத்தப்பட்ட கேகாலை மாவட்டத்தில் அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெறப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் 372 சந்தர்ப்பங்களின் போது 63 ஏக்கர் 02 றூட் 12 பேர்ச் அளவிலான வயல் காணிகள் மண் நிரப்பப்பட்டிருந்தது.. இந்த அறிக்கை தயாரிக்கும் போது புத்தகங்கள் பதிவேடுகளைப் பரீட்சித்தல், பௌதீக பரிசேதனை மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது முறையான திட்ட முறைமைக்கு புறம்பாக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல், அனுமதி வழங்கப்பட்ட அளவினை விஞ்சி பயிர் செய்யப்பட்ட காணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணி நிரப்பப்பட்டமை, முறையற்ற அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மண் நிரப்புதல்கள் என்பவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை, கழிவுப்பொருட்கள் கொண்டு போடப்பட்டமையின் காரணமாக வயல்கள் அழிவடைந்திருந்தமை போன்ற அவதானிப்புக்களை கண்டறியக்கூடியதாக இருந்தது.

கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீள கவனத்தில் கொண்டு திருத்தங்களை மேற்கொள்ளல், பயிர்ச் செய்கைகளை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளுக்கு மன உறுதியை வழங்கல், கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டம் மற்றும் சுற்றறிக்கை மூலம் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை உத்தியோகத்தர்களின் ஊடாக செயற்படு நிலைக்குக் கொண்டுவரல் போன்ற செயல்வழிகளை எடுப்பதன் மூலம் முறையற்ற வகையில் தரசுநில வயற் காணிகளை நிரப்புவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

## தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்படுகின்ற 32 ஆவது கழம்பு எயாபோர்ட் சுபர் ட்ரோ, புதிய விமான நிலைய மற்றும் டொலர் போசூன் லொத்தர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை உலகலாவிய சுற்றுலாப் பிரயாணிகள் உள்ளங்கவரும் நிலைமாற்ற நிலையமொன்றாக மேம்படுத்துதல் மற்றும் விமான நிலையத்திலிருந்து உழைக்கின்ற வருமானத்தை அதிகரித்தல் போன்ற இலக்குகளை முன்னோக்காகக் கொண்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் "அந்நிய செலாவணி மோட்டார் வாகன லொத்தர்" என்ற பெயரில் லொத்தர் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக 1991 ஒக்தோபர் 02 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கையில் லொத்தர் சீட்டிழுப்பை நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமான தேசிய லொத்தர் சபையினால் இந்த லொத்தர் நடாத்துவதற்கும், வரையறுக்கப்பட்ட எயார்போர்ட் என்ட் ஏவியேசன் சேர்விசஸ் (இலங்கை) கம்பனி மூலம் இந்த லொத்தரை ஒழுங்கமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் 1992 திசெம்பர் 02 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் இந்த லொத்தரை நடாத்தும் ஏற்பாடுகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதில் இந்த லொத்தர் "கொழும்பு விமான நிலைய சுப்ரிரி சீட்டிழுப்பு" என பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், உயர் வருமானம் பெறும் நுகர்வோர் தரப்பினர், வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருமானம் தருகின்ற நுகர்வோர் தரப்பினர் என்போரை பிரதான இலக்காகக் கொண்டு தேசிய லொத்தர் சபை மேற்கூறிய லொத்தருக்கு மேலதிகமாக அந்நிய செலாவணியிலிருந்து கொடுக்கல் வாங்கல்களைச் செய்கின்ற டொலர் போர்ச்சூன் மற்றும் புதிய விமான நிலைய லொத்தர் என்ற பெயரில் மேலும் 02 லொத்தர்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் அந்த லொத்தர் சீட்டு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் விசேடமாக 32 ஆவது Colombo Airport Super Draw சீட்டிழுப்பை நடாத்தும் போது மற்றைய சீட்டிழுப்புச் சந்தர்ப்பங்களின் போதும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்ள முடியாத நிலைக்குள்ளாகியிருந்தது. மேலும், லொத்தர் சீட்டிழுப்புக்களுக்குரிய விதிகளைத் தயாரித்து வர்த்தமானியில் பிரசுரிக்காமை, திறைசேரி சுற்றறிக்கை மற்றும் சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் நலிவுகள் காணப்பட்டமை, திரண்ட நிதியத்திற்கும் உரிய நிறுவனங்களுக்கும், கிடைக்கின்ற பங்களிப்புக்கள் சரியான பிரகாரம் இடம் பெறாமை, லொத்தரை ஆரம்பித்தல், விலையினைத் தீர்மானித்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன சந்தை ஆராய்ச்சியின்றி இடம்பெற்றமை, மேற்பார்வையில் நலிவுகள் மற்றும் நிதி ஒழுங்குகள் சீர்குலைதல், நுகர்வோர் விருப்புக்கள் நிறைவேறாத வகையில் லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்துவதன் மூலம் லொத்தர் வருமானம் இழக்கப்படுகின்றமை போன்ற நலிவுகள் இந்த சகல லொத்தர்கள் தொடர்பாகவும் அவதானிக்கப்பட்டன. இதனால் இந்த லொத்தர் சீட்டிழுப்பை நடாத்தும் முறைமைகளின் போது சபை எதிர்பார்த்த நோக்கங்களை அடையத் தவறியிருந்ததுடன் சபை தொடர்பில் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. அதனால் லொத்தரை நடாத்தும் நோக்கம் தொடர்பில் கவனம் செலுத்தி ஆகக் கூடிய நலன்களை வழங்கக் கூடிய வகையில் லொத்தர் சீட்டிழுப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்ததுடன் வெளிப்படையாகவும் செயற்திறனாகவும் கூடிய வகையில் லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்துவதன் மூலம் காணப்படுகின்ற குறைபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

## தந்திரோபாய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனத்தின் (செமா) செயலாற்றலை மதிப்பீடு செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் பிரகாரம், தந்திரோபாய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனமானது அதிமேதகு சனாதிபதியின் அதிகாரங்களின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இலாபம் உழைக்காத அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தாமல் தந்திரோபாய திட்டங்கள் மூலம் சுயாதீன தொழில்முயற்சிகளாக கட்டியெழுப்புதல் இந்நிறுவன ஸ்தாபிப்பின் பிரதான நோக்கமாகும். எவ்வாறாயினும், இந்நிறுவனத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அந்நோக்கங்கள் அடையப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க இந்நிறுவனம் மேலும் தொடர்ந்தியங்குவதன் செயலாற்றலை பரீட்சிப்பதற்காக இக்கணக்காய்வு திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிறுவனத்தை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு அதிமேதகு சனாதிபதியால் ஆணைச்சீட்டு மூலம் அதிகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் தற்போதைய சனாதிபதியால் அத்தகைய ஆணைச்சீட்டு கையொப்பமிடப்பட்டிருக்காதமை மற்றும் அத்தகைய அதிகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் இந்த நிறுவனம் நடாத்தப்படுகின்றமை என்பன விசேடமானதாக உள்ளன.

மேலும், இங்கே நிர்வாக நடவடிக்கைகளிற்காக பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்காததுடன் நிறுவனத்தின் தலைவருக்கு சனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்ட நிதி அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு அனைத்து செயற்பாட்டு நடவடிகைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முறையான ஆட்சேர்ப்புத் திட்டமின்றி நிறுவனத்திற்கான பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தில் காணப்படவேண்டிய பதவியணியினர் மற்றும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தற்போது வரையிலும் முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆலோசனைச் சபைக்கு 2017 சனவரி தொடக்கம் செப்தெம்பர் வரை அண்ணளவாக ரூபா 19 மில்லியன் படிகள் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் ஆலோசனையாளர்களின் அவசியத்தன்மை முறையாக இனங்காணப்பட்டிருக்காததுடன் அவர்களால் ஆற்றப்பட்ட பணிகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் 12 அரச நிறுவனங்களிற்கும் பின்னர் இந்நிறுவனங்களை விட மேலும் 10 அரச நிறுவனங்களிற்குமான தந்திரோபாயத் திட்டங்களை தயாரித்து மேற்பார்வை செய்வதற்காக இந்நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிறுவனங்களிற்கான தந்திரோபாயத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டதென்பதற்கான போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அதற்கிணங்க, நிறுவனத்தை ஆணைச்சீட்டு மூலம் செயற்படுத்தி முறையாக பணிப்பாளர் சபையொன்றை நியமித்து ஒத்த தன்மையான வேலைகளில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு அல்லது போதியளவு நன்மைகளின்றி இவ்வாறு அரச நிதியை தேவையற்றவாறு செலவிட்டு இவ்வாறான நிறுவனங்களை செயற்படுத்துவதற்கு இது செயற்திறனற்றதாக காணப்படுவதால் இந்நிறுவனத்தினை உரியவாறு மூடிவிடுதல் பொருத்தமானதென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான விஷேட கணக்காய்வு அறிக்கை

1974 இன் 02 ஆம் இலக்க நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை 1975 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதியளவில் சனத்தொகையில் 49.9 சதவீதம் அளவானோருக்கு நீரை வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன்

சுத்திகரிக்கப்பட்ட ஒரு அலகு நீரை உற்பத்தி செய்வதினூடாக 42 சதவீதம் அளவிலான பங்களிப்பு நலன் விகிதமொன்றையும் உழைக்கின்றது. எவ்வாறாயினும் சபை கூடிய ஊழியர் கிரயமொன்றை ஏற்றுக்கொள்வதன் காரணமாக சுத்திகரிக்கப்பட்ட ஒரு அலகு நீரிலிருந்து ரூபா 4.57 ஆன நட்டமொன்று அடையும் நிலைமையொன்றுக்கு உள்ளாகியிருந்தது. மேலும் உற்பத்தி செய்யப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட நீர் இயலளவில் வருடாந்தம் 166 மில்லியன் கியுபிக் மீற்றர் நீர் அளவில் வருமானம் கிடைக்காத நீராக மாறியிருப்பது அவதானிக்கப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட ஒரு அலகு நீரின் கிரயம் அதிகரிப்பது பாவனையாளர்களுக்கு ஏற்க கொள்ள நேர்கின்றமை தவிர்க்க முடியாத நிலைமையொன்றாக இருப்பதுடன் அதன் காரணமாக சபையினால் அவ்வப்போது நீர்க் கட்டணங்களை திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. கடந்த 03 வருட காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நீர்க்கட்டண திருத்த முன்மொழிவு இது வரை செயற்படுத்தப்படாத போதிலும் அது செயற்படுத்தப்பட்டால் அதன் தாக்கத்தை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு நேர்கின்றது. உள்ளது. அதன் பிரகாரம் கிரயத்தை கட்டுப்படுத்துவதற்கு வருமானம் கிடைக்காத நீரின் அளவினை குறைப்பதற்கும் செயற்திட்ட செயலாற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் நீர்க் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களைப் பரீட்சித்தல் இவ்வறிக்கை வழங்குவதன் நோக்கமாகும். அதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டு காலப்பகுதியில் சபையின் செயலாற்றல் பரீட்சிக்கப்பட்டதுடன் அதற்காக புத்தகங்கள், ஆவணங்களைப் பரீட்சித்தல் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுதல் மற்றும் கிடைத்த தகவல்களை பகுப்பாய்வு ரீதியாக ஆராய்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. வருடாந்தம் படிப்படியாக அதிகரிக்கும் வருமானம் கிடைக்கப்பெறாத நீர் மட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு விசேடமாக கொழும்பு நகரில் வருடாந்தம் அறிக்கையிடப்படும் 43 சதவீதம் போன்ற கூடிய மட்டத்தில் காணப்படும் வருமானம் உழைக்காத நீர் அளவிலான குறைப்பதற்கு இது வரை போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாததால் அதற்காக தற்போது செயற்படுத்தப்படும் நீர் செயற்திட்டங்களின் செயலாற்றலும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. மேலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தமை மற்றும் அதன் காரணமாக மதிப்பிடப்பட்ட பெறுமதியை மிகைத்த மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேர்ந்தமை நீர் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரர்கள் சமர்பிக்கப்பட்டிருந்த மிகை மதிப்பீட்டு அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாகவும் சபைக்கு கூடிய கிரயமொன்றை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது.

ஊழியர் கிரயத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் சபையின் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்திக்காக செலவிடப்படும் கிரயத்தை கட்டுப்படுத்தல், கொழும்பு நகரில் 43.14 சதவீதமான வருமானம் கிடைக்கப்பெறாத நீர் விகிதம் ஏனைய பிரதேசங்களில் வருமானம் கிடைக்காத நீர் விகிதமான 23 சதவீதம் வரையில் குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், பொறியியலாளர் மதிப்பீட்டை மிகைத்து கொடுப்பனவை தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளை எடுப்பதினூடாக சபை செலவிடப்படும் கிரயத்தை கட்டுப்படுத்த முடியுமென இனங்காணப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை எடுப்பதின் மூலம் சபைக்கு சாதகமான வருமானமொன்றை உழைக்க கூடியதாக இருப்பதாகவும் நீர்க் கட்டணங்கள் திருத்தம் செய்வதன் மூலம் மக்கள் மீது மேலதிக சுமையொன்றை ஏற்றுவதற்கு தேவையில்லை என தீர்மானிக்கப்படுகின்றேன்.

## சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல் செயற்பாடு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை

1832 ஆம் ஆண்டில் பிரித்தானியா ஏகாதிபத்திய ஆட்சியில் இலங்கையை நிர்வகித்த கெமரண் ஆளுனர் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட நீதி மறுசீரமைப்பின் பெறுபேறொன்றாக சிறைச்சாலைகள் தோற்றம் பெற்றன. அதன் பிரகாரம், 1844

இன் 18 ஆம் இலக்க சட்ட மற்றும் நீதிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரிட்டனின் பொஸ்டல் முறைக்கு அமைய வெலிகட சிறைச்சாலை கட்டியெழுப்பப்பட்டது. மேலும், இச் சேவை 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்திற்கு இணங்க 1905 யூலை 16 ஆந் திகதி முதல் ஆணையாளர் ஒருவரின் கீழ் தனியாக நிர்வகிக்கும் திணைக்களமொன்றாக மாற்றப்பட்டது. அவ்வாறே இந்த சமூக நோக்குடன் இச்சேவையின் தேவைப்பாட்டின் ஈடுபாட்டின் பெறுபேறொன்றாக 1875 இல் இங்கிலாந்தின் பீன் பில்ட் சிறைச்சாலை வடிவமைப்பின் பிரகாரம் போகம்பர சிறைச்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் சிறைச்சாலைகள் தொடர்பான வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்தில் சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்குதல் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் சமூக சிக்கல் தன்மையான சிறைச்சாலைகள் செயற்பாட்டின் முறைமையாக பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு என்பன திணைக்களத்தின் அடிப்படை நோக்கங்களாக இனங்காணப்பட்டிருந்தன.

தீவு முழுவதும் காணப்படும் 30 சிறைச்சாலை நிறுவனங்களை பேணிச் செல்வதற்காக 7,872 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் அரசினால் இந்த நிறுவனங்களை பராமரிப்பதற்காக ரூபா 30,119 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிதி ஏற்பாடுகளை செலவு செய்தல், அதன் முகாமைத்துவம் மற்றும் திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக உட்பட தற்போது சிறைச்சாலைகள் தொடர்பாக சமூகமயப்படுத்தப்பட்டுள்ள நிலைமைகளை இனங்காண்பதற்கு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பரிசோதித்தல், வினாக் கொத்துக்கள் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் நேர்முக கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் பௌதீக
பரிசோதனையின் போது மேற்கொள்ளப்பட்டது.

தற்போதைய தேவைப்பாட்டின் பிரகாரம் 140 வருடங்கள் அளவில் பழமையான சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்யப்படாமை, சிறை கூடங்களில் காணப்படும் அதிக நெரிசல் சிறைக் கைதிகளின் மேன்முறையீட்டினை விசாரணை செய்வதில் தாமதம், சிறைச்சாலைக்குள் தடுக்கப்பட்ட பொருட்களின் பாவனை மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பதவியணியில் காணப்படும் சிக்கலான நிலைமையின் கீழ் சிறைக்கைதிகளின் பாதுகாப்பு, ஆதரவு மற்றும் புனர்வாழ்வு செயற்பாடு முறையாக நடாத்திச் செல்வது சிக்கலான நிலைமையொன்றில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இந்தக் காரணங்கள் அடிப்படையில் சிறைச்சாலைகள் முறையான முகாமைத்துவத்துக்கு உட்பட்டிருக்காததால் சிறைக்கைதிகளுக்கு பாதுகாப்பு, ஆதரவு வழங்கி அவர்களை புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்துதல் போன்ற நோக்கங்கள் சிறைச்சாலை செயற்பாடுகளின் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்ததாக தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலைமையினை தவிர்ப்பதற்கு சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்களின் பிரகாரம் திருத்தம் செய்வதன் ஊடாக சிறைக்கைதிகளுக்காக நியாயமான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டது. மேலும் அதன் மூலம் சிறைக்கைதிகள் தொடர்ச்சியாகவும் முறையாக புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது.

## ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முகாமைத்துவத்தின் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

இலங்கையின் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரசாங்க சேவையின் ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் கீழ் ஊதியம் சேமலாப

நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகள் 1958 மே 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரச்சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரச்சட்டத்தின் செயற்பணிகளை செயற்படுத்துதல் தொழில் ஆணையாளருக்கும் அந்த அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்படு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2.63 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு நிதியத்தின் மொத்த தேறிய பெறுமதி ரூபா 2,066,299 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் இலங்கையின் பகுதியளவு அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் அங்கத்துவ பணத்தில் அமைக்கப்பட்ட இந்த நிதியத்திற்கு முன்னைய ஆண்டுகளின் போது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த சில சந்தர்ப்பங்களின் போது கலந்துரையாடலுக்கு உட்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியினால் 2015 பெப்ரவரி மற்றும் 2016 மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சினைக்குரிய பிணை முறி விநியோகித்தல் தொடர்பாக பரீட்சிப்பதற்காக நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போதும் மேற்கூறப்பட்ட பிணைமுறி விநியோகம் தொடர்பாக மேலதிகமாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் போதும் இது தொடர்பாக விரிவாக வினவப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட விடயங்களையும் கவனத்தில் கொண்டு நேரடி முறைமையில் திறைசேரி பிணைமுறி விநியோகித்தலை கைவிடுவதற்கு தீர்மானித்திருந்த காலப்பகுதிக்கு கூடிய கவனம் செலுத்தி நிதியத்தின் நிதி முகாமைத்துவ செயல்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கை தயாரிக்கும் போது அதற்குரிய ஏடுகளைப் பரீட்சித்தல், தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடுதல், பெறப்பட்ட தரவுகளை காலப்பகுப்பாய்வு ரீதியில் பகுப்பாய்வு செய்தல் போன்ற முறைமைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

ஊழியர் சேமலாப நிதியத்தால் முதலீடுகளை அங்கீகரித்துக் கொள்ளும் நடைமுறைகள் தர்க்க ரீதியான அடிப்படையில் மேற்கொள்ளப்படாமை, நிதியத்தில் முதலீட்டிற்காக போதியளவான பணம் காணப்படும் போது ஏலத்திற்காக சகமளிக்காமை மற்றும் அதே பிணைமுறியை மீண்டும் குறைந்த விளைதிறன் விகிதத்தின் கீழ் இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவு செய்தல் மற்றும் முறையான சாத்தியவள ஆய்வின்றி நட்டம் பெறுகின்ற கம்பனிகளில் பணத்தை முதலீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் நிறுவனத்தின் தரத் தன்மைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 42 மில்லியன் பங்கு முதலீட்டில் ரூபா 1,300 மில்லியன் இழப்பீட்டுடன் ரூபா 42.8 மில்லியன் தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் பிணைமுறி ஆரம்ப சந்தையில் கொள்வனவு செய்யாமல் இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ஆரம்ப சந்தையில் கொள்வனவு செய்வதை விட ரூபா 316 மில்லியன் மேலதிக கிரயமொன்று செலவு வேண்டி நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. மேலும், இரண்டாம் நிலை சந்தையில் திறைசேரி பிணைமுறிகள் விற்பனை செய்யப்பட்டு சில தினங்களுக்குள் அந்த திறைசேரி பிணைமுறியே இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவு செய்தமையால் ரூபா 347 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியம் சரியான பிரகாரம் முகாமை செய்யப்படாமை தெளிவாகியிருந்ததுடன் பணத்தை முதலீடு செய்யும் போது மிகவும் வினைத்திறனான மற்றும் செயற்திறனான முதலீட்டு வழிகளை தெரிவு செய்வதற்காக தேவையான தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தமை தெளிவாகின்றது. மேலும், ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தை பொருத்தமான பிரகாரம் நாளதுவரையாக்குதல், நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படையாக மேற்கொள்வதற்கு தேவையான நவடிக்கைகளை எடுத்தல், மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய பிணை முறிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை துரிதமாக அமுல்படுத்ததுதல் மூலம் நிதியத்தின் நிதி மற்றும் நிர்வாகச் செயற்பணியை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

1968 இன் 24 ஆம் இலக்க அரச அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் ரூபா 15 மில்லியன் தொகையான ஆரம்ப மூலதனத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டின் போது அரச அச்சகக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வதிகாரச் சட்டம் மற்றும் கடந்த காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட 1978 இன் 24 ஆம் இலக்க அரச அச்சகக் கூட்டுத்தாபனம் (திருத்த) அதிகாரச்சட்டம், 1981 இன் 51 ஆம் இலக்க அரச அச்சகக் கூட்டுத்தாபன (திருத்த) அதிகாரச்சட்டம் மற்றும் 1998 இன் 7 ஆம் இலக்க அரச அச்சகக் கூட்டுத்தாபன (திருத்த) அதிகாரச்சட்டம் போன்ற அதிகாரச்சட்டங்களில் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாக அரச, அரச கூட்டுத்தாபன, நியதிச் சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களின் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், காகிதாகிகள் மற்றும் புத்தகங்களின் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் காண்பிக்கப்பட்டிருந்தன. தலைவரை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை மூலம் நிர்வகிக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் தற்போது வரையில் 715 பதவியணியினர்கள் சேவையாற்றுகின்றனர். 2013 ஆம் ஆண்டில் ரூபா 41.8 மில்லியன் தொகையான தேறிய இலாபத்தை உழைப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுத்தாபனத்தின் முறைமையில் 2017 ஆம் ஆண்டு வரையில் நட்டம் பெறுகின்ற நிலைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மை மற்றும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திற்கான விளைவு விகிதமும் வீழ்ச்சியடைந்தமையால் நிறுவனத்தின் இருப்பு பிரச்சினைகளுடனான நிலைக்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறான நிலைமையில் அரசாங்க பிரிவின் முன்னுரிமை உற்பத்தி நிறுவனம் என இந்த நிறுவனம் செயற்றிறனின்மைக்கான காரணங்களைப் பரீட்சிப்பதற்கும் மீண்டும் இலாபம் பெறுகின்ற நிறுனத்திற்கு உட்படுத்தலும் மற்றும் இயலுமான படிமுறைகள் பரீட்சித்தல் இக்கணக்காய்வின் பிரதான நோக்கமாக இருந்தது. மேலும், நிறுவனம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சீராக நட்ட இழப்பு நிலைக்கு உட்பட்டிருந்தமைக்கான காரணங்களாகும்.

அதன் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலாபம் பெறுவதற்கான முக்கியமான காரணமாக உயர்ந்த ஊழியர் கிரயம் மற்றும் குறுங்கால கடனுக்கான நிதிக் கிரயம் உயர்வடைசந்தமை என்பன இனங்காணக்கூடியதாக இருந்தன. அதன் பிரகாரம் 715 பதவியணியினர்களுக்காக பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் தற்போது வரையில் வருடாந்த சம்பள அதிகரிப்பை வழங்கியமை ஊழியர் கிரயம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. மேலும் அச்சகக் கூட்டுத்தாபனம் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இயந்திரங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக உற்பத்தி செயற்றிறன் போதியளவில் இல்லாமையினால் கிடைக்கின்ற கட்டளைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகியிருந்தது. மேலும் கூட்டுத்தாபனம் லொத்தர் சபையிலிருந்தும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலிருந்தும் கிடைக்கின்ற அச்சிடல் கட்டளைகளின் அடிப்படையில் மாத்திரம் தங்கியிருக்க வேண்டிய ஆபத்தான நிலையொன்று அவதானிக்கப்பட்டது. அதன் போது கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக புத்தகங்களை அச்சிடுவதற்காக வழங்கிய சலுகையை இரத்துச் செய்வதன் மூலம் கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த நிலைமை இதன்படி தெளிவாகின்றது. அதன் பிரகாரம் நிறுவனத்தால் புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி பன்முகப்படுத்தலில் ஈடுபடாவிடின் எதிர்காலத்தில் நிறுவனத்திற்கு மிகக் கஷ்டத்திற்கு முகங்கொடுக்க வேண்டியமை தவிர்க்கமுடி யாததாகிவிடும் என்பது தெளிவான விடயமாகும். மேலும் நிறுவனத்தில் காணப்படுகின்ற திரவத் தன்மை பிரச்சினைகளுக்காக துரிதமாக தீர்வைக் கண்டு மீண்டும் இலாபம் தருகின்ற உற்பத்தி நிறுவனமாக ஆக்க வேண்டிய தேவை அவதானிக்கப்பட்டது.

## யான்ஓயா மணல் அகழ்வு கருத்திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

ரிட்டிகல மலைதொடரிலிருந்து ஆரம்பமாகி 145 கி.மீ.அளவில் பெருக்கெடுத்துச் சென்று புல்மோட்டை பிரதேசத்திலிருந்து கடலுடன் இணைகின்றது. மேலும் திருகோணமலை மாவட்டத்தில் பம்புருகஸ்வெவ பிரதேசத்தின் ஊடாக யான்ஓயா கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டம் ரூபா 36,855 மில்லியன் செலவினைக் கொண்டு 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், இந்த கருத்திட்டத்தின் நிருமாணிப்பு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்த CAMCE கம்பெனியால் கருத்திட்டத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக அகழ்வுகளை மேற்கொள்கையில் நீர்தேக்கத்திற்கு உட்படுகின்ற பிரதேசத்தில் பூமிக்கு அடியில் பாரிய அளவிலான மணல் படிவுகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது. இந்த மணல் படிவுகளில் உறுதிப்படுத்தப்படாத மதிப்பீடு 675,000 கியுப் ஆவதுடன் அதன் பெறுமதி மொத்தமாக ரூபா 2, 700 மில்லியன் என யான்ஓயா கருத்திட்ட அலுவலகம் அறிவித்திருந்தது. அதனடிப்படையில் இந்த மணல் படிவுகளின் அகழ்விற்கு CAMCE கம்பெனியிடமும் 183 நபர்களிடமும் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போதும் அகழ்வுகளை மேற்கொள்ளும் போதும் மேற்கொண்டுள்ள முறையற்ற தன்மை காரணமாக ஏற்பட்டுள்ள சமூக, தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக பரிசீலனை செய்தலும், அதற்கு வழங்க முடியுமான தீர்வுகளை முன்வைத்தலும் இந்த அறிக்கையின் நோக்கங்களாகும்.

அறிக்கை தயாரிக்கும்போது, மணல் படிவுகளை அகற்றுகையில் பின்பற்றியுள்ள நடைமுறைகள், கருத்திட்டம் தொடர்பாக வழங்கியுள்ள குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் யான்ஓயா கருத்திட்டத்தின் பொருட்டு மூலப் பொருட்களை வழங்கும்போது கட்டணங்களை அறவிடுதல் ஆகிய துறைகளை பரிசீலனை செய்யப்பட்டதுடன்,அதற்கு தேவையான கடித ஆவணங்களை பரிசீலனை செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடல்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதன்போது வளங்களும் கால அவகாசமும் போதுமற்றதன் காரணமாக அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில் மாதிரி பரிசோதனைகளை மேற்கொண்டதுடன், தொழில்நுட்ப அறிவு போதுமற்றதன் காரணமாக நீர்தேக்கம் அமைந்துள்ள நிலப் பகுதியில் குவிக்கப்பட்ட மணல் குவியல்களின் மொத்த அளவினை உரியவாறு கணக்கிடுவதற்கும் CAMCE நிறுவனம் அகழ்வுகளை மேற்கொண்ட கல், மணல், மண் மற்றும் சரளைக் கற்கள் என்பவற்றின் உண்மையான அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முடியவில்லை.

புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் மணல் படிவுகளை அகற்றுதல் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய நிறுவனங்களாவதுடன், இந்த நிறுவனங்கள் உரியவாறு நடைமுறைப்படாமை காரணமாக மேற்படி மணல் படிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் முறையின்றி நடைபெற்றுள்ளது. மேலும், மணல் அகழ்வுகளின் பொருட்டான அனுமதிப் பத்திரம் வழங்குதலானது போட்டிகளுடன் கூடிய மற்றும் திறந்த விலைகோரலின்றி மேற்கொள்ளுதலும், மணல் படிவுகளை அகற்றும்போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கத்தை சுற்றாடல் அதிகார சபையால் மீண்டும் மதிப்பிடப்படாமையும், சூழலை புனரமைக்கும் பொறுப்பினை தவறவிட்ட அனுமதிப்பத்திர உரித்தாளிகளை மேற்பார்வை செய்து,சூழலை புனரமைப்பதற்கு புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையும், உத்தியோகபூர்வமற்ற தரப்புகளால் முறையற்ற வகையில் பணம் பெற்றுக்கொள்வதனை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையும் உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாக அகழ்வு நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் முறையற்ற தன்மை என்பன அடையாளம் காணப்பட்டது. இந்த நிலைமை காரணமாக

அகழ்வு நடவடிக்கைகளின் பரிசோதனை பொருட்டு மூன்று பேர்களைக் கொண்டமைந்த குழுவொன்றை நியமனம் செய்து பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் அந்தக் குழுமூலம் வழங்கிய பரிந்துரைகளும்

உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது.

அதனடிப்பயையில், இதன்மூலம் ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்பு மற்றும் நீர்தேக்கத்தின் எதிர்கால நிலைப்பாடு என்பவற்றின்மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதன் காரணமாக மணல் அகழ்தலை நிறுத்துதல் பொருத்தமாவதுடன், தற்போது நீர்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அகழ்கின்ற இடங்களை மூடிவிடுதல், குவிக்கப்பட்டுள்ள மண் மேடுகளை மட்டமாக்கி நிலத்தை மேலும் இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டியுள்ளது. மேலும் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கிய பின்னர் அது தொடர்பாக பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சட்டத்தை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தல் என்பவற்றுக்கு பணியகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதனடிப்படையில் ரூபா 2.7 பில்லியன் பெறுமதியான மணல் படிவுகளை அகற்றும்போது உரியவாறு முகாமைத்துவம் செய்யாமை காரணமாகவும் முறையற்ற தன்மை காரணமாகவும் சூழலுக்கு பாதகமான வகையில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதெனவும், அதனூடாக அரசாங்கத்திற்கு உரித்தாக வேண்டியிருந்த வருமானம் கிடைக்கவில்லையெனவும் தீர்மானிக்கின்றேன்.

## மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மற்றும் அச்செயற்திட்டத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

அப்போதைய உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சாகிய தற்போதைய பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட 2007 - 2017 பெருந்தெருக்கள் பாரிய திட்டத்தின் பிரகாரம் வடக்கு அதிவேக வீதியை நிர்மாணித்தல் இனங்காணப்பட்டிருந்தது. மேலும் விடயங்களைப் பரீட்சித்த போது 1990 ஆம் ஆண்டிலிருந்தே மத்திய மாகாணத்திற்கு அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்காக திட்டங்கள் அமுல்படுத்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன்போது இந்த நிர்மாணங்களுக்குரிய தேசிய கொள்கையை அமுல்படுத்தாமையின் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு என்பதனை மதிப்பீடு செய்யமுடியாதிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட சில விடயங்களை இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது. எவ்வாறாயினும், இந்த அறிக்கை 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி 1430 மணிக்கு நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு கலந்துரையாடலின் போது மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பாக நிகழ்காலத்தில் உருவாகியுள்ள பிரச்சினைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது ஏற்பட்ட சிக்கல்களின் பின்னர் அதற்காக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் செயற்திட்ட பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒரு விசேட கணக்காய்வு அறிக்கையைத் தயாரிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்படுகினற்து.

- 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஸ்மெக் (SMEC) நிறுவனத்திற்கு ரூபா 1,759 மில்லியனும் அந்த நிறுவனத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லாததன் காரணமாக இது சம்பந்தமாக பல்வேறு ஆய்வுகளுக்காக வெளி நிறுவனங்களுக்கு ரூபா 65 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தும் இறுதி சாத்திய வள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- கணக்காய்வுத் திகதி வரையும் அதிவேக வீதிகளை தெளிவாக இனங்கண்டு மதிப்பீட்டை திருத்தம் செய்ய முடியாத நிலைமையின் கீழ் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் இடம் பெறாதததுடன் கேள்வி மதிப்பீட்டின் சரியான தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியாக உள்ளது.

- செயற்திட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு கிடைத்த அங்கீகாரம், அது அங்கீகரிக்கப்பட்ட திகதி மற்றும் அந்த மதிப்பீட்டைத் தயாரித்த உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ முத்திரைகள் இருக்கவில்லை.

- மத்திய அதிவேக வீதியின் இலக்கம் 01, 02 மற்றும் 03 ஆம் பகுதிகள் தொடர்பாக ஆலோசனைக் கம்பனியினையும் ஒப்பந்தக் கம்பனியையும் தெரிவு செய்யும் நடைமுறையானது 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.1 ஆம் பிரிவிற்கு முரணாக காணப்பட்டது.

- போட்டி விலை முறைமையை கடைப்பிடிக்காததன் காரணமாக 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பிரிவிற்கு முரணானதாக இருந்தது.

- ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் அது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.4.2 மற்றும் 1.4.3 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள பெறுகை ஒழுக்க நெறிகளுக்கு முரணானதாக இருந்தது.

- ஜப்பான் தூதுவரால் பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கேள்விகளைக் கோருவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருக்கவில்லை.

- ஜப்பான் தூதுவராலயத்தால் இந்த முறையற்ற பெறுகை நடைமுறைகளுகக் விருப்பமின்மையை வெளியிட்டிருந்ததும் அமைச்சு செயலாளரால் கேள்விதாரர்களின் பெயர்களைக் குறிப்பிடுமாறு ஜப்பான் தூதுவருக்கு கடிதம் சமர்ப்பித்திருந்தமை பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்கியிருக்கவில்லை.

- நிதி அமைச்சர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தும் கடைப்பிடிக்கப்பட்டிருந்த போட்டி கேள்வி நடைமுறை நிறுத்தப்பட்டு அதற்கு புறம்பாக அமைச்சரின் அமைச்சரவை விஞ்ஞானத்தில் குறிப்பிடப்பட்டவாறு Fujita கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட கேட்பு மனு தொடர்பாக அந்த நிறுவனத்துடன் (Fujita) பேரம்பேசுவதற்கு முயற்சி எடுத்தல் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணானதாகும்.

- இயலுமை இல்லாததனால் Fujita கம்பனியின் கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தும் அக்கேள்வியை மீண்டும் ஒரு தடைவ மதிப்பீட்டிற்கு உட்படுத்துமாறு ஜப்பான் விசேட ஆலோசகரின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துதல் பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணானதாகும்.

- Fujita கம்பனியின் கேள்வியை நிராகரித்தல் சரியானது என மீண்டும் பெறுகைக் குழு சிபார்சு செய்திருந்தும் அதற்கு முரணாக அக்கம்பனிக்கு பெறுகையை வழங்குவதற்காக தகமை பெற்ற Taisei கம்பனியுடன் இணைந்து கொள்வதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்தல் மற்றும் அதற்கு பலவந்தப்படுத்துதல் பெறுகைத் தத்துவங்களுக்கு முரணானதாகும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் காரணமாக அரசாங்க நிதி மற்றும் ஏனைய வளங்கள் வீண்விரயமாகுதல் இடம்பெற்றிருந்ததுடன் செலவு செய்யப்பட்ட பணத்திற்கும் அவற்றிற்கு கிடைத்த பெறுமதிக்குமிடையே பாரிய வித்தியாசம் இடம் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படுகின்ற அரசாங்கக் கடன் ஆக்கபூர்வமாகவும்

சிக்கனத்தன்மையுடனும் வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு முறைமையைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் நாளது வரையாகப் பேணுதல் முகாமைத்தவத்தின் பொறுப்பாகும். மேலும், வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற அவ்வாறான பாரிய அளவான செயற்திட்டங்களை திட்டமிடும் போதும் அமுல்ப்படுத்தும் போதும் அதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் உரிய தொழில்சார் திறனுடன் செயற்பட வேண்டியதுடன் நல்லாட்சி கட்டமைப்பிற்குள் அதனுடன் தொடாப்புபட்ட நிறுவனங்கள் செயற்பட வேண்டியதும் அத்தியாவசியமானதாகும்.

## நெல் சந்தைப்படுத்தல் சபையின் செயலாற்றுகை தொடர்பான விசேட கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

1971 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தின்கீழ் 1972 ஆம் ஆண்டு நெல் சந்தைப்படுத்தல் சபை தாபிக்கப்பட்டிருந்தது. நெல் மற்றும் அரிசி கொள்வனவு செய்தல், சந்தைப்படுத்தல், வழங்குதல், விநியோகிக்கும் வியாபாரமாக பேணிச் செல்லுதல் என்பவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டும், மேலும் சில நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கும் நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்தது. குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டிருப்பினும், 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் நிறுவனம் நட்டமடையும் நிலைமைக்குள்ளாகியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டளவில் அது ரூபா 5,894 மில்லியன் ரூபாவிலான தொழிற்பாட்டு நட்டத்தை பதிவு செய்திருந்தது. இவ்வாறு வினைத்திறனற்ற நிலைமைகக் நிறுவனம் உள்ளாவதற்கான காரணங்களை பரிசீலனை செய்வதற்கும், மீண்டும் வினைத்திறனுடன்கூடிய நிறுவனமாக உருவாக்குவதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகளை பரிசீலனை செய்வதற்கும் இந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 2008 – 2018 காலப்பகுதிக்கு ஏற்புடையதாக விடயங்களை பரிசீலனை செய்ததுடன், அந்த காலப்பகுதிக்குள் நிறுவனத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை சோதனையிடுவதற்காக நெல் கொள்வனவு செய்தல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடு மற்றும் களஞ்சிய வசதிகள் தொடர்பாக பரிசலீனை செய்யப்பட்ட து.அதனடிப்படையில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் கவனத்தில் கொள்கையில் 2011 ஆம் ஆண்டு தவிர்ந்த ஒவ்வொரு ஆண்டிலும் தொழிற்பாட்டு நட்டம் அடைவதற்கு மேலதிகமாக நிறுவனம் மொத்தமாக நட்டத்தை பதிவு செய்திருந்தது. அரசாங்கத்தால் அல்லது சபையின் உயர் மட்டத்திலான முகாமைத்துவம் மேற்கொண்ட தர்க்கரீதியற்ற விற்பனை விலையினால் இவ்வாறான நிலைமை சபைக்கு ஏற்பட்டிருந்தது. மேலும் மத்திய வங்கியின் கருத்துக் கணிப்பின் பிரகாரம் வர்த்தக நடவடிக்கைகளை பேணிச் செல்வதனை தீர்மானிக்கும் பொருட்டு சபை தாபிப்பதற்கு முன்னர் விரிவான கற்கை மேற்கொள்ளாமை, சிறந்த முறையிலான களஞ்சிய கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாமை, நுகர்விற்குப் பயன்படுத்த முடியுமான நெல் இருப்புகளை விலங்கு உணவாக விநியோகித்தல், செலவினைக் காட்டிலும் குறைந்த பெறுமதிக்கு நெல் இருப்புகளை பல்வேறு நிறுவனங்களுக்கு விநியோகித்தல், இற்றைப்படுத்திய விலை கொள்கை இல்லாமை போன்ற காரணங்களினால் வினைத்திறனின்மை மேலும் உக்கிரமடைந்திருந்தது. உரியவாறு விலைகோரல்களை மேற்கொண்டு நெல் சந்தைப்படுத்தல், சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தைத விரைவாக அறவிடுதல், கடன் தொகை செலுத்தப்பட்டு பொறுப்புகளை விடுவித்தல், உரியவாறு களஞ்சிய கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், வெளியக நிறுவனங்களுக்கு அரிசி வழங்கும் போது தர்க்கரீதியான விலைக்கு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நெல் சந்தைப்படுத்தல் சபையை துரிதமாக மீள்கட்டமைத்து வினைத்திறனுடன் கூடிய நிறுவனமாக உருவாக்குவதன் ஊடாக தனியார் துறையுடன் போட்டியிட்டு தனியார் துறையில் நிலவுகின்ற சர்வாதிகார சந்தை நிலைமையை தவிர்த்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென முடிவுசெய்கின்றேன்.

## நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை.

1,741 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட நுவரஎலிய மாவட்டம் 05 பிரதேச செயலாளர் பிரிவுகள் 496 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மாவட்ட மக்களை அரச கொள்கைகளுக்கு இணங்க சிறந்த திட்டமொன்றுடன் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக நிலைபேறான அபிவிருத்திக்காக, வளங்கள் மற்றும் நிறுவனங்கள் பயனுள்ளவாறு செயற்படுத்தக்கூடிய கூட்டிணைப்பு ஒன்றின் மூலம் மக்களின் தேவைகளை வினைத்திறனுடன், நேர்மையாகவும், நியாயமாகவும் மற்றும் சினேகபூர்வமாகவும் நிறைவேற்றுதல் மாவட்ட செயலகத்தின் முக்கிய கருமங்களிடையே முதன்மையாதாக உள்ளது. மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் நிதி ஏற்பாடு செய்யப்படுவதுடன், 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 4,768,574,578 இற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 3,613,421,660 தொகை பயன்படுத்தப்பட்டு 7,537 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 5,812 செயற்திட்டங்களின் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் மூலம் இந்த செயற்திட்டங்களை நிறைவேற்றி வருடாந்தம் 1,000 செயற்திட்டங்களை விடக் கூடுதலான எண்ணிக்கையினால் செயற்படுத்தியிருந்த போதிலும், தொழிநுட்ப அறிவு உடைய உத்தியோகத்தர்கள் மாவட்டத்தில் போதியளவாக காணப்படாததுடன் அந்த உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை, பிரதேசத்தின் காலநிலை நிலைமை தொடர்பாக முன்கூட்டிய ஆய்வு ஒன்று மேறகொள்ளாமல் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் செயற்திட்டங்கள் தாமதமாதல், ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது திறந்த கூறுவிலை அழைக்கப்படல் மற்றும் சங்கங்களில் நிதிப் பலம் தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ளாமல் சமூக அடிப்படை சங்கங்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்படுவதால் செயற்திட்டங்கள் வெற்றியளிக்காமை போன்ற சிக்கல்கள் தோன்றியுள்ளது என அவதானிக்கப்பட்டது.

மேலும் செயற்திட்டங்களை இனங்காணல், கிரய மதிப்பீடுகள் தயாரித்தல், தொடர்ந்து நடைபெறும் செயற்திட்டங்களை பூரத்தி செய்தல், முறையான பெறுகை நடைமுறைகளை கடைபிடித்தல், நிதி ஏற்பாடுகளை பங்கீடு செய்யும் மூலப்பிரமாணங்களை தயாரித்தல் ஆகியன பிழையற்ற முறையில் மேற்கொள்ளப்படாமையினால் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிகோள்களை நோக்கி நெருங்க முடியாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.

மேற்கூறிய சிக்கல்களின் காரணமாக உரிய நியமங்களுடன் காணப்படாத செயற்திட்டங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் தோன்றுதல் செயற்திட்டங்கள் செயற்படுத்தும் போது அரச பணம் முறைகேடாக பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக சிக்கல்கள் அனேகம் ஏற்பட்டிருந்தன.

2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலபப்குதியில் வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள மூலதன ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் போலவே அமைச்சுக்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஏற்பாடுகளின் மூலம் பிரதேச அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வழங்கியிருந்த மூலதன ஏற்பாடுகளில் இருந்து செயற்திட்டங்களை செயற்படுத்தும் பொறுப்பு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் முக்கிய பொறுப்பு ஒன்றாக இருந்ததுடன், இந்த நடைமுறையில் சட்டம்சார் பொறிமுறை மற்றும் அதனது செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் இந்த கணக்காய்வின் குறிகோளாகும்.

அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக பெறுகைகள் நடைமுறையை முறைப்படுத்தல், காணப்படும் உததியோகத்தர்களுக்கான

வெற்றிடங்களை நிரப்புதல், முறைகேடாக பயன்படுத்தப்படும் அரசாங்க பணம் தொடர்பாக முறைசார் நடவடிக்கைகள் எடுத்தல். உரிய விதத்தில் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளாத ஒப்பந்தக்காரர்களை குறை நிரற்படுத்தல் போன்ற நடவடிக்கை எடுத்தல் அத்தியவசியமான விடயமாகும். அவ்வாறு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் எதிர்பார்க்கும் பிரதேச அபிவிருத்தியை நெருங்குவதற்கு இயலாது போகும்.

## துறை ரீதியாக பொழிப்பாக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள்

திரட்டு நிதியம்
பொதுப் பாதுகாப்பு
அரசாங்க தொழில் முயற்சிகள்
உள்ளூராட்சி அதிகாரசபைகள்
வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள்
வங்கியியல்
பெருந்தோட்டக் கைத்தொழில்
காணி அலுவல்கள்
கல்வி
தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
சுற்றாடல்
வெளி விவகாரம்
வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்
மீன்பிடி மற்றும் நீரியல் வளம்
சுகாதாரம் மற்றும் போசாக்கு
வெகுசன ஊடகம்
சட்டமும் ஒழுங்கும் தெற்கு அபிவிருத்தியும்
துறைமுகங்கள் மற்றும் கப்பற் செயற்பாடுகள்
நெடுஞ்சாலைகள்

அனர்த்த முகாமைத்துவம்
பொருளாதார அபிவிருத்தி
விளையாட்டுத் துறை
பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள்
சுற்றுலா
நகர அபிவிருத்தி
கைத்தொழிலும் வர்த்தகமும்
வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில்
போக்குவரத்து
சமூக வலுவூட்டலும் நலனோம்பலும்
விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி
தொடர்பாடல்

உயர் கல்வி
மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
பெற்றோலிய வள அபிவிருத்தி
கிராமியக் கைத்தொழில் அலுவல்கள்
நகர்த் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளம்
விவசாயம்
கலாச்சார அலுவல்கள்
சிறைச்சாலைகள் மற்றும் புனரமைத்தல் நடவடிக்கைகள்
அரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன்
மாகாண சபைகளின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்
மேல் மாகாண சபை
மத்திய மாகாண சபை
தென் மாகாண சபை
வட மாகாண சபை
வடமேல் மாகாண சபை
வட மத்திய மாகாண சபை
ஊவா மாகாண சபை
சப்ரகமுவ மாகாண சபை
கிழக்கு மாகாண சபை

| திரட்டிய நிதியம் | மீண்டுவரும் செவினத்தை தீர்ப்பதற்கு வருமானம் போதுமானதாக இல்லாமை<br><br>பொதுப்படு கடன் மீதி வருடாந்தம் உயர்வடைதல்<br><br>தலைக்குரிய கடன் தொகை தொடர்ச்சியானக உயர்வடைதல்<br><br>கடன் தவணைப் பணத்தையும் ஆண்டிற்கான வட்டியையும் செலுத்துவதற்கு சேகரிக்கப்பட்ட வருமானம் போதுமானதாக இல்லாமை<br><br>ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக பெறப்பட்ட உள்நாட்டு வங்கிக் கடன் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை<br><br>வெளிநாட்டுக் கடன் மீதிகள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தமை |
| --- | --- |

# திரட்டிய நிதியம்



இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் XVII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான அரச செலவினத்திற்கு தேவையான நிதிஏற்பாடு 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அரசின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 4,298 பில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 05 இல் காண்பிக்கப்படுகின்றது.

| நிதி | மூலதன நிதி ஏற்பாடு | மீண்டெழும் நிதிஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஏற்பாடு | 831 | 1,312 | 2,143 |
| காணப்படும் சட்டங்கள் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள திரட்டு நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக விஷேட சட்ட சேவைகளுக்கான நிதிஏற்பாடு | 1,153 | 852 | 2,005 |
| வழங்கல் மற்றும் சேவைகளுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு | 30 | - | 30 |
| விசேட சட்ட சேவை செலவினங்களுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு | 86 | 34 | 120 |
| மொத்தம் | 2,100 | 2,198 | 4,298 |

அட்டவணை 05 – அரசாங்க வழங்கல் மற்றும் சேவைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு
மூலம்:- அரச கணக்குகள் திணைக்களம்

2017 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் 240 தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர பொறுப்பு செயற்திட்டத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 2.2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தவதற்காக ரூபா 313.30 பில்லியனான மேலதிக நிதிஏற்பாடு ஏனைய செலவின தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை அச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 0.33 பில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 06 இல் காண்பிக்கப்படுகின்றது.

| செலவினத்தின் தன்மை | தேறிய நிதிஏற்பாடு | வேறு தலைப்புகளுக்கு நிதிஏற்பாடு வழங்கல் | சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | |
| **மீண்டெழுபவை** | 130.99 | 130.92 | 0.07 | 0.05 |
| **மூலதனம்** | 182.31 | 182.05 | 0.26 | 0.14 |
| **மொத்தம்** | 313.30 | 312.97 | 0.33 | 0.11 |

அட்டவணை 06 - குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாடு வழங்கல்
மூலம்:- தேசிய வரவு செலவுதிட்ட திணைக்களம்


மீளாய்வாண்டின் அரசின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 4,298 பில்லியன் திருத்தம் செய்யப்பட்ட நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு ரூபா 3,860 பில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ரூபா 438 பில்லியனால் அதாவது 11.3 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் ரூபா 3,971 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 327 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 7.6 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 2,181 பில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 2,109 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 73 பில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 3.3 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 880 பில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 625 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 28.9 சதவீதம் அதாவது ரூபா 255 பில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 59 தலைப்புகளுக்குரிய 121 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக அது ஒதுக்கப்பட்ட ரூபா 7 பில்லியன் நிதிஏற்பாடும் 101 தலைப்புகளுக்குரிய 369 செலவின விடயங்களுக்காக ரூபா 37 பில்லியனான நிதிஏற்பாடு எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 59 மில்லியனும் மூலதன செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 186 மில்லியனுமாக மொத்தம் ரூபா 222 பில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த சேமிப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவினை எடுத்திருந்தது.

மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மூலதன நிதிஏற்பாடு ரூபா 880 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 625 பில்லியன் அதாவது 71.04 வீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது ரூபா 658 பில்லியனான மூலதன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மூலதன நிதிஏற்பாட்டின் பயன்பாடு ரூபா 32 பில்லியனால் குறைவடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு ரூபா 2,181 பில்லியனாக இருந்ததுடன் ரூபா 2,109 பில்லியன் அதாவது ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 96.69 பயன்படுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினமான ரூபா 1,946 உடன் ஒப்பிடும் போது ரூபா 163 பில்லியனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் ரூபா 2,603 பில்லியனான மொத்த செலவினம் (கடன் கொடுப்பனவுகள் தவிர) மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,734 வரை ரூபா 131 மிலியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 19.25 சதவீதமாக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 19.59 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் கடந்த 7 ஆண்டு காலத்துடன் ஒப்பிடும் போது மொத்த அரச செலவினம் (கடன் கொடுப்பனவு தவிர மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி அளவில் குறைவடைவதற்கு கூடியதாக இருந்தது. விபரங்கள் உரு 30 இல் காட்டப்பட்டுள்ளது.





உரு. 30 - மொத்த செலவினம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
மூலம் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மத்திய வங்கி அறிக்கை

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி மற்றும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மீதான கழிவுகளை கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 852 பில்லியன் அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 40.41 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 117 பில்லியனால் அதாவது 15.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளணி வேதனங்களுக்காக ரூபா 485 பில்லியன் தொகையும் மானியம் மற்றும் நிதியுதவிகளுக்காக ரூபா 599 பில்லியன் தொகையும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைச் செலவினங்களுக்காக ரூபா 172 பில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. மொத்த மீண்டெழும் செலவினம் தொடர்பாக மேற்கூறப்பட்ட செலவினங்கள் உயர்ந்த பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன் ஒட்டு மொத்த மீண்டெழும் செலவினங்களையும் தீர்ப்பதற்காக ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் மொத்த அரச செலவினத்தை விஞ்சி மீண்டெழும் செலவினம் ரூபா 174 பில்லியனாக இருந்தது.

அவ்வாறே மூலதன செலவினங்களுக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 625 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் செலவினத்தின் ஒரு பகுதி, அரச முதலீடு மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்துவதற்கான உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன் மற்றும் உதவிகள் பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக கணிசமான தொகையொன்றைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அது வருடாந்தம் அதிகரித்து செல்கின்ற கிரயமாக இருந்தது.

மீளாய்வாண்டின் போது மீண்டெழும், மூலதனச் செலவினம் மற்றும் கடன் மீளச் செலுத்துதல் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 3,971 பில்லியனாக இருந்ததுடன் ஒட்டுமொத்த செலவினத்தில் 31.14 சதவீதம் கடன் செலுத்துவதற்காகவும், 21.46 சதவீதம் கடன் வட்டி மற்றும் கழிவினை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட 16 பிரிவுகளுக்கிடையே மொத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்ட முறை உரு 31 இல் காண்பிக்கப்படுகின்றது.





உரு. 31 ஒட்டுமொத்த செலவினங்களும் இனங்காணப்பட்ட 16 துறைகளின் பங்களிப்பு.
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2018

## அரசாங்க வருமானம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2018 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம், வரியல்லாத மற்றும் ஏனைய வருமானங்களாக வகைப்படுத்தப்பட்டு மொத்த அரச வருமானம் ரூபா 2,233 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 1,914 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 319 பில்லியன் அதாவது 16.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,935 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 90 பில்லியனால்


அதாவது 4.9 சதவீத அதிகரிப்பொன்றாகும். மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது முறையே 13.4 மற்றும் 13.7 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அரசின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் குறைவடைந்திருந்தது. கடந்த 2016 ஆம் ஆண்டின் போது அவ்விகிதம் 14.3 சதவீதம் அதிகரித்திருந்ததுடன் அதன் பின்னைய ஆண்டுகளில் விகிதம் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. விபரம் உரு 32 இல் தரப்பட்டுள்ளது.




வரைபு இல 32 :- அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட அரசின் அரசாங்க வருமானம் "வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம்" பிரதான இரண்டு வகையின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், வரி வருமானம் மீண்டும் வருமான வரி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி மற்றும் சர்வதேச வியாபார அடிப்படையிலான வரி என வகைப்படுத்தப்பட்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான வருமான வரியாகச் சேகரிப்பதற்கு ரூபா 370 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 310 பில்லியன் தொகையை மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறே உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 1,243 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1,060 பில்லியன் மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக மாத்திரம் இருந்தது. சர்வதேச வியாபாரத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 421 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 341.7 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானங்களில் ரூபா 2,034 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் 84 சதவீதம் அதாவது ரூபா 1,712.3 பில்லியன் சேகரிப்பதற்கு முடியுமாக இருந்தது. மீளாய்வாண்டின் போது வரியல்லா ஏனைய வருமானங்களில் ரூபா 199.1 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 23.7 பில்லியனால் விஞ்சி ரூபா 222.8 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வருமான மதிப்பீடு மற்றும்

சேகரிக்கப்பட்ட வருமானத்தை காண்பிக்கின்ற விபரம் உரு 33 இல் காண்பிக்கப்படுகின்றது.





**உரு: மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**
**மூலம்:. குடியரசின் நிதிக்கூற்றுக்கள்**

## பாதீட்டு பற்றாக்குறை

2006 ஆம் ஆண்டின் பாதீட்டு நிலுவை அவ்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை மிகைக்காத மற்றும் அம்மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்தும் பேணும் பொறுப்பாக இருப்பதாகவும் அரசின் கடன் சுமை மட்டத்தை குறைத்தல்" அரசினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புடன் நிதி முகாமைத்துவதற்கு
அடிப்படையாக இலக்கொன்றாக 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஐந்து ஆண்டுகளிலும் அந்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பாதீட்டு நிலுவை அந்த ஆண்டுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் 7.7.7 சதவீதம் மற்றும் 5.83 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திறைசேரி தவறியிருந்தது.

மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 1,935 ஆக இருந்ததுடன் திரட்டிய அரச செலவினம் மூமீண்டெும் + அரச முதலீடுகள்) ரூபா 2,734 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு நிலுவை ரூபா 799 பில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிலும் கடந்த 07 ஆண்டுகளிலும் அரச வருமானம், செலவினம் மற்றும் பாதீட்டு நிலுவை தொடர்பான விபரங்கள் உரு 34 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.





உரு 34 - அரச வருமானம், செலவினம் மற்றும் பாதீட்டு நிலுவை
மூலம்: குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## பாதீட்டு பற்றாக்குறை நிதியீட்டம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 41 பில்லியனால் அதாவது 5.42 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் ரூபா 382 பில்லியன் முதல் ரூபா 465 பில்லியன் வரை ரூபா 83 பில்லியனால் அதாவது 21.63 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது. தேறிய உள்நாட்டுக் கடன் பெறுவனவு ரூபா 209 பில்லியன் முதல் ரூபா 170 பில்லியன் வரை ரூபா 39 பில்லியனால் அதாவது 18.52 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறையை நிதியளிப்பதற்காக வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய மாற்றங்கள் ரூபா 20 பில்லியனான சாதகமான மீதி அம்பாந்தோட்டை துறைமுக குத்தகைக்கு வழங்கியமையால் கிடைத்த ரூபா 108 பில்லியன் மற்றும் உப கடன் அறவீடு ரூபா 26 மில்லியனாலும் உயர்ந்த பங்களிப்பினை வழங்கியிருந்தது.

### மீண்டெழும் செலவினத்தைத் ஈடுசெய்து கொள்வதற்கு வருமானம் போதியளவில் காணப்படாமை.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 2,109 பில்லியனாகவும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் ரூபா 625 பில்லியனாகவும் மொத்தச் செலவினம் ரூபா 2,734 பில்லியனாக இருந்தது. எனினும், அரசாங்கத்தினால் உழைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,935 பில்லியனாக இருந்ததன் காரணமாக அந்த வருமானம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் போதியளவினதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம், ஒட்டு மொத்த அரசாங்க வருமானத்தை விஞ்சி ரூபா 174 பில்லியன் மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அரசாங்க வருமானம் மீண்டெழும் செலவினத்தை தீர்த்து கொள்வதற்கு போதியளவில் இல்லாதிருந்தமை வரைபடம் 35 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 35 மீண்டெழும் செலவினத்தை தீர்த்து கொள்வதற்கு அரசாங்க வருமானம் போதியதாக இல்லாமை
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## அரசாங்கக் கடன்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கடனை உள்ளடக்கிய முழுமையான நிதிக் கட்டுப்பாடும் பாராளுமன்றத்திற்கு உரித்தாக வருவதுடன் குடியரசின் சகல கடன்களுக்காகவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். அதன் பிரகாரம் 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கம் சார்பாகவும் இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ கடன் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 772 பில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கியல்லாக் கடன் ரூபா 2,718 பில்லியன் தொகையுமாக ரூபா 3,490 பில்லியனாக இருந்தது. அது முன்னைய ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 3,150 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பிடும் போது ரூபா 340 பில்லியனால் அதாவது 10.79 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அரசாங்கம் உள்நாட்டுக் கடன் தொடர்பில் கூடிய கவனமொன்று காண்பித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது, பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கடன் அளவை முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 2,517 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 170 பில்லியனால் அதாவது 6.66 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. விபரங்கள் வருமானம் அட்டவணை 08 இல் காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2017<br>ரூபா பில். | 2018<br>ரூபா பில். |
|---|---|---|
| **வெளிநாட்டு கடன் பெறுவனவு** | 601 | 772 |
| **உள்நாட்டு கடன் பெறுவனவு** | | |
| **திறைசேரி உண்டியல்** | 1,624 | 1,653 |
| **திறைசேரி பிணைமுறி** | 549 | 763 |
| **வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டம் அல்லாத)** | 33 | 62 |
| **அபிவிருத்தி பிணைமுறி** | 339 | 234 |
| **வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு செயற்திட்டம் அல்லாத** | 4 | 6 |
| **மொத்த உள்நாட்டு கடன் எடுத்தல்** | 2,549 | 2,718 |
| **ஆண்டில் பெற்ற மொத்தக் கடன்** | 3,150 | 3,490 |

அட்டவணை 8 - உள்நாட்டு வெளிநாட்டு கடன் பெறுவனவு
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 11,276 பில்லியனாக இருந்ததுடன் அது 20167திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 9,588 பில்லியன் கடன் மீதியுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 1,688 பில்லியனால் அதாவது 17.62 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் காணப்பட்ட அரசாங்கக் கடன் தொடர்பான விபரம் அட்டவணை 9 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| கடன் வகை | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | |
|---|---|---|
| | **2017** | **2018** |
| | **ரூபா பில்.** | **ரூபா பில்.** |
| **திறைசேரி உண்டியல்** | 725 | 759 |
| **திறைசேரி பிணை முறி** | 3,755 | 4,000 |
| **ரூபாய்க் கடன்** | 24 | 24 |
| **இலங்கை அபிவிருத்தி பிணை முறி** | 638 | 614 |
| **வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் உள்நாட்டு கடன்** | 64 | 101 |
| **வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் வங்கிப் பிரிவு (செயற்திட்டம்)** | 14 | 19 |
| சுஹுருபாய கட்டிடத்தை நிர்மாணப்பதற்கான கடன் | - | 7 |
| **குத்தகைக் கடன்கொடுத்தோர்** | 12 | 8 |
| மொத்த உள்நாட்டுக் கடன் | **5,232** | **5,532** |
| வெளிநாட்டு (செயற்திட்டம்) | 2,664 | 3,194 |
| வெளிநாட்டுத் தொகையில் காலரீதியான கடன் வசதிகள் | 217 | 330 |
| **சர்வதேச பிணை முறி** | 1,475 | 2,220 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | **4,356** | **5,745** |
| **மொத்த அரச கடன் மீதி** | **9,588** | **11,276** |
| **மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி** | 13,500 | 14,200 |
| **மொத்த அரச கடன் மீது மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | 71.02 | 79.40 |

அட்டவணை 09 :- மொத்த அரச கடன் உள்ளடக்கம்
மூலம் :- அரச கணக்குகள் திணைக்களம் / குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒரு ஆண்டின் இறுதியில் காணப்பட வேண்டிய ஆகக்கூடிய பொறுப்புக்கள் அவ்வாண்டிற்காக மதிபபிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதத்தை மிகைக்க கூடாது.அந்த எல்லைக்கு இணங்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததாக திறைசேரி அறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுக்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள எனினும் வெவ்வேறு அரச முயற்வசிகளுக்குரிய பொறுப்புக்களும் கருத்திற்கொள்வதற்கு அந்த எல்லை மிகைத்திருந்தது. விபரங்கள் அட்டவணை 10 இல் காண்பிக்கப்படுகின்றது.

| **பொறுப்புக்கள்** | **2018 திசெம்பர் 31 இல் உள்ளபடி பொறுப்புக்கள்** |
|---|---|
| | ரூபா பில்லியன் |
| வங்கி மேலதிகப் பற்று | 149 |
| மத்திய வங்கி முற்பணம் | 199 |
| அரசாங்கக் கடன் | 11,276 |
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள் :- | |
| - ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் | 366 |
| - திறைசேரி பிணைமுறி மீதி குறைத்து கணக்கீடு செய்தல் | 344 |
| – நிதிஏற்பாடு இல்லாமல் கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் | 58 |
| – கடன் பணிக்கொடை கொடுப்பனிவற்காக வர்த்தக வங்கி மூலம் பெற்றக்கொண்ட கடன் சூ | 65 |
| – ரியவெவ சர்வதேச விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு செய்ய பெற்ற கடன் | 4 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 12,462* |
| **மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி** | 14,200 |
| **மொத்த பொறுப்புக்கள், மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | **87.76** |

அட்டவணை 10 :- ஆண்டின் இறுதியில் காணப்படவேண்டிய பொறுப்புக்கள்

* பொது திறைசேரியின் பிணை அடிப்படையில் பொது முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த பிணை மற்றும் சலுகைகளின் கடிதங்களின் பெறுமதி ரூபா 829 பில்லியனாகவும் ஒதுக்கீட்டுக் கணக்குகுளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 259 பில்லியனான (அரச கணக்குகள் தணிைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம்) பொறுப்புக்களின் பெறுமதியும் மேற்குறித்த பொறுப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை.

## தனி நபருக்கான கடன் அளவு

அரச கடன் மீதி, வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 291,304 ஆன தனிப்பட்ட கடன் அளவு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 520,364 வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே அது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 447,123 ஆன தனி நபர் கடன் அளவுடன் ஒப்பிடும் போது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 73,241 ஆல் அதாவது 16.38 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே அரச கடன் மீதியில் 45 சதவீதம் வெளிநாட்டுக் கடனாக இருந்தமை மற்றும் ரூபா பெறுமதி குறைவுத் தாக்கம் காரணமாக தனிநபர் கடன் அளவின் உள்ளவாறான

பெறுமதி மேலும் கூடிய பெறுமதியை எடுத்திருந்தது.

மீளாய்வர்ணடிலும் முன்னைய 05 ஆண்டுகளிலும் அரச கடன் மீதி, வருடாந்த சனத்தொகை மற்றும் தனிநபர் கடன் அளவு அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| **குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரச கடன் மீதி (ரூபா பில்லியன்)** | 5,996 | 6,577 | 7,685 | 8,794 | 9,588 | 11,276 |
| **நடுவாண்டு சனத்தொகை ('000)**** | 20,585 | 20,771 | 20,966 | 21,203 | 21,444 | 21,670 |
| **தலைக்குரிய கடன் அளவு (ரூபா)** | 291,304 | 316,664 | 366,544 | 414,751 | 447,123 | 520,364 |

அட்டவணை 11 :- மொத்த அரச கடன், நாடுவாண்டுக் குடித்தொகை மற்றும் தலைக்குரிய கடன்

அவ்வாறே மொத்த கடன் மீதியில் வெளிநாட்டுக் கடன் கருத்திற் கொள்ளக்கூடிய அளவொன்று உள்ளடக்கப்படுவதுடன் வெளிநாட்டு பணத்திற்கு ஒப்பாக ரூபாவின் பெறுமதி குறைவுத் தாக்கம் காரணமாக வெளிநாட்டுக் கடன் மீதி அடிப்படையில் எழும் தாக்கம் காரணமாக செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் மீதி தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபாயின் பெறுமதி வேறுபட்ட காரணமாக வெளிநாட்டுக் கடன் மீதி அடிப்படையில் ரூபா 1,029 மில்லியன் கூடுதலான பொறுப்பொன்று உருவாகியிருந்தது. எதிர்வரும் ஆண்டுகளில் கொடுப்பனவு செய்வதற்குள்ள கடன் தவணை மற்றம் வட்டி அளவு அதிகரித்தல் ரூபா பெறுமதி குறைவு அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் கடன் மீதி மேலும் அதிகரிக்கலாம்.


## அரச கடன் தவணை மற்றும் ஆண்டிற்குரிய வட்டி கொடுப்பனவிற்கு அரசின் வருமானம் போதியதாக இல்லாமை

மீளாய்வாண்டின் அரசின் வருமானம் ரூபா 1,935 மில்லியனாக இருந்த போதிலும் ஆண்டின் கடன் தவணை மற்றும் வட்டியாக ரூபா 2,856 மற்றும் ரூபா 852 மில்லியனாக அரசின் வருமானத்தை மிகைத்து மேலும் ரூபா 3,708 பில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு செய்வதற்கு அரசின் வருமானத்தை மிகைத்து மேலும் ரூபா 1,773 பில்லியன் தேவையாக இருந்தது. அத்தேவைப்பாடு மற்றும் அரசின் செலவினத்தை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடனாக ரூபா 2,718 பில்லியன் மற்றும் வெளிநாட்டு கடனாக ரூபா 772 பில்லியனாக மொத்தம் ரூபா 3,490 பில்லியன் கடன் பெற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது. இந்நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பின்வரும் அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2014 ரூபா.பில்லி | 2015 ரூபா.பில்லி | 2016 ரூபா.பில்லி | 2017 ரூபா.பில்லி | 2018 ரூபா.பில்லி |
|---|---|---|---|---|---|
| ஆண்டில் பெற்றுக் கொண்ட உள்நாட்டுக் கடன் | 2,020 | 2,793 | 2,518 | 2,549 | 2,718 |
| ஆண்டில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன் | 423 | 556 | 574 | 601 | 771 |
| பெற்றுக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் | 2,443 | 3,350 | 3,092 | 3,150 | 3,490 |
| உள்நாட்டுக் கடன் தவணை கொடுப்பனவு | 1,584 | 2,265 | 2,073 | 2,340 | 2,549 |
| வெளிநாட்டுக் கடன் தவணை கொடுப்பனவு | 107 | 187 | 145 | 219 | 307 |
| உள்நாட்டு கடனுக்காக வட்டி கொடுப்பனவு | 376 | 450 | 510 | 597 | 668 |
| வெளிநாட்டுக் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவு | 70 | 77 | 101 | 139 | 185 |
| கடன் தவணை மற்றும் வட்டிக் கொ-- கூட்டுத்தொகை | 2,137 | 2,980 | 2,829 | 3,295 | 3,708 |
| அரச வருமானம் | 1,127 | 1,394 | 1,699 | 1,845 | 1,935 |
| அரச வருமானத்தை விஞ்சிய கடன் தவணை மாற்று வட்டிக் கொடுப்பன அளவு | 1,010 | 1,586 | 1,130 | 1,450 | 1,773 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி | 6,577 | 7,685 | 8,794 | 9,588 | 11,276 |

அட்டவணை 12 :- அரசாங்க கடன் பெறுவனவு, கடன் தவணை, வட்டிக் கொடுப்பனவு, வருமானம்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த வருமானங்களின் கூட்டுத்தெகை ரூபா 90 மில்லியனால் அதாவது 4.88 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும் அது மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக ரூபா 298 பில்லியனால் அதாவது 13.34 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய கடன் எடுத்தல் (உள்நாடு வெளிநாடு) ரூபா 44,070 மில்லியனால் அதிகரித்திரந்ததுடன் கனுக்கான வட்டிக் கொடுப்பனவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 117 சதவீதத்தினால் அதாவது 145.85 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் முழுமையான கடன் தவணை மற்றும் கடன் வட்டிக் கொடுப்பனவு ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன்களில் 104.60 சதவீதமாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது 106.23 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டில் பெற்றுக் கொண்ட மொத்தக் கடன் ஆண்டின் கடன் தவணை மற்றும் கடன் வட்டிக் கொடுப்பனவிற்கே போதுமாக இருக்கவில்லை. இதன பிரகாரம் ஆண்டின் இறுதியில் மொத்தக் கடன் மீதி வருடக் கணக்காக் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றது. விபரங்கள் கீழே உரு 35 இல் காட்டப்பட்டுள்ளன.




அட்டவணை ...அரசின் வருமானத்தை மிகைத்து கடன் தவணை மற்றும் வட்டிக்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

**அரச கடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.**

- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,271 பில்லியனான மொத்த அரச கடன் மீதி ரூபா 14,200 மில்லியனை மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 79.40 சதவீதமாகும். இதன் பிரகாரம் நீண்டகாலமாக அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களிலிருந்து கருத்திற் கொள்ளக்கூடிய அளவொன்று கடன் தவணை மற்றும் நடவடிக்கை மீள் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் அபிவிருத்தி திட்டத்திற்காக போதியளவு முதலீடுகளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

- கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதி 11,276 பில்லியனாக இருந்தது. எனினும் பின்வரும் விடயம் காரணமாக இக்கடன் மீதி ரூபா 8.28 மில்லியனால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

  - அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பிணைகள் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை 2016 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் திறைசேரிப் பிணைகள் வழங்கும் போது அதன் தேறிய பெறுமதிக்குப் பதிலாக முகப்பு பெறுமதி கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட திறைசேரி பிணகளின் முகப்பு பெறுமதி தொடர்ந்தும் சீராக்கம் செய்யப்படாமை காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் திறைசேரி பொறுப்புக்களுக்குரிய மொத்தப் பொறுப்பு ஆகிய 344 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

- அரசினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் 8 வெளிநாட்டு உடன்படிக்கைக்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 366 மில்லியனான கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உடன்படிக்கையின் கீழான 08 உடன்படிக்கைகளுக்குரித்தாக கடன் மீதிகளில் ரூபா 172 பில்லியன் கடன் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்கு அரசினால் வழங்கப்பட்டிருந்த கடன்களில் செலுத்த வேண்டியிருந்த மீதியாக இருந்தது. இது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் அலுவல்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட MPS/SEC/2017/32 மற்றும் 2017 யூலை 20 ஆம் திகதிய “அம்பந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை” என்ற அமைச்சரவை விஞ்ஞானத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் “அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் எடுக்கப்பட்ட கடன்களில் செலுத்த வேண்டிய மீதி, அந்த சலுகை உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் செல்லுபடியாகும் வகையில் திருப்பி செலுத்தும் பொறுப்பு பொது திறைசேரியால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அக்கடன் மீதிகளை குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக் கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் போது தீர்வையான 50 வெளிநாட்டுக் கடன் மீதிகளுக்குரிய ரூபா 39 பில்லியன் மற்றும் 15 உடன்படிக்கைகளுக்குரிய 2017 ஆம் ஆண்டின் போது தீர்வையாகாத ரூபா 19 மில்லியன் என மொத்தம் ரூபா 58 பில்லியன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டுக் கடனாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசின் நிதிக்கூற்றுக்களில் 29 ஆம் குறிப்பு வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு மீண்டெழும் பணத்தினாலான கடன் மீதியை ரூபாய்க்கு மாற்றும் போது இதுவரை கணக்கீடு செய்யப்படாத மேற்படிக் குறிப்பிடப்பட்ட கடன் தீர்வைக்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்நியச் செலாவணி சீராக்கம் கடன் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆதன் காரணமாக ஆண்டின் இறுதியில் வெளிநாட்டுக் கடன் மீதி வெளிநாட்டுக்கடன் உடன்படிக்கைக்குரிய 9 பில்லியன் கூடுதலாகவும் 2 வெளிநாட்டுக் கடன்களுக்ககுரிய ரூபா 13 மில்லியன் குறைத்துக் காணப்பட்டிருந்தது.

- ஓய்வூதிய திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக வர்த்தக வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட தொகையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 65 மில்லியனாக இருந்ததுடன்அப்பெறுமதி நிதிக்சுற்றுக்களில் உள்நாட்டுக் கடனாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரருக்க செலுத்த வேண்டிய ரூபா 4 மில்லியன் நிலுவை கடன்தொகைக்காக இலங்கை துறைமக அதிகாரசபையினால் மக்கள் வங்கியிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 20 ஆந் திகதிய 17/2660/706/0111-1 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் மற்றம் அத்தீர்மானத்தின் பிரகாரம் அக்கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டிக் கொடுப்பனவு அப்பேதய நிதி மற்றம் ஊடகத்துறை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பாதீட்டு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டு முதல் கடன்தொகையின் வட்டிக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 03 ஆண்டு சலுகை காலத்தின் பின்னர் 2021 முதல் கடன்தொகையின் தவணை கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்நாட்டுக் கடனாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**அரச வருமானம் சேகரிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.**

- மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வரி வருமானத்தில் உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீதான ரூபா 1,060 பில்லியன் அல்லது மொத்த வரி வருமானத்தில் 61.91 சதவீதமாக இருந்தது. மொத்த அரச வருமானத்தின் 54.78 சதவீதமாகவும் இருந்தன. முன்னைய ஆண்டின் போது அது மொத்த வரி வருமானத்தின் 61.32 சதவீதமாகவும் மொத்த அரச வருமானத்தின் 55.51 சதவீதமாகவும் இருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானம் நுகர்வோருக்கு சுமத்துவதை குறைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது.
- மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வரி வருமானத்தில் உள்நாட்டு பொருட்கள் சேவைகள் கீழ் வரும் பெறுமதி மதிப்பீட்டு அடிப்படையிலான விதிக்கப்பட்ட வரி மற்றும் தேசத்தை கட்டியெப்பல் வரி என்பவற்றிலிருந்து 27 சதவீததிற்கு மேற்பட்ட பங்களிப்பொன்று அரச வருமானத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மதுபானம் மற்றும் சிகரட் (மதுவரி) ஆகிய பொருட்களுக்கு விதிக்கபட்டிருந்த வரியில் மொத்த வருமானத்திற்கு 5.58 சதவீதம் பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் மொத்த வருமானத்திலிருந்து 19 சதவீதத்திற்கு மேற்பட்டவை புகையிலை மோட்டார் வாகன மற்றும் பெற்றோலிய உற்பத்தி மீது விதிக்கப்பட்டுள்ள உற்பத்தி வரிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சர்வதேச வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி மூலம் ரூபா 342 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த வருமானத்தின் 19.95 சதவீதமாகவும் மொத்த அரச வருமானத்தின் 17.65 சதவீதமாக இருந்தன. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சர்வதேச வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்ட வரி மூலம் வருமான சேகரிப்பு ரூபா 30 பில்லியனால் அதாவது 7.97 சதவீததினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் இறக்குமதி வரி ரூபா 40 பில்லியனால் குறைவடைந்திருந்தமை இதற்கான அடிப்படை காரணமாகும்.
- மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அரச வருமானத்தின் கட்டமைப்பில் மறைமுக வரி கருத்திற்கொள்ளக்கூடியளவு வருமானத்தின் உயர்ந்த பங்களிப்பு மற்றம் அதிகரிப்பிற்காக கீழே காட்டப்பட்டுள்ள குறிகாட்டிகளிலிருந்து போதியளவு தாக்கமொன்ற இம்பெற்றிரந்த போதிலும் அத்தாக்கங்களின் நிதிசார் பெறுமதி கணக்கிடுவதற்காக வருமான சேகரிப்பு திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருமானத்தை சேகரிக்கும் திணைக்களங்களில் உண்மையான செயலாற்றலை அளவிடுவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பினை மாத்திரம் கருத்திற்கொள்ளல் போதியளவில் இல்லையென அவதானிக்கப்பட்டது.

    - அரசினால் உயர்ந்த வரி விகிதமொன்றை நிர்ணயித்தல்
    - விசேட சந்தர்ப்பங்களில் இடம்பெறும் நிறுவனங்களின் அதிகரிப்பு காரணமாக ஏற்படும் வரி வருமானத்தின் அதிகரிப்பு
    - பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைகளில் அதிகரிப்பு இடம்பெறும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் வரி அதிகரிப்பு
    - அந்நியச்செலாவனி குறைவடைதல் காரணமாக ஏற்படும் இறக்குமதி கிரய அதிகரிப்பு அதிகர்ப்பதன் பேரில் வரி வருமானம் அதிகரித்தல், மேலும் வெளிநாட்டு வியாபார ஒப்பந்தங்கள், மற்றம் ஏனைய சட்டங்கள் மீது மேற்கொள்ளப்படும் கைவிடல் தொடர்பாக விரிவான தகவல்களும் உரிய திணைக்களத்தின் செயலாற்றலை அளவிடும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2018 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மாகாண சபை வருமான மதிப்பீடு ரூபா 99 பில்லியனாக இருந்த போதும் அதற்குரிய உள்ளவாறான வருமானம் தொடர்பான அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.
- 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக்

கொள்கை திணைக்களத்தின் அரச வருமான மதிப்பீடு, சேகரித்தல், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக வழிகாட்டலின் மூலம் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளின் போது கண்டறியப்பட்ட விடயங்களின் பிரகாரம் திணைக்களத்தினால் வரியல்லாத வருமானம் தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு அல்லது உரிய எதிர்வரும் நடவடிக்கைகள் செயறபடுத்தப்பட்டதாக சான்றுகள் காணப்படவில்லை.

- மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் 06 வருமான விடயங்களின் கீழ் வருமானம் மதிப்பீடு செய்யப்படாதிருந்த போதும் ஆண்டின் இறுதியில் அவ்வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 229.26 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.
- மீளாய்வாண்டிற்காக 06 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 18 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அக்குறியீடுகளின கீழ் எவ்வித வருமானமொன்றும் சேகரிக்கப்படவில்லை.
- 03 வருமானக் குறியீடுகளின் கீழ் மீளாய்வாய்வாண்டு இறுதி வரை வருடக் கணக்கில் நிலுவையாக களில் ரூ 3 பில்லியன் வருவாய் நிலுவையாக இருந்தது. அப் பணத்தை அறவிடுவது தொடர்பாக வருவாய் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது நிதிக் கொள்கை திணைக்களம் எடுத்த நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் கணக்காய்விறக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
- 2018 சனவரி 17 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடந்த 03 ஆண்டுகளில் சேவைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| பொதுப் பாதுகாப்பு | |
|---|---|
| | பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கான சட்டதிட்டங்களைத் திருத்துவதில் தாமதம் |
| | வெடிபொருட்கள் தொடர்பில் அமைச்சின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்காமை |
| | பாதுகாப்பு படையினரால் உள்வாரி நிதியங்களும் செயற்திட்டங்களும் நடாத்தப்படுதல் |
| | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணித்தல் |
| | பொதுப் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டம் திருத்தப்படாமை |
| | பாதுகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை முழுமையான இயலளவுடன் செயற்படாமை |

# பொதுப் பாதுகாப்பு

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துதல், வான் மற்றும் நிலப்பரப் பகுதிகளிகன் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்கு பின்வரும் காடப்பாடுகளை பாதுகாப்பு அமைச்சும் அதன் கீழ் அமைந்துள்ள ஐந்து திணைக்களங்கள் மற்றும் எட்டு நியதிச்சட்ட நிறுவனங்களும் ஒன்றிணைந்து பின்வரும் பணிகளையும் உள்ளடக்கிதான பாணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

- இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டையும் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்.
- வான், கடல் மற்றும் தரைப்பகுதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுடன் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல்.
- இலங்கையின் அபிமானத்தையும் பாரம்பரியத்தையும் முன்னெடுத்துச் செல்ல உதவுதல்.
- பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான கொள்கைகளையும் அமுல்படுத்தல்.
- சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் பொலிசுக்கு உதவுதல்.
- உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- சிறு அளவிலான ஆயுதங்களை கட்டுப்படுத்தல்

மேற்குறித்த கடமைகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக் கணக்காய்வின்போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்குரிய முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

பாதுகாப்புடன் தொடர்புடைய கட்டளைச் சட்டங்களின் திருத்தங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள்.

2015 டிசம்பர் 11 திகதிய PED/04/08/01/59 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி சேவைகளுக்கான பொதுச் கட்டண அறவீடுகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேண்டியிருந்தது. எனினும் 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சுடுபடைக்கல (திருத்தச்) சட்டம் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்களின் கீழ் அறவிடப்படும் கட்டனங்களில் மதிப்பீட்டாண்டில் இறுதிவரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## வெடிப்பொருள் கட்டுப்பாடு சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் கட்டுபாடுகள் நிறைவேற்றப்படாமை

1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெடிப்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் படி நாட்டினுள் வெடிப்பொருள் பாவனை மற்றும் நிர்வகித்தல் தொடர்பான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சுக்குறியது என்பதுடன் மாவட்டச் செயலாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட உதவி வெடிப்பொருள் கட்டுபாட்டாளர்கள் மூலம் அவ் அதிகாரம் செயற்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக நடாத்தப்பட்ட ஆரம்பமட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது குருனாகலை, புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வெடிப்பொருள் நிர்வாக வெடிப்பொருள் பாவனைக்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் சம்பந்தமான விவரம் மற்றும் அவற்றின் விநியோகம் சம்பந்தமான ஆவணங்கள் முறையாக பேனப்படாதிருந்தது மேலும் மதிப்பீட்டாண்டில் குருனாகல் மற்றும் புத்தளம் மாவட்டப்பணிகளுக்குள் இது சம்பந்தமாக நடாத்தப்பட்ட துறைசார் கணக்காய்வு பரிசோதனைகளின்போது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது நடாத்திச் செல்லும் 35 கருங்கல் வேலைத்தளங்கள் காணப்படுகிறது.

### பாதுகாப்பு படைகளால் உள்ளார்ந்த நிதியங்கள் கருத்திட்டங்கள் நடாத்திச் செல்லல்

முன்னைய சில வருடங்களுக்குள் காணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளினூடாக வெளிக்காட்டப்பட்டிந்தவாறும் அரசாங்க கணக்குகள் தொடர்பில் ஆணைக் குழுவினால் கட்டளையிடப்பட்டவாறு பாதுகாப்பு படைகள் வர்த்தக அடிப்படையிலான நடாத்திச் செல்லும் நானாவித இல்லங்களை இலாபமீட்டும் கருத்திட்டங்கள் மற்றும் நிதியங்கள் தொடர்பாக பாராளுமன்ற நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மேற்படி பரிந்துறைகளின்படி முப்படைகளிடம் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை உபயோகித்து நடாத்தப்பட்டுவரும் கருத்திட்டங்கள், பொதுக் கொள்கையொன்றின் கீழ் பாராளுமன்றத்தின் மெற்பார்வைக்கு உற்படும் விதத்திலும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் விதத்திலும் நியதிச்சட்ட நிதியம் என்றவகையில் ஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இது சம்பந்தமாக 2009 நவம்பர் 11 ஆம் திகதிய EA/IA/05/05(02) ஆம் இலக்கமுடைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதம் மூலம் குறித்த மதியுறை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டாண்டில் இது சம்பந்தமாக மேலும் நடாத்தப்பட்ட கணக்காய்வின்போது. இலங்கை வான் படையால் 03 விடுமுறை இல்லங்கள் மற்றும் விவசாய பண்ணைகளையும் இலங்கை கடற்படை 07 விடுமுறை இல்லங்கள் மற்றும் 05 உத்சவ மண்டபங்களையும், வர்த்தக அடிப்படையில் நடாத்திச் செல்வதுடன் அவற்றின் நிதி மற்றும் இயக்கவருமாணங்கள் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்படாமை தெரியவந்துள்ளது. இலங்கை வான் படைக்குச் சொந்தமான ஹெலிட்டுவர்ஸ் தனியார் நிறுவனத்தின் இயக்கச் செயற்பாடுகளால் 2010-2018 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால இடைவெளிக்குள் ரூ. 54.50 மில்லியன் இலாபத்தை உழைத்திருத்துடன் அதற்கென இலங்கை வான்படை முதலிட்ட முதலீட்டுக்கு இலாபங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இந் நிறுவனத்தின் மொத்த பங்குகளும் 5 வான் படை உத்தியோகத்தர்களுக்கு செந்தமாக இருப்பதுடன் அரசாங்க கணக்கு சம்பந்தமான பாராளுமன்ற ஆணைக்குழுவின் கட்டனைப்படி திரைசேரிக்கு பங்குகளின் இலாபம் கிடைக்கும் வகையில் கம்பணியை மீண்டும் பதிவுசெய்ய வேண்டியுள்ளதுடன், அந் நடவடிக்கை 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### யுத்தத்தால் மரணமடைந்த மற்றும் அங்கவீனமடைந்த இரானுவ வீரர்கள் மற்றும் அவர்களுடை குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை செய்து கொடுத்தல்

யுத்தத்தின் போது மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற இரானுவ வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரது நலன்புரி சேவைகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிறுவனத்தினால் இரானுவத்தினரதும் அவர்களது குடும்பத்தினரது நலன்புரி சேவை நிமித்தம் வீடுகள் மற்றும் வீட்டுக் கடன்கள் பெற்றுக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் பெற்றுக் கொடுத்தல் போன்ற நில கருமங்கள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தன. பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் 03 நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்பட்டுவந்த வீட்டுத் திட்டங்கள் சிலவற்றுக்கு மதிப்பீட்டாண்டில் ரூபா. 833.51 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா. 787.53 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இரானுவவீரர் மற்றும் அவரது துனைவர் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் முகம் கொடுக்கும் சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆய்வுகள் நடாத்தவும் அப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முறையான வேலைததிட்டமொன்று பாதுகாப்பு அமைச்சினால் அமுல்படுத்தப்படவில்லை.

### பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மானிக்கப்படும் பணிகள்

அக்குரேகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் பாதுகாப்பு படை தலைமையக கட்டிட நிர்மாணப் பணிகள் மேலும் தாமதமடைந்து கொண்டே செல்கிறது. இக் கட்டுமானங்கள் சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ரூபா. 25 மில்லியன் செலவுக்கான மதிப்பீடு, நிர்மானப் பணிகளின் திட்டம் பிற்காலத்தில் திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக ரூபா. 55.60 மில்லியன் வரை அதன் செலவுகள் அதிகரித்துள்ளன. காலி முகத்திடலில்

அமைந்துள்ள இலங்கை பாதுகாப்பு படையின் தலைமைக் காரியாலய கட்டிடங்கள் அப் பிரதேசத்திலிருந்து அப்புறப்படுததப்பட்டு கொழும்பு நகரத்திலும் நெருக்கடியான பிரதேசங்களிலும் அமைந்துள்ள அரசாங்க மற்றும் தனியார் துறையினருக்கு சொந்தமான கட்டிடங்களில் 2011 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவருவதுடன் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிவரை கட்டிட வாடகையாக ரூபா. 1,566 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

## ஸ்ரீமத் ஜொன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள்.

ஸ்ரீமத் ஜொன் கொத்தலாவல அரசாங்க பாதுகாப்பு பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு 68 ஆம் இலக்க ஸ்ரீமத் ஜொன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவனச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க(திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. அச் சட்டங்களின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப் பாட நெறிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக. மருத்துவம், சட்டம், பொறியியல், போன்ற வேறு துறைகள் சம்பந்தமான பட்டங்களும் வழங்கப்பட்டுவருகின்ற போதிலும் அதற்கான அதிகாரம் வழங்கப்படும் விதத்தில் மேற்கூறப்பட்ட சட்டங்கள் திருத்தியமைக்கப்படவில்லை.

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முதல் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை 1,393 ஆக இருப்பதுடன் அதில் பாதுகாப்பு பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 112 பேர்களும், மதிப்பீட்டாணர்டினுள் தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழ்நுட்ப நிறுவனத்தின் (SAITAM) இணைக்கப்பட்ட 819 மானவர்களும் வெளிநாட்டு மாணவர்கள் 192 பேர்களும் உள்ளடங்குகின்றனர். மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களின் படி மருத்துவ பீடத்துக்கு உள்நாட்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு மருத்துவ பட்டம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத போதிலும் வெளிநாட்டு பிரஜைகள் என்ற ரீதியில் உள்வாங்கப்பட்ட 64 மாணவர்கள், வேறு நாடுகளின் இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து பெற்ற இலங்கை மாணவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பணம் அறவிடப்படுதலின் அடிப்படையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள மாணவ மாணவிகளை கவர்ந்திழுக்கும் வகையில் சந்தை போட்டி காணப்படுகின்ற போதிலும். பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் வருடத்துக்கான வியாபார அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி பாதுகாப்பு பல்கலைத்தினால் எதிர்கால சந்தை வாய்ப்பை வெற்றிகொள்ளும் சவால்கள் சம்பந்தமாக போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை என உறுப்படுத்தப்பட்டுள்ளது.

## மேன்மை தங்கிய ஜொன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை.

போதனா வைத்தயசாலையின் நடவடிக்கைச் செயற்பாடுகள் 2017 டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்டிருந்துடன் வைத்தியசாலை நடவடிக்கைகள், பூரண கொள்ளலவில் செயற்பட்டிருக்கவில்லை. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை நோயாளர்களின் கட்டில்களின் எண்ணிக்கை 433 ஆக இருந்த போதிலும், 2018 மார்ச் மாதம் முதல் டிசம்பர் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியனுள் தங்கியிரந்து சிகிச்கை பெறுவோர் 2012 நபர்களுக்கு மாத்திரமே சிகிச்சையளிக்கப் பட்டிருந்தது. அதன்படி அக்காலவரையறையில் சாதாரண கட்டில்கள் பயன்பாட்டு வீதாசாரம் ஒரு கட்டிலுக்கு 04 நோயாளர்கள் என்ற அளவில் இருந்தது. மேலும் செயற்படுத்தப்பட்டிருந்த வெளிநோயாளர்களுக்கான 16 மருத்துவப் பிரிவுகள் மூலம் 95820 நோயாளர்களுக்கு சிகிச்சைவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இயலுமாக இருந்தபோதிலும், 2018 டிசம்பர் 31 ஆம் திகதியது வரை 25,735 நோயாளர்கள் மாத்திரமெ சிகிச்சை பெற்றிருந்தனர்.

போதியளவு ஊழியர்கள் இல்லாததன் காரணமாக வைத்தியசாலையின் இயக்கச் செயற்பாடுகள் முழு வீச்சில் இயங்க முடியாமல் போயுள்ளது. போதனா வைத்தியசாலைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் முறையே 1380 உத்தியோகத்தர்களும், 516 ஊழியர்களுமாக இருந்தனர். 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஒப்பந்த அடிப்படையில்

ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இராணுவ சேவையில் இருந்து இணைந்துகொண்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக மொத்த ஊழியர்கள் முறையே உத்தியோகத்தர்கள் 437 பேர்களும், ஊழியர்கள் 284 பேர்களாகவும் இருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 85 உத்தியோகத்தர்கள் 2019 ஜூன் 30 ஆம் திகதி நிறைவடைகையில் சேவையிலிருந்து வெளியேறியுள்ளனர். ஊழியர் வெற்றிடங்களை திறப்புவதற்கு ஆட்சேர்ப்பு வழிமுறைகளை தயாரித்து ஒப்புதல் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக பூரண வசதிகளுடன் காணப்படும் போதனா வைத்தியசாலையின் நடவடிக்கைகள் ஊனமுற்று காணப்படுகின்றது.

போதனா வைத்தியசாலை நிர்மாணிப்பணிகளுக்கு திரைசேரி பிணை ஒப்பந்தமொன்றின் கீழ் வெளிநாட்டு நிதியாக அ.ஐ.நா. டொலர் 177.33 மில்லியன் மற்றும் உள்நாட்டு நிதி ரூபா. 3165.12 மில்லியன் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டது. 2018 செப்டெம்பர் 17 ஆம் திகதி இக்கடன் தொகை மீழ்கட்டமைப்பு செய்யப்பட்டிருந்தது. அதன்படி மொத்த கடன் தொகையில் ஐ.அ.டொலர் 82.33 மில்லியனுக்கு சமமான ரூபா. 12773.34 மில்லியன் உள்நாட்டு பணத்துக்கு பரிமாற்றப்பட்டிருந்ததுடன் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி திருப்பிச் செலுத்த வேண்டியிருந்த ரூபா. 717.92 மில்லியன் வட்டி மற்றும் அன்னியச் செலாவனி மாற்றத்தின்போது ஏற்பட்ட ரூபா. 617.47 மில்லியன் நட்டம் உள்நாட்டு கடன் தொகையுடன் சேர்க்கப்பட்டிருந்தது. இதன்படி 2018 டிசம்பர் 31 ஆம் திகதி திரைசேரிக்கு பல்கலைக்கழகத்தினால் 2023 ஆம் ஆண்டுமுதல் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்கிய மொத்த கடன் தொகை முறையே ஐ.அ. டொலர் 95 மில்லியன் மற்றும் ரூபா. 17274.55 மில்லியனாகவும் இருந்தது.

## ஆதன முகாமைத்துவம்

இலங்கை வான்படை பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு 2014 ஏப்ரல் 25 ஆம் திகதி விமானம் மூலம் சீனாவுக்கு அனுப்பிய ரெடார் ரிசீவர் மற்றும் அன்டென்னா ஸ்கேனர் ஒன்றையும் விமானம் மூலம் கொண்டுசெல்கையில் காணாமல் போன காரணத்தால் ரூபா. 74.46 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக முதற்கட்ட அறிக்கையொன்று 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதிலும் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிவரை எடுக்கப்படவில்லை.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் ரூபா. 74.76 மில்லியன் செலவில் புதிய தலைமையக கட்டிடம் பானந்துறை மோல்ப்பே பிரதேசத்தில் நிர்மானிக்கப் பட்டிருந்தது. அக் கட்டிடம் அமைந்துள்ள காணி 30 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புணிதஸ்தளம் ஒன்றுக்கு சொந்தமானதாகும், குறித்த புணிதஸ்தளத்துக்கு திருப்பிக்கிடைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் குறித்த குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.


| | |
|---|---|
| அரசாங்க தொழில் முயற்சிகள் | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 389 நிறுவனங்களில் 101 நிறுவனங்கள் நட்டமீட்டியிருந்தமை |
| | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 13 நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் மீது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தமை |
| | 2018 ஆம் ஆண்டிற்காக 59 நிறுவனங்களால் தமது நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமை |

# அரசாங்க தொழில் முயற்சிகள்

அரசாங்க தொழில் முயற்சிகள் என்பது தமது பெயரில் உடன்படிக்கை செய்வதற்கு அதிகாரமுள்ள, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் செயற்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள, இலாபமீட்டுதல் அல்லது கிரயத்தை ஈடுசெய்யும் விதத்தில் சாதாரண வணிகச் செயற்பாடுகளில் ஏனைய தரப்பினர்களிற்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்கின்ற மற்றும் அரசாங்கத் துறையிலுள்ள தரப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனமொன்றாகும் என அறிமுகப்படுத்தலாம். பயன்பாட்டுச் சேவைகளை வழங்குகின்ற வர்த்தக முயற்சிகளும் நிதி நிறுவனங்களும் பொது முயற்சிகளில் உள்ளடங்குகின்றன. சில அரசாங்க முயற்சிகள் சமூக சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புடன் குறித்த தரப்பினருக்கும் சமூகப் பிரிவினருக்கும் விலையினை அறவிடாது அல்லது குறிப்பிடத்தக்க குறைந்த கட்டணத்தின் கீழ் பொருட்கள் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் செயற்பட்ட போதிலும், சாதாரணமாக இலாபமீட்டும் செயற்பாடாகவே உள்ளது. அதற்கமைய, அவற்றின் சொத்துக்களின் மீது திரும்பலொன்றை உழைத்தல் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையாக உள்ளது. ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் மற்றும் கல்விசார் அரசாங்க முயற்சிகள் பாரம்பரியமாக வர்த்தகத் துறையில் உள்ளடங்குவதில்லை என்பதுடன், அந்த முயற்சிகள் இலாபமீட்டாத அமைப்புக்கள் எனக் கருதப்படுவதுடன், இலாபத்தன்மை நீங்கலான ஏனைய நியதிகளைப் பயன்படுத்தி அவற்றின் செயலாற்றல்களை பரீட்சித்தல் வேண்டும். பின்வரும் தலைப்புக்களின் கீழ் இலங்கையிலுள்ள அரசாங்க தொழில் முயற்சிகளை விரிவாக வகைப்படுத்த முடியும்.

- விசேடவகை வணிக முயற்சிகள்
- நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்கள்
- அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
- ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள்
- ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

மின்சாரம், நீர், பெற்றொலிய உற்பத்திகள், தொலைத் தொடர்பு மற்றும் விமான சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் பொது முயற்சிகளால் தந்திரோபாய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த உரிமைத்துவம் மற்றும் போட்டித்தன்மை என்பன தொடர்பில் சகல அரசாங்க தொழில் முயற்சிகளினதும் நிறுவன ரீதியான கட்டுப்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 344 அரசாங்க தொழில் முயற்சிகளின் மொத்த சொத்துக்களின் தொகுப்பு முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிட்டு உரு 36 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 36 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 இல் அரசாங்க தொழில் முயற்சிகளின் மொத்தச் சொத்துக்கள்

2018 ஆம் ஆண்டில் அரசாங்க தொழில் முயற்சிகளிற்கு ஏறத்தாழ ரூபா 28.6 பில்லியன் மீண்டெழும் செலிவனத்திற்கான அரசாங்க மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏறத்தாழ ரூபா 21 பில்லியன் மூலதன செலிவனத்திற்கான மானியங்கள் வழங்கப்பட்டிருந்தது. ரோத்த முன்னைய ஆண்டில் அவை முறையே ரூபா 55.4 பில்லியன் மற்றும் ரூபா 29.26 பில்லியனாகக் காணப்பட்டன. அதற்கமைய, அரசாங்க மானியங்கள் வழங்கப்படுவதில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## செயலாற்றல் மதிப்பீடு

அரசாங்க தொழில் முயற்சிகளின் கணக்காய்வு என்பது நிதிசார் மற்றும் இணங்கியொழுகுதல் கணக்காய்வுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதி என்பவற்றையும் கருத்திற் கொண்டதாகும்.

அரசாங்க தொழில் முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி மீதான கணக்காய்வு சில நியமங்கள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இலாபமே செயலாற்றலின் பிரதானமான பிரமாணம் அல்ல என்பதுடன் பொது நிதிகளின் சிக்கனமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு மற்றும் குறிக்கோள்களை அடைதல் என்பன மீது முகாமைத்துவத்தின் செயலாற்றல் மிக முக்கியமானதாகும். குறிக்கோள்களில் அரசாங்க தொழில் முயற்சிக்குப் தொழில் முயற்சி வேறுபடுகின்றது. எந்தக் குறிக்கோள்களிற்காக ஒரு அரசாங்க தொழில் முயற்சி நிறுவப்பட்டதோ அதன் அளவுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்க தொழில் முயற்சியின் நிதி மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செயற்படுத்தப்படுகின்றது. கணக்காய்வின் முதந்தர கடமைகளில் ஒன்று, ஒரு அரசாங்க தொழில் முயற்சியின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணத்தை இனங்காணுவதாகும். உதாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற உற்பத்தி முயற்சியின் விடயத்தில குறிக்கோள் மற்றும் முதலீட்டு இயலளவு, கிரயங்கள் மற்றும் காலப்பட்டியல்கள், நுகர்ச்சியின் சாதாரண அளவுகள், விளைவு, உற்பத்தித்திறன், கிரமான வருவாயின் வீதம் போன்றன செயலாற்றலை அளவிடுவதற்கான அளவுகோலாக காணப்படுகின்றன. அரசாங்க தொழில் முயற்சிகளிடமுள்ள நீண்டகால மற்றும் குறுங்கால மூலதனத்தினதும் செயற்பாட்டு திட்டங்களினதும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் ஏனைய முக்கியமான பண்புகளாகும்.

பௌதீக செயலாற்றலை மதிப்பாய்வு செய்கையில் பொருத்தமான சூழ்நிலையில் நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட இயலளவு ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலாக உள்ளது. எவ்வாறிருந்த போதிலும், தரப்படுத்தப்பட்ட இயலளவைப்

பயன்படுத்துவது, மூலப்பொருட்கள், மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், விளைவுகள் மற்றும் நிராகரித்தல் அதேபோல பேணுதல் என்பவற்றுக்கான பொருத்தமான பராமரிப்பு மற்றும் நுகர்ச்சியுடன் சேர்த்து மதிப்பிடப்படுகின்றது. செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு முக்கிய பயன்பாடு, நுகர்வுகள், உற்பத்தித் திறன், விளைவுகள் முதலியவற்றின் நியமான அளவின் அடைப்படையில் நியம அல்லது இலக்குக் கிரயத்தை தீர்மானிப்பதாகும். நிறுவனக் கட்டுப்பாடு, பொது முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், நிர்மாண முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக பொது முயற்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்கள் முயற்சியின் செயலாற்றல் மற்றும் முறைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு அடிப்படையை வழங்குகின்றது. உள்ளக மற்றும் புறநிலை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்நுட்பக் கற்கைகள் மற்றும் நியமங்கள் இந்த வழிகாட்டல்களிற்கு அடிப்படையிலமைந்த ஏனைய நியதிகளாக உள்ளன.

செயலாற்றல் கணக்காய்வு நடைமுறைத் தேவையாக உள்ளது. நிதிக் கணக்காய்வில் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்குகளின் சரியான தன்மை தொடர்பில் சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்தல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மூன்று காரணிகளிற்கும் மேலாக தற்போது சுற்றாடல் தாக்கம் தொடர்பாகவும் பரிசோதிக்கப்படுகின்றது. செயலாற்றல் கணக்காய்வுக்காக பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- பணப்பெறுமதிக் கணக்காய்வு
- முகாமைத்துவக் கணக்காய்வு
- செயற்பாட்டுக் கணக்காய்வு
- 3 “Es” கணக்காய்வு

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தற்கால கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக நிதிக் கணக்காய்விற்கு நிகரான இடமொன்று செயலாற்றல் கணக்காய்விற்கும் வழங்கப்பட்டு அதன் மூலம் அரசாங்க தொழில் முயற்சிகளிற்கு வழங்கப்படுகின்ற நிதிகளும் ஏனைய வளங்களும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

தற்போது சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ள மற்றும் பொது மக்களின் கவனம் திரும்பியுள்ள சர்ச்சைக்குரிய சில சம்பவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றினால் நாட்டிற்கும், பொதுமக்களிற்கும், சுற்றாடலுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் இதுவரை 26 செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாங்க தொழில் முயற்சிகளின் முகாமைத்துவம், அவற்றின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை முன்னேற்றுவதற்கு உதவுவதே அரசாங்க தொழில் முயற்சிக் கணக்காய்வின் முக்கியமான நோக்கமாகும். நிதி மற்றும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள், முறைமைகளின் போதாத தன்மை அல்லது வினைத்திறனின்மை, குறைவான செயலாற்றல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை, என்பவற்றை வெளிப்படுத்துவதன் மூலமும் செயலாற்றலின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களை அடைய முடியாமைக்குரிய காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் இது எய்தப்படுகின்றது. நிதிச் செயலாற்றல் பௌதீக செயலாற்றலுடன் சம்பந்தப்பட்டுள்ளதுடன் விளைத்திறன் மற்றும் சிக்கன செயற்பாடுகள் மற்றும் வளங்களின் முகாமைத்துவம் போன்ற விடயங்கள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் எனது உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்ட முறையான கூட்டங்களில் அவசியமாகவுள்ள முறைமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னேற்ற வேண்டிய தேவை குறித்து கலந்துரையாடப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாதகமான கண்டுபிடிப்புகளிற்கு அரசாங்க தொழில் அரசாங்க தொழில் முயற்சிகளின் முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்தல் முக்கியமானதாகும். ஒரு விடயத்திற்காக ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்ற

பாதகமான கண்டறிதல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றமையால் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அதிக சாத்தியத்தினைக் காண்பிக்கின்றது.

## நிதிச் செயலாற்றல்

கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் படி 389 பொது முயற்சிகளிற்குரிய தகவல்கள் கீழே அட்டவணை 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | நிறுவனத்தின் விபரம் | நிறுவன எண்ணிக்கை | நட்டத்தில் இயங்கிய நிறுவனங்கள் | இலாபத்தில் இயங்கிய நிறுவனங்கள் | தகவல்கள் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| (i) | ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் | 70 | 23 | 34 | 13 |
| (ii) | நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 54 | 04 | 22 | 28 |
| (iii) | ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள் | 29 | 10 | 18 | 01 |
| (iv) | விசேட வணிக முயற்சிகள் | 58 | 12 | 38 | 08 |
| (v) | பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவனங்கள் | 66 | 28 | 29 | 09 |
| (vi) | அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | 112 | 24 | 51 | 37 |
| | **மொத்தம்** | **389** | **101** | **192** | **96** |

அட்டவணை 13 - 389 பொது முயற்சிகள் தொடர்பான தகவல்கள்

மேற்படி தகவல்களின் படி, 2018 ஆம் ஆண்டில் 75 அரசாங்க தொழில் முயற்சிகளின் நிதி விளைவுகள் பற்றாக்குறையை காண்பிப்பதுடன், அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 135,821 மில்லியனாகும். குறிப்பிடத்தக்களவு நிதிப்பற்றாக்குறையுடைய நிறுவனங்களாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நெற் சந்தைப்படுத்தும் சபை மற்றும் 15 பல்கலைக்கழகங்கள் ஆகியன காணப்பட்டன. அத்துடன், 97 நிறுவனங்கள் ரூபா 237,487 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி மகையினை ஈட்டியிருந்தன.

## நிலைபேறான அபிவிருத்தி

இயற்கை வளங்களின் விரைவான நுகர்வானது எதிர்கால சந்ததியினர் வளங்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அளவிற்கு இட்டுச் செல்லுகின்றது. கழிவுகளானது வளங்களின் நுகர்வின் உப உற்பத்தியாக சுற்றாடலின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உருவாகின்றது. கட்டாய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடலின் நிலைபேறான தன்மை நிலைபேறான அபிவிருத்தி என்ற கருத்தில் மையப்படுத்தப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பரஸ்பர ரீதியில் இருக்க வேண்டும். என்பதுடன் அதற்காக முழு உலகமும் கவனஞ்செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

சுற்றாடல் அபிவிருத்தி மீது உலக அமைப்பால் குறிப்பிடப்பட்டவாறு அடிப்படை மனித தேவைகளை பூர்த்திசெய்தல், மனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், உற்பத்திதிறனை உயர்த்தல் நிலைபேறான அபிவிருத்தியின் முதல் தர நோக்கங்களாக உள்ளடக்கப்படுகின்றது. அதனால், நிலைபேறான அபிவிருத்தியின் எண்ணக்கருவானது எதிர்கால சந்ததியினர் அவர்களுடைய தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் சாத்தியங்களை பேணுவதோடு மனிதர்களால் உயிரிண பல்லினத்தை பயன்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளானது, 2030 ஆம் ஆண்டளவில் சமமான கால வரையறையை எடுத்து வருவதாக வித்தியாசமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் கால வரையறைகளின் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகளிற்கான எதிர்பார்ப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2015 செப்தெம்பரில் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய தேசத்தின் நிலைபேறான அபிவிருத்தி உச்சிமாநாட்டில் பங்கெடுத்த அரச தலைவர்கள் அதற்கான உடன்படிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சித்திட்டமானது இது தொடர்பில் அடிப்படையாகவிருந்ததுடன், இது மனித இரக்கம், உலக மற்றும் செழுமை போன்றவற்றை இலக்கிட்டு அனைத்து உறுப்பினர் நாடுகளால் அமுல்படுத்த வேண்டிய பொதுவான வெளிப்பாடாகவுள்ளது. ஐக்கிய நாடுகளின் உறுப்பினராகவுள்ள இலங்கையானது இந்த பொதுவாக வெளிப்பாட்டில் உறுதியாக இருந்தது. இதனால் 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் இந்த பொது வெளிப்பாட்டின் அமுலாக்கலின் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதற்கான செயல்முன்னேற்றம் போன்றவற்றை அடைந்து கொள்வதற்காக அரச நிறுவனங்களின் தயார்நிலை தொடர்பில் அரச கணக்காய்வுகள் மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்கையின் கவனமானது செலுத்தப்பட வேண்டுமென்பது விஷேட அவதானிப்பாக நிலைபேறான அபிவிருத்தி இனங்காணப்பட்டிருந்தது.

## நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

அரசாங்க தொழில் முயற்சிகளின் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக அரசாங்க தொழில் முயற்சிகளால் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றனவா என்பது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுதந்திரமான உறுதிப்படுத்தலை வழங்குகின்றார். நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வடிவில் இந்த உறுதிமொழி வழங்கப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிகளின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் என்பன நிதிக்கூற்றுக்கள் ஊடாக நியாயாபூர்வமாக பிரதிநிதித்துவப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது தற்போது சம்பந்தப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியாயங்களுடன் இணங்கியதாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது நிதி அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கிய வகையில் அவை உள்ளனவா அல்லது இல்லையா என்பதைபற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவு அபிப்பிராயத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது முகாமைத்துவத்திற்கும் கணக்காய்வாளருக்கும் இடையே எழுகின்ற இனக்கமிண்மைகளைக் கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன

### முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து வழங்கப்படுகின்றது.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (தவிர்த்த அபிப்பிராயம்)

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

### பாதகமான அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை

வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

### மறுப்பு அபிப்பிராயம்

தெரிவிசெய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புருடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டிற்காக 330 அரசாங்கத் தொழில் முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணை 14 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை | 2018 | 2017 |
|---|---|---|
| **முனைப்பழியற்ற** | 75 | 80 |
| **முனைப்பழியுள்ள** | 160 | 113 |
| **மறுப்பு** | 09 | 20 |
| **பாதகமான** | 13 | 06 |
| **இதுவரை தீர்மானிக்கப்படாதவை** | 73 | 228 |

அட்டவணை 14 – அரசாங்க தொழில் முயற்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்

## நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பேணுகை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எனப்படுவது உற்பத்தியின் போது அல்லது சேவை வழங்கலின் போது பயன்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாக நடவடிக்கைகளிற்காக வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்களாவதுடன் அச் சொத்துக்கள் ஒரு அறிக்கையிடல் காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கு பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான சொத்துக்களாகும். அத்துடன், நடைமுறைச் சொத்துக்கள் எனப்படுபவை செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாத காலத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்களாகும். சகல நிலையான சொத்துக்களிற்கும் திருத்தமாக இலக்கமிட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை உரியவாறு பேணாதிருப்பின் சொத்துக்களை சரிவர இனங்காண்பதற்கு முடியாது போவதுடன், அவை தொடர்பான பௌதீக மெய்மையாய்வும் தோல்வியில் முடியவடைகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையான சொத்து தொடர்பான விபரங்களை வைத்திருக்கும் நடைமுறையால் சொத்துக்களின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படுவதுடன் சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் நிறுவனத்திற்கு உதவியாக அமைகின்றது. பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்தல், குத்தகை மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளிற்காக வசதியளித்து சொத்துக்களின் சரியான பெறுமதியினை வைத்திருக்கும் செயற்பாடாகவும் உள்ளது. நிலையான சொத்துப் பதிவேடு

முகாமைத்துவத்தின் தேவைகளுக்கு உகந்த வகையில் சரியான பூரணமான மற்றும் விளக்கமான அறிக்கைகளை உருவாக்குகின்றது. கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு உரித்தாக அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக பேணப்படுவதற்கு போதியளவில் முறைப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனையும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படுவதனையும் உரிய பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்குகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும் அநேக நிறுவனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணாதிருப்பதுடன், நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினையும் மேற்கொள்ளாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

அநேக அரசாங்க தொழில் முயற்சிகளில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சொத்துக்கள் விளைவற்று வைக்கப்பட்டுள்ளதுடன் அச்சொத்துக்கள் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்க்கப்படாமை காரணமாக அப்பொருட்களும் சொத்துக்களும் விற்பனை செய்யப்படுவதன் மூலம் கிடைக்கக் கூடியதாகவுள்ள வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்ததுடன் அப்பொருட்களைப் பாதுகாப்பதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் மேலதிக கிரயம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2018 ஆம் ஆண்டிற்காக 330 பொது முயற்சிகள் தமது நிதிக்கூற்றுக்களை 2019 செப்தெம்பர் 30 அளவில் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தன. எனினும் 2018 திசெம்பர் 31 இல் நிதி ஆண்டு முடிவடைந்தது 09 மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட 59 நிறுவனங்களால் அந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்தால் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றால் பங்கு மூலதனத்தில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமைத்துவத்தைக் கொண்டுள்ள கம்பனிகளின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வேறு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கிடைக்கப்பெற்று மூன்று மாதத்திற்குள், அவற்றின் வருடாந்த அறிக்கைகளுடன் பிரசுரிப்பதற்காக அந்த கூட்டுத்தாபனத்திற்கு அல்லது கம்பனியின் ஆளுகைச் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## தொழில்சார் பதவியணியினரை சேர்த்தல் மற்றும் தக்க வைப்பதற்கான சுய அதிகாரமின்மை

வர்த்தக தீர்மானங்களை மேற்கொள்கையிலும் பயிற்சிபெற்ற பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்கையிலும் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு அங்கீகார தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளிற்கு பாதகமாக தாக்கம் செலுத்துகின்றன. இந்த வரையறைகள் காரணமாக அதிகமான முயற்சிகள் உயர்ந்த சம்பளங்ளுடன் ஒப்பந்த அடிப்படையில் உயர் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக விசேடமாக கணக்காளர்கள், பொறியியலாளர்கள் விலைமதிப்பீட்டாளர்கள் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் தொழில்சார் தகுதி வாய்ந்தவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

### அரசாங்கத்திற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்

அரசாங்க தொழில் முயற்சிகளாக அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சிலவும் நாட்டில் உள்ளன. அக் கம்பனிகளின் பங்குகளின் பெரும் பகுதி அரசாங்கத்திற்கு சொந்தமாக உள்ளது. இந்தக் கம்பனிகள் கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கம்பனிகள் சிலவேளை முற்றாக அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவோ அல்லது பொது தனியார் கூட்டுமுயற்சியாக செயற்படுகின்ற பங்குமூலதனத்தில் குறித்த சதவீதம் அரசாங்கத்திற்குச் சொந்தமாகக் கொண்டவையாகும். முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளில் பலவற்றைத் தவரிப்பதற்கு தனியார் துறையின் ஈடுபாடு கட்டுப்பாட்டுக் கருவியாக செயற்படுத்தப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் பங்குபற்றுதலின்றி குறித்த தனியார் முயற்சியினால் மூலதனம் ஈடுபடுத்தப்படுகின்ற துணைக் கம்பனி அல்லது உப கம்பனியாக பொது முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளும் காணப்படுகின்றன.

சில கம்பனிகள் பரிசீலனைக்காக அழைக்கப்பட்ட போது பொது முயற்சிகளின் குழு முன்னிலைகளில் தோன்றுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன. அரசாங்கத்தினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொதுவளங்கள் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்படுவதுடன் எழுத்து மூல அதிகாரச்சட்டத்தினாலோ அல்லது அதன் கீழோ நிறுவப்பட்ட எவையேனும் அல்லது அதிகாரசபையை உள்ளடக்குவதற்கு கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில் சில சமயங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறாமலும் கூட பொது முயற்சிகளால் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கூட்டிணைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பங்குகளில் 100 சதவீதம் அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு பொது முயற்சிக்கோ உடைமையாக உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு உள்ளதுடன் இலாபத்தில் பங்கு பெறுவதற்கு தனியாள் எவருக்கும் உரித்தில்லை. அது உண்மையில் அரசாங்க கூட்டுத்தாபனமொன்று என்ற வகையில் அரசாங்கத்தினால் பங்குகள் சாதாரணமாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் சாதாரண "தனியார் துறை" கம்பனியாக அதனை மாற்றுவதில், போதுமானதாக இருப்பதனை ஒத்திருக்கும். பங்குகளில் 50 சதவீதத்திலும் குறைவாக விற்பனை செய்கையில் கூட கம்பனியின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திடமே உள்ளது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகள் விற்பனை செய்யப்படுகையிலும் கூட அரசாங்க தாபனக் கொள்கைகளிற்கு செல்வாக்குச் செலுத்துவதற்கு போதுமானளவு அதிகாரம் உள்ளது. எனினும் அதிகளவான பொதுக் கூட்டுத்தாபனங்கள் துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையில் பெரும்பான்மையானோரை அதன் அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்குகின்ற போதிலும் அவற்றின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நிர்வாகத்திற்காக நடைமுறைப்படுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### ஏனைய இலாப நோக்கற்ற அரசாங்க தொழில் முயற்சிகள்

ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள், பல்கலைக்கழங்கள் ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இந்த முயற்சிகள் உள்ளன. இந்த நிறுவனங்களின் பிரதான வருமான மூலமாக இருப்பது வருடாந்த அரசாங்க மானியம் அல்லது சில பொருட்கள் மற்றும் சேவைகளில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரியாகும்.

| உள்ளுராட்சி | |
|---|---|
| | ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள் |
| | முறையற்ற விதத்தில் குப்பைகளை அகற்றுதல் |
| | சொத்துக்கள் கையேற்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தாமை |
| | நிலுவையிலுள்ள இறைவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை |
| | வாடகை உடன்படிக்கைகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக நிலுவையிலுள்ள குத்தகை வாடகையினை அறவிட முடியாதுள்ளமை |

# உள்ளூராட்சி



இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில் 24 மாநகர சபைகள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) ஏற்பாடுகளின் மூலமும், 41 நகர சபைகள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) ஏற்பாடுகளின் மூலமும், 276 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் மூலமும் ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதுடன் இந்த உள்ளூராட்சி மன்றங்களின் 2018 ஆம் ஆண்டின் கணக்குகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் மற்றும் அந்த கணக்குகள் தொடர்பான பொழிப்பொன்று அட்டவணை 15 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| உள்ளூராட்சி மன்றங்களின் வகை | கணக்குகள் சமர்ப்பிக்கவேண்டிய சபைகளின் எண்ணிக்கை | 2019.08.15 இல் கணக்குகள் சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை | கணக்காய்வு அறிக்கை விநியோகித்த சபைகளின் எண்ணிக்கை | 2019.08.15 இல் க விநியோகித்த அறிக்கைகளின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழிற்ற அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் |
| **மாநகர சபைகள்** | 24 | 24 | 24 | 22 | - | 01 | 01 |
| **நகர சபைகள்** | 41 | 40 | 40 | 40 | - | - | - |
| **பிரதேச சபைகள்** | 276 | 272 | 271 | 266 | 03 | 02 | - |
| **மொத்தம்** | 341 | 336 | 335 | 328 | 03 | 03 | 01 |

அட்டவணை:- 15 உள்ளூராட்சி மன்றங்களினால் கணக்குககள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் மற்றும் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம்.

மூலம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018

உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

- ஜா-எல பிரதேச சபையினால் குடஹகபொல பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய நிதிஏற்பாடு கிடைக்காமையினால் அத்திவாரத்தை மாத்திரம் இட்டு நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் ஒப்பந்தகாரரால் தமக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக வழக்கொன்று தொடரப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2.40 மில்லியன் நட்டமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்குரிய கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2019 திசெம்பர் 30 ஆந் திகதியளவில் அதன் அத்திவாரம் கழற்றப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.
- கட்டுநாயக்க, சீதுவ நகர சபையினால் 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நகரசபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 105 செயற்திட்ட தொழிலாளர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பணம் செலுத்தாமையின் காரணமாக அந்தக் கால எல்லையில் உரிய நிலுவை சேமலாப பங்களிப்பு நிதி மற்றும் மிகைக்கட்டணமாக ரூபா 12.22 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

- மினுவாங்கொட பிரதேச சபையினால் ஜாபாலவத்த கர்மாந்தபுறயில் இரும்பினால் கூரை செய்யும் மோட்டார் வாகனங்களை ஒன்றிணைக்கும் கைத்தொழிற்சாலையின் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக வியாபார நிறுவனத்தால் வழக்குச்சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் வேறு நீதிமன்றத்தால் திருத்தப்பட்ட மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடவேண்டிய நிலுவை ஆதன வரி ரூபா 557,600 தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 179(அ) பிரிவின் ஏற்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மாத்தளை மாநகர சபையின் நகர பிதாவின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக தனியார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வாகனமொன்று சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறுகை நடைமுறைகள் பூர்த்தி செய்வதற்கு முன் அந்த வாகனம் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனம் நகர பிதாவின் தனிப்பட்ட பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது, அந்த வாகனம் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 2018 யூன் மாதம் முதல் 2019 யூலை 11 ஆந் திகதி வரையிலான காலத்தில் ரூபா 1.69 மில்லியனை வாடகை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. 2019 யூலை 12 ஆந் திகதி முதல் 2019 செப்தெம்பர் 11 ஆந் திகதி வரை ரூபா 260,000 தொகை செலுத்த வேண்டியிருந்தது.
- காலி மாநகர சபை அதிகார பிரதேசத்தில் பூகோள தகவல் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2013 யூலை 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 2.03 மில்லியன் தொகை செலவிடப்பட்ட போதிலும் செயற்திட்டத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை.
- மாத்தறை மாநகர சபையினால் 2015 ஆம் ஆண்டு முதல் 04 வருட காலத்தில் மீள்சுழற்சி செய்யமுடியுமான உக்கும் கழிவுகள் 30,275 டெக்ரர் லோட் மற்றும் மீள்சுழற்சி செய்யப்பட முடியாத கழிவுப் பொருட்கள் 1,661 டெக்ரர் லோட் என்பன வீணாகவும் முறையற்றதாகவும் கொட்டவில கழிவுப்பொருள் தளத்தில் போடப்பட்டிருந்தமையினால் கழிவுப்பொருள் மலையொன்று உருவாகியிருந்தது. இந்த கழிவுப்பொருள் மலையை மட்டப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஒக்டோபர் மாதம் வரை சபையின் பெகோ இயந்திர மணி 2,703 ஈடுபடுத்துவதற்காக எரிபொருள் செலவினமாக ரூபா 1.31 மில்லியன் தொகையும், தனியார் பெகோ இயந்திரத்திற்காக ரூபா 2.63 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. முறையற்ற வகையில் கழிவுப்பொருட்கள் போடப்பட்டமையினால் பொதுமக்களின் எதிர்ப்பும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தன.
- மாத்தறை மாநகர சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2.68 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 10 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்யும் போது உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமை காரணமாக ரூபா 1.61 மில்லியன் பெறுமதியான 6 மோட்டார் சைக்கிள்கள் உதிரிப்பாகம்

இல்லாமையினால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்து.

- ஹக்மன பிரதேச சபையினால் முன்னைய ஆண்டின் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் குறுந்து பியச நீர் செயற்திட்டத்திலிருந்து நீரை வழங்குவதற்காக 02 குழாய் கிணறுகள் நிர்மாணிப்பதற்கு ரூபா 1.59 மில்லியன் தொகை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. நீர் மூலங்களை கண்டறியாமை காரணமாக மீளாய்வாண்டு வரையிலும் உரிய பணிகள் நிறைவேற்றப்படவில்லை.
- பஸ்கொட பிரதேச சபையினால் முன்னைய ஆண்டின் போது நடமாடும் நூலகமொன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 2.17 மில்லியன் செலவில் டாட்டா சுப்பர் டெக்ரர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வாகனம் உரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படவில்லை.
- திஸ்ஸமஹாராம பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 5.81 மில்லியன் கிரயமான பேக்கோலோடர் இயந்திரம் 7 வருட காலம் முழுவதும் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் வகையில் தனியார் கராஜில் துருப்பிடித்துக் காணப்பட்டது.
- மஹாவ பிரதேச சபைக்கு 2016 செப்தெம்பர் மாதத்தின் போது பொதுச் சந்தை தொகுதி பெறப்பட்டிருந்தது. அந்த சந்தைத் தொகுதியின் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக வாடகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வாடகையாளருக்கு 2018 செப்தெம்பர் மாதத்தின் போது திறப்புக்கள் கையளிக்கப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் மாதம் வரையில் மின்சாரம் பெறப்படாமை மற்றும் கதவுகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக வாடகை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. இதனால் ஆகக் குறைந்தது ரூபா 3.28 மில்லியன் வருமானமொன்றை சபை இழந்திருந்தது.
- தாபனகோவையின் IX ஆவது அத்தியாயத்தின் முதலாவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1990 யூன் 05 ஆந் திகதிய மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3(ஆ) பந்தியின் பிரகாரம் மாகாண சபையின் பதவியணியினருக்கு படிகள் செலுத்துவதற்காக ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது. குருநாகல் பிரதேச சபையினால் அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சபை நிதியத்திற்கு கிடைத்த நிர்வாக செலவீனத்தில் ரூபா 2.39 மில்லியன் தொகை ஆளுநரின் அங்கீகாரமின்றி சபையின் சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.
- இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான மேல் உயிரியல் பல்வகைமையுடைய மற்றும் இயற்கையான நீர் ஊற்றைக் கொண்ட இயற்கையான தடாகமொன்றையுடைய பொம்பகெலய நகர வனப்பூங்கா போதியளவான பிரகாரம் பராமரிக்கப்படவில்லை. இதன் காரணமாக தற்பொழுது வரையில் நீர் ஊற்று செயல் இழந்து நீர்த்தடாகம் அசுத்தமாகி எந்தவொருவரும் பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. ஆரம்பத்தின் போது 56 ஏக்கர் அளவிலான நிலவளவைக் கொண்ட இந்த வனப்பூங்கா அனுமதியற்ற நிர்மாணங்கள், அனர்த்தங்களுக்கு உட்பட்டவர்களை குடியமர்த்துதல் மற்றும் விசல் நீர்த்திட்டத்திற்காக இட வசதி வழங்கப்பட்டமையினால் தற்போது வரையில் 35 ஏக்கர் அளவில் வரையறுக்கப்படபட்டிருந்தது. வனப்பூங்காவைப் பாதுகாப்பதற்காக 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த முன்மொழிவுகள் எதுவும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும்

அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது,

- இரத்தினபுரி மாநகர சபைக்குரிய நகரத்தின் மத்திக்கு அண்மையில் உயர் வணிகப் பெறுமதியுடைய 05 ஏக்கர் நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், இரண்டு டெனிஸ் விளையாட்டு மைதானங்கள் மற்றும் பட்மிட்டன் விளையாட்டு மைதானங்கள் என்பன முறையான மதிப்பீட்டின்றி ரூபா 350 வருடாந்த வாடகைக்கு 33 வருட காலத்திற்காக 2000 நவம்பர் மாதத்தின் போது இரத்தினபுரி சட்டத்தரணிகள் சங்கத்திற்கு நீண்டகால வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் 18 வருடங்கள் கடந்திருந்த போதிலும் வாடகை திருத்தப்படாதிருந்ததுடன் வாடகையாக எந்த ஒரு தொகையும் சபைக்கு அறவிடப்படவில்லை.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் வரி ஏற்பாட்டின் அடிப்படையில் எம்பிலிபிட்டிய பிரதேச சபையினால் ரூபா 1.92 மில்லியன் செலவில் துங்கம பாடசாலை நுழைவு வீதி 264.4 சதுர மீற்றருக்கு கொங்ரீட் இடப்பட்டிருந்தது. அதில் 195 மீற்றர் அளவில் சீமெந்து கழன்று கருங்கற்களின் படை கலன்றும் இருந்தது. அதன் பிரகாரம் இந்த பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.
- பலாங்கொடை நகர சபைக்குரிய பலாங்கொடை விருந்தினர் விடுதியில் விற்பனை செய்வதற்காக 2016 மே 21 ஆந் திகதி வெசாக் பூற பசலொஸ்வக போயா தினத்தின் போது உள்நாட்டு குடிபானங்கள் 163,110 மில்லி லீற்றர் அனுமதி பத்திர நிபந்தனைகளுக்கு முரணாக வைக்கப்பட்டதன் அடிப்படையில் இரத்தினபுரி உதவி மது வரி ஆணையாளரால் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்ட ரூபா 1.52 மில்லியன் தண்டப் பணத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடும் அடிப்படையில் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. தண்டப் பணத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்காக பிரதிவாதிகள் மூவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட போதும் உதவி மதுவரி ஆணையாளரின் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட வெசாக் மாதத்தில் பூற பசலொஸ்வக போயா தினத்தின் போத மதுபானங்கள் விற்பனை செய்தல் என்ற குற்றத்தையும் உள்ளடக்கி ஏனைய குற்றங்களையும் வழக்கில் குற்றமாக உள்ளடக்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
- கொழும்பு மாநகர சபையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,203.55 மில்லியன் தொகையான ஆதன வரி நிலுவை காணப்பட்டது. ஆதில் ரூபா 500,000 தொகையை விஞ்சிய 753 ஆதனங்களுக்குரிய நிலுவை ஆதன வரிப்பெறுமதி ரூபா 1,507.22 மில்லியன் ஆக காணப்பட்டது. அது மொத்த நிலுவையாக இருந்த ஆதன வரி அளவில் 47 சதவீதம் ஆகும் . அவ்வாறே ரூபா 10.00 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட ஆதனவரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன் அதில் 19 பேர்களினால் ரூபா 349.50 மில்லியன் தொகையான ஆதனவரி நிலுவையாக இருந்தும் அதில் எந்த ஒரு தொகையும் அவர்களினால் செலுத்தப்படவில்லை.
- கொழும்பு மாநகர சபையினால் 2016 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையில் ரூபா 200.86 மில்லியன் செலவில் கொழும்பு 12 இல் பெரடைஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள லொன்டறி நிலத்தில் 64 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்பாளருக்கும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடற்ற மக்களுக்கும் அந்த வீடுகளை வழங்குவதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகர சபையினால் கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் இலக்கம் 4/89 என்ற நில வரைபடத்தில் 01 றூட் 4.1 பேர்ச் அளவான காணியை வாகன தரிப்பிடமாக பயன்படுத்துவதற்காக கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த உடன்படிக்கையில் உள்ள குறைபாடுகளை காரணமாக கொண்டு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த ஆதனத்தில் நிலுவை வாடகை ரூபா 5.12 மில்லியனாக இருந்தததுடன் அந்த வாடகைப் பணத்தை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

- அநுராதபுரம் மாநகர சபையின் நிரந்தரம் மற்றும் அமைய ஊழியர்கள் 532 பேர்களை உள்ளடக்கிய பதவியணியினரின் சம்பளத்தை தயாரிப்பதற்காக அரசாங்க சம்பளம் தயாரித்தல் முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த முறைமை அமுல்ப்படுத்தும் போது தரவுத் தொகுதி முறையாக நிர்வகிக்கப்படாமை, நபரின் பெயர், அடிப்படைச் சம்பளத்தை உள்ளடக்குவதில் உள்ள கட்டுப்பாடுகள் காணப்படாமை, உழைத்தல்களுக்கான அதிகாரம் காணப்படாமை மற்றும் பாதுகாப்பின்மை, சரியான உள்ளக பரிசோதனை மேற்கொள்ளப்படாமை, ஆளணி சம்பளப் பதிவேட்டில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பதிவேடு மற்றும் அரசாங்க சேவை சேமலாப நிதிய பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை என்பவற்றினால் ரூபா 40.85 மில்லியன் சம்பள மோசடி இடம் பெற்றிருந்தது.
- அநுராதபுரம் மாநகர சபையில் சேவையாற்றிய அலுவலக உதவியாளர் ஒருவர் 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதி முதல் மாகாண பொறியியல் திணைக்களத்திற்கு இடம் மாற்றலாகி சென்றிருந்தார். அந்த இடமாற்றம் சம்பள பதிவேட்டில் குறிப்பிடப்படாமையால் 2013 செப்டெம்பர் மாதம் முதல் 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்குரியதாக ரூபா 1.82 மில்லியன் தொகை மாநகர சபையினால் சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.
- மஹியங்கனை பிரதேச சபையினால் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் தேசிய கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 13.66 மில்லியன் செலவில் கழிவுப் பொருள் மீள் சுழற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 18,846 செலவில் மின் இணைப்பு பெறப்பட்டிருந்தது. எனினும், 2018 திசெம்பர் 31 திகதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- பதுளை மாநகர சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 73.40 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாகனங்களை நிறுத்தி வைக்கும் தரிப்பிடத்தை முகாமைத்துவம் செய்வதற்காக 09 ஊழியர்களை ஈடுபடுத்தி கணனி செயற்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நாளொன்றிற்கு 170 மோட்டார் வாகனங்கள் தரித்து வைக்கக்கூடியதாக இருந்த போதிலும் தற்போது 10 – 15 வாகனங்களுக்கிடையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்தம் ரூபா 58,000 தொகையான வருமானமொன்று பெறப்பட்டிருந்தது. நகரத்தில் பல்வேறு இடங்களில் முறையற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களை இந்த இடத்திற்கு அனுப்புவதற்கான வேலைத் திட்டமொன்று சபையினால் அமுல்படுத்தப்படாமையினால் வாகன தரிப்பிடத்தை முழுமையான இயலளவில் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.
- படல்கும்புற பிரதேச சபையில் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ஹிங்குறுகடுவ உப அலுவலகத்திற்காக ரூபா 29.25 மில்லியன் செலவில் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 2017 யூன் மாதத்தின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அந்த உப அலுவலகம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூபா 1.48 மில்லியன் பெறுமதியான தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பயனற்றதாகக் காணப்பட்டன.

- கிரிபாவ பிரதேச சபைக்குரிய மாதாந்த கடை வாடகை ரூபா 200 வீதமான ஹத்ரி குச்சியில் அமைந்துள்ள 07 கடைகள் வாடகை செலுத்துபவர்கள் சபைக்கு அறிவிக்காமல் அந்தக் கடைகளை ரூபா 2.00 மில்லியனுக்கு வேறுதரப்பினர்களுக்கு விற்பனை செய்திருந்தனர்.

| | |
|---|---|
| வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் | பூரணப்படுத்திய வேலைகளிற்கான ஒப்பந்த காரர்களின் பட்டியல்களை தீர்ப்பதற்கு தவறியமை |
| | பாடசாலைகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விஞ்ஞான உபகரணங்கள் தரத்தில் குறைவாக காணப்பட்டமையால் அவை பயன்படுத்தப்பட்டிருக்காமை |
| | வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்களிற்குரிய 18 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை |


# வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் படி, மதிப்பீட்டாண்டில் மொத்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையான ரூபா. 761 பில்லியனை ஈடு செய்வதற்கு அரச உள்நாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூ. 437 பில்லியன்களையும் வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூ. 324 பில்லியன்களையும் பெற்றிருந்தது. முன்னைய ஆண்டில் வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்ட ரூ. 439 பில்லியன் தேறிய வெளிநாட்டு படுகடன் அளவுடன் ஒப்பிடுகையில் மதிப்பீட்டாண்டின் வெளிநாட்டு படுகடன் வீதம் நூற்றுக்கு 26 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர்களுடனும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடனும் 39 புதிய வெளிநாட்டு நிதியுதவி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் எதிர்வரும் வருடங்களில், ஐ.அ.டொலர். 1,241.6 மில்லியன்கள் பெறப்படவுள்ளது. 25 படுகடன் ஒப்பந்தங்கள் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட ஐ.அ.டொலர். 1,108.7 மில்லியன்கள் மற்றும் 25 பிரதான உதவி ஒப்பந்தங்கள் மூலம் எதிர்வரும் வருடங்களில் கிடைக்கவிருக்கும் ஐ.அ.டொலர். 132.9 மில்லியன்களையும் அது உள்ளடக்கியுள்ளது. இப்படுகடன் மற்றும் உதவித் தொகைகள் பிரதானமாக கல்வி மற்றும் பயிற்சிவழங்கல்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலம்பேண் வசதிகள், சமூக அடிப்படை வசதிகள் ஆகிய பிரிவுகளுக்குப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு கருத்திட்டங்களின் நிதி அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல்.

மதிப்பீட்டாண்டு முடிவடைகையில் 164 வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்கள் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன், அவற்றில் 146 வெளிநாட்டு கருத்திட்டங்களின் நிதி அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் இந்தியக்கடன் அமைப்பு, சீன அரசாங்கத்தின் உதவிகள் மற்றும் ஏனைய இருதரப்பு ஒப்பந்த கடன் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் குறித்த கடன் ஒப்பந்தங்களில், வருடாந்த நிதி அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதியின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாய விதிமுறை உள்ளடக்கப்படாத காரணத்தால் அக்கருத்திட்டங்களின் நிதி அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அபிவிருத்தித் தரப்பினர் மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு கருத்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் உருப்படம் 37 இல் காட்டப்பட்டுள்ளது.




உருப்படம் 37- வெளிநாட்டு கருத்திட்டங்களின் நிதி அறிக்கை சமர்ப்பித்தல்.

## வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்

### ○ மின்வலுப் பிரிவு

இலங்கை மின்சார சபையின் திறன்களை விருத்தி செய்வதற்கு மதிப்பீட்டாண்டினுல் 11 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் பௌதீக வளர்ச்சி வேகம் மந்தகதியில் உள்ளது. அக் கருத்திட்டங்களை இயங்கச் செய்வதற்கு கருத்திட்டங்களை செயற்படுத்தும் தனியான மையமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இலங்கை மின்சார சபை மற்றும் சுனித்ய மின்வலு அதிகார சபை பல்வேறு பிரிவுகளினூடாக குறித்த கருத்திட்டங்களின் கூறுகளை தனித்தனியாக இயக்கியிருந்தது. அப்பிரிவுகளுக்கிடையே முறையான ஒன்றிணைப்பு காணப்படாமையால் கருத்திட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஆலைகள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான விவரங்கள் தொடர்பில் வெவ்வேறான பதிவுகள் பேணப்படாத காரணத்தால் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிச் செயற்றிறன்கள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வது கடினமாக இருந்தது. வெளிநாட்டு உதவித்திட்டங்கள் மூலம் மின்வலுத்துறையில் முதலீடு செய்திருந்த வெளிநாட்டுக்கடன்களை பயன்படுத்துவதை திறன்படச் செய்வதற்கு மேற்படி கருத்திட்டங்களை வழிநடாத்த பின்பற்றப்பட்ட செயல்முறைகளை மீள் மதிப்பீடு செய்து மாற்றியமைப்பது அத்தியவசிய விடயமாக இருந்தது. மேலும் இலங்கை மின்சார சபையால் செயற்படுத்தப்பட்டிருந்த மீளுருவாக்க மின் வலு உள்ளீர்ப்புகளை அபிவிருத்தி செய்வதற்கான வெளிநாட்டு நிதி உதவிக் கருத்திட்டங்களின் விடயப்பொருள் பிற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளமை மற்றும் ஒப்பந்தங்களை செயற்படுத்தும்போது ஏற்பட்டுள்ள தாமதங்கள் போன்ற விடயங்களால் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும்போது அக் கருத்திட்டங்களின் பௌதீக வளர்ச்சிகள் பின்தங்கியுள்ளன.

### ○ வீதிப் பிரிவு

மதிப்பீட்டாண்டினுள் நெடுஞ்சாலைகள் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பெரும்பாலான கருத்திட்டங்களில் பௌதீக செயற்றிறன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்திருக்கவில்லை என தெரியவந்துள்ளது. அவற்றுக்கான ஒப்பந்தங்களில் காணப்பட்ட பலவீனங்கள், அதேபோல் முடிவுறுத்தப்பட்ட வேலைகளுக்கு ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியல்களுக்கு துரிதமாக பணம் செலுத்தவதற்கு நேரியல் அமைச்சு தவறியுள்ளமையும் காரணமாக அமைந்துள்ளது.

கிராமப்புற வீதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு, 2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த ஒன்றிணைந்த சாலை முதலீட்டு செயற்திட்டத்தின் கீழ் தெற்கு, மத்திய, சபரகமுவ, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் தேசிய மட்டத்தில் 285 கிலோமீட்டர்கள் மற்றும் மாகாண மட்டங்களில் 3038 கிலோமீட்டர்கள் பெருந்தெருக்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று வரை தேசிய சாலை வலையமைப்பில் 25 கிலோமீட்டர்களும் மாகாணசபை வலையமைப்பில் 668 கிலோமீட்டர்களும் மாத்திரமே புனர் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்தின் இரண்டாம்கட்ட வேலைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் கீழ் வடக்கு ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் தேசிய சாலை வலையமைப்பை 400 கிலோமீட்டர்கள் மற்றும் மாகாணசபை வலையமைப்பில் 3750 கிலோமீட்டர்களையும் புனர்நிர்மாணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2018 டிசம்பர் 31 திகதியாகும்போது, குறித்த வழங்கல் நடவடிக்கைகள் நடவடிக்கைகள் துவக்கமட்டத்தில் இருந்தன. புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஆரம்ப கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமிய பாதைகள் பின்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளமை, ஒப்பந்ததாரர்களின் தாமதமான பணிகள், ஆகியவை காரணமாக இக் கருத்திட்டத்தின் கீழ் உள்ள பாதைகளின் புனர்நிர்மாணப்பணிகள் மந்த கதியில் நடைபெறுகின்றன.

### ○ நீர் வழங்கல் பிரிவு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் வெளிநாட்டுதவி கருத்திட்டங்களின் பௌதீக

வளர்ச்சி திருப்திகரமானதாக இல்லையென்பது ஒரு பொது இலட்சணமாகவுள்ளது. திட்டமிடப்பட்ட பின் திட்டங்களை மாற்றியமைப்பது, நீர்க்குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் காலதாமதங்கள் மற்றும் பெருந்தெருக்கல் மற்றும் வேறு வலையமைப்புக்களின் பாவனைக்கும வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகான சபைகளால் பெறப்படவேண்டிய ஒப்பந்தங்களின் தாமதங்கள் காரணமாகவும் பெரும்பாலான கருத்திட்டங்கள் வரையறுக்கப்பட்ட கால எல்லையில் முடிவுறுத்துவதற்கு இயலாமல் போயுள்ளது.

யாழ்பாண தீப கற்பத்தின் மக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் நடவடிக்கைகலுக்காக செயட்படுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வினியோகம் மற்றும் சுகாதார சேவை கருத்திட்டங்களினூடாக இரண்டு நீர்த்தேக்கங்கள் நீர் வள மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும், அப் பிரதேச மக்களின் எதிர்ப்பு காரணமாக கருத்திட்ட வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன. ஏவ்வாறெனினும் பிற்காலத்தில் கடல்நீரை சுத்திகரித்து குடிநீராக மாற்ற நீர் வள மூலமாகப் பயன்படுத்தும் வகையில் கருத்திட்டத்தின் விடயப்பொருள் திருத்தப்பட்டிருந்தது. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 2 புதிய கடன் ஒப்பந்தங்களின் கீழ் நிதியைப் பெற்றுக்கொள்ள உடன்பட்டிருந்ததுடன், அதன்படி கருத்திட்டச் செலவுகள் ஐ.அ.டொ. 120 மில்லியன்களால் அதிகரித்திருந்தது. எவ்வாரெனினும் கடல் நீர் மாற்றியமைப்பு சவ்வூடுபரவல் வலு நிலையத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படாத காரணத்தால் மதிப்பீட்டாண்டு முடிவின்போது பணி நிறைவு செய்யப்பட்ட 15 நீர்க் கோபுரங்கள் மற்றும் நீர் வினியோக குழாய்கள் செயலற்றுக் காணப்படுகின்றன.

## நகர அபிவிருத்திப்பிரிவு

நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கெழும்பு நகர எல்லையை அன்மித்த பகுதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் மற்றும் மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டம் அகியவற்றின் பணிகள் அரசியல் ரீதியான கொள்கை மாற்றங்கள் காரணமாக வெளிப்படையான மந்த நிலையை அடைந்துள்ளது. இதன் காரணமாக குறித்த கருத்திட்டங்ளுக்கு மேலதிக செலவுகளை ஏற்க வேண்டி ஏற்பட்டுள்ளதுடன் கருத்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் நகரமக்களைச் சென்றடையவில்லை. கொழும்பு மா நகர எல்லைகளிலும் நெருக்கமாக மக்கள் வாழும் பிரதேசங்களிலும், நகர வசதிகளை மேம்படுத்துவதற்காக செயற்றத்தப்பட்ட கொழும்பு நகர எல்லைப்பகுதிகளையும் அபிவிருத்தி செய்யும் கருத்திட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஐ.அ.டொ. 213 மில்லியனுக்குச் சமமான ரூ. 27,980 மில்லியன் தொகையில் 2018 டிசம்பர் 31ஆம் திகதியன்று ஐ.அ.டொ. 103.66 மில்லியனுக்குச் சமமான ரூ. 14,890 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாகத்தின் வெள்ளபட பெருக்கைக் கட்டப்படுத்துவதற்கு, கட்டப்படவிருந்த சாந்த செபஸ்தியன் கால்வாய் மற்றும் கொளன்னாவை கால்வாயிை அபிவிருத்தி செய்தல், தளங்கம மற்றும் பௌத்தாலோக்க மாவத்த பிரதேசத்தின் நீர் கட்டுப்பாட்டுக் கதவை அமைத்தல், மோதர டொரினங்டன் பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள நிலக்கீழ் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகளும் மந்தகதியில் செயற்பட்டு வருகின்றன.

## ○ கல்வி மற்றும் பயிற்றுவிப்பு பிரிவு

இலங்கையின் ஆரம்ப கல்விப் பிரிவு, இடைநிலைக் கல்விப் பிரிவு, தொழிநுட்ப கல்விப் பிரிவு ஆகியவற்றின் விருத்திக்கு பல கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் பாடசாலைக் கல்விசார் வலையமைப்பு ஆகியன கல்வி அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் கருத்திட்டமொன்றின் கீழ் மூன்றாம்நிலை பாடத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படும்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எவ்வாரெனினும் மாகான மட்ட பாடசாலை உபகரணங்களைப் பவகிரந்தளிப்பதற்கான வேலைத்திட்டங்கள் உறுவதி வாய்ந்தனவாக காணப்படாததன் காரணமாக அவ் உபகரணங்கள் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றிருந்த சில உபகணைங்கள், ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட இடவசதி போதுமான அளவில் காணப்படாமை போன்ற

பிற காரணங்களாலும் மாகானப்பாவனைக்கு எடுக்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. 45 சபரகமுவ பாடசாலைகளுக்கப் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.1.307 மில்லியன் பெறுமதி வாய்ந்த விஞ்ஞான உபகரணங்கள் தரம் குறைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக பாவணைக்கு எடுக்கப்படாத சந்தர்ப்பங்களும், மாகான ஆங்கிலக்கல்வி உபகரண நிலையங்களுக்காக ரூ. 24.90 மில்லியன் பெறுமதிவாய்ந்த கணனிகள் குறித்த வினியோகஸ்தரால் குறித்த காலவரையரைக்குள் பகிர்ந்தளிக்கப்படாத சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் இலங்கைப் பாடசாலைத் தொகுதியினுள் விசேட தேவையுடைய 10,284 மாணவரகள் காணப்படுவதுடன் அவர்களுக்கு 112 தேசியப் பாடசாலைகளில் மற்றும் 704 மாகாணப் பாடசாலைகளிலும் 112 கல்வி அலகுகள் நிறுவப்பட்டிருந்தன. எனினும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கென பயிற்றப்பட்ட 597 ஆசிரிய வெற்றிடங்கள் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் காணப்பட்டதுடன் 158 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வேறு பாடங்களைப் போதிப்பதற்கு இணைக்கப்பட்டிருந்ததையும் கண்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இப் பயிற்சிகளை முடித்த 189 ஆசிரியர்களை விசேட கற்பித்தல் பிரிவுகள் அமைக்கப்படாத பாடசாலைகளுக்கு இணைத்துள்ளனர்.

## பொதுவான அவதானிப்புக்கள்

வெளிநாட்டு நிதி உதவிக் கருத்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வினைத்திறனான முறையில் நிறைவேற்றப்படுவதற்கு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் பிரிவுகளின் பிரதான முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம் தொடர்ச்சியாக நிலவி வருவதானது பிரதான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கணக்காய்வுகளிலிருந்து தெளிவாகியுள்ளது. விவசாயத் துறையை நவீனமயப்படுத்தவதற்கான கருத்திட்டம், மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம், கொழும்பு பெருநகர நீர் வழங்கல் மற்றும் வடிகால் நீர் முகாமைத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்கள் மற்றும் கிராமிய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்களின் கருத்திட்ட பணிப்பாளர்கள், சூழல் அதிகாரிகள், காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தேர்ச்சியாக வெற்றிடமாக காணப்படுகின்ற காரணத்தால் அக் கருத்திட்டங்களின் செயல்திறன்கள் நலிவடைந்துள்ளது.

வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களில் செயலாற்றுகைக் கால வரையறை முடிவடைந்த பின்னரும், சில கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளினால் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் எண்ணத்தினை அடிப்படையாகக் கொண்டு நிதி அறிக்கைகள் சமர்ப்பித்திருப்பதை கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது. நிதி மற்றும் ஊடக அமைச்சினால் கருத்திட்டத்தின் கடைசி நிதியாண்டில் நிதியறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய முறை பற்றி தகுந்த அறிவுறுத்தல்கள் செய்யப்படாததன் காரணமாக இந்நிலை எழுந்துள்ளது. மேலும், விசேட நிதியை உபயோகித்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், ஆலை, உபகரணங்கள் ஆகிய சொத்துக்கள் கருத்திட்டத்தின் செயற்பாட்டுக் காலம் முடிவடைந்ததன் பின்பும் குறித்த நடைமுறைப்படுத்தலை மேற்கொண்ட நிறுவனத்திடம் திருப்பிக் ஒப்படைக்கப்பட்டதன் பின் அவை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தபட்டது என உறுதிசெய்யும் வகையில் நிரல் அமைச்சினால் இவை மீள் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை என்பது பிரதான குறைபாடாகும்.

| | |
|---|---|
| வங்கித்துறை அலுவல்கள் | இலங்கை வங்கியின் செயற்பாடற்ற கடன் மற்றும் முற்பண மீதிகள் உயர்வடைதல். அது 2.9 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதம் வரை உயர்வடைந்துள்ளமை. |
| | தேசிய சேமிப்பு வங்கியின் சந்தைப் பங்கு 13.7 சதவீதத்திலிருந்து 9.9 சதவீதம் வரை குறைவடைந்துள்ளமை |
| | தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து மோசடியாக பணத்தை மீளெடுத்தல் அதிகரித்துள்ளமை |
| | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் ஊழியர்களால் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினை வங்கிகள் செலுத்துதல் |

# வங்கித் துறை


வங்கித்துறை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (LCBs) மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் (LSBs) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கித் துறையில் 26 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 உரிமம் பெற்ற விசேட வங்கிகளும் காணப்பட்டன. மொத்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையே 13 வெளிநாட்டு வங்கிகளும் காணப்பட்டன. வங்கிச் சேவைகளை முன்னேற்றுதல் மற்றும் நாடு முழுவதற்கும் தமது வலைப்பின்னலையும் நுழைவினையும் விரிவுபடுத்துவதன் மூலம் வங்கித் துறையினால் தொடர்ச்சியான பொருளாதாரச் செயற்பாடுகளிற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் புதிதாக 34 கிளைகள் திறக்கப்பட்டிருந்ததுடன் 801 தன்னியக்க ரெலர் இயந்திரங்களும் தாபிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகளினதும் கிளைகளினதும் பரம்பல் அட்டவணை 16 இல் பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | | வங்கி கள் | கிளை கள் | மாணவர் சேமிப்பு அலகுகள் | தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் |
|---|---|---|---|---|---|
| LCBs | உள்நாட்டு வங்கிகள் | 13 | 2876 | 3309 | 4655 |
| | வெளிநாட்டு வங்கிகள் | 13 | 51 | | |
| LCBs | தேசிய மட்டத்திலான பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 1 | 261 | | |
| | வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 64 | | 376 |
| | ஏனைய LSBs | 4 | 371 | | |

அட்டவணை 16 - 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகளினதும் கிளைகளினதும் பரம்பல்.
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## சொத்துக்கள்


வங்கித்துறையின் சொத்துக்கட்டமைப்பு 2017 ஆம் ஆண்டின் 13.8 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டளவில் ஆண்டுக்காண்டு வளர்ச்சியடைந்து 14.6 சதவீதத்தினை அடைந்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 11 ரில்லியன் ஆக காணப்பட்டது. ஒட்டுமொத்த சொத்துக்களின் கட்டமைப்பு பிரதானமாக கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியிருந்ததுடன், அது வங்கித்துறையின் சொத்துக்களில் 65.2 சதவீதப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. பிரதான இரண்டு அரசாங்க வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் சொத்துக்கள் முறையே ரூபா 2,268 பில்லியன் மற்றும் ரூபா 1,735 பில்லியனாக காணப்பட்டதுடன், அது வங்கித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 33.9 சதவீதமாகக் காணப்பட்டது.




உரு 12 - வங்கித்துறையின் மொத்தச் சொத்துக்கள்
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## செயற்பாடற்ற முற்பணங்கள்

வங்கித்துறையின் ஒட்டுமொத்த செயற்பாடற்ற முற்பணங்களின் விகிதம் 2017 ஆம் ஆண்டின் 2.5 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டளவில் 3.4 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. பிரதான இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் செயற்பாடற்ற முற்பணங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 53.75 பில்லியன் மற்றும் ரூபா 31.47 பில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அதற்கமைய செயற்பாடற்ற முற்பணங்களின் விகதங்கள் முறையே 1 மற்றும் 2.48 சதவீதமாகக் காணப்பட்டு 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் மிகக் குறைவான விகிதங்களைக் காண்பித்தது.





உரு 40 - வங்கித்துறையின் மொத்தச் சொத்துக்கள்
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## பொறுப்புக்கள் மற்றும் மூலதனம்

வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் தொடர்ந்தும் பொறுப்புக்கள் என்ற வகையில் பிரதான நிதி மூலமாக அமைந்திருந்ததுடன் அது வங்கித் துறையின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் மூலதனத்தில் 72 சதவீத பெறுமதியாகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு பிரதான அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் வைப்புக்கள் முறையே ரூபா 1,765 பில்லியன் மற்றும் ரூபா 1,423 பில்லியனாக காணப்பட்டதுடன் அது வங்கித் துறையின் மொத்த வைப்புக்களில் 37.5 சதவீத பெறுமதியாக காணப்பட்டது.


வங்கித் துறையின் மொத்தக் கடன் பெறுதல்கள் 2017 இன் 89.3 பில்லியன் குறைவுடன் ஒப்பிடுகையில் (5.3 சதவீத எதிர்மறை வளர்ச்சி) 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் ரூபா 156.3 பில்லியனால் அதிகரித்திருந்தது. ரூபா கடன் பெறுதல்கள் 2018 இல் 23.7 சதவீதத்தினால் (ரூபா 142.3 பில்லியன்) அதிகரித்திருந்தமையே இதற்கான பிரதான காரணமாகும். இரண்டு பிரதான அரச வங்கிகளின் கடன் பெறுதல்கள் ரூபா 237 பில்லியனாகக் காணப்பட்டது. விபரம் உரு 40 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 3 - வங்கித்துறையின் பொறுப்புக்கள்
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## வைப்புக்கள்

வங்கித்துறையின் வைப்புக்களின் அடிப்படை மீளாய்வாண்டில் 1,100 பில்லியனால் அதிகரித்து 2018 இன் இறுதியளவில் 8,500 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த வைப்புக்களில் கால வைப்புக்களின் பங்கு 2017 ஆம் ஆண்டின் 63.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 65.5 சதவீதமாக அதிகரித்திருந்தது. விபரம் உரு 41 இல் தரப்பட்டுள்ளது.




உரு 41 - வங்கித்துறையின் வைப்புக்கள்
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் நாணய, நிதிசார் மற்றும் கொடுப்பனவு முறைமையினை நிர்வகித்து, மேற்பார்வையிட்டு ஒழுங்கமைக்கும் பொறுப்புடைய அதிகாரத்தரப்பாக, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட நாணயச் சட்டத்தின் மூலம் இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உற்பத்தித்திறனுடைய வளங்களின் அபிவிருத்தியை ஊக்கப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு ஆகிய இரண்டு பொருளாதாரக் குறிக்கோள்களிற்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்பாக உள்ளது.

உள்நாட்டு பண உறுதிப்பாட்டிற்காக நாணயக் கொள்கையினை நிச்சயிப்பதற்கு நாணயச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் பணத்தின் விநியோகம், கிடைப்பனவு, மற்றும் கிரயம் என்பவற்றை பாதுகாக்க இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை முயற்சித்தல் வேண்டும். பண நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலை உறுதிப்பாட்டில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணியாக உள்ளது. பணவீக்கத்தின் ஊடாக காசு ஒதுக்கத்துடன் சம்பந்தப்படுகின்ற விரிந்த பண நிரம்பலின் மாற்றங்களிற்கு தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடியும்.

காசு ஒதுக்கம் என்பது நாணயக் கொள்கையின் செயற்பாட்டு இலக்காகும். கொள்கை ரீதியான வட்டி விகிதம், திறந்த சந்தை நடவடிக்கைகள் (OMO) மற்றும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் அடிப்படையிலமைந்த நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளே (SRR) தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிரதான நாணயக் கட்டுப்பாட்டு முறைகளாகும். நிலையான வைப்புக்கள் விகிதம் மற்றும் நிலையான கடன் விகிதம் போன்ற கொள்கை விகிதங்கள் முறையே 7.25 சதவீதம் மற்றும் 8.75 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டின் போது 8 சதவீதம் மற்றும் 9 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 83.6 பில்லியன் விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 21.3 பில்லியனால் மாத்திரம் ஒதுக்கு பணம் விரிவாக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 961.1 பில்லியனை அடைந்தது. மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்களானது 2018 இன் முதல் பத்து மாதங்களின் போது 43.1 பில்லியன் திரண்ட அதிகரிப்பை பதிவுசெய்து 2018 இன் நவம்பர் மாதத்தில் 64.7 பில்லியனைக் காண்பித்தது. 2018 இன் நவம்பர் நடுப்பகுதியில் SRR 7.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு குறைவடைந்ததே இதற்கான காரணமாகும்.

காசு ஒதுக்கலின் சொத்துப் பக்கம் இலங்கை மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கியதாகும். காசு ஒதுக்க சொத்துக்கள் பக்கத்தின் பிரகாரம், காசு ஒதுக்கத்தின் வளர்ச்சியானது முழுமையாக மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கம் காரணமாக ஏற்பட்டிருந்தது. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 203.9 மில்லியன் குறிப்பிடத்தக்க குறைவுடன் ஒப்பிடுகையில் ரூபா 116.9 பில்லியனால் அதிகரித்திருந்தது. தேறிய அடிப்படையின் மீது அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் கடன் வழங்கல் மீதான குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தின் விளைவாக மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் விரிவடைந்து மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற திறைசேரி உண்டியல்களில் அதிகரிப்பொன்றை வெளிப்படுத்துகின்றது.

இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியும் 2018 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக தேய்வடைந்திருந்தது. ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட ரூபா 152.85 இலிருந்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 182.75 வரை 16.4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 149.8 இலிருந்து ரூபா 152.85 வரையிலான 2 சதவீதமாக காணப்பட்டது.

ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியினால் பரிமாற்று வீதம் உயர்த்தப்பட்டமை காரணமாக, யூஎஸ்டொலர் பலப்படுத்தப்பட்டு யூஎஸ்டொலருக்கு எதிரான ஏனைய பிரதான நாணயங்கள் தேய்வடைந்திருந்தன. அதற்கமைய, யூரோவிற்கு எதிராக 12.68 சதவீதத்தினாலும், இந்திய ரூபாவிற்கு எதிராக 8.72 சதவீதத்தினாலும் யப்பானிய யென் ஒன்றுக்கு எதிராக 18.5 சதவீதத்தினாலும், ஸ்ட்ரேலிங் பவுன் ஒன்றுக்கு எதிராக 11.35

சதவீதத்தாலும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருந்தது.

உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் சவாலான சந்தை நிலைமைகளிற்கு மத்தியில் எந்தவொரு பாரிய பேரிண பொருண்மையான தாக்கத்தையும் ஏற்படுத்தாது நிதித்துறை தொடர்ந்து மிதமாக விரிவடைந்தது. இருப்பினும், வங்கித் துறையினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளினதும் கடன் தரமானது 2107 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களில் 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்திருந்தது.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையானது 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 43 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் 5 சிறப்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளையும் உள்ளடக்கியுள்ளது. இருப்பினும், சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் என்ட் பைனான்ஸ் பீஎல்சீ மற்றும் தி ஸ்டேன்டர்ட் கிரடிட் பைனான்ஸ் லிமிடட் ஆகியவற்றின் உரிமங்கள் அக் கம்பனிகளின் நிதிப்பிரச்சினை மற்றும் திரவத்தன்மை சிக்கல்கள் காணரமாக முறையே 2018 மார்ச் 05 மற்றும் 2018 யூலை 25 முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்பட்டன.

அக்கம்பனிகளின் வைப்பாளர்கள் ரூபா 600,000 தொகை வரையிலான இழப்பீட்டை இலங்கை வைப்பகக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களாக உள்ளனர். உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட திகதியன்று காணப்பட்ட சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் என்ட் பைனான்ஸ் பீஎல்சீ மற்றும் தி ஸ்டேன்டர்ட் கிரடிட் பைனான்ஸ் லிமிடட் ஆகியவற்றினது மொத்த வைப்புக்களினது மீதி முறையே ரூபா 3,966,387,473 மற்றும் ரூபா 2,656,122,760 ஆகும். அதில் இந்த இரண்டு கம்பனிகளினதும் வைப்பாளர்களிற்கு முறையே 15,126 வைப்பாளர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 1,656,712,582 தொகையும் 6,793 வைப்பாளர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 1,235,905,307 தொகையும் இழப்பீடாக செலுத்தப்பட வேண்டும். அதற்கமைய, சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் என்ட் பைனான்ஸ் பீஎல்சீ இன் வைப்பாளர்களிற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 597,613,713 (36 சதவீதம்) இழப்பீடாக செலுத்தப்பட்டது. இருப்பினும், தி ஸ்டேன்டர்ட் கிரடிட் பைனான்ஸ் லிமிடட் இன் வைப்பாளர்களிற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித இழப்பீடும் செலுத்தப்படவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 : "நிதிசார் கருவிகள்" அமுல்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, 2018 சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற நிதியாண்டு காலத்திற்கான அனைத்து நிறுவனங்களினதும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிதி அறிக்கையிடல், புதிய நியமத்தின் பிரகாரம் அமைந்திருத்தல் வேண்டும். அதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன் நட்டங்களை முன்னைய உறப்பட்ட கடன் நட்ட அணுகுமுறைக்குப் பதிலாக எதிர்பார்த்த கடன் நட்ட அணுகுமுறையின் கீழ் வழங்குமாறு வேண்டப்படுகின்றன.

## இலங்கை வங்கி

1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் கீழ் 1939 ஆகஸ்ட் 01 இல் முறையாக கூட்டிணைக்கப்பட்டதுடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பங்குதாரர்களுக்கு உலக நுழைவு, ஊழியர்களின் மேம்படுத்தல் மற்றும் பெறுமதி அதிகரிப்புடன் நாட்டிற்கு உயர் வினைத்திறன்மிக்க, வாடிக்கையாளர் நோக்காகக் கொண்ட, தொழில்நுட்ப ரீதியில் அதிநவீனமயப்படுத்தப்பட்ட, நெகிழ்திறன் மற்றும் புதுமையான நிதிசார் சேவைகளினை வழங்குவது வங்கியின் தொலைநோக்காக காணப்படுகின்றது.

மேற்குறித்த நோக்கங்களினை அடைவதற்கு, 2018 ஆம் ஆண்டின் போது 577 கிளைகள், 281 CDM இயந்திரங்கள் மற்றும் 776 ATM இயந்திரங்களினூடாக வங்கி அதன் சேவைகளைப் பகிர்ந்தளித்துள்ளது. மேலும் 8,724 எண்ணிக்கையான ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

### வங்கி

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் போது வங்கியின் மொத்த வட்டி வருமானம் ரூபா 171,344 மில்லியனிலிருந்து ரூபா 195,394 மில்லியனுக்கு அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 1,163,161 மில்லியனிலிருந்து ரூபா 1,429,107 மில்லியன் வரை அல்லது 22.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு வங்கியின் மொத்த வைப்புத்தளம் ரூபா 1,546,832 மில்லியனிலிருந்து ரூபா 1,765,026 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கான ரூபா 37,592 மில்லியன் வரிக்கு முன்னராக தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கு ரூபா 41,480 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை வங்கியின் செயற்பாடுகள் பதிவு செய்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 3,888 மில்லியன் அல்லது 10.3 சதவீத அதிகரிப்பொன்றை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROAA) மற்றும் சராசரி உரிமை மீதான திரும்பல் (ROAE) என்பன முறையே 0.2 மற்றும் 4.1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன.

மேலும், உள்ளூர் வங்கித்துறையில், 2018 ஆம் ஆண்டின் போது, பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிட்டட் வங்கியின் தேசிய நீண்ட கால தரப்படுத்தலானது “ஸ்திரமான கண்ணோட்டத்துடன் AA+ (1ka)” மீண்டும் உறுதிப்படுத்தியதுடன் ICRA லங்கா லிமிட்டட் கடன் தரப்படுத்தலாக “ஸ்திரமான கண்ணோட்டத்துடன் (SL) AAA” ஆக விருது வழங்கியது.

ஒட்டுமொத்த மூலதன போதுமை விகிதம் முன்னைய ஆண்டின் 14.5 சதவீதத்திலிருந்து 14.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

### தொகுதி

தொகுதியானது 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 42.2 பில்லியன் இலாபமொன்றை பதிவுசெய்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீத குறைவொன்றைக் காண்பித்தது. தொகுதியின் மொத்தச் சொத்துத் தளம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15.7 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவம் செய்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,313 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. மொத்தக் கடன்களும் முற்பணங்களும் அத்துடன் மொத்த வைப்புக்கள் என்பன 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 22.3 சதவீதம் மற்றும் 13.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. தொகுதிக்கு அதன் செயற்பாடற்ற கடன் விகிதத்தினை 1.3 சதவீதமாக பேணுவதற்கு முடிந்திருந்தது. மேலும், தொகுதியானது 2018 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் கடன் மற்றும் முற்பணங்களை ரூபா 1 ரில்லியனுக்கும் மேலாக உயர்த்தியிருந்தது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 5 சதவீதத்திற்கு குறையாத ரயர் 1 மூலதன போதுமை விகிதம் மற்றும் 10 சதவீதத்திற்கு குறையாத ஒட்டுமொத்த மூலதன போதுமை விகிதத்தை பேணுதல் வேண்டுமென்ற பிரமாணத் தேவைப்பாடு காணப்படுகின்றது. 2018 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு வங்கியின் ரயர் 1 மூலதன போதுமை விகிதம் 10.9 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்ததுடன்

## மக்கள் வங்கி

மக்கள் வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக, 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் அதற்கான திருத்திங்களிற்கு அமைய இலங்கையின் கூட்டுறவு, கிராமிய வங்கியியல், விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளிற்கு உதவி அவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் வர்த்தக வங்கியொன்றாகவும் அடகுத் தரகராகவும் வியாபார வங்கியாகவும் வணிகத்தை நடாத்தில் செல்லல் என்பன வங்கியின் குறிக்கோள்களாக உள்ளன.

2018 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி நாடுபூராகவும் 738 கிளைகளைக் கொண்டிருந்தது. அத்துடன், 38 CDM இயந்திரங்கள், 145 ATM இயந்திரங்கள், 34 கியோஷ்க் மற்றும் 25 விரைவு வங்கி நிலையங்களும் காணப்பட்டன. வங்கியின் மொத்த வைப்புத் தளம் ஆண்டின் போது ரூபா 179 பில்லியன் அல்லது 14.4 சதவீதத்தினால் அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,423 பில்லியனை எட்டியிருந்தது.

வங்கியின் மொத்தச் சொத்துக்கள் தளம் ரூபா 267.7 பில்லியன் அல்லது 18.2 சதவீதத்தால் அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ரூபா 1,734.7 பில்லியனாகக் காணப்பட்டது. ரூபா 253 பில்லியனுக்கு ஏனைய வாடிக்கையாளர்களிற்கான கடன்களும் பெறவேண்டியவைகளும் அதிகரித்தமையே சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களித்திருந்தது. வங்கியின் சொத்துக்களின் தரம் 2017 ஆம் ஆண்டின் 1.9 சதவீத செயற்பாடற்ற கடன் விகிதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 2.5 சதவீதத்தை பதிவுசெய்து குறைவடைந்திருந்தது.

வங்கி ரூபா 24.4 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்தை பதிவுசெய்து முன்னைய ஆண்டிற்கு எதிராக 5.8 சதவீதக் குறைவைக் காண்பித்தது. இருப்பினும், வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.6 பில்லியன் அல்லது 19.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வங்கியின் மூலதன போதுமை விகிதம் அதிகரிக்கும் போக்கொன்றை காண்பித்து குறைந்தபட்ச பிரமாணத் தேவைப்பாட்டைக் காட்டிலும் உயர்வாகக் காணப்பட்டது. மைய மூலதன போதுமை விகிதம் மற்றும் ஒட்டுமொத்த மூலதன போதுமை வன்பன 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே 11.02 சதவீதம் (குறைந்தபட்சம் 8.875 சதவீதம்) மற்றும் 14.47 சதவீதமாக (குறைந்தபட்சம் 12.875 சதவீதம்) காணப்பட்டன.

## தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கி 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தினால் இலங்கையிலுள்ள அரசுடையமான வங்கியாக தாபிக்கப்பட்டிருந்ததுடன் 1988 இன் 36 ஆம் இலக்க வங்கிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம்பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்த்து வழங்கப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 2(அ) பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்களிற்கு அமைய, விசேடமாக மட்டுப்படுத்திய ஆற்றல்களைக் கொண்ட இலங்கை மக்களிடையே சேமிப்பினை மேம்படுத்தி அதன் மூலம் சேகரிக்கப்படுகின்ற சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்தலே வங்கியின் குறிக்கோளாக காணப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி 2018 ஆம் ஆண்டில் இரண்டு புதிய கிளைகளை ஸ்தாபித்திருந்ததுடன் அதற்கமைய 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட மொத்த கிளைகளின் எண்ணிக்கை 255 ஆகக் குறிப்பிடப்பட்டது. ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபா 102 பில்லியனால் அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அது ரூபா 840 பில்லியனை அடைந்திருந்தது.

வங்கியின் மொத்த சொத்துத் தளம் ரூபா 27 பில்லியனால் அல்லது 3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்ததுடன், 2018 திசெம்பர் அளவில் ரூபா 1,037 பில்லியனை அடைந்திருந்தது. ஆண்டின் போது 14 சதவீத வைப்பின் வளர்ச்சியொன்றின் மூலம் பிரதானமாக நிதியளிக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 49 பில்லியன் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே சொத்துக்களின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. 2017 இல்

அறிக்கையிடப்பட்ட 1.44 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 1.34 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டு ஆண்டின் போது வங்கியின் சொத்துக்களின் தரம் (Asset Quality) முன்னேற்றமடைந்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கு எதிராக வங்கி அறிக்கையிட்டிருந்த ரூபா 8 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் 44 சதவீதம் குறைவைக் காண்பித்தது. தேறிய வட்டி வருமானம், வியாபாரத்திலிருந்தான தேறிய மிகை, தேறிய செயற்பாட்டு வருமானம் என்பன குறைவடைந்தும் ஆளுக்குரிய செலவினம் அதிகரித்தும் இருந்தமையே இந்தப் பின்னடைவிற்கான பிரதான காரணங்களாகும்.

2018 இன் ஒன்பது மாத காலத்துடன் தொடர்புடைய கற்பனை வரியினைக் கருத்திற் கொள்ளாமை மற்றும் நிலையான வைப்பு வட்டி வீதங்கள் அதிகரித்தமையால் வைப்புக் கிரயம் அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 249 மில்லியன் அல்லது 1 சதவீதத்தினால் தேறிய வட்டி வருமானம் குறைவடைந்திருந்தது. வங்கியின் உரிமைப்பங்கு மற்றும் அரசாங்கப் பிணைச் சேர்க்கையின் நியாயப் பெறுமதி குறைவடைகின்றமை காரணமாக வியாபாரத்திலிருந்தான தேறிய மிகையும் ரூபா 1,914 மில்லியன் அல்லது 159 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக என்எஸ்பீ பன்ட் மெனேஜ்மென்ட் கம்பனியினால் (தேசிய சேமிப்பு வங்கியின் பூரண உரிமையுடைய துணைக்கம்பனி) பங்கிலாபம் பிரேரிக்கப்படாமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய செயற்பாட்டு வருமானம் ரூபா 630 மில்லியன் அல்லது 37 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2018 சனவரி 01 முதல் கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஊழியர்களிற்கு சம்பள அதிகரிப்பு வழங்கியமை மற்றும் 2018 ஆம் ஆண்டில் வங்கியின் நிரந்தர கோப்பிலுள்ள VI மற்றும் VII ஆந் தரங்களிற்கு சில ஒப்பந்த அடிப்படை ஊழியர்களை உள்வாங்கியமை போன்றன காணரமாக வங்கியின் ஆளனிச் செலவினம் ரூபா 2,376 மில்லியன் அல்லது 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வங்கியின் மூலதனப் போதுமை விகிதங்கள் அதிகுறைந்த பிரமாணத் தேவைப்பாடுகளினை விட உயர்வாகக் காணப்பட்டன. ஆரம்ப மூலதனப் போதுமை விகிதமும் (சீஏஆர்) ஒட்டுமொத்த மூலதனப் போதுமை விகிதமும் முறையே 13.3 சதவீதம் (குறைந்தது 10 சதவீதம்) மற்றும் 16.1 சதவீதம் (குறைந்தது 14 சதவீதம்) ஆகக் காணப்பட்டன. உரிமம்பெற்ற விஷேட வங்கிகளுடன் ஒப்பிடுகையில் வங்கியின் வைப்புத்தள சந்தைப் பங்கு 1.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

பிட்ச் தரப்படுத்தலானது தேசிய சேமிப்பு வங்கியின் தேசிய நீண்டகால தரப்படுத்தலை இறைமையுள்ள நீண்டகால அந்நியச் செலாவணியின் பின்னர் இலங்கையின் தேசிய தரப்படுத்தலை மறுபரிசீலனை செய்தமையைத் தொடர்ந்து 2019 பெப்ரவரியில் 'AAA(lka) இலிருந்து 'AA+(lka)' இற்கு திருத்தியமைத்தது. வழங்குபவர் ஏய்ப்புச்செய்தல் தரப்படுத்தலானது 2018 திசெம்பர் 03 ஆந் திகதியிலான நிலையான கண்ணோட்டத்துடன் "B+" இலிருந்து "B" இற்கு தரமிறக்கப்பட்டது. இருப்பினும், ICRA லங்கா லிமிடட் இனால் நிலையான கண்ணோட்டத்துடன் (SL) AAA தரப்படுத்தல் வங்கிக்கு வழங்கப்பட்டது.

மிகத் தரமுயர்ந்த ஒருங்கிணைந்த அறிக்கைக்காக "CA ஸ்ரீ லங்கா இனால் வழங்கப்பட்ட அரச வங்கிகளிற்கான வெள்ளி விருது, CMA ஸ்ரீ லங்கா இனால் வழங்கப்பட்ட 10 மிகச் சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைளில் ஒன்று என்ற விருது, CMA ஸ்ரீ லங்காவினால் வழங்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளிடையே சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைக்கான விருது, எழுதிய செய்திச் சேமிப்புக்கள் மற்றும் கடன்கள் - ARC விருது வழங்கல் போட்டியில் கிடைத்த வெண்கல விருது, உள்ளக வடிவமைப்பு – சேமிப்புக்கள் மற்றும் கடன்கள் வரிசையில் ARC விருது வழங்கல் போட்டியில் கிடைத்த வெண்கல விருது, வியாபாரமற்ற வருடாந்த அறிக்கை – சேமிப்புக்களும் கடன்களும் வரிசையில் கிடைத்த வெண்கல விருது மற்றும் அட்டைப்பட வடிவமைப்பு – சேமிப்பும் கடன்களும் வரிசையில் ARC விருது வழங்கல் போட்டியில் கிடைத்த வெள்ளி விருது ஆகிய 08 விருதுகளை வங்கி இந்த ஆண்டில் 2017 இன் ஆண்டறிக்கைக்காக பெற்றுக்கொண்டது.

அத்துடன், LK Domain Registry இனால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் bestweb.lk 2018 "மிகப் பிரசித்தமான கூட்டிணைந்த இணையதள விருது" மற்றும் "SLT Zero One Award for Digital Excellence 2018" இல் கிடைத்த 1 ஆவது இணை விருது ஆகிய இரண்டு இணையதள விருதுகளை வங்கி வென்றெடுத்தது.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு உதவுதல் வங்கியின் பணியாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கியின் மொத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 34 பில்லியனை தாண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 1.9 சதவீத அதிகரிப்பொன்றாக காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 0.6 பில்லியனால் அல்லது 1.4 சதவீதத்தினால் விரிவாக்கமடைந்திருந்த வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 43 பில்லியனை தாண்டியிருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 1.2 பில்லியனால் அதிகரித்தமையே சொத்துக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

முன்னைய ஆண்டின் நிதி விளைவிற்கு எதிராக 27 சதவீத அதிகரிப்புடன் ரூபா 480 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை வங்கி அறிக்கையிட்டிருந்தது. அத்துடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 304 மில்லியனால் அல்லது 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.05 சதவீதத்தினால் குறைவடைந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22.24 சதவீதமாகக் காணப்பட்டது. செயற்பாடற்ற கடன் விகிதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்தினால் குறைவடைந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 சதவீதமாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வைப்புக்கள் ரூபா 652 மில்லியனால் அதிகரித்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,272 மில்லியனாகக் காணப்பட்டது.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (HDFC) 1997 இன் 07 ஆம் இலக்க (2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் அரச உரிமையைக்கொண்ட வங்கியொன்றாக கூட்டிணைக்கப்பட்டதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம் பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்த்தும் அளிக்கப்பட்டது. அதிகாரச்சட்டத்தின் 12(அ) மற்றும் திருத்தங்களின் பிரகாரம் அனைத்து இலங்கையர்களினதும் வீடமைக்கும் கனவை நனவாக்குவதற்காக வீடமைப்பு நோக்கத்திற்கான நிதி வசதிகளை வழங்குவதில் சந்தையில் தலைவராக உருவாகுவதே வங்கியின் குறிக்கோளாக உள்ளது.

2018 ஆம் ஆண்டில் புதிய கிளைகள் எதனையும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி ஸ்தாபித்திருக்காததுடன் அதற்கமைய 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த கிளைகள் 39 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டின் ரூபா 34.967 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 37.934 பில்லியன் வரை விரிவடைந்து 8.4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஆகையினால், ஆண்டின் வட்டி வருமானம் முன்னைய நிதியாண்டின் ரூபா 6.61 பில்லியனிலிருந்து ரூபா 6.68 பில்லியனை அடைந்து, 1 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருந்தது. மேலும், ஆண்டின் போது ரூபா 36.65 பில்லியனிலிருந்து ரூபா 37.02 பில்லியன் வரை வங்கி அதன் வைப்புத் தளத்தை

வெற்றிகரமாக விரிவாக்கி 1 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

குறைந்த வருமானமீட்டும் மூலதன இணைப்பையும் திரவச் சொத்துக்களையும் குறைப்பதற்கான உபாயத் தீர்மானம் காரணமாக வங்கியின் மொத்த சொத்துத் தளம் 2017 இன் ரூபா 49.72 பில்லியனிலிருந்து ரூபா 49.28 பில்லியனுக்கு குறைவடைந்தது வங்கியின் மொத்தச் சொத்துக்கள் தளம் ரூபா 440 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. வங்கியின் செயற்பாடற்ற கடன்கள் விகிதம் 2017 இன் 18.2 சதவீதத்திலிருந்து 2018 இல் 20.46 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

2018 ஆம் ஆண்டில் வங்கி ரூபா 629 மில்லியன் வரிக்கு முன் இலாபத்தினை அறிக்கையிட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு எதிராக 6.79 சதவீத அதிகரிப்பாகும். மேலும், வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 367 மில்லியன் அல்லது 19.59 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

பிரதான மூலதன விகிதம் (Tier 1) குறைந்தபட்ச நியதிச்சட்ட தேவைப்பாடான 7.87 சதவீதத்திற்கு எதிராக 16.41 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2014 சனவரி 17 ஆந் திகதிய நிதித்துறை நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கான பிரதான திட்டத்திற்கமைய வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) வழிகாட்டல்கள் இல. 02/17/402/0073/002 இன் பிரகாரம் 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் பிரதான மூலதனத்தை ரூபா 5,000 மில்லியனாக வங்கி பேணுதல் வேண்டும். அடிப்படை 111 வழிகாட்டலின் கீழ் பிரதான மூலதன தகுதியினை நீண்டகால மூலதன மூலமாக முன்மொழிவதற்கான அரச அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருப்பதை கருத்திற்கொண்டு இந்த வழிகாட்டலுடன் இணங்குவதற்கு மேலும் ஆறு மாதங்கள் நீடிப்பொன்றை மத்திய வங்கி வழங்கியிருந்தது.

## பிரதேச அபிவிருத்தி வங்கி

பிரதேச அபிவிருத்தி வங்கி 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு முழுவதும் சொந்தமான உரிமைத்துவம்பெற்ற விசேட வங்கியாக வங்கியாக 2010 ஆம் ஆண்டில் ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளை ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதானமாக நுண்பாக நிதி நிறுவனங்களிற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மைகளிற்கும் நிதியுதவிகளை வழங்கி அபிவிருத்திப் பணியினை மேம்படுத்துதல் மற்றும் விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து பெண்களின் முன்னேற்றத்தின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குதல் என்பன வங்கியின் குறிக்கோளாகும்.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட மொத்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 265 ஆகும். ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபா 1.7 பில்லியனால் அல்லது 1.2 சதவீதத்தினால் அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அது ரூபா 141.6 பில்லியனை அடைந்திருந்தது.

வங்கியின் மொத்த சொத்துத் தளம் ரூபா 7.7 பில்லியனால் அல்லது 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்ததுடன், 2018 திசெம்பர் அளவில் ரூபா 176.9 பில்லியனை அடைந்திருந்தது. ஆண்டின் போது ரூபா 5.9 பில்லியனால் கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவை அதிகரித்திருந்தமையே சொத்துக்களின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. இருப்பினும், 2017 இல் அறிக்கையிடப்பட்ட 3.27 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 5.40 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டு ஆண்டின் போது வங்கியின் சொத்துக்களின் தரம் (Asset Quality) வீழ்ச்சியடைந்திருந்தது.முன்னைய ஆண்டிற்கு எதிராக வங்கி அறிக்கையிட்டிருந்த ரூபா 2.1 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் 4 சதவீதம் குறைவைக் காண்பித்தது. இருப்பினும், வங்கியின் தேறிய வட்டி வருமானம், 2017 உடன் ஒப்பிடுகையில் ரூபா 2.2 பில்டலியனால் அல்லது 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வங்கி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவையான மூலதனப் போதுமை விகிதத்தினை பேணியிருந்தது. அதற்கமைய, ஆரம்ப மூலதனப் போதுமை விகிதமும் (Tier

I) ஒட்டுமொத்த மூலதனப் போதுமை விகிதமும் (CAR) முறையே 11.58 சதவீதம் (குறைந்தது 7.875 சதவீதம்) மற்றும் 13.61 சதவீதம் (குறைந்தது 11.875 சதவீதம்) ஆகக் காணப்பட்டன. அத்துடன், 2016 இன் அரசாங்க பாதீட்டு பிரேரணைக்கு அமைய பிரதேச பிரதேச அபிவிருத்தி வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் 100 சதவீதப் பங்குகளையும் கொள்வனவு செய்வதன் மூலம் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியானது ரூபா 4.176 பில்லியன் கொள்வனவுப் பெறுமதிக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைக்கப்படுதல் வேண்டும். கொள்வனவுப் பெறுமதியானது 2018 திசெம்பர் 31 முதல் வலுப்பெறும் விதத்தில் பொதுத் திறைசேரியின் சார்பில் புதிய பங்குகளை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டது.

## லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசினால் முழுமையான உரிமையைக்கொண்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு உரிமம் பெற்ற விசேட வங்கியாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு வசதியளிக்கும் நிறுவனம் என்ற தூரநோக்குடன் தாபிக்கப்பட்டது. 2016 இன் அரசாங்க பாதீட்டு பிரேரணைக்கு அமைய பிரதேச பிரதேச அபிவிருத்தி வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் 100 சதவீதப் பங்குகளையும் கொள்வனவு செய்வதன் மூலம் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியானது ரூபா 4.176 பில்லியன் கொள்வனவுப் பெறுமதிக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைக்கப்பட்டது. கொள்வனவுப் பெறுமதியானது 2018 திசெம்பர் 31 முதல் வலுப்பெறும் விதத்தில் பொதுத் திறைசேரியின் சார்பில் புதிய பங்குகளை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட மொத்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 08 ஆகும். ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபா 77.7 பில்லியனால் அல்லது 19 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

வங்கியின் மொத்த சொத்துத் தளம் ரூபா 244 மில்லியனால் அல்லது 2.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. 2018 இறுதியளவில் கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவை ரூபா 404 மில்லியன் அல்லது 12.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அத்துடன், 2017 இல் அறிக்கையிடப்பட்ட 37.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 46.5 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டு ஆண்டின் போது வங்கியின் சொத்துக்களின் தரம் (Asset Quality) வீழ்ச்சியடைந்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் வரிக்கு முன்னரான ரூபா 298.1 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டிற்கு ரூபா 297.5 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை வங்கி பதிவுசெய்திருந்தது.

வங்கி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவையான மூலதனப் போதுமை விகிதத்தினை பேணியிருந்தது. அதற்கமைய, ஆரம்ப மூலதனப் போதுமை விகிதமும் (Tier I) ஒட்டுமொத்த மூலதனப் போதுமை விகிதமும் (CAR) முறையே 95.09 சதவீதம் (குறைந்தது 7.875 சதவீதம்) மற்றும் 95.76 சதவீதம் (குறைந்தது 11.875 சதவீதம்) ஆகக் காணப்பட்டன.

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, பிரதானமாக முறிவடைந்த பிரமுக சேமிப்புக்கள் அபிவிருத்தி வங்கியின் வைப்பாளர்களிற்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு 2006 யூலையில் வங்கிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி அரசுக்குச் சொந்தமான உரிமம் பெற்ற விசேட வங்கியாக 2008 இல் அதனது வணிகச் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. வங்கியானது 2010 ஆம் ஆண்டில் தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் இணைக்கப்பட்டது. வங்கியின் பிரதான செயற்பாடுகள் வைப்புத் திரவத்தன்மை, கடன் வழங்கல், குத்தகை, வாடகைக் கொள்வனவு மற்றும் அடகுபிடித்தல் என்பவைகளை உள்ளடக்கியிருந்தது.

ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபா 11 மில்லியனால் அல்லது 1

சதவீதத்தினால் விரிவடைந்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,089 மில்லியனாகக் காணப்பட்டது. வங்கியின் கடன்களும் முற்பணங்களும் ரூபா 272 மில்லியன் அல்லது 6 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்த அதேவேளை ரெபோ மற்றும் நிலையான வைப்பு முதலீடு என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 95 மில்லியன் அல்லது 2 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

வங்கி ரூபா 488 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை பதிவுசெய்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதக் குறைவாகும். ஏனைய செயற்பாட்டு வருமானத்திலேற்பட்ட குறைவு, உயர்வான ஆளனி மற்றும் ஏனைய செலவினம், பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி என்பவற்றின் அதிகரிப்பு அத்துடன் 2018 ஏப்ரல் 01 முதல் வருமான வரி செலுத்துவதற்கான பொறுப்பு என்பன இலாபத்திலேற்பட்ட இந்தக் குறைவிற்கு பிரதான காரணங்களாகும்.

பிரமுக சேமிப்புக்கள் அபிவிருத்தி வங்கி நீங்கலாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் மொத்த செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 11 சதவீதமாக காணப்பட்டதுடன் இது தொழிலுள்ள ஏனைய உரிமம்பெற்ற விசேட வங்கிகளின் செயற்பாடற்ற கடன் விகிதமான 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டது.

வங்கியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவையான மொத்த மூலதனப் போதுமை விகிதம் 89.9 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும் குறைந்தபட்சத் தேவை 12.5 சதவீமாக இருந்தது.

## பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள்

### இலங்கை மத்திய வங்கி

- 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பணச் சட்டத்தின் 38 மற்றும் 41 ஆம் பிரிவுகள் மற்றும் வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்பு கொள்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பகிரத்தக்க இலாபம் இல்லையெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, எவ்வித தொகையும் திரண்ட நிதிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிக்கவில்லை. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டு பகிரத்தக்க இலாபத்தில் ரூபா 15 பில்லியன் தொகையொன்று திரண்ட நிதிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.
- பொருளாதாரத்தின் வளர்ச்சித் தேவைகளினை பூர்த்திசெய்யும் பொருட்டு உள்ளக மற்றும் வெளியக அதிர்ச்சிகளினை மேம்பட்ட நெகிழ்வுத்தன்மையுடன் திடமான வங்கியியல் / வங்கியில்லாத நிதிசார் நிறுவனங்கள் துறையொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 2014 சனவரி 17 இல் நிதித் துறையின் ஒருங்கிணைப்பு தொடர்பில் பிரதான திட்டமொன்றை வங்கி வெளியிட்டது. அதற்கமைய, வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 19 நிறுவனங்களுடனான ஒருங்கிணைந்த திட்டங்களினை ரூபா 74 மில்லியன் செலவழிப்பதன் மூலம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்திருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் ரூபா 53 மில்லியன் தொகையொன்று வங்கிக்கு ஏற்பட்டபோதிலும், 2019 மார்ச் இறுதிவரையிலும் 14 நிறுவனங்களுடனான ஒருங்கிணைந்த திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த செலவினத்திற்கும் மேலாக, ஒருங்கிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாத 20 நிறுவனங்களுடன் தொடர்புடைய அக்கறை, விலை மதிப்பு அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் காரணமாக, தகவல் ஞாபனத்தை தயாரிப்பதற்காக ரூபா 59 மில்லியன் மேலதிக தொகையொன்று வங்கிக்கு ஏற்பட்டிருந்தது.
- 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச்சட்டத்தின் பிரகாரம், குத்தகைக்கு வழங்கியவர்கள், குத்தகைக்கு பெற்றவர்கள் மற்றும் வழங்குநர்களின் கடமைகளை உட்பிரிவு இலக்கம் 11 தொடக்கம் 31 வரையானவை விபரிக்கின்றன. உட்பிரிவு இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக் குத்தகையொன்றின் கீழ் குத்தகைக்கு பெற்றவரிற்கு வழங்கப்பட்ட உபகரணத்தை தொந்தரவின்றி அமைதியாக பெற்றுக்கொள்ளுதல்

மாத்திரமே குத்தகைக்குப் பெற்றவர்களின் உரிமையாகும். உட்பிரிவு இலக்கம் 15 இன் பிரகாரம் நிதிக்குத்தகைக்கான தரப்பினர்களால் இணங்கப்பட்ட நியாயமான தேய்மானத்திற்குட்படும் ஏதாவது மாற்றங்களிற்கு உட்படும் குத்தகைக்கு பெற்றவரிற்கு வழங்கப்பட்டுள்ளது எனும் நிபந்தனையில் குத்தகைக்கு வழங்கியவரிற்கு உபகரணத்தை குத்தகைக்கு பெற்றவர் மீள வழங்குதல் வேண்டும். உட்பிரிவு இலக்கம் 20 இன் பிரகாரம், குத்தகைக்கு பெற்றவர் தவணைப்பணம் செலுத்தத் தவறும் போது வழங்கப்பட்ட உபகரணத்தின் உடமையை திரும்ப பெற்றுக்கொள்ளவும் நிதிக் குத்தகை ஏற்பாடுகளுடன் குத்தகைக்கு பெற்றவர் இணங்காதிருத்தல் குத்தகைக்கு வழங்கியவர் இருக்கும் நிலைமையொன்றில் குத்தகைக்கு வழங்கியவரை வைப்பதால் ஏற்படும் அத்தகைய சேதங்களை அறவீடு செய்வதற்கும் குத்தகைக்கு வழங்கயவரிற்கு உரிமை காணப்படுகின்றது. சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உபகரணத்தின் உடமை, அறவிடப்பட்ட பணம் மற்றும் நிதிக்குத்தகையின் கீழ் பட்டியலிடப்பட்டவாறு அதாவது அறவிடப்பட்ட சேதங்கள் காணப்பட்டால் அல்லது குத்தகைக்கு பெற்றவர் உரிய தொகையை செலுத்தியிருக்காவிட்டால் அனைத்து நன்மைகளும் குத்தகைக்கு வழங்கியவரிற்கு உரித்துடையதாக இருப்பதுடன் நிதிக்குத்தகையின் கீழான ஒட்டுமொத்த பொறுப்புக்களும் குத்தகைக்கு பெற்றவரிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், சட்டத்திற்கான ஏதாவது திருத்தங்களை மேற்கொள்வதற்கான தேவைப்பாட்டை இனங்காண்பதற்காக சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டி ஏற்படலாம்.

- நுண் நிதி வணிகத்தை மேற்கொள்கின்ற கம்பனிகளின் அனுமதிப்பத்திரம் வழங்கல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன, 2016 யூலை 15 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண் நிதி சட்டத்தின் கீழ் வங்கியின் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. வைப்புக்களினை ஏற்கின்ற குறைந்த வருமானத்தையுடைய நபர்கள் மற்றும் நுண் முயற்சிகளுக்கு (நுண் நிதி வியாபாரங்கள்) பிரதானமாக, நிதி சேவைகளினை வழங்குகின்ற கம்பனிகள், சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கமைய, மேற்குறித்த சட்டத்தின் அமுலாக்கல் திகதியிலிருந்து 2019 மே 09 வரை நுண் நிதி வியாபாரங்களினை நடாத்துவதற்கு இரண்டு கம்பனிகள் மாத்திரம் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தது. வைப்புக்களினை ஏற்றுக்கொள்ளாத ஆனால் நாட்டில் காணப்படும் குறைந்த வருமானத்தையுடைய நபர்கள் மற்றும் நுண் முயற்சிகளுக்கு நிதிச் சேவைகளினை வழங்குகின்ற கம்பனிகள், சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆகையினால், அந்தக் கம்பனிகள், சட்டத்தின் கீழ் வங்கியின் நாணயச் சபையினால் அனுமதியளிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படவில்லை.
- வங்கி 2016 சனவரி 04 இல் குறிப்பிட்ட முதல்தர வணிக கம்பனியொன்றின் முகாமைத்துவத்தினை தேசிய சேமிப்பு வங்கிக்கு ஒப்படைத்திருந்தது. மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பாதுகாப்பு பற்றாக்குறை காரணமாக 2016 சனவரி 04 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களிடமிருந்து திரண்ட வட்டியுடனான திரும்ப அறவிடமுடியாத முதலீட்டு தொகை ரூபா 7.2 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த திரும்பப்பெற முடியாத தொகையில், உள்ளக நிதிகளினை கையாண்ட மத்திய வங்கியின் நான்கு திணைக்கங்களுக்குள் திரும்பப்பெறவேண்டியதாக ரூபா 2.1 பில்லியன் தோற்றமளித்தன.
- முதல்தர வணிகரொருவர் பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் பிரமாணங்களினை மீறுகின்ற போது முதல்தர வணிகர்களுக்கு எதிராக அபராதங்களினை விதிக்கமுடியுமென வங்கியினால் இலங்கை தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகளுக்காக விநியோகிக்கப்பட்ட இலங்கை தீர்ப்பனவு முறைமை விதிகள் பதிப்பு 2.1 (2013) இன் 2.2 ஆம் பிரிவு குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும், வங்கியால் முறைமை விதிகளினை செயல்படுத்த முடியாது காணப்பட்டமையினால், எந்தவொரு முதல்தர வணிகருக்கும் எதிராக

அபராதங்கள் விதிக்கப்பட முடியாதிருந்தது. வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு எதிராக செயற்படுகின்ற முதல்தர வணிகர்களுக்கு எதிராக அபராதங்களினை விதிக்க பொருத்தமானதொரு கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய 2015 செப்தம்பரில் வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தை நாயணச்சபை அறிவுறுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறான பொருத்தமான கட்டமைப்பு 2019 மார்ச் இறுதிவரையிலும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## மக்கள் வங்கி

- இலங்கை மத்திய வங்கியால் (சீபீஎஸ்எல்) வழங்கப்பட்ட 4(5) ஆம் வழிகாட்டலின் பிரகாரம், தனியொரு கடன் பெறுனர்க்கு பல கடன் வசதிகள் அளிக்கப்படும் போது, வாடிக்கையாளருக்கு அளிக்கப்பட்ட மொத்தக் கடனில் 30 சதவீதத்தை செயற்பாடற்ற கடன்களாக (என்பிஎல்) வகைப்படுத்தப்பட்ட நிலுவையின் மொத்தத் தொகை மிகைத்திருக்குமானால், அவ்வாறான கடன்பெறுகைக்கு நீடிப்புச் செய்யப்பட்ட மொத்தக் கடன் வசதிகள் என்பிஎல் ஆக வகைப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், குறித்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் பல்வேறு வாடிக்கையாளர்கள் என்பிஎல் ஆக வகைப்படுத்தப்பட்டுக் காணப்படவில்லை.
- சில வருமான வகைகளின் மீது வங்கி பெறுமதிசேர் வரியை (வீஏரீ) சேகரித்தமையின் விளைவால் ரூபா 19,412,393 வெளியீட்டு வரியொன்றை வங்கி தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையினால் வீஏரி செலுத்துகைகளுடன் பிணைத்து காணப்படும் வருமானக் கணக்குகளினை பரீட்சிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.
- 614/2007(4) ஆம் இலக்க வங்கி சுற்றறிக்கையின் பிரகாரம், தற்காலிக மேலதிக பற்றுக்கள் (ரீஓடி) எவ்வித தாமதமும்இன்றி அறவிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ரீஓடி வசதிகளினை அறவிடுகையில் தாமதத்துடனான பல்வேறு சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டன.
- 2009.09.01 ஆந் திகதிய 2009 இன் 03 ஆம் இலக்க (4.1(xi)) சீபீஎஸ்எல் வழிகாட்டலின் பிரகாரம், வணிகர்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வியாபார எல்லைகளினை மிகைத்து ஈடுபடாதிருப்பதனை உறுதிப்படுத்த முன்புற அலுவலகத்தில் வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளினையும் கண்காணிப்பதற்காக உண்மை நேர (Real time) கண்காணிப்பு முறைமையொன்றைப் பேணுவதற்கு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் வேண்டப்படுகின்றன. எவ்வாறாயினும், வங்கியில் வலுவான இணையவழி கண்காணிப்பு முறைமை காணப்படாமை காரணமாக வங்கியின் திறைசேரி எல்லைகள் Finnacle Treasury System இற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அடிக்கடி இடைவெளிகளைக்கொண்டதாக நாளின்போது அல்லது அதனைத்தொடர்ந்து வரும் நாளில் கண்காணிப்புச் செய்யப்படுகின்றது.

## இலங்கை வங்கி

### கடன்கள் மற்றும் முற்பணங்கள்

- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியால் அளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,219,914 மில்லியனுடன் மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,510,534 மில்லியனாகக் காணப்படாமையினால் 23.8 சதவீத அதிகரிப்பொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மேற்குறித்த அதிகரிப்பதற்கான பிரதான காரணம் மீளாய்வாண்டின் போது மேலதிகப் பற்றுக்கள் அதிகரித்தமையாகக் காணப்படுகின்றது. மேற்குறித்த மீதியில், மொத்த நிலுவையின் ரூபா 1,136,530 மில்லியன் தொகையொன்று அல்லது 75 சதவீதம் நீண்ட காலக் கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் மற்றும் தனிநபர் கடன்களினைக் கொண்டிருந்தது. அனைத்து கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்களில் அதிகரிக்கும் போக்கொன்று காணப்பட்டதுடன் அது 2018 ஆம் ஆண்டின் போது 64 சதவீத முன்னேற்றமாகக் காணப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 34,261 மில்லியன் குறித்த பெறுமதியுடன் ஒப்பிடுகையில், 2018 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 53,753 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 57 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் 2.9 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

- மேலும், பெருநிறுவனம் இரண்டாம் பெருநிறுவனக் கிளைகள் மற்றும் கரை கடந்த வங்கியில் பிரிவு என்பன 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 20,636 மில்லியன் கூட்டுத்தொகையான உயர்ந்த செயற்பாடற்ற தொகையினை அறிக்கையிட்டதுடன் அது வங்கியின் மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் 38 சதவீதமாகக் காணப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக, இரண்டாம் பெருநிறுவன கிளைகள் ரூபா 5,354 மில்லியன் கூட்டுத்தொகையான செயற்பாடற்ற முற்பணங்களைக் கையாளுகின்றது.
- கே.டீ.எல்பேர்ட் சில்வா, கடுவளை ஹோல்டிங்ஸ் மற்றும் தொல்ஹியாதோ (Dholhiyadhoo) இன்வெஸ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட் என்பன 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான முறையே ரூபா 2,738 மில்லியன், ரூபா 1,532.48 மில்லியன் மற்றும் ரூபா 1,455 மில்லியன் தொகையான உயர்ந்த செயற்பாடற்ற வாடிக்கையாளர்களாக அறிக்கையிடப்பட்டதுடன் அது வங்கியின் மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் 15 சதவீதமாகக் காணப்படுகின்றது.

### பதிவழிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்

2018 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 40 மில்லியனைக் காணப்பட்டதுடன் அது வங்கியின் 2,843 வாடிக்கையாளர்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேற்குறித்த நிலுவைகளுடன் தொடர்புடைய வட்டி ரூபா 53 மில்லியனாகக் காணப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டவற்றில், ரூபா 26 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 40 மில்லியன் வட்டி என்பன மாகாண அலகின் அறிவிடுகையுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டதுடன் ரூபா 14.8 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 12.5 மில்லியன் வட்டி என்பன பெருநிறுவன அலகின் அறிவிடுகையுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டது.

## தேசிய சேமிப்பு வங்கி

- வங்கித்துறையின் மொத்த வைப்புத் தளம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2018 வரை 228 சதவீதத்தினால் முன்னேற்றதடைந்திருந்த போதிலும், குறித்த காலப்பகுதியின் போது 136 சதவீத வளர்ச்சியொன்றை மாத்திரம் என்எஸ்பீ அடைந்திருந்தது. ஆகையினால், என்எஸ்பீ இன் சந்தைப்பங்கு 2010 இல் 13.7 சதவீதத்திலிருந்து 2018 இன் 9.9 சதவீதத்திற்கு பற்றாக்குறைவடைந்து காணப்பட்டது. உரிமம்பெற்ற விசேட வங்கியியல் துறையுடன் என்எஸ்பீ இன் சந்தைப் பங்குகூட 2010 இல் 82.1 சதவீதத்திலிருந்து 2018 இல் 77.4 சதவீதத்திற்கு பற்றாக்குறைவடைந்து காணப்பட்டது.
- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோசடியான மீளப் பெறுகைகளிலிருந்து வங்கிக்குக் கிடைக்கவேண்டிய தொகை ரூபா 110.5 மில்லியனாகக் காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 15.7 மில்லியன் அல்லது 16.6 சதவீத அதிகரிப்பை இது சுட்டிக்காட்டுகின்றது. இந்த பெறவேண்டிய மீதி அதிகரித்தமை 2018 இல் தலைமை அலுவலக கிளையில் மோசடி ஏற்படாமைக்கு பிரதான காரணங்களாகக் காணப்பட்டன. மேற்குறித்த மீதியில், ரூபா 85 மில்லியன் தொகையொன்று ஒரு வருடத்திற்கும் அதிகமாக நிலுவையாகத் தொடந்தும் காணப்பட்டதுடன் ரூபா 29 மில்லியன் தொகையொன்று ஐந்து வருடங்கள் காலப்பகுதிக்கும் அதிகமாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.
- வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட 5,406 பதவியணியினர் எண்ணிக்கையில், உத்தியோகத்தர் உதவியாளர் (Staff Assistant) மற்றும் அலுவலக உதவியாளர் (Office Assistant) பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் முறையே 2,066 மற்றும் 563 ஆகக் காணப்பட்டன. அதற்கமைய, மொத்தப் பதவியணியினரில் 48.6 சதவீதம்

மேற்குறித்த பதவிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து பகிரங்கமாக விண்ணப்பங்களை அழைத்திராது அமைச்சு மற்றும் முகாமைத்துவத்தினால் அனுப்பப்பட்ட பட்டியலொன்றைப் பயன்படுத்தி மேலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன. ஆகையினால், இலங்கையின் தொழிற் சந்தையில் வேலைகளினைத் தேடுகின்ற ஒட்டுமொத்த மக்களுக்கும் இது நியாயமற்றதாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

- 2016 செப்தெம்பர் 01 இலிருந்து 2017 மார்ச் 31 வரையான காலப்பகுதியின் போது வங்கியின் கடன் பிரிவு, இரண்டு மேலதிகமான தனியார் அமைப்புக்களின் ஊழியர்களாக தம்மைத்தாமே அறிமுகப்படுத்தியிருந்த நாற்பத்தி ஏழு (47) விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 68.34 மில்லியன் தொகையான கடன்களினை அனித்திருந்தது. இரண்டு போலியான அமைப்புக்களின் ஊழியர்களாக தம்மைத்தாமே அறிமுகப்படுத்தியிருந்த விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய கடன்களுக்காக விண்ணப்பிக்கையில் போலியான ஆவணங்களினை சமர்ப்பித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேற்குறித்த கடனின் மொத்தத் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன் மீதியில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது.
- 2017 மார்ச்சில் கிரிபத்கொட கிளையைப் பகுதிகளைப் பிரித்தல் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1.16 மில்லியனை வங்கி செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், பகுதிகளைப் பிரித்தல் வேலையின் பூர்த்திக்குப் பிறகு வெறுமனே ஒன்பது மாதங்களின் பின்னர் 2018 சனவரியில் புதிய வளாகமொன்றிற்கு கிளை நகர்த்தப்பட்டது. ஆகையினால், பகுதிகளாகப் பிரித்தலுக்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றாகியது.
- மீளாய்வாண்டிற்கான தலைமை அலுவலக கட்டிடத்திற்கான வாடகையாக ரூபா 38,312,700 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் அலுவலக மற்றும் தரிப்பிட இடைவெளி, கழுவும் அறை, பகலுணவு அறை, களஞ்சியங்கள், வயரிங் முறைமைகள் போன்ற கட்டிடத்தின் அதிகமானவை பழைமைவாய்ந்ததாகக் காணப்படுகின்றமையால், திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. எவ்வாறாயினும், வாடகை உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காப்புறுதி மேவுகைகளினை பெற்றுக்கொள்வதற்கு வங்கி தவறியிருந்தது.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

- சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்கள் மீதான பெறவேண்டிய உதவிமானிய திட்டத்தில் ரூபா 75,136,401 தொகையொன்று காட்டப்பட்டதுடன், அதில் ரூபா 41,186,992 அல்லது 55 சதவீதம் அரசிடமிருந்து அறவிடப்பட்டிராது ஒரு வருடத்திற்கும் அதிகமாக நிறுவையாகக் காணப்படுகின்றது.
- 2016 ஏப்ரல் 29 இன் பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக, தொடர்புடைய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிப்பனவு செய்வதற்குப் பதிலாக அதன் ஊழியர்களின் சார்பில் அதன் சொந்த நிதியிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,396,703 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பிஏவைஈ) வங்கி செலுத்தியிருந்தது.
- 09/188/2015 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் பிரகாரம், CeyBank அலகிலிருந்து வருடாந்தம் 15 சதவீத சாத்தியமான மதிப்பிடப்பட்ட வருடாந்த திரும்பலை உழைப்பதற்கு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முதிர்ச்சி இடைவெளியை முகாமை செய்வதற்கு வங்கி திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 25,000,000 முதலீட்டிற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித திரும்பல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 10 ஆரம்ப முதலீட்டு விலையுடன் ஒப்பிடும் போது கடந்த 3 ஆண்டுகளின் போது அலகுப்பொறுப்பின்

சந்தைப் பெறுமதி கணிசமாக பற்றாக்குறைவடைந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆண்டு இறுதிக்கான அலகுப் பொறுப்பின் சந்தை விகிதம் ரூபா 7.50 ஆகக் காணப்பட்டது.

- பாதுகாப்பு பிணை காணப்படாமை காரணமாக வங்கிக்கு எவ்வித இரண்டாந்தர அறவிடுகைக்கான தெரிவும் காணப்படாது நிலுவையில் ரூபா 57,166,306 தொகையான 37 கடன்கள் காணப்பட்டதுடன் அவை செயற்பாடற்ற நிலுவைகளாகக் காணப்படக்கூடிய இடரினைக் கொண்டிருந்தமையைத் தொடர்ந்து அவை கண்காணிக்கும் நிலைமைகளின் கீழ் காணப்படுபவைகளாகக் வகைப்படுத்தப்பட்டன.
- ஒரு தவணைப்பணமேனும் மீள் செலுத்தியிராமை காரணமாக செயற்பாடற்ற வகைகளுக்கு மாற்றப்பட்ட 2018 ஆம் ஆண்டின் போது அளிக்கப்பட்ட ரூபா 282,272,371 பெறுமதியுடைய 808 கடன்களில் ரூபா 264,026,888 பெறுமதியுடைய 798 கடன்கள் அல்லது 93.6 சதவீதம் ஈபிளவ் கடன்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன.
- ஒரு தவணைப்பணம் மாத்திரம் தீர்ப்பனவுசெய்த பின்னர் மீள் செலுத்தியிராமை காரணமாக செயற்பாடற்ற வகைகளுக்கு மாற்றப்பட்ட 2018 ஆம் ஆண்டின் போது அளிக்கப்பட்ட ரூபா 107,922,503 பெறுமதியுடைய 280 கடன்களில் ரூபா 107,485,490 தொகையான 274 கடன்கள் அல்லது 99.6 சதவீதம் ஈபிளவ் கடன்களின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன.

## பிராந்திய அபிவிருத்தி வங்கி

- பெறுகை வழிகாட்டலுக்கான 2.1.1 ஆம் இலக்க குறிப்புரை மற்றும் பிஎவ்/425(i) பொது நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக, பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது வங்கி அதன் சொந்த அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுகை கையேட்டினைப் பயன்படுத்தியிருந்தது.
- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 114 ஆம் பிரிவு மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 83 ஆம் பிரிவு (2018.04.01 இலிருந்து அமுலுக்குவந்தது) 2000 சனவரி 31 ஆம் பிஎவ்/பிஈ/06 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2016 ஏப்ரல் 29 இன் பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக தொடர்புடைய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிப்பனவு செய்வதற்குப் பதிலாக அதன் ஊழியர்கள் சார்பில் அதன் சொந்த நிதியிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 191,479,007 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பிஏவைஈ) வங்கி செலுத்தியிருந்தது. பிஈடீ 03/2016 இன் பிரகாரம், பணிப்பாளர் சபை மற்றும் எஸ்ஓஈஎஸ் இன் சிரேஷ்ட முகாமைத்துவம் பிஏவைஈ வரி கழிப்பனவு செய்யப்பட்டு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.
- சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மீதான திரும்பல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 0.62 சதவீதம் மற்றும் 7.30 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. உயர் செயற்பாடற்ற கடன் (என்பிஎல்) விகிதம் மற்றும் உயர் ஆளணியினர் கிரயத்தின் விளைவாக தாழ்ந்த இலாபத்தன்மை மட்டம் மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியின் இணைத்தல் காரணமாக நட்டக்கழிவுப் கட்டணங்கள் உரிமையில் அதிகரிப்பை நோக்கியதாகப் பங்களித்திருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஆளணியினர் கிரயம் 54.2 சதவீதமாகக் காணப்பட்ட துறைசார் விகிதத்துடன் ஒப்பிடுகையில் 75.01 சதவீதமாகக் காணப்பட்டது. தாழ்ந்த கடன் மதிப்பீடுகள் மற்றும் செயலூக்கமற்ற நிலைபேறற்ற அறவிடுகை முயற்சிகள் காரணமாக முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட 3.27 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5.40 சதவீதம் வரை என்பிஎஸ் விகிதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சொத்துக்கள் தரத்தில் பாதகமான போக்கு அவதானிக்கப்பட்டது. மேலும், 2019 மே 31 இல் உள்ளவாறான வங்கியின் என்பிஎல் 9.87 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

- வங்கி அதன் வாடிக்கையாளர்களிற்கு கடன்களினை அளிக்காது இடர் அற்ற வட்டி விகிதமொன்றில் நிலையான வைப்புக்களில் வங்கியின் பணத்தில் பாரியதொரு பகுதியை முதலீடு செய்திருந்தது. கைத்தொழில், விவசாயம், வணிக ரீதியான நிர்மாணம் மற்றும் ஏனைய தொழில்முயற்சிகளை மேம்படுத்தல், ஸ்தாபித்தல், விரிவுபடுத்தல், நவீனமயப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தலில் உதவிசெய்யும் வங்கியின் ஆரம்ப நோக்கத்துடன் இது முரண்பட்டுக் காணப்படுகின்றது.
- இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் எஸ்எல்எவ்ஆர்எஸ் - 9 "நிதியியல் கருவிகள்" 2018 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படுகின்ற நிதியியல் அறிக்கையிடல் காலப்பகுதிகளுக்கு பிரயோகிக்கப்படும். எவ்வாறாயினும், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் நிதிக்கூற்றுக்கள் எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காமையினால், நிதிக்கூற்றுக்களில் மேற்குறித்த நியமம் தொடர்பான தாக்கத்தை மதிப்பிடமுடியாதிருந்தது.
- ஐ.அ.டொலர் 16,407,693 கடன் மீதியொன்றும் ஐ.அ.டொலர் 20,509.66 செலுத்த வேண்டிய வட்டியும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 184.6966 சிபீஎஸ்எல் விற்னை விகிதத்தினைப் பயன்படுத்தவதற்குப் பதிலாக ரூபா 180.72 சிபீஎஸ்எல் கொள்வனவு விகிதத்தினைப் பயன்படுத்தி எல்கேஆர் இற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆகையினால், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய கடன் மீதி மற்றும் வட்டிச் செலவினம் ரூபா 65,328,390 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது, சிபீஎஸ்எல் கொள்வனவு நாணயப்பரிமாற்று விகிதத்தினைப் பயன்படுத்தி திறைசேரிக்கான ஜீஓஎஸ்எல் ஐ.அ.டொலர் கடன் மீதியின் மூலதனம் மற்றும் வட்டி தவணைப் பணமாக ரூபா 109,395,496.58 மொத்தம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த ஐ.அ.டொலர் கடன் தவணைப்பணங்கள் சிபீஎஸ்எல் விற்பனை விகிதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படல் வேண்டும். ஆகையினால், 2018 கடன் தவணைப் பணங்களின் செலுத்துகை ரூபா 2,470,412.61 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.
- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தலைமை அலுவலகத்தின் நுகரத்தக்கவைகள், எழுதுகருவிகள் மற்றும் மேம்படுத்தல் வகைகள் தொடர்பில் பௌதீக ரீதியான பரீட்சிப்பின் பிரகாரம் காணப்படும் மீதி மற்றும் பொதுப் பேரேட்டின் பிரகாரம் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 6,895,607 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## இலங்கை சேமிப்பு வங்கி

- நிதிசார் உதவி மற்றும் சேவைகளின் ஏற்பாடுகளினூடாக உற்பத்தித்திறன்வாய்ந்த சுய வேலைவாய்ப்பு நுண் வணிக முயற்சிகள் மற்றும் கிராமிய வேலைவாய்ப்பு உள்ளடங்கலாக பரந்துபட்ட செயற்பாடுகளினூடாக நிலைபேறான வருமானத்தை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பங்களினை இணங்காணல், அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல், வினையூக்கப்படுத்தல் மற்றும் உதவியளித்தல் மற்றும் ஏழைகளுக்கான உயர்தரமானதொரு வாழ்க்கையினை அளித்தல் அமைப்பு அகவிதியின் பிரகாரம் வங்கியின் பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. மேற்குறித்த நோக்கத்திற்கு எதிராக, மீள்கொள்வனவு (repo) நிலையான வைப்புக்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் மூலதன கருவிகள் போன்ற வித்தியாசமான முதலீடுகளில் அதன் பௌதீகச் சொத்துக்களில் அண்ணளவாக 66 சதவீதத்தினை வங்கி பேணியிருந்தது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் வங்கியின் மொத்தச் சொத்தில் 26 சதவீதத்தினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
- 2010 மே 24 ஆந் திகதிய பிஈடீ/என்டீஎவ் ஆம் இலக்க அமைச்சரவையின் ஞானபத்திரத்தின் 1.3 ஆம் பிரிவின் பிரகாரம், பிரமுக்க சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியில் (பிஎஸ்டீபீ) வைப்புச் செய்து தோல்வியடைந்த வைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 2006 இல் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. பிஎஸ்டீபீ

வைப்பாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 541 மில்லியனை வங்கி செலுத்தியிருந்ததுடன் இந்த மீதி முன்னைய ஆண்டின் நிலுவையாகவுள்ள வைப்பு பொறுப்பு மீதியின் 47 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள பிஎஸ்டீபீ பொறுப்பு மீதி ரூபா 656 மில்லியனாகக் காணப்பட்டது.

- 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,035 மில்லியன் தொகையான நிலுவையாகவுள்ள பிஎஸ்டீபீ செயற்பாடற்ற கடனில் ரூபா 15 மில்லியன் தொகையொன்று அல்லது 2 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டது. அதற்கமைய, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் அறவிடப்படவேண்டிய கடன் மீதி ரூபா 1,020 மில்லியனாகக் காணப்பட்டது.

- வங்கியின் மொத்தக் கடன் கலவையில், ரூபா 1,319 மில்லியன் தொகையொன்று அல்லது 33.3 சதவீதம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாாறன நுண் நிதிக் கடன்களைப் பிரதிதித்துவப்படுத்துகின்றது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுண் நிதி கடன்களின் மொத்த நிலுவையாகவுள்ள தொகையில், ரூபா 568 மில்லியன் தொகையொன்று அல்லது 43 சதவீதம் ஆறு சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு கடனும் ரூபா 50 மில்லியனை மிகைத்திருந்தது. மேற்குறித்த கடன்களுக்கு எதிராக வழங்கப்பட்ட பிணைகள் நிலுவையாகவுள்ள கடன் மீதியின் 13 சதவீதம் தொடக்கம் 45 சதவீதத்தினை மாத்திரம் மேவுகை செய்திருந்தது. நில வாடிக்கையாளர்களினை பெரிதும் நம்புவது வங்கிக்கு பாரிய கடன் இடரொன்றினை உருவாக்குகின்றது.

| பெருந்தோட்டக் கைத்தொழில் | |
|---|---|
| | காணிகளின் வர்தத்கப் பெறுமதியை கருத்திற்கொண்டு குத்தகை வாடகைகள் திருத்தியமைக்கப்படடிருக்காமை |
| | தேயிலை விற்பனை மேம்படுத்தல் செலவினம் அதிகரித்துள்ள போதிலும், தேயிலை ஏற்றுமதி குறைவடைந்துள்ளமை |
| | தேயிலை மீள்நடுகை மானியம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், தேயிலை மீள்நடுகை எதிர்பார்த்த அளவில் இடம்பெற்றிருக்காமை |
| | தோட்டக் கம்பனிகளின் வருடாந்த சராசரி தெங்கு விளைச்சல் 11 முதல் 54 காய்கள் வரை குறைவடைதல் |
| | இறப்பர் மானிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த இறப்பர் உற்பத்தி தொடர்ச்சியாக குறைவடைதல் |

# பெருந்தோட்டக் கைத்தொழில்

நாட்டின் வேகமான பொருளாதார அபிவிருத்தி நிமித்தம் ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு பிரதான பெருந்தோட்டக் கைத்தொழில் பயிர்களின் உற்பத்திகளை இலாபகரமானதாகவும் நிலைபேறுடையதாகவும் வளர்ச்சியுறச் செய்தல் இத்துறை மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளாக இருந்தது. அவ் எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்வதற்கு அமைச்சு மற்றும் 14 நியதிச்சட்ட நிறுவனங்கள் ஒன்றிணைந்து பின்வரும் பணிகளை செயலாற்றி இருக்கவேண்டும்.

- பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறை சார்ந்த கொள்ளைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல், கருத்திட்டங்களை உருவாக்குதல் மீழ் வலுவூட்டல்களைச் செய்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு, தேவையான மலைப்பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் உரிமம் மற்றும் ஏனைய வசதிகளையும் செய்துகொடுத்தல்.
- பெருந்தோட்டத் துறை உற்பத்திகளுக்கு பல்தேசிய போட்டிகளை மேலோங்கச் செய்தல்
- பெருந்தோட்ட உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட பெறுமதிச் சேர்க்கைகளை அதிகரிப்பது சம்பந்தமான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேயிலை, இரப்பர் சம்பந்தமான உரிமங்களை வழங்குதல்
- தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்களை துண்டாடுவது சம்பந்தமான உரிமங்களை வழங்குதலும் நிர்வகித்தலும்.
- இடைப் பயிர்களை கட்சிதமான பண்ணை பயிர்ச்சைகை முறைகளின்கீழ் அமைத்து பெருந்தோட்ட காணிகளை சிறந்த மட்டத்தில் பிரயோசனப்படுத்தலும் அதன் மூலம் உற்பத்திகளையும் வேலைவாய்ப்புக்களையும் அதிகரித்தல்.
- தேயிலை, இரப்பர், தென்னை, கைத்தொழில் அபிவிருத்தியும் ஆராய்ச்சிகளுக்கான நடவடிக்கைகளும்.
- அமைச்சுடன் இணைந்து செயற்படும் நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் மற்றும் அமைப்புமுறை மாற்றங்களை அறிமுகம் செய்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டமை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## குத்தகைக் கூலி அடிப்படையில் காணிப்பரிமாற்றமும் வருமனச் சேகரிப்பும்.

1992 ஆம் ஆண்டில் 23 பெருந்தோட்டங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அரச காணிகளின் மொத்தத்தொகை 617,486 ஏக்கர்களாகும், தோட்டங்களில் ஒரு ஏக்கரிலிருந்து கிடைக்கும் வருடாந்த குத்தகை கூலி வருமானம் ரூபா. 433 இல் இருந்து 2780 ரூபா வரை வித்தியாசங்கள் காணப்படுகின்றன. காணிகளின் வர்த்தகப் பெறுமதிகளை நிகழ்காலத்துடன் ஒப்பிட்டுப்பார்த்து தற்போது அறவிடப்படும் குத்தகைக் கூலிகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2017 பெப்ரவரி 15 ஆம் திகதியதும் PE/PL/RP/Gen/2017 ஆம் இலக்கமுடையதுமான இலங்கை அரச வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி அரச காணிகளை உப குத்தகைக்கு விடுவதன் மூலம் ஈட்டப்படும் வாடகை வருமானத்தில் நூற்றுக்கு 20 வித கட்டனமொன்றை ஒன்றிணைந்த நிதியத்துக்கு அறவிடுவதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டுக்கு முன் உப குத்தகைக்கு விடப்பட்டிருந்த பெருந்தோட்ட கம்பனிகள் 05 க்குறிய 2018 ஆம் ஆண்டுக்கென அறவிடப்பட்டிருந்த ரூபா. 36.51 மில்லியன் குத்தகைக் கூலியிலிருந்து நூற்றுக்கு 20 வீதமான கட்டணத்தை இணைந்த நிதியத்துக்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பெருந்தோட்ட கம்பனி ஒன்றினால் 2011 மே 31 ஆம் திகதி முதல் 2005 ஜுன் 17 ஆம் திகதிவரையான காலப்படுதிக்கு வருடாந்தம் ரூபா. 12.22 மில்லியன் உப குத்தகை பெறுமதிக்கு அமைய ஒரு ஏக்கர் நிலப்பரப்பு இலங்கை விமானப் படைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அப் பெருந்ததோட்ட கம்பனிக்கு அரச காணிகளை குத்தகைக்கு விடப்பட்ட ஒப்பந்தத்தின்படி அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்ப பெருந்தோட்டக் கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட காணியை மீண்டும் சுவீகரிப்பதற்கு அமைச்சுக்கு இயலுமாக இருந்த போதிலும் அதன் மீது அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## தேயிலை விற்பனை மேம்பாட்டுச் செயற்திட்டத்தை அமுல்படுத்தல்.

தேயிலை மேம்பாட்டு நிதியத்தின் ஆதாயங்களில் இருந்து ரூபா.எட்டு மில்லியன்களை பயன்படுத்தி சேயற்படுதுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உலகலாவிய தேயிலை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் உற்பத்தி மற்றும் படைப்பாற்றல்களை உருவாக்கும் விடயங்களுக்கு தனியார் நிறுவனமொன்றை தேர்ந்தெடுத்து வியாபார விளம்பர அறிவிப்பொன்றை உருவாக்கும் பணியொன்றுக்கு ரூபா. 199.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஊடக வேலைகள் முடிவுறாத காரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்படுத்துவதற்கு தவறியுள்ளனர். அதேபோல் 2018 ஆம் ஆண்டின் மேம்பாட்டுச் செலவுகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில், ஒப்பீட்டளவில் நூற்றுக்கு 18.87 வீதம் மேலதிகமாக செலவழிக்கப்பட்டிருந்தது. தேயிலை ஏற்றுமதி வீதம் நூற்றுக்கு 2.21 வீதத்தால் குறைந்திருந்தது. விவரம் அட்டவணை 17 இல் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | உள்நாட்டுத் தேயிலை ஏற்றுமதி (கி.கி. மில்.) | தேயிலை விற்பனை மேம்படுத்தல் ரூபா மில். |
|---|---|---|
| **2014** | 317.8 | 381,134,199 |
| **2015** | 298.9 | 481,352,966 |
| **2016** | 280.8 | 884,151,296 |
| **2017** | 278.2 | 560,202,236 |
| **2018** | 271.7 | 665,959,711 |

அட்டவணை 17 உள்நாட்டு தேயிலை ஏற்றுமதி மற்றும் தேயிலை விற்பனை மேம்படுத்தல்
மூலம் - இலங்கை தேயிலை அபிவிருத்தி சபையின் புள்ளிவிவர அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகள்.


## தேயிலை மீள்நடுகை நிவாரணம்.

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐந்து கட்டங்களாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. 577 ஹேக்டேயர் காணிகளின் விவசாயிகளால் முதல் மூன்று கட்டங்களின் அடிப்படையில் மாத்திரம் ரூபா. 920.13 மில்லியன், தேயிலை மீழ்நடுகைக்கான நிவாரண உதவிகளாக பெற்றுள்ளனர். எனினும் அவ் விவசாயிகள் தேயிலை மீழ் நடுகை மேற்கொள்ளாத காரணத்தினால் அந் நிவாரண உதவி மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்கவில்லை. இதன்மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## தென்னைக் கைத்தெழில்

தென்னை கைத்தெழில், மொத்த தேசிய உற்பத்திக்கு பெருந்தோட்டத் துறையிலிருந்து மிகக்கூடிய பங்களிப்பை வழங்கிவருவதுடன் உற்பத்தி விற்பனை பல்வகைப்படுத்திலின்போது பூகோல முதல்வனாவதற்காக பல்வேறு வேளைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறெனினும் தென்னைச் சாகுபடி 2017 ஆம் ஆண்டில் 2.450 மில்லியன் தேங்காய்கள் என்ற அளவிலிருந்து 2018 ஆம் ஆண்டு 2,623 மில்லியன் தேங்காய்கள் என்ற அளவு வரை ஒரு சிறிய அளவு அதிகரித்திருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டின் 3056 மில்லியன் தேங்காய்களின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் தேங்காய் உற்பத்திகள் பின்னடைவை அடைந்துள்ளது. விபரங்கள் உருவப்படம் 42 இல் காடப்பட்டுள்ளது.





உருவப்படம் 42 - வருடாந்த தேங்காய் உற்பத்திகள்
மூலம் பெருந்தோட்ட அமைச்சின் செயல்திறன் அறிக்கை 2018

## வருடாந்த தேங்காய் விளைச்சல்

தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் நியமங்களுக்கு அமைய தென்னை மரமொன்றிலிருந்து கிடைக்ககூடிய வருடாந்த விளைச்சல் 72 காய்கள் என்றிருந்த போதிலும், குருநாகலை பெருந்தோட்ட கம்பனியால் நிர்வாக்கிக்கப்படும் 07 தோட்டங்களில் அவ் எண்ணிக்கை 31-54 ஆகவும், சியாபப் பெருந்ததோட்ட கம்பனியின் 06 தோட்டங்களிலும் அதன் எண்ணிக்கை 11-36 ஆகவும் காணப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் நியமனங்களுக்கு அமைய இக் கம்பனிகளால் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு அதன்படி உரம் மற்றும் இரசாயணங்களை இடுவதற்கும், நீர் வலையமைப்புக்களை உருவாக்கி புதிய நடுகைகள் மேற்கொள்வதன் மூலம் குறித்த உற்பத்திகளை பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எனினும் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## இறப்பர் உற்பத்தி


இறப்பர் உற்பத்தி காணிகளை அதிகரிப்பதற்கும் இறப்பர் காணிகளின் உற்பத்திகளை கூட்டுவதற்கும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் நிவாரண வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுவரை மொத்த இறப்பர் உற்பத்தி தொடர்ச்சியாக குறைந்துகொண்டு சென்றுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் 83,070 மெட்ரிக் டன்னாக இருந்த இறப்பர் உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 82,560 மெட்ரிக் டன்கள் வரை குறைந்துள்ளது. விவரங்கள் உரு 43 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு அட்டவணை வருடாந்த இரப்பர் உற்பத்தி
மூலம் : பெருந்தோட்டத்தறை அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கை 2018

## பதனிடப்படாத இறப்பர் ஏற்றுமதி

2017 ஆம் வருடம் 17,230 மெட்ரிக் டன்னாக காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி 2018 ஆம் ஆண்டு 13,982 மெட்ரிக்டன்கள் என்ற அளவுக்கு நூற்றுக்கு 19 வீதத்தாலும் 2017 ஆம் ஆண்டு ரூபா. 5,920 மில்லியனாக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2018 ஆம் ஆண்டு ரூபா. 5,088 மில்லியன் வரை நூற்றுக்கு 14 விதத்தால் குறைந்துள்ளது. விவரங்கள் உரு 44 இல் காட்டப்பட்டுள்ளது




உரு 44 – பதனிப்படாத இரப்பர் ஏற்றுமதி
மூலம்: பெருந்தோட்ட அமைச்சின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை

## அடையப்படாத இலக்குகள்

மதிப்பீட்டாண்டில் சிறு தோட்ட உரிமையாளர்களும் பெருந்தோட்ட கம்பனிகளும் ஒன்றிணைந்து முறையே 1000 ஹெக்டேயார் காணிகளிலும் 500 ஹெக்டேயர் காணிகளிலும் இறப்பர் மீழ் நடுகைப் பயிர்சிசைகை மேற்கொள்ளவர் என

எதிர்பார்க்கப்பட்டது. அவற்றிர் முறையே 523 ஹெக்டேயர்களிலும் 319 ஹெக்டேயர்களிலும் இறப்பர் மீழ் நடுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி நிறைவேற்றப்பட்ட பணிகளுடன் திட்டமிடப்பட்ட பணிகளை ஒப்பிடும்போது அவை முறையே நூற்றுக்கு 48 வீதமாகவும் 36 வீதமாகவும் காணப்பட்டது.

மதிப்பீட்டாண்டில் மரபுவழி மற்றும் மரபுவழியற்ற பிரதேசங்களிலும் புதியதாக 750 ஹெக்டேயர் காணிகளிலும் இறப்பர் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 342.5 ஹெக்டேயர் காணிகளில் மாத்திரமே இறப்பர் பயிரிடப்பட்டிருந்தது. அதன்படி நிறைவேற்றப்பட்ட பணிகளுடன் நிறைவேற்றப்படாத பணிகளை ஒப்பிட்ட போது நூற்றுக்கு 54 வீதமாக காணப்பட்டது.

## பயன்படுத்தப்படாத ஆதனங்கள்

விசேட கருத்திட்டமொன்றின் கீழ் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 14.03 மில்லியன் பெறுமதிவாய்ந்த Walk in type Environmental Facility என்ற உபகரணம் 2018 மே 08 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இவ் உபகாரணத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் தொழிற்படு மட்டம் தீர்மானம் செய்யப்படாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இதனால் அவ் உபகாரணம் இறக்குமதி செய்யப்பட்டு ஒரு வருட காலம் கடந்த நிலையிலும் அவ் உபகாரணம் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் செயலற்று காணப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டிலிருந்து வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்படாமல் ரூபா. 5.80 மில்லியன் பெறுமதிவாய்ந்த ஆய்வுகூட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் அவ் இருப்புக்களில் ரூபா. 3.46 மில்லியன் பெறுமதியான பொருட்கள் செயலற்று காணப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் தென்னை விற்பனைப் பொருட்களில் ஒட்டுவதற்கு ரூபா. 7.18 மில்லியன் பெறுமதிவாய்ந்த 4,076,000 ஸ்டிக்கர்கள் தேவை அளவு கருத்தில் எடுக்கப்படாது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத் தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலந்தொட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளது.

இரப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 15,74 மில்லியன் பெறுமதி வாய்ந்த 04 உபகரணங்கள் திருத்தம் செய்யப்பட்டு பாவணைக்கு எடுக்காது 2 வருடம் முதல் 8 வருட காலமாக செயலற்றுக் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட கம்பனியால் கினியம தோட்டப் பிரிவில் நடாத்திச் செல்லப்படும் விதைத் தேங்காய் பண்ணைக்கு நீரைப் பெற்றுக்கொள்ள 2018 மார்ச் 19 ஆம் திகதி ரூபா. 1.39 மில்லியன் செலவில் மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவு செய்யப்பட்டது. நீர் குழாய் துளையிடும் பணிகள் 2019 ஆகஸ்ட் 31 திகதியது வரை அப்பணி முடிவடையாமையால் இயந்திரம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை.

வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியின் 06 தொழிற்சாலைகளில் 03 தொழிற்சாலைகள் செயற்படாதுள்ளது என்பதுடன் செயற்படாதிருக்கும் தொழிற்சாலைகளை தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்வதற்கோ குத்தகைக்கு விடுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை.

## முகாமைத்துவச் செயற்பாடுகள்

மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுதுவதுர என்ற இடத்தில் அமைச்துள்ள பாரம்பரிய விதை உற்பத்திப் பண்ணைக்குச் சொந்தமான 160 ஏக்கர் அளவு காணிகளும் கம்மந்தலுவ தோட்டத்தின் ஒட்டுக்குளம் பிரிவில் அமைந்துள்ள 10 ஏக்கர் காணிகளும் வெளி நபர்களால் சுவீகரிக்கப்பட்டு பருவகால பயிர்ச்செய்கைகள் மற்றும் வெற்றிலை உற்பட்ட பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன. அக் காணிகளை மீட்டெடுப்பதற்குத் தேவையான சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தவறியுள்ளது.

2012 ஜுலை 24 ஆம் திகதி பொது வர்த்தகம் தொடர்பான செயற்குழு மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானதும் சட்டரீதியான உரிமையற்றதுமான காணிகளின் உரிமைகளை கூட்டுத்தாபனத்துக்கு

அறுதியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்த போதிலும், கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை பயிரிடப்படும் காணிகளான 15,329 ஏக்கர் காணிகளுக்கான சட்டரீதியான உரிமையை 2019 மே 31 திகதி வரை அறுதியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

## பிரயோசனமற்ற வேலைகளால் ஏற்பட்ட நட்டங்கள்

வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் சாத்திய வள ஆய்வை நடாத்தாது 2016 ஆம் ஆண்டில் ரூ. 12.08 மில்லியன் செலவு செய்து ஆரம்பித்த இரப்பர் தொழற்சாலையின் உற்பத்திச் செயற்பாடுகளை உச்சமட்டத்தில் பேணுமளவுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காததன் காரணமாக, போதுமான அளவு விற்பனை இலபம் கிடைக்கவில்லை. இதனால் மதிப்பீட்டாண்டின் இறுதிப்பகுதியில் தொழற்சாலையின் உற்பத்திச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. இதன்படி தொழிற்சாலை அமைப்பதற்கு செலவழிக்கப்பட்ட பணம் பிரயோசனமற்று காணப்படுகிறது.

## செயற்றிறனற்ற நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தேட்ட கம்பனிக்குச் சொந்தமான சாந்த ஜோன் பி மற்றும் மரிச்சிக்கட்டி தோட்டத்தில் 20.75 ஹெக்டேயர் நிலத்தில் 4131 மர முந்திரிகைக் கன்றுகள் நடப்பட்டன. 2018 ஆம் ஆண்டு முடிவில் அதற்கென ரூ. 7.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆவ்வாறு பயிரிடப்பட்ட மரமுந்திரகைக் கன்றுகளில் வளர்ச்சியுற்ற கன்றுகள் 3685 அதாவது நடப்பட்ட கன்றுகளுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 89 வீதம் பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைளின் பலயீனங்கள் காரணமாக அழிவடைந்துள்ளது.

## வெளிநாட்டுதவி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

விவசாய அபிவிருத்திக்கான பண்நாட்டு நிதியம் மற்றும் இலங்கை அரசின் நிதிப் பங்களிப்புக்கின் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான கால வரையரைக்குள் செயற்படுத்தப்படும் சிறு தேயிலைத் தோட்டங்கள் மறுமலர்ச்சிக் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ரூ. 1,400 மில்லியன் ஒதுக்கல் செய்யப்பட்டிருந்தது. 2018ம் ஆண்டில் 2115 ஹெக்டேயர் தேயிலைத் தோட்டம், 1000 ஹெக்டேயர் இறப்பர் தேட்டம் மற்றும் 31 பாதைகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 1,344 ஹெக்டேயர் இறப்பர் தேட்டங்களும் 24 பாதைகள் மாத்திரமே முடிவுறுத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையயப்படவில்லை.

நிவாரண உதவி வழங்கும் ஒப்பந்தங்களின் கோரிக்கைகளுக்கு அமைய நிவாரண தவணைக்கொடப்பணவுகளை விவசாயிகளுக்கு வழங்க சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி சபையின் தேயிலை பரிசோதகர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டி இருந்தது. தேயிலை பரிசோதகர்களின் ஒப்புதல் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக கண்டி மாவட்டத்தில் 331 சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் 47.23 ஹெக்டேயர் தேயிலைத் தோட்ட காணிகள் மீழ் பயிரச்சைக்கு தயார்படுத்தப்பட்டிருந்த நிலையில், இரண்டாம் மூன்றாம் தவணை நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

குண்டி மாவட்டத்தில் 23.85 ஹெக்டேயர் நிலத்தில் தேயிலை மீழ் பயிரிடல் நிமித்தம் மீழ் பயிரிடலுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 109 பயனாளிகளுக்கு ரூ. 3.58 மில்லியன் ஆரம்ப நிவாரணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் தேயிலை மீழ் நடுகை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் அம்பாரை மாவட்டத்தின் தமனை மற்றும் லாஹுகல பிரதேசம், மகாஓயா பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட 59.457 ஹெக்டேயர்களில் பயிரிடுவதற்கு ரூ. 4.88 மில்லியன்கள் 99 பயனாலர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் அவ் இரப்பர் பயிர்ச்செய்கை முறையே கோடை, காட்டு யானைகளின் மூலமான அழிவு, மற்றும் வராப்பிட்டிய நீர்த்தேக்கத்தை அமைப்பதற்கு காணிகள் சுவீகரிக்கப்பட்டமை, ஆகிய விடயங்கள் காரணமாக பயிர்ச்சைகைக்காக வழங்கப்பட்ட குறித்த நிவாரண நிதி பயனற்றுப் போயுள்ளது.

ஆம்பாரை மாவட்டத்தில் 15 விவசாயிகளால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட 12.135 ஹெக்டேயர் இரப்பர்

பயிர்ச்செய்ச் செய்கைக்கு மொத்தமாக ரூ. 849,317 நிவாரண உதவித்தொகைகளாக பெற்றுக்கொள்ளப்பட்ட பின் அப்பயிர்ச்செய்கை கைவிடப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| காணி அலுவல்கள் | கையேற்கப்பட்ட காணிகளிற்கு இழப்பீடு செலுத்துதலில் தாமதம் காரணமாக இழப்பீட்டு வட்டியாக ரூபா 542.71 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமை |
| | காணிக் குத்தகை வருமானத்தில் ரூபா 2,657 மில்லியன் நிலுவையாக உள்ளமை |
| | காணிகளை குத்தகைக்கு வழங்குதல் முறையாக இடம்பெற்றிருக்காமை |
| | வரைபடமமைத்தல் செயலாற்றல் குறைவாக உள்ளமை |
| | நில அளவையாளர்களின் முறையீனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்துள்ளமை |

# காணி அலுவல்கள்

நிலைபேறுருடய அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு காணி நில வளங்களை உகந்த விதத்தில் பயன்படுத்துவதே காணிப் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. அந்த எதிர்பாரப்பை நிறைவேற்றுவதை அடிப்படையாகக்கொண்டு காணி அமைச்சு, 4 திணைக்களையும் 4 நியதிச்சட்ட சபைகளையும் இணைத்து பின்வரும் பணிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- காணி விடயங்கள் தொடர்பான கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- நிலைபேறுடைய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு காணி கொடுக்கல் வாங்கல் கொள்கைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் படி குறிப்பிட்ட பிரிவுகளுக்கான அறிவுறைகளை வழங்குதல்.
- அரச காணிகளை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
- தேசிய தேவைகளுக்காக காணிகளை சுவீகரித்தல்.
- அரசாங்க காணிகளின் உடமையை உறுதிப்படுவதற்கு சொத்துரிமைப் பத்திரங்களைக் கொடுத்தல்.
- அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தேவைகளுக்கு அரசாங்க காணிகளை நீண்ட காலங்களுக்கும் குறுகிய காலங்களுக்கும் குத்தகைக்கு கொடுத்தல்.
- காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு உரிமைச் சான்றிதழ்களை பதிவு செய்தல்.
- தேசிய திட்டமிடலை இலக்காகக் கொண்டு காணிப்பரப்புகளை நிலஅளவை செய்தல், நில அளவை வரைபடங்களை தயாரித்தல், மற்றும் துணை ஆவனங்களை கொடுத்தல்.
- அரசாங்க காணிகள் சம்பந்தமான தகவல் அமைப்பை உருவாக்குதல்.

அமைச்சரவை திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது பின்வரும் குறைபாடுகள் வெளியானது.

## காணி சுவிகரித்தல்

1950 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க காணிச் சட்டத்தின் 38(அ) ஆம் இலக்க இடைக்கால கட்டளைச் சட்டத்தின் படி அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான காணிகளை தனியார் பிரிவுகளால் சுவீகரித்துக்கொள்ளும் செயல்முறையை காணி அமைச்சு, அபிவிருத்திச் செய்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள், மதிப்பீட்டுத் திணைக்களம், பிரதேச செயலாளர் அலுவலகம், நில அளவையாளர் திணைக்களம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்டிருக்க வேண்டும். அப் பணிகளை நிறைவேற்றுவதற்கு காலம் வரையறுக்கப்பட்டு திட்டமிடப்பட்ட செயல்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால் 2014 ஆம் ஆண்டுக்கும் 2018 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவ்வாறு காணி சுவீகரிப்புகளின்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 8029 கோப்புகளில் மதிப்பீட்டாண்டு முடிவில் 1368 கோப்புகளே முடிவுறுத்தத்தப் பட்டிருந்தன. அதாவது மொத்தக் கோப்புகளின் 17 வீதத்தை விட குறைவான அளவாகவே அது காணப்படுகிறது. 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான இழப்பீடு வழங்க தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மதிப்பீட்டாண்டில் இழப்பீட்டு வட்டியாக ரூ.மில்லியன் 452.71 செலுத்தப்பட்டிருந்தது.

## அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ அமைப்பு

தகவல் தொழிநுட்பங்களை உபயோகித்து அரச காணிகளின் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ அமைப்பொன்றை உருவாக்கி, 2013 ஆம் ஆண்டுமுதல் பணியாற்றிக் கொண்டிருப்பதுடன் அதற்காக 2018 ஆம் ஆண்டுவரை ரூ. மில்லியன் 115.71 செலவிடப்பட்டிருந்தது. குத்தகைக்கு

விடப்பட்ட காணிகள் சம்பந்தமான தகவல்கள் 2019 மே 31 ஆம் திகதிவரையிலேனும் இவ் அமைப்பில் உள்வாங்கப்படவில்லை. இதன் காரணமாக வரி அறிவிடல் சம்பந்தமாக தேவைப்படும் தகவல்களை இவ் அமைப்பிலிருந்து பெறமுடியாதுள்ளது.

### காணி வரி வருமான முகமைத்துவம்

மாகானங்களுக்கு இடையிலான விவசாய குடியேற்றப் பிரதேசங்களிலிருந்து காணி வரி வருமானத்தை சேகரிக்கம் பணி காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தினால் மேற்கொள்ளபடுவதுடன் அவ் வருமான சேகரிப்புக்கு உரிய மீழாய்வு நடவடிக்கைகள் நலினமடைந்துள்ளது. இதன் காரணமாக மதிப்பீட்டிண்டு இறுதியில் ரூ.மில்லியன் 35.65 வருமானப் பற்றாக்குறை நிலவுகிறது.

மாகாணங்களுக்கிடையிலான விவசாயக் குடியேற்றங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வரி வருமானங்களை சேகரிப்பது மாகான காணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அப் பிரதேசங்களில் அரச காணிகள் நிர்வாகம் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான உத்தியோகத்தர்களை கண்காணிமக்கும் பூரண அதிகாரம் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 91 வது பிரிவு மற்றும் 2010 ஆம் ஆண்டின் பெப்ரவரி 03 ஆம் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்கமுடைய சனாதிபதி அலுவலகத்தின் சுற்றுநிருபத்தின் படி காணி ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாக இருந்தபோதிலும், குத்தகைக்கு கொடுக்கும் செயல்முறைகள் மற்றும் வரி வருமானங்களை சேகரித்தல் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகள் பலவீனமடைந்து காணப்படுவதால் மீழாய்வு ஆண்டின் இறுதியில் ரூ.மில்லியன் 2656.29 வருமானம் குறைவடைந்துள்ளது.

### திட்டமிடப்பட்ட இலக்கை அடையாமை

- பிம்சவிய வேலைத்திட்டம் 2002 ஆம் வருடம் ஆரம்பித்து 2021 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு முடிவடையும் போது அதற்காக 16 வருடங்கள் கடந்திருந்தது. எனினும் அந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படும் 57 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமுறிய 3659 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் 1695 பிரிவுகள் அதாவது 46 வீதமான பிரிவுகளில் மட்டுமே நில அளவை வேலைகள் முடிக்கப்பட்டிருந்தன.
- அதேபோல் உரித்துகளை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளின் போது 2018 ஆம் ஆண்டின் 34428 கோவைகள் கிடப்பில் போடப்பட்டிருப்பதுடன் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிவரை கிடப்பில் போடப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை 414,543 ஆக இருக்கிறது. கிடப்பில் போடப்பட்ட அக் கோவைகளில் 2018 ஆம் ஆண்டின் 12,341 கோவைகளின் பிணக்குகள் தீர்க்கப்பட்டு உரித்தாவணங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அதன்படி கிடப்பில் போடப்பட்டிருந்த கோவைகளின் பணிகளை நிறைவுசெய்யும் வீதம் நூற்றுக்கு 36 வீதமாக காணப்பட்டது.

### காணி குத்துகைக்கு விடுதல் முறையாக செய்யப்படாமை.

காணிகளின் விஸ்தீரணம் 05 ஏக்கர்களை விட கூடுதலாக காணப்படும் சந்தர்பங்களில் கருத்திட்டங்களுக்கான காணிகள் குத்தகைக்கு விடப்படும்போது. அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும் களுத்துறை மாவட்டத்தின் மெத்தேகெதரவத்த காணியின் 80 ஏக்கர்கள் 04 நபர்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்காக காணி ஆணைக்குழுவினால் அமைச்சரவையின் ஒப்புதல் இன்றி குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அதற்கான ஆரம்ப மதிப்பீட்டுப் பணம் மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் மதிப்பீட்டிண்படி வரி வருமானங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை.

ஒரு வருடத்துக்கும் மேற்பட்ட காலத்துக்கு கருங்கல் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டபோது, மத்திய சூழல் அதிகார சபை மற்றும் புவியிச் சரிதவியல் அளவை சுரங்கம் பணியம் போன்ற ஸ்தாபகங்களின் பரிந்துறைகளைப் பெற்று முறையான வரி விதிப்பு முறையொன்றின் கீழ் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டிருக்க வேண்டும்.

மதிப்பீட்டாண்டில் குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் குறித்த நிறுவனங்களின் பரிந்துறைகள் இன்றி காணி மறுசிரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஒழுபொடுவ, யகலகலே மற்றும் இங்கிரிய தோட்டங்களுக்குச் சொந்தமான 22 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள கருங்கல் காணிகள் 2001,2004 மற்றும 2005 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அதேபோல் மில்லணிய ஹொரேகந்த தோட்டத்துக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைதுள்ள கருங்கல் ஒன்றை 2003 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டாண்டு இறுதிவரை அனுமதியின்றி அகழ்ந்து எடுத்திருந்த போதிலும், காணி மருசீரமைப்பு ஆணைக்குழு அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டிக்கவில்லை.
குத்தகைக்காரர்களால் குத்தகைவரி செலுத்தப்படாமை மற்றும் அதற்குறிய நிறுவனங்களால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒப்புதல்கள் பெறப்படாத காரணங்களாலும் காணி மருசீரமைப்பு ஆணைக்குழுவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இரத்து செய்யபட்டிருந்த போதிலும், ஒப்புதல் வழங்கப்படாத அகழ்வை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி 2018 நவம்பர் 30 ஆம் திகதியவில் ரூ.மில்லியன் 47.43 வரி வருமானம் அறவிடப்பட வேண்டியுள்ளது. அதேபோல் புத்தளம் மாவட்டத்தில் 173 ஏக்கர் காணியில் இரால் வளர்ப்புக்கு ஒப்புதலின்றி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பிலும் முறையான வழிமுறையொன்று பின்பற்றப்படாததன் காரணமாக 2018 ஆம் ஆண்டு இறுதியில் ரூ.மில்லியன் 16.42 வருமானம் குறைவடைந்துள்ளது.

## காணிகள் தொடர்பான ஆவணமொன்றை பேணுதல்

1972 ஆம் ஆண்டின் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட தினம் முதல் சுவிகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அக் காணிகளின் ஏக்கர் பிரமாணங்கள், ஒவ்வோறு காணியும் அமைந்துள்ள பிரதேசம், யாரிடமிருந்து சுவீகரிக்கப்பட்டது? தற்போது ஆட்சியுரிமை யாரால் மேற்கொள்ளப்படுகிறது? போன்ற விவரங்கள், வர்த்தமானி பத்திரிகையில் பிரசுகரிக்கப்பட்ட குறித்த அறிவித்தல் மற்றும் காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பிலான சகல விவரங்களும் உள்ளடங்களான ஆவனமொன்று, காணி மருசீரமைப்பு ஆணைக்குழுவினால் இற்றைப்படுத்தப் பட்டிருக்கவில்லை, அதேபோல் அது தொடர்பாக பயன்பாட்டு ஆவணமொன்றினால் விளக்கமளிப்பதற்கு ஆணைக்குழு தவரியுள்ளது. அதன்படி நிதி அறிகையில் காட்டப்பட்டுள்ள ரூ. மில்லியன் 676.1 ஆக காட்டப்பட்டுள்ள சுவீகரிக்கப்பட்ட காணிகளின் இருப்பு மற்றும் பெறுமதி பற்றிய உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

## காணிகளை பிரருக்கு வழங்குதல்

2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் காணிகளை பிரருக்கு வழங்குவதை தடைசெய்திருபினும், 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் கருத்திட்டங்களுக்காக காணிகள் குத்தைக்கு விடப்படும் செயல்முறைக்கு புறம்பாக காணிகள் பிரருக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு பிரருக்கு வழங்கப்பட்ட உரித்தாட்சிக்கான அங்கீகாரமும் உரித்தாட்சி அங்கீகாரம் வழங்கப்படாததைப்போன்று 02 வழிமுறைகளில் பட்டியலிடப்பட்டிருந்தன. உரித்தாட்சிக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்த காணிகளில் 760 ஏக்கர் 31 பேர்ச் திருப்பி எடுக்கப்படவில்லை. உரித்தாட்சி ஒப்புதல் அளிக்கப்படாத 1689 ஏக்கர்களுக்கு பெறப்பட்டிருந்த முற்பணங்களை அவ் விண்ணப்பதார்களுக்கு திருப்பி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## நில அளவைக்கான கட்டளைகளை நிறைவேற்றுதலும் நில வரைபடங்களை தயாரிக்கும் செயல்திறனும்.

36 வருடங்களுக்கு முன்பிருந்து நில அளவையாளர் திணைக்களத்தின் நில அளவையாளர் ஒருவர் ஒரு மாதத்துக்கு நில அளவை செய்யவேண்டிய ஆகக் குறைந்த காணித் துண்டுகளின் அளவு (Norms) 20 என்ற தீர்மானத்தின் படி பணியாற்றியுள்ளார். 36 வருடங்களுக்கு முன்பிருந்து பின்பற்றப்பட்டு வந்த இந் நிலைப்பாடு, நில அளவை நுட்பங்கள் உபகாரங்களின் தொழிநுட்ப வளர்ச்சியுடன் தற் காலத்துக்கு ஏற்ற விதத்தில் மறுசீரமைக்கப்பட்டு தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு முதில் 2018 ஆம் ஆண்டு

இறுதிவரை மொத்தமாக 33,443 நில அளவை கட்டளைகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றில் 22,039 நில அளவைக்கட்டளைகளை நிறைவேற்ற திணைக்களம் தவறியுள்ளது. இதனால் திணைக்களத்தின் நில அளவை கட்டளைகளை நிறைவேற்றும் மொத்த செயற்றிரன் நுற்றுக்கு 34 வீதமாக காணப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு இறுதியில் 1:50,000 அளவுத்திட்டத்தில் 92 நில வரைபடங்கள் வரைவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், மதிப்பீட்டாண்டு முடிவடையும் நிலையில் 70 நில அளவை வரைபடங்களே வரையப்பட்டிருந்தன. மொத்த நாட்டையும் உள்ளடக்கியதாக 1:10,000 அளவுத்திட்ட வரைபடங்கள் 1834 உருவாக்கப்படவிருந்த போதிலும், மதிப்பீட்டாண்டு முடிவின்போது 700 மாத்திரமே உருவாக்கப்பட்டிருந்தது.

## தேசிய காணி கையாளும் திட்டத்தை வடிவமைத்தல்

2010 மே 20 ஆம் திகதிய 1654/21 ஆம் இலக்க (அதிவிஷேட) வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூடாக தேசிய காணி கையாளும் திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் காணி கையாளுதல் கொள்ளைகளை செயற்படுத்துவதற்குமான அடிப்படையை நோக்கமாகக் கொண்ட காணி கையாளும் கொள்கை திட்டமிடல் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. இத்திணைக்களத்தினால் காணி கையாளும் திட்டங்களை தயாரித்தல் மற்றும் காணி கையாளும் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்புலங்களை மதிப்பீட்டாண்டின் இறுதிவரை தயாரிக்கவில்லை.

## நில அளவையாளர்களின் தவரான ஆய்வுகளும் ஒழுங்குமுறைகளும்.

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்துக்கு அமைய தொழில்சார்ந்த நெறிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதாகவும், தொழிலில் ஈடுபடுபவர்கள் கடமையாற்றும்போது அதி உச்ச தர நிர்ணயங்களை கடைப்பிடிப்பதையும் உறுதிசெய்யும் நோக்கில் நிலஅளவை சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் நில அளவையார்களின் தொழில் சார் தவறுகள் தொடர்பாக பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 78 ஆக இருந்தது. இவற்றின் 45 முறைபாடுகள் அதாவது 58 வீதமான பிணக்குகள் மாத்திரமே தீர்க்கப்பட்டுள்ளன. சபையில் பதிவு செய்யாது நில அளவை பணிகளை செய்யும் நபர்களைப்பற்றி உசாவுவதற்கு சபை போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

| | |
|---|---|
| கல்வி | தேசிய பாடசாலைகளிற்கு எல்லை மீறி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுதல் |
| | தொழில்நுட்பப் பாடங்களிற்காக ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுதல் |
| | ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவுற்றிருக்காமை |
| | அதிக எண்ணிக்கையிலான தேசிய பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள குறித்த பதவியணியினருக்கு எவ்வித பணிகளும் ஒப்படைக்கப்பட்டிருக்காமை |
| | பாடசாலைகளிலுள்ள 1,906 நூலகர்கள் தேவையான தகைமைகளைப் பூரணப்படுத்தியிருக்காமை |
| | 258 தேசிய பாடசாலைகளிலுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியுள்ளமை |

# கல்வி

தேசிய கல்வி கொள்கை கட்டமைப்பில் தேசிய பொது நோக்கங்களை நிறைவேற்றுவதை நோக்கி மாறும் உலகிற்கு பொருந்தும் வகையில் தரமான கல்வியை மீள்நிர்மாண நோக்காக கொண்டு

- இலங்கையின் சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்திற்கு தன்னம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான சுய நம்பிக்கையுடனும் உலக போட்டித்தன்மைக்கு நம்பிக்கையுடன் பிரவேசிப்பதற்கு இயலுமையை ஏற்படுத்துகின்ற விதத்தில் தேசிய கல்வி முறைமையை வடிவமைத்தல்
- இலங்கையில் காணப்படும் சகல பாடசாலைகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க செயற்படுகின்றதா என்பதனைக் கண்காணித்தல்
- கல்வி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பாய்வு செய்தல்
- தேசிய பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனிதவளங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்
- இலவச பாடபுத்தகங்கள், சீருடைகள் பாதணிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை வழங்குதல்
- ஒட்டுமொத்த கல்விக் கட்டமைப்பினுள் மற்றும் மாணவரிடையே கல்வியின் தரம் மற்றும் ஒழுக்கத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- இலங்கை கல்வி நிருவாக சேவையினதும், அதிபர் சேவையினதும், இலங்கை கல்வியியலாளர் சேவையினதும் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையினதும் நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகள்
- பௌத்த மற்றும் பாளி கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துதுல் மற்றும் பிரிவெனாக்கல்வியை மேம்படுத்தல்.
- வாசிப்பினால் பிள்ளை பூரணமாக்குவதற்காக பாடசாலை நூலகங்களை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்

ஆக்கபூர்வமாக செயற்படுத்தும் முழுமையான பொறுப்பினை வகிக்கும் கல்வி அமைச்சு, 02 திணைக்களங்களும் 04 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டன.

- 
- அரச பதிவேடுகளின் முறையான முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல்
- விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல்

அமைச்ச, திணைக்களங்கள் மற்றம் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்துதல்

மீளாய்வாண்டிற்காக கல்வி அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 21 மூலதன செலவின விடயங்களுக்கும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் முறையே ரூபா 5.46 மில்லியன் மற்றும் ரூபா 4.81 மில்லியனுமாக மொத்தம் ரூபா 10.27 மில்லியனான நிதிஏற்பாடு எவ்வித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன.

## பாடசாலைகளில் இடை நிலை வகுப்புகளுக்காக மாணவர்களை அனுமதித்தல்

2015 ஒக்தோபர் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2008 செப்தம்பர் 19 ஆந் திகதிய 37 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய பாடசாலைகளின் ஆரம்ப தரங்களின் சமமான வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இரண்டாம் நிலை தரங்களில் சமமான வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பிற்கு 38 உமாக ஆகக் கூடிய

மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டின் போது 73 தேசிய பாடசாலைகளில் அந்த எல்லையை மிகைத்து 3,339 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கடமை மேவுகைக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நிரந்தர நியமமொன்றை வழங்கும் வரை தற்காலிக அடிப்படையில் பதில் கடமை உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியுமாக இருந்தது. எவ்வாறாயினும் வருடக் கணக்கில் இருந்து 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை 353 தேசிய பாடசாலைகளில் 258 பாடசாலைகளின் அதிபர் பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், அப்பதவிகளில் கடமை மேவுகை செய்வதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ் வெற்றிடங்களான பதவிகளுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

## தொழில்நுட்ப பாடங்களுக்காக ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படல்.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் நாடு பூராகவும் தொழில்நுட்ப பாடங்களிற்காக 166 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களுக்கு இடையே பொறியியல் தொழில்நுட்ப விடயத்திற்காக 35 ஆசிரியர் வெற்றிடங்களும் தொழில்நுட்ப விஞ்ஞானத்திற்காக 117 ஆசிரிய வெற்றிடங்களும், உயிரியல் முறைமை தொழில்நுட்பவியலுக்காக 14 ஆசிரியர் வெற்றிடங்களும் காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தது.

## ஒழுக்காற்று பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படாமை

கல்வி அமைச்சு தேசிய பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள் மற்றும் அமைச்சின் ஏனைய நிறுவனங்களுக்குரியதாக 397 ஒழுக்காற்று சிக்கல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த ஒழுக்காற்று சிக்கல்களில் 128 இரண்டு ஆண்டுகளுக்கு குறைவான காலமாகவும் 30 சிக்கல்கள் 2 ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்தும் 9 ஒழுக்காற்று சிக்கல்கள் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் இருந்து வந்தன. இந்த ஒழுக்காற்று சிக்கல்களில் 42 நிதி முறைகேடுகள் தொடர்பாகவும் 62 சிக்கல்கள் பாடசாலைகளுக்காக மாணவர் அனுமதி தொடர்பாகவும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 19 ஒழுக்காற்று சிக்கல்களும் காணப்பட்டான.

## பாடசாலை பழைய மாணவர் சங்கம்

1964 நவம்பர் 20 ஆந் திகதிய 1964/27 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கை மற்றும் 1996 யூன் 21 ஆந் திகதிய பழைய மாணவர் சங்க கடிதத்தின் பிரகாரம் பாடசாலைகளில் நலன்புரி மற்றும் செயலாற்றலை அதிகரிப்பதற்காக பழைய மாணவர் சங்கம் தாபிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆதலால் பாடசாலைப் பெயரைப் பயன்படுத்தி பழைய மாணவர் சங்கத்தினால் சேகரிக்கப்படும் நிதி அப்பாடசாலைகளின் நலன்புரி மற்றும் செயலாற்றல் என்பவற்றிக்காக முழுமையாக அல்லது கூடியளவில் செலவிப்பட வேண்டியிருந்த போதும் 2018 ஆம் ஆண்டின் போது 18 பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கங்களினால் ரூபா 129 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதில் 08 பாடசாலைகளுக்காக ரூபா 24 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 09 பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 70 மில்லியன் பணம் அப் பாடசாலைகளில் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

## பாடசாலை ஆரம்பித்தலும் மூடுதலும்.

2018 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 21 மாவட்டங்களில் 104 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அதில் 31 பாடசாலைகள் போதியளவு மாணவர் எண்ணிக்கையொன்று இல்லாமை மற்றும் 45 பாடசாலைகள் நாட்டில் காணப்படும் நிலைமை என குறிப்பிடப்பட்டு மூடப்பட்டிருந்தன. அவ்வாறு மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் நடவடிக்கை முறை தொடர்பாக தெளிவான கொள்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### மாணவர்களை சிறந்த விளையாட்டு வீரர்களாக மாற்றும் நிகழ்ச்சித்திட்டம்.

உடல் மற்றும் உள சமநிலையில் ஆரோக்கியமான பரம்பரையொன்றை தேசத்திற்கு உருவாக்குதல் மற்றும் விளையாட்டுத் திறமைகளுடன் கூடிய மாணவர்களை சிறந்த விளையாட்டு வீரர்களாக மாற்றுவதற்கான கல்வி அமைச்சின் செயற்திட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. 07 நோக்கங்களை அடிப்படையாக கொண்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் 05 வருடங்களில் அவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 18,394.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 250 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 99 மில்லியன் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் நோக்கத்திற்கு உட்பாட்டின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### விஷேட கல்விப் பிரிவு

112 தேசிய பாடசாலைகள் மற்றும் 704 மாகாண பாடசாலைகளில் விஷேட கல்வி பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப்பாடசாலைகளில் விஷேட தேவைகளுடைய 10,284 மாணவர்கள் கற்கின்றனர். தேசிய பாடசாலைகளிலும், மாகாண பாடசாலைகளிலும் காணப்படுகின்ற விஷேட கல்விப் பிரிவுகள் என்பவற்றிற்காக முறையே 1,189 ஆசியர்கள் மற்றும் 597 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுட்டன. விஷேட கல்விப் பிரிவில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் 158 ஆசிரியர் அதாவது கற்பிக்கின்ற ஆசிரியர்களில் 13 சதவீதம் வேறுபாடங்களுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களாகும். விஷேட கல்விக்காக பயிற்சி மற்றும் நியமனம் பெற்ற 119 ஆசிரியர்கள் அப்பிரிவுகள் காணப்படாத பாடசாலைகளிலும் அப்பிரிவுகள் காணப்படும் பாடசாலைகளில் ஏனைய வகுப்புகளில் 54 ஆசிரியர்களும் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர். அதன் பிரகாரம் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கு தேவையான கற்புத்தலை வழங்குவதற்குரிய ஆசிரியர்களை அத்தேவைப்பாட்டை நிறைவேற்றும் வகையில் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

### தனியார் பாடசாலைகள் நடாத்துதல்

1961 இன் 8 ஆம் இலக்க உபகார பாடசாலை பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 05 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான வயதமைப்பினை தாண்டும் பிள்ளைகளுக்காக கல்வியை வழங்குவதற்கு எந்தவொரு நபருக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் பாரியளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப்பாடசாலைகள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையின் கீழ் அல்லது தனிப்பட்ட நிறுவனமொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தன. தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க சர்வதேச பாடசாலைகள் மேற்பார்வை செய்தல் கல்வி அமைச்சின் பிரதான நோக்கமொன்றாக இருந்த போதிலும் அப்பாடசாலைகளில் இலங்கையின் அடிப்படைக் கல்வியை வழங்கும் நிறுவனமொன்றாக கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அப்பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் கல்வி அமைச்சினால் சேகரிப்பதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

அரச பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய குறைந்த தரம் மற்றும் போதுமானதன்மை என்ற விதந்துரைகளில் இத்தனியார் பாடசாலைகள் போசிப்பு மட்டத்தில் காணப்படுகின்றதா எனவும் ஒவ்வொரு மட்டத்தின் பிரகாரம் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்காக தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாமொன்றைக் கொண்டுள்ளதா மற்றும் கல்வி முறைமைகளில் காலரீதியில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக நாளது வரையான விடயங்களை கண்காணிக்கும் செயற்பாடொன்று கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### ஆசிரியர் சமப்படுத்தல் இடமாற்றம் பணிப்பொறுப்பு ஒப்படைத்தல்.

கல்வி

ஆசிரியர் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படாமை காரணமாக 113 தேசிய பாடசாலைகளில் 1,069 பாடங்களுக்காக ஆசிரியர் பற்றாக்கறையும் 1,359 மற்றும் 584 பாடங்களுக்கு 898 ஆசிரியர் மிகையும் காணப்பட்டன. அம்மிகை மற்றும் குறைகளை சமப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சு தவறியிருந்தது. வருடாந்த இடமாற்ற கொள்கை செயற்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் 115 பாடசாலைகளில் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 2,270 ஆசிரியர்கள் காணப்படுவதுடன் 107 தேசிய பாடசலைகளில் 601 ஆசிரியர்கள் நியமனம் பெற்ற பாடங்களுக்கு புறம்பான பாடங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. தேசிய பாடசாலைகளில் பிரதி மற்றும் உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குவாரமொன்றிற்கு 10, 12 மற்றும் 35 பாடசாலைகள் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது 164 தேசிய பாடசாலைகளில் எவ்வித கடமை பொறுப்பும் கையளிக்கப்படாத பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை முறையே 139 பேர், 42 பேர் மற்றும் 549 பேராக இருந்தனர்.

## க.பொ.த. (உயர் தர) பாடங்களின் பெறுபேறுகள் மற்றும் ஆசிரியர் வசதிகள்.

2017 ஆம் ஆண்டின் போது தகவல் மற்றும் தொழில்நுட்பம், பௌதீகவியல் இரசாயனவியல், இணைந்த கணிதம், தர்க்கவியல், மற்றும் விஞ்ஞான முறைமைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்ற மாணவர்களில் 1/3 இற்கு அண்மித்த அளவானோர் பரீட்சைகளில் சித்தியடைந்திருக்கவில்லை. விவசாய விஞ்ஞானம், விவசாய தொழிநுட்பம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அதிதிறமை சித்தியடைதல் நூற்றிற்கு ஒரு சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அது முறையே 0.82, 0.44, 1.11, 0.61, மற்றும் 0.37 சதவீதமாக இருந்தன. ஆங்கில இலக்கியம், பிரெஞ்சு, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய ஆகிய வெளிநாட்டு மொழிகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை 52 ஆக் காணப்பட்டதுடன் ரஷ்ய மற்றும் ஜப்பான் மொழிகளுக்காக கடந்த ஐந்து ஆண்டு காலம் முழுவதும் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆங்கில இலக்கிய பாடத்திற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை எவ்வித ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## சிசு அருண கல்விசார் நிதியம்

2001 ஆம் ஆண்டின் போது மாணவர் கல்வி நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2003 ஏப்ரல் 29 ஆந் திகதி நடைபெற்ற கல்வி சபையின் அறிக்கையின் பிரகாரம் நிதியத்தில் உள்ள நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 2.5 மில்லியன் பெறுமதி பூர்த்தியானதன் பின்னர் புலமைப் பரிசில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை குறித்த நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 2.6 மில்லியன் பூர்த்தி செய்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 4.4 மில்லியனாக இருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானிக்கப்பட்டிருந்த எல்லை 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மிகைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் புலமை பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கைவில்லை. இந்நிதியம் தொடர்பாக போதியளவு கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நிதியத்தின் பெயர் பதிவிறக்கப்பட்டுள்ளதால் அதன் ஆதனங்கள் மற்றும் உரித்துக்கள் பொது திறைசேரிக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

## பாடசாலை நூலக அபிவிருத்தி.

இது வரை முழு நாட்டிலும் காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை 10,162 ஆக இருந்த போதிலும் அதில் 3,499 பாடசாலைகளுக்கு மாத்திரம் நிரந்தர நூலக வசதிகள் காணப்பட்டதுடன் 2,185 வாசிப்பு அறைகளும் 3,314 தற்காலிக நூலகங்களும் காணப்பட்டன.

2018 ஆம் ஆண்டின் போது 3 கட்டங்களின் கீழ் 9 மாகாணங்களில் 28 வலயங்களில் 80 பாடப்பணிப்பாளர்களுக்கு ரூபா 3.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த நூலக அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அப்பயிற்சியின் பெறுபேறுகள் மாகாண உத்தியோகத்தர்கள் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பாடசாலைகளில் ஆசிரிய நூலகர்களாக 2,600 பேர் சேவை

ஈடுபட்டிருந்ததுடன் அதில் 1906 பேர் அதற்காக தகைமைகளை கொண்டிருக்கவில்லை.

## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2003 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அதன் செயற்பாடுகள் தொடர்பான இலக்கினை அடைந்து கொள்ளும் வேலைத்திட்டம் திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டு அந்த அடைவுகள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வது தொடர்பாக அளவிடுவதற்காக குறிப்புகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## பரீட்சை பெறுபேறுகளின் சான்றிதழ்களை வழங்குதல்.

கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் (சாதாரண தரம்) மற்றும் (உயர்தரம்) பரீட்சைகளின் பெறுபேற்றுச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்காக நாளாந்தம் அதிகளவானோர் பரீட்சை திணைக்களத்திற்கு வருகை தருவது அவதானிக்கப்பட்டது திணைக்களத்தினால் பணம் அறவிடப்பட்டு வழங்கப்படுகின்ற உயர் தரத்திலான பெறுபேற்று சான்றிதழுக்கு சமமான சான்றிதழொன்றை வழங்க நடவடிக்கை எடுக்காமையால் இந்நிலைமை உருவாகியிருந்தது.

அவ்வாறே ஒரு நாள் சேவை மூலம் சான்றுப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக நாளொன்றுக்கு அதிகளவானோர் வருவதால் சான்றிதழ் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களில் அதிகளவானோர் ஒரு நாள் சேவையின் பகுதிக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்காக போதியளவு பதவியணியாளர் ஈடுபடுத்த முடியாமல் இருந்தது.

2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10,660 பெறுபேறுகள் அளவில் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள முடியாமல் காணப்பட்டன. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 49 தரவு உள்ளீட்டாளர்கள் பதவிகளில் 40 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சைத் திணைக்களம் தவறியிருந்தது.

## பாடப்புத்தகங்கள் அச்சிடல் மற்றும் பகிர்ந்தளித்தல்

2018 ஆம் ஆண்டில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,499.25 மில்லியன் பெறுமதியான 419 புத்தகங்களில் 39,714,000 பிரதிகள் 02 அரச நிறுவனங்களினாலும் 27 தனியார் அச்சகங்களினாலும் அச்சிடப்பட்டிருந்தன. இங்கு ஒரு ஆணையாளர் மற்றும் இரண்டு பிரதி ஆணையாளர்களுடன் கூடிய குழுவொன்று பெயரிடப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் பேரில் பல சந்தர்ப்பங்களில் அச்சீட்டாளர்களுக்கு பாடப்புத்தகங்கள் அச்சீட்டாளர்களுக்கான பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சரவை பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2017 மே 31 ஆந் திகதி 2017/09 ஆம் இலக்க கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் உள்ளக சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் பாடப்புத்தக அச்சிடல் மற்றும் விநியோகம் தொடர்பாக களஞ்சியத்தில் மிகை புத்தகங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படாமல் இருப்பதற்கும் அத்தியவசிய பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை சரியாக கணக்கிடப்பட்டு விண்ணப்பிப்பதற்கு பாடசாலைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும் கொழும்பு பிரதேசத்தின் 11 பாடசாலைகளுக்கு தேவைப்பாட்டினை மிகைத்து 10,545 பாடப்புத்தகங்கள் திணைக்களத்தினால் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தன.

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.63 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் இலங்கை தரக் கட்டளை நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் நியமங்களை முடியுமான அளவில் பயன்படுத்த வேண்டியதாக இருந்தன. எனினும் தரப் பரிசோதனை நியமங்களுக்குரிய தரப்பரிசோதனை மற்றும் பரிசோதனை முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிப்பதற்காக புதிய பாட விடயத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 3 ஆம் தரத்தின் ஆங்கில பயிற்சி புத்தகம், ஆங்கில எழுத்து புத்தகம் மற்றும் ஆங்கில பாடப்புத்தகம்

கல்வி

என்பன பிழைகளுடன் கூடியதாக இருந்தமையால் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் தேவைப்பாட்டினை விட கூடுதலாக அச்சிடப்பட்ட ரூபா 5.75 மில்லியன் பெறுமதியான 27,275 புத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அகற்றப்பட்டிருந்தன.

2018 விதந்துரை குழுவின் அறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தரங்களில் பாடப்புத்தகங்களின் மீண்டும் பாவனை 50 சதவீதம் வரை அதிகரித்ததன் காரணமாக கடதாசிகளின் தரத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது 2018 ஆண்டுகளுக்காக அச்சிடப்பட்டு 357 மொத்த புத்தகங்களின் வகைகளில் 106 நிறம் மாறியமை காரணமாக ரூபா 6.13 மில்லியன் தண்டப் பணம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட புத்தகங்களின் வெளியுரை மற்றும் உட்புற கடதாசிகளில் திணைக்களம் நிர்ணயிக்கப்பட்டிருந்த விதந்துரைகளின் பிரகாரம் அச்சிடல் மற்றும் களஞ்சிய அங்கீகாரத்தை வழங்கும் போது பரீட்சிக்கப்பட வேண்டிய இழுபடாத (Tensile Index) பரிசோதனை எந்தவொரு புத்தகமொன்று தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வருடாந்த புத்தக தேவைப்பாடு சரியாக இனங்கானப்படாமையால் மிகை இருப்பு அதிகரித்தமை உட்பட அந்த புத்தகங்கள் களஞ்சியப்படுத்தலில் பலவீனங்கள் காரணமாக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது புத்தகங்கள், ஆசிரியர் கைநூல் புத்தகங்களில் மற்றும் 1,190,691 மேலதிக புத்தகங்களின் அளவு கைதவிர்க்கப்பட்டிருந்தன.

## இரண்டு மாடிகளுடனான விடுதியில் மலசலகூட முறைமை நிர்மாணம்.

2018 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட ரூபா 27.85 மில்லியனான தேசிய கல்வி நிறுவனத்தின் இரண்டு மாடி விடுதியின் மலசல கூட முறைமையொன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிடல் மற்றும் மதிப்பீடு தயாரிப்பதற்காக மதியுரைக் கட்டனங்களாக ஒப்பந்த பெறுமதிப்பில் 5 சதவீதமான ரூபா 1.20 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவின் பின்னர் 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | |
|---|---|
| | **தொழில் பாதுகாப்புப் பிரிவிற்குச் சொந்தமான இரண்டு ஆய்வுகூடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை**<br><br>**நீதிமன்றங்களால் வழக்குத் தீர்ப்புக்களிற்கமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பவைக்கப்பட்ட நிதியினை ஊழியர்களிற்குச் செலுத்தாது திணைக்களத்தில் வைத்திருத்தல்**<br><br>**செயற்பாடற்ற 4,921 வழக்குகள் காணப்படுவதுடன் அந்த வழக்குகளிலிருந்து ரூபா 1,548 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருத்தல்.** |

# தொழிலாளர், தொழிற்சங்க உறவுகள்

செயற்திறனான மற்றும் கைத்தொழில் சிக்கலற்ற தொழில்சார் தொடர்பொன்றை ஏற்படுத்தும் நோக்கில் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு

- தொழில் மற்றும் தொழில்சங்க உறவுகள் தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- ஊழியச் சேமலாப நிதியம் தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டம் ஆகியவற்றை நிர்வகித்தல்
- சர்வதேச தொழிலாளர் நியமங்கள் , பதவியணி நிர்வாகம் மற்றும் நலன்புரி சம்பந்தமாக கொள்கைகளை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை, சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்பாண்மை ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை பேணுதல்.
- தொழில் சங்கங்களை பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்து தொழிற்சங்கங்களும் அலுவல்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் பொருட்டுத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தலும் முறைப்படுத்தலும்
- தேசிய மனிதவலு மற்றும் தொழில்துறைக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்
- தொழில்சார் மற்றும் தொழில்துறை வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- தொழில் உறவுகளுக்குரிய சட்டதிட்டங்களை தயாரித்தலும் ஒழுங்குபடுத்தலுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட திணைக்களங்கள் மற்றும் 03 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## இலங்கையின் தொழில் துறை தன்மை மற்றும் சுகாதாரம்.

விபத்துக்கள் மற்றும் ஆபத்துக்கள் இல்லாத சுகாதார பாதுகாப்புடனான சேவை குழுவொன்றை கட்டியெழுப்புதல், ஊழியர்களின் செயற்திறனை, வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு வழி வகுக்கும் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 1942 இன் 45 ஆம் இலக்க கைத்தொழில் கட்டளைச் சட்டத்தின் மூலம் சட்ட ஏற்பாடுகள் தொழில் வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது.

- கைத்தொழில் கட்டளைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்காக போதியளவு வெளிச்சத்தை வழங்குதல், 14577 ஆம் இலக்க 1965 திசெம்பர் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்த கட்டளை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 12(2) பிரிவின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்காக போதியளவு காற்றோற்றம் வழங்குதல் அமைச்சரினால் கட்டளையிடப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.


- தொழில் திணைக்களத்தின் தொழில்துறை பாதுகாப்பு பிரிவிடமுள்ள 02 ஆய்வுகூட வளவுகள் காணப்பட்ட போதும் அவற்றை பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆய்வுகூடத்திலிருந்து தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலவசமாக

இரத்த பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் இலவச இரத்த பரிசோதனை நிறுத்தப்பட்டிருந்தது. அதற்காக பயன்படுத்தப்பட்ட இரசாயன உபகரணங்கள் உருக்குலைந்து ஆய்வுகூட வளவில் காணப்பட்டன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 03 ஆய்வு கூட உதவியாளர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

- இலங்கையின் தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிறுவக சட்டத்தின் மூலம் தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிறுவகம் ஸ்தமாபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரதான நோக்கமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை தொடர்பான நியமங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## ஊழியர் நலன்களை தீர்வு செய்தல்.

2011 ஆம் ஆண்டு முதல் 2018 நவம்பர் மாதம் வரை நீதிமன்றத்தினால் வழக்கு தீர்ப்புகள் மூலம் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பணத்திலிருந்து ஊழியர்களுக்கு செலுத்தப்படாத ரூபா 299.5 மில்லியன் கூட்டுத் தொகையான பண மீதியொன்று இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் தொழில் திணைக்களத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது அவ்வாறு வைக்கப்பட்டிருந்த மீதி ரூபா 1.11 மில்லியனாக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டளவில் அம்மீதி ரூபா 219.34 மில்லியன் வரை வருடாந்த அதிகரிப்பொன்று காணப்பட்டது. விபரங்கள் வரைபட இல 45 காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 45 - நீதிமன்றத்தினால் வழக்கு தீர்ப்பு மூலம் வழங்கப்பட்டிருந்த தொகை.
மூலம் - ஊழியர் சேமலாப நிதியத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத தகவல்கள்.

- தொழில் கொள்வோரால் நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்ட தொகை, பகுதி பகுதியாக காசோலை மூலம் தொழில் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அத்தொகைக்காக தயாரிக்கப்பட்ட “C” அறிக்கை மற்றும் தேவைப்பட்டியல்களில் காணப்பட்ட வெவ்வேறு பலவீனங்கள் காரணமாக கொடுப்பனவு செய்ய முடியாமல், 181 வழக்குகளுக்குரிய ரூபா 93.09 மிலலியனான மீதியொன்று காணப்பட்டது.

- தொழில் அலுவலகங்களினால் வழக்கு மூலம் அறவிடப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதியத்தை

ஏனைய அறவீடுகளிலிருந்து ரூபா 409.76 மில்லியன் 2019 யூலை 01 ஆந் திகதி வரை ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- நீதிமன்றங்களினால் சேகரிக்கப்பட்ட பணம் திணைக்களத்திற்கு அனுப்பபடும் போது வழக்கு இலக்கம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குறித்த அலுவலகம் குறிப்பிடப்படாமையால் அப்பணத்தை செலுத்த வேண்டிய ஊழியர்களை திட்டவட்டமாக இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன் அதற்கு கூடுதலான காலத்தையும் செலவிடுவதற்கு நேர்ந்தது. எனினும் நீதிமன்றத்தினால் அவ்வாறு பணத்தை அனுப்பும் போது குறித்த தொழில் அலுவலகம் இனங்காணப்பட்டு குறிப்பிட்டிருந்த போதும் 2019 யூலை 01 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 0.79 மில்லியன் தொகை காணப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியின் பங்களிப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொழில் வழங்குனரின் பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்வதற்கு தொழில் அலுவலகம் ஊடாக துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகவும் மத்திய வங்கியுடன் காணப்பட்ட கலந்துரையாடலுடன் இணங்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட மீதியுடன் பல நிறுவனங்கள் காணப்பட்டதுடன் சரியான அறிக்கை கிடைக்காமை அடிப்படையில் அத்தொகை கணக்கீடு செய்யப்படாமல் காணப்பட்டன.
- நீதிமன்ற தீர்மானமொன்றின் படி கிடைத்த மற்றும் நலனாலிகளின் கணக்குகளுக்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் "C" அறிக்கைகளில் குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறு செலவு வைக்கப்படாதிருந்த ரூபா 43.69 மில்லியன் காணப்பட்டது.

## தொழிலாளர் பரிசோதனைகளின் போதுமான தன்மை

40 மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குரிய பரீட்சிக்கப்ட வேண்டிய 146,468 மொத்த நிறுவனங்களில் மீளாய்வாண்டில் 75,076 நிறுவனங்கள் அதாவது 51 சதவீதம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிடையே மஹரகம, கொழும்பு மேற்கு, அநுராதபுரம், கொழும்பு வடக்கு, ஜாஎல, நுவரெலியா ஆகிய தொழில் அலுவலகங்களில் பரிசோதனைக்கு உட்படாத நிறுவனங்களில் சதவீதம் குறையே 84, 80, 64, 66, 65 மற்றும் 75 சதவீதமாக இருந்தது.

## பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் தொடர்பாக செயற்படுதல்

40 மாவட்ட அலுவலகங்களுக்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்த வெவ்வேறு முறைப்பாடுகளின் கூட்டுத்தொகை 24,972 ஆக இருந்தது. 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 14 நாட்களில் முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இறுதி வரை 10,064 முறைப்பாடுகள் அதாவது 40 சதவீதம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## செயற்படாத வழக்குகள்.

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படாத வழக்குகளின் எண்ணிக்கை 4,971 ஆக இருந்ததுடன் அதன் கீழ் ரூபா 1,547.62 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது அவ்வழக்குகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடுக்கப்பட்ட வழக்குகள் 3,186 ஆக இருந்தன. அது மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 65 சதவீதமாக இருந்தது மேலும் திறந்த பிடியாணை வழக்குகளாக 2,994 வழக்கு கோவைகளும் காணப்பட்டதுடன் அதன் கீழ் ரூபா 933 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தன. அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 2,047 கோவைகளும் இருந்ததுடன் அது மொத்த எண்ணிக்கையில் 68 சதவீதமாக இருந்தது.

## ஊழியர் இழப்பீடுகள் தீர்வு செய்தல்.

2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை அனர்த்தங்களுக்கு அல்லது மரணித்த ஊழியர்களுக்காக இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் தொழில் கொள்வோரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 17,29 மில்லியன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வெவ்வேறு காரணங்கள் குறிப்பிட்டு உரித்தாளர்களுக்கு செலுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வயது பூரணமடைந்த பராயமடையாதோருக்கு விடுவிக்கப்பட வேண்டிய 01 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்படும் ரூபா 9.96 மில்லியன் பெறுமதியான 384 கணக்குகள் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## அங்கத்தவர்களை மீண்டும் பதிவு செய்யும் செயற்திட்டம்.

அங்கத்தவர்களை மீண்டும் பதிவு செய்யும் செயற்திட்டத்தின் முதலாவது கட்டம் 2007/2008 ஆண்டுகளின் போதும் இரண்டாவது கட்டம் 2010/2011 ஆண்டுகளின் போதும் மூன்றாம் கட்டம் 2016/2017 ஆம் ஆண்டின் போதும் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 வரை தொழில் திணைக்களத்தின் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 247.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் கைவிரல் அடையாளம் பெற்றுக்கொண்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கையில் ஒவ்வொரு கட்டத்தின் கீழ் முறையே 38 சதவீதம் 25 சதவீதம் மற்றும் 14 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

- Kiosk இயந்திர பொருத்துதல் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தி 2008 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 12.61 மில்லியன் செலவிடப்பட்டு 15,000 அட்டைகள் மற்றும் ரூபா 2.75 செலவில் 05 Kiosk இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அட்டைகளின் அங்கத்தவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற தகவல்கள் அச்சிடலுடம் பின்னர் அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்காமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 ஆண்டுகள் பூராக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் செயற்படுத்தப்பட்டதாக தகவல் வெளிப்படுத்தப்படாமையால் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் செலவிடப்பட்ட பணம் விலைவற்றதாக இருந்தது மேலும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 14.92 மில்லியன் செலவிடப்பட்டு 50 இயந்திரங்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிவரை 10 இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## வழக்கு தொடரப்பட்டு அறவிடப்பட்ட பணத்தை தீர்வு செய்யப்படாமை

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பாதிருந்த தொழில் கொள்வோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு அறவிடப்பட்டிருந்த 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 301.47 மில்லியன் அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமல் தொழில் திணைக்களத்தின் வைப்புக் கணக்கொன்றில் 2011 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்படிருந்தது. அப்பணத்தை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் அங்கத்தவர்களுக்கு உரித்தாக வேண்டிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## தீர்வு செய்யப்படாத நலன்கள்.

நலன்களை பெற்றுக்கொளவதற்காக அங்கத்தவர்களால் 18 தொழிலாளர் அலுவலகங்களுக்கு 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காலப்பகுதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களுக்கு இடையே ரூபா 17.92 மில்லியனான 112 நலன் விண்ணப்பங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அதன் பின்னர் வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அந்த விண்ணப்பங்களிலிருந்து 90 விண்ணப்பங்கள் அதாவது மொத்த விண்ணப்பங்கள் அளவில் 80 சதவீதம் 2019 மார்ச் 01 ஆந் திகதி வரை 06 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் தாமதம் இடம்

பெற்றிருந்த போதிலும் அதனை தீர்வு எடுக்கப்பட்டிருக்கவில்லை.
செய்வதற்கு நடவடிக்கை

| சுற்றாடல் | |
|---|---|
| | உமாஓய பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்தத் தவறியமை |
| | திண்மக் கழிவுகளை அகற்றும் வசதியினை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் கீழ் குப்பை சேகரித்து வைப்பான்களை நிர்மாணித்தல் ஆண்டின் இறுதி வரை ஆரம்பிக்கப்படாமை<br><br>பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 30 சேதனப் பசளைப் பிரிவுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திராமை |

# சுற்றாடல்

நிலைபேருடைய சுற்றுப் புறச்சூழல் ஒன்றை உருவாக்கும் நோக்கில் செயலாற்றுவதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்படும் இரண்டு திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவகங்கள் 2 உம் காணப்படுகிறன. இந் நிறுவகங்களினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்

- சுற்றாடல் துறைக்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
- தற்கால மற்றும் எதிர்கால சந்ததிகளையும் கருத்தில் கொண்டு சூழலைப் பாதுகாத்தல்
- சூழல் மாசுரலைத் தடுக்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பெறுபேறுகளை அடையும் விதத்தில் அந் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.
- கடல் மாசுரலைத் தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் நகர திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.
- வனம், வன விலங்கள் மற்றும் மரஞ் செடி கொடிகளை அழியவிடாது பேணிப் பாதுகாத்தல்.
- நாட்டில் விரகுக்கான கேள்வியை பூர்த்தி செய்ய வர்த்தக ரீதியான காடுவளர்ப்பினை அபிவிருத்தி செய்தல்.
- மாணிக்கம், தங்க நகைத் தொழிற்சாலைகள், வியாபார அபிவிருத்தி மற்றும் ஒழுங்கமைத்தல்.
- கடல் ஓரங்களை பாதுகாத்தலும் பாதுகாப்பும்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சூற்றடால் அமைச்சும் அவற்றின் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வு கணிப்பீட்டின் சாராம்சங்கள் பின்வருமாறு.

## உமாஓய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்

உமாஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து சுற்றுச் சூழல் மற்றும் ஏனைய நீர்த் தேவைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாக விதத்தில் நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள தென் பிராந்தியத்தின் கிரிந்தி ஓயா நீர்த்தேக்கத்துகடகு 145 மில்லியன் சதுர மீட்டர் அளவு நீர் வருடாந்தம் கொண்டு செல்லப்பட்டு நீர் பாய்ச்சப் படுவதை நோக்காகக் கொண்டு இலங்கை அரசுக்கும் ஈரான் அரசுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 2007 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இக் கருத்திடத்துக்குத் தேவையான நிதியினை ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி (EDBI) மூலம் ஐ.அ.டொ. மில்லியன் 450.00 உம் இலங்கை அரசாங்கம் பங்களிப்புச் செய்த ஐ.அ.டொ மில்லியன் 79.06 அதாவது ரூபா. மில்லியன் 15,474.25 வினையும் உள்ளடக்கியதாக அமைந்தது. கருத்திட்டத்தின் சகல செயற்பாடுகளும் குறித்த கால வரையரைக்குள் செயற்படுத்தப்படவோ முடிவுறுத்தப்படவோ இல்லை. இதன் காரணமாக எதிர்பார்க்கப்படட பிரதிபலனை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## கழிவுகளை அகற்றும் கட்டுமான பணிகளுக்கான கருத்திட்டம்.

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியா உதவிக்கடன் திட்டத்தின் கீழ் திண்மக் கழிவுகளை அகற்றும் நோக்கிலான கட்டுமானப் பணிகளுக்கான கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு ஐ.அ.டொ மில்லியன் 41.89 ஆக இருந்தது. இதற்கான நிதித் உதவி 10 வருட சலுகை காலத்துடன் 40 வருடங்களுக்குள் மீழச் செலுத்தக் கூடிய வகையில் நூற்றுக்கு 0.15 வீத வருடாந்த வட்டி அடிப்படையில் ஐ.அ.டொலர் மில்லியன் 33.54 க்கான கடன் தொகை கொரிய கடன் உதவித்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்தது. கருத்திட்டத்தின் உள்நாட்டு நிதிப்பங்களிப்பு ஐ.அ.டொலர் மில்லியன் 8.35 ஆகவும் இருந்தது. 2013 ஜுலை 23 ஆம் திகதி மேற்குறித்த நிதியைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசு கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தினால் 04 வருட காலத்தினுள் கொத்தணி முறையின் கீழ்

உள்ளூராட்சி மன்ற ஆட்சிப் பிரதேசங்களில் பிறப்பிக்கப்படும் கழிவுகளை இறுதியாக முடிவுறுத்தத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும். அந்நோக்கத்தை நிறைவேற்றவென சுகாதார முறையில் கழிவுத் தொட்டிகள் 04 இனை அனுராத்தில் அமைந்துள்ள கிரிக்குளம், ஹிக்கடுவ மொன்றோவியா வத்த, பானந்துறை மாலமுள்ள மற்றும் உடுநுவர கொனாதிகாவத்த ஆகிய இடங்களில் உருவாக்க திட்டமிடப்பட்டிருந்தது.

முறையான சாத்திய ஆய்வு செய்யப்பட்டு சுகாதார முறையிலான கழிவுத் தொட்டிகள் அமைப்பதற்கான இடங்களை தெரிவு செய்வதற்கு கருத்திட்டத்தின் ஆரம்பதத்தில் நடவடிகளை எடுக்கப்படவில்லை, பானந்துறை, மாலமுனை, உடுநுவர மற்றும் கொளாடிகாவத்த நிர்மாணப் பணிகளுக்கு பதிலாக யாழ்ப்பாணம், கீரிமலை, மெதிரிகிரிய மற்றும் யுதகனாவ ஆகிய இடங்கிளல் இக் கழிவுத் தொட்டிகள் ஒருவாக்கப்படுவதற்கு மட்டுமேயான கருத்திட்டம் அரம்பிக்கப்பட்டு 2 வருட காலம் கடந்துள்ளது. அதன்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் சரியான நேரத்தில் மற்றும் ஆக்க வளமுள்ளதாக அடைந்துகொள்ள முடியாமல் போயுள்ளதுடன் கழிவுத் தொட்டிகளின் நிர்மாணப் பணிகள் மதிப்பீட்டு ஆண்டு முடிவுவிலும் ஆரம்பக்கப் பட்டிருக்கவில்லை.

## பிளிசறு கருத்திட்டம்

பிளிசறு கருத்திட்டத்தின் மூலம், முறையாக வளங்களை பாதுகாத்து, திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்தல், திண்மக் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக குறித்த நபர்களின் கல்வி மற்றும் திறன்களை வளர்த்தல், திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களை செயற்படுத்துதல், நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தேவையான முதற்கட்ட ஏற்பாடுகளை செய்தல், திண்மக் கழிவுளை மீழ் சூழட்சிசெய்யும் வங்கி முறையொன்றை உருவாக்குதல், முறையான திண்மக் கழிவுகளை முகாமையத்துவம் செய்யாத உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஆகிய பிரதான நோக்கங்களாக இருந்தது. 06 வருடங்களுக்குறிய நிதித் திட்டமிடலுக்கு அமைய கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா. 5.6 பில்லியன் ஆகவிருந்தது. அதில் ரூ. 2.675 பில்லியன் திரைசேரியிடமிருந்தும் ரூபா. 03 பில்லியன் 2008 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட ஆவணங்களினூடாக அறிமுகப் படுத்தப்பட்டிருந்த “பசுமை வரி” ஊடாகவும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

கருத்திட்டத்தின் ஆரம்பம் முதல் மீழாய்வு வருடம் வரை, கொம்போஸ்ட் உர உற்பத்தி நிலையங்கள் 139 காணப்பட்டன. இவற்றில் 108 நிலையங்கள் செயற்பாட்டிலும், நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்ம் கொம்போஸ்ட் உர நிலையங்கள் 12 உம், செயற்படாமல் இருந்த 14 கொம்போஸ்ட் உர நிலையங்களும், நிர்மாணிக்காமல் பணத்தை திருப்பிச் செலுத்திய 02 நிலையங்களும், நிர்மண பணிகளை இடை நடுவில் நிறுத்திய நிலையங்கள் 14 உம் காணப்பட்டன. செயற்படும் கொம்போஸ்ட் உர நிலையங்கள் பெருமளவில் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் முறையாக செயற்படுத்தப்படாமையும் கருதிட்டங்கள் முறையாக மீழாய்வு செய்யப்படாததன் காரணமாக கொம்போஸ்ட் உர நிலையங்கள் சிறந்த மட்டத்தில் செயற்படவில்லை.

| வெளிநாட்டு அலுவல்கள் | |
|---|---|
| | கென்பராவிலுள்ள இலங்கை உயர் ஸ்தாணிகர் அலுவலகத்திற்குரிய கட்டிடம் |
| | வெளிநாட்டு தூதரகங்களிற்கு வாடகை செலுத்துதல் |
| | கொன்சியூலர் ஜெனரால் அலுவலகத்தினை திருத்தியமைத்தல் |
| | தூதரகங்களிற்காக கட்டுநிதி விடுவித்தல் |

# வெளிநாட்டு அலுவல்கள்

பரஸ்பர நலன்களை பெற்றுக் கொள்வதற்காக உலகில் நட்பு ரீதியான நாடொன்றாக இருப்பது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறாக இருந்தது. அப் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு தேசிய ரீதியில் 18 பிரிவுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 37 வெளிநாட்டு தூதரகங்கள், 13 உயர் ஸ்தானிகள் அலுவலகங்கள், 01 பிரதி உயர் ஸ்தானிகர் அலுவலகம், 13 கொன்சியூலர் ஜெனரால் அலுவலகங்கள், ஐக்கிய நாடுகளுக்கான 02 நிரந்தர தூதரகங்கள் மற்றும் 01 பிரதிநிதித்துவ அலுவலகம் என்ற வகையில் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ள தூதரகங்களின் வலையமைப்பினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன

- வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- இலங்கை பற்றி சாதகமான பிரதி விம்பத்தைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்படுத்தலும் சர்வதேச ரீதியாக சாட்டப்படும் எதிர்ப்பிரசாரங்கள் குறித்து உரியவாறு பதிலளித்தலும்
- வெளிநாடுகளுடன் தூதராண்மை உறவுகளைப் பேணுதலும் ஒப்பந்தங்கள், சமவாயங்கள் குறித்த பேச்சு வார்த்தைகளும்
- தூதராண்மைக் காப்புரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொடுத்தல்
- வெளிநாட்டு வர்த்தகத்தையும் சுற்றுலா நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதில் உதவியளித்தல்.
- புவியியல் ரீதியான அரசியல் போக்குகளை முகாமை செய்வதற்கு வேண்டிய உபாய முறைகள் பற்றி ஆய்வு செய்தலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதலும்
- வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் நலனோம்பலுக்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல்.

அமைச்சினால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## கன்பெரா உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள்

அவுஸ்திரேலியாவின் கன்பெரா உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான அவுஸ்திரேலிய டொலர் 2,589,000 பெறுமதியான 2 கட்டிடங்கள் முறையே 2012 ஆம் ஆண்டிலிருந்தும் மற்றும் 2007 ஆம் ஆண்டிலிருந்தும் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு கட்டிடத்தை உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வதிவிடமாக மாற்றுவதற்கு 2017 செப்டெம்பர் 26 ஆந் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 2018 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 260 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான பயன்பாடுகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

## தூதரகங்களுக்கான வாடகைக் கொடுப்பனவு

மீளாய்வாண்டின் போது ரூபா 93 மில்லியன் கனடாவின் டொரன்டோ மற்றும் ஒட்டாவாவிலுள்ள தூதரகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடங்களுக்காக (ஒட்டாவா வதிவிடம் நீங்கலாக) வாடகைப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இச் செலவைக் குறைக்கும் வகையில் இதற்குப் பதிலாக சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான திறனைப் பற்றிக் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான திருத்த வேலைகள்

100 வருடங்கள் பழைமை வாய்ந்த கடனாவிலுள்ள உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்துவதற்கான பதில் நடவடிக்கைகளைப் பற்றி யோசிக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 26.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## கொன்சியூலர் வேலைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களால் செயற்படுத்தப்படுகின்ற கொன்சியூலர் வேலைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 2018 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து திருத்தப்பட்டு வர்த்தமானி விளம்பரமாகப் பிரசுரிக்கப்பட்டது. இருந்த போதிலும், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட பண அலகுகள் பயன்படுத்தப்படாத நாடுகளில் செலவாணியை எவ்வாறு மாற்றுதல் என்பது தொடர்பான பொதுவான பொறிமுறையை ஒன்று தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பல்வேறு அடிப்படைகளில் மாற்ற வீதங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

## கொன்சியூலர் ஜெனரல் அலுவலகத்திற்கான திருத்த வேலைகள்

2016 ஆம் ஆண்டின் போது ரூபா 28.16 மில்லியன் செலவிடப்பட்டு மும்பாயிலுள்ள கொன்சியூலர் ஜெனரல் அலுவலகம் திருத்த ப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இத் திருத்த வேலைகள் முறையாகச் செய்யப்படாமையினால் 2018 ஆம் ஆண்டின் போது மீண்டும் திருத்த வேலைகள் சம்பந்தமாக ரூபா 999,626 செலவிடப்பட வேண்டியேற்பட்டது.

## தூதரகங்களுக்கு பணம் அனுப்புதல்

ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி தெஹ்ரான் தூதுவராலயத்திற்கு பணம் அனுப்புகையானது துபாயிலுள்ள கொன்சியூலர் ஜெனரல் அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு மாதமும் தெஹ்ரான் தூதுவர் துபாய்க்குப் பயணிக்க வேண்டியேற்பட்டது. இந்நடைமுறையானது பாதுகாப்பற்றதும் செலவு கூடியதுமான ஒன்றாகக் காணப்பட்டதுடன் விமானப் பயணச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய படிகள் என்பவற்றுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5.12 மில்லியன் மற்றும் ரூபா 3.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## யாத்திரீகர்களின் ஓய்வு விடுதிகளின் நாளாந்த வருமானம்

புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஓய்வு விடுதிகளுக்கு வருகை தருகின்ற யாத்தீரிகர்களின் பட்டியல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஓய்வு விடுதிகளால் பெறப்படுகின்ற நாளாந்த வருமானத்திற்காக வழங்கப்படுகின்ற சிட்டைகளின் சரியான எண்ணிக்கைகள், பெறப்படுகின்ற சகல வருமானங்களும் வங்கியில் வைப்பிலிடப்படுகின்றதா என்பதையும் அறிந்துகொள்வதற்கான போதுமான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமையொன்றை பேணாமை

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களின் மேம்பாட்டிற்குத் தேவையான போதிய வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை

முறைகேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்திராமை

குவைட் இழப்பீடு உரியவாறு தீர்க்கப்படாமை

வெளிநாடு செல்லும் ஊழியர்களிடமிருந்து பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை

முறையான அங்கீகாரமின்றி பதவியணியினருக்கு படிகளை செலுத்துதல்

முறையான அங்கீகாரமின்றி பதவியணியினருக்கு ஊழியர் காப்புறுதி முறையொன்று செயற்படுத்தப்படுதல்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக தேவையான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல்களினூடாக தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பை அதிகரித்தல் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேற்றினை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சின் கீழுள்ள 02 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- வெளிநாட்டுத் தொழிலுக்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றை உருவாக்குதலும் அமுல்ப்படுத்துதலும்
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் வதிவற்ற இலங்கையர்களின் நலன்புரிகள்
- பதிவு செய்யப்பட்ட தொழில் முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும்
- வெளிநாட்டுத் தொழில்களுக்ககான தொழில்சார் வழிகாட்டிகள்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றது.

## வெளிநாட்டுத் தொழில் துறை சம்பந்தமாக நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமை பேணப்படாமை

1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் 53(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே மற்றும் தமது தொழில் வாய்ப்பை பூர்த்தி செய்ததன் பின்னர் திரும்பி வருகை தந்த இலங்கையர்கள் சம்பந்தமான தகவல் தரவு வங்கியை பேணவேண்டியிருந்தது. எனினும் துறையுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நளாதுவரையாக்கப்பட்ட ஒரு தரவு வங்கியை பேணுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை வெளிநாட்டு தொழில் அமைச்சிற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் முடியாதிருந்தது. விசேடமாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தரவு முறைமையுடன் தொடர்பு கொண்டு வெளிநாட்டு தொழில்களுக்காக வெளியே செல்கின்ற மற்றும் மீண்டும் வருகை தருகின்ற தொழிலாளர்களின் தரவுகளை பெற்றுக்கொள்கின்ற வசதிகளும் பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. துறையில் காணப்படுகின்ற பல்வேறு சிக்கல்களுக்காக விரைவாக தீர்வினை வழங்குவதற்கும் தேசிய குடியகல்வு புலம்பெயர்க் கொள்கைகளையும் குடியகழ்வு சம்பந்தமான ஏனைய தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகள், சட்டங்கள் முதலியவற்றை அமுல்ப்படுத்துவதற்கும் இந்நிலைமை தடையாக உள்ளது.

## வெளிநாட்டு தொழில் துறையின் மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்தல்

நாட்டிலிருந்து வெளிச்செல்கின்ற இலங்கை தொழிலாளர்கள் தொடர்பாக தொடர்புகளை பேணுதல், வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கு உயர்வான மற்றும் தரமான வெளிநாட்டுச் சந்தையை உருவாக்குதல், அரசாங்களுக்கிடையே அறிவு மற்றும் ஏனைய வளங்களை பரிமாற்றம் செய்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக இராஜதந்திர மட்டத்தில் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் மற்றும் வலுமிக்க புரிந்துணர்வு உடன்படிக்கைகளை பேணுதல் முக்கியமானவையாகும். எவ்வாறாயினும் தற்பொழுது துறையில் காணப்படுகின்ற சிக்கல்களை கவனத்திற்கு கொண்டு பார்க்கும் போது மேலே கூறிய தொடர்புகளை பேணுதல் சம்பந்தமாக

போதிய வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்

வெளிநாட்டு தொழில்துறையில் இடம் பெற்ற பல்வேறு ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் பணியகத்தில் விசேட புலனாய்வு பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 டிசெம்பர் 31 வரை அப்பிரிவிற்காக 17 பொலிஸ் உத்தியோகத்தர்களை உள்ளடக்கி 36 பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். 2018 ஆம் ஆண்டின் போது அப்பிரிவிற்கு 2452 முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதிலும் 1364 முறைபாடுகளின் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 322 முறைபாடுகளை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 1088 முறைபாடுகள் 2018 டிசெம்பர் 31 வரை புலனாய்வு மட்டத்தில் காணப்பட்டன.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 13 மாத காலப்பகுதிக்குள் வெளிநாட்டு தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்து ரூபா 108.46 மில்லியன் பணம் மோசடி செய்தமைக்குரிய 274 முறைப்பாடுகள் அப்பிரிவிற்கு கிடைத்திருந்தது. வெளிநாட்டுத் தொழிலை வழங்குவதற்கு வாக்குறுதியளித்தாக எழுத்து மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்ததனால் அம்முறைப்பாடுகள் விசேட புலனாய்வுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு உரிய பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாடுகள் சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் துறையில் இடம்பெறுகின்ற இவ்வாறான ஒழுங்கீனங்களைக் குறைப்பதற்கு அப்பிரிவை ஆரம்பிப்பதன் மூலம் மாத்திரம் முடியாதிருந்தது.

## தங்கவைக்கும் இல்லங்களுக்கு வருகின்ற எண்ணிக்கையைக் குறைத்தல்

கடந்த தொடர்ச்சியான 03 ஆண்டுகளுள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காக வெளிநாடு சென்று பல்வேறு காரணங்களின் அடிப்படையில் வெளிநாட்டு தூதுவராலயங்களில் பாதுகாப்பிற்காக வருகை தந்த பெண்களில் 10324 பேர் தங்கவைக்கும் இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை அதில் இருந்த பாதிக்கப்பட்ட 250 பேர்களில் 20 பேர் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அந்த இல்லங்களில் தங்கியிருந்தனர். அவ்வாறு அந்த இல்லங்களில் வாடகை, சாப்பாடு, மருத்துவ உதவி என்பவற்றிற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 43.30 மில்லியன் மொத்த தொகை அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 87.32 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2,383 பேர் வருகை தந்திருந்தனர் இவ்வாறு தங்கவைக்கும் இல்லங்களுக்கு தொடர்ச்சியாக வருகை தருவதற்கான காரணங்களைத் தேடிப்பார்த்து இந்த நிலைமையைக் குறைக்கக்கூடிய நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## குவைட் இழப்பீடு முறைப்படியாக தீர்த்துவைக்கப்படாமை

1990/1991 வளைகுடா யுத்தத்தின் காரணமாக அங்கே தொழில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீடு ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்பீட்டிற்கான நிதியக் கணக்கின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 3,177.56 மில்லியனாக இருந்தது. 2018 திசெம்பர் 31 வரை இழப்பீடு பெறவேண்டியவர்களுக்கு உள்ளபடியாக செலுத்த வேண்டிய பணம் ரூபா 251,45 மில்லியனாக இருந்தது. எனினும் பணியகத்தால் அப்பணத்தை தீர்த்து வைக்காது முதலீடு செய்யப்பட்டு ரூபா 2,926.10 மில்லியன் வருமானம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## ரடவிரு செயற்திட்டம்

இலங்கை சமூர்த்தி அதிகாரசபையினதும் பணியகத்தினதும் ஒத்துழைப்புடன் குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் 2018 செப்தெம்பர் 20 ஆம் திகதி வரை 12,078 குடிபெயர்ந்தவர்களுக்காக சமூர்த்தி வங்கிகளில் ரூபா 3,557 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. 2157

குடிபெயர்ந்தவர்களினால் ரூபா 214.68 மில்லியன் கடன் திருப்பிச் செலுத்தாதுவிடப்பட்டிருந்தது. இவர்களில் குடிபெயர்ந்த 1573 நபர்களுக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாக எதுவித பிணையும் இன்றி கடன் வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது உடன்படிக்கைக்கு இணங்க செயற்படாமை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதினதும் பின்தொடர் நடவடிக்கைகளினதும் பலவீனம் ஆகிய விடயங்கள் காரணமாக அத்திட்டம் செயற்பாடற்று இருந்ததுடன் பணியகத்திடம் இது சம்பந்தமாக எதுவித தகவல்களும் இருக்கவில்லை. மேற்கூறிய விடயத்திற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் பணியகத்தின் பேரில் ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்வதற்கு பதிலாக பணியகத்தால் இலங்கை வங்கியின் சமூர்த்தி அதிகாரசபையின் பேரில் பேணப்பட்டு வந்த கணக்கு ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அதற்குரிய வட்டியும் 2014 ஆம் ஆண்டிலிருந்து பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

## வெளிநாடு செல்கின்ற தொழிலாளர்களிடமிருந்து பல்வேறு கட்டணங்களை அறவீடு செய்தல்

1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க தொழிலுக்காக வெளிநாடு செல்கின்ற நபர்களிடமிருந்து பணியகத்தில் தொடக்கத்தில் பதிவு செய்யும் போது ரூபா 15200 தொகையையும் மீள் பதிவு செய்யும் போது ரூபா 3,200 தொகை மாத்திரம் கட்டணமாக அறவிடக்கூடியதாக இருந்தது. எனினும் முறையான அங்கீகாரமின்றியும் கட்டணத்தை தீர்மானிப்பதற்கான முறையான நடைமுறையின்றியும் வெளிநாடு செல்கின்ற தொழிலாளரிடமிருந்து பல்வேறு முறைகளில் கட்டணம் அறவிடுவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 391.67 மில்லியன் வருமானம் பணியகத்தால் உழைக்கப்பட்டிருந்தது.

## முறையான அங்கீகாரமின்றி பதவியினருக்கு படிகள் செலுத்துதல்

2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க அரசாங்கதொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது பணியகத்தால் தயாரிக்கப்பட்ட வரையறைகளின் அடிப்படையில் 09 முறைமைகளின் பதவியணியினர்களுக்கு படிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது அதற்காக முறையே ரூபா 83.17 மில்லியன் மற்றும் ரூபா 86.40 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 90.35 மில்லியன் படிகளுக்கு மேலதிகமாக 2018 யூன் 20 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 17,500 வீதம் விசேட ஊக்குவிப்பு படியாக ரூபா 28.63 மில்லியன் மொத்த தொகை பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

## முறையான அங்கீகாரமின்றி ஊழியர் காப்புறுதித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்

அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணியகத்தின் பதவியணியினருக்காக மருத்துவ பட்டியல்களினை மீளளிப்புச் செய்தல் மற்றும் விபத்து இழப்பீடுகளை வழங்கும் காப்புறுதி முறைமை 1995 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. வருடாந்தம் இதற்கான முழுமையான இழப்பீட்டு பணமானது பணியகத்தின் வருமானத்தினைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 45.09 மில்லியன் மற்றும் ரூபா 44.29 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 17(3) ஆம் உப பிரிவிற்கு இணங்க பணியகத்தின் நிதிகளின் மூலம் அவ்வாறான செலவுகளை செய்யும் இயலுமை இருக்கவில்லை.

## கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி

வருடாந்த மீன் உற்பத்தி படிப்படியாக குறைவடைதல்.

நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களப்புகளில் வண்டல் மண் அகற்றப்படாமை

களப்புகளை எல்லைப்படுத்துவதற்காக தரக்குறைவான எல்லைக் கல் கொள்வனவு செய்தல்.

மீட்புப் படகொன்றை தயாரித்தல்

பல்தின படகுகளை உற்பத்தி செய்தல்

அரசாங்க நிதிகளை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளித்தல்

தேவைக்கு அதிகமாக மீன்பிடி வலைகளை கொள்வனவு செய்தல்

குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துதல்

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

மீன் பாவனையை அதிகரிப்பதன் மூலம் உயர்ந்த ஊட்டச்சத்து மட்டத்துடான மக்கள், அதிக வெளிநாட்டு நாணயமாற்று, உயர்ந்த சமூக பொருளாதார நிலைமை என்பவற்றுடனான கடற்றொழில் சமூகத்தை உருவாக்குதல் இத்துறையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவகளாக இருந்தது.

- கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள திணைக்களம் என்பன நியதிச்சட்ட நிறுவனங்களினதும் கூட்டுத்தாபனத்தினதும் விடயங்களுக்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மதிப்பீடு செய்தல் என்பன.
- சமுத்திர உவர் நீர் மற்றும் நன்னீர் மீன் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான கடற்றொழில் படகுகளை முகாமைத்துவம் செய்தலும் செயற்படுத்தலும்.
- அடையாளங்காணப்பட்ட பொருளாதார வலயங்களுக்குள் கடற்றொழில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- கடற்றொழில் கைத்தொழிலுக்கு தேவையானன ஐஸ் இயந்திரம், குளிர் அறை, மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
- உயிர் மற்றும் உயிரற்ற தேசிய நீர் வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி வள்ளங்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் பகிர்ந்தளித்தல் என்பன
- கடல் மீன் பிடித்தலை உள்ளடக்கி நீர் வாழ் பயிரின அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தலும்,
- மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்தலும் பகிர்ந்தளித்தலும்,


அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், 05 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- கடற்றொழில் பிரிவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் மற்றும் அதன் விளைவுகளை கடற்றொழில் கைத்தொழிலின் உயர்ச்சிக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- நவீன விஞ்ஞான முறைமைகளினூடாக சமுத்திர வளங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.

அமைச்சு திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

## வருடாந்த மீன் உற்பத்தி படிப்படியாக குறைவடைதல்.

மீளாய்வாண்டில் மீன் உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 633,750 மெற்றிக் தொன்னாக இருந்த போதிலும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 527,260 மெற்றிக் தொன்னாக இருந்தமை 2014 ஆம் ஆண்டின் போது மீன் உற்பத்தி 535,250 மெற்றிக் தொன்னாக இருந்த போதும் அது 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 7,990 மெற்றிக் தொன்னால் குறைவடைந்து 527,060 மெற்றிக் தொன் வரை குறைவடைந்திருந்தது. விபரங்கள் வரைபு 46 காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் - வருடாந்த மீன் உற்பத்தி
மூலம் - கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் புள்ளி விபர பிரிவு

### மொத்த மீன் மற்றும் மீன் உற்பத்தி ஏற்றுமதி அதிகரிப்பு

2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 24,827 மெற்றிக் தொன்னும் 27,998 மெற்றிக் தொன்னாக இருந்ததுடன் 2017 உடன் ஒப்பிடும் போது அது 3,171 மெற்றிக் தொன்னால் அதிகரித்திருந்தது. அவ்வாறு மொத்த தேசிய உற்பத்திக்கு மீன் மற்றும் மீன் உற்பத்தியின் பங்களிப்பு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே 1.3 சதவீதம் மற்றும் 1.2 சதவீதமாக இருந்தது.

### களப்புகளில் வண்டல் மண் அகற்றுதல்.

2018 ஆம் ஆண்டில் வருடாந்த மதிப்பீட்டில் 10 களப்புக்களில் வண்டல் மண் அகற்றப்பட்டு ஆழமாக்கி சுத்திகரிப்பதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு மேறகொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடுகளில் புத்தளம், நயாரு, அருகம்பே மற்றும் ருகவ ஆகிய கலப்புகளில் வண்டல் மண் அகற்றும் நடவடிக்கை முன்னுரிமையாக மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2019 மே 31 ஆந் திகதி வரை எந்தவொரு களப்பொன்றையும் அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### களப்புகளை எல்லைப்படுத்துவதற்காக எல்லைக் கல் கொள்வனவு செய்தல்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் விஷேட பாதுகாப்பு பிரதேசமொன்றாக பேணிச்செல்வதற்கு கலப்பு எல்லைகளை குறிக்கும் தேவைப்பாடொன்று இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 10 கலப்புக்களின் எல்லைகளை அளவிடுவதற்காக ரூபா 31.96 மில்லியன் பெறுமதியான 5x6 அடி அளவிலான 19888 எல்லைக்கற்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 சனவரி மாதம் வரை 11264 எல்லைக் கற்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4831 எல்லைக்கற்களை வழங்குவதற்காக ரூபா 7.70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 யூன் மாதம் வரையிலும் 06 மாதம் காலம் கடந்திருந்த போதிலும் அந்த எல்லைக்கல் கலப்பு எல்லைக்கல் குறிப்பிடலுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த எல்லைக் கற்கள் கலப்பினை அண்மித்ததாக குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் சில எல்லைக் கல் உரிய தரத்திற்கு இணங்காதிருந்தமை கண்டறியப்பட்டது.

## கப்பல் அவதான நிலைய கட்டிடத்தை நிர்மாணித்தல்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கப்பல் அவதான நிலைய கட்டிடத்தை நீடிக்கும் நிர்மாண ஒப்பந்தத்திற்காக மொத்த கிரய மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செலுத்த வேண்டிய ஆகக்கூடிய நிச்சயமற்ற / நிகழத்தக்க அளவின் பிரகாரம் விலகல் ரூபா 8,974,795 மில்லியனாக இருந்தது. அதற்காக கொடுப்பனவு செய்யும் போது அப்பெறுமதியை மிகைத்து ரூபா 15.93 மில்லியன் பௌதீக நிச்சயமற்ற தன்மைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகாரமின்றி பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக ரூபா 6.96 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## பிணியாளர் இயந்திர படகொன்றை அமைத்தல்.

வடமாகண சுகாதார சேவையின் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்க எழுத்துமூல உடன்படிக்கையொன்றுக்கு வராமல் வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்தினால் ரூபா 4.51 மில்லியன் செலவிடப்பட்ட பிணியாளர் கப்பலொன்று (Ambulance Boat) தயாரிக்கப்பட்டிருந்தது. குறித்துரைக்கப்பட்ட விதந்துரைகளுக்கு இணங்கியதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று மூலம் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்படாமல் கப்பலுக்காக ருபா 1.13 மில்லியனான படகு என்ஜினொன்று கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. அந்த என்ஜின் அதிகளவு சூடாகுவதன் காரணமாக கொள்வனவாளர் கப்பல் கொள்வனவினை நிராகரித்திருந்தார். அதன் பிரகாரம் கப்பல் மற்றும் என்ஜினுக்காக செலவிடபட்ட ரூபா 4.52 மில்லியனான கிரயத்தை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. அது தொடர்பாக பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர் தொடர்பான முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு 20.8 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## பலநாள் இயந்திரபடகொன்றை தயாரித்தல்

மீன் பிடியின் பின்அறுவடை சேதத்தை குறைத்து தரமான மீன் உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் 10 பலநாள் படகுகளை தயாரித்து வழங்குவதற்கு சீநோர் அமைப்பிற்கு வழங்குவதற்கு 2016 யூன் 06 ஆந் திகதி அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பல்நாள் படகொன்றை தயாரிப்பதற்கான உற்பத்தி விலை ரூபா 26 மில்லியனுக்கு மதிப்பீட செய்யப்பட்ட அரசினால் ஐம்பது சதவீத மானியமொன்றும் ஐம்பது சதவீத்தை மீனவர்களாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இச்செயற்பாடு 2016 திசெம்பர் 15 இல் உள்ளவாறு அதற்கு முன்னர் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 5 பலநாள் படகுகளை சீநோர் அமைப்பினாலும் எஞ்சிய 05 படகுகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள தனியார் படகு துறை மூலம் சீநோர் நிறுவனதின் மேற்பார்வையின் கீழ் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

சீநோர் மன்றத்தினால் 2016 திசெம்பர் 15 இற்கு முன்னர் 5 பலநாள் படகுகளை தயாரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் சீநோர் அமைப்பினால் பல்நாள் படகினையும் தனியார் நிறுவனாத்திற்கும் வழங்கிய பல்நாள படகுகள் 3 இன் தயாரிப்புமம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

சீநோர் மன்றம் தயாரித்து மீனவருக்கு வழங்கிய படகொன்று முதலாவது வெள்ளோட்டத்தின் போது அதாவது 2018 மார்ச்ச 22 ஆந் திகதி தீயினால் அழிவடைந்திருந்தது. 2018 பெப்ரவரி 20 ஆந் திகதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கப்பல் பொறியியல் உதவியாளரினால் பலநாள் படகின் நிலைமை நன்றாக அமைக்கப்பட்டுள்ளதாக உறுதிபடுத்தப்பட்டிருந்த போதும் இச்சேதம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றம் 104 இன் பிரகாரம் முறையான பரிசோதனையொன்ற மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### அரசின் நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இடமளித்தல்

கலப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 161.40 மில்லியன் பெறுமதியான களைகள் மற்றும் எஞ்சிய பொருட்களை அகற்றும் 03 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 42.57 மில்லியன் வழங்குனருக்க கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இம்முற்பணத்தை கொடுப்பனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பிணை ஆவணங்களில் கையொப்பம் போலியானதாக இருந்ததுடன் அத்தவறான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 42.57 மில்லியன் முற்பணம் கொடுப்பனவு வெசய்யப்பட்டிருந்தது. அம்முற்பணத் தொகை 06 மாதங்கள் தனிப்பட்ட பாவனைக்கு இடமளிக்கப்பட்டு பின்னர் அறவிடப்பட்டிருந்தது.

### தேவைப்பாட்டை மிகைத்து மீன் வலைகள் கொள்வனவு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீரின வாழ் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் உட்பட 15 நிலையங்களினால் ரூபா 21.41 மில்லியன் பெறுமதியான மீன் வலைகள் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்தன. 2018 செப்தம்பர் 30 ஆந் திகதி அளவில் தாய் மீன் முகாமைத்துவத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 8.93 மில்லியனில் இருந்து 80 சதவீதமான ரூபா 7.18 மில்லியனான மீன் வலைகள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்தது. தம்புள்ள, கலாவெவ, உடவளவ, இரணமடு, முருதவெல ஆகிய நிலையங்களில் மொத்தம் ரூபா 17.71 மில்லியன் பெறுமதியான மீன்பிடி வலைகள் இருப்பொன்று காணப்படும் போதும் அந்நிலையங்களுக்கே 2018 ஆம் ஆண்டின் போதும் மொத்தம் ரூபா 4.90 மில்லியனானக வலைகள் பகிரப்பட்டிருந்தன.

### பயன்படுத்தப்படாததும் குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்திற்குரிய அநுராதபுரவில் அமைந்தள்ள பழைய உப உற்பத்திகள் தொழிற்சாலையொன்று, பொலன்னறுவ, இரத்தினபுரி, புத்தளம், வேலனி, சாய்ந்தமருது, பேருவள மற்றும் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள 07 ஐஸ் தொழிற்சாலைகள், உத்தியோகபூர்வ விடுதியொன்றும் கருவாடு உலர வைக்கும் பிரிவொன்று, திருகோணமலையில் அமைந்துள்ள வலை தயாரிக்கும் நிலையமொன்றும் மன்னாரில் அமைந்துள்ள கருவாடு உலர வைக்கும் பிரிவொன்று, பேசாலையில் அமைந்துள்ளஐஸ் நிலையமொன்று மட்டக்களப்பில் அமைந்துள்ள 03 கொள்கலன் குளிரூட்டிகளின் 03 பாகங்கள், யாழ்பாணம் கரையூர் காணி மற்றம் குளிர் அறைக் கட்டிடம், குருணாகலையில் அமைந்துள்ள காணி மற்றும் சுற்றுலா விடுதி என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 02 ஆண்டுகளுக்கு 29 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே முகத்துவாரம் குளியறையின் 07 இயந்திரங்களும் 13 குளிர் அறைகளும் 04 அதிகுளிரூட்டிகளும் 02 கன்டென்சர்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

### விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள் கொடுப்பனவு

மீளாய்வாண்டின் போது இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் ஐந்து உத்தியோகத்தர்கள் ஏனைய 04 அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிரந்தார். அந்த ஐந்து உத்தியோகத்தர்களில் மூன்று பேருக்கு சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 1.66 மில்லியன் கூட்டுதாபன நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### எதிர்பார்க்கப்பட்ட விலை விபரங்களுக்கு புறம்பாக மீன் அறுவடை கொள்வனவு

ஐரோப்பிய சங்கத்தினால் விதிக்கபட்டிருந்த தடைகளை அகற்றும் வரை கடற்றொழிலாளர்களின் மிகை மீன் இருப்பினை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி நிதி ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தூனா செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விலை விபரங்களுக்கு புறம்பாக அப்போதய இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் உப தலைவரின் அங்கீகாரத்தின் பேரில் மீன் இருப்பினை கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் இடம்பெற்றிருந்தது. இதனால் 02

வார காலப்பகுதியில் ரூபா 47.36 மில்லியன் நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

### ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல்.

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் 2007 ஆண்டின் போது ரூபா 5.06 மில்லியனுக்கு 06 எண்ணணைய் தாங்கிகளைள வழங்குவதற்கான ஒப்பந்தததிற்காக முற்பணமாக ரூபா 2.79 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அந்தஎண்ணைய் தாங்கிகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்காமை தொடர்பாக அதற்கு பொறுப்பான வழங்கல் முகாமையாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் அவ் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளாமல் அவ் வழங்கல் முகாமையாளர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

### பாலம் தராசினை பன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் நிலைப்படுத்தாமை

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் தேசிய போட்டி கூறுவிலை கோரும் முறைமையின் கீழ் காலி, மிரிஸ்ஸ, குடாவெல்ல மற்றும் பேருவள மீன்பிடி துறைமுகங்களுக்காக 40 தொன் இயலளவுடைய 04 பாலம் தராசுகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 4.43 மில்லியன் ஒப்பந்த தொகை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரால் ஒப்பந்தத்தை பொறுப்பேற்ற 2016 திசெம்பர் 28 ஆந் திகதி முதல் 120 நாட்களுக்குள் அதாவது 2017 ஏப்ரல் 26 ஆந் திகதி வரை 04 மீன்பிடித் துறைமுகங்களில் பாலங்களை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு உட்படுத்தியிருந்த போதும் 2019 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை 777 நாட்கள் கடந்திருந்த போதும் எந்தவொரு துறைமுகத்திலும் பாலம் தராசு பயன்பாட்டிற்கு எடுக்ககூடிய நிலைமையில் நிறுவப்பட்டிருக்கவில்லை.

| சுகாதாரம் மற்றும் போசாக்கு | |
|---|---|
| | சேகரிக்கப்பட்டுள்ள வருமானங்களை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்காமை<br><br>கைவிரல் அடையாளமிடல் இயந்திரங்களை பயன்படுத்தாமை<br><br>முறையற்ற விதத்தில் மேலதிகநேரப் படி செலுத்துதல்<br><br>சாத்தியவள ஆய்வின்றி பேருந்துகளை கொள்வனவு செய்தல்<br><br>உரிய கால அட்டவணையின்றி மருந்துகளிற்கு கட்டளையிடுதல்<br><br>தரமற்ற மருத்துவ வழங்கல்கள்<br><br>காலங்கடந்த மருந்துகளை வழங்குதல்<br><br>பதவி வறிதாக்கப்பட்ட மருத்துவர்களிற்குச் சம்பளம் செலுத்துதல்<br><br>வைத்தியர் நெவில் பர்ணாந்து வைத்தியசாலையின் ஆதனங்களை கையேற்காமை<br><br>இரண்டு ஹைட்ரொக்லேவ் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதுள்ளமை<br><br>வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் என்ற பெயரில் காணியொன்றை கொள்வனவு செய்தல்<br><br>முறையற்ற விதத்தில் படி செலுத்துதல் |

# சுகாதாரம் மற்றும் போசாக்கு

நாட்டின் துரித பொருளதார அபிவிருத்திக்காக பங்களிக்கும் ஆரோக்கியமான மக்களை உருவாக்குவதனை நோக்கி கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் தரமான சுகாதார சேவையொன்றை உறுதிப்படுத்துதல் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்தது.

- சுகாதார துறைக்கான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் அமுல்படுத்தலும்.
- சுகாதார சேவைகள் வழங்கலுக்கான தராதரங்கள் மற்றும் வழிகாட்டலைத் தயாரித்தல்.
- மனிதவள அபிவிருத்தி.
- முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் முறைமை விரிவாக்கம்.
- வள ஒதுக்கீடு, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- பிரதான வைத்தியசாலைகளின் நிர்வாகம்
- தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்
- தேசிய சுகாதார காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான விடயங்கள்
- பொது மக்கள் சுகாதாரம் மற்றும் போஷாக்கினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் செயற்படுத்தலும்.
- சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி வாய்ப்புக்களை விரிவாக்குதல்.

ஆகியன இதன் பிரதான பணிகளாகும். மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

## நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் 15 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் 12 நியதிச்சட்ட நிறுவனங்கள்/ என்பவற்றைக் கொண்டிருந்தன. அந்நிறுவனங்களினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

ரூபா 1,198 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்களின் மூலம் 12 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,466 ஆன நிதியேற்பாடு எனுமாகு ரூபா 2,664 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு எவ்வித பயன்பாடுமின்றி மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமை

தேசிய இரத்தமாற்று சேவையினூடாக மேலதிக இரத்த ப்ளஸ்மா 31இ572 லீட்டர்கள் விற்பனை செய்யப்பட்டமையால் கிடைத்த ரூபா 120 மில்லியன் இலங்கை ஜனநாயக குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரைக்கமைய அரச வருமானமானத்திற்கு செலவு வைக்கப்படாது, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் காணப்படும் தேசிய இரத்தவங்கி அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

மேலும் குருநாகல் பொது மருத்துவமனையில் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கும் பெறுகை செயற்பாடு வைத்தியசாலையினால் முன்னெடுக்காமல், வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினால் வழங்கப்பட்டு வாடகை வருமானத்தில் ரூபா 7 மில்லியன்கள் அரச வருமானமானத்திற்கு செலவு வைக்கப்படாது, ஊழியர் நலன்புரி சங்கத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கட்டிடத்தின் 8 இடங்கள் நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததோடு, அவற்றில் 5 இடங்கள் நலன்புரி சங்கத்தினால் தனியாருக்கு குத்தகை

அடிப்படையில் வழங்கப்பட்டு வருமானம் பெறப்பட்டிருந்தது. வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெறவேண்டிய குத்தகை வருமானம் நலன்புரி சங்கத்திற்கு பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கு இழப்பான மொத்த வருமானம், ரூபா 4.21 மில்லியன்களாக காணப்பட்டது. எஞ்சியுள்ள 3 கட்டிட இடங்களில் நலன்புரி சங்கத்தினால் நடத்திச்செல்லப்பட்ட வியாபார நடவடிக்கைகளினால் மாதாந்தம் ரூபா 30,000 முதல் ரூபா 300,000 வரையான வருமானம் ஈட்டப்பட்டது. அவற்றில் திரண்ட நிதியத்திற்கு எந்தவொரு வருமானமும் செலவு வைக்கப்படவில்லை.

## கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமை

அமைச்சினால் ரூபா 32 மில்லியன்கள் செலவிடப்பட்டு, 2017 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 224 கைவிரல் அடையாள இயந்திரங்கள் , 2019 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2017 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிய இலக்கம் 03/2017 கொண்ட அரச நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 2017 மே 12 ஆந் திகதிய இலக்கம் DMS/0016 கொண்ட திறைசேரியின் பிரதி செயலாளரின் கடிதத்திற்கமைய, கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படவில்லையென்றால், புதிய சம்பளத்திற்கு மேலதிக நேர படிகள் வழங்க கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர படிகள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. அலுவலகங்களில் சேவையாற்றும் உயர் முகாமைத்துவ வைத்தியர்களினால் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தாமையால் ஏனைய ஊழியர்கள், கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்த மறுப்பு தெரிவித்திருந்தனர்.

## முறையற்ற விதத்தில் மேலதிக நேர படிகளை செலுத்துதல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXVIII அத்தியாயத்தின் 1.1 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2006 மே 30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் விதிகளுக்கு மாறாக, மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு அலுவலக நேரங்களை உறுதிப்படுத்தி, அமைச்சின் செயலாளர் ஊடாக , 2014 பெப்ரவரி 05 திகதிய 02-20/2014 ஆம் இலக்க் பொது சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

குறித்த சுற்றறிக்கையின் அடிப்படையில், அமைச்சின் பிரதான காரியாலயத்தில் , பல்வேறு பிரிவுகளில் சேவையாற்றும் சுகாதார சேவையாளர்களுக்கான பொது நிர்வாக சேவைகளைச் செய்யும் ஆனால் மருத்துவ சேவைகளை நேரடியாகச் ஈடுபடாத மருத்துவர்கள், மருத்துவ சேவைகளை நிறைவேற்றும் மருத்துவர்களுக்கு மாத்திரம் வழங்கக்கூடிய நாளொன்றுக்கு ஒன்று அல்லது மேலதிக நேர கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் ரூபா 6 மில்லியன் மேலதிக நேர படிகள் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது.

அந்த மேலதிக நேர கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட மருத்துவ உத்தியோகத்தர்கள், தாபன விதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள அரச அதிகாரிகளின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பில் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்தவில்லை. அதற்கு பதிலாக, மாதத்திற்கு ஒரு முறை மாத்திரம் கண்காணிப்பு அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட, நாளாந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட வருகை பதிவுகளின் அடிப்படையில மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## முறையற்ற வகையில் பணம் சேகரித்தல் மற்றும் செலவு செய்தல்

எந்தவொரு அதிகாரமும் இல்லாது, சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சருக்கு பாராட்டு நிகழ்வை நடத்துவதற்கென 4 அரச நிறுவனங்களில் பெறப்பட்ட ரூபா 3 மில்லியன் உட்பட, மொத்தமாக ரூபா 5 மில்லியன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்

வங்கிக்கணக்கில் இடப்பட்டு, குறித்த நிகழ்வின் செலவுக்கென ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. குறித்த பாராட்டு நிகழ்வின் முகாமைத்துவ செயற்பாடுகளை (Event Management) நிறைவேற்ற குறைந்தபட்சம் ரூபா 6 மில்லியன் ஆன குறைவான கேள்வி சமர்ப்பிக்கப்பட்டது. போலியான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட குறித்த விலைக்கேள்வி தொடர்பில் கவனம் செலுத்தாமை மற்றும் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை மீறி, முன்னர் நிர்ணயிக்கப்பட்ட நிறுவனமொன்றை இலக்காக கொண்டு செயற்பட்டு ஒப்பந்தம் குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் கீழ் உள்ள பெரும்பாலான மருத்துவமனைகளுக்கு மருத்துவ எரிவாயு விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரும் குறித்த நிகழ்வுக்கென நிதி வழங்கிய பிரிவினரில் உள்ளடங்கியுள்ளனர்.

### அரசாங்க உத்தியோகத்தரல்லாதவர்களை வெளிநாட்டு பயணங்களில் பங்குபற்றச் செய்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல்

அமைச்சின் பதவியணியின் உத்தியோகத்தராக நியமிக்கப்படாத நிலையிலும், அமைச்சின் பதவியணியின் ஊடக செயலாளர், நிகழ்வுக்கான அமைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் என போலியாக அரச உத்தியோகத்தர் அல்லாத நபர் ஒருவர், 2018 செப்டெம்பர் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் அமெரிக்காவின் நியூயார்க்கில் நடைபெற்ற மாநாட்டிலும், 2018 ஒக்டோபர் 01 முதல் 06 ம் திகதி வரை சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற மாநாடொன்றிலும் கலந்துகொள்ள செய்வதற்கான விமானசீட்டுக்கென ரூபா 487,500, அமைய கொடுப்பனவாக ரூபா 487,500 என மொத்தமாக ரூபா 1,173,045 அமைச்சினூடாக செலவிடப்பட்டுள்ளது.

### சாத்தியவளக் கற்கையொன்றல்லாது பேரூந்துகளை கொள்வனவு செய்தல்

தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 40 மில்லியன் நிதி வரம்பை மீறி பஸ் வண்டிக்கென ரூபா 10.6 மில்லியன் வீதம் , ரூபா 53 மில்லியன்களை செலவிட்டு, ஏர் கண்டிஷனிங் செய்யப்பட்ட 54 சொகுசு இருக்கைகளுடன் கூடிய 05 பஸ் வண்டிகள், 05 தாதியர் கல்லூரிகளுக்கென மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சாத்தியவளக் கற்கையொன்றல்லாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த குறித்த பஸ் வண்டிகள், தாதியர் கல்லூரி அமைந்துள்ள மாகாணங்களில் சாலைகளில் இயங்குவதில் சிரமம், மற்றும் தாதியர் கல்லூரி வளாகத்திற்குள் நுழைய இயலாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப குறைபாடுகள் காரணமாக இந்த பேருந்துகள் பயன்படுத்தப்படவில்லை.

### முறையான கால அட்டவணைக்கமைய மருந்துகளுக்க கட்டளையிடாமை

11 மாத விநியோக காலப்பகுதியுடன், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக கட்டளை வழங்கும் கொள்ளைக்கமைய மருத்துவ வழங்கல் பிரிவினூடாக மதிப்பிடப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் தாமதமின்றி மருந்துப்பொருட்களை விநியோகிக்க அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தவறிவிட்டது. மீளாய்வாண்டிற்கான மருத்துவ பொருட்களில் கட்டளையிடப்பட்ட பொருட்களின் மொத்த எண்ணிக்கை 8,918 ஆகும், அவற்றில் 5,544 அல்லது நூற்றுக்கு 62 சதவீதம் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தினால் ஆண்டினுள் வழங்கப்படவில்லை. இந்த தாமதத்தின் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் உள்ளூர் சந்தையில் இருந்து மருத்துவ பொருட்கள் மிக அதிக செலவில் வாங்கப்பட்டன. அதன்படி, பிரதானமான கோரப்பட்ட மருந்துகளின் விநியோக தாமதத்தால், மீளாய்வாண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக உள்நாட்டு சந்தை மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வியாபார இருப்பு உட்பட கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ பொருட்களுக்கான மொத்த கிரயம் ரூபா 5,242 மில்லியன்களாக காணப்பட்டது.

### தரமற்ற மருத்துவ வழங்கல்

மீளாய்வாண்டில் தரமற்றதென பாவனையிலிருந்து நீக்கிய (withdraw) 48 வகையான மருத்துவ பொருட்களின் மொத்த

செலவு ரூபா 538 மில்லியன் ஆக இருந்ததுடன், அவற்றில் 8 வகையான பொருட்கள் நுண்ணுயிர்கொல்லி மருந்துகள் (Antibiotics), டெங்கு, கொலஸ்ட்ரோல், வலிப்பு, நீரிழிவு மற்றும் கண் நோய்களுக்கென மருந்துகள். அத்துடன் துணி மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கான திரவம் என்பனவாகும். இத்தகைய தரமற்ற வகையில் விநியோகிக்கப்பட்ட வைத்திய பொருட்களை பாவனையிலிருந்து நீக்குமாறு உத்தரவிடப்பட்டபோது, அவற்றில் 100 சதவீத பொருட்கள் ஏற்கனவே நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது தெரிவுப் பரிசோதனைகளில் தெரியவந்தது. அதற்கமைய அதன்படி, நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட குறித்த மருந்துகள் தரமற்றவை (Quality Fail) என மீளாய்வாண்டில் தெரியவந்தது.

## காலாவதியான மருந்துப் பொருட்கள்

2018 ஆம் ஆண்டில், மருத்துவ விநியோக பிரிவின் 08 களஞ்சியசாலைகளில் ரூபா 31 மில்லியன் பெறுமதியானதும், அமைச்சின் கீழ் நடத்திச்செல்லப்பட்ட 50 வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில், ரூபா 95 மில்லியன் பெறுமதியானதுமாக, மொத்தம், ரூபா 126 மில்லியன் பெறுமதியான மருத்துவ பொருட்கள் காலாவதியானதாக Pronto கணினி அமைப்பில் பெறுக்கொள்ளப்பட்ட தரவு உறுதிப்படுத்தியது. அவற்றிடையே ரூபா 9 மில்லியன் கிரயமான 4 மருத்துவ உருப்படிகள் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தினுள்ளும், அவற்றில் ஒவ்வொரு பொருளிலும் மில்லியன் ரூபாவுக்கும் மிஞ்சி மொத்தக் கிரயம் ரூபா 12 மில்லியனான 10 உருப்படிகள் 08 மருத்துவமனைகளிலும் காலாவதியாகியிருந்தன. மிகை மதிப்பீடு செய்தல் மற்றும் மெதுவாக நகரும் உருப்படிகள் இதற்குக் காரணமாக இருந்தன.

## மிகை மதிப்பீடுகளின் அடிப்படையில் மருந்து இருப்புகளை பெற்றுக்கொள்ளல்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட Calcium lactate 300 mg மருந்து, மிகை மதிப்பீடு செய்யப்பட்டு கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட மிகை இருப்பினை பகிர்ந்தளித்து நிறைவுசெய்யும் நோக்கில், குடும்ப சுகாதார பணியகத்தின் அனுமதியின்றி, 13 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும், சுவநாரி பிணியாய்வுகளில் கலந்து கொள்வோருக்கும் விநியோகிக்கப்பட்டது. மேலும், குறித்த மருந்தை பாலூட்டும் தாய்மார்களுக்கு அதிகளவில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விநியோகிக்க முடியாத ரூபா 13.5 மில்லியன் மதிப்புள்ள மருந்து இருப்பு காலாவதியாகிவிட்டன.

## கல்வி நடவடிக்கைக்கென வெளிநாட்டுக்கு சென்று, மீண்டும் சேவைக்கு திரும்பாமை

முதுமாணி பட்டப்படிப்புக்கென வெளிநாட்டுக்கு சென்று, பின்னர் மீண்டும் சேவைக்கு திரும்பாமை, சேவைக்கு திரும்பிய பின் கட்டாய சேவைக்காலத்தில் அரசாங்கத்தில் சேவையாற்றாமை, வேலைக்கென சம்பளத்துடனான விடுமுறை பெற்று வெளிநாட்டுக்கு சென்றதன் பின் மீண்டும் சேவைக்கு வருகை தராமை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை இடையில் கைவிட்டு செல்கின்ற காரணங்களால், அரசாங்கத்துடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை மீறிய 69 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 118 மில்லியன் ரூபா அறவிடப்படவேண்டியிருந்தது. மேலும் 141 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகை அமைச்சினால் கணக்கிடப்படவில்லை. மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம், அறவிடப்படவேண்டிய கடன் மீதிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பரிசீலனை செய்யாததால், 6 மருத்துவர்களிடமிருந்து ரூபா 2 மில்லியன் குறைவாக அறவிடப்பட்டு, ஆவணங்களை மூடுவதற்கும், மேலும் 06 மருத்துவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 2.8 மில்லியன் நிதியை குறைவாக கணக்கிலெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## முறையற்ற விதத்தில் நிரந்தர நியமனங்களை வழங்குதல்

2007 ஏப்ரல் 5 ஆம் திகதிய 33ஆ ம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழுள்ள செயற்திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களை, 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்கம் அரச நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில், நிரந்தரமாக்க முடியாது. அத்தோடு, அரச நிர்வாக

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை பிரிவுகளில் உள்ளடங்காத ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க முடியாதபோது, அத்தகைய செயற்திட்ட ஊழியர்கள் 120 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

## நுகர்வுப்பொருட்களை பகிர்ந்தளிக்காமல் வைத்திருத்தல்

சார்க் அபிவிருத்தி நிதியம் (தாய் மற்றும் சேய் சுகாதாரம்) திட்டத்திலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 500,000 அமெரிக்க டொலர் பெறுமதியான நுகர்பொருட்கள் (consumables) குடும்ப சுகாதார பணியகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. குறித்த நுகர்வுப்பொருள் தொகையை விமான நிலையத்திலிருந்து அகற்றுவதற்கு 27 நாட்கள் முதல் 105 நாட்கள் வரையான காலம் எடுத்துக்கொண்டதோடு, வாடகையாக ரூபா 6 மில்லியன் உட்பட அகற்றல் கட்டணமாக ரூபா 15.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. குறித்த நுகர்வுத் தொகையில் உள்ளடங்கியிருந்த Dispo Van single use syringe 24 G 20 ml சிரிஞ்ஜர் 145,000 இருப்பொன்று 2015 ஆம் ஆண்டு முதல் பகிர்ந்தளிக்கப்படாமல், குடும்ப சுகாதார பணியக வளாகத்திலும், நைனாமடம் சிந்தனா மத்திய நிலையத்தில் வைக்கப்படடிருந்தன. 2017 மார்ச், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் குறித்த பொருட்களின் ஆயுட்காலம் காலாவாகியிருந்தது. குறித்த 145,000 சிரிஞ்ஜர் தொகைக்கென ரூபா 1.9 மில்லியன் வாடகை மற்றும் தீர்வை கட்டணம் மற்றும் தீர்வை செலவினமாக இருந்தது.

## சேவையிலிருந்து வெளியேறிய வைத்தியர்களுக்கு சம்பளம் வழங்கல்

வைத்திய சேவையிலிருந்து வெளியேறிய தினத்திலிருந்து 01 மாதம் முதல் 57 மாதங்கள் வரையான நீண்ட தாமத காலத்தின் பின்னர் சேவையிலிருந்து வெளியேறிய கடிதத்தை வெளியிட்டிருந்த நிலையில், அவர்கள் சேவையில் இல்லாத காலப்பகுதியிலும் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. சேவையை விட்டு வெளியேறிய வைத்தியர்களின் தற்போதைய முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால் அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 53 மில்லியன் தொடர்பில் சட்ட நடவடிக்கையை எடுக்க முடியாமல் போனது. அத்தோடு இது தொடர்பில் சட்டநடவடிக்கைகளின் பின்தொடர்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## வாகன முகாமைத்துவத்தில் பலவீனம்

அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு பதவி பெயர்களில் பதிவுசெய்யப்பட்ட 5,556 வாகனங்கள் காணப்படுவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகளுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சின் வாகன ஆவணங்களுக்கமைய அதன் எண்ணிக்கை 5,792 ஆக காணப்பட்டது. அதில் 1,794 வாகனங்களின் பராமரிப்பு நிலை உறுதிப்படுத்தப்படவில்லை. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கமைய அமைச்சுக்கு சொந்தமான, அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பட்டியலில் சேர்க்கப்படாத 202 வாகனங்களில் 171 கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் உள்ளதன்மை உறுதிப்படுத்தவில்லை

அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான ஆவணத்தில் இணைக்கப்பட்டு, எனினும் வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டமென மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 177 கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் குறித்த தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை அமைச்சினால் உறுதிப்படுத்த முடியாமல் போனது.

பௌதீக உள்ளதன்மையை நிலையை உறுதிப்படுத்த முடியாமல் போன 584 கார்களை, நிலையான சொத்து பட்டியலில் இருந்து அகற்ற 2017 மார்ச் 24 ஆம் திகதி அமைச்சின் செயலாளரினூடாக அரச நிதித் திணைக்களத்திடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

2010 மே 14 ஆம் திகதி, இலக்கம் சீஏ/1/17/1 எனும் ஜனாதிபதி செயலகத்தின் அரச செலவின முகாமைத்துவ

சுற்றறிக்கையின் 4.1 பந்தியின் படி , உரிமையுள்ள வாகனங்களின் எண்ணிக்கையை மிகைத்து அமைச்சர், பதவியணி மற்றும் அமைச்சின் அலுவலகத்திற்கென 16 கார்கள். பிரதியமைச்சர் , ஊழியர்கள் மற்றும் பிரதியமைச்சர் காரியாலயங்களுக்கென 8 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மற்றுமொரு அமைச்சர் மற்றும் பிரதியமைச்சருக்கு எரிபொருள் கொடுப்பனவுக்கு மேலதிகமாக , 2017 ஆம் ஆண்டுக்குள் மாத்திரம் முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 4 மில்லியன் எரிபொருள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது.

அமைச்சர், பிரதியமைச்சர் மற்றும் ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டின் 6 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் குழாம் மோட்டார் வாகனங்கள் 314 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 102 குறித்த சந்தர்ப்பங்களில் 56,182 கிலோ மீட்டருக்கென ரூபா 795,370 ஆன எரிபொருள் செலவு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## கடன் ஒப்பந்தத்திற்கு முரணாக செயற்படுதல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குள் வலிப்பு நோய்க்கான மருத்துவமனை மற்றும் நாட்டின் ஒன்பது மாகாணங்களில் வலிப்பு நோய்க்கான சுகாதார மையங்களை நிர்மாணிப்பதற்கென 75 மில்லியன் சவூதி ரியால், 20 மில்லியன் அமரிக்க டொலர் (சுமார் ரூபா 3,000 மில்லியன்) கடன் ஒப்பந்தம் 2008 மார்ச் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. குறித்த கடன் ஒப்பந்தத்திற்கமைய திட்டத்தை 2009 டிசெம்பர் 31 ம் திகதி நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. வலிப்பு நோய்க்கான வைத்தியசாலைகள் மாத்திரம் எட்டு ஆண்டுகள் தாமதத்திற்குப் பின் நிர்மாணிக்கப்பட்டது. எனினும் ஒன்பது மாகாணங்களில் சுகாதார மத்திய நிலையங்களின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. கடன் ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக, ஒன்பது மாகாணங்களில் சுகாதார மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்கென அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை, வலிப்பு நோய்க்கான வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டது. திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றான வலிப்பு நோய்க்கான 09 சுகாதார மத்திய நிலையங்களை நிர்மாணிப்பபதற்கென 2015 ஒக்டோபர் 30 ஆம் திகதி மீண்டும் சவூதி அபிவிருத்தி நிதியத்தில் 45 மில்லியன் சவூதி ரியால் அதாவது 12 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூபா 1,800 மில்லியன்) கடனை பெற்றுக்கொள்வதற்கான மேலதிக கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு மாறாக, கடன்தொகை சுகாதார மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்கென செலவிடப்படாமல் , வலிப்பு நோய்க்கான வைத்தியசாலைகளுக்கு தேவையான மருத்துவ பரிசோதனை உபகரணங்களை (Diagnostic Medical Imaging Equipment) கொள்வனவு செய்வதற்கென செலவிடப்பட்டது.

## மாலம்பே நெவில் பெர்ணாண்டோ வைத்தியசாலையின் சொத்துக்களின் பௌதீக உரித்தினை கையேற்றல்.

மாலபே நெவில் பெர்னாண்டோ, இலங்கை ரஷ்ய நட்புறவு வைத்தியசாலையின் சொத்துக்கள், கட்டிடங்கள் உள்ளிட்ட உடமைகள், குத்தகை அடிப்படையில் 10 வருடங்களுக்கு இலங்கை அரசுக்கு மாற்ற இணக்கப்பாடு எட்டப்பட்டதோடு, வைத்தியசாலையை நிறுவுவதற்கென தனியார் நிறுவனங்கள் அரச வங்கியிடம் பெற்றிருந்த ரூபா 1,013 மில்லியன் கடனுதவியை செலுத்தி முடிக்கும் வரை வைத்தியசாலை சொத்துக்களின் உரிமை மற்றும் சட்டரீதியான உரித்தினை குறித்த தனியார் நிறுவனங்கள் அவ்வாறே நடத்திச்செல்வதற்கும், கடன் தொகை செலுத்தி முடிக்கப்பட்டபின், வைத்தியசாலையின் உரிமை மற்றும் அனைத்து சொத்துக்களினதும் பெறுமதியை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்ற யோசனை முன்வைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை ஒப்புதல் அறிக்கையை ஆராய்ந்து, குறித்த வைத்தியசாலையை அரசாங்கம் கையகப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி 2017 ஜூலை 05 ம் திகதி, வழங்கப்பட்டிருந்தது.

அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்று ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தபோதும், வைத்தியசாலை சொத்துக்கள் உள்ளிட்ட கட்டிடத்தின் உடமைகளை அரசுக்கு வழங்குவதற்கென உப ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை.

அத்தகையதொரு ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமல் 2017 ஓகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் குறித்த வைத்தியசாலையின் செலவுகளை ஈடுசெய்ய அமைச்சினூடாக ரூபா 583 மில்லியன் செலவிடப்பட்டது.

### மேலதிக ஊட்டச்சத்துக்களை பெறுவதற்காக கூடுதலாக செலுத்துதல்

2016/2017 ஆம் ஆண்டிற்கென இலங்கை தேசிய வைத்தியசாலையால், உணவுப்பொருள் தயாரிப்புக்கென நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, மேலதிக ஊட்டச்சத்துக்கள் தொடர்பில் அறிவுள்ள ஊட்டச்சத்து நிபுணரை நியமிக்கவில்லை. வைத்தியர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் பரிந்துரைக்கமையவும், மாதாந்த தேவைக்கமையவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 5 மேலதிக ஊட்டச்சத்துக்கான அளவீட்டு அலகு தகரம் அல்லது பாக்கெட்டாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் நிறை மற்றும் சேர்க்கப்பட வேண்டிய ஊட்டச்சத்துக்களின் பகுதிகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு விநியோகஸ்தர்கள் ஊடாக டின்களுக்காக விலைக்கேள்வி சமர்ப்பித்த ஊட்டச்சத்து வகை பக்கற்றாகவும், பக்கற்றில் பொதியிடுவதற்கென விலைக்கேள்வி சமர்ப்பித்த ஊட்டச்சத்து வகை டின் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டிருந்தது. Impact மேலதிக போசணை 74 கிராம் கொண்ட, ஐந்து சிறிய பொதிகளை உள்ளடங்கிய டின் ஒன்று, ரூபா 1,390 செலுத்தியிருந்தமையால் விலைக்கேள்வியாளருக்கு ரூபா 26 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த Impact மேலதிக போசணை 74 கிராம் கொண்ட சிறிய பெக்கற் ஒன்றின் சாதாரண சந்தை விலை ரூபா 365 ஆகும்.

### இரு ஹைட்ரோக்ளேவ் இயந்திரங்கள் செயற்படாமை

மருத்துவ கழிவுகளை அழிப்பதற்காக இலங்கை தேசிய வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ள இரு ஹைட்ரோக்ளேவ் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேவை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் ஒப்பந்த காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர், குறித்த இரண்டு இயந்திரங்களைப் பயன்படுத்தி மருத்துவ கழிவுகளை அழிக்கும் செயல்முறை நிறுத்தப்பட்டது. அதன் காரணமாக 2016/2017 காலப்பகுதிக்கென 2016 ஓகஸ்ட் மாதம் செலுத்தப்பட்ட ரூபா 3 மில்லியன் பராமரிப்பு மற்றும் சேவை கட்டணம், 2016 டிசம்பரில் மாதம் முதல் ஆறு மாத காலத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 1.6 மில்லியன் செலவு வீணாகியிருந்தது. மேலும், குறித்த இருஹைட்ரோக்ளேவ் இயந்திரங்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு எலக்ட்ரோனிக் ஸ்டீம் பொய்லர் இயந்திரங்கள் 2016 டிசம்பர் மாதம் முதல் செயற்படவில்லை.

### பெட் சீ.டீ ஸ்கேனரை (Pet CT Scanner) கொள்வனவு செய்தல்

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு பெட் சி.டி ஸ்கேனரை வழங்குதல், (Pet CT Scanner) நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் செயல்படுத்துவதற்கென அதனை கொள்வனவு செய்வதற்கான, முன்வைக்கப்பட்ட மிகக் குறைந்த விலைக்கேள்வி ரூபா 156 மில்லியனாகவும், இரண்டாவது மற்றும் இறுதி திருத்தப்பட்ட விலைக்கேள்வி ரூபா 192 மில்லியனாகவும் இருந்தது. அதை சமர்ப்பித்த விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.5 வழிகாட்டியினூடாக, ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையின் அடிப்படையில் நாணயக் கடிதத்தின் மதிப்பில் 30 சதவீதத்திற்கு சமமான தொகைக்கு மேற்படாத கட்டணத்தை முற்பண அடிப்படையில் செலுத்த முடிந்தது. இதற்கு மாறாக பயோமெடிக்கல் இன்ஜினியரிங் சேவை பிரிவினூடாக இயந்திரத்தின் தாய் நிறுவனத்தின் பெயரில் குறித்த Pet CT Scanner இயந்திரத்தின் மதிப்பில் நூற்றுக்கு 80 சதவீதம் பெறுமதிக்கு நாணயக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 30 திகதியாகையில் குறித்த கொள்வனவிற்கென விநியோகஸ்தருக்கு ரூபா 179 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ஒரு தனியார் அமைப்புடன் இணைந்து பணத்தை வசூலிக்கவும், குறித்த நிதியை தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கணக்கில் வைப்பிலிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் இதற்கென சுகாதார, போசணை மற்றும்

சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியிலிருந்து எந்த முன் அனுமதியும் பெறப்படவில்லை.

சமூக சேவைகள் மற்றும் பொது வசதிகளை வழங்குவதற்காக ஒரு தொண்டு நிறுவனமாக, சமூக சேவைகள் திணைக்களத்தால், முறையாக அங்கீகரிக்கப்படாத அந்த தனியார் அமைப்பினால் பொது நிதி திரட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. தொலைக்காட்சி அலைவரிசையொன்றினூடாக இது தொடர்பான பிரச்சார நடவடிக்கைகளுக்கு மாத்திரம் தலையீடு செய்திருந்ததோடு, குறித்த தனியார் அமைப்பினால் குறித்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கென எந்தவொரு நன்கொடையும் வழங்கப்படவில்லை. கொள்முதல் நடவடிக்கைகளுக்காக அமைச்சின் அதிகாரிகளிடம் செல்வாக்கு செலுத்தியிருந்த குறித்த தனியார் அமைப்பு, இயந்திரத்தின் விவரக்குறிப்புகள் குறித்து கருத்து தெரிவித்தது.

தற்போது, இந்த தனியார் அமைப்பு, பொது வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரிலான தலைப்புக்களை பயன்படுத்தி, தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதோடு, பொது நிதியை சேகரிப்பதற்காக முறையற்ற அதிகாரம் குறித்த அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் பெயரில் காணியொன்றை கொள்வனவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், குறித்த வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கத்தினூடாக காணியை கொள்வனவு செய்வதற்கென யாழ் மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். குறித்த கடித தரவுகளுக்கமைய நிலம் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளமை, யாழ் போதனா வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் பெயரில் அரச சார்பற்ற அமைப்பொன்றிடமிருந்து என உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் மாவட்ட செயலாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளரின் அதிகாரத்தை தவிர, வேறு எந்தவொருவரினதும், அதிகாரம் மற்றும் அனுமதியின்றி ரூபா 12.5 மில்லியன் அரச நிதி, மாவட்ட செயலாளர் ஊடாக வைத்தியசாலைக்கு செலுத்தப்பட்டு, அதன்பின் வைத்தியசாலை பணிப்பாளர் மூலம், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினூடாக ரூபா 12.5 மில்லியன் செலுத்தப்பட்டு, குறித்த சங்கத்தின் பெயரில் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நில உரிமையாளருக்கு நேரடியாக பணத்தை செலுத்தி அதனை கொள்வனவு செய்வதற்கு பதிலாக சுற்றுவட்ட முறையில் பணம் செலுத்தி, கொடுக்கல் வாங்கல் முறையற்ற வகையில் இடம்பெற்றிருந்தது.

மாவட்ட செயலாளர் அலுவலகம் காணியின் கொள்வனவுக்கென பணத்தை வழங்குவதற்கு முன்னர் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட நிலத்தின் வரலாறு, நிலத்தின் திட்டம் மற்றும் நிலத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி போன்ற தகவல்களைப் பெற்று, பரிமாற்றத்தின் நியாயத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பில் திருப்தி கொள்ள வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

2011 ஆகஸ்ட் 02 ஆம் காணி கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் அதாவது 2011 செப்டெம்பர் 19 ஆம் திகதி நிலத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டதுடன், நில உரிமையாளருக்கு எதிர்பார்த்த பெறுமதியை கொடுக்கும் நோக்கத்துடன் மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அத்தோடு மதிப்பீட்டு அறிக்கையில் குறித்த நிலம் வணிக ரீதியில் மதிப்பு செய்து பெற்ற நிலமாக மதிப்பிடப்பட்டது.

## யாழ் போதனா வைத்தியசாலை நிர்மாணம்

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், யாழ் போதனா வைத்தியசாலையின் நிர்மாணம் தொடர்பாக முழு ஒப்பந்த தொகை ரூபா 170 மில்லியனான 310 ஒப்பந்தங்கள் அரச சார்பற்ற நிறுவனமொன்றாக பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த நிறுவனம் யாழ் போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய

நிபுணர்கள் 06 பேர் உறுப்பினர்களாக செயற்படும் சமூக அடிப்படையிலான நிறுவனமாக கருத்திற்கொள்ள முடியாத நிறுவனமொன்றாவதுடன், ICTAD நிறுவனத்தின் M8 தரம் மற்றும் அதற்கு மேலாக தரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கதைய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 மற்றும் 3.9.2 ஆம் வழிகாட்டல்களுக்கமைய தேவைகளைப் பூர்த்தி செய்யாத குறித்த சங்கங்களுக்கு பிரதேச செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரை இல்லாமல் மேற்கண்ட ஒப்பந்தங்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டன.

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 வழிகாட்டிக்கமைய, வழங்கப்பட்ட ஒப்பந்தம், உப ஒப்பந்தங்களாக வேறு தரப்பினருக்கும் வழங்கப்படக் கூடாத போதிலும், சகல ஒப்பந்தங்களும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் தலைமையிலான நலன்புரி சங்கத்திற்கு மீண்டும் உப ஒப்பந்தங்களாக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இரண்டாம் உப ஒப்பந்தத்தைப் பெற்ற நலன்புரி சங்கம் ICTAD நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஏற்கனவே ஒப்பந்த அனுபவம் மற்றும் தொழில் திறன் கொண்ட ஊழியர்களை கொண்டிருக்கவில்லை. அதனால் அந்த நலன்புரி சங்கத்தால் பெறப்பட்ட உப ஒப்பந்த பணிகள் தனியார் நிபுணர்களை பணியமர்த்துவதன் மூலம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. பெறுகைகள் குழுவின் தலைவராக செயற்படும் வைத்தியசாலையின் பணிப்பாளரினால், தான் தலைமைத்துவம் வகிக்கும் நலன்புரி சங்கத்துக்கு மறைமுகமான முறையில் ஒப்பந்தங்களை வழங்கியதால், பெறுகையின் வெளிப்படைத்தன்மை இழக்கப்பட்டிருந்தது.

310 ஒப்பந்தங்களுக்குரிய அளவிடைப் பத்திரங்களை BOQ மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் (CECB) தயாரிக்கப்பட்டிருந்தது. அளவிடைப் பத்திரங்களை தயாரிப்பதற்கு முன்னர், உரிய விடயம் உள்ளடங்கிய பிரதேசம் (Location), செயற்பாடுகள் முன்னெடுக்கவேண்டிய விதம், மனித வளங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய முறை மற்றும் பயன்படுத்தப்படவேண்டிய அடிப்படை மூலப்பொருட்கள் உள்ளிட்ட தரவுகள் அடங்கிய Drawings தயாரிக்கப்பட்டிருந்தாலும், அதற்குரிய அளவிடைப் பத்திரங்களை தயாரிப்பது சாதாரண நடைமுறையாகும். ஆவ்வாறான வரைபடங்கள் இல்லாத அளவு மற்றும் ரேட்ஸ் மாத்திரம் உள்ளடங்கிய CECB நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அளவிடைப் பத்திரங்கள் (BOQ) தயாரிக்கப்பட்டிருந்தது. அரச நிறுவனங்களுக்குரிய ஒப்பந்தங்கள் மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகளில் அளவிடைப் பத்திரங்களை தயாரிக்கும் போது கட்டிடங்கள் திணைக்களத்தின் அந்தந்த மாகாணங்களுக்குரிய வகையில் வழங்கப்பட்ட விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், CECB நிறுவனத்தினூடாக அனுமதிக்கப்பட்ட விகிதத்தை பயன்படுத்தாமல், வேறு விகிதத்தை பயன்படுத்தியமையால், உரிய ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய மதிப்பீடுகள், சரியாகவும் நடைமுறைச் சாத்தியமான பெறுமதியாக இருக்கவில்லை.

## முறையற்ற வகையில் மாதிரிப் படிகளை செலுத்துதல்

தெரிவு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொலன்னறுவை, யாழ்ப்பாணம் மற்றும் பதுளை ஆகிய மூன்று போதனா வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே பரிசோதனைகள் செய்யும் கதிரியக்கவியலாளர்கள், பிசியோதெரபியூடிக் தெரபிஸ்டுகள், ECG இருதயநோய் மருத்துவர்கள் மற்றும் ஆய்வுகூட பரிசோதகர்கள் (MLT) ஆகிய மருத்துவ துணை அதிகாரிகளால் ஒழுங்குமுறையின்றி வெளிப்படையான மற்றும் சட்டபூர்வமற்ற வகையில் மேலதிக நேர மற்றும் மாதிரிப் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

இணைந்த மருத்துவ சேவை உத்தியோகத்தரிகளுக்கு தமது சேவை நடவடிக்கைகளுக்காக அபாயம் குறைவான, செயற்திறனான மற்றும் முழு தானியங்கி இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், மேலதிக நேரத்திற்கென மாதிரி மற்றும் மாதிரி கொடுப்பனவு தெளிவாக வரையறுக்கப்படாததால் செயல்முறை மற்றும் நேர்மை இல்லாமல் கூடுதல் நேர கொடுப்பனவு வழங்கப்பட்டது. மேலதிக கொடுப்பனவுக்கென இடையிடையே

வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் விளக்கம், மேலதிக நேர கொடுப்பனவு, காத்திருப்பு கொடுப்பனவு மற்றும் அதிகபட்ச லேதிக் நேர கொடுப்பனவு ஆகியவற்றுக்கு இடையே ஒரு முரண்பாடு இருந்தது, மேலும் மேலதிக நேர கொடுப்பனவுக்கென ஒரு திட்டவட்டமான பொது அளவுகோல்கள் நிறுவப்படவில்லை.

சேவை முறைமை செயற்படுத்துவதன் மூலம் தமது அடிப்படை சம்பளத்தை போன்று பல மடங்கு மேலதிக நேர படிகளை பெற்றுக்கொள்ள வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை கட்டுப்படுத்தி மேலதிக நேர கட்டுப்பாட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பெரும்பாலான ஆய்வுகளில், சாதாரண கடமை நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கையை விட, இரண்டு மூன்று மடங்கு மேலதிகமான ஆய்வு எண்ணிக்கைகள், மேலதிக நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு, அசாதாரணமான முறையில் மேலதிக கொடுப்பனவாக பெறப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண கடமை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதாக பொய்யாக குறிப்பிட்டு, கொடுப்பனவுகள் பெறப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

## விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய உயிரியல் மருத்துவ உபகரணங்கள்

சேவை வெற்றிடம் நிலவியமை, மருத்துவர்கள் இல்லாதிருந்தமை, கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாமை, உபகரணங்கள் அல்லது உதிரி பாகங்கள் இன்மை, கோரப்பட்டிருந்த விசேட மருத்துவர்களை இடம்மாற்றுதல், தேவையற்ற வகையில் உபகரணங்கள் கிடைக்கப்பெறல் மற்றும் அதற்கான தேவைப்பாடு இன்மை, இலங்கை அணுசக்தி ஆணையக சட்டத்திற்கமைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமை மற்றும் புதுப்பிக்கப்படாமை உள்ளிட்ட காரணங்களால், இந்த திட்டத்தின் மொத்த செலவு ரூபா 3,030 மில்லியனான 854 உயிரியல் மருத்துவ உபகரணங்கள், 33 வைத்தியசாலைகளுக்குள் 05 மாதங்கள் முதல் 07 வருடங்கள் வரையான கால இடைவெளி வரை செயலற்றதாக அல்லது பயன்படுத்தப்படாததாக இருந்தது. மேலும், யாழ்ப்பாணம், கராபிட்டி மற்றும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை பிரிவுகளை ஸ்தாபிக்க ரூபா 726 மில்லியனுக்கு வாங்கப்பட்ட மூன்று உயர்தர கதிர்வீச்சு உபகரணங்கள், அவற்றை ஸ்தாபிக்க உரிய தளம் நிர்மாணிக்கபடாததால், 3 ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் காணப்பட்டன.

| வெகுசன ஊடகம் | |
|---|---|
| | கொள்வனவு வழிகாட்டல்களுடன் இணங்காமை |
| | கொடுப்பனவைச் செலுத்துவதிலேற்பட்ட தாமதம் காரணமாக ஏற்பட்ட நட்டம் |
| | செலுத்திய முற்பணங்களை மீள அறவிட்டிருக்காமை |
| | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மிகை அறவீடு செலுத்துதல் |
| | அரசாங்க பத்திரிகை விற்பனை குறைவடைதல் |
| | செயற்திட்டங்களை அமுல்படுத்தியிராமை |

# வெகுசன ஊடகம்

மக்களது உளப்பாகங்களை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக்கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொடுத்தல் இத் துறையின் நோக்கமாக காணப்பட்டது. அந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் பணிகள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, திணைக்களமொன்று, மற்றும் ஒன்பது நியதிசட்ட சபைகளினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

இலங்கையின் பொருளாதளர வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக அரச வளங்களை மேம்படுத்துவதை உறுதி செய்தலுக்காக அரச நிதி மற்றும் வெகுசன ஊடக நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு கொள்கைகள் மற்றும் உத்திகளை வழங்கி நடைமுறைப்படுத்தல் மற்றும் மக்களின் உளப்பாகங்களை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக்கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொடுத்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகளினால் மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## பெறுகை வழிக்காட்டிகளுக்கு இணங்காமை.

அரசின் பெறுகை வழிக்காட்டி 3.6.1 இன் பிரகாரம் ஒரே பொருளை கொள்வனவு செய்வதற்காக முதல் வழங்குனரிடம் மீள் கோரல் வெளியிடப்படும் போது அக் கோரலின் பெறுமதி முதல் ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதத்தினால் அதிகரிக்க கூடாது. எனினும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 2018 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் broadcast quality H.D புகைப்படக்கருவிகள் மூன்று 82,256.12 ஐ.அ.டொலர்களுக்கு கொள்வனவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மீண்டும் இரண்டு புகைப்படக்கருவிகள் 47,685.52 ஐ.அ.டொலர்களுக்கு கொள்வனவு செய்திருந்தது. அதன் படி முதல் ஒப்பந்தத்தில் 50 சதவீத பெறுமதிக்கு மேலாக 6,557.46 ஐ.அ.டொலர்களை தாண்டி காணப்பட்டது.

## தொடர்பாடல் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

நல்லினக்க அலைவரிசைக்கான பிரதான கட்டுப்பாட்டு அறைக்காக ரூபா 48.60 மில்லியன் செலவிடப்பட்டு வெளிநாட்டு வழங்குனரொருவரிடம் தொடர்பாடல் உபகரணங்கள் கொள்வனவிற்கான பெறுகையின் போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின் படி உபகரண பகுதிகளுக்காக உத்தரவாத காலம் 5 வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்த உடன்படிக்கையின் கடமை காலம் ஒரு வருடத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் வாரத்தில் ஏதேனும் நாளில் 24 மணித்தியாளங்களும் சேவை பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்பந்த நிறுவனம் உடன்பட்டு இருந்தாலும், 64 x 64 Digital Video Switch கொள்வனவு செய்து 09 மாதங்களில் காலாவதியாவதற்கு முதல் செயலற்று காணப்பட்டது. அதற்காக சேவை வழங்கல் 21 நாட்களுக்கு பின்னர் ஆம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த உபகரணத்திற்கு மேலதிக அமைப்புமுறை வழங்குவதற்கு மற்றும் அவ்வாறான உபகரணங்களுக்காக தேவையான மேலதிக பகுதிகள் வழங்குவதற்கு விவரக்குறிப்பின் படி உடன்பட்டு இருந்தாலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## கொடுப்பணவு செலுத்துவதில் தாமதம்

2016 ஆகஸ்து மாதம் நடைப்பெற்ற ரியோ ஒலிம்பிக் போட்டியை ஒளிபரப்பும் உரிமை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக வெளிநாட்டு தனியார் நிறுவனமொன்று மற்றும் இலங்கை ரூாவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு இடையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கையின் படி 2016 ஆகஸ்து மாத்தில் வெளிநாட்டு நிறுவனத்திற்கு 125,000

ஐ.அ.டொலர்கள் செலுத்தப்படவேண்டியிருந்தது. அக் கட்டணம் இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் தாமதமாக்கியதனால் ஏற்பட்ட பரிமாற்ற வீதத்தின் பிரதிகூலமான மாற்றம் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2.12 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## லாட்டரி சீட்டிலுப்பு ஒளிப்பரப்புதல்.

மீளாய்வாண்டில் லாட்டரி சீட்டிலுப்பு ஒளிப்பரப்பலினால் ரூபா 763.36 மில்லியன் இலாபம் இலங்கை ரூாவாஹினி கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்டிருந்தது. அதற்காக கூட்டுத்தாபனம் ரூபா 154.01 மில்லியன் உற்பத்தி செலவை மேற்கொண்டிருந்தது. பிரதிநிதி கட்டணம் ரூபா 91.40 மில்லியன் ஆகும். மற்றும் சந்தைப்படுத்தல் நிர்வாக கட்டணம் ரூபா 1.08 மில்லியன் என்ற ரீதியில் கூட்டுத்தொகை ரூபா 246.49 மில்லியன் ஆக காணப்பட்டது. அக் கொடுக்கல் வாங்கலுக்காக அரச நிறுவனங்கள் நேரடியாக தொடர்பு கொள்ளாமையினால் ரூபா 91.40 மில்லியனை கூட்டுத்தாபனம் இழந்தது.

## செலுத்தப்பட்டிருந்த முற்பணம் மீள் அறவிடப்படாமை.

இலங்கையின் தேசிய அடையாளத்தை உலகிற்கு கொண்டு செல்லல் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களின் அறிவு, ரசனையை ஊக்குவிப்பதற்காக சந்திரிக்கா தொழில் நுட்பத்தினூடாக இத்தாலி அல்லது வேறு ஐரோப்பிய நாட்டில் தாபிக்கப்படும் தொகுப்பொன்றில் தொலைக்காட்சி அலைவரிசையொன்று பராமரிக்கப்பட்டு செல்வதற்கு தேவையான உபகரணங்கள் அலைவரிசை குத்தகை அடிப்படையில் நிதி அமைச்சின் உடன்பாட்டுடன் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையினால் 2014 திசெம்பர் மாதம் அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டு சனவரி 02 ஆம் திகதி ரூபா 3.45 மில்லியன் முற்பணமாக சந்திரிக்கா தொழில் நுட்பம் சர்வதேச ரீதியில் பகிரும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவிற்கான எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிதி அமைச்சின் உடன்பாட்டினையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. எனினும் 2015 சனவரி மாதத்தின் பின் அப் பணி முழுவதாக கைவிடப்பட்டு இருந்ததுடன் செலுத்தப்பட்ட முற்பணம் மீள் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை.

இலங்கை செய்தி திணைக்களத்தின் 10 உள்ளக அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ரூபா 81 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டில் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுமையாக எஞ்சி காணப்பட்டது.

## ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூடுதல் கட்டணம் செலுத்தல்

1958 இன் 15 ஆம் இலக்கமுடைய ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு குறைக்கப்பட்ட மாதத்திற்கு பிறகு வருகிற மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் அவ் சேமலாப நிதிய பங்களிப்பு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பல் வேண்டும். எனினும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தினால் 2007 மற்றும் 2008 வருடங்களில் குறைக்கப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு தாமதமாக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. இத் தாமதமாக்கல் காரணத்தினால் 2007 ஏப்ரல் மாதத்திலிருந்து 2009 திசெம்பர் மாதம் வரையான காலத்தினுள் தொடர்பாக ரூபா 15.05 மில்லியன் கூடுதல் கட்டணம் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## பத்திரிகை சந்தைப்படுத்தல் குறைவடைதல்

வரையறுக்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற சண்டே ஒப்சவர், டெய்லி நியுஸ், தினமின மற்றும் சிலுமின பத்திரிகைகள் தொடர்பாக மீளாய்வாண்டில் சந்தைப்படுத்தப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதம் வரையான வீச்சில் குறைந்து காணப்பட்டது. “தருணி” ,

''மாஞ்சு'' மற்றும் ''சுபசேன'' பேர் குறிக்கப்பட்ட வார இதழ்கள் 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் வரையான வீச்சில் சந்தைப்படுத்தப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனத்தின் முன்னைய ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டில் வணிக அச்சு பிரிவு, விசேட ஒளிப்பரப்பு மற்றும் டிஜிடல் அச்சுக்களினால் வருமானம் முறையாக 13 சதவீதம், 21 சதவீதம், மற்றும் 63 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

## சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி

**வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளமை**

**குற்றத் தீர்ப்பு வழங்குதல் முன்னைய ஆண்டைக் காட்டிலும் குறைவாக இருத்தல்**

**தகவல் தொழில்நுட்ப முறைமையினை மேம்படுத்தாமை**

**"ஊருக்குப் பொலிஸ்" எண்ணக்கருவிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தியிருந்தமை**

**ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் பணிகளுடன் கூட்டுச்சேராமை**

**தேவைக்கு அதிகமாக மீன்பிடி வலைகளை கொள்வனவு செய்தல்**

**குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

**விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துதல்**

# சட்டமும் ஒழுங்கும் தெற்கு அபிவிருத்தியும்

சட்டத்தை மதிக்கும் சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு சட்டமும் ஒழுங்கும் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன், தென் மாகாணத்தின் அபிவிருத்திகளை மேம்படுத்துவதும் இத்துறைகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளாகவும் இருந்தன. அப் பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் நோக்கில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, ஒரு திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகள்/ அல்லது 03 நிறுவனங்களும் இணைந்து பினவரும் வகிபாகங்களை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

- சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி விடயங்களுடன் தொடர்புடைய கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், மீழாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல், சமூகத்தில் ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விதத்ததிலான பரந்துபட்ட மறுசீராக்கம் உள்ளடங்கிய தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்தல்.
- வாகன போக்குவரத்து நிர்வாகம்.
- குற்றச் செயல்கள் மற்றும் சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்த்தல்.
- வரலாற்றுச் சிறப்பு மிக்க காலி கோட்டையை அழிவிலிருந்து பாதுகாத்தல், மற்றும் மறுசீரமைப்பு செய்தல்.
- தென் மாகாண அபிவிருத்தி சபையை ஸ்தாபித்தல்.

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக நடாத்தப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது கண்டு பிடிக்கப்பட்ட கணக்காய்வுக் கணிப்புக்களின் சாராம்சம் பின்வருமாறு,

## மோட்டார் வாகன விபத்துக்களை தடுத்தல்

மக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மோட்டார் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் பிரதான பணியாக இருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மதிப்பீட்டாண்டில் 2,133 ஆல் குறைந்திருப்பினும் மரணத்தை ஏற்படுத்திய விபத்துக்கள் 31ஆலும் பாரிய காயங்களை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை 173 ஆலும் அத்திகரித்துள்ளது. 2016 ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான கால இடைவெளியில் நாட்டில் இடம்பெற்ற விபத்துக்களின் அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளது.

| விபத்துக்களின் வகைகள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு (எண்ணிக்கை) | | |
|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 |
| மரண விபத்துக்கள் | 2,824 | 2,922 | 2,953 |
| படுகாயம் | 8,148 | 8,302 | 8,475 |
| சிறு காயங்டகள் | 14,604 | 13,592 | 12,264 |
| சேதங்கள் | 13,510 | 13,072 | 12,064 |
| மொத்தம் | **39,086** | **37,888** | **35,756** |

ஆட்டவணை 18 - வாகன விபத்து எண்ணிக்கை
மூலம்: சட்டமும் ஒழுங்கும் பிரிவின் வருடாந்த அறிக்கை – 2018

## குற்றச்செயல்களை இல்லாதொழித்தல்

சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதன் முன்னேற்றத்தை வெளிக்காட்டும் பிரதான குறியீடாக அமைவது யாதெனில் நாட்டில் குற்றச் செயல்கள் அறிக்கையிடப்படுவதனால் எதிர்பார்க்கப்படாத வீதமும் அறிக்கையிடப்பட்ட குற்றச்செயல்களை தீர்க்கும் வீதத்துக்கும் இடையிலான

ஒப்பீட்டளவேயாகும். இலங்கை பொலீஸுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுள் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் அளவின் வீதாசாரம் குற்றங்களின் வகைகள் 01 தவிர 09 தொடர்பாக முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு அறிக்கையிடப்பட்டிருந்தது. விவரம் அட்டவணை 19 இல் காட்டப்பட்டுள்ளது.

| குற்றங்களின் வகை | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | சதவீதம் | அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | சதவீதம் |
| பாரிய குற்றங்கள் | 35,979 | 28,016 | 77.87 | 36,355 | 28,246 | 77.69 |
| சிறிய குற்றங்கள் ஆட்களிற்கு எதிராக | 42,224 | 29,303 | 69.40 | 41,888 | 27,831 | 66.44 |
| சிறிய குற்றங்கள் ஆதனங்களிற்கு எதிராக | 32,881 | 16,664 | 50.68 | 31,415 | 14,143 | 45.02 |
| சிறிய முறைப்பாடுகள் | 1,029,087 | 1,029,047 | 100.00 | 971,617 | 971,617 | 100.00 |
| சிறுவர்களிற்கு எதிரான வன்முறைகள் | 2,911 | 1,998 | 68.64 | 3,344 | 1,572 | 47.01 |
| பெண்களிற்கு எதிரான வன்முறைகள் | 790 | 498 | 63.04 | 775 | 326 | 42.06 |
| மதுபான குற்றங்கள் | 120,198 | 103,022 | 85.71 | 129,813 | 104,048 | 80.15 |
| வன்முறைப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் | 107,944 | 104,592 | 96.89 | 124,940 | 120,052 | 96.09 |
| துஷ்பிரயோகக் குற்றங்கள் | 1,055 | 1,025 | 97.16 | 954 | 868 | 90.99 |
| நியதிச்சட்ட குற்றங்கள் | 49,013 | 46,857 | 95.60 | 40,607 | 38,102 | 93.83 |

அட்டவணை 19 - அறிக்கையிடப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கையும் அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கப்பட்டமையும்

மூலம்: வருடாந்த செயல்திறன் அறிக்கை 2018, இலங்கை பொலிஸ்

## போதைப்பொருள் கட்டுப்பாடு

நச்சுவகை ஔடதங்கள் பாவணை மற்றும் பரிமாற்றங்களை தடுத்தலும் அமைச்சின் பிரதான கடமையாக இருந்தது. முன்னைய வருடம் ஹெரோயின், கஞ்சா தொடர்பான குற்றச் செயல்களுக்கு கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 29, 288 நபர்களாகவும், 51, 788 நபர்களாகவும் இருந்த போதிலும் மதிப்பீட்டாண்டில் அது 40,999 நபர்களாகவும் 54,685 நபர்களாகவும் இருந்தது. மதிப்பீட்டாண்டு மற்றும் முன்னைய வருடங்களில் கைதுசெய்யப்பட்ட போதைப்பொருட்களின் எணணிக்கை அட்டவணை 20 இல் காட்டப்பட்டுள்ளது.

| நிறுவனம் | Heroin கி.கிராம் | | Cannbis கி.கிராம் | | Hashish கி.கிராம் | | Cocaine கி.கிராம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொலிஸ் போதைப்பொருள் ஒழித்தல் பணியகம் | 23.598 | 669.310 | 206.587 | 543.555 | 1.122 | 1.667 | 2.050 | 18.266 |
| பொலிஸ் நிலையங்கள் | 236.814 | 46.658 | 3,876.945 | 2,420.902 | 3.040 | 9.814 | 218.647 | 0.134 |
| விசேட அதிரடிப்படை | 0.295 | 3.831 | 512.882 | 1,267.644 | - | 1.846 | - | 0.036 |
| ஏனைய நிறுவனங்கள் | 54.246 | 12.325 | 390.644 | 546.648 | 34.009 | 19.983 | - | 2.768 |
| மொத்தம் | 314.953 | 732.124 | 4,987.058 | 4,778.749 | 38.171 | 33.310 | 220.697 | 21.204 |

உரு அட்டவணை 20. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் அளவுகள்
மூலம்: பொலிஸ் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் வருடாந்த அறிக்கை – 2018

## பொலிஸ் தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு அமைப்பை மேம்படுத்தல்

நவீன பயன்பாட்டுக்கு ஏற்ப இலங்கை பொலிஸ் சேவையின் பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் அமைப்புகளை மேம்படுத்தவதற்கும் குற்றப் பரிசோதனைப் பிரிவு அபிவிருத்திக்கும் மதிப்பீட்டாளர்களில் மொத்தமாக ரூ. மில்லியன் 440 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை எதற்கும் பயன்படுத்தாததன் காரணமாக மொத்த ஒதுக்கத்தையும் மீதப்படுத்தியுள்ளனர்.

## குடிமக்கள் பொலிஸ் எண்ணக்கரு அபிவிருத்தி

483 பொலிஸ் நிலையங்களில் “ஊருக்கு ஒரு பொலிஸ்” எனும் எண்ணக்கருவுக்கு அமைய குடிமக்களின் பொலிஸ் பணிக்குத் தேவையான மோட்டார் சைக்கிள்கள் உற்பட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 150 ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அவ் ஒதுக்குதலில் ரூ. மில்லியன் 143.67 குறித்த விடயம் தொடர்பில் பாவிக்கப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

## பொலிஸ் பல்கலைக்கழகம் உருவாக்குதல்

பொலிஸ் பல்கலைக்கழக சட்டத்தை நகல் வரைவு செய்தல், மரத்தளபாடங்களை கொள்வனவு செய்தல் போன்ற விடயங்களுக்கு மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 125 ஒதுக்கப்பட்டிருந்த பேரிலும் வருட இறுதி வரை அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஒதுக்குதலில் ரூ. மில்லியன் 102.94 மீதப்படுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை பொலிஸ் கட்டிட நிர்மாண அபிவிருத்தி

2016-2018 இடைக்கால வரவு செலவுத் எல்லைக்குள் மொத்தச் செலவினம் ரூ. மில்லியன் 1,808.09 க்கான இலங்கை பொலிஸ் நிர்மாண கருத்திட்டங்கள் 4 இனை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டிட நிர்மாண திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டு இறுதியில் சிப்பாய்களுக்கான வீடுகள், கேற்போர் கூடம், உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் போக்குவரத்து தலைமையக கட்டிடம் ஆகியவை உள்ளடங்கலாக இந் 04 கருத்திட்டங்களினதும் பௌதீக வளர்ச்சி நூற்றுக்கு 2 இலிருந்து நூற்றுக்கு 60 வீதம் வரை இடைவெளியுடையதாக இருந்தது.

## விசேட அதிரடிப்படையின் UN MISSION கருத்திட்டம்

ஐக்கிய நாடுகளின் சமாதான பணிகளுக்கான விசேட அதிரடிப்படையின் போர் படையொன்றை மாலி அரசாங்கத்தினுள் நிறுவுவதற்கு தேவையான ஆயுதங்கள், ஆயுதம் பொறுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் அடங்கலாக யுத்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து முயற்சி எடுக்கப்பட்டது. 320 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆம் வருடம் பயிற்சிகளும் வழுங்கப்பட்டிருந்தன. 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு வருடங்களில் யுத்த உபகரணங்களை வாங்குவதற்கு மொத்தமாக ரூ. மில்லியன் 792 செலவிடப்பட்டிருந்ததுடன் அவ் உபகரணங்கள் கட்டுக்குருந்த முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 2019 மே மாதம் அளவிலும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் ஐக்கிய நாடுகளிழன் சமாதான கடமையாற்ற ஒன்றிணையவில்லை.

துறைமுக மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டிருக்காமை

வெளிநாட்டுக் கடன்களை குறைவாகப் பயன்படுத்தியமை

அரசாங்க அனுசரணைகளை உயர் மட்டத்தில் பயன்படுத்தியிருக்காமை

இறங்குதுறை செயற்பாடுகள் பின்னடைவு கண்டிருத்தல்

கிழக்குப் பிராந்திய கொள்கல இறங்குதுறைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடனை முறையான அங்கீகாரமின்றி நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குதல்

CCTV கெமரா முறைமையினை பொருத்துதல்

# துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

இடையூறின்றி சமுத்திர முறைமுக வசதிகளை ஒழுங்கமைத்தல் இந்த பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு மற்றும் நியதிச் சட்ட சபைகள் / 03 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- அவற்றைத் தவிர ஏனைய துறைமுகங்களின் எண்ணெய் தாங்கி உபகரணம், வெளிச்சவீடு மற்றும் வெளிச்சவீடுகளின் அபிவிருத்தியும் நிர்வாகச் செயற்பாடுகளும்
- கப்பற்துறை சேவை வழங்குனர்களுக்கும் பயன்படுத்துவோர்களுக்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்தல்
- கப்பற்துறை சேவைகளுக்காக போட்டி விதிக்கோவைகள் விதித்தல்
- கப்பற்துறை வழங்குனர்களுக்கும் பயன்படுத்துவோர்களுக்குமிடையில் மதியுரை ரீதியான தொடர்புபடுத்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் உதவுதல்.
- பூத் படகு மற்றும் சமுத்திர நாடோடிப்படகு மீதிகளை கையேற்றல்.
- கப்பற்துறை நடவடிக்கைகளின் அபிவிருத்தி நிதியத்தை நிர்வகித்தல்.
- கப்பல் கட்டணமும், கப்பற்துறை சேவை நடவடிக்கைகளும் கடற்கரையோர பிரயாணிகள் போக்குவரத்து.
- நிறுவனத்தை மேற்பார்வை செய்தல்

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

15 மூலதன செலவின விடயங்களின் கீழ் 08 மூலதன செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 3,376.90 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 05 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ரூபா 2,270 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அச்செயற்திட்டங்களை செயற்படுத்தாமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

## எதிர்பார்த்த பெறுபேறுகளை (Out Come) பெற்றுக்கொள்ள முடியாமை

கடலுடன் அண்மித்தாக பயணிகள் போக்குவரத்து சேவைகளை முறைமைப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாண தீபகற்பத்திற்கும் தீவுகளுக்கும் இடையில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக கப்பல்களை பதிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் திருத்தங்களுக்காக வசதிகளை வழங்குவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது இரண்டு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. குறித்த நிர்மாணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்ய உத்ததேசிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆறந் திகதி வரை ஆரம்ப நிர்மாண மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை நீர் மற்றும் மின்சாரம் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்டது.

## வெளிநாட்டு கடன் பயன்பாடு

அமைச்சரவை அங்கீகாரத்துடன் காங்கேசன்துறை துறைமுக வேலைகளை

செயற்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக்காக கட்டிடமொன்றையும் களஞ்சியமொன்றையும் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,350 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடு இந்தியா எக்சிம் வங்கியின் கடன் (Line of Credit) இன் கீழ் நிதியளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்குரிய பெறுகை செயற்பாடுகள் நிர்மாணங்களின் 5 சதவீத அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்டதுடன் முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக திட்டமிடப்பட்டிருந்த அரச கடன் முழுவதையும் பயன்படுத்துவதற்கு தவறியிருந்தது.

## பொதுத்துறையின் கப்பல்பொருட்கள் இறக்குமதி

2016 சனவரி 13 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு நிதியளிப்பு திட்டங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களாலும் 2015 மே 06 ஆந் திகதிய 415 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுத்துறையின் கப்பல் பொருள் இறக்குமதிகள் வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே 2016 பெப்ரவரி 18 ஆந் திகதிய 03 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலமும் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய இலங்கை மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனை மூலமும் பொது வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கம்பனியின் சேவை வழங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாரியளவில் இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச நிறுவனங்கள் கம்பனியின் சேவைகளை பெற்றிருக்கவில்லை. அவ்வாறே சில அரச நிறுவனங்கள் வேறு வெளிநாட்டு கப்பல் கம்பனி மூலம் இறக்குமதிகளை மேற்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட 700 சந்தர்ப்பங்களுக்கு அதிகமான எண்ணிக்கையொன்றும் 2018 ஆம் ஆண்டின் போது 538 சந்தர்ப்பங்களுக்காக கம்பனியால் விட்டுவிடல் அறிவிப்பு கடிதங்கள் (waivers) வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பொருள் இறக்குமதி மற்றும் தொடர்புடைய வியாபார சந்தர்ப்பங்கள் கம்பனிக்கு பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான நடைமுறையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த சுற்றறிக்கை மூலம் கம்பனியின் சந்தைப் பங்கினை விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அரச அனுசரணைகள் முழுமையாக பயன்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் சந்தைப்பங்கு

2018 ஆம் ஆண்டிற்காக உலக துறைமுகங்கள் தொடர்பான அல்பா லைன் அமைப்பினால் வழங்கப்பட்ட அல்பாலைன் அறிக்கையின் (Alppha line Report) பிரகாரம் கொழும்பு துறைமுகத்தின் இருபதுக்கு இருபது சம- அலகு (Twenty Equireland Unit) 7,047,486 ஆன செயற்பாடுகளை மேற்கொண்டு உலகில் 23 ஆவது இடத்தில் தரித்திருப்பதுடன் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அந்நடவடிக்கைகளல் 13.5 சதவீத வளர்ச்சியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது 14.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## கப்பல் பொருள் கையாளல் செயற்பாடு

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதான துறைமுகங்களுக்கு 2016 ஆம் ஆண்டின் போது வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 5,023 ஆக இருந்த போதிலும்,

2018 ஆம் ஆண்டில் கப்பல்களின் எண்ணிக்கை 4,937 வரை குறைவடைந்திருந்தது. எனினும் கையாளப்பட்ட இருபது (TUEs) கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டின் பொது 4.91 மிலலியன் முதல் 2018 ஆம் ஆண்டின் போது 7.05 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே கையாளப்பட்ட மரபுரீதியான கப்பல் சரக்கு அளவு 2016 ஆம் ஆண்டின் போது 7.81 மில்லியன் முதல் 2018 ஆம் ஆண்டு வரை 7.05 மெ.தொ.வரை குறைவடைந்திருந்தது. விபரங்கள் கீழே அட்டவணை காட்டப்பட்டுள்ளது.


| விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை (கொள்கலன்கள், மரபு ரீதியான, ஏனைய) | 4,298 | 4,760 | 5,023 | 4,942 | 4,933 |
| கையாளப்பட்ட கொள்கலன்களின் (TEUS) எண்ணிக்கை (மெற்றிக் தொன் 000) | 4,908 | 5,185 | 5,735 | 6,209 | 7,047 |
| கையாளப்பட்ட மரபுரீதியான கப்பற் பொருள் அளவு (மெ.தொ. 000) | 6,339 | 7,156 | 7,811 | 7,735 | 7,438 |

அட்டவணை: பிரதான துறைமுகங்களில் செயற்படுத்தப்படும் கொள்கலன்களின் அலகுகள் மற்றும் மரபுரீதியான கப்பல் பொருட்களின் அளவு

மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

## கொழும்பு துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள், டேர்மினால் செயற்பாட்டு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைதல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2001 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பதினெட்டு கொள்கலன் கையாளலில் சதவீதமொன்றாக கருதும் போது 81 சதவீதம் முதல் 33 சதவீதம் வரை விரைவாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், கொழும்பு துறைமுகத்தினுள் போட்டி செயற்பாடுகளில் ஈடுபடும் இரண்டு தனியார் கம்பனிகளில் 2013 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த கம்பனி 01 சதவீதம் முதல் 38 சதவீதம் வரை துரித வளர்ச்சியொன்றை பெற்றுக் கொண்டிருந்தது. மற்றைய கம்பனி 2001 ஆம் ஆண்டின் போது 10 சதவீதம் வரையான சந்தைப் பங்கு 2018 ஆம் ஆண்டளவில் 29 சதவீதம் வரை அதிகரிப்பை பெற்றுக் கொண்டிருந்தது. கடந்த பதினெட்டு ஆண்டுகளில் கொள்கலன் கையாளல் தொடர்பான விபரங்கள் வரைபு 46 காட்டப்பட்டுள்ளது.




வரைபடம்: 46 -இலங்கை துறைமுக அதிகாரசபையின் முடிவிட கையாளல் நடவடிக்கை

மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2018 செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

மேற்படி தரவுகளின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கொள்கலன்களை கையாளுவதற்காக உரித்தாக இருந்த சந்தைப் பங்கு படிப்படியாக தனியார்

பிரிவிற்கு நழுவிச் சென்று காணப்படுகின்றது. அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பான டேர்மினல் பயன்பாட்டு விகிதம் (Terminal Occupancy Ratio) கருத்திற் கொள்ளும் போது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் 60 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## கிழக்கு கொள்கலன் முடிவிடத்தின் கையாளல் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

கொழும்பு துறைமுகத்தின் தற்போது கொள்கலன் கையாளலுக்காக செயற்படுத்துதல் (டேர்மினல்) முடிவிடங்களுக்கு இடையே ஆழமான (Draft) 14.25 மீற்றரை விட கூடிய கப்பல்கள் வருகை தரக்கூடிய ஒரே (டேர்மினல்) முடிவிடம், கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறையாகும். (C.T.C.T) மாத்திரமாக இருந்ததுடன் அதன் இயலளவு ஒரு வருடத்திற்கு 2.4 மில்லியன் இருப்பது சம அலகுகள் ஆக இருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது அந்த இறங்கு துறைக்கு 14.25 மீற்றரை விட கூடிய 308 கப்பல்கள் வந்திருந்ததுடன் மொத்தமாக 2.6 மில்லியனுக்கு மேற்பட்ட அளவிலான கொள்கலன்கள் கையாளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அந்த இறங்குதுறையின் கையாளல் 12 சதவீதமான அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இறங்கு துறை சேவைகளுக்கான கேள்வியில் அதிகரிப்பதற்கு ஈடாகும் கொழும்பு துறைமுக இறங்குதுறை சேவை வழங்குவதில் கவனம் செலுத்தயிருக்கவில்லை.

எவ்வாறாயினும், கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்துதல் செயற்திட்டத்திற்குரிய உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்து நிதி பெறப்பட்டு 800,000 அலகுகள் கொள்கலன் வருடாந்த இயலளவுடைய நிர்மாணத்தின் கிரயம் ரூபா 11,160 மில்லியனான 18 மீற்றர் ஆழத்திலும் 400 நீளத்திலும் ஆன கிழக்கு இறங்குதுறையின் நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், கப்பல் பொருள் கையாளல் செயற்பாட்டிற்காக தேவையான பெரிய கிரேன் உட்பட உபகரணங்களை வழங்கி இந்த இறங்கு துறையின் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கணக்குகளில் காணப்பட்ட கடன் மீதியான ரூபா 147,746 மில்லியன் பொது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரமின்றியும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. அதன்காரணமாக அரசின் எந்தவொரு கணக்கிலும் அக்கடன் தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பொதுத்திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அட்டவணையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கடன் மீதி ரூபா 179,546 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இக்கடன் கணக்கீடு செய்வது தொடர்பான இருதரப்பினருக்கும் இடையே இணக்கப்படாடொன்று வந்திருக்கவில்லை.

மேற்படி கடன் தொகைக்குரிய 2017 நவம்பர் 30 ஆந் திகதிய அளவில் கணக்கிடப்பட்ட அன்னியச் செலவாணி மாற்றல் நட்டம் ரூபா 31,544 மில்லியனும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அன்னியச் செலவாணி நட்டமான ரூபா 28,396 மில்லியன் எந்தவொரு கணக்கிலும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இதன் பிரகாரம் இக்கடன் தொகை தொடர்பான 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய அன்னியச் செலவாணி மாற்றல் நட்டம் ரூபா 59,940 மில்லியனாக இருந்தது.

## கம்பனியொன்று பெற்றுக் கொண்ட கடனுக்காக பிணையாளியாக இருத்தல்

மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியால் தனியார் வங்கியொன்றிடமிருந்து ஐ.அ.டொலர் மில்லியன் 24 ஆன கடன் தொகையை பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை பிணையாளியாக இருந்தது. 2017 நவம்பர் முதல் அக்கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் பெற்றுக் கொண்ட கடன் கம்பனியால் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை அக்கடன் தீர்ப்பதற்காக கம்பனியிடம் இருந்த பணம் போதாமல் இருந்தது. அவ்வாறாயினும், கடனுக்கு பிணையாளராக இருந்த இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக நிலுவை கடன் மீதியான ஐ.அ.டொலர் 22.3 மில்லியனை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக குறித்த வங்கியால் கோரிக்கை கடிதமொன்று 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

## CCTV கெமரா முறைமையொன்று பொருத்துதல்

அதி பாதுகாப்பு வலயமான பெயரிடப்பட துறைமுக அளவில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் போது சகல நுழைவாயில்களும் இறங்கு துறைகளின் பாதுகாப்பிற்காக ரூபா 60 மில்லியன் செலவிடப்பட்டு CCTV கெமரா முறைமையொன்று பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 150 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடு மீளாய்வாண்டு இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## சுங்கத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணம்

2011 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தினால் அறிவித்தலொன்று இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட 27 கிரேன்கள் தொடர்பாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 1,580 மில்லியன் சுங்க தண்டப்பணத்தை குறைப்பதற்காக சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க புலனாய்வொன்றின் தீர்வின் பேரில் நிதி அமைச்சருக்கு மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்க கூடியதாக இருந்தது. எனினும் அதிகாரசபையால் நிதி அமைச்சருக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,577 மில்லியன் நிகழத்தக்க பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த விடயம் தொடர்பாக அதிகாரசபை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடர்ந்திருந்ததுடன், மேன்முறையீட்டு நிதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் அதிகாரசபையால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

| நெடுஞ்சாலைகள் | |
| --- | --- |
| | காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திராமை<br><br>அதிவேகப் பாதைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பயன்படுத்துதல்<br><br>இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்காக செலவு செய்தல்<br><br>வீதிகளை மேம்படுத்துதலுடன் ஒப்பிடுகையில் பாலங்களை புனர் நிர்மாணம் செய்யாமை<br><br>இரும்புப் பாலங்களை பேணுவதற்காக முறையான நடைமுறையொன்று காணப்படாமை |
| | உடன்படிக்கைக் காலத்தில் நிர்மாண வேலைகளை பூரணப்படுத்தாமை<br><br>செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பதவியணியினரை ஆட்சேர்க்காமை |

# நெடுஞ்சாலைகள்

உயர் இணைத்தல் முறைமை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பிரயாண நேரம் மற்றும் கிரயத்தை இழிவுபடுத்துவதற்காக மற்றும் வீதிப்பாதுகாப்பு மற்றும் வசதிகளை அதிகரிப்பதன் மூலம் வீதிகளை பயன்படுத்துவோரின் வாழ்க்கை நிலையினை கட்டியெழுப்புதல் இந்த துறையில் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். அந்த விளைவினை கைப்பற்றிக்கொள்வதற்காக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் இரண்டு நியதிச் சட்ட நிறுவனங்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்ற வேண்டி இருந்தது.

- நெடுஞ்சாலைகள் விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல்கள்.
- அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தேசிய கொள்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்புபடுத்துதல்.

அமைச்சு மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களினால் அந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலை முறைமையின் திறனை மேம்படுத்துவதற்கான தொடர்பற்ற செலவினங்கள்

1991 தொடக்கம் 2005 வரையில் செய்து முடிக்கப்பட்ட கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதைக்கான மொத்த செலவினம் ரூபா 5,063 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்ட அதிவேக பாதைமுறைமையின் கிரயமாக 2018 ஆம் ஆண்டில் செலவுவைக்கப்பட்டது. இருப்பினும், அந்தகாலப் பகுதியில் ஏற்பட்ட செலவுகள் அதிவேக பாதை முறைமையின் திறனை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்திருக்கவில்லை.

## காணிகள் கொள்வனவு செய்வதற்காக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7,586.39 ஹெக்டார்களின் 546 காணித்துண்டுகளை கொள்வனவு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் அது பின்னர் 2019 ஒகஸ்ட் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டது. மேலும், நெடுஞ்சாலை செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் இடமாற்றம் பெற்ற நபர்களுக்காக வழங்கவிருந்த மீதி 164 காணித் துண்டுகளின் பெறுமதி அதிகார சனபயின் நிதிக் கூற்றுக்களில் நிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## சொத்து முகாமைத்துவம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சொத்து முகாமைத்துவம் மற்றும் வருமானப்பிரிவினால் 21.5 ஏக்கர் காணியின் 11 துண்டுகள் வெளி நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. உரிய ஆவணங்கள் குத்தகை ஒப்பந்தம் இல்லாது 6 இடங்களும் குத்தகை ஒப்பந்தத்துடன் 5 இடங்களும் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தங்களில் குறிப்பிட்டளவு குறைபாடுகளும் காணப்பட்டது. குறித்த ஒப்பந்தங்கள் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய வீதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. அதிகார சபையானது குறித்த ஆதனங்களில் இருந்து வருமானங்களை உருவாக்குவதற்கும் உரிய ஆதனத்தை சரியான கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதற்கும் தவரியிருந்தது. மேலும் சபையானது வீதி ஒதுக்கீடுகளின் மீது போதுமான தகவல் முறைமை ஒன்றினை பேணியிருக்காததுடன் வீதி ஒதுக்கீடுகளின் குத்தகைகளுக்கு முறையான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்று அமுல்படுத்தப்படவில்லை.

## அதிவேக பாதைகளின் வருமானத்தின் மூலம் செலவுகளை மீளப்பெறல்

169.13 கிலோமீற்றர் அதிவேக பாதை முறைமையின் மொத்த வருமானம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கெல்லையின் கீழாக ரூபா 36,704 மில்லியனாக இருந்தது. அரசாங்கமானது மேற் கூறிய நெடுஞ்சாலை முறைமையின் நிர்மானத்திற்காக ரூபா 245,769 மில்லியன் செலவிட்டிருந்தது. அதற்கிணங்க அதிவேகப்பாதையில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தினூடாக செலவுகளை ஈடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியில் தெற்கு அதிவேகப்பாதைக்கு 38 வருடங்களும், கட்டுநாயக்க அதிவேகப்பாதைக்கு 16 வருடங்களும் மற்றும் கொழும்பு வெளிச்சுற்றுவட்ட அதிவேகப்பாதைக்கு 35 வருடங்களும் எடுத்திருந்தது.

## அதிவேகப் பாதையிலிருந்தான வருமானத்தின் பயன்பாடு.

2015 ஏப்ரல் 27 ஆம் திகதியிட்ட 1912/2 ஆம் இலக்க அதி சிறப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம், அதிவேகப்பாதைகளின் வருமானம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியதுடன் அந்த பணமானது தேசிய அதிவேகப்பாதை முறைமையின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பின் நோக்கத்திற்காக பஎன்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான அதிவேகப்பாதையின் மொத்த வருமானம் ரூபா 36,074 மில்லியனாகும் அந்த வருமானத்திலிருந்து ரூபா 25,548 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அன்றாட செலவினங்களுக்காகவும் பொது திறைசேரிக்கான கொடுப்பனவுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் இருந்த ரூபா 5,507 மில்லியன் மாத்திரமே கணக்குகளில் மிகுதியாக காணப்பட்டது.

இருப்பினும் ரூபா 245,769 மில்லியன் தொகையான கடன் அதிவேகப்பாதைகளின் நிர்மானத்திற்காக அரசாங்கத்தினால் பெறப்பட்டிருந்ததுடன் கடனிற்கான வட்டி திறைசேரியினால் செலுத்தப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெறப்பட்டிருந்த அதிவேக பாதை வருமானம் அத்தகைய கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெறப்பட்டிருந்த அதிவேகப்பாதையின் வருமானம் அத்தகைய கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கான செலவீடுகள்.

நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் மீது விசேட அதிரடிப்படையினர் மற்றும் இலங்கை பொலிஸின் உத்தியோகத்தர்களினால் செய்யப்பட்ட வேலைகள் சார்பில் சொத்துகள் மற்றும் எரிபொருட்கள் கொள்வனவுக்காக இலங்கை பொலிஸிற்கு அதிவேக பாதையின் வருமானத்தினால் ரூபா 414 மில்லியன் செலுத்தப்பட்டிருந்து.

## வீதி முன்னேற்றத்தின் பிரகாரம் பாலங்களின் புனர் நிர்மானம்.

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாலங்கள் தகவல் முறைமையின் பிரகாரம், தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் கீழான மேம்பாலங்களின் எண்ணிக்கை 15 ஆனதுடன் 3 மீற்றர்களுக்கும் அதிகமான அகலமுடைய பாலங்கள் 4,153 ஆகும். 46 பாலங்கள் மிள்கட்டமைக்கப்படவேண்டியிருந்தது அவதானிக்கப்பட்டதுடன் அதில் 161 பாலங்கள் புணரமைக்கப்பட வேண்டும். ஆயினும் வீதிகள் கடந்த சில வருடகாலப்பகுதியில் நிலக்கீழ் வேலை, அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செய்யப்பட்டிருந்தது, அந்த பாலங்களை உரிய நேரத்தில் நிர்மாணிப்பதற்கும் புனரமைப்பதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அகலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட வீதிகளின் பாலற்களின் அகலப்படுத்தல் போதாமல் காணப்பட்டதுடன் சில பாலங்கள் பாழடைந்தும் காணப்பட்டன இதனால் நாட்டு மக்களினை பாதுகாப்பதற்காக அதிகார சபையின் பணியினை நிறைவேற்றுவதில் தடை காணப்பட்டது.

## இரும்புப் பாலங்ளின் பராமறிப்பிற்கு சரியான பொறிமுறைமையில் குறைபாடு.

4,168 பாலங்களில் தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னலில் அமைந்துள்ள மேம்பாலங்கள் உள்ளடங்களாக மொத்தமாக 615 இரும்புப்பாலங்கள் உள்ளன. இருப்பினும் இந்த இரும்புப் பாலங்கள் காலத்திற்கு காலம் பராமரிக்கப்படல் வேண்டும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது இரும்பு பாலங்களின் பராமரிப்பிற்கான நிபுனத்துவத்துடனான ஒரு பிரிவினை கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் இரும்பு பாலங்களின் பராமரிப்பு அதிகார சபைக்கு சிக்கலாக காணப்படும்.

## வீதி நிர்மானமானது குறித்த ஒப்பந்த காலப்பகுதியில் பூர்த்தியாக்கப்படமாட்டாது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 மற்றும் 2017 ஆண்டில் வீதி மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கத்திற்காக ருபா 1,871 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் என்றாலும் அந்த மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கல் உடன்படிக்கையிலிருந்து ருபா 1,871 மில்லியன் பெறுமதியான 35 ஒப்பந்தங்கள் காலவாதியாகி காணப்பட்டது. 2018 திசெம்பர் 31 வரை உடன்பட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## வீதி நிர்மாண ஒப்பந்தங்களை ரத்துச் செய்தல்.

வீதிகளின் நிர்மாணத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகார சனபயினால் உள்ளிடப்பட்ட ருபா 1,245 மில்லியன் பெறுமதியான 19 ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களினால் ரத்து செய்யப்பட்டிருந்து. 2019 ஆகஸ்ட் 31 இல் நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கபட்டிருக்கவில்லை.

## இரு மடங்கான கட்டணம்.

மத்திய நெடுஞ்சாலை மீதான சாத்தியவள கற்கை ஒன்றை செய்வதற்காக மேற்கூறிய சாத்தியவள கற்கையை செய்வதற்காக ருபா 97 மில்லியனிற்கு பல உள் நாட்டுக்கம்பனிகளுடன் செய்யப்பட்டிருந்த கம்பனி ஒப்பந்தங்களினால் ஆய்வொன்றை மேற்கொன்ளாது ஒரு அவுஸ்திரேலியா கம்பனிக்கு ருபா 1,759 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## செயற்திட்டம் அரம்பிப்பதற்கு முன்னர் ஊழியர்களின் ஆட்சேர்ப்பு.

மத்திய அதிவேகபாதையின் பொதுஹெர தொடக்கம் கலெகெதர வரையான பிரிவிற்கான ஒப்பந்தக்காரர் மற்றும் ஆலோசனை நிறுவனம் 2017 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டிருந்தது இருப்பினும் நிர்மான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கோ ஒப்பந்தத்திற்கோ கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. காணி கொள்வனவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்கும் முறையே ரூபா 3,200 மில்லியன் மற்றும் ரூபா 1,931 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது, ஆகவே செயற்திட்டத்தை தொடங்காமல் செயற்திட்ட ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, வாகனபராமரிப்பு மற்றும் பயன்பாட்டிற்கு செலவுகள் செய்யப்பட்டிருந்தது.

## வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு செயற்திறன் உத்தரவாதத்தினை மிஞ்சியிருந்தது.

கேகாலை மாவட்டத்திலுள்ள ஒருங்கிளைந்த வீதி முதலீட்டு திட்டத்தின் பொதி 01ல் புனரமைப்பு வேலையில் ஈடுட்டிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்திறன் உத்தரவாதத்திற்கு மேல் ரூபா 30 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## பலனற்ற ஒப்படைப்பு கட்டணத்திற்கான கொடுப்பனவு

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கடனின் மீளப்பெறுகை சரியான நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, அதனால் ஒருங்கினைந்த வீதி முதலீட்டு திட்டம் I இலிருந்து ரூபா 476 மில்லியனும் ஒருங்கினைந்த வீதி முதலீட்டு திட்டம் 2 இலிருந்து ரூபா 31 மில்லியன் பலனற்ற ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

### ஒப்பந்தக்காரரினால் நிர்மான இயந்திரங்களின் அகற்றல்

கேகாலை மாவட்டத்திலுள்ள ஒருங்கினைந்த வீதி முதலீட்டு திட்டத்திலிருந்து இரண்டு பொதிகள் மற்றும் ரத்னபுரி மாவட்டத்திலிருந்து ஒரு பொதியிலிருந்து ரூபா 1,087 மில்லியன் மீளப்பெறவேண்டியிருந்தது. இருப்பினும் ஒப்பந்தத்தை இடைநிறுத்த தீர்மானித்திருந்ததுடன் பொறியியலாளரின் அனுமதியின்றி ஒப்பந்தக்காரர் அவரது இயந்திரங்களை முற்பனம் செலுத்தி பெற்றிருந்தார்.

### சாத்தியவள கற்கைக்கான கொடுப்பனவு

தெற்கு அதிவேகப்பாதையுடன் இணைக்கப்பட்ட 30 வீதிகளின் 250 கிலோமீற்றர்களுக்கான விபரமான வரைபடத்தினை தயாரித்தல் மற்றும் சாத்தியவள கற்கையினை பூர்த்திசெய்தல் என்பன அதிவேகப்பாதை இணைப்பு முன்னேற்றத்திட்டத்தின் மொத்தகிரயம் ரூபா 790.80 மில்லியனானதுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 09 இல் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஓகஸ்ட் 31 இல் பூர்தியாக்கப்பட்டிருந்தது. இருப்பினும். 2019 மார்ச் 14 இல் உள்ளவாறு புனர்நிர்மானத்திற்காக 24 கிலோமீற்றர்கள் மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக வீதிகளின் வடிவமைப்பு காலம் கடந்து காணப்பட்டதுடன் வீதிகளின் வடிவமைப்பிற்காக ஏற்பட்ட செலவுகள் பலனற்றதாக போய் காணப்பட்டது.

### கடனை பயன்படுத்தாது கடன்வழங்கு முகவருக்கு திருப்பி அனுப்புதல்

கடன் வழங்கும் முகவரினால் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 7.20 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 923 மில்லியனிற்கு சமனான யூ.எஸ் டொலர் 6.12 மில்லியன் தேசிய நெடுஞ்சாலைதுறை செயற்திட்டத்தின் ஒதுக்கீடு, சிவில் நிர்மான வேலைகளில் காணப்பட்ட மந்தகதியான செயற்பாட்டினால் செயற்திட்ட முடிவில் பயன்படுத்தாமல் காணப்பட்டதுடன் கடன்வழங்கும் முகவருக்கு திருப்பிச்செலுத்தப்பட்டிருந்தது. கடனானது கடன் வழங்கும் முகவரிற்கு அதனை பயன்படுத்தாது திருப்பியனுப்பப்படுகின்றது.

### வேலை ஆரம்பிப்பு முற்பனத்தின் அதிக கொடுப்பனவு

தென்பகுதி வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் ஒப்பந்தப்பொதி 1 இன் கீழான ரூபா 134.32 மில்லியன் பெறுமதியான அளவைப்பட்டியலின் 235 உருப்படிகளின் கீழான வேலைகள் மற்றும் ஒப்பந்த பொதி 3 இன் கீழான ரூபா 189 மில்லியன் பெறுமதியான அளவைப்பட்டியலின் 260 உருப்படிகளின் கீழான வேலைகள் ஒப்பந்தக்காரர்களினால் செய்யப்பட்டிருந்தது, ஒப்பந்தப் பொதிகளுக்கான பொறியியளாளர்கள் மதிப்பீடு சரியான முறையில் தயாரிக்கப்படவில்லை என்பது இதனால் சுட்டிக்காட்டப்படுகிறது, ரூபா 61.72 மில்லியன் பெறுமதியான செய்யப்படாத வேலைகளுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணம் பெற்றுக்கொள்வதன் மீது ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிக நன்மைகளை அனுமதிக்கின்றது.

### பயனற்ற ஒப்படைப்பு தரகிற்கான கொடுப்பனவு

புதிய பாலங்களின் நிர்மானிப்பின் பூர்த்தியாக்கலில் காணப்பட்ட தாமதம் காரணமாக, கடன் உடன்படிக்கையில் செய்யப்பட்ட ரூபா 12,381 மில்லியன் ஜப்பான் யொன் தொகையில் 57 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் ரூபா 7,003 மில்லியன் ஜப்பான் யொன் மாத்திரமே 2018 திசெம்பர் 31 ல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், வினியோகிக்கப்படாத கடனின் கிடைப்பனவுகள் மீது 2008 திசெம்பர் 31 வரை கடன் வழங்கும் முகவரினால் ரூபா 68.53 மில்லியன் பெறுமதியான ஒப்படைப்பு கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. பாலநிர்மான வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது விடின், 2021 ஜுலை 05ல் செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த காலப்பகுதிக்குல் நிதிகளின் உரிய ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதில் சந்தேகமான நீதி காணப்படுவதற்கான சாத்தியப்பாடு காணப்பட்டது.

## ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை

2018ம் ஆண்டிற்கான துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் கொள்முதல் திட்டமானது ரூபா 44,945 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான ஆலோசனை சேவைகளின் கண்காணிப், கட்டிடங்கள் மற்றும் கட்டிடங்களின் கண்காணிப்பு நிர்மானம் என்பவற்றிற்கான வடிவமைப்பு வேலைகள் மற்றும் மீளாய்வாண்டின் காலப்பகுதிக்கான பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றின் ஆரம்பிப்பை உள்ளடங்கியிருந்தது. இருப்பினும் துறைமுகத்திலுள்ள கட்டிடங்களின் கட்டுமான இடமாற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பைலிங் வேலைகள் தவிர வேறு எந்த நடவடிக்கைகளும் 2019 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் மூலதன செலவுகளை எதிர்கொள்வதற்காக 2018 - பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டு பெறுமதி ரூபா 3,040 மில்லியனில் மொத்தமாக ரூபா 2,975 மில்லியன் ஏனைய செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் ரூபா 84.55 மிலிலியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தினால் பயன்படுத்தாது பொது திறைசேரியிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

ஒப்பந்தப்பொதி 1 இன் கீழான இங்கிரிய தொடக்கம் ரத்னபுர வரையான வீதியின் ஒப்பந்தக்காரர் 2018 பெப்ரவரி 27 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக நடுவர் தீர்ப்பு பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேற்கூறிய வீதிகளின் ஒப்பந்தக்காரரினால் 7 பிணக்குகள் மீது ரூபா 1,687 மில்லியன் பெறுமதியான இழப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 30 வரையான வட்டி ரூபா 903.10 மில்லியனை இத்தொகை உள்ளடக்குகின்றது. இருப்பினும் இந்த பிணக்குகள் 2019 மே 30 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## காணி கொள்வனவில் தீர்வின்மை

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 1535 அரசகாணிகள் உள்ளடங்கலாக 7085 காணித்துண்டுகளை கொள்வனவு செய்வதற்கு பட்டியலிட்டிருந்ததுடன் அதில் 4343 காணித்துண்டுகளுக்காக மொத்தமாக ரூபா 1,933 மில்லியன் இழப்பீட்டு தொகை காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், காணி சுவீகரிப்பு மற்றும் மீளச்செலுத்தல் குழுவின் தீர்மானத்தின் கீழ் மேலதிகமான கொடுப்பனவுகள் ரூபா 4,134 மில்லியன் அதன் மீது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, இழப்பீட்டு கொடுப்பனவில் காணப்பட்ட தாமதம் காரணமாக மொத்தமாக ரூபா 379.44 மிலிலியன் வட்டிக்கொடுப்பனவாக 2018 தசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 1986ம் ஆண்டின் 13ம் இலக்க காணி சுவீகரிப்பு மற்றும் மீள்செலுத்துதல் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட எந்த காணித்துண்டுகளுக்குமான கொள்வனவு செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்படவில்லை.

| அனர்த்த முகாமைத்துவம் | |
|---|---|
| | அதிகூடுதலான இயற்கை அனர்த்தங்களிற்கு உள்ளாகின்ற நாடாக மாறியிருத்தல் |
| | இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்தவதற்கான பிரேரணைகளை நடைமுறைப்படுத்தியிருக்காமை |
| | அனர்த்தங்களிற்கு உள்ளான மக்களிற்கு உதவிகளை வழங்குதல் |
| | இடர்களை குறைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் |
| | டொப்லர் ரெடார் முறைமை செயலிழந்துள்ளமை |
| | நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைவதற்கு போதிய நடவடிக்கை எடுத்திருக்காமை |

# அனர்த்த முகாமைத்துவம்

இயற்கையாக ஏற்படும் இடர் அபாயங்களையும் மனிதர்களால் உருவாக்கப்படும் இடர் அபாயங்களையும் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்குமான செயல்திறனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதனூடாக வாழ்வதற்கு தகுந்த பாதுகாப்பான சூழல் ஒன்றை உருவாக்குவதே இத் துறையின் நோக்கமாகும். இந் நோக்கங்களை நிறைவேற்றுமுகமாக இடர் முகாமைத்துவ அமைச்சு திணைக்களம் மற்றும் 4 நியதிச்சட்ட சபை நிறுவனங்கள் ஆகியவை ஒன்றிணைந்து பின்வரும் நடவடிக்கைகளை மெற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

- இடர் முகாமைத்துவ விடயங்களுடன் தொடர்புடைய கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதச் செயற்பாடுகளால் உண்டாக்கப்படும் பேரழிவுகளை தளர்த்துதல், முகங்கொடுத்தல், மீட்டெடுத்தல் (Recovery) மற்றும் நிவாரணங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்கான ஒருங்கணைப்புகளை முகாமைத்துவம் செய்தல்
- தேசிய கொள்கை அடிப்படையில் பேரழிவுகளை முகாமைத்துவம் திட்டம் மற்றும் தேசிய அவசர கால செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல்
- பேரழிவுகளை தளர்த்துவதற்கும், பதில்கூறல் மற்றும் மீட்டெடுப்புகள் தொடர்பாக வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிளைப்புகளை மேற்கொள்ளல்.
- சூழல் ஆபத்துக்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழிநுட்ப நியமங்களுடன் கூடிய வீடுகள் சட்டப்படுவதை விருத்திசெய்தல்.
- வீடு கட்டுவதற்கு பொருத்தமான தொழிநுட்பங்களுக்குறிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை ஊக்கமுட்டுதல்
- வானிலை விஞ்ஞான புள்ளிவிபரக் கணக்கெடுப்புகளையும் பரிசோதனைகளையும் மேற்கொள்ளல்.
- இயற்கை பேரழிவுகளை முன்னறிவிப்புச் செய்தல் (Forecasting of Natural Disasters) மற்றும் அது தொடர்பாக உரிய பிரிவுகளுக்குத் தகவல் வழங்குதல்.
- இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதச் செயலகளால் ஏற்படும் பேரழிவுகளின்போது மீட்டெடுக்கும் பணிகளை செயற்படுத்துதல்.
- சர்வதேச மனித நேய நிவாரண சேவை வேலைத்திட்டங்களை ஒழுங்கிணைத்தல்

அமைச்சரவை மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி காணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளியாகிய கணக்காய்வு அவதானிப்புக்களின் சாரம்சங்கள் பின்வருமாறு.

## இயற்கை பேரழிவுகளுக்கு முகம் கொடுத்தல்

உலகில் இயற்கை பேரழிவுகள் தொடர்பிலான ஆய்வுகள் சம்பந்தமாக அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றான ஜர்மன் வொச் அமைப்பினால் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி உலகில் இயற்கைப் பேரழிவுகளுக்கு முகம்கொடுக்கும் நாடுகள் வகைப்படுத்தப்பட்டதன் படி, 1998 – 2017 க்கும் இடைப்பட்ட காலத்தில் மிக கூடிய இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கிடையே இலங்கை இரண்டாமிடம் வகிக்கறது. இதிலிருந்து அறியப்படுவது யாதெனில் இயற்கை பேரழிவு முகாமைத்துவத்தின் பால் கூடுதல் அவதானம் செலுத்தப்படவேண்டும் என்பதாகும்.

### இலங்கையின் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான சட்டவரையறைகள்

இலங்கையின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் சம்பந்தமாக சட்ட ஏற்பாடுகள் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் வரையறுக்கப் பட்டிருந்தது. இடர் முகாமைத்துவம் சம்பந்தமாக எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு பேரழிவு முகாமைத்துவ் சட்டத்தில் இடம்பெறச் செய்யப்பட்ட சட்டரீதியான தேவைப்பாடு விரிவு படுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் இலங்கை பேரழிவு முகாமைத்துவச் சட்டத்தை விரிவுபடுத்த 2013 ஆம் ஆண்டில் பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் மதிப்பீட்டாண்டின் வருட இறுதிவரையில் பாராளுமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் கட்டிட பரிசோதனை அமைப்பு, நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றல்லாததுடன் இதன் காரணமாக ஆராய்ச்சி அமைப்பினால் பொதுமக்களுக்கு பிறப்பிக்கப்படுகின்ற வெள்ளப்பெருக்கு அபாயம் தொடர்பில் மதிப்பீட்டறிக்கை சம்பந்தமாக சட்டரீதியான ஏற்புடைமை காணப்படவில்லை. இதன் காரணமாக பேரழிவுகள் பற்றிய மதிப்பீடுகளை கருத்தில்கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் திரத்தவொர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு நிறுவனத்துக்கு முடியாநிலை ஏற்பட்டுள்ளது.

### இலங்கையில் ஏற்படக்கூடிய இயற்கையான மற்றும் இயற்கையில்லாத பேரழிகளை இனங்காணல்.

2015 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் கீழ் இலங்கையின் உள் நிகழக்கூடிய 21 பேரழிவுகள் இணங்காமைப்பட்டிருந்த போதிலும் உலக நாடுகளில் பரவலாக தற்போது முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பேரழிவாக கருதப்படும் புவி வெப்பமடைதல் உயர்ந்து செய்கின்றமை, கடல் நீர் மட்டம் உயர்தல், ஆகியவற்றின் மூலம் ஏற்படும் இடர்கள், பேரழிவுகளாக இணங்களைப்பட்டிருக்கவில்லை. மேலும், இடர் முகாமைத்துவ நிலையத்தினால் மதிப்பீட்டாண்டில் நிறைவேற்றப்பட்ட இடர் அபாயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளாக ஆற்று நீர்ப் பெருக்கெடுப்பு, மழை வெள்ளப்பெருக்கு, மற்றும் வரட்சியால் ஏற்படும் இடர்கள் என்ற மட்டத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தன.

### இடர் முகாமைத்துவ திட்டம் தயாரித்தல்

இலங்கை பேரழிவு முகாமைத்துவமச் சட்டத்தின் 8 வது அத்தியாயத்தின் 2(அ) பிரிவுக்கு அமைய, தேசிய இடர் முகாமைத்துவ திட்டமொன்றை தயாரிக்க வேண்டி இருந்ததுடன் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கை “செந்தாயி” வரையறைக்கு அமைவான விதத்தில் அத் தேசிய திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2018-2030 வரையுள்ள காலபகுதிக்கான தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் உருவாக்கல் பணிகள் 2017 மார்ச் 07 ஆம் திகதி ஆரம்பக்கப் பட்டிருந்தபோதிலும் அப் பணிகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிவரையிலும் முடிக்கப்படவில்லை. இத் தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்படாததன் விளைவாக அதனோடு நேரொத்தாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த மாவட்ட இடர் முகாமைத்துவ திட்டங்கள், தாபன இடர் முகாமைத்துவ திட்டங்கள் மற்றும் தேசிய அவசரகால செயல்பாட்டு திட்டங்கள் போன்ற துனைத் திட்டங்களையும் உருவாக்க முடியாமல் உள்ளது.

### இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆற்றுப் பெருக்கு, வெள்ளப்பெருக்குகள் காரணமாக அதிக ஆபத்தான பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் என இணங்கானப்பட்ட பகுதிகளான களுத்துறை மாவட்டத்தில் 1,444 குடுபங்கள், இரத்தினபுரி மாவட்டத்தில் 312 குடுபங்கள் மற்றும் கண்டி மாவட்டத்தில் 328 குடுபங்கள் ஆகியோர்க்கு இடர் நிவாரணங்களை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தன. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட காணக்காய்வு கணிப்பீடுகளின்போது குறித்த நிவாரணம்

பெற தகுதிவாந்தவர்களை தெரிவு செய்யத விதம் முறைசார்ந்ததாக காணப்படாமை, புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேகம் மகிழ்ச்சிதரக்கூடியதாக காணப்படாமை, ஆபத்தான பகுதிகளை தவிர்த்து காணிகளை தேர்ந்தெடுப்பதற்கு இயலாமல் போயுள்ளமை, போன்ற பொதுவான முறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன்படி களுத்துறை மாவட்டத்தில் 167 வீடுகளையும் இரத்தினபுரி மாவட்டத்தில் 151 வீடுகளையும் நிர்மாணிக்கும் பணிகள் 2019 மார்ச் 31 ஆம் திகதிவரை துவக்க மட்டத்தில் காணப்படுகின்றன. கண்டி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 125 குடும்பங்கள் எதுவித வீட்டு வசதிகளுமின்றி அதிக ஆபத்தான பகுதிகளுக்குள்ளேயே தற்போதும் வாழ்ந்துவருவது தெரியவந்துள்ளது.

மதிப்பீட்டாண்டில் வரட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கு 14 மாவட்டங்களில் 451,224 பயணர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்துடன் அதற்கென ரூபா. மில்லியன் 700 நிதி ஒதுக்குதல பணம் மாவட்டச் செயலாளர்களுக்கு 2018 டிசம்பர் 25 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் 2018 ஒக்டோபர் 09 ஆம் திகதியன்று மீழப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திடீர் இடர் அபாயங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நிவாரணப் பொருட்களை சேகரிப்பதற்கு அமைச்சினால் பாவிக்கப்பட்ட வங்கிக் கணக்கின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடை வழங்குபவர்கள் மூலம் அனுப்பப்பட்டிருந்த ரூபா. மில்லியன் 294.43 பணம் 2018 ஆகஸ்ட் 06 திகதிவரை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. அந் நிதியத்துக்கு சீனக் குடியரசால் அனுப்பி வைக்கப்படடிருந்த ஐ.அ. டொலர் மில்லியன் 1.00 உம் அதில் உள்ளடங்கியிருந்தது. இதன்படி நிதியத்துக்கு நிதிப் பங்களிப்புச் செய்த நன்கொடை வழங்கியவர்களின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

## இடர்களை குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

மதிப்பீட்டாண்டில் இடர்களை குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூபா. 480 மில்லியன் ஒதுக்கல் செய்யப்பட்டிந்தது. எனினும் அந்தந்த மாவட்டங்களினுள் செயற்படுதததப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்டங்கள் சம்பந்தமான விவரங்களை இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் செயற்பாட்டுத் திட்டங்களில் வெளிக்காட்டப்படவில்லை. 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 15 கருத்திட்டங்களின் சென்மதி விலைப்பட்டியல்களுக்கு செலுத்த ஏற்பாடு செய்யப்படடிருந்த ரூபா. 20 மில்லியனுக்கான ஒதுக்கலும் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வராயினும் மத்திய நிலையத்தின் பெருபேற்று அறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டுக்காக 278 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு ரூபா. 474.43 மில்லியனனுக்கான ஒதுக்குதல்கள் மாவட்டச் செயலாளர் அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுவரை அவ் ஒதுக்குதல்களில் ரூபா. 361.49 மில்லியன் மாத்திரம் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

இயற்கையான இடர்களை குறைப்பதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த ஒதுக்குதல்களில் நூற்றுக்கு 22 வீதமான ரூபா. 104.97 மில்லியனை அனுராதபுர மாவட்டத்தின் 93 கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பண்படுத்தப்பட்டிருந்தமையால் நாட்டின் மாவட்டங்களுக்கிடையே நிதி ஒதுக்குதல்கள் நேரொத்ததாக காணப்படவில்லை. காலி மாவட்டத்தில் மீழ் குடியேறப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அளுத்வத்த வீதி அபிவிருத்திக்கு ரூபா. 10 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அது இடர் அபாயங்களை மட்டுப்படுத்தும் நோக்கங்களுடன் தொடர்புடைய செயல் ஒன்றல்ல. பல்வித ஆபத்து அம்சங்களை அபிவிருத்தி செய்வதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா. 50 மில்லியனுக்கான ஒதுக்குதலில் மதிப்பீட்டாண்டில் ரூபா. 20.31 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தத்துடன் மொத்த ஒதுக்குதலையும் பயன்படுத்துவதற்குத் தவறியுள்ளனர்.

## டொப்லர் ரேடார் தொகுதி

2000 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட யோசனை ஒன்றுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பாட்டிருந்த ரூபா. மில்லியன் 400 ஒதுக்கீட்டை பயன்படுத்தி ரூபா. மில்லியன்

320 பெறுமதிவாய்ந்த டொப்லர் ரெடார் தொகுதியொன்றை, உலக வானிலை சங்கத்திடமிருந்து கொள்வனவு செய்து 2011 ஆம் ஆண்டின் தெனியாய பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று தொகுதியில் ஏற்பட்டிருந்த பல்வேறுப்பட்ட தொழிநுட்ப கோலாகுகள் காரணமாக அதனை இயக்கியிருக்கவில்லை. ரெடார் தொகுதியை இரக்குமதி செய்ததன் பின் நீண்டகாலமாக பயன்கடுத்தாமல் இருந்ததன் காரணமாக அத் தொகுதி செயல் இழந்தமைக்கான காரணமாக இருந்தது.

2017 ஏப்ரல் 21 ஆம் திகதியன்றுவரை சம்பூரணமாக செயல் இழந்து காணப்பட்ட தொகுதியை கழற்றி மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அமைரிக்க ஐக்கிய நாட்டில் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2018 டிசம்பர் 31 திகதியன்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமான தகவல்கள் வானிலை ஆராய்ச்சி திணைக்களத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரேடார் தொகுதியை ஸ்தாபிப்பதற்கு ரூபா. 408.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் வானிலை ஆராய்ச்சித்திணைக்களம் அத்தினத்தின் நிதி அறிக்கைகளில் இவ் விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்களை இன்றைப் படுத்தப்பட்டு பேணிவராத காரணத்தால் இது தொடர்பான தகவல்கள் மறைக்கப்பட்டிருக்கும் ஆபத்து நிலவுகிறது.

## நிலைபேருடைய அபிவிருத்தி இலக்கை பூர்த்திசெய்தல்

நிலைபேறுடையய அபிவிருத்தி இலக்கை பூர்த்திசெய்தல் தொடர்பாக இடர் முகாமைத்துவ விடயங்கள் நேரடியாக தொடர்புபட வேண்டியுள்ள போதிலும் இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் அமைந்துள்ள ஸ்தாபனம் தனது நோக்கத்தின் கீழான நிலைபேருடைய அபிவிருத்தி இலக்கை இனங்காண்பதற்கும் அவ் விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## மனிதவள முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவ அமைச்சினதும் அதன் கீழ் உள்ள ஸ்தாபனங்களிலும் காணப்படும் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிரப்பபடமையால் இந் நிறுவனங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பாதிப்படைந்தள்ளன. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இடர் முகாமைத்துவ அமைச்சின் 35 பதவிகளும் வானிலை ஆராய்ச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கான பதவி வெற்றிடம் உற்பட்ட பதவிநிலைய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

## விளையாட்டு அலுவல்கள்

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

எதிர்பார்க்கப்பட்டவாறு விளையாட்டு அரங்குகளை நிர்மாணித்தல் பூரணப்படுத்தப்பட்டிருக்காமை

மேலதிகமாக சம்பளம் செலுத்துதல்

செயன்முன்னேற்றம் காணப்படாத செயற்திட்டங்கள்

கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகுதல்

ஊக்கமருந்து பாவனைக்கு எதிரான விதிமுறைகளை தயாரிக்காமை

தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டமை

நிதிக் கூற்றுக்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமை

நிதி மோசடிகள்

# விளையாட்டு அலுவல்கள்

சுறுசுறுப்பான சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலும் இலங்கையின் பிரதிபலிப்பினை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்யும் நோக்கிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டுக்களுக்கான கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளல் என்பன விளையாட்டு ஆலுவல்கள் அமைச்சினால் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்களாக இருந்தன. அப்பிரதிபலன்களை அடைந்துகொள்வதற்கு விளையாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், 05 நியதிச்சட்ட ஸ்தாபனங்கள், விளையாட்டு நிதியம் மற்றும் 64 விளையாட்டுச் சங்கங்களும் ஒன்றிணைந்து பின்வரும் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- விளையாட்டுக்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- விளையாட்டுக்கள் தொடர்புடைய நடவடிக்கைகளை ஊக்கமூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் விளையாட்டுத் துறைக்கு தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்திசெய்தல்.
- விளையாட்டுக் கல்வியை அபிவிருத்தி செய்தல்
- இலங்கையின் பிரதிபலிப்பை சர்வதேச ரீதியில் கட்டியெழுப்புவதற்கு விளையாட்டை பயன்படுத்தும் விதத்தில் புதிய தந்திரோபாயங்களை உருவாக்குதல் மற்றும் கருத்துிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பொதுமக்களின் உடல்நலன் பேணும் நோக்கில் அமைந்த வசதிகளை அபிவிருத்தி செய்தலும் அதற்கான தொடர்புகளை மேற்கொள்ளலும்.
- ஸ்தாபனங்களை மேற்பார்வை செய்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள ஸ்தாபனங்களினால் அறிக்கையின் மேற்குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றும் போது ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சாராம்சங்களின் தொகுப்பு பின்வருமாறு,

## இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச வெற்றிகள்

2017ஆம் ஆண்டில் இலங்கை விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய 8 போட்டித் தொடர்களில் 29 தங்கப் பதக்கங்களையும், 39 வெள்ளிப் பதக்கங்களையும், 11 வெண்கலப் பதங்க்கங்களையும் சேர்த்து மொத்தமாக 79 பதக்கங்களை பெற்றுள்ளனர். மீளாய்வு வருடத்தில் 10 போட்டித் தொடர்களில் பங்குபற்றி 23 தங்கம், 16 வெள்ளி மற்றும் 22 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மொத்தம் 61 பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

## கருத்திட்டங்களை அமுல்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்கள்

அமைச்சினால் வெல்வெட்டித்துறை நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல், தியகம மகிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு கழகத்தின் 400 மீற்றர் செயற்கையான ஓடு பாதை மற்றும் அதன் மலசலகூட தொகுதி மற்றும் நுழைவுப்பாதை ஆகியவற்றை நிர்மாணித்தல், குருநாகல் மலியதேவ பாடசாலையில் துப்பாக்கி குறிபார்த்துச் சுடுதல், மற்றும் அம்பு எய்யும் நிலையமொன்றை நிர்மாணிக்கும் 04 கருத்திட்டங்களுக்கு 429.39 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்திற்கு மதிப்பீட்டாண்டில் 222.48 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. 2019 மே மாதம் ஆகியுள்ள நிலையிலும் அச்செயற்திட்டம் கட்டி முடிக்கப்படவில்லை.

## விளையாட்டு கட்டிட வளாகங்களை நிர்மாணித்தல்.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் மதிப்பீட்டாண்டில் மாவட்ட விளையாட்டு கட்டிட வளாகங்கள் 12 மற்றும் 7 மாகாண விளையாடம்டு கட்டிட வளாகங்கள் நிர்மாணப் பணிகளுக்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் மாவட்ட விளையாட்டு கட்டிட வளாகங்கள் 10 மற்றும் மாகாண விளையாட்டு கட்டிட

வளாகங்கள் 7 இன் நியமனப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக 692 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் மாவட்ட விளையாட்டு கட்டிட வளாகங்கள் 62 உம் மாகாண விளையாட்டு கட்டிட வளாகங்கள் 2 இனதும் வேலைகள் நிறைவடைந்திருந்தன என்பதுடன், மாவட்ட விளையாட்டு வளாகங்கள் 4 மற்றும் மாகாண விளையாட்டு கட்டிட வளாகங்கள் 5 இனதும் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## மேலதிக சம்பளம் கொடுத்தல்

விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் இணைந்த சேவைகள் கருத்திட்ட உத்தியோகத்தர்கள் பதவிக்கு பதவி உயர்வு செய்யப்பட்டதற்கு அமைவாக சம்பளம் திருத்தியமைக்கப்பட்டபோது மேலதிக சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக சம்பளம் கொடுக்கப்பட்டவர்களான, தற்போது சேவையில் பணியாற்றிக்கொண்டிருக்கும் 26 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூ. 1.2 மில்லியன் மற்றும் ஓய்வு பெற்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூ. 0.50 மில்லியன் என்ற வகையில் ரூ. 1.70 மில்லியன் 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் 55 வயது பூரணமடையாத உத்தியோகத்தர் ஒருவருக்கு 2017 ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி ஓய்வு பெற ஒப்புதல் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தருக்கு மேலதிகமாக கொடுக்கப்பட்டிருந்த சம்பளம் மீழ அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த சம்பளத்தை மீழாய்வு வருடம் முடிவடையும் வரை மீழ அறவிட தவறியுள்ளனர்.

## முன்னேற்றம் அடையப்பெறாத கருத்திட்டங்கள்

13-14 வயதுக்கிடைப்பட்ட குழுக்களில் அங்கம் வகிக்கும் விளையாட்டு திறன்மிக்க பிள்ளைகளை விஞ்ஞான அடிப்படையில் இனங்கண்டு 2024 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டித் தொடர்களுக்கு அனுப்பும் நோக்கிலான கருத்திட்டம், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இக்கருத்திட்டத்திற்கு மொத்தமாக ரூ.474 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டு முடிவடையும் போது அதற்குறிய 132.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், கருத்திட்டத்தின் வளர்ச்சி மற்றும் கருத்திட்டம் நிறுத்தப்பட்டதன் நோக்கம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

## கொள்முதல் வழிகாட்டுதலிலிருந்து விலகிச் செல்லல்

தேசிய நிதி ஒதுக்கல்களின் போது விளையாட்டு வீரர்களின் உணவு விநியோகம் தொடர்பாக மொத்தம் ரூ. 54.63 மில்லியனுக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்கான ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும்போது அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 1.2 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## ஊக்கமருந்து பாவனைக்கு எதிரான விதிமுறைகளை தயாரிக்காமை

2013ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கமுடைய விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கமருந்துகள் பாவிப்பதற்கு எதிரான மாநாட்டுச் சட்டத்தின் 33ஆம் பிரிவுக்கு அமைய ஊக்க மருந்து பாவனைக்கு எதிரான வழிமுறைகளை ஏற்படுத்தி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்து அதனை கட்டாயம் பின்பற்றப்படவேண்டிய வழிமுறையாக உருவாக்கியிருக்கலாம். 2018ஆம் ஆண்டின் முடிவில் இலங்கை ஊக்க மருந்து பாவனைத் தடுப்பு பிரதி ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்த நிலையிலும் ஸ்தாபனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பிரதான அம்சமான ஊக்க மருந்து பாவனைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து உத்தியோகத்தர்களுக்கு பண கொடுப்பனவு செய்யப்பட்டமை.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றிய பதவிநிலை உத்தியோகத்தர்கள்

4 பேர்களுக்கு விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் எனக்கருதி தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் மாதாந்த கொடுப்பனவு என்ற வகையில் மொத்தம் 1.19 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தர்கள் 4 பேரினாலும் மேற்கொள்ளப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பு சம்பந்தமான செயல்திறன்கள் மதிப்பீடு செய்யப்படவில்லை. மேலும் மேற்குறித்த 02 உத்தியோகத்தர்களுக்கு விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் என்பதன் கீழ் பொதுநலவாய நாடுகளின் பாரம் தூக்கும் போட்டியின் வெற்றியின் நிமித்தம் ரூ. 1.60 மில்லியன் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## நீண்ட காலமாக நிலவிவரும் அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகள்:

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிட வளாக அதிகார சபையின் 2018 டிசம்பர் 31ஆம் திகதிவரை கிடைக்க வேண்டிய மீதிகளின் மொத்தம் ரூபா 39.94 மில்லியாக இருந்ததுடன் அம்மீதிகளில் ரூபா. 31.66 மில்லியன் 01 வருடத்தை விட கூடிய காலம் தொட்டு மீதியாக பேணப்பட்டு வருவதுடன் மதிப்பீட்டாண்டின் இறுதித் திகதி வரை மீள அறவிட தவறியுள்ளனர். கொழும்பு மாநகர சபைக்கு 11 வருடங்களாக செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1.12 மில்லியன் மீதி மதிப்பீட்டாண்டு முடிவுத் திகதி வரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## நிதி அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை

இலங்கை கிரிக்கடம் சபையினால் கிரிக்கட் ஏயிட் (கெரண்ட்டி) லிமிடட் என்ற பிணையினால் வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்று 2016 மே 23 திகதி உருவாக்கப்பட்டிருந்தது. தொண்டுப் பணிகள் மற்றும் சமூகப் பொறுப்பு வேலைத்திட்டங்களுக்கான உதவு தொகை என்ற வகையில் வருடாந்தம் ரூ. 10 மில்லியன் ஐ வழங்குவதற்கு இலங்கை கிரிக்கட் நிறைவேற்றுக் குழு அங்கீகாரம் அளித்திருந்ததுடன் அதன்படி 2017 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி வரை ரூ. 16.75 மில்லியன் அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் கணக்காய்வு செய்யப்படுவதற்கு கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## சர்வதேச கிரிக்கட் ஒளிபரப்பு உரிமம்

2018 ஜூலை 12 ஆம் திகதி தென்ஆபிரிக்கா தேசிய கிரிக்கட் குழுவின் இலங்கைக்கான போட்டிச் சுற்றுலாவின் போது சர்வதேச கிரிக்கட் போட்டி ஒளிபரப்பு உரிமத்தை அ.டொ 1.25 மில்லியனுக்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு வழங்க சர்வதேச தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனமொன்றுடன் இலங்கை கிரிக்கட் சபை ஒப்பந்தமொன்றை செய்துள்ளனர். அவ் ஒப்பந்தத் தொரைகயின் 15 வீதம் ரூபா 29.83 மில்லியன் அதாவது அ.டொ 0.19 மில்லியனாகும். இறுதியாக பெறப்பட வேண்டிய இத்தொகை 2018 ஆகஸ்ட் 14ஆம் திகதி போட்டிச் சுற்றுலா முடிவடைந்ததன் பின் பெறப்பட்டிருக்க வேண்டும். அத்தொகையை பெற்றுக்கொள்வதற்கென்றே போலியான வெளிநாட்டு வங்கிக் கணக்கொன்றின் இலக்கம் மற்றும் போலியான மின் அஞ்சல் முகவரியொன்றையும் விலைப்பட்டியலில் குறிப்பிட்டு இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் நிதிப் பிரிவின் தலைவர் குறித்த நிறுவனதுக்கு அனுப்பியுள்ளார் என அறியவந்துள்ளதாக குறிப்பிட்டு முறைப்பாடொன்று 2018 ஒக்டோபர் 04 ஆம் திகதி இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் புலனாய்வு பரிவுக்கு அனுப்பியுள்ளார். இப் பணத் தொகை இலங்கை கிரிக்கெட் நிறுவகத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டதாக 2019 மே மாதம் 10 ஆம் திகதி குறித்த நிறுவனம் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு அறிவித்துள்ளதுடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு அப் பணத்தை மீழப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக 2019 மே மாதம் 31 ஆம் திகதி வரையில் முறையான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

## நிதி மோசடி

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னை நாள் நிதி முகாமையாளர் போலியான பெயர்களை உட்புகுத்தி போட்டி நடுவர்களாக பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக 2017 ஆம் ஆண்டின் இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட

பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளது. இந் நிதி மோசடி சம்பந்தமாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளபட்டு வருவதுடன் மோசடி செய்யப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என மதிப்பீட்டானண்டிலும் கூட தெழிவுபடுத்த முடியாதுள்ளது. இது தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் இனங்காணப்படாத நிதி மாற்றல் என்ற வகையில் ரூபா. மில்லியன் 14.53 அறவிடப்படவேண்டிய கடன் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

| பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் | |
|---|---|
| | சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தாமை |
| | பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் துரிதமாக உதவிகளை வழங்குதல் |
| | மகளிரை ஊக்குவித்தலும் அவர்களை வலுப்படுத்தலும் |
| | முறைப்பாடுகளுக்காக தீர்வை வழங்குதலில் தாமதம் |
| | சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் |
| | தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை சட்டரீதியாக்கப்படாமை |
| | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்படாமை |

# பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள்

சிறுவர்களினதும் மகளிரினதும் உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற நல்லெண்ணமுள்ள சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு, திணைக்களம், நியதிச் சட்ட அதிகாரசபைகள், மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் என 03 நிறுவனங்களின் கீழ் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் நிறைவேற்ற வேண்டிக் காணப்பட்டது.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு

- அரச அலுவல்களின் போது தீர்மானமெடுத்தல் மற்றும் அரசியல் துறைகளில் பெண்களின் பங்குபற்றல் மற்றும் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.

- பிரச்சினைகளுக்கும் வறுமைக்கும் உட்பட்டுள்ள பெண்களுக்கான அடிப்படை வீட்டுக் குழுக்களை விசேடமான நோக்கமாகக் கொண்டு பெண்களை வலுப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல் மற்றும் ஆண், பெண் சமத்துவத்தையும் நியாயத்தன்மையினையும் ஏற்படுத்துதல்.

- பெண்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களை தடுப்பதற்கான சட்டம் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல்

- சிறுவர் அலுவலகங்களுக்குரிய துரித அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல்.

- மகளிர் மற்றும் சிறுவர் விஞ்ஞாபனங்களை அமுல்படுத்துதல்

- உடலியல் ரீதியான மற்றும் மனோரீதியான ஆரோக்கியமான பிள்ளையொன்றை தோற்றுவிக்கும் அபிலாஷையில் முன்பள்ளி சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்ற பிள்ளைகளுக்காக தேசிய கொள்கை மற்றும் சர்வதேச அங்கீகாரத்துடன் பொருந்துகின்ற திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்

- "செவன சறன கெபகறு மவ்பிய" உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்துதல்.

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை பாதுகாத்தல்

சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்தலுக்காக வழங்கப்பட்ட சட்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கொள்கைகளை கட்டாயப்படுத்தி அமுல்படுத்தியிருக்கவில்லை.

## கமநல கட்டிடத் தொகுதியில் பகல்காப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல்

கமநல கட்டிடத் தொகுதியில் பகல் காப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதற்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1.5 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1.26 மில்லியன் தொகை பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு 2018 செப்தெம்பர் மாதத்தின் போது அனுப்பப்பட்டிருந்தது. அந்த பணம்

உரிய பணிக்காக ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் துரிதமாக உதவிகளை வழங்குதல்

2018 ஆம் ஆண்டின் போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக துரிதமாக உதவிகளை வழங்குவதற்காக ரூபா 3 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளில் 06 நலன்களுக்காக மாத்திரம் ரூபா 378,329 தொகையான நலன்கள் வழங்கப்பட்டிருந்தன.

## மகளிரை ஊக்குவித்தலும் அவர்களை வலுப்படுத்தலும்

தொழில்முயற்சியுடைய பெண்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக உற்பத்திகளுக்கு நிரந்தர சந்தையொன்றை ஏற்படுத்துவதற்காகவும் சந்தையின் தேவைகளுக்கு ஈடாகின்ற மற்றும் உரிய நியமங்களில் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அவர்கள் ஏற்றக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டு சுற்றாடல் சுற்றுலா கைத்தொழில் துறைக்காக பெண்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களை வலுப்படுத்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு 02 விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.01 மில்லியன் செலவிடப்பட்டு ஒரு நிலையமொன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 5.47 மில்லியன் செலவில் 02 விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 மே 08 ஆந் திகதி வரையிலும் ஒரு நிலையம் திறக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

## முறைப்பாடுகளுக்காக தீர்வை வழங்குதலில் தாமதம்

2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 9,266 முறைப்பாடுகள் கிடைத்திருந்தது. 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த முறைப்பாடுகளில் 7,326 எண்ணிக்கை அதாவது 79 சதவீதத்திற்காக தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபைக்கு வருடந்தோறும் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களுக்குள்ள ஆர்வத்தின் தன்மை, தகவல்களைக் கோருதல் மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளின்மை மற்றும் சரியான மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை போன்ற விடயங்கள் தீர்க்கப்படாமையின் காரணமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்திருந்தது.

## சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தால் சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் 25 செயலமர்வுகளை நடாத்துவதற்கும் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் 18 குழுக்களை தாபிப்பதற்கும், 11 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும், 06 இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 7.8 மில்லியன் தேவையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த பணிகளும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும், பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 11 பணிப்பொறுப்புக்களை உள்ளடக்கி ரூபா 20 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. சிறுவர் பகல்காப்பு நிலையத்திற்கான வழிகாட்டிக் கோவை தொடர்பான பயிற்சியளித்தல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்தல், சிறுவர் திருமணங்களைத் தடுப்பதற்குரிய அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளியீடுகளைத் தயாரித்தல் மற்றும் 25 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், உரிமைகள் மற்றும் சிறுவர் பிரச்சினைக்குரிய வெளியீடுகளைத் தயாரித்தல் போன்ற

பணிகள் 2018 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை சட்டரீதியாக்கப்படாமை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையினை சட்டரீதியாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டின் போதும் தவறியிருந்தது.

## முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்படாமை

இலங்கையில் உயர் தரத்தையுடைய முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நோக்கில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் உலக வங்கி கடன் உதவியின் கீழ் சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுதவதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 767.75 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2018 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு ரூபா 3,957 மில்லியன் தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த தோட்டத் துறையில் 28 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல், குறைந்த நலன் வசதிகளுள்ள பிரதேசங்களில் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல், ஆரம்ப தரங்களின் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை பதிவு செய்தல் போன்ற பணிகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1,500 முன்பள்ளி சிறுவர் நிலையங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,230.10 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டில் 259 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்காக ரூபா 51.32 மில்லியன் தொகையான மானியம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| சுற்றுலாத் துறை | ஏற்பாடுகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை |
| | எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்தாமை |
| | சுற்றுலா மேம்படுத்தலுக்கான செலவினங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்ககள் அடையப்பட்டிருக்காமை |
| | குடிவரவு வரி அறவிடப்படாமை |

# சுற்றுலாத் துறை



இலங்கை சுற்றுலாப் பயணிகளின் நினைவில் நிற்கும் உண்மையான மற்றும் பல்வேறு அனுபவங்களுக்காக உலகின் விசேட தீர்வொன்றாக இனங்காண்பதற்கு தேவையான கொள்கைகளைத் தயாரிப்பதன் மூலம் இலங்கை இளைஞர் சமூகத்திற்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு உயர் அந்நியச் செலவாணியொன்றை உழைத்தல் சுற்றுலா அலுவல் பிரிவின் பிரதான நோக்கமாக இருந்தது. அந்நோக்கத்தை நிறைவேற்றுதவற்காக சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு, 04 நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் நிதியம் ஒன்றினாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.


- சுற்றுலாத்துறை கைத்தொழில் சம்பந்தமான தேசிய கொள்கைகளின் பிரகாரம் சுற்றுலாத்துறைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலும் நியமங்களை வகுத்தலும்.
- சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவு செய்தலும் ஒழுங்குபடுத்துகையும்
- ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- வனவிலங்கு பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாத்துறைக் கைத்தொழில் மேம்படுத்தலுக்கான சுற்றுச்சூழல் அமைப்பு பாதுகாப்பை வலியுறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்படி செயற்பாடுகளைச் செயற்படுத்தல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

## சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அந்நியச் செலவாணி உழைப்பும்

கவர்ச்சிகரமான கடற்கரைகள், சமூகமான மற்றும் நட்பு ரீதியான மக்களுடனான வனம் மிக்க உயிரினங்கள் மற்றும் இயற்கை, கலாச்சாரம், சமையற் கலைகள், தொல்பொருள் பராம்பரியம், நீர் சார்ந்த சாகசம் மற்றும் அதிசயத்துடன் கலந்த அபூர்வமான உலகலாவிய கவர்ச்சி மிக்க இடமொன்றாகவும் ஆசியாவின் சுற்றுலா சாகசம் மிக்க இலக்காகவும் உலகச் சுற்றுலா விருது வழங்கலின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது. லோன்லி ப்ளனெட் சஞ்சிகையின் பிரகாரம் இலங்கை "2018 இன் 1 ஆம் இலக்கு" ஆக சர்வதேச ரீதியாக முதலாமிடத்தைப் பெற்றமையுடன் சீனாவின் பீபள்ஸ் டெய்லி செய்திப் பத்திரிகையின் பிரகாரம் பெண் பயணிகளுக்கான சிறந்த உலகளாவிய பாதுகாப்பான இடமாகத் தனது பிரதிபிம்பத்தை மேம்படுத்திக் கொண்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 712,027.3 மில்லியன் ஆன அந்நியச் செலவாணி ஒன்று இலங்கைக்கு வழங்கி சுற்றுலாப் பயணிகள் 2,333,796 பேர் வருகை தந்திருந்தனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை நூற்றுக்கு 10 வீதத்தால் அதிகரித்திருந்தது.

நாடென்ற வகையில் எடுக்கும்போது சுற்றுலா கைத்தொழிலிருந்து இலங்கை கூடுதலான அந்நியச் செலவாணியை ஈட்டுவதை எதிர்பார்த்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் போது இக்கைத்தொழிலிலிருந்து அமெரிக்க டொலர் 4,380.6 மில்லியன் வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. இத்தொகை முன்னைய ஆண்டிற்கு ஒப்பிடுகையில் நூற்றுக்கு 11.6 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. விபரங்கள் வரைபத்தில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 49 சுற்றுலாத்துறையின் மூலம் பெறப்பட்ட வருமானம்
மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

எனினும், கடந்த வருடத்தைப் போன்று மீளாய்வாண்டின் போதும் முக்கிய பகுதிகளின் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருந்தது. அதே போன்று கூடுதலான எண்ணிக்கையான அல்லது 424,887 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்தனர். இவ்வருகையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 10.46 வீதமாக உயர்வடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அடுத்தபடியான கூடுதலான சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 265,965 பேர் சீன மக்கள் குடியரசிலிருந்து ஆகும். ஆனால் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 1.12 வீதமாகக் குறைவடைந்திருந்தது.

வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்தமையும் சுற்றுலாப் பிரயாணி ஒருவரின் சராசரி செலவினம் மற்றும் சுற்றுலாப் பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்களின் அளவு அதிகரித்தமை சுற்றுலா உழைப்பு அதிகரித்தமைக்குப் பிரதான காரணங்களாக இருந்தன. 2018 ஆம் ஆண்டின்போது சுற்றுலாப் பிரயாணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் ஐ.அ.டொலர் 173.8 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி 2017 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 170.1 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சுற்றுலா உழைப்பு ஏதேனும் விகிதமொன்றினால் அதிகரிப்பது தொடர்பில் அது தாக்கமளித்திருந்தது. அவ்வாறே சுற்றுலாப் பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்கள் மீளாய்வாண்டில் 10.8 ஆக இருந்ததுடன் அது 1987 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிட்ட சராசரி நாட்களின் எண்ணிக்கையான 13.2 உடன் ஒப்பிடும் போது அந்த இலக்கை அடைவதற்கு சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

## ஏற்பாடுகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சிற்கு சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 845 மில்லியன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதற்காக ரூபா 390 மில்லியன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 256.83 மில்லியன் அல்லது நூற்றுக்கு 65.85 வீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதேபோன்று சுற்றுலாக் கிராமங்களின் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டிறுதியின் போது ரூபா 2.19 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

## எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்தல்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட 178 நடவடிக்கைகளில் 72 நடவடிக்கைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதிகாரசபையின் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு 7

பிரிவுகள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 2,446.90 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 244.33 மில்லியன் அல்லது ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் நூற்றுக்கு 9 வீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

## சந்தைப்படுத்தல் மேம்படுத்தலுக்கான செலவினங்கள்

மத்திய கிழக்கு, சீனா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, கொரியா போன்ற நாடுகளுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் மீளாய்வாண்டின் போது சுற்றுலா மேம்படுத்தல்களுக்காகச் செலவிடப்பட்ட செலவினங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர் சதவீதத்தை அடைந்திருந்தது. இருந்த போதிலும் அந்நாடுகளிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் வளர்ச்சி வீதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது. மேலும் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது உலகின் 28 பிரதான நாடுகளில் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 152 சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளில் 89 மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

## விலகல் வரி அறவிடப்படாமை

2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(ஆ) உப பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே கப்பல் மூலம் பிரயாணிக்கும் பிரயாணிகளுக்காக வழங்கப்படும் ஒவ்வொரு பிரயாணச் சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு அதன் ஒரு பகுதியை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதில் பிரயாணித்த பிரயாணிகளிடமிருந்து வரியினை அறவிட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது 87,631 பிரயாணிகள் வெளியேறியிருந்த போதிலும் அதற்காக ஒரு பிரயாணிகளிடமிருந்து ஐ.அ.டொலர் 1.66 வீதம் ரூபா 23.56 மில்லியன் விலகல் வரி வருமானத்தை அறவிடுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| நகர அபிவிருத்தி | |
|---|---|
| | திருகோணமலை மாவட்டத்தின் பிரதான அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை<br><br>பொது போக்குவரத்து மற்றும் பேரூந்து சேவைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்<br><br>கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்தை நகர அபிவிருத்தி செயற்திட்டம்<br><br>மேல் மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம்<br><br>விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டம்<br><br>விமான நகரம் மற்றும் நிர்வாக நகர செயற்திட்டம்<br><br>கொழும்பு நகரத்தை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் |

# நகர அபிவிருத்தி

மேல்மாகாண வலயம் மற்றும் ஏனைய மாநகர பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் அபிவிருத்தியடைந்த சமுதாயமொன்றை உள்ளடக்கிய அதி நவீன கட்டிட கலையுள்ள நகராக வடிவமைத்தல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் / 02 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி விடயங்களுக்குரிய நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வளங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அதனை அண்மித்த செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களில் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒன்றிணைத்து முறையான மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகள்.
- நகர கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவை மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலம் என்பன பொதுத்திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்
- தேசிய பௌதீக திட்டமிடல் மற்றும் பிரதேச ரீதியான பௌதீக திட்டங்களை தயாரித்தல்.
- ஒன்றிணைந்த நகர அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சகல நிர்வாக நடவடிக்கைகளையும் கையாளல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்கும் உரிய நடவடிக்கைகள்
- அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய நிறுவனங்களின் மேற்பார்வை.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலை மாவட்டத்தின் பாரிய திட்டம்

திருகோணமலை மாவட்டத்தின் விவசாய, வலுசக்தி மற்றும் சுற்றுலா கைத்தொழில் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் அந்த மாவட்டத்தின் பாரிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பெறுகைகள் நடைமுறைகளை பின்பற்றாமல் சிங்கப்பூர் ஆலோசனைக் கம்பனி ணன்றை செயற்திட்டத்தின் மதியுரையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலே அதன் பாரிய திட்ட அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எப்படியிருந்தாலும் திருகோணமலை மாவட்டத்தின் பாரிய திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் அதை முறையாக கண்காணித்து திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் இறுதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## பொது போக்குவரத்து மற்றும் பேருந்து சேவைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் வருட இறுதியாகும் போது ரூபா 104.04 மில்லியனும் 2018 ஆம் ஆண்டிலே ரூபா 609.79 மில்லியனுமாக மொத்தம் ரூபா 713.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பொது போக்குவரத்து சேவையை அபிவிருத்தி செய்வதற்காக பஸ் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை பேருந்து பாதையை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்தை

நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 346.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஒக்டோபர் மாதமாகும் போது அந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக செலவிடப்பட்ட செலவு விளைவை தராததாக காணப்பட்டது.

## கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்தை நகர அபிவிருத்தி செயற்திட்டம்

பெரும்பாக கொழும்பு போக்குவரத்து வலையமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் உப கருத்திட்டமாக கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்தை நகர அபிவிருத்தி செயற்திட்டம் (வுழறளொனி னுநளநடழிஅநவெ ஊழஅிழநெநவ (3மு செயற்திட்டம்) ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே 31 ஆந் திகதியில் முடிவடைய வேண்டியிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைகளின் போது நிறைவேற்றுவதற்கு தவறியமையின் அடிப்படையில் கடன் பணம் பெற்றுக் கொள்ளப்படாமல் திறைசேரி நிதிஏற்பாட்டின் அடிப்படையில் தற்போது இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் குறித்த காலத்தில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையினால் பதவியணியினருக்கு ஒரு மாதத்திற்கு செலுத்த வேண்டிய நிர்வாகச் செலவு (சம்பளம் மற்றும் ஏனைய செலவுகள்) அண்ணளவாக ரூபா 1.4 மில்லியனாகவும் 2018 ஆம் வருட இறுதியாகும் போது முழு நிர்வாகச் செலவு அண்ணளவாக ரூபா 60.2 மில்லியனாக காணப்பட்டதுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக போக்கலி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

## மேல் மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம்

மேல்மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம் 2015 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2017 செப்தெம்பர் மாதம் வரையும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அமுல்படுத்தப்படுகின்றது. செயற்திட்டத்திற்காக ரூபா 330.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எப்படியிருந்தாலும் மீளாய்வாண்டிலே ரூபா 10.22 மில்லியன் செலவிட்டு மேல்மாகாண வலய திட்டமிடல் செயற்திட்டம் என்ற பெயரில் புதிய செயற்திட்டமொன்று பழைய செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதோடு அந்த செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலஎல்லையொன்றும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் மேல்மாகாண வலயத்தின் மாநகர திட்டமிடல் செயற்திட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற திட்டங்கள், செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முறையான சாத்தியவள ஆய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. மாநகர திட்டமிடலில் செயற்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒரு பகுதி மாத்திரம் நடைமுறைப்படுத்துவதற்கு வேறு வகையான ஒரு சில செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எப்படியிருந்தாலும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினாலும் வேறு வலய திட்டமிடல் செயற்திட்டம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டம்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாலபே, ஹோமாகம, கடுவெல, அத்துருகிரிய ஆகிய நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிய சட்டத்துடன் மூன்றாம் நிலை கல்வி வலயம், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலயம், தொழில்நுட்ப நியதிச்சட்ட வலயம், நெநோ தொழில்நுட்பம், ஜைவ தொழில்நுட்ப கண்காட்சி வலயம் என 05 வலயங்களாக பிரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2017 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 01 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு இருந்தது. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் கொரிய அரசின் காணி அடிப்படை வசதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2016 மே 24 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு சாத்தியவள ஆய்வொன்று கொரிய அரசின் அமைச்சில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எப்பிடியிருந்தாலும் தொழில்நுட்ப நகர செயற்திட்டத்திற்காக தாபிக்கப்பட்டுள்ள செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு உள்வாங்கப்பட்ட பதவியணியினரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக 2017 ஆம் ஆண்டிலே ரூபா 25.49 மில்லியனும் 2018

ஆம் ஆண்டிலே ரூபா 40.72 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஊடாக பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல் பிரதான நோக்கமாக இருந்தது.

## விமான நகரம் மற்றும் நிர்வாக நகர செயற்திட்டம்

அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விமான நகரம் மற்றும் நிர்வாக நகரம் ஆகிய இரண்டு செயற்திட்டத்திற்குமான பதவியணியினரின் சம்பளம் மற்றும் வேறு மீண்டுவரும் செலவிற்காக மீளாய்வாண்டிலே ரூபா 80.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பாக சாத்தியவள ஆய்வோ அல்லது செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருக்கவில்லை. அத்தோடு 02 செயற்திட்டத்தினதும் திட்டமிடப்பட்ட விடயங்களுக்காக முதலீட்டாளர்கள் கண்டறிந்திருக்கவில்லையென்பதுடன் இந்த செயற்திட்டமும் முழுமையாக திறைசேரி நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதுடன் நிலையான திட்டமொன்று இல்லாமல் மிகவும் மெதுவான போக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## கொழும்பு நகரத்தை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்

கொழும்பு நீர்த்தேக்க பிரதேசங்களில் நீர் சேர்வதைக் குறைப்பதற்கு கொழும்பு பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துதல், கொழும்பு நகரை அழகுபடுத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.44 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 321 மில்லியன் ஆக இருந்தது. அதில் ஐ.அ.டொலர் 213 மில்லியன் அதாவது மொத்தக் கிரயத்தில் 66.35 சதவீதம் மீள்நிர்மாணத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் சர்வதேச வங்கிகளினால் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்வதற்கு என்று செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கீழ் குறிப்பிடப்படும் குறைபாடுகள் தெரியவந்தது.

- இந்த செயற்திட்டம் 2012 யூலை 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 02 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 யூன் 30 ஆந் திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.
  எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டிடு இறுதிவரையிலும் உலக வங்கி கடனின் கீழ் நிதியத்திலிருந்து ரூபா 14,890.18 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 103.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்க நிதியத்திலிருந்து ரூபா 4,891.46 மில்லியன் அதாவது ஐ.அ.டொலர் 32.86 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செயற்திட்டம் அமுலாக்கப்பட்டு 5 ½ வருடங்களுக்கு பின்னர் கடன் தொகைகளில் 48.66 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.
- கொழும்பு நகரத்தை மிகவும் சுற்றாடலுக்கு இசைவானதாகவும் அழகுபடுத்துவதற்காகவும்செயற்திட்டத்தின் மூலம் பேரேவெவ அபிவிருத்தி செய்யும் பல்வேறு பணிகளுக்காக ரூபா 1,552.07, மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் திறைசேரி நிதியத்திலிருந்து மேலும் ரூபா 470 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பேரேவெவயை அண்மித்த வீடுகள் மற்றும் ஹோட்டல்களின் கழிவுகள் பேரேவெவ வந்து சேர்வதை தடுப்பதற்கான வழிமுறைகள் காணப்படாமையினாலுட் பேரேவெவ அருகிலும் துர்நாற்றம் காணப்பட்டது. பேரேவெவ அபிவிருத்தி செயற்பாடுகளினால் சுற்றுலா துறைக்கும் மற்றும் இலங்கையர்களுக்கும் ஓய்வினை கழிப்பதற்கு பொருத்தமான சூழல் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் பேரேவெவ அபிவிருத்தி செய்தல்

பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் மக்களுக்கு பயன் கிடைத்திருக்கவில்லை.

- வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு முறையொன்றை ஸ்தாபிப்பதற்கான திட்டத்தின் பிரகாரம் ஐ.அ.டொலர் 2.6 மில்லியன் அவதாவது ரூபா 390 மில்லியன் செலவு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலே ரூபா 105.5 மில்லியன் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட பணத்தில் ரூபா 24.74 மில்லியன் அந்தப் பிரிவின் ஆலோசகரின் சிரமத்திற்காக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரி அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக தேவையான பாகங்கள் மற்றும் உபகரணங்களை அழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லையென்பதுடன் 02 வருட காலத்திற்குள் அந்த ஆலோசகரினால் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பை மேற்கொள்ளவுள்ளவர்களின் உதவியை பெற்றுக்கொண்டு மழைவீழ்ச்சியின் தரவுகளை பதிவுக்குட்படுத்தி காலநிலை எதிர்வு கூறலை பெற்றுக்கொள்ளுதலை மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## உபாய வழிகளில் நகர அபிவிருத்தி செயற்திட்டம்

உபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இலங்கையின் பங்குபற்றலுடன் நகர வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவை மற்றும் பொது நகர இடங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் கீழ் பங்குபற்றலுடன் நகர வலயமாக கண்டி நகரம், காலி நகரம், என்பன தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதி ரீதியான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட முழு செலவு ரூபா 27,507 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியனை முழு நிதியத்தின், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 4 ½ வடங்கள் சென்ற பின்னர் அதாவது 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முழு ஒதுக்கத்திலும் 18 சதவீதத்திற்குரிய ரூபா 5,638,31 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 36.28 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிலே உபாய வழிகள் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காலி, மற்றும் கண்டி நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 3,700 மில்லியன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 64 சதவீதம் அதாவது ரூபா 2,386 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அத்தோடு யாழ்ப்பாண நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 1,400 மில்லியன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் அதில் 22 சதவீதம் அதாவது ரூபா 313 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

## கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள்

கைத்தொழில் நகர் அபிவிருத்தி

ஒழுங்குபடுத்தும் செய்முறைகளை செயற்படுத்தாமை

உருளைக் கிழங்கு சந்தைப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று காணப்படாமை

ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளின் பதிவு செய்தலை புதுப்படுத்தாமை

கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களை பதிவு செய்யாமை காரணமாக வருமானம் இழக்கப்பட்டிருத்தல்

கம்பனிகளை பதிவு செய்யும் நடவடிக்கைளை கணினி மயப்படுத்தல் செயற்திட்டம் கைவிடப்பட்டமை

வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்தல்

# கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள்

உலகலாவிய ரீதியில் போட்டி மற்றும் சாதகமான வணிகச் சூழலொன்றை உருவாக்குதல் இந்தத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவாக இருந்தது. அந்த பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அலவல்கள் அமைச்சு, 09 திணைக்களங்கள், 07 நியதிச் சட்ட சபைகள் மற்றும் 20 அரசாங்க தொழில் முயற்சிகளினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேண்டியதாகக் காணப்பட்டன.

- கைத்தொழில் மற்றும் வணிக விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி
- வியாபாரக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- உள்நாட்டுச் சந்தையில் நுகர்வோர் பொருட்களை தரமான மட்டத்திலும் பற்றாக்குறையின்றியும் நியாயமான விலையில் வழங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல்
- 1949 இன் 6 ஆம் இலக்க ஈடுவைத்தல் அதிகாரச் சட்டத்தின் 114 ஆவது பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.
- நுகர்வோர் பொருட்களுக்குரியதாக தேசிய விலைக் கொள்கை வழங்கல் மற்றும் செயற்படுத்துதல்.
- நுகர்வோர் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலங்கை கைப்பணி கைத்தொழில் உற்பத்திக்காக அலங்கார அபிவிருத்தி மற்றும் பரவலாக்குதல்
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை நிர்வகிப்பதற்குரிய பணிகளை வெளியிடும் உரிமை மற்றும் உலக புலமைச் சொத்து அலுவலகத்தின் வெளியீட்டு உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள்

மேற்கூறிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## கைத்தொழில் நகர் அபிவிருத்தி

அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த அபிவிருத்தியை பிரதேச மட்டத்தில் விரிவாக்குவதற்கும், அதன் மூலம் தேசிய வருமானத்திற்கு கைத்தொழில் துறையில் இருந்து கிடைக்கும் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த ஆட்களை மீள்குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இந்த விடயத்தில் பிரதேச அடிப்படையில் கைத்தொழில் துறையின் முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக 2018 ஆண்டின் போது அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவினால் 18 கைத்தொழில் நகர்களில் 33 செயற்திட்டங்களுக்காக ரூபா 328.76 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 02 கைத்தொழில் நகர்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகள் ரூபா 26.11 மில்லியன் தொகையில் ரூபா 25.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பௌதீக முன்னேற்றம் எதனையும் பெற்றிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 165.25 மில்லியன் தொகை பெறுமதியான 13 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்காத 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 11.37 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 07 செயற்திட்டங்களுக்காக மதிப்பீட்டு தொகையை மிகைத்து ரூபா 21.82 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

### ஒழுங்குபடுத்தும் செய்முறைகளை செயற்படுத்தாமை

2013 ஏப்ரல் 26 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுறவு கிராமிய வங்கிகள், கிராமிய வங்கிக் சங்கங்கள், சனச கழகங்கள், சனச சங்கங்கள் மற்றும் ஏனைய நிதிக் கூட்டுறவு கழகங்களின் அலுவல்களை ஒழுங்குபடுத்துவதற்காக விஷேடமான ஒழுங்குபடுத்தல் அலகு ஒன்று நிறுவப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவப்பட்டிருந்த ஒழுங்குபடுத்தல் அலகின் அலுவல்களுக்காக 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை ரூபா 20.99 மில்லியன் தொகை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த அலகு ஆரம்பிக்கப்பட்டு 06 வருட காலம் கடந்திருந்த போதிலும், அந்த ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று திணைக்களத்தினால் செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும், திணைக்களத்தினால் கிராமிய வங்கி துறை அல்லாத ஏனைய நிதி சேவை கழகங்கள் மற்றும் சனச கழகங்களுக்கான ஒழுங்குபடுத்தல் செய்முறை செயற்படுத்தியிருக்கவில்லை.

### உருளைக் கிழங்கு சந்தைப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று காணப்படாமை

2018 அக்தோபர் 16 ஆம் திகதி நடைபெற்ற வாழ்க்கைச் செலவுக் குழுவின் பரிந்துரை மீது ஊவா மாகாண விவசாயிகளின் உருளைக்கிழங்கு ஒரு கிலோ ரூபா 92 உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்காக திறைசேரியினால் ரூபா 150 மில்லியன் தொகை 02 தவணைகளில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவு கழக சங்கத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை உப குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஜனாதிபதி செயலகத்தின் செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 75 மில்லியன் இற்கான நிதி ஏற்பாடுகள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. 2018 நவம்பர் 29 திகதி அந்தப் பணம் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்டிருந்த பணம் சங்கத்திடம் திருப்பிப் பெற்று திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டுமெனவும் இது தொடர்பான அனைத்து அலுவல்களினதும் கூட்டிணைப்பு மற்றும் மேற்பார்வை திணைக்களத்திற்கு சாட்டப்படுவதாக கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தது. அவ்வாறாயினும் சங்கத்திற்கு கிழங்கு சந்தைப்படுத்தல் தொடர்பான முறையான வேலைத் திட்டம் ஒன்று காணப்படாமை மற்றும் திணைக்களத்தினால் போதியளவு மேற்பார்வை ஒன்று மேற்கொண்டிருக்காமை ஆகிய காரணங்களினால் ரூபா 85.82 மில்லியன் தொகைக்கான 932,868 தொகை கிலோ உருளைக்கிழங்கு அழுகியிருந்தது.

### ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளின் பதிவு செய்தலை புதுப்படுத்தாமை

1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தவேலை சட்டத்தின உப பிரிவுகள் 5(1), 5(2) மற்றும் 2(1) பிரகாரம் கம்பனி பதிவாளருக்கு வெளிப்படையாகச் சாட்டப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அதிகாரத்தை செயற்படுத்தி ஒப்பந்த உடன்படிக்கைகளில் உள்ளடங்கிய பெறுமதி ரூபா 5.00 மில்லியனை மிகைக்கும் அனைத்து பொது ஒப்பந்த உடன்படிக்கையும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பதிவு செய்யப்பட வேண்டியிருந்தது. பெறுகைகளுக்காக உட்புகுவதற்கு கருத்துடைய ஒப்பந்தக்காரர்கள் 24,345 பேர் மீளாய்வாண்டின் போது பதிவு செய்திருந்த போதிலும், ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்ட பின்னர் சுமார் 398 உடன்படிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த சட்டத்தின் பிரிவுகள் 1 மற்றும் 3 இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்டு ஒரு வருடத்தை கடந்திருந்த ஒப்பந்த வேலைகளின் பதிவு செய்தல் புதுப்படுத்துவதற்காக செயற்பட வேண்டியிருந்த போதிலும், பதிவு செய்தலை புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் எதுவும் காணப்படவில்லை.

### கம்பனிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க செயற்படல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 131(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒவ்வொரு கம்பனியிலும் பதிவு செய்யப்பட்டு 1½ வருடங்களின் பின்னர் ஆண்டறிக்கை கோவையிடப்பட வேண்டும். 2007 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டிருந்த மொத்தக் கம்பனிகளில் எண்ணிக்கை 83,225 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் மீளாய்வாண்டின் போது 18,054 கம்பனிகள், 2018 ஆண்டிற்காக ஆண்டறிக்கை கோவையிடப்பட்டிருந்தது. 2010 ஆண்டின் போது ஆண்டறிக்கை கோவையிடலை புறக்கணித்த கம்பனிகளின் எண்ணிக்கை 11,411 தொகையாக காணப்பட்டதுடன், அவை 2018 ஆண்டளவில் 65,171 தொகை வரை இடையறாமல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ஆண்டறிக்கை வருமானம் ரூபா 1,974.60 மில்லியன் தொகையாக காணப்பட்டது.
கம்பனிச் சட்டத்தின் பிரிவு 170(1) இன் பிரகாரம் தனியார் அல்லாத அனைத்து கம்பனி ஒன்றினாலும் கம்பனியின் நிதிக்கூற்று, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஒன்றுடன் பதிவு செய்வதற்காக கம்பனி பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதி அறிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 6,893 காணப்பட்ட போதிலும், அவற்றில் 2,110 கம்பனிகள் மாத்திரம் நிதி அறிக்கைகள் பதிவு செய்திருந்தது. அதன்படி மீளாய்வாண்டிற்காக மாத்திரம் 4,783 பதிவு செய்யப்பட்ட கம்பனிகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 9.57 மில்லியன் இற்கான வருமானத்தை இழந்துள்ளது.

## கழகங்களை பதிவு செய்தல்

2005 இன் 11 ஆம் இலக்க கழகங்கள் கட்டளைச் சட்டத்தின் படி 12,307 தொகையான பதிவு செய்யப்பட்டுள்ள கழகங்களில் மீளாய்வாண்டின் போது 180 கழகங்களினால் மாத்திரம் ஆண்டறிக்கை கோவைப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி 2018 ஆண்டின் போது மாத்திரம் நிலுவைக் கழக வருமானம் ரூபா 12.12 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

## வரி வருமானம் அறவீடு செய்தல்

மீளாய்வாண்டிற்கான ஆரம்ப வரி வருமானம் ஆக ரூபா 1,500 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறிப்பீட்டின் கீழ் வருமானம் ஏதும் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வரியை அறவீடு செய்வதற்காக வர்த்தமானியின் அறிவித்தல் ஒன்று பிரசுரித்து வருமானம் சேகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமையால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையினை தவிர்ப்பதற்காக வருமானம் சேகரித்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

## கம்பனிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை கணினி மயப்படுத்தல்

கம்பனிகளை பதிவு செய்யும் செயற்பாடுகளை கணினி மயப்படுத்தும் மென்பொருள் ஒன்று நிறுவுவதற்கான செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் 9 மாதங்களில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்புடன் ரூபா 57 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த வேலை 2017 மே 30 திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலையின் காலம் இரு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 25 மாதங்கள் கடந்திருந்த போதிலும், 2019 ஆகஸ்ட் 31 திகதி வரை ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதி அளிவல் முதல் கட்டத்தை பூர்த்தி செய்தலுக்கான ரூபா 1.52 மில்லியனிற்கான முதல் கொடுப்பனவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த பதிவு செய்யும் நடவடிக்கைகள் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைக்காக 2014 ஆண்டின் போதும், ஒப்பந்த வேலையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 13.27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், பின்னர் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## கம்பனி நிதியத்தை முதலீடு செய்தல்

2007 ஆண்டின் போது கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் கம்பனிகள் நிதியித்தில் ரூபா 90.27 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நட்டத்தில் இயங்கும் கம்பனி ஒன்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த முதலீட்டிற்காக 2007 மார்ச் 29 திகதிய அமைச்சரவை

தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகாரம் தேவையான பணம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த முதலீட்டின் மூலம் நலன்கள் ஏதும் கம்பனி நிதியத்திற்கு முதலீட்டுத் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 30 திகதி வரை கிடைத்திருக்காததுடன் முதலீடு செய்யப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் எனக் காட்டப்பட்டிருந்தது. 2013 ஜனவரி 02 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று இந்த கம்பனி வங்கரோத்து நிலையில் உள்ளது என குறிப்பிட்டு சமர்ப்பித்திருந்தது. இந்த முதலிடப்பட்ட தொகை அல்லது பெற வேண்டிய நலன்களை பெறுவதற்கு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்தல்

வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதயாக பதிவு செய்வதற்கான மெட்ரிட் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக வரிசை அமைச்சில் இருந்து இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு 2016 ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 93 மில்லியன் இற்கான நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்தன. அவற்றின் ரூபா 79.43 மில்லியனிற்கான நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 30 ஆந் திகதி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான சர்வர் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக, முறைமையை நிறுவுவதற்காக மற்றும் பராமரிப்பு செய்யும் அலுவல்களை செயற்படுத்துவதற்காக ரூபா 32.5 மில்லியன் தொகை தகவல்கள் மற்றும் தொலைதொடர்பு தொழிநுட்ப நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதே நாள் இரு தரப்பினரிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரிவு 4.3 இன் பிரகாரம் தகவல்கள் தொழிநுட்ப நிறுவனம் மொத்த கொள்வனவு செய்முறைக்காக பொறுப்பாக இருக்க வேண்டுமெனவும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட நாள் முதல் 06 மாதங்களுக்குள் அந்த கருமம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தது. எனினும் 2019 மாதம் இறுதி வரை சர்வர் இயந்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## உத்தேச உணவகத்தின் உள்ளக அலங்கார அலுவல்கள் மேற்கொள்ளல்

புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்திற்கான உணவத்தின் உத்தேச உள்ளக அலங்கார அலுவல்கள் மேற்கொள்வதற்காக ரூபா 6.00 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. அதற்காக 2017 திசெம்பர் மாதத்தில் ரூபா 6.41 மில்லியன் நிதி ஏற்பாடுகள் திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. அந்த அலுவல்களுக்காக 2017 நவம்பர் 28 ஆம் திகதி ரூபா 8.02 மில்லியன் கிரயத்தில் விலைகூறல் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்கார் ஒருவருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலைக்காக 2017 திசெம்பர் 06 ஆம் திகதி முதல் 2018 மார்ச் 06 திகதி வரை செல்லுபடியாகும் காலத்தையுடைய பிணைமுறி ஒன்றின் மீது 2018 ஜனவரி 03 திகதி ரூபா 1.88 மில்லியனிற்கான முற்பணம் புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தினால் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அந்த ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல் முற்பண பாதுகாப்பு பிணை முறியின் காலம் முடிவடைந்திருந்த போதிலும் அதனை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஒப்பந்த வேலையின் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக பொறியியலாளர் அறிக்கை ஒன்றும் பெற்றிருக்கவில்லை. 2018 செப்தெம்பர் 09 திகதி முதல் 60 நாட்களுக்குள் இந்த ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டு உடன்படிக்கைக்கு அணுகியிருந்த போதிலும், உடன்படிக்கையை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்று பெற்றுக்கொள்ளல்

04 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை உடைத்து அகற்றுவதற்காக நேரிடுவதனால் அதற்காக வாடகை அடிப்படையில் மாதாந்த தவணை ரூபா 80,000 தொகைக்காக கட்டிடமொன்று 2017 ஜூன் 01 திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக பெற்றிருந்தது. 2019 ஆகஸ்ட் 31 திகதி அளவில் புதிய கட்டிட நிர்மாண

வேலையின் பெறுகை செய்முறையை பூர்த்தி செய்திருக்கவில்லை. வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டிடம் ஒரு வருட காலத்திற்குள் மூடப்பட்டிருந்தது. இதற்காக வாடகையாக ரூபா 960,000 தொகையும், மின்சாரத்திற்காக ரூபா 8,353 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## வீடமைப்பு மற்றும் நிர்மாண அலுவல்கள்

மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்

போகஸ்வெவ விஷேட வீடமைப்பு செயற்திட்டம்

வீர சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

கிராம சக்தி உதா கம்மான - வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

விசிறி வீடமைப்பு செயற்திட்டம்

# வீடமைப்பு மற்றும் நிர்மாண அலுவல்கள்

சகல பிரசைகளுக்கும் நல்ல வாழ்க்கை நிலைமையொன்றை உறுதிப்படுத்துவதை நோக்ககாக் கொண்டு சகல குடும்பங்களுக்காகவும் வீட்டு வசதிகளை வழங்குதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்ததுடன், அப்பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு மற்றும் அதன் கீழான 02 திணைக்களங்களாலும் 08 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும் தராதரங்களையும் விதித்துரைத்தல்
- குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட பிரசைக் குழுக்கள் உட்பட பொதுமக்களின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதிசார் திட்டங்களையும் செயற்படுத்தல்
- சூழல் நேயமிக்க செலவுக்கேற்ற நன்மையளிக்கும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்
- பிரதானமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொறிசார் பொறியியல் சேவைகளை வழங்குதல்
- தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் தரவளவுகளுக்கும் ஏற்றதாக கட்டுமானக் கைத்தொழில் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தலும் பதிவு செய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்தலும்
- நிர்மாணக் கைத்தொழிலுக்கான மதியுரைகளையும் ஒழுங்குறுத்துகைச் சேவைகளையும் வழங்கலும் கணரக நிர்மாண உபகரணங்களை இயக்குதலும் பராமரித்தலும் தொடர்பான பயிற்சி அளித்தலும்
- கூட்டாதன முகாமையும் ஒழுங்குறுத்துகைப் பணிகளும்
- பொதுக் கூட்டாதன மறுசீரமைப்பும் வினைத்திறனுடனும் துரிதமாகவும் வீடுகளின் உரித்தை உரிமை மாற்றம் செய்தலும் இவ்வமைச்சின் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் நிறுவனங்களின் கண்காணிப்பு

மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## மாதிரிக் கிராம வேலைத்திட்டம் (Model Village Programme)

இந்நிகழ்ச்சித்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டது. செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 937 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், இதில் ரூபா. 581 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 20,375 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், வருட இறுதியில் இவ்விலக்கில் 8 வீதம் அதாவது 1555 வீடுகள் மாத்திரமே முழுமையாகவும் கூரை வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்ய முடியாத 2018 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப்பட்டிருந்த வீடுகளின் நிர்மாணங்களிற்காக ரூபா 632 மில்லியன் செலவின மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 486 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்

பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 76 சதவீதமாக இருந்தது. யெற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட 4,960 வீடகளில் 3,099 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் பூர்த்தி செய்ப்பட வேண்டிய 2018 செப்தம்பர் 30 ஆந் திகதியாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 03 மாதங்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்த்தை பூர்த்தி செய்ய தவறியிருந்தது.

## போகஸ்வெவ விஷேட வீடமைப்பு செயற்திட்டம்

இந்த வீடமைப்பு செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் 1,566 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 449 மில்லியன் செலவினமொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 280 மில்லியன் செலவிடப்பட்டு 978 வீடுகள் கூரை வரையும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 1,566 வீடுகள் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதி வரை அதில் 62 சதவீதம் அதாவது 978 மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## வீர சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ரணவிரு சேவை அதிகார சபையுடன் ஒன்றினைந்து செயற்படுத்தும் இந் செயற்திட்டத்திற்காக ரூபா 116 மில்லியன் செலவின மதிப்பீட்டில் 550 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 113 மில்லியன் செலவிடப்பட்டு 405 வீடுகள் கூரை வரையும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த வீடுகளின் எண்ணிக்கையில் 74 சதவீதம் அளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## கிராம சக்தி உதா கம்மான - வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (புதிய)

இந்த செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் இறுதி வரை 1,200 வீடுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 100 மில்லியன் செலவின மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மேலதிக நிதி ஏற்பாடு உட்பட அதற்காக ரூபா 234 மில்லியன் செலவிடப்பட்டு கூரை வரையும் முழுமையாக 255 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இலக்கிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 21 சதவீதமான வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## விசிறி வீடமைப்பு செயற்திட்டம் (புதிய)

இந்த வீடமைப்பு செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டின் மதிப்பீட்டு கிரயம் ரூபா 709 ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 637 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி செயன் முன்னேற்றம் 90 சதவீதமாக இருந்தது. ஆண்டின் இலக்கிடப்பட்ட வீடமைப்பு நிர்மாண எண்ணிக்கையான 7,000 வீடுகளில் 4,879 வீடுகள் கூரை வரையும் முழுமையாக நிரமாணிக்கப்பட்டிருந்தன. இந்த வீடுகளின் எண்ணிக்கை இலக்கிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 70 சதவீதமாக இருந்தது.

| போக்குவரத்து | |
|---|---|
| | அதிவேக வீதிகளில் போக்குவரத்துக்கு உகந்த பேரூந்துகள் இல்லாமை |
| | கேள்வி கோராது நிரந்தரச் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதல் |
| | கொழும்பைச் சூழ்ந்த தொடரூந்துச் செயற்திட்டம் |
| | பயணித்த தொடரூந்து பிரயாணங்களின் எண்ணிக்கை குறைவடைதல் |
| | புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை பயன்படுத்துதல் பலவீனமடைதல் |
| | பொருள் போக்குவரத்தின் மூலம் கிடைத்த வருமானம் குறைவடைதல் |
| | புகையிரப் பெட்டிகள் புனரமைக்கப்படுதல் தாமதமடைதல் |
| | பயணிகள் போக்குவரத்திற்காக பேரூந்துகளை ஈடுபடுத்துதல் குறைவடைதல் |

# போக்குவரத்து



மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் நவீன தொழில்நுட்ப துறைகளை பயன்படுத்தி அதி உயர் போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகளை நடைமுறைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் நிலைப்பேறாக பேணிச்செல்லல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பணியாகும். அந்த பெறுபேறுகளை அடைவதற்கு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 02 திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் / 7 நிறுவனங்களினால் கீழ்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

- புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒருங்கிணைந்த பயணிகள் மற்றும் சரக்கு புகையிரத போக்குவரத்து சேவையை முறையாக முன்னெடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது மற்றும் புகையிரத சேவையை வழங்குவது.
- பயணிகள் நிலைய சேவைகளை வழங்குவது.
- பாதுகாப்பானதும் நம்பகதன்மையுடன் கூடிய போக்குவரத்து சேவைகளை வழங்குவது.
- சுற்றாடலுக்கு உகந்த போக்குவரத்து தொகுதியொன்றை அறிமுகப்படுத்துவது.
- தனியார் பயணிகள் போக்குவரத்து சேவையை ஒழுங்குப்படுத்துவது.
- புதிய புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதற்காக காணிகளை சுவீகரிப்பது, உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட அனைத்து விடயங்கள்.
- மோட்டார் வாகனங்களை பதிவு செய்வது மற்றும் அனுமதி பத்திரம் வழங்குவது.
- சாரதி அனுமதி பத்திரம் வழங்குவது.
- மோட்டார் வாகனங்கள் தொடர்பான சட்டத்திட்டங்கள், வழிக்காட்டல்களை வழங்குவது, அவற்றை ஒழுங்குப்படுத்துவது.
- விமான நிலைய அபிவிருத்தி மற்றும் ஒழுங்குப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- விமான நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளின் முன்னேற்றம், கட்டணம் மற்றும் அதன் தரத்தை ஒழுங்குப்படுத்துவது.
- சர்வதேச விமான பயணங்களை விரிவுப்படுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களை செய்து கொள்வது உட்பட ஏனைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- இலங்கையின் விமான நிலையங்கள் வெளிநாடுகளினால் பயன்படுத்துவதற்கான ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குப்படுத்தல்.
- தனியார் விமான சேவைகளை கண்காணிப்பது மற்றும் ஒழுங்குப்படுத்துவது.
- விமானங்களை பதிவு செய்வது.

அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களினால் மேற்படி பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் தொகுப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

## மாத்தறை-பெலிஅத்த, கதிர்காமம் புதிய புகையிரத வீதியை நிர்மாணித்தல்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் வெளிநாட்டு

உதவி திட்டத்தின் கீழ் ரூபா 36,166 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டு அதன் செலவினை மேற்கொள்வதற்கு மாத்தறை-கதிர்காமம் புகையிரத வீதி திட்டம் 2013 ஆகஸ்ட் 01 திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2016 ஜுலை 31 ஆம் திகதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்படவிருந்தது. திட்டத்தின் பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தகாரர் தவறியமையினால் பூர்த்தி செய்யக்கூடிய திகதி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதுடன், அதுவரை ரூபா 33,730 மில்லியன் அதாவது ஒப்பந்த பெறுமதியில் 93 சதவீதம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் பெலிஅத்த வரை புகையிரத ஓட்டத்திற்காக திறந்து வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக கீழ்வரும் குறைப்பாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது.

- ஒப்பந்தகாரருடன் ஒப்பந்த நிபந்தனைகளில் 7.4 ஆம் பிரிவின் கீழ் ஒப்பந்தகாரரினால் வழங்கப்படும் புகையிரத தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளின் தரம் பொறியியலாளரினால் உள்ளுர் மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு தர பரிசீலனை அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. 2018 மார்ச் 31 ஆம் திகதி 4,526,117 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத தண்டவாளங்கள் சிலிப்பர் கட்டைகளின் தர பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

- புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யவேண்டிய புகையிரத தண்டவாளங்களின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட எண்ணிக்கை, எஞ்சிய எண்ணிக்கை ஆகியவற்றை குறிப்பிடும் அறிக்கையொன்று ஆலோசனை கம்பனியால் வழங்க தவறியுள்ளது. இதனால் கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத தண்டவாளங்கள் தொடர்பாக இருப்புக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது.

- செயற்திட்டத்திற்குரிய கடன் ஒப்பந்தத்தின் நிபந்தனை 1.3 பிரிவின் படி கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினம் முதல் நான்கு ஆண்டுகளுக்குள் கடனை பெற்று கொள்ள வேண்டியிருந்தது. 2013 ஏப்ரல் மாதத்தில் கையொப்பம் இடப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் படி 2017 ஏப்ரல் மாதமளவில் அக்கால எல்லை பூர்த்தியடைந்திருந்தது. நிர்மாண தாமதத்தினால் 2017 மே மாதம் முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 5.35 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் ஏற்பட்டுள்ளது.

## குருநாகல்-ஹபரண புகையிரத வீதி நிர்மாணம்

குருநாகல் முதல் ஹபரண வரை 84 கிலோ மீட்டர் நீளம் கொண்ட புகையிரத வீதியை நிர்மாணிக்கும் திட்டத்திற்காக அமைச்சின் கீழ் 2018 ஆம் ஆண்டு ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்றமையினால் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் ரூபா 420 மில்லியன் மாத்தறை-கதிர்காமம் திட்டத்திற்காக மாற்றப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு திட்டத்தில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டிய போதிலும் 2019 மே மாதமளவில் காணி சுவீகரிப்பிற்காக சுமார் ரூபா 56 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் கொழும்பை அண்டிய புகையிரத

செயற்திட்டம் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 700 மில்லியன் ஒதுக்கீடுகள் வீடமைப்பு நிர்மாணத்துறை திட்டத்திற்காக மாற்றப்பட்டிருந்தது. 2018 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 2020 இல் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு நிறைவில் விளக்கமான நிர்மாண தயாரிப்பில் சுமார் 30 சதவீதம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## இலங்கை புகையிரத திணைக்களம்

இலங்கை புகையிரத திணைக்களம் 1867 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டு முதல் 1934 ஆம் ஆண்டுவரை திணைக்களம் செயற்பாட்டு இலாபத்தை பெற்றிருந்தது. இக் காலப்பகுதியில் புகையிரதம் மூலம் சரக்கு ஏற்றிச் செல்வதன் ஊடாக மொத்த வருமானத்தில் 57 சதவீதத்தை வருமானமாக ஈட்டியுள்ளது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதி புகையிரத திணைக்களத்தின் மீண்டெழும் வருமானம் ரூபா 7.41 பில்லியனாக காணப்பட்டதுடன், மீண்டெழும் செலவாக ரூபா 14.38 பில்லயனாக காணப்பட்டது. இதன் அடிப்படையில் மீண்டெழும் நட்டம் ரூபா 6.97 பில்லியன் ஆகும். மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் நட்டம் 94 சதவீதமாகும். விபர அட்டவணை 20 இல் காணப்படுகின்றது.


.

| மீண்டெழும் வருமானம், செலவு மற்றும் நட்டம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் வருமானம் | 5,425 | 5,910 | 6,335 | 6,623 | 6,490 | 7,412 |
| மீண்டெழும் செலவு | 10,586 | 16,943 | 14,048 | 13,396 | 14,080 | 14,380 |
| மீண்டெழும் நட்டம் | 5,161 | 11,033 | 7,713 | 6,773 | 7,590 | 6,968 |
| மீண்டெழும் வருமானத்தின் சதவீதமாக மீண்டெழும் நட்டம் | 95.13 | 186.68 | 121.75 | 102.26 | 116.95 | 94 |

ஆட்டவணை 20 : இலங்கை புகையிரத திணைக்களத்தின் மீண்டெழும் வருமானம், செலவு மற்றும் நட்டம்
மூலம் : இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள்

## வருமானம் திரட்டல்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் வருமானத்தை திரட்டுவது மிக பலவீன மட்டத்தில் இருப்பதுடன், மீளாய்வாண்டின் வருமானத்திலும் பார்க்க மீண்டெழும் செலவு இரட்டிப்பை அண்மித்துள்ளது. புகையிரத திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் திரைசேரியினால் ரூபா 25.92 பில்லியன் மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் திணைக்களம் திரட்டிய ரூபா 7,412 பில்லியன் வருமானம் வரைப்படம் 50 ஒன்றில் காட்டப்பட்டுள்ளது.




வரைப்படம் 50 -2018 ஆம் ஆண்டின் வருமானத்தின் தொகுப்பு

மூலம் : 2018 வருமானக் கணக்கு

பயணிகள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான பாதுகாப்பான நம்பக தன்மையுடன் உரிய நேரத்திற்கு பயணிக்கும் முறையான போக்குவரத்து சேவையை வழங்குவது புகையிரத திணைக்களத்தின் முக்கிய பணியாகும். இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட புகையிரத பயணங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை

மீளாய்வாண்டில் இலங்கை புகையிரத திணைக்களத்தினால் 121,473 புகையிரத பயணங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட புகையிரத பயணங்களின் எண்ணிக்கை 117,189 வரை குறைவடைந்துள்ளது. இதன் அடிப்படையில் 4,284 பயணங்கள் இடம்பெற்றுள்ளன. ஓட்டத்தில் ஈடுபட்ட புகையிரத பயணங்களின் 50,997 தடவைகள் தாமதித்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், இரத்து செய்யப்பட்ட புகையிரத பயணங்களின் எண்ணிக்கை 4,284 ஆகும்.

## புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் பயன்பாட்டின் பலவீனம்

புகையிரத திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட வனங்களாக 14,000 ஏக்கர் காணி இருந்த போதிலும் அதற்கான தரவுத் தளமொன்று பேணப்பட்டிராமையால், அக்காணிகளில் அனுமதியற்ற முறையில் குடியமர்வது மற்றும் பணம் செலுத்துவதனை புறக்கணித்தமையால் புகையிரத திணைக்களம் பெருமளவு வருமானத்தை இழந்துள்ளது.

## சரக்கு கொண்டுசெல்வதினால் கிடைக்கும் வருமானம் குறைவடைந்தமை.

சரக்கு எடுத்துச்செல்வதன் மூலம் புகையிரத திணைக்களத்திற்கு மேலதிக வருமானத்தை ஈட்ட முடிந்த போதிலும் பொருட்களை எடுத்துச்செல்லும் வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. விபரம் அட்டவணை 21 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

| குறிக்காட்டி | 2017 | 2018 | கடந்த அண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு (குறைவு) | அதிகரிப்பு (குறைவு விகிதம்) |
|---|---|---|---|---|
| பொருள் கி.மீ (மில்லியன்) | 144.79 | 119.78 | (25.01) | (17.27) |
| பொருள் அளவு தொன் (மில்லியன்) | 2.00 | 1.84 | (0.16) | (8.00) |
| எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் புகையிரத தொகை | 6,590 | 6,845 | 255 | 3.87 |
| பொருள் வருமானம் (ரூ.மில்லியன்) | 429.11 | 418.22 | (10.89) | (2.53) |

அட்டவணை 21 இலங்கை புகையிரத திணைக்களத்தின் சரக்கு எடுத்துச்செல்லும் வருமானம்

மூலம் : செயலாற்றல் அறிக்கை 2018

## புகையிரத பெட்டிகளை புனரமைப்பதில் தாமதம்

தனியார் துறையுடன் இணைந்து சேவையில் இருந்து நீக்கப்பட்ட 200 பயணிகள் பெட்டியை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் திருத்த பணிகளுக்காக வழங்கப்பட்ட 88 பெட்டிகளுள் 52 பெட்டிகள் மாத்திரம் புனரமைக்கப்பட்டிருந்தன.

## வீதி விபத்துக்களை குறைப்பது மற்றும் பாதுகாப்பு

காப்புறுதி கம்பனிகளின் மூன்றாம் தரப்பு வாகன காப்புறுதி மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு சதவீதமும் வேறு வருமானங்களாக ரூபா 66 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டில் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தினால் திரட்டப்பட்டுள்ளது. சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக சுமார் ரூபா 14 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. சபையினால் ரூபா 319.5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் வீதி விபத்துக்களை குறைப்பதற்கான பணியை நிறைவேற்றும் போது சபையின் கவனம் செலுத்தப்படவில்லை. மீளாய்வாண்டில் புகையிரத விபத்துக்களினால் 474 பேர் காயமடைந்துள்ளதுடன், 220 மரணங்கள் சம்பவித்துள்ளன. புகையிரத வண்டிகள் மூலம் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்காக போதிய நடவடிக்கைகள் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றம் மேற்கொள்ளவில்லை. வீதி விபத்துக்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கு ஆண்டுதோறும் வீதிகளில் புதிததாக இணையும் வாகனங்களின் எண்ணிக்கை வீதி விபத்துக்கள், சொத்து சேதங்கள் போன்ற சகல தகவல்கள் அடங்கிய கணினி தரவு களஞ்சியம் ஒன்றை பேணிச்செல்ல சபையை ஏற்படுத்தும் சட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அப்பணியை நிறைவேற்ற சபை தவறிவிட்டது.

## பயணிகள் போக்குவரத்துக்கான பேரூந்துகளை ஈடுபடுத்துவதிலான குறைவு

கடந்த ஆண்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமாக 7,302 பேரூந்துகள் காணப்பட்டன. மீளாய்வு ஆண்டின் இறுதியில் அது 6,929 ஆக 5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு சபைக்கு சொந்தமாக நாள் ஒன்றுக்கு 5,575 பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும் இதில் நாள் ஒன்றுக்கு 5,151 பேரூந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. நேர

அட்டவணையின் தேவைக்கு ஏற்ப 2018 ஆம் ஆண்டு 6,465 சாதாரண பேரூந்துகள் காணப்பட்டன. இதில் 5,575 பேரூந்துகள் மாத்திரம் சேவைக்கு விடப்பட்டிருந்தன.

## கெமி சவியவிற்கு பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தாமை

இலங்கை தேசிய போக்குவரத்து சபையினால் நாள் ஒன்றுக்கு சுமார் 5,000 பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் வருமானம் உள்ள வீதிகள் மற்றும் அலுவலக மற்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்வதற்காகவும் இந்த பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டன. இதன் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு சிசு செரியவிற்கு 726 பஸ் வண்டிகளும் நிசி செரியவிற்கு 142 பஸ் வண்டிகளும் ஈடுபடுத்தப்பட்டன. இந்நிலையில் மீளாய்வாண்டில் கிராமப்புற வீதிகளில் சேவையில் ஈடுபடுத்துவதற்கான கெமி செரிய பேரூந்துகளை ஈடுபடுத்துவதற்காக சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

## ஜிபிஎஸ் கட்டமைப்பினுள் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்று கொள்ளாமை

இலங்கை போக்குவரத்து சபையின் தலைமையகத்தில் இருந்து பேரூந்துகளை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான தகவல்களை பரிசீலிப்பதற்காக சபையினால் ஜிபிஎஸ் கட்டமைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக தனியார் கம்பனிகளுடன் இணைந்து ரூபா 33,628,840 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. சபையின் 125 சொகுசு பேரூந்துகளுக்கு இந்த ஜிபிஎஸ் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், இதற்கு தேவையான கெமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பேரூந்துகளில் பொருத்தப்பட்டன. இத்தொகுதியை கண்காணிப்பதற்காக தலைமையகத்திலோ, டிப்போ தலைமையகத்திலோ அல்லது டிப்போ அதிகாரிகளோ ஈடுபடுத்தப்படாமையினால் செயற்திட்டத்தின் பெறுபேறினை பெற்றுக்கொள்ள முடியாது போனது.

## அதிவேக பாதைகளில் சேவைக்கு உகந்த பேரூந்துகள் காணப்படாமை

இலங்கை போக்குவரத்து சபையினால் அதிவேக பாதையில் பேரூந்துகள் செலுத்தப்பட்ட போதிலும் அவ்வீதிகளில் பயணிப்பதற்கு பொருத்தமான அல்லது போதியளவு பேரூந்துகள் சபையிடம் காணப்படவில்லை. இதனால் வெளிதரப்பினரினால் பெற்று கொள்ளப்பட்ட பேரூந்துகள் சபையின் இலட்சினையின் கீழ் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த பஸ் வண்டிகளின் வருமானத்தில் 15 சதவீதத்திலான வருமானத்தை மாத்திரமே பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## கேள்வி கோராமல் நிரந்தர சேவைக்கான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டமை

2005 ஒக்தோபர் 6 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கேள்வி கோரப்பட்டு நிலையான சேவை அனுமதி பத்திரங்களை வழங்க ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது. எனினும் கேள்விமனு கோராமல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி 3,440 வீதி அனுமதி பத்திரங்களை வழங்கியிருந்ததுடன், இதில் 64 சதவீதமானவை வருடாந்தம் புதுப்பிக்கும் கட்டணமாக ரூபா 3,000 தொகையும் கட்டண அறவீட்டின் கீழ் 27 சதவீதம் வருடாந்தம் ரூபா 15,000 கட்டண அறவீட்டின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்பட்டிருந்து. இதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மொத்த அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கையில் 91 சதவீதம் ஆகும். கேள்விமனு கோராமல் வழங்கப்பட்டமையினால் ஆணைக்குழுவுக்கு கிடைக்கவிருந்த வருமானத்தை இழக்க வேண்டியேற்பட்டது. அத்துடன் ஆணைக்குழு அதிவேக பாதையில் பஸ் வண்டிகளுக்கு தற்காலிக வீதிச் சேவை அனுமதி பத்திர ங்கள், குறைந்த தொழில்நுட்ப பெறுமதி அடிப்படையில் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் அதி உச்ச 28 நாட்களுக்கு 820 அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்ததுடன்,

கேள்வி மனு கோரப்பட்டு பெற்று கொள்ளப்பட்ட உயர் வருமானத்தையும் இழந்துள்ளது.

## பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்காமை

மீளாய்வாண்டில் இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் இருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பயணிகள் சேவை அனுமதி பத்திரம் இன்றி 28 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக நடமாடும் கண்காணிப்பு பிரிவினால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் 17 வீதிகளுக்கு 31 பயணிகள் சேவை அனுமதி பத்திரங்களை வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. இதன் அடிப்படையில் ஆணைக்குழுவினால் 06 வீதிகளுக்கு 09 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்க மனு கோரப்பட்டு வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுள் அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை கூட்டம் நடத்தப்படாமையினால் அங்கீகாரத்தை பெற்று கொள்ள முடியவில்லை. இதனால் மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியாமல் போய்விட்டது. இதனால் ஆணைக்குழுவுக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 25.82 மில்லியன் வருமானத்தை இழந்துள்ளது.

## மாணவர்கள் மற்றும் பாடசாலைகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை

சிசு செரிய செயற்திட்டத்திற்காக மாணவர்கள் மற்றும் பாடசாலைகளினால் 31 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டு அக்கோரிக்கைகளுள் 31 இனை நிறைவேற்ற முடியவில்லை. இத்திட்டத்தை நிறைவேற்றும் போது போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் நிறுவனமாக குறித்த சேவைகளுக்கான பஸ் வண்டிகளை ஈடுபடுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அடிப்படை பணியாகவும் சமூக பொறுப்பாகவும் இருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## நாளாந்த மணிநேர அடிப்படையில் மருத்துவர்களின் சேவையை பெற்று மருத்துவ சான்றிதழ்கள் வழங்குவது

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் பிரதான பணி மருத்துவ சான்றிதழ்களை வழங்குவதாக இருந்த போதிலும் இதற்காக நிறுவனத்தில் போதிய மருத்துவர்கள் தொகை காணப்படாமையினால் ஒப்பந்த மற்றும் நாளாந்த மணி அடிப்படையில் மருத்துவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் படி 07 கிளை அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர மருத்துவரேனும் நியமிக்கப்படவில்லை என்பதுடன், நாளாந்த அடிப்படையில் மருத்துவர்களை சேவையில் ஈடுபடுத்தி மருத்துவ சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

## அதிகாரச்சட்டத்தின் பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாமை

1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன சட்டத்தின் படி விபத்துக்கள் தொடர்பாக மருத்துவ சேவை மற்றும் உதவிகளை வழங்குவது, செலுத்த வேண்டிய நட்டஈடு அல்லது நட்டம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது நிறுவனத்தின் அலுவல்களை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான மருத்துவ அதிகாரிகள் சபையொன்றை நியமிப்பது, சகல மோட்டார் வாகனங்களும் உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ தகுதிகாண் நிபுணத்துவம் கொண்டவர்களினால் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டிய போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளுக்கான தரத்தை உறுதிப்படுத்துவது மற்றும் வரையறைகளை ஏற்படுத்துவது போன்ற பணிகளை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் நிறைவேற்றியிருக்கவில்லை.

| | |
|---|---|
| சமூக வலுவூட்டலும் நலனோம்பலும் | சமூகப் பாதுகாப்பு நிதியித்திலுள்ள மீதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | தாக்கமுள்ள முதுமையடைதல் தொடர்பில் ஆராய்ச்சி நடாத்தப்படாமை |
| | ஊனமுற்றவர்களிற்கான தொழிற்பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் பூரணப்படுத்தப்படாமை |
| | முகாமைத்துவ தகவல் முறைமையினை நிறுவுவதற்கு முடியாது போயிருந்தமை |
| | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிகளை பயன்படுத்தியிருக்காமை |

# சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல்

பொருளாதார மற்றும் சமூகரீதியாக வலுப்படுத்துவதினூடாக பாதுகாப்பான சமூகமொன்றாக உருவாக்குவதை பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல் அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களாலும் 05 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி உள்ளடங்கலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல்.
- கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை வலுவூட்டல் நோக்கில் மூலோபாயங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்புடுத்துவதற்கு நிதி வழங்குதல்.
- கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார கொள்கைகளை உருவாக்குதல்.
- திவிநெகும (சமூர்த்தி) நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- விசேட தேவைப்பாடுடைய நபர்களின் குறைகளை இனங்காணுதல் மற்றும் புனர்வாழ்வளித்தல் செய்தல்.
- பொதுசன உதவி முன்மொழிவு முறையினை மீளாய்வு செய்தல், மீள் கட்டமைப்பு மற்றும் பொருத்தமான புதிய சீரமைப்புகளை அறிமுகப்படுத்தல்
- காச நோயாளர்களுக்கு, சிறுநீரக நோயாளர்களுக்கு, தொழு நோயாளர்களுக்கு புற்று நோயாளர்கள், மனவளர்ச்சி குன்றிய நோயாளர்களுக்கு மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு உதவிகளை வழங்குதல்.
- குடும்ப மதியுரை சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
- ஊனமுற்ற நபர்களுக்காக தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் தேவையான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.
- ஊனமுற்ற நபர்களுக்காக சமூக பாதுகாப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.
- முதியோரைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தல், சமூக பாதுகாப்பு பணிகளில் முதியோரின் பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் சிரேஸ்ட பிரஜைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை உடுத்தல்

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் நிறுவனங்கள் மூலம் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு

மீளாய்வாண்டின் முதல் 03 மாதங்களில் 70 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் பெறும் சிரேஷ்ட பிரஜைகள் 386,083 பேருக்கும், அதன்பின்னரான 09 மாத காலத்தில் முதியோர் 416,667 பேருக்கும் தலா ரூபா 2,000 வீதம் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவாக ரூபா 9,816.50 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் முதியோர் 410,397 பேருக்கு ரூபா 9,590.03 மில்லியன் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியில் ரூபா 226.47 மில்லியன் பயன்படுத்தப்படாது மீதியாகவிருந்தது. எவ்வாறாயினும், 25 மாவட்டங்களிலும காத்திருப்போர் பட்டியலில் முதியோர் 117,598 பேர் சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவை எதிர்பார்த்து இருந்தனர். 2016 ஆகஸ்ட் 31 ம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க முதியோருக்கு வழங்கப்படும் இக்கொடுப்பனவில் ரூபா 100 வீதம் குறைத்து பிரதேச செயலகங்கள் மூலம் முதியோர் செயலகங்களுக்கு வழங்கப்பட வேண்டி இருந்தது. அதற்கேற்ப மீளாய்வாண்டில் ரூபா 490.82 மில்லியன் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அதில் ரூபா 5.36 மில்லியன் குறைவாக அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும் அந்த பற்றாக்குறையை அறவிடுதல் தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலகங்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி ரூபா 1,476.16 மில்லியனாக இருந்த போதும், அம்மீதியை மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிட்டதற்கிணங்க எந்தவொரு பணிக்காகவும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

## பயனுள்ள முதுமையடைதல் தொடர்பான ஆராய்ச்சி

இலங்கையின் சமூக அடிப்படை முதியோர் பாதுகாப்பு கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஆராய்ச்சிக்காக ரூபா 4.20 மில்லியன் நிதி முதியோர் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிறுதி வரை அந்த செயற்றிட்டத்திற்குரிய ஆராய்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு செலுத்துதல்

மீளாய்வாண்டில் அங்கவீன கொடுப்பனவாக 25 மாவட்டங்களில் அங்கவீனர்கள் 34,667 பேருக்கு மாதாந்தம் ரூபா 3,000 படி அங்கவீன கொடுப்பனவு செலுத்துவதற்காக ரூபா 1,151.77 மில்லியன் நிதி முதியோர் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அங்கவீனர்கள் 31,956 பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதன் பின் ரூபா 10.55 மில்லியன் நிதி எஞ்சியிருந்தது.

## ஊனமுற்றோருக்கான வீடமைப்பு கொடுப்பனவு செலுத்துதல்

குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களுக்கு வீட்டு உதவித் தொகை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட போதும், 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குள் 366 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்படாதுள்ளது. அவ்வீடுகளுக்காக மேலும் செலுத்த வேண்டிய தவணைகளின் பெறுமதி ரூபா 25.11 மில்லியனாக இருந்தது. அந்த செலுத்த வேண்டிய தவணைகளில், கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டு 02 ஆண்டுகளிலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் வேலை பூர்த்தியாகாத 169 வீடுகள் அடங்கும். கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டை விட அதிக காலமான வீடுகள் 67 ஆகக் காணப்பட்டது. அவ்வீடுகளுக்காக ரூபா 14.26 மில்லியனும் ரூபா 3.40 மில்லியனுமாக மொத்தம் ரூபா 17.66 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

## வலது குறைந்த நபர்களுக்கு கட்டிடங்களுக்கு உட்பிரவேசிப்பதற்காக நுழைவு வசதிகளை வழங்குதல்

2016 இன் 01 ஆம் இலக்க அங்கவீன நபர்களுக்கான நுழைவுக் கட்டளையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நுழைவு வசதிகள் பூரணப்படுத்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மற்றும் மேற்பார்வை மட்டுமல்லாது அது தொடர்பான சகல காரியங்களினதும் பொறுப்புகள் அங்கவீன நபர்களுக்கான சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தேசிய அங்கவீனர்களுக்கான செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் தொழில்நுட்ப அலுவலர் 2019 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நியமிக்கப்படாததினால் அக்காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாதிருந்தது.

## ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

வயோதிபர் உபசார உதவியாளர் 100 பேரை நியமனம் செய்து பயிற்சியளிப்பதற்கு ரூபா 2.50 மில்லியனும், முதியோருக்கான சம்பிரதாய மற்றும் தேசிய முறையை சமூகத்தினுள் மேம்படுத்துவதற்காக அத்தம்மா கேட்டரிங் செயற்றிட்டத்திற்கு ரூபா 5.00 மில்லியனும், கதிர்காம முதியோர் இல்ல நிர்வாகியின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்துவதற்கு ரூபா 3.00 மில்லியனும், தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் முதியோரின் நலன்புரிக்காக பிரதான 03 காரியங்களை நிறைவேற்றுவதற்காக சமூக பாதுகாப்பு நிதியத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 252.83 மில்லியனுமாக மொத்தம் ரூபா 263.33 மில்லியன் நிதி மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அந்நிதியை உபயோகப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை பணிகள் நிறைவேற்றப்படாமையினால் முழு நிதியும் பயன்படுத்தப்படாமலிருந்தது.

### காணிகளின் பயன்பாடு

முதியோர் இல்லம் அமைப்பதற்காக 2011 ஆம் ஆண்டு நன்கொடை உறுதி மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 13.00 மில்லியனுக்கான கம்பஹா ஹொரல்குரோஸ் நிலம் மற்றும் ரூபா 3.20 மில்லியன் பெறுமதியான ஹாரகம ராஜித தோட்டம் எனும் நிலம் குறிப்பிடப்பட்ட இல்லத்தை அமைக்கத் தவறியதால் பயன்பாடின்றி உள்ளது.

### கட்டிடங்களை கொள்வனவு செய்தல்

இலங்கை சமூக பாதுகாப்பு சபை மூலம் தேவையான நிதியை ஒதுக்கிக் கொள்வதிலும் மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதிலிருந்து விலகி, அரசினால் மதிப்பிடப்பட்ட ரூபா 165.00 மில்லியனை விஞ்சி சபையின் பிரதான காரியாலயத்தை நடாத்துவதற்கு ஓய்வூதிய நிதியத்திலிருந்து ரூபா 195.00 மில்லியன் செலவிட்டு 2013 ஆம் ஆண்டு கட்டடமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியில் கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டு 05 ஆண்டு காலம் நிறைவுற்று இருந்த போதும், கட்டடத்தின் தற்போதைய பெறுமானத்தை மதிப்பீடு செய்வதற்கு கண்காணிப்புக் குழுவினரால் முறையான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்தல்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முகாமைத்துவத்திற்கான அலகொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 12.51 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கணணி அலகைக் கொள்வனவு செய்வதற்காக 03 வருட காலமாக திட்டமிடப்பட்டிருந்தாலும் அதை தாபிக்க இயலவில்லை. சபையில் தற்போதுள்ள முகாமைத்துவத் தரவுகள் அலகில் நிலவும் குறைபாடு காரணமாக செயற்படும் மற்றும் செயலிழந்த சந்தாதாரர்களை இனங்காண முடியாதிருந்தது. இதனால் இவை தொடர்பான தீர்மானமான எண்ணிக்கையை சமர்ப்பிப்பதற்கு சபையினால் முடியாதிருந்தது.

### வலது குறைந்த நபர்களுக்கான தொழில்சார் பயிற்சி நிலயங்களை நிர்மாணித்தல்

கடந்த வருடத்தில் கொட்டாவை தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்து முடிப்பதற்காக ரூபா 25 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு தாமதமான காரணத்தினால் மீளாய்வாண்டில் வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் முழு செலவு ரூபா 12.06 மில்லியனாக இருந்த போதும் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக மட்டுமே இருந்தது. இதனால் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்றிட்டத்தை பூர்த்தி செய்து பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க முடியாதிருந்தது.

மட்டக்களப்பு தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்தல் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அது மதிப்பிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 100 மில்லியனாக இருந்தது. மீளாய்வு ஆண்டினிறுதியில் கட்டுமானப்பணிக்காக ரூபா 64.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்தவாறு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வடமாகாண இளைஞர் சமுதாயத்தின் பொருளாதார அபிவிருத்தி சார்பில் கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையம் இரண்டு கட்டங்களில் அமைக்கப்படுவதற்கு 2016 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 64.00 மில்லியனாக இருந்தது. மீளாய்வு ஆண்டின் ஒக்தோபர் மாதம் இக்கட்டிடம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தாலும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா 54.37 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தாலும் இரண்டாம் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை

முறையான அங்கீகாரமின்றி ஊழியர்களை ஆட்சேர்த்தல்

வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கைகளை முறித்துள்ள உத்தியோகத்தர்கள்

குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

சிக்கனமற்ற செலவினம்

அவசியமற்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருத்தல்

# விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகள்

விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பிரயல்யப்படுத்துதலினூடாக விஞ்ஞான ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் உயர்ந்த நாடொன்றாக மாற்றுவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 13 நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல்
- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சர்வதேச ரீதியாக இடம்பெறும் கண்டுபிடிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக தேவையான வசதிகளை ஏற்படுத்துதல்
- விஞ்ஞானம் சார்ந்த, கைத்தொழில், சமூக மற்றும் பொருளதார ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குரிய வசதிகளை வழங்குவதினூடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடலும் செயற்படுத்தலும்
- புதிய கண்டுபிடிப்புகளுக்காக சமூகத்தை தொடர்புபடுத்துதல், முன்வருவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்படி கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாமை

2018 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கீழ் காணும் செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அச்செயற்பாடுகள் நிறுைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- சூரிய சக்தி செயற்திட்டத்திற்காக ஆசிரியர்கள் 100 பேரை வலய மட்டத்தில் தெரிவு செய்து பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துதல்.
- சூரிய சக்தி திட்டத்திற்காக தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் 250 பேரை பதிவு செய்து வேலைத்திட்டம் நடாத்துதல்.
- 2018 ஆம் ஆண்டில் இறுதிக் காலாண்டில் தேசிய விஞ்ஞான மத்திய நிலையத்தை அமைக்கும் பணிகளை ஆரம்பித்தல் மற்றும் ஆரம்பக் கட்ட திட்டங்கள் தயாரித்தல், மற்றும் காணிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள்.
- மரபணு விஞ்ஞானம் தொடர்பான தலைசிறந்த மத்திய நிலையமொன்றை அமைத்தல்.
- மீளாய்வாண்டில் ரூபா 44 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், உத்தேச இலங்கை தர நிர்ணய நிறுவனத்திற்கு ஆய்வுகூடம் அமைத்தல்.
- மீளாய்வாண்டில் கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்தினால் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. பெற்றோலிய உற்பத்தி சோதனை தொடர்பான வசதியளிக்கும் செயற்திட்டம்.
- மீளாய்வாண்டில் ரூபா 250 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு மூலம் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த இயந்திர இலத்திரனியல் விஞ்ஞானத்தினால் வலுவூட்டப்பட்ட பொருளாதார அபிவிருத்தி தொடக்கம் (MEDI) ஊடாக உற்பத்திகள்

திட்டமிடல் பொறியியல் விஞ்ஞானத்திற்கு (PDE) உதவி வழங்கும் செயற்திட்டம்.

- மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 150 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் தொழில் வள திட்டம் (Enterprises Resource Planning) செயற்திட்டம்.

## முறையான அனுமதியின்றி ஊழியர்களை இணைத்துக்கொள்ளல்

2016 ஜனவரி 08 ஆம் திகதிய 1/2016 ம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரிச் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமலும் வேலைச்சுமையை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்கள் 19 பேர் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 10.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்கள்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி செயற்படாத 18 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 7.61 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் வரை அந்த பணத்தை பெற்றுக்கொள்ள நிறுவனம் தவறியிருந்தது.

## குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

உணவுப் பொருட்களின் உயிர்க்கொல்லி கழிவுப் பொருட்கள் அடங்கியுள்ளதா என பரிசோதிப்பதற்காகவே Gas chromatograph mass spechrophotometre Gc/Ms - Ms நிறுவவுது தொடர்பாக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் ரூபா 24.61 மில்லியன் பெறுமதியான 3 இயந்திரங்கள் 2017 நவம்பர் 12 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த இயந்திரம் 2019 ம் ஆண்டு மே மாதம் வரையும் பாவனையின்றி தொழிற்பாடாதுள்ளது. அவ்வாறே அந்த கட்டமைப்பினை நிறுவுவதற்கு பொருத்தமான ஆய்வு கூடம் 2019 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வரை அமைக்கப்படாததோடு அதற்காக பதவியணிக்கு தேவையான பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## சிக்கனமற்ற செலவினம்

இலங்கையினுள் புத்தாக்க உற்பத்திக் கலாசாரத்தை வளர்க்கவும் நிலைநிறுத்தவும் ஊடகக் கொள்கையை உருவாக்குவதற்கு 2017 ம் ஆண்டு ரூபா 1.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் மாதம் வரையும் அக்கொள்கை நடைமுறையில் பாவனைக்கு கொண்டு வரப்படவில்லை.

ஓராயிரம் விளைவளவு 2018 கண்காட்சியில் அச்சிடப்பட்ட, இலத்திரனியல் ஊடக பிரசார நடவடிக்கைக்காக தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் அதற்காக ரூபா 2.65 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. தினமின, தினகரன்,டெய்லி நியூஸ்,லங்கா தீப மற்றும் டெய்லி மிரர் போன்ற பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு அதில் ரூபா 1.25 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களை உருவாக்குவதற்கு இலங்கை புதிய உற்பத்தியாளர்களின் ஆணைக்குழுவின் ஊழியர் குழுவினூடாக செய்யப்பட்டிருந்ததால் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு இடைத்தரகருக்கு ரூபா 2.25 மில்லியன் கொடுக்கப்பட்டிருந்தது.

## அத்தியாவசியமற்ற பொருட்களின் கொள்வனவு

ஆதர் சீ கிளார்க் மத்திய நிலையத்தினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 24.8 மில்லியின் பெறுமதியான 6 சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உபகரண துணைக்கருவிகள் மற்றும் அலகுகளைப் பரிசோதனை செய்த போது அச்சொத்துக்கள் பாவனைக்குட்படுத்தப்படாது இருந்தன.

# தொடர்பாடல்

**இணைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைதல்**

**ADSL இணையச் சேவைகளுக்கான விரிவாக்கம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்**

**தாமரைக் கோபுர செயற்திட்டம்**

# தொடர்பாடல்

டிஜிடல் தொழில்நுட்பத்துடன் கூடிய வளமுள்ள ஒரு நாட்டை கட்டி எழுப்பும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, அதன் கீழ் அமைந்துள்ள 03 நியதிச்சட்ட நிறுவனங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

- தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதி தொடர்பான விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தல், மீழ் மதிப்பீடுகளைச் செய்தல்.
- நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவதினூடாக அனைவருக்கும் தொலைத்தொடர்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அரசாங்க சேவைகள் வழங்கப்படும் போது உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறன்களை மேம்படுத்துவதற்கு பொருத்தமான தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு உதவுதல்.
- கனிணி தொழில்நுட்பத்தை அதிகமாக பயன்படுத்த ஊக்குவிக்கக்கூடிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனையை அதிகரிக்கத் தேவையான ஊக்கமூட்டல் தந்திரோபாயங்களை வகுத்தல்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட கணக்காய்வுக் கணிப்பு அறிக்கைகளின் சாராம்சம் பின்வருமாறு,

### இணைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் சனத்தொகை வளர்ச்சியை விட குறைந்துள்ளது.

2016ஆம் ஆண்டில் இணைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 4,921,000 ஆகவும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே அவ் எண்ணிக்கைகள் 5,904,260 ஆகவும் 7,263,098 ஆகவும் இருந்தது. இங்கு வாடிக்கையார்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக தோன்றிய போதிலும் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்த எண்ணிக்கையாக உள்ளது.

### ADSL இணையச் சேவைகளுக்கான விரிவாக்கம் குறைந்த மட்டத்தில் உள்ளது.

2018 ஆம் வருட இறுதியில் யுனுளுடு இணையதள இணைப்புகள் 864,821 பெறப்பட்டன. அவற்றில் நூற்றுக்கு 49.88 வீதம் மேல் மாகாணத்திலும் 0.48 வீதம் முதல் 5.04 வீதம் வரை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருந்தன. அதன்படி கிராமிய பகுதிகளில் ADSL இணையத்தள வசதிகளுக்கான இணைப்புகள் மிகவும் அடிமட்டத்தில் காணப்படுகின்றது.

### பொருளாதாரத்தை டிஜிட்டல் மயப்படுத்தும் கருத்திட்டத்தை செயற்படுத்தல் மந்தகதியில் உள்ளது.

2018 ஆம் ஆண்டில் அமைச்சு பொருளாதாரத்தை டிஜிட்டல்மயப்படுத்தும் கருத்திட்டங்களுக்கு ரூபா. மில்லியன் 1,731.85 ஒதுக்கல் ஏற்பாடு செய்யதிருந்தது. மதிப்பீட்டாண்டில் அதில் ரூபா. மில்லியன் 637.96 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டு இருதியன்று ரூ.மில்லியன் 89.36 க்கான விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்த வேண்டி இருந்தது. அதன்படி குறித்த நிதி வளர்ச்சி நூற்றுக்கு 42 வீதமாக இருந்ததுடன் வருடத்தின் உள் முடிவுறுத்தப்படவேண்டிய கருத்திட்டங்கள்

14இல் எந்தவொரு கருத்திட்டமும் பூர்த்தியாக செய்து முடிக்கப்படவில்லை. நடப்பாண்டில் திட்டமிடப்பட்டவாறு இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும், செய்து முடிக்கப்படவேண்டிய வேலைகள் குறித்த கால வரையறைக்குள் செய்து முடிக்கப்படாமை இந்த நிலைமைக்கு விஷேடமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தாமரைக் கோபுர கருத்திட்டம்

தொடர்பாடல் துறையினை ஒழுங்குபடுத்தும் நிறுவனமான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படுவதுடன் தற்போது இவ் ஆணைக்குழு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. 2010 ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தின் படி தாமரை கோபுரத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை சீன நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. 2012 ஜனவரி 03 திகதி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அந்நிறுவனங்கள் ஒப்பந்தங்களுக்கு கைச்சாத்திட இயங்கியுள்ளன. ஒப்பந்தப் பெறுமதி ஐ.அ.டொ 104,300,000 ஆக இருந்ததுடன் ஒப்பங்களின் படி 2012 டிசம்பர் 12 ஆம் திகதி முதல் 2015 மே 12 ஆம் திகதி வரை 912 தினங்களுக்குள் இவ் ஒப்பந்தங்களின் படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. இது சம்பந்தமாக நடாத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் இருந்து பின்வரும் விடயங்கள் தெளிவாகியுள்ளன.

- கருத்திட்ட அறிக்கை ஒன்றோ, முறையான சாத்திய வள ஆய்வறிக்கையோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இக்கருத்திட்டம் தொடர்பில் குறைபாடுகளுடன் கூடிய நிதிச்சாத்திய வள அறிக்கை ஒன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.
- கோபுரம் கட்டப்படுவதற்கான ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் பின் 2015 ஆகஸ்ட் 28ஆம் திகதி 2015.217.02 (2) ஆம் இலக்கமுடைய ஆணைக்குழுவின் தீர்மானத்தின் படி ஒப்பந்த காலத்தை 2017 ஒக்டோபர் மாதம் வரை நீடிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை.
- நிர்மாணப் பணிகளின் தாமதம் காரணமாக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகையினையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக சீன நிறுவனம் மற்றும் ஏற்றுமதி (EXIM) வங்கியினாலும் விடுவிக்கப்பட்ட கடன்தொகை அ.டொ 67,259,754 க்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே ஒப்பந்தத் தொகை கணக்கிடப்படுவதற்கு மொத்த கடன்தொகையான ஐ.அமெ.டொ 88,655,000 பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூ. மில்லியன் 91.88(ஐ.அமெ.டொ 636,508) ஒப்பந்த தொகையை விட மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கடன்தொகையை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக 2016 ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி முதல் 2017 ஒக்டோபர் 27ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பாவனைக்கு எடுக்கப்படாத கடன்தொகைக்கும் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதுடன் ஒப்பந்தத் தொகையை விட ரூபா. மில்லியன் 49.61 அதாவது ஐ.அமெ.டொ 322,984 அளவு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள உடன்பாட்டுக் கட்டணத்தின் அளவு ரூ. மில்லியன் 49.61 அதாவது ஐ.அ.டொ 322,984 ஆக இருந்தது.
- மதியுரைக் கட்டணமாக மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு செலுத்துவதற்கு ஒப்புக்கொண்ட ரூ. மில்லியன் 198.69 தொகைக்கு அமைச்சின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்ததுடன் 2015 டிசம்பர் 31ஆம் திகதிவரை கருத்திட்டத்தின் 5.2 வீதம் மட்டுமே பூர்த்தியாக்கப்பட்டிருந்த வேளையில் ஒப்பந்தத்தில் திட்டடமிடப்பட்டிருந்த எல்லைக்கு அப்பால் மதியுரைச் சேவைக் கட்டணத்தின் 75 வீதமான அதாவது ரூ. மில்லியன் 150 செலுத்தப்பட்டிருந்தது.
- 2014 டிசம்பர் 14ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அத்தினம் வரை செலவு

செய்யப்பட்டிருந்த கிரயம் கணக்கீடு செய்யப்படாமல் ரூ. பில்லியன் 11.7 நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பகுதி பகுதியாக செலுத்தும் அடிப்படையில் காணியை கையளிப்பதற்கும், அறுதியிட்டுத் தருவதற்கு 2012 ஜனவரி 23ஆம் திகதி இருதரப்பும் இணங்கியிருந்தது.

- இவ்வாறு அமைச்சரவை முடிவுகளுக்கு அப்பால் 2015 ஏப்ரல் 10ஆம் திகதி வரை ரூ. மில்லியன் 2,250 நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்ததுடன் அமைச்சரவை முடிவு அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மதிப்பீட்டாண்டு முடிவு வரை காணி உரிமை மாற்றம் செய்யப்படவில்லை.
- கோபுரம் நிர்மாணிக்கப்பட்டதன் பின் கருமங்களைச் செய்வதற்கு இக் கோபுரத்தின் ஆதனங்களை முகாமைத்துவம் செய்வதற்கு ஒரு நிறுவனத்துக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான செயல்முறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான மதிப்பாண்டு இறுதிவரையில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

உயர் கல்வி

பாதீட்டு முன்மொழிதல்களை நடைமுறைப்படுத்தியிருக்காமை

வெளிநாட்டுச் செயற்திட்டங்களின் செயலாற்றல் குறைவடைதல்

ருஹுனு பல்கலைக்கழகத்தில் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்

ருஹுனு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

# உயர் கல்வி

உயர்கல்வி நிறுவன முறைமையின் செயற்திறன் மற்றும் அதன் வினைத்திறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன் கல்வியின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்களையும் உயர்கல்வி நிறுவனங்களையும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதன் மூலம் கல்வியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் உயர்கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்ககப்படுகின்ற பெறுபேறுகளாக இருந்தது. இப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக உயர்கல்வி அமைச்சு 36 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- தேசிய கொள்கைகளுக்கு இணங்க பல்கலைக்கழக கல்வியை திட்டமிடுதலும் ஒருங்கிணைத்தலும்
- உயர் கல்வி நிறுவனங்களின் கல்வி நியமங்களை பேணுதலும் அந்நிறுவனங்களின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்தலும்
- பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தல்

மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

## பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை 27000 இலிருந்து 40000 வரை அதிகரித்தல் 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது. எவ்வாறாயினும் 2016/2017 மற்றும் 2017/2018 ஆகிய கல்வி ஆண்டுகளை கவனத்திற்கு எடுத்துக் கொண்ட போது சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 30,660 மற்றும் 30,550 ஆக இருந்ததனால் 118 மாணவர்களின் குறைவு சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறே 2017/2018 கல்வி ஆண்டில் பல்கலைக்கழக கல்விக்காக தகமைகள் பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 19 சதவீதமாக இருந்தது.

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு கல்விப் பீடத்திற்காக 351,898 சதுரஅடியிலான கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 288.5 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 31.3 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் நிதிச் செயலாற்றல் 10 சதவீதமாக இருந்ததுடன் பௌதீக செயல் முன்னேற்றம் 14 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தத்தை வழங்கும் பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## ருகுனு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

ருகுனு பல்கலைக்கழகத்தில் 85,935 சதுர அடி அளவான 08 மாடிகளைக் கொண்ட வைத்திய பீடக்கட்டிடத்தை நிர்மாணிக்கும்

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படவிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 500 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 269.3 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் வேலையை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா 200 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும் செலுத்தப்பட்ட முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு போதியளவு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2019 மே 02 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யபட்ட வேலைகளின் நிதி செயலாற்றல் ரூபா 101 மில்லியனாக மாத்திரம் இருந்தது.

## மாணவர் கடன் திட்டம்

மாணவர் கடன் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 5,000 மாணவர்களுக்கு கடன் வசதிகள் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. இதன் கீழ் ஆண்டின் போது 08 தனியார் பாடசாலைகளில் 38 பட்டப்படிப்பு கற்கை நெறிகளைப் பயிலுவதற்காக 1382 விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கிணங்க ஒட்டுமொத்த இலக்கிடப்பட்ட மாணவர்களின் 27 சதவீதம் மாத்திரம் இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள்.

## பாதீட்டுப் பிரேரணைகள் அமுல்படுத்தப்படாமை

பாதீட்டுப் பிரேரணைகளை அமுல்படுத்தும் குறிக்கோளுடன் திறைசேரியால் மீளாய்வாண்டின் போது 07 திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக ரூபா 663 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான திட்டங்களைத் தயாரித்து அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததும் உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

## வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்

- உலக வங்கியின் உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற உயர்கல்வியை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தல் செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. மீளாய்வாண்டின் போது இச்செயற்திட்டத்திற்காக ரூபா 714.21 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதியின் போது செயற்த்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 5 சதவீதமாகிய மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.
- மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு 280 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்கத்தின் மற்றும் சவூதி அரசாங்கத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்ட வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 1450 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற களனி, சப்ரகமுவ, ரஜரட, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களுக்கான தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை ஆரம்பிக்கும் செயற்திட்டத்தினதும் பௌதீக செயல்முன்னேற்றம் 02 சதவீதமாகிய கீழ் மட்டத்தில் காணப்பட்டது.
- இலங்கை அரசாங்கத்தினதும் குவைட் அரசாங்கத்தினதும் உதவியுடன் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சுனாமி அனர்த்தத்தால் சேதம் அடைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களை புனரமைத்தல் மற்றும் மீள் நிர்மாணித்தல் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 133.5 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்தின் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின்

பௌதீக செயல்முன்னேற்றம் 37 சதவீதம் மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 23 சதவீதமாகிய கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

### பல்கலைக்கழக நுழைவிற்காக இணையத்தளத்தினுடாக விண்ணப்பித்தல்

2015/2016 கல்வியாண்டின் போது முதற்தடைவயாக இணைய தளத்தினூடாக அதேபோல் வழமையான முறைமையின் கீழ் பல்கலைக்கழக நுழைவுக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. 2017/2018 கல்வி ஆண்டின் போது இந்த ஒன்லைன் முறைமைக்காக ஆண்டின் இறுதிவரை ரூபா 9.35 மில்லியனும் மீளாய்வாண்டிலிருந்து ரூபா 0.70 மில்லியன் பராமரிப்பதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு இருக்கையில் வழக்கமான முறைமை மற்றும் ஒன்லைன் முறைமையாகிய 2 முறைமைகளும் அமுல்படுத்தப்பட்ட 2015/2016 கல்வியாண்டின் போது மாணவர்களை பதிவு செய்கையில் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சிக்கல்களின் எண்ணிக்கை 1081 ஆக இருந்தது. ஒன்லைன் முறைமை மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட 2018/2019 கல்வியாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட சிக்கல்களின் எண்ணிக்கை 5602 வரை அதிகரித்திருந்தது.

### சபடிக்கல் விடுமுறை

உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் 5 ஆம் அத்தியாயம் 07ஆம் இலக்கத்தின் பிரகாரம் மற்றும் 20018 டிசெம்பர் 17 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்ககுழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி உத்தியோகத்தர்கள் சபடிகல் விடுமுறைமையைப் பெற்று ஏனைய ஒரு நிறுவனத்தில் சேவையில் ஈடுபடும் போது அல்லது கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு செல்கின்ற போது நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் இறுதியில் மீண்டும் சேவைக்கு வருகை தருவதாக பிணை உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பிணை முறி உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் சேவைக்கு வருகைதராமையின் காரணமாக 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குரிய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 350 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 761.3 மில்லியன் அறவிட வேண்டியிருந்தும் அப் பணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

### மூலதன மானியங்கள் பயன்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகங்களுக்காக திறைசேரியால் மூலதன மானியமாக ரூபா 14,098 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்த மூலதன மாணியங்களிலிருந்து ரூபா 2,261.2 மில்லியன் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

# மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி

மெ.வொ. 31 மொரகொல்ல நீர் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்காமையால் தண்டப்பணம் செலுத்துதல் (Commitment Charges)

செயற்திட்டத்தை பூரணப்படுத்தலில் தாமதம்

நிலக்கரி நிறுவனத்தில் சரியான தகவல்கள் சமர்ப்பிக்காமை

சொத்துக்களை கையேற்காமை

நிலக்கரியினை குறைவாக வழங்குதல்

மின்சார சபை ஊழியர்களால் செலுத்தப்பட்ட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி சபையால் செலுத்தப்படுதல்

பதவியணியினருக்கு படிகளை செலுத்துதல்

பாவனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புக்களிற்கு வட்டி செலுத்தாமை

# மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலாதாரங்களிலிருந்து மின்வலு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இலங்கையில் சக்தி துறையில் தன்னிறைவு உடையதாக மாற்றும் எதிர்பார்ப்புடன் மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 7 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் என்பவற்றால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான விடயங்களுடனும் கொள்ளைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்.

- மின்வலு வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்

- நீர், அனல், நிலக்கரி மற்றும் காற்று ஆகிய மூல வளங்களின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்வும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும்

- கிராமிய மின்வலுப்படுத்துகை

- எரிசக்தி வினைத்திறன் கேள்விப்பாட்டின் அடிப்படையில் கேள்வியை முகாமை செய்தலும், புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை அபிவிருத்தி செய்தலும்

- புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை அபிவிருத்தி செய்தலும்,

மேற்குறித்த செயற்பாடுகள் அமைச்சின் மற்றும் அதன் கீழ்வரும் செயற்படுகின்ற நிறுவனங்களால் நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## மெகாவாட் 31 மொரகொல்ல நீர் மின்நிலையத்தின் நிர்மாணம்

தேசிய மின்சார முறைமைக்கு 31 மெகாவாட் இயலளவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மொரகொல்ல நீர் மின் நிலைய நிர்மாணம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டம் 3 வருட கால தாமதத்தின் பின்னர் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 16,780 மில்லியனில் ரூபா 14,851 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்திருந்தது. 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 17 சதவீதமாக இருந்தது. திட்டத்தின் ஆலோசனை சேவைகள் ஒப்பந்தத்தை வழங்குதல் தாமதமாகியதன் காரணத்தினால் அச்செயற்திட்டத்தை உரிய திகதியில் ஆரம்பிக்காமையால் பெற்றுக்கொண்ட கடனுக்காக ரூபா 28 மில்லியனுக்கு அண்மித்த தொகையான 177,931 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் தண்டக் கொடுப்பனவாக (Commitment Charges) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## தேசிய பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு மேம்பாடு மற்றும் எரிசக்தி திறன் மேம்பாடு செயற்திட்டம்

இச் செயற்திட்டத்திற்காக ரூபா 23,720 மில்லியன் பணத்தொகை பெறப்பட்டிருந்ததுடன் திட்டம் 2015 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் படி செயற்திட்டம் 2015 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆலோசனை பெறுவதற்கான நோக்கம் JICA நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு உடன்படுவதற்கு ஏற்பட்ட தாமதம், ஒப்பந்தகாரர்களின் முன் தகுதிக்காக (PQ) JICA அனுமதி பெறப்படுவதில் தாமதம் மற்றும் பெறுகை கோவைக்காக JICA அனுமதி பெறப்படுவதில் தாமதம் போன்ற காரணங்களினால் இச் செயற்திட்டம் 2018 சனவரியில் பூர்த்தி செய்வதற்கு இயலாது காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்தலின் முன்னேற்றம் 84 சதவீதமாக மட்டும் காணப்பட்டது.

## செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட தாமதம்

35 மெகாவாட்டுடன் புரோட்லன்டிஸ் நீர் மின்சார செயற்திட்டம் 2013 ஆகஸ்து மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்து மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 9,424 மில்லியன் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அதில் ரூபா 6,426 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 58 சதவீதமாக காணப்பட்டது. 2019 மே 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

மன்னார் மாற்று வழி வீதியில் உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணத்தில் லொட் ஏ – வவுனியா கிறிட் உப மின் நிலையத்தை மேம்படுத்தல் மற்றும் கிறிட் உப மின் நிலைய நிர்மாணத்திற்காக ரூபா 4,149 மில்லியன் பெறப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மன்னார் வலையமைப்பு உப நிலையம் நிர்மாணத்திற்கான தொகுப்பின் ஆலோசனை நோக்கம் செயற்திட்ட கால பகுதிக்குள் மாற்றப்பட்டதன் காரணத்தினால் செயற்திட்டம் நிறைவு செய்யவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

## நிலக்கரி இறக்குமதியின் போது சரியான தகவல்கள் முன்வைக்கப்படாமை

வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனத்தினால் 2016 செத்தெம்பர் 19 ஆம் திகதியில் இருந்து 2018 ஏப்ரல் 09 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நிலக்கரி இறக்குமதியின் போது சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதி வெளியிடப்படாமையினால் இலங்கை சுங்க திணைக்களத்தினால் ரூபா 205 மில்லியன் தண்டக் கொடுப்பனவு சுமத்தப்பட்டிருந்தது.

## சொத்து கையகபடுத்தப்படாமை

வரையறுக்கப்பட்ட இலங்கை எனர்ஜீஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் குழுவினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் கூட்டு முயற்சியாக தூசி சாம்பல் (Fly ash) மற்றும் கனமான சாம்பல் (Bottom Slag) பயன்படுத்தப்பட்டு சீமேந்து சம்பந்தப்பட்ட உற்பத்தியொன்றின் சந்தைப்படுத்தல் தொழில் நிலையமொன்றின் நிர்மாண பணிக்காக ரூபா 7.36 மில்லியன் முதலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கூட்டு வியாபார ஒப்பந்தம் இடைநீக்கப்பட்டுள்ளதுடன் வணிக கூட்டாளர்கள் இல்லாததன் காரணமாக சொத்து செயலற்று காணப்பட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் சொத்து இலங்கை மின்சார சபைக்கு வழங்க தீர்மாணிக்கப்பட்டு 2016 நவம்பர் 10 ஆம் திகதி பொது மேலாளருக்கு தெரிவிக்கப்பட்டு இருந்தாலும் அச் சொத்து 2019 ஜுலை 15 ஆம திகதி வரையிலும் இலங்கை மின்சார சபையினால் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## நிலக்கரி குறைவாக வழங்கல்

நிலக்கரி வழங்கிய நிறுவனத்திலிருந்து ரூபா 539.19 மில்லியன் நிலுவை மீதியொன்று ஆறு வருட காலமாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேலாண்மை கடன் முறையின் கீழ் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்படவில்லை. அது போல இலங்கை நிலக்கரி நிறுவனத்தினால் திறக்கப்பட்டிருந்த 90 நாட்களை கொண்ட செல்லுபடியாகும் காலம் கடந்த ஐந்து கடன் கடிந்தங்களுக்காக ரூபா 2.93 மில்லியன் மேலதிக தள்ளுபடி செலுத்தப்பட வேண்டி காணப்பட்டது.

## உழைக்கும் போது வரி செலுத்துதல்

2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் சம்பள திருத்தம் மூலம் உழைக்கும் போது வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் இலங்கை மின்சார சபையினால் அது செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி, 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் ரூபா 4,210 மில்லியன் மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## பதவியணியினருக்கு படிகள் கொடுப்பனவு

2007 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவையில் சுற்றறிக்கை முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் பதவியணியினருக்கு ரூபா 1,873 மில்லியன் மீளாய்வாண்டின் போது பல்வேறு படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## பெற வேண்டிய கணக்குகள்

05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 5,235 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவு மீதிகளை அறவிடுவதற்கு பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## முதலீடுகளை அறவிடுவதில் ஆபத்து

இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நிதியத்தின் மூலம் பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 404 மில்லியன் நிதிக் கருவியொன்றாக காணப்படாமையால் அதற்காக கிடைக்க வேண்டிய வட்டியான ரூபா 16 மில்லியன் மற்றும் அப் பணம் கிடைக்காமல் இருக்கக் கூடிய ஆபத்தொன்று காணப்பட்டது. இது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கலோ அல்லது ஒதுக்கீடோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## நுகர்வோரின் வைப்புகளுக்காக வட்டி செலுத்துதல்

இலங்கை மின்சார சபை பாவனையாளர்களிடமுள்ள வைப்புகளுக்காக 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 28(3) உப பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,562 மில்லியனாக இருந்தது.

## மின்சார சபை சட்டத்திற்கு முறனாக கொள்வனவு செய்தல்

இலங்கை மின்சார சபையினால் 2013 ஆம் ஆண்டு 31 ஆந் இலக்கமுடைய (திருத்திய) இலங்கை மின்சார சட்டத்தின் 4 சீ (II) உப பிரிவிற்கு முரணாக 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் 2018 திசெம்பர் மாதம் வரை காலப்பகுதிக்குள் 1,398 கி.வொட் மணித்தியாலங்கள் மின்சாரம் பெறுகை செயலானது பின்பற்றல் இல்லாது ரூபா 34,326 மில்லியன் பெறுமதியான அவசர கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## பெற்றோலிய வள அபிவிருத்தி

பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தை திருத்துதல் தாமதமடைதல்

தேசிய புகை கொள்கையினை தயாரித்தல் முடிவுற்றிருக்காமை

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வழிமுறையொன்றை கண்டறியாமை

ஹெஜின் தொடர்பான வழக்கு இன்னும் முடிவுற்றிருக்காமை

எண்ணெய் வழங்கல் குளாய் வழிகள்

# பேற்றோலிய வள அபிவிருத்தி

உள்நாட்டு பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுவின் சிறந்த உற்பத்தியுடன் இலங்கையை மின்வலுவில் தன்னிறைவு அடைந்த நாடாக மாற்றுவதே அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு 04, நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயத்திற்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள், என்பவற்றைத் தயாரித்தல் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றோலியம் சார்ந்த உற்பத்திக் பொருட்களை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், களஞ்சியப்படுத்தல் பகிர்ந்தளித்தல், சந்தைப்படுத்தல் என்பன.
- பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரித்தல் சம்பந்தமான நடவடிக்கைகள்.
- பெற்றோலியத்தை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தலும் அவை சார்ந்த நடவடிக்கைகளும்
- பெற்றோலிய உற்பத்தி மூலங்களில் வாயு உற்பத்தியும் பகிர்ந்தளித்தலும்
- எரிபொருள் வழங்குதல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

## பெற்றோலிய கூட்டுதாபன சட்டத்தை திருத்தல்

2004 ஆம் ஆண்டில் இருந்து பெற்றோலிய தொழில் தொடர்பாக ஒழுங்கு முறையான அதிகாரமொன்று காணாப்படாமையினால் பெற்றோலிய தொழில், 2002 இன் 35 ஆம் இலக்கமுடைய இலங்கை பொது பயன்பாடு ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஒழுங்கு முறை தொழில்களுக்குள் உள்ளடக்கப்படுவதற்காக 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அதன் படி தொழில் ஒழுங்கு முறைக்கு தேவையான உள்ளீடுகள் இலங்கை பொது பயன்பாடு ஆணைக் குழுவிற்கு வழங்குவதற்காக 2002 இன் 33 ஆம் இலக்கமுடைய பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 இன் 28 ஆம் இலக்கமுடைய இலங்கை பெற்றோலிய கூட்டுதாபன சட்டத்தை திருத்துவதற்கு தொடர்பான முதன்மை நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## தேசிய எரிவாயு கொள்கையைத் தயாரித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி இயற்கை எரிவாயு தொடர்பாக பெற்றோலிய வளங்களை செயன்முறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கை அபிவிருத்தி அமைச்சிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 யூன் மாதம் தயாரித்து பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட இந்த தேசிய எரிவாயுக் கொள்கை மீளாய்வாண்டு இறுதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## திருகோணமலை எண்ணை தாங்கி தொகுதிகளை அபிவிருத்தி செய்தலும் புனரமைத்தலும்

உலகமே கவனம் செலுத்தியுள்ள உலகத்தின் இரண்டாவது ஆழமான துறைமுகமாகிய திருகோணமலை துறைமுகத்திற்குள் அமைந்துள்ளதற்கிணங்க 1930 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட எண்ணை தாங்கி முறைமையில் 12,500 கனமீற்றர் கொள்ளலவுள்ள 102 தாங்கிகளும் ஏனைய அவை சார்ந்த வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்பொழுது காணப்படுகின்ற 99 ஆன மொத்த தாங்கிகளின் எண்ணிக்கையில் கீழ்ப் பகுதியிலுள்ள 14 தாங்கிகள் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் கைவிடப்பட்டுள்ள எஞ்சிய தாங்கிகளைத்

திருத்தம் செய்வதற்கான ஆரம்பத் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கை 2015 ஏப்ல் 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வராததினால் திருத்தம் செய்யும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முடியாதிருந்தது.

## நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

நிலைப்பேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் 2030 வருட "நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் அனைத்து அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மீளாய்வாண்டிற்கு தொடர்பாக, அமைச்சினால் தமது நோக்கத்திற்கு உட்பட்ட பணிகளுக்கு தொடர்பான நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அவ் இலக்கை அடைய திருப்புமுறையையும் குறிக்கோள் அடிப்படையில் அடைவதற்கு அளவிடப்படுவதற்கான தனித்துவத்தையும் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அமைச்சினால் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக அமைச்சின் ஊழிர்களை வழிநடத்தல் தொடர்பாக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு உள்ளக சுற்றறிக்கையோ வழிநடத்தலோ வெளியிடப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் அது பற்றிய ஆர்வமுடைய தரப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

அமைச்சினால் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான தரவுகளை சேர்த்தல் முறையொன்று தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் அதற்காக உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக தேவையான நிதி ஏற்பாடு அடையாளபடுத்தப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் அமைச்சில் தற்போது காணப்படும் பௌதீக வளங்கள் மற்றும் ஊழியர்களை அதற்காக ஈடுபடுத்தும் முறையொன்று மற்றும் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு தொடர்பான பணி ஒழுங்குமுறைக்காக முறைமையொன்று அடையாளப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

## உள்நாட்டு பெற்றோலிய சந்தை

2018 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு பெற்றோலிய சந்தையில் 87 சதவீதமான வழங்கல்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுள்ளது. மீளாய்வாண்டின் போது பெற்றோலியத்தை இறக்குமதி செய்வதற்காக 4,152 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பெற்றோலிய சந்தையின் மாற்றங்களின் விளைவாக 2018 ஆம் ஆண்டின் போது ஒரு பெரல் மசகு எண்ணையின் சராசரி விலை முன்னைய ஆண்டின் போது காணப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 57.79 சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 76.25 வரை 31.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி ஒரு மெட்ரிக் தொன்னிற்கான சராசரி விலை 2017 ஆம் ஆண்டின் போதான ஐக்கிய அமெரிக்க டொலர் 518.9 உடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 650.02 வரை 25.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.


## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகளும் தேறிய சொத்துக்களின் நிலைமையும்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 105,028.6 மில்லியன் வரிக்கு முன்னைய தேறிய நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் ரூபா 2,815.2 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியின் 2018 ஆண்டறிக்கையின் பிரகாரம் சர்வதேச சந்தையில் பெற்றோலிய விலை அதிகரித்திருத்தல், ஐக்கிய அமெரிக்க டொலர் முன்னிலையில் ரூபாவின் பெறுமதி குறைதல் (ரூபாவின் பெறுமதி குறைந்ததினால் ரூபா 82,717.3 மில்லியன் நட்டமாக அறிக்கையிடப்பட்டிருந்தது) மற்றும் பெற்றோலிய உற்பத்தியின் உள்நாட்டு சந்தை விலைகளில் திருத்தம் செய்தமை, 2018 மே மாதம் வரை காலதாமதமாதல் போன்ற காரணங்கள் 2018 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட நட்டத்திற்காக பிரதான காரணங்களாக காணப்பட்டன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வணிகக் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 86,652.1 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான வணிகக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 77,005.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வணிகக் கடன்பட்டோரின் அளவு 12.60 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவை முறையே அரசாங்கத் துறையின் கடன்பட்டோரில் ரூபா 77,120.1 மில்லியன் மற்றும் தனியார் துறை கடன்பட்டோரில் ரூபா 9,531.9 மில்லியன் ஆக இருந்தது. அவற்றில் இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி என்பவற்றிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவைப் பணம் முறையே ரூபா 46,813.1 மில்லியன் மற்றும் ரூபா 29,005.3 மில்லியனாக இருந்தது.

முன்னைய ஆண்டில் ரூபா 176,991.9 மில்லியன் மறை தேறிய சொத்துக்கள் நிலைமை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 281,761.5 மில்லியன் வரை அதாவது ரூபா 104,769.60 மில்லியனால் மேலும் அதிகரித்திருந்தது. பரிவர்தனை விகிதத்தில் எதிர்மறை மாறுபாடு மற்றும் வெளிநாட்டு பணமாக பெறப்பட்ட நீண்ட கால கடன் மற்றும் குறுகிய கால கடன், இவ் ஒட்டுமொத்த நட்டத்திற்கும் பிரதான காரணங்களாகும். எனவே, அரசாங்கத்தின் நிதி ஆதரவு இன்றி கூட்டுத்தாபனம் செயற்படுகின்ற ஒரு வியாபாரமாக தொடர்ச்சியாக பேணுவதற்குரிய இயலுமையானது சச்சரவுக்குரியதாக உள்ளது.

மீளாய்வாண்டின் போதும் கடந்த 5 ஆண்டுகளின் போதும் கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேறுகள் வரைபடம் 51 இல் தரப்படுகின்றது.




வரைபடம் 51 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம்/ (நட்டம்)
மூலம் - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள்

## எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜ்ஜின்)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் பல வணிகவங்கிகளுடன் கைச்சாத்திடப்பட்ட எதிர்காலத்தை பாதுகாக்கும் உடன்படிக்கைகள் சம்பந்தமாக தீர்த்துவைத்தல் நடைமுறையின் ஒரு தரப்பினராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டிருந்தது. தரப்பினர்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட தீர்த்துவைத்தல் உறுதியின் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியன் (ரூபா 7,613 மில்லியன்) ஸ்டேன்டட் சாட்டட் வங்கிக்கு (SCB) 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 27 மில்லியன் (ரூபா 3,881 மில்லியன்) டொயிஸ் வங்கிக்கு 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. கிடைத்த தகவல்களின்

பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 13,641 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல் வாங்கல் (ஹெஜ்ஜின்) சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கியினால் சட்டச் செலவாக ரூபா 941.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 370.6 மில்லியன் இலங்கை மத்திய வங்கியால் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 567 மில்லியன் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலத்துள் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 3.1 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஐ.அ.டொலர் 8.6 மில்லியன் உரிமைக்காக வர்த்தக வங்கியினால் கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2018 ஆம் ஆண்டு இறுதி வரையும் விசாரணை செய்யப்பட்டு வந்திருந்தது.

## நிதி முகாமைத்துவம்

முன்னைய ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டு இறுதியில் அமெரிக்க டொலர் மீது அடிப்படையான நீண்ட கால கடன் மற்றும் குறுகிய கால கடன் முறையாக ரூபா 1.311.6 அதாவது 493 சதவீதத்தால் மற்றும் ரூபா 115,021.1 அதாவது 64 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டது. அதன் பெறுபேறாக மீளாய்வாண்டில் வட்டி செலவு ரூபா 12,053.30 மில்லியன் மற்றும் அந்நிய செலாவணி மீது ஏற்பட்ட பரிமாற்ற நட்டம் ரூபா 82,717.3 மில்லியனாக மொத்தம் ரூபா 94, 770.60 மில்லியன் செலவு ஏற்கப்பட்டிருந்தது. அதுபோல மீளாய்வாண்டு இறுதியில் மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா 83,180.3 மில்லியனால் அதாவது 176 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதன் மூலம் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 7,732.9 மில்லியன் ஆக இருந்தது. அதன் படி நிதி கூற்றின் ஊடாக சித்தரிக்கப்படும் வகையில் கூட்டுத்தாபனத்தினால் 2018 ஆண்டில் அந்நிய செலாவணி அடிப்படையில் குறுகிய கால கடன் மற்றும் நீண்ட கால கடன் பெறப்பட்டு அவற்றை மீண்டும் குறுகிய கால முதலீடு செய்யப்பட்டு இருப்பது சித்தரிக்கப்பட்டது. அதன் படி, கூட்டுத்தாபனத்தினுள் காணப்பட்ட முதலீடு பயன்படுத்தப்பட்டு அந்நிய செலாவணியை அடிப்படையாக கொண்ட கடனை செலுத்துவதின் ஊடாக கூட்டுத்தாபனம் ஏற்கப்பட்டிருந்த உயர் கடன் வட்டி செலவு மற்றும் செலாவணி மாற்று வீதங்களின் பிரதிகூலத்தை குறைத்துக்கொள்வதில் கூட்டுத்தாபனம் தோல்வியடைந்து இருந்தது. அது கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேற்றை கடினமாக தாக்கியது.

## எண்ணையை எடுத்துச் செல்லும் குழாய்வழி வலையமைப்பு

பல தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குழாய் வழிகளினூடே கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எண்ணை சுத்திகரிப்பு நிலையம் வரை பெற்றோலிய உற்பத்திகள் எடுத்துச் செல்லப்படுவதுடன் அக்குழாய் வழிகள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டது. இதில் பல குழாய் வழிகள் திருத்தம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டதன் காரணமாக தற்பொழுது கைவிடப்பட்டிருந்தது. தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற 10 அங்குல மற்றும் 14 அங்குல எரிபொருள் குழாய்களில் பல தடவைகள் கசிவு ஏற்பட்டிருந்தல் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனவே இக்குழாய் வழிகளை புனரமைத்தல் அல்லது நவீனமயப்படுத்தல் மிகவும் அவசரமான ஒரு தேவையாக இருந்தது.

இவற்றுக்கு மத்தியில் முத்துராஜவெல எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்கும் கொலன்னாவை எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்குமிடையே எத்தகைய உள்ளக தொடர்புகளும் இல்லாதிருந்ததுடன் அத்தடையின் காரணமே அந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு தடையாக இருந்தது. மேலும் 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி “நாட்டினூடாக குழாய் செயற்திட்டத்தை” அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5 தசாப்தங்களுக்கு முன்னர் கொழும்பு துறைமுகத்திலிருந்து (தெற்கு இறங்கு துறை) கொலன்னாவை வரை எரிபொருளை எடுத்துச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட 12 அங்குல விட்டத்திலான குழாய் ஒரு தசாப்பத்திற்கு அண்மித்த காலமாக வேலை செய்யும் நிலையில் காணப்பட்டிருக்கவில்லை. இந்த எரிபொருள் குழாய் 2011 ஆம் ஆண்டின்

போது மஹவத்த பிரதேசத்தில் 300 மீற்றர் அளவானவை திருத்தம் செய்யப்பட்டிருந்தும் முழுமையாக செயற்படும் மட்டத்தில் இருக்கவில்லை. 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி CPSTL நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பத்திரம் 09/137 இல் குழாய் வழிகளை திருத்தம் செய்வதற்காக ரூபா 260 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 120 மில்லியன் செலவில் 2.171 மீற்றர் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 153 மில்லியன் செலவு செய்து 2,573 மீற்றர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்படும் நிலைக்கு எரிபொருள் குழாய்வழிகளைக் கொண்டுவருவதற்காக திருத்தம் செய்ய எஞ்சியுள்ள தூரத்தின் அளவு 1000 மீற்றர்களை விட குறைவாக இருந்தும் நாட்டில் எரிபொருள் வழங்கும் செயற்பாடு தடைப்படும் ஆபத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்காக குழாய் வழிகளைத் திருத்தம் செய்யும் செயன் முறையை பூர்த்தி செய்தவதற்காக துரித நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## புதிய எரிபொருள் களஞ்சியத்தை வட மாகாணத்தில் நிர்மாணித்தல்

யுத்த சூழ்நிலையின் பின்னர் விரைவாக அபிவிருத்தி அடைந்துள்ள வடக்கு மக்களின் மற்றும் பாதுகாப்பு பிரிவின் பெற்றோலியத் தேவையை இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சியப் பிரிவு கம்பனியால் பேணப்பட்டு வந்த எரிபொருள் களஞ்சியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்ததுடன் அக்களஞ்சியம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் அமைக்கப்பட்டிருந்தது. சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் இந்த எரிபொருள் களஞ்சியத்தை அந்த இடத்திலிருந்த அகற்றுமாறு 2011 ஆம் ஆண்டின் போது இலங்கை பெற்றோலியக் களஞ்சியப் பிரிவுக் கம்பனிக்கு தெரியப்படுத்தியிருந்தது.

தற்பொழுது எரிபொருள் களஞ்சியம் காணப்படும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியையே தேவையான திருத்தங்களையும் விஸ்தரித்தல்களையும் மேற்கொண்டு தொடர்ச்சியாக எரிபொருள் களஞ்சியத்தை பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக காணியின் உரிமையை தீர்த்து முறையான குத்தகை உடன்படிக்கையின் கீழ் களஞ்சிய சாலைபராமரிக்கப்பட்டு வருவும், ஏதேனும் வாடகை செலுத்த வேண்டுமாக இருந்தால்அது சீமெந்து கம்பனிக்கு செலுத்துவதற்கு தீர்மாணிக்கப்பாட்டு இருப்பினும் 2018 மே 30 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நிறுவனங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் மீதிகள் மற்றும் உடன்படிக்கை

அரச கூட்டுத்தாபனத்தினால் ஏதேனும் துல்லியமான நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த துணை நிறுவனங்களின் பணிகளை முறையாக மேற்பார்வை செய்தல் மற்றும் வழிநடத்தல் மிக முக்கியமான நடவடிக்கையாக காணப்பட்டது. அப்படியிருந்தும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அதின் நிர்வாக நிறுவனமான இலங்கை பெற்றோலிய சேமிப்பு நிறுவனத்தின் பணிகள் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் தாய்க் கம்பனியின் பணிப்பாளர்கள் சபையால் அரையாண்டிற்கு ஒரு தடவையாவது துணைக்கம்பனிகளின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அந் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் தொடர்பாக முறையான தகவல் கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை. உதாரணமாக, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான வணிக நடவடிக்கையாகிய கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கும் வர்த்தகம் அவ் உப நிறுவன பணிப்பாளர்கள் சபை தீர்மானத்திற்கேற்ப செயற்படுத்தப்பட்டிருப்பினும் அது தொடர்பாக கூட்டுத்தாபனம் எந்தவொரு தகவல் அறிதலும் செய்யப்பட்டிருக்கவில்லை. இடை நிறுவன கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முறையான தொடர்பொன்று இரண்டு நிறுவனங்கள் இடையில் காணப்படாததன் காரணமாக நீண்ட காலமாக இரு தரப்பினரதும் நடைமுறை கணக்குகளுக்கிடையில் கருதப்பட வேண்டிய வேறுபாடுகள் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 2,475.80 மில்லியன் தொகை வேறுபாடு ஏற்பட்டு இருந்தது.

மேலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு நிறுவனங்களுக்கிடையில் பொது பயன்பாடு வசதிகளுக்காக பங்குதாரர்களின் உடன்படிக்கை மற்றும் பங்குகள் கொள்வனவு உடன்படிக்கைகளில் 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய காலம் காலாவதியாகி இருப்பினும் எல்லா தரப்பினரதும் உடன்படுதலுடன் அவ் உடன்படிக்கை இற்றைபடுத்தப்பட்டு பேனுவதற்கான தேவையான முறைமைகள் 2019 மே 30 ஆம் திகதி வரையிலும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கிராமிய பொருளாதார ஒழுவல்கள்

பாற் பசுக்களை இறக்குமதி செய்தல்

நாட்டிற்கு பாதுகாப்பான முறையில் கால்நடைகளை இறக்குமதி செய்தல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்படாமை

விலங்கு உணவுகளின் கிரயம் அதிகரித்தல்

அம்பேவல தொழிற்சாலையினை புதுப்பித்தல்

# கிராமியப் பொருளாதார அலுவல்கள்

இலங்கையின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுகின்ற கிராமிய மக்களின் பொருளாதார தரத்தை உயர்த்துவதற்காக 2018 சனவரி மாதத்திலிருந்து 2018 மே மாதம் 11 ஆந் திகதி வரை கிராமிய பொருளாதார தொடர்பான அமைச்சாகவும், 2018 மே மாதம் 12 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வரை கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி மற்றும் கிராதிய பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சு (கிராதிய பொருளாதாரம் தொடர்பான பிரிவு) ஆகவும் 2018 திசெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள் கால்நடை வள அபிவிருத்தி நீர்பாசன மற்றும் கடற்றொழில் நீர் வள அபிவிருத்தி அமைச்சு (பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு) ஆகவும் காணப்பட்டதுடன் அதன் கீழ் திணைக்களம் ஒன்றும் மற்றும் 05 நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் 13 விசேட பொருளாதார நிலையங்களால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக அவ்விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் செயற்திட்ட வழங்கல் மற்றும் அமுல்படுத்தல் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக நிதியுதவி வழங்கல்
- புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கால்நடை வள சம்பந்தமான ஆராய்ச்சி பிரிவை விரிவுபடுத்தல் மற்றும் அதன் பெறுபேறின் அடிப்படையில் உற்பத்தி பிரிவின் தரம் மற்றும் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளை மேற்கொள்வது பிரதான பணியாக காணப்பட்டது.

அமைச்சு மற்றும் அதற்குக் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களால் மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

## பாற்பசுக்களை இறக்குமதி செய்தல்

இலங்கை அரசு மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து உடன் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் கீழ் 4,500, பாற்பசுக்களை இறக்குமதி செய்திருந்தது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட 4,500 பாற்பசுக்களை கால்நடை வள சபைக்கு மீள்கடன் ஒப்பந்தத்தின் கீழ் கையளித்திருந்தது. மீள்கடன் ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு வெளிநாட்டு கம்பனிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி கால்நடை வள சபையினால் திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது கால்நடை வள சபையினால் செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் நிலுவை வட்டி ரூபா 5,374.17 மில்லியனாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலஎல்லைக்குள் கால்நடை வ சபையினால் ரூபா 28.26 மில்லியன் வட்டித் தொகை மாத்திரம் திறைசேரிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளுக்காக பெருந்தொகைப் பணத்தை செலவிடுவதற்கு நேர்ந்ததுடன் இந்த தவணைப்பணத்தை சபையினால் செலுத்துவது வசதியீனமாக இருந்ததாக 2017 திசெம்பர் 22 ஆம் திகதி சபையின் தலைவரினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை வழங்கியுள்ள தகவல்களின் படி பண்ணைகளுக்கு கொண்டுவரப்பட்ட 2,143 கால்நடைகளிலிருந்து 2018 ஆம் ஆண்டாகும் போது அதாவது 5 வருடங்கள் நிறைவடையும் போது கால்நடைகளுள் 41 சதவீதம் மாத்திரம் மீதமாக காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட 2,489 கால்நடைகளுக்கு 2018 ஆம் வருடமாகும் போது அதாவது 3 வருடங்களுக்குப் பின் 1796 கால்நடைகள்

அதாவது 72 சதவீத அளவு மீதமாக காணப்பட்டது. முதலாம் கட்டத்தின் கீழ் இந்த கால்நடைகள் கன்று ஈனுதல் சாதாரணமாக 7 வருடங்களுக்குள் 45 சதவீதமாகவும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 4 வருடங்களுக்குள் 52.4 சதவீதமாக காணப்பட்டதுடன் இரண்டாவது பரம்பரை கன்று ஈனுவது முதலாவது கட்டத்தின் கீழ் 21.4 சதவீதமாகவும் இரண்டாவது கட்டத்தின் கீழ் 7.17 சதவீதமாகவும் மிகவும் குறைந்த தொகையையே பெற்றிருந்தது.

## 20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்தல்

கிராமிய பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சினால் 20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்தல் முன்மொழிவு சம்பந்தமாக முறையாக ஆய்வு செய்து அல்லது சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் மற்றும் 2007 ஆம் வருடத்தில் டென்டர் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கே பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றாமல் அமைச்சு மற்றும் தனியார் கம்பனிக்குமிடையில் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி ஐ.அ.டொலர் 73.95 மில்லியனுக்கான ஒப்பந்தத்திற்கு முனைந்திருந்தனர்.

செயற்திட்டம் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தத்தின் 3.01 மற்றும் 3.02 ஆகிய பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொண்டு 20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்வதற்கும் அதில் 5000 த்தை முதற்கட்டத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கும் அதன் வெற்றியின் அடிப்படையில் மீதமான 15,000 ஐ இரண்டாவது கட்டத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு 2016 நவம்பர் மாதத்தில் திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் இணக்கம் காணப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முறைமையின் அனுமதிப் பெற்றுக்கொள்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்து 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிப்பதற்கு இதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பாற்பசுக்கள் காணப்படுகின்ற கால்நடை வள சபையின் பண்ணைகள் சம்பந்தமாக விசேட நிபுணத்துவமுள்ள நபர்களின் மூலமாக முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு சரியான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம மாதத்திலே மற்றும் திசெம்பர் மாதத்திலே முறையே பாற்பசுக்கள் 1994 மற்றும் பாற்பசுக்கள் 3024 ஆக 5011 பாற்பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட அந்த பசுக்களுக்காக தடுப்பூசி, பரிசீலனைக்கட்டணம், மற்றும் சுங்கத்தீர்வை உட்பட 5000 பசுக்களுக்காக ஐ.அ.டொலர் 16.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த பசுக்களுக்காக தொழில்நுட்ப முகாமைத்துவ மற்றும் கொள்திறன் அபிவிருத்திக்காக ஐ.அ.டொலர் 868,518.52 அதாவது ரூபா 135.01 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருந்தாலும் இந்த கால்நடைகளின் செயலாற்றுகை மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டதாக பின்வரும் விடயங்களின்படி உறுதிப்படுத்தப்பட்டது.

- மேற்கூறப்பட்ட பாற்பசுக்களுக்கிடையில் இரண்டாவது முறை இறக்குமதி செய்யப்பட்டதில் 858 இல் 803 முதல்முறையாக கன்று ஈன்றுள்ளதுடன் அதில் ஆண்மாடு 242 அதாவது 53 சதவீதமாகும். மேலும் ஈன்றெடுக்கப்பட்ட 803 கன்றுகளில் 361 கன்றுகள் அதாவது 45 சதவீதம் இறந்து போயுள்ளது. 2019 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதியாகும் போது மீதமாகவுள்ள இறக்குமதி செய்யப்பட்ட தாய் மாடுகளின் எண்ணிக்கை 533 ஆக இருந்ததுடன் அதில் கருவறுத்துள்ள தாய் பசுக்களின் எண்ணிக்கை 210 மாத்திரம் அதாவது 39மு மட்டும் என்பதுடன் இரண்டாவது முறை ஈன்றெடுத்த கன்றுகளின் எண்ணிக்கை 116 மாத்திரமே என்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி இறக்குமதி செய்யப்பட்ட 858 பசுக்களில் இரண்டாவது முறை கன்று ஈன்றுள்ளது 13 சதவீதமாத்திரமேயாகும்.
- 2017 மே 14 ஆந் திகதி மற்றும் 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளில் தெரிவு செய்யப்பட்ட 902 கால்நடைகள் தெரிவின் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதியில் 656 தாய் கால்நடைகள் மாத்திரம் உயிருடன் இருப்பதுடன் கொள்வனவு செய்யப்பட்ட 902 கால்நடைகளில்

கன்று ஈன்று தற்போது பண்ணைகளில் 190 கால்நடைகள் மாத்திரம் உயிருடன் இருப்பதாக உறுதியாகியுள்ளது.

- இரண்டாவது சந்தர்ப்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 3034 கால்நடைகளுள் தெரிவொன்றின் அடிப்படையில் 858 கால்நடைகளை தெரிவு செய்து 858 கால்நடைகளுள் 12 விவசாயிகள் மாதாந்தம் ரூபா 25,240 தொடக்கம் ரூபா 5,200,000 வரையான வீச்சு அளவில் நட்டம் அடைவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.
- பாற்பசுக்கள் தொடர்பாக செயலாற்று மதிப்பீட்டிற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் 2018 மார்ச் 20 ஆந் திகதி 20,000 பாற்பசுக்கள் செயற்திட்டத்தின் முதற்கட்டமாக இந்த நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட பாற்பசுக்களின் செயலாற்றுகை வெற்றியளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. முதற்கட்டம் வெற்றியளித்துள்ளதாக குறிப்பிட்டு மீதமாகவுள்ள 15,000 பசுக்களையும் இறக்குமதி செய்தல் பொருத்தமென குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பாற்பசுக்களை இறக்குமதி செய்வதற்காக 2018 வருடாந்த பாதீட்டுப் பதிவேட்டில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018, 2019 மற்றும் 2020 ஆகிய வருடங்களிலே முறையே 2,500, 7,500 மற்றும் 5,000 ஆக பாற்பசுக்கள் 15,000 ஐ இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்காக 2018 மே 08 ஆந் திகதி முற்பணமாக முறையே ரூபா 291.61 மில்லியன் ரூபா 874.83 மில்லியன் மற்றும் ரூபா 583.22 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 1,749.67 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக வட்டி மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று நட்டமும் அந்த கால்நடைகள் நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு முன்னரே இலங்கை அரசினால் செலவிட வேண்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் தோல்வியின் காரணமாக 2018 ஆம் வருடத்தில் இறக்குமதிக்கு இருந்த கால்நடைகள் 2500 உம் 2019 செப்தெம்பர் மாதமாகியும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்படி செலுத்தப்பட்டுள்ள முற்பணம் பயனுள்ளதாக அமைந்திருக்கவில்லை.

## நாட்டுக்கு பாதுகாப்பு அற்ற வகையில் கால்நடைகளை இறக்குமதி செய்தல்

1992 ஆம் வருட 59 ஆம் இலக்கமுடைய கால்நடைகள் நோய் பிணிச்சட்டத்தின் 28 நிபந்தனைக்கு அமைய அனைத்து கால்நடைகளும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டி இருந்தது. இருந்தாலும் செயற்திட்டத்தின் முதலாவது கட்டிடத்தின் கீழ் இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பாற்பசுக்கள் தொடர்பாக தெரிவுகளை மாத்திரம் பரிசீலனை செய்து பிரதான கால்நடைகள் நீரோகி உத்தியோகத்தர் மற்றும் கால்நடைகள் வைத்திய ஆய்வு பணிப்பாளரினால் நோயற்ற அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த கால்நடைகளின் தெரிவுகளை பரிசீலனை செய்து கால்நடைகளிடமுள்ள நோய் காரணிகள் உள்நாட்டு பசுக்களுக்கு மற்றும் மனிதர்களுக்கும் பரவக்கூடிய அபாயமொன்று காணப்படுவதாக கால்நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கிராமிய பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சின் செயலாளருக்கு 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த அறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி எடுக்க வேண்டிய படிமுறைகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் சில கால்நடைகளை அழித்துவிடச் செய்யும் அபாயமும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருந்தாலும், இரண்டாவது கட்டிடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளும் மனித நடமாற்றமற்ற பிரதேசத்திற்குள் கால்நடை வைத்திய பரிசீலனையின் கீழ் 30 நாட்கள் வைத்திருத்தல் இடம்பெறாமல் நேரடியாக பண்ணைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன்படி ஜின்டெக் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பாற்பசுக்களின் மரண விசாரணையின் பிரகாரம் BVD வைரஸ் உடலினுள் காணப்படுவதாகவும் இறக்குமதியின் போது நோயற்ற சுற்றிக்

காட்டப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையாமை

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கா பால்மா இறக்குமதியை குறைத்துக் கொள்வதற்கு உடன்பால் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் 2012 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரையான கால எல்லைக்குள் பாற்பசுக்கள் இறக்குமதி செயற்திட்டத்திற்காக ரூபா 6,435 மில்லியன் வெளிநாட்டுக கடன் பெற்று 9,500 பாற்பசுக்களை இறக்குமதி செய்திருந்தது. அந்த இறக்குமதி செய்யப்பட்ட பாற்பசுக்கள் கால்நடை வள சபை மற்றும் அமைச்சின் கீழ் தனியார் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2011 ஆம் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் அளவு 84.02 மெட்ரிக் தொன்னாக செய்யப்பட்ட பால்மாவின் அளவு 84.02 மெட்ரிக் தொன்னாக இருந்தாலும் அது 2018 ஆம் வருடத்திலே 99.03 வரையிலும் அதிகரித்திருந்தது. அதன்படி பால்மா இறக்குமதி திட்டமிட்டதன் பிரகாரம், குறைவு ஏற்பட்டிருக்கவில்லை என்பதுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்திருக்கவில்லை.

கால்நடை உணவுக்கான கிரயம் அதிகமாக காணப்படல் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை, வரையறுக்கப்பட்ட மஹாவெலி கால்நடை வியாபார கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனி ஆகிய கம்பனிகள் முறையானதெனவும் கால்நடை உற்பத்திகள் மற்றும் கால்நடை உற்பத்திகளை விற்பனை செய்தல் பிரதான செயற்பாட்டு நடைமுறைகளாக காணப்பட்டது. கால்நடைகளின் உணவுகளின் செலவு அதிகமாக காணப்படுவதகால் இந்த நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டத்தை அடைத்திருந்தது. கால்நடை உற்பத்திகள் பண்ணைகளில் விளைவற்று காணப்படுகின்ற பெரும்பகுதி நிலப்பகுதியிலே சிறு பயிர்ச்செய்கையாக சோகம், சோளம் உற்பத்தி செய்தல் மற்றும் விளைவற்று காணப்படுகின்ற உணவு உற்பத்தி இயந்திரத்தை பாவனைக்குட்படுத்தி உணவு உற்பத்தி செய்வதன் மூலமாக கால்நடைகள் உணவுக்கான செலவை குறைத்துக்கொள்வதற்கு அவதானத்தை செலுத்தியிருக்கவில்லை.
மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மூலமாக திறந்த போட்டித்தன்மையிலான முறையிலிருந்து விலகி மட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் உணவுகளை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது.

- தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் பசுக்களை வளர்க்கும் பண்ணைகளுக்கிடையில் இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளை வளர்க்கும் 04 பண்ணைகளில் தெரிவாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் வருடத்திலே கால்நடை உணவு 14,385.21 தொன் 3 நிறுவனங்களினாலும் கொள்வனவு செய்யப்பட்டு அதற்காக ரூபா 735.99 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவு ஒவ்வொரு பண்ணையின் பால் வருமானத்தின் 63 சதவீதத்திலிருந்து 89 சதவீதம் வரையான உயர் சதவீதமாக காணப்பட்டது. அந்த பண்ணைகள் 4 இன் 2018 ஆம் வருடத்தின் வருடாந்த நட்டத்தின் மொத்தம் ரூபா 411.52 மில்லியனாக காணப்பட்டது. இருப்பினும் தேசிய கால்நடை வள சபையின் 4 பண்ணைகளிலும் ஒரு மணித்தியாலயத்திற்கான மொத்த பசுக்களின் உணவு 3.75 தொன் அதாவது வருடத்திற்கான மொத்தம் 10,950 தொன் 3.75 ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம்* 356 நாட்கள்) உற்பத்தி செய்ய முடியுமான 4 இயந்திரங்கள் செயலற்று காணப்பட்டது.
- கோழி செயற்திட்டம் நடைமுறை தேசிய கால்நடைகளை வள அபிவிருத்தி சபையின் பண்ணைகள் 03 உம் வரையறுக்கப்பட்ட மஹவெலி

கால்நடை வியாபார கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனி ஆகிய நிறுவனங்களுக்குரிய பண்ணைகள் 02 க்கும் உரிய 2018 ஆம் ஆண்டில் கோழி உணவு 4,553.33 தொன் கொள்வனவு செய்து அதற்காக ரூபா 225.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த கிரயம் கோழி வருமானத்தில் கோழி கட்டுப்பாட்டு அபிவிருத்திக் கம்பனிக்கு 54 சதவீதமாகவும் கால்நடை வள அபிவிருத்தி சபையின் 03 பண்ணைகளுக்கு 36 சதவீதமாக காணப்பட்டது. இதன் காரணமாக அந்த 5 பண்ணைகளில் 2 பண்ணைகள் 2018 ஆம் ஆண்டில் நட்டமடைந்திருந்தது. இருப்பினும், மேல்குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மூன்றுக்கும் உரிய 5 பண்ணைகளின் மொத்தம் ஒரு மணித்தியாலத்திற்கு கோழி உணவு 9 தொன் அதாவது வருடத்திற்கு மொத்தம் 26,280 தொன் (9* ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் * 365 நாட்கள்) உற்பத்தி செய்ய முடியுமான அரைக்கும் மற்றும் கலக்கும் இயந்திரத் தொகுதிகள் 06 உம் செயலற்று காணப்பட்டது.

## அம்பேவல தொழிற்சாலை மண்டபத்தை நவீனமயப்படுத்துதல்

மில்கோ நிறுவனத்தினால் அம்பேவெல ஹைலன்ட் பால்மா தொழிற்சாலை மண்டபத்தை நவீனமயப்படுத்தலுக்காக யூரோ 26.69 மில்லியன் அதாவது ரூபா 4,625.58 மில்லியன் செலவிட்டு புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டு 2017 ஆகஸ்ட் மாதத்திலே உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலை மண்டப முன்னேற்ற அறிக்கையின்படி 2017 ஆம் ஆண்டிலே பால்மா உற்பத்தி 7,087 தொனை ஆக காணப்பட்டாலும், அது 2018 ஆம் ஆண்டிலே 6,719 தொன் வரை குறைந்திருந்தது. இதன் பிரகாரம் புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டதனால் எதிர்பார்த்த உற்பத்திகளின் அதிகரிப்பு மீளாய்வாண்டிலே பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது.

மீளாய்வாண்டிலே நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 13 செய்து கொண்டிருக்கின்ற செயற்திட்டங்களில் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திலும் குறைந்த தொனையயே கொண்டிருந்ததுடன் 33 செயற்திட்டங்களின் நிதி செயலாற்றல் 50 சதவீதத்திலும் குறைந்த தொகையிலேயே காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் வேலைகளை நிறைவு செய்திருக்க வேண்டிய 3 செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 62 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. ஒப்பந்தக்காரர்களின் நிதி இயலுமையை மதிப்பீடு செய்யாமல் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படுதல், ஒப்பந்தக்காரர்களினால் குறைந்த அளவிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தல், திட்டமிடல் ஆலோசகர்களினால் தயாரிக்கப்பட்ட திட்டங்களில் காணப்பட்ட தவறுகள், செயற்திட்டத்தின் மூலம் ஆலோசனை வழங்குதலில் ஏற்படும் தாமதம் ஆகிய குறைபாடுகள் ஒப்பந்த வேலைகளின் மோசமான செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது.

மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 6,100 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,333 மில்லியனாக உள்ள 26 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுமதி பாதீட்டு மதிப்பீட்டு பெறுமதியில் 22 சதவீதமாக காணப்பட்டது.

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்ட 03 வேலைத்திட்டங்களுக்குரிய ஆலோசனை சேவைக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 144 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், வருடம் முடிவடையும் போது அந்த ஆலோசனை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தோடு மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த யாழ்ப்பாண குடாநாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டம் (Contract Facilitate the proposed developments Intervention in Jaffna Peninsula) காக ரூபா 5.8 மில்லியன் நிதி ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தாலும், வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மேல்மாகாண வலயத்தின் சமுத்திர நகர அபிவிருத்தி செயற்திட்டம்

நீர்கொழும்பு கரையோரத்திலிருந்து களுத்துறை கெலிடோ கரையோரம் வரையான கடற்கரையோரத்தை 03 பகுதிகளாக வேறுபடுத்தி கொள்ளுப்பிட்டியிலிருந்து தெஹிவளை வரை வினோதமாக களிப்பதற்கான கடற்கரையோரமாகவும், கொழும்பு துறைமுகத்தை அண்மித்த செயற்பாடுகள் அபிவிருத்திக்காக புளுமென்டல் கிம்புலாஎல பிரதேசமும், வெளிசர கடற்படை மத்திய நிலையம் அமைந்துள்ள பிரதேசம் விநியோக மற்றும் சேவை வலையமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் விசேட செயற்திட்டமொன்று 2017 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிலே மற்றும் 2018 ஆம் ஆண்டிலே ரூபா 47.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சாத்தியவள ஆய்வொன்று அல்லது செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நிகழக்கூடிய சுற்றாடலுக்கான பாதிப்புக்களை மதிப்பீடு செய்யும் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## நகர புனர்வாழ்வு செயற்திட்டம்

நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு இறுதியாகும் போது 16 வீட்டு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 8,113 வீடுகள் முழுமையாக முடிக்கப்பட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை குடியமர்த்தப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிலே நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 02 வீட்டு செயற்திட்டங்களிலும் மற்றும் புதிதாக 12 வீட்டு செயற்திட்டங்களின் மூலமும் 7,395 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் சேரி குடியிருப்புக்களில் வாழ்பவர்களுக்காக 68,000 வீடுகளை நிர்மாணித்து குடியமர்த்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

## நகர அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல்

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கமுடைய நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் நாட்டில் நகர அபிவிருத்திக்கு செய்யப்பட வேண்டிய வளங்கள் இனங்காணப்படுதல் மற்றும் அந்த வலயங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் என்பன இடம்பெறவேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியில் 243 நகர அபிவிருத்தி வலயங்கள் இனங்காணப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டின் இறுதியாகும் போது அதில் அபிவிருத்தித் திட்டங்கள் நூற்றை விட குறைந்த வலயங்களுக்காக மாத்திரம் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

## நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல்

நீர்க் குளாய்கள் மற்றும் மலசழ குளாய் வசதிகளை பாதுகாத்தல்

செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதில் தாமதம்

அம்பத்தலை எரிசக்தி சேமிப்புச் செயற்திட்டத்தை இடைநிறுத்தியிருந்தமை

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி ரீர் வழங்கல் செயற்திட்டம்

கொழும்பு மாவட்ட கிழக்கு நீர் வழங்கல் செயற்திட்டம்

கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம்

# நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல்

மிகச்சிறந்த வாழ்க்கைக்கு திட்டமிடப்பட்ட நகரத்தையும், சுத்தமான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு வசதிகளையும் செய்து கொடுப்பது நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சினதும் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களினதும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளாக காணப்பட்டன. இப்பெறுபேற்றினை அடைந்துகொள்வதற்கு அமைச்சும் அதன் கீழ் உள்ள தேசிய நீர் வழங்கல் திணைக்களமும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையும் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் விடயத்துடன் தொடர்பான கொள்கை, நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய திணைக்களங்கள், சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்பினுள் உட்படுத்தப்பட்டுள்ளதும் அதனோடு தொடர்பான விடயங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- விஷேட நகர திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்.
- நகர அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேசிய பௌதீக திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சகல கட்டுமானப் பணிகளையும் வழிநடாத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல்
- சகல பிரஜைகளுக்கும் சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நீர் வழங்கல் சேவை, கழிப்பறை முறைகள் மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பில் பரிசோதனை செய்தல், திட்டமிடுதல், திட்டங்களைத் தயாரித்தல், கட்டுமானப் பணிகளை வழிநடாத்துதல் மற்றும் பராமரித்தல்.
- பொதுமக்களுக்கான நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புத் திட்டங்களை செயற்திறன் மிக்கதாகவும் முறைப்படுத்தப்பட்ட அமைப்பிலும் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.


அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களும் இப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் நிரூபணமான கணக்காய்வு அதவானங்களின் சுருக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

## குழாய் நீர் மற்றும் குழாய் கழிப்பறை வசதிகளை உள்ளடக்குதல்


நீர் வழங்கலையும் சுத்திகரிப்பையும் நோக்காகக் கொண்டு நீர் வடிகாலமைப்புச் சபையினால் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் பாரியளவிலான 26 நீர் வழங்கல் வெளிநாட்டு உதவித் திட்டங்களையும், பாரியளவிலான 07 வடிகால் அமைப்பு வெளிநாட்டு உதவித் திட்டங்களையும், 14 தேசிய அடிப்படை நீர் வழங்கல் திட்டங்களையும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 13 திட்டங்களையும், 09 நீர் பகுதி சார்ந்த மக்பள் வசதிகளுக்கான உத்தேச திட்டங்களையும் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் செயற்படுத்தப்பட்டன.

நீர் வடிகாலமைப்புச் சபையின் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியின் போது குழாய் நீர் மற்றும் குழாய் கழிப்பறை வசதிகளை உள்ளடக்கப்பட்டிருப்பது முறையே நூற்றுக்கு 54.9 வீதம் மற்றும் நூற்றுக்கு 2.7 வீதத்திற்கு நெருங்குவதை எதிர்பார்த்திருந்த போதும், மதிப்பாய்வு செய்யப்பட்ட வருட இறுதியாகும் போது முறையே நூற்றுக்கு 50.5 வீதத்தையும் நூற்றுக்கு 2.06 வீதத்தையும் மாத்திரமே அடைந்து கொள்ள முடிந்தது. தவிரவும், மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட புதிய நீர்த் இணைப்புகளின் எண்ணிக்கை 109,462 ஆக காணப்பட்டதுடன், அதனை கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட 126,701 நீர்த் இணைப்புகளுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 14 வீதமாக குறைந்துள்ளது. அதன்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட வருட இறுதிவரை வழங்கப்பட்டிருந்த மொத்த நீர்த் இணைப்புகளின் எண்ணிக்கை 2,328,634 ஆக காணப்பட்டது. கடந்த 5 வருட காலத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் நீர் வழங்கல்

மேற்கொண்டமை தொடர்பான விபரம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.





உரு 52 – மொத்த நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை
மூலம்: செயலாற்றல் அறிக்கை – 2018




உரு 52 – நீர் இணைப்புக்களின் அதிகரிப்பு
மூலம்: செயலாற்றல் அறிக்கை - 2018

## நீர் உற்பத்தியும் நுகர்வும்

தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையால் சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீர் உற்பத்தி, நுகர்வு மற்றும் வருமானம் கிடைக்காத நீர் இணைப்புகள் கடந்த 05 வருட காலத்திற்குள் பெறப்பட்ட தரவுகள் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




உரு 54 – சுத்திகரித்த நீர் உற்பத்தி, நுகர்வு, வருமானமீட்டாத நீர்
மூலம்: செயலாற்றல் அறிக்கை - 2018

கடந்த வருடத்தில் நூற்றுக்கு 25.24 வீதமாக காணப்பட்ட நாடு முழுவதிலும் மொத்த வருமானம் பெறப்படாத நீரின் சதவீதம் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நூற்றுக்கு 24.93 வரையில் நூற்றுக்கு 1.05 இனால் குறைத்துக்கொள்ள சபைக்கு முடிந்துள்ளது. கடந்த வருடத்தில் நூற்றுக்கு 43.14 வீதமாக காணப்பட்ட கொழும்பு நகரத்தின் வருமானம் பெறப்படாத நீர் சதவீதம் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நூற்றுக்கு 41.65 என்கின்ற கூடுதல் அளவைக் கொண்டிருந்தது. கொழும்பு நகரத்தில் வருமானம் பெறப்படாத நீரை குறைக்கும் நோக்கில் கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணப்படும் 2

கருத்திட்டங்களின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், அக் கருத்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் நிறைவு செய்ய முடியாமல் போயுள்ளமையும் இதற்கு மிக முக்கிய காரணிகளாக அமைந்தன.

இவை தவிரவும், தெற்கு, ஊவா மற்றும் சப்ரகமுவ போன்ற பிரதேசங்களில் வருமானம் கிடைக்காத நீரின் சதவீதம் மதிப்பாய்வு வருடத்தில் நூற்றுக்கு 25 வீதத்தையும் விட எகிறிக் காணப்பட்டது. மொத்த வருமானத்தை பெற்றிராத நீரின் சதவீதம் நூற்றுக்கு 1 இனால் குறைத்துக்கொள்வதற்கு சபைக்கு முடிந்ததென்றால் மதிப்பாய்வு வருடத்தில் ரூ. 270 மில்லியன் செலவினை குறைத்துக்கொள்ளவிருந்தது.

## செயற்திட்டங்களை நிறைவு செய்வதில் உள்ள தாமதம்.

மதிப்பாய்வு வருடத்தில் செயற்படுத்தப்பட்ட பாரியளவிலான 07 வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களின் நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயலாற்றுகை, காணிகளை விடுவித்துக் கொள்வதில் காணப்பட்ட தாமதம், சுற்றாடல் மற்றும் மீள் குடியேற்றுவதில் காணப்பட்ட சிக்கல், ஒப்பந்தத்தை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் குறைந்த தரத்திலான குழாய்களை வழங்கியமை போன்ற காரணங்களினால் அச் செயற்திட்டங்கள் 349 நாட்களிலிருந்து 2009 நாட்கள் வரையில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

## அம்பதலை எரிசக்தி சேமிப்புத் திட்டம்

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது அம்பதலை எரிசக்தி சேமிப்புத் கருத்திட்டம் 63 மாதங்களில் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டியிருந்தும் அக்காலப்பகுதி 53 மாதங்கள் அதாவது நூற்றுக்கு 83 வீதமான காலம் கடந்திருந்த நிலையில் கருத்திட்டத்தின் முழு மொத்த பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகை முறையே நூற்றுக்கு 10.84 ஆகவும் நூற்றுக்கு 11.67 ஆகவும் காணப்படுகிறது. அத்தோடு, கடன் தொகையின் பயன்பாடு நூற்றுக்கு 15.5 வீதம் என்கின்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், செயற்படுத்த வேண்டியிருந்த கருத்திட்டத்தின் 05 முக்கியமான பகுதிகளுள் 03 பகுதிகளில் எந்த விதமான முன்னேற்றமும் எய்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2019 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு 1.5 ஜ.அ.டொ. மில்லியன்களுக்குச் சமமான ரூ. 227.89 மில்லியன்களை (கடன் பெறுமதியில் நூற்றுக்கு 2.1 ஐ) அரசாங்கத்திற்கு இணைப்புக் கட்டணமாகச் செலுத்த நேரிட்டுள்ளது.

அம்பதலை நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எலீ ஹவுஸ் களஞ்சியம் வரையிலான 9 கிலோ மீற்றர் தூரத்திற்கு 1,200 மி.மி அளவிலான குழாய்களை பொருத்துதல் உள்ளிட்ட குழாய் நீர் மற்றும் பாகங்களை வழங்கும் ஒப்பந்த திட்டம் (ICB 04) 2016 ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 மே மாதம் 04ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றுகையின் காரணமாக 9000 மீற்றரால் குழாய்களை பொருத்தும் அளவு 1316 மீற்றரால் (நூற்றுக்கு 14.62) வீதத்தால் குறைவான அளவினைப் பெற்றிருந்தது.

பிரான்ஸ் நாட்டு முகவர் நிறுவனத்தினால் புதிய வங்கிக் கணக்கொன்று திறக்கப்படும் வரை 06 மாத காலம் பணம் செலுத்தப்படுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரினால் 2018 ஜூலை மாதம் முதல் 2019 ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையில் கருத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

## யாழ். கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம்

யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் ஒரு பகுதியான இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீரைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் எதிர்ப்பு காரணமாக அத்திட்டத்திற்காக வேண்டி வழங்கப்பட்டிருந்த 5,363 மில்லியன் ரூபா நிதி தள்ளுபடி செய்யப்பட்டது. அப்போது அச்செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் நூற்றுக்கு 2.3 வீதம் என்கின்ற ரூ. 124.64 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. கடன் தொகை இடைநிறுத்தப்பட்ட காரணத்தால் கடன் முகவர் நிறுவனத்திற்கு 11.95 மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையும், 15.17 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் தொகையும், 57.83

மில்லியன் ரூபா பிணைப்பு கட்டணமும் உள்ளடங்கலாக மொத்தமாக 84.95 மில்லியன் ரூபா மேலதிக செலவொன்றை அடைப்பதற்கு அரசுக்கு நேர்ந்துள்ளது.

குறிப்பிட்ட கருத்திட்டத்தின் கீழ் 1,139 மில்லியக் ரூபாவுக்கு வழங்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தின் 18 நீர்க் கோபுரங்களின் கட்டுமாண ஒப்பந்தம் மற்றும் 5,536 மில்லியன் ரூபாவுக்கு வழங்கப்பட்ட சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீர் விநியோக் குழாய்களை பொருத்தும் ஒப்பந்தம் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் இத்திட்டத்திற்கு நீர் அடி ஊற்று காணப்படாததின் காரணமாக மதிப்பாண்டு இறுதியாகும் போது சகல கட்டுமானப் பணிகளும் செயலிழந்து காணப்பட்டது.

## கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நீர் வழங்கல் திட்டம்

அரச வர்த்தக வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நீர் வழங்கல் கருத்திட்டத்தின் 1 ஆம் இலக்க பகேஜுடன் தொடர்பான ஒப்பந்தம் 2014 ஜுலை மாதம் 23ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 4,700 மில்லியன் ரூபா விலைமனுப் பெருமதியின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாக பாதுக்க, சீதாவக்க, ஹொரன மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்களை உள்ளடக்கும் வகையில் 176 கி.மீற்றர் தூரத்தில் நீர் விநியோக தொகுதித் திட்டமொன்றும் 4 கிலோ. மீட்டர் தூரத்துக்கான (Transmission) விசை ஊடிணைப்பு நீர் விநியோகக் குழாய் பொருத்துதல் சேவையையும் உள்ளக்கியிருந்தது.

எனினும், இக்கருத்திட்டத்திற்கு குழாய்களையும் உதிரிப் பாகங்களையும் கொள்வனவு செய்வதற்காக வேண்டி செலவு செய்த தொகையினை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 531 மில்லியன் ரூபா கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட குழாய் பொருத்துதல் தூரம் 32,550 மீற்றராக காணப்பட்ட போதிலும் 131,000 மீற்றருக்கு குழய் பொருத்துவதற்கான நீர்க்குழாய்கள் இறக்குமதிசெய்யப்பட்டு அதற்காக வேண்டி 77.7 மில்லியன் ரூபா ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. தவிரவும், கருத்திட்டத்திற்கு 4900 நீர்மானிகளை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்த தொகைக்கும் அவற்றின் சாதாரண சந்தைப் பெறுமதிக்கும் இடையில் ஒப்பிடுகின்ற போது 8.9 மில்லியன் ரூபா கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி திட்டம்

இக்கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பாணம் நீர் வழங்கல் உத்தேச திட்டத்தின் மூலம் 253.83 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு நீர்க் கோபுரம் ஒன்றும், நீர் பாய்ச்சும் இடமொன்றும், நீர் விநியோக மற்றும் பகிர்வு ஒழுங்குத் திட்டமொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. அதற்கு பொருத்தமான நீர் மூலமொன்று காணப்படாமையினால் அத்திட்டம் 2016 செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி முதல் மதிப்பாண்டு இறுதியன்று செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

## நீர்பாசனம் மற்றும் நீர் வளம்

ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பை நிறுத்திவைத்தல்

புனரமைக்கப்பட்ட குளங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காமை

மனித வள முகாமைத்துவம்

முறையாக கையேற்கப்படாத சொத்துக்கள்

சிக்கனமற்ற செலவினம்

# நீர்ப்பாசனம் மற்றும் நீரியல் வளங்கள்

விவசாயம் சார்ந்த செயற்பாடுகளுக்காக தேவைப்படும் நீர்ப்பாசன நீர் காணப்படுவதை உறுதிப்படுத்துதல் இப்பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறொன்றாக இருந்தது. இப்பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு, திணைக்களமொன்றும் இரண்டு நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- நீர்ப்பாசனம், நீர்தேக்கம் மற்றும் நீர் முகாமைத்துவத்தின் விடயங்கள் மற்றும் அமைச்சின் கீழ்வரும் திணைக்களத்தினதும் பொது முயற்சிகளினதும் நோக்கெல்லையின் கீழ் வரும் ஒவ்வொரு விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயார்படுத்தி அமுலாக்கல்.
- நீர்ப்பாசனத் திட்டங்கள், வடிகாலமைப்பு மற்றும் வெள்ளப் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் உப்புநீர் நீக்கல் திட்டங்களினை ஊக்குவித்தல், நிர்மாணித்தல், செயற்படுத்தல், பராமரித்தல், மீள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தல்.
- ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள் மற்றும் ஏனைய நீர் வழிகளின் மாசடைதலை தடுத்தல்
- மழை நீரைச் சேமித்தல்
- பொறியியலாளர் ஆலோசனை சேவைகள் மற்றும் நிர்மாணங்களும்
- நீர் வளங்கள் சபை அதிகாரச்சட்டத்தினை அமுல்படுத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

## ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு நிறுத்திவைத்தல்

கொத்மலே நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிலையத்தில் சேவையிலுள்ள ஊழியர்களிடமிருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 927,580 தொகை சேமலாப நிதிய பங்களிப்பிற்கு அனுப்பிவைக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்திவைவக்கப்பட்டிருந்தது.

## புனரமைப்பு செய்யப்பட்ட குளங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளாமை

பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முறைமைகளை மீளமைப்பதற்கான 2015 ஆம் ஆண்டு முதல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 54.83 மில்லியன் செலவிடப்பட்டு கமநல நல அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான 03 குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தன. எனினும் அதில் ரூபா 3.71 மில்லியன் செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்ட முதியன்னேகம குளத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த 15 ஏக்கர் வயலில் 14 வயல்கள் உயர் நிலமாக மாற்றப்பட்டிருந்தன. கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் குளங்களை புனரமைப்பதற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அமைச்சிலிருந்து ரூபா 6.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. குளத்தின் துரசு உடைந்திருந்தமையால் குளத்தில் சேரும் நீர் பயிர்செய்கைக்காக பயன்படுத்த முடியாமல் இருந்தது. குளத்தினால் போசிக்கப்படும் 95 ஏக்கர் வயல் பயிரிடப்படாமையால் புனரமைப்பிற்காக செலவழிக்கப்பட்டட ரூபா 6.19 மில்லியன் பயனற்றதாக இருந்தது.

## மனித வள முகாமைத்துவம்

கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிலையத்திற்காக 06 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து. 15 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட 04 தொழிலாளர் பதவிகளை ஆட்சேர்க்காமல் ஒப்பந்த அடிப்படையில் 28 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாவுகளின் போது ரூபா 19.58 மில்லியன் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவ

சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் 05 பதவிகளிற்காக 06 பேர் நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 10 பேரும் அமைய அடிப்படையில் 25 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிலையத்திற்காக 07 விரிவுரையாளர் பதவிகள் அங்கிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விரிவுரையாளர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வெளிவாரி விரிவுரையாளர்கள் அதற்காக சேர்க்கப்பட்டிருந்தனர். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே 25 வெளிவாரி விரிவுரையாளர்கள் மற்றும் 11 விரிவுரையாளர்களுக்கு ரூபா 1.10 மில்லியன் மற்றும் 0.70 மில்லியன் என மொத்தம் ரூபா 1.80 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## சொத்துக்கள் முகாமைத்துவம்

முன்னால் அமைச்சருக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 640.354 பெறுமதியான சொத்துக்கள் மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை 2010 மே 10 ஆந் திகதி ஜனாதிபதி செயலாளரின் கற்றறிக்கையின் 2.1 பந்திக்கு முரணாக அமைச்சரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் அமைச்சினதும் திணைக்களத்தினதும் நிதி ஏற்பாடுகளில் இருந்து முறையே ரூபா 2.20 மில்லியன் மற்றும் ரூபா 0.92 மில்லியன் என மொத்தம் ரூபா 3.12 மில்லியன்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ஏனைய திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் நீர் வளங்கள் சபைக்கு அமைச்சிற்கு சொந்தமான 129 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அந்நிறுவனங்களுக்கு உரித்தை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாகனங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## முறைப்படி கையேற்கப்படாத சொத்துக்கள்

நீர்ப்பாசன திணைக்களத்திற்கு 07 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 322.95 மில்லியன் பெறுமதியான 89 வாகனங்களும் ரூபா 0.27 மில்லியன் பெறுமதியான 27 மோட்டார் சைக்கில்களையும் கையேற்காமல் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## சிக்கனமற்ற செலவினம்

உஸ்கல சியம்பலாண்டுவ மஹகல்கமுவ குளம் வரை போசிக்கப்படும் கால்வாய் நிர்மாணத்தின் போது இயந்திர வழங்குனருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த இயந்திர வழங்கல் உடன்படிக்கையின் காலம் முடிவடைவதற்கு முன்னர் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் கூடிய விலையின் கீழ் அவ்வியந்திர வழங்குனருடன் புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் ரூபா 1.16 மில்லியனான சிக்கனமற்ற செலவினமொன்று நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| விவசாயம் | சேதனப் பசளை உற்பத்தியை அதிகரித்தல்<br><br>காப்புறுதி உத்தரவாதப் பெறுமதியை கூடுதலாக மதிப்பிடுதல்<br><br>ஆராய்ச்சி செலவினம்<br><br>செயற்திட்டங்களை கைவிடுதல்<br><br>பயனற்ற செலவினம்<br><br>மீன்பிடி, ஓய்வூதியம் சமூகப் பாதுகாப்புத் திட்டம்<br><br>விவசாய ஓய்வூதியமும் சமூகப் பாதுகாப்பு திட்டமும்<br><br>விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் |

# விவசாயம்

நாட்டில் உணவுப் பாதுகாப்பினையும் தேசிய சமூர்த்திக்கான உணவு உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்கில் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் மற்றும் வலுவான விவசாயத் துறையொன்றை உருவாக்குவது இதன் நோக்கமாகும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்ற வேண்டி இருந்தது.

- விவசாயத்துறையின் அபிவிருத்தி செயற்பாடுகளை கொண்ட கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- உள்நாட்டு உணவு மற்றும் மேலதிக உணவை உள்ளடக்கிய முறையான முகாமைத்துவம் மூலம் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
- உணவு உற்பத்தியின் போது இரசாயனப் பசளை மற்றும் கிருமிநாசிகளின் பாவனையைக் குறைத்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவம் மூலம் நச்சுக்கள் அற்ற, சுற்றாலுக்கு சாதகமான மற்றும் சுகாதாரப் பாதுகாப்புள்ள விவசாய உற்பத்திகளை மக்களுக்கு வழங்குதல், இரசாயன பசளைகளின் பாவனையை முறைமைப்படுத்துதல்.
- இயந்திர மயமாக்கல், நவீனமயப்படுத்துதல், செயற்திறனான நீர் முகாமைத்துவம், பயிர்ச்செய்கை போகங்களை பல்வகைப்படுத்துதல் பங்கசுப் பாதுகாப்புத் திட்டம் என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயிர்ச்செய்கைகளின் உற்பத்தியை விளைதிறனை உயர்வடையச் செய்தல் மற்றும் உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல்.
- உயர்தரத்தையுடைய சுய நாற்று உற்பத்தி, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி முறைமையை விவசாயிகளுக்கிடையே பரவலாக்குதல், சிறப்பான கமநல ஏற்றுக் கொள்ளல்கள் **(GAP)** மற்றும் சிறந்த உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக நியமத்தை உடைய உயர் விவசாய உற்பத்திகளுக்காக உற்பத்தியாளர்களைத் தொடர்புபடுத்துதல்.
- சகல உடைந்து போன குளங்கள், அணைகள் மற்றும் வாய்க்கால்களை மீளமைத்தல் மற்றும் தரிசு நில வயல்களை பயிரிடுவதன் மூலம் நெல் உற்பத்தியை உயர்வடையச் செய்வதற்காக பங்களித்தல்.

விவசாய அமைச்சு, 02 திணைக்களங்கள், நியதிச் சட்ட சபை மற்றும் 10 நிறுவனங்கள், வெளிநாட்டு செயல்திட்டம் மற்றும் 02 நிதியம் மூலம் மேற்கூறப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## சேதனப் பசளை உற்பத்தியை அபிவிருத்தி செய்தல்

களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்ட அலுவலகங்களில் சேதனப் பசளை உற்பத்தி அதிகரிப்பதற்கான விவசாய அமைச்சில் இருந்து வழங்கப்பட்ட ரூபா 400,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு 03 கமநல சேவை நிலையங்கள் மூலம் மூன்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 900,000 தொகையான கடன் தொகை என்பன அந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை.

## ஆராய்ச்சி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமை

ஹெக்டர் கோப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது 09 செயற்திட்டங்களுக்கு ரூபா 6.2 மில்லியன் தொகையும் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது 04 ஆராய்ச்சி செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான ரூபா 3.4 மில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 9.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் 2015 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்டிருந்த

போதிலும், அதன் மூலம் எந்தவொரு விளைவையும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## காப்புறுதி பொறுப்புப் பெறுமதி அதிகரித்து மதிப்பீடு செய்தல்

விவசாயம் மற்றும் கமநல காப்புறுதி சபையினால் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை கட்டாயப் பயிர்ச்செய்கைகளில் 06 வகைகளுக்காக ரூபா 7,500.20மில்லியன் ஆகக் கூடிய காப்புறுதி பொறுப்பை வழங்குவதற்காக இலவசமாக காப்புறுதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடந்தகால தரவுகளின் பிரகாரம் ரூபா 5,000.00 மில்லியன் அளவில் இருக்கக்கூடிய காப்புறுதிப் பொறுப்புக்கள் மீள் காப்புறுதிக்கான பெறுமதி ரூபா 3,500.00 மில்லியன் ஆக இருந்த போதும், சபையினால் ரூபா 5,315.00 மில்லியன் தொகை மீள்காப்புறுதி பொறுப்பிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதனால் ரூபா 1,815.00 மில்லியன் தொகை அதிகரித்து மதிப்பீடு மீள்காப்புறுதி செய்யப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட மீள்காப்புறுதிக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,185.00 மில்லியன் வரை நட்டஈட்டுப் பெறுமதி சபையினால் செய்வதற்கும், ரூபா 1,500.00 இழப்பீட்டுப் பணம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து செய்வதற்கும் பின்னர் மீள்காப்புறுதிக்கு செய்வதற்கும் உரித்து காணப்பட்டது. எனினும் மீள்காப்புறுதி தவணைப் பெறுமதியான ரூபா 675.76 மில்லியன் தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகங்களுக்காக ரூபா 412.66 மில்லியன் தொகை இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டுக் காப்புறுதி தவணைப் பணமான ரூபா 473.03 மில்லியன் தொகை பயனற்றுக் காணப்பட்டது.

## ஆராய்ச்சி செலவினம்

அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 07 வகையான உணவுகளில் 4 வகையான பார உலோகங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததா எனப்பரீட்சிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆராய்ச்சிகளுக்காக 500 பேர்களை தெரிவாக பரிசோதனை செய்யப்பட்டிருந்ததுடன் சில உணவு வகைகளில் ஆகக்கூடிய பாதுகாப்பு மட்டத்தை விஞ்சி பார உலோகங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான முறையான வழிமுறைகளை எடுப்பதற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் ஆராய்ச்சிகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் பயனற்றதாக இருந்தது.

## செயற்திட்டங்களைக் கைவிடல்

விவசாயத் திணைக்களத்தின் மரக்கறி கிருமிநாசினிகளை கட்டுப்படுத்துவதற்காக உயிரியல் விஞ்ஞான ரீதியான நாசினி கட்டுப்பாட்டினைப் பயன்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 17 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிர்வாக மற்றும் கள ஆராய்ச்சி செலவினங்களுக்காக ரூபா 1.15 மில்லியன் செலவினம் செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இதனால் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது.

## பயனற்ற செலவினம்

- விவசாயத்துறையினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்திக்காக மதியுரையாளர்களால் தயாரிக்கப்பட்ட பயிற்சி கைநூல் மற்றும் வேலைப் புத்தகம் என்பவற்றை அச்சிடுவதற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 மே 13 ஆந் திகதி வரையிலும் விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமையினால் செலவிடப்பட்ட பணத்தின் விளைவுகளை கைப்பற்றுவதற்கு முடியாதிருந்தது.
- விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் மூலம் 05 மாவட்டங்களின் விவசாயிகளின் 281,250 விண்ணப்பங்களை ஸ்கேன் செய்து

கணனிமயப்படுத்துவதற்கு 2017 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 யூலை மாதம் வரை ரூபா 2.76 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தத் தரவுகள் இழப்பீடு செலுத்தும் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படவில்லை.

- சீத்தாவக்க உத்ஹிந்த பூங்காவில் காட்சி மேடையை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த நிர்மாணத்திற்கான மருத மரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்கள் தொடர்பாக 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு 03 வருடங்கள் அளவில் கடந்திருந்த போதிலும் நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மருத மரம் கணிசமான அளவில் பழுதடைந்து உக்கி இருந்தது. மருத மரம் மழைக்கு ஈடுகொடுப்பதுடன் நீண்டகாலமாக பயன்படுத்தக்கூடிய மரவகையாக இருந்த போதிலும் அந்த ஒப்பந்தத்திற்காக தரமான நிலையினுள்ள மருத மரம் பயன்படுத்தப்படவில்லை.

## மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு உத்தேசத்திட்டம்

1990 இன் 23 ஆம் இலக்க மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட சட்டத்தின் மூலம் இந்த உத்தேசத்திட்டம் தாபிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் ஓய்வூதியப் பொறுப்புக்கள் ரூபா 3,590.89 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 8.9 சதவீதம் அதிகரித்திருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தில் ரூபா 2,947.93 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இந்த நிலைமை உத்தேசத்திட்டத்தில் தொடர்ச்சியாக காணப்படுவது தொடர்பில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது. உத்தேசத் திட்டம் மீள் கட்டமைக்கப்பட்டு நிதிசார் சாத்தியவளத்துடன் அமுல்படுத்துவதற்கு நிறுவனம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
- 2017 சனவரி மாதம் முதல் 95 மீனவர்களுக்கு ஓய்வூதியம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. 2011 சனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் வரையான காலத்திற்குரிய ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 2.79 மில்லியன் தொகை ஓய்வூதியம் செலுத்த வேண்டியிருந்தது. அந்த நிலுவை ஓய்வூதியம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

## விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு உத்தேசத்திட்டம்

இந்த உத்தேசத்திட்டம் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் உத்தேசத்திட்ட சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தேசத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- தொடர்ச்சியான பங்களிப்பு மற்றும் விவசாய ஓய்வூதியதாரரின் ஓய்வூதிய பொறுப்புக்களுக்கான ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீடு காலரீதியில் மேற்கொள்ள வேண்டி இருந்தது. நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 66,508.21 மில்லியன் தொகையான ஓய்வூதியப் பொறுப்புக்கள் தொடர்பாக அவ்வாறு ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீடு செய்யப்படவில்லை.
- 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விவசாயிகள் ஓய்வூதிய உத்தேசத் திட்டத்தின் பிரகாரம் ஓய்வூதியப் பங்களிப்பு அறிவிட்டு கொடுப்பனவு செய்ய வேண்டி இருந்தது.

மீளாய்வாண்டின் போது ரூபா 24.55 மில்லியன் தொகை ஓய்வூதியப் பங்களிப்பாக அறவிடப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியமாக ரூபா 3,059.37 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஓய்வூதியப் பங்களிப்பு குறைத்து செலுத்துதல் அதிகரித்தமையால் ரூபா 2,725.00 மில்லியன் தொகை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வூதியப் பங்களிப்பு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் தொடர்ந்தும் ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு திறைசேரியின் பங்களிப்பை பெறவேண்டி இருந்தது.

- ஓய்வு பெற்ற விவசாயிகளுக்காக 2017 ஏப்ரல் மாதம் முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் 19,283 விவசாயிகளுக்கு உரித்தான ஓய்வூதியம் கூட்டு மொத்தமான ரூபா 451.32 மில்லியன் தொகையும், 2012 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 90,573 விவசாயிகளுக்கு உரித்தான ரூபா 3,033.33 மில்லியனாக கூட்டுமொத்தமாக ரூபா 3,484.65 மில்லியன் தொகையான ஓய்வூதியப் பணமும் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

2002 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைக் குறிப்பின் மூலம் விரிவுபடுத்தப்பட்ட விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாய மக்களின் நலன்புரிகளை அபிவிருத்தி செய்தல், சிறிய அளவிலான விவசாயிகளுக்கு விவசாய கடன் வசதிகள், சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல், விவசாய ஈடுபடுத்தலுக்கான வழங்கல்கள், தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம், விசேட விவசாயத் திட்டங்களை அமுல்படுத்துதல், போகப் பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை உற்பத்தி செயற்பாடுகளில் உற்பத்தி பொருட்களின் அனுசரணைக்காக நிதியம் தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் ஆரம்பிக்கப்பட்ட போதும், அந்த நிதியை குறித்த நோக்கங்களுக்காக போதியளவில் பயன்படுத்தாமல் ரூபா 835.00 மில்லியன் தொகை நிலையான வைபபுக்களிலும், ரூபா 93.04 மில்லியன் தொகை திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. கொவிசெத லொத்தர் வருமானத்தில் விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,542.06 மில்லியன் தொகை விவசாயிகளுக்கு நலன் வழங்கும் திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## கலாச்சார அலுவல்கள்

கலாச்சார நிலையங்களை தாபித்தல்

பெறுமதி சேர் வரி செலுத்தாமை

நிர்மாண நடவடிக்கைகளிற்கு மேலதிகமாக செலுத்துதல்

# கலாச்சார அலுவல்கள்

நாட்டில் கலாசார அங்கங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நிலைபேறான சமூக பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல் இந்தப் பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. அந்த பெறுபேறுகளைக் கைப்பற்றிக் கொள்வதற்காக உள்ளக அலுவல்கள் வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் இரண்டு திணைக்களங்கள் என்பவற்றால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- இலங்கை தேசிய கலாசாரத்தின் சகல அங்கங்களையும் மீள் அபிவிருத்தி செய்வதற்காக தேவையான வழிமுறைகளை எடுத்தல்.
- வெளிநாடுகளுடன் கலாசார தொடர்பினை பேணிச் செல்லல்
- கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.
- சிங்ஹள விளக்க அரிச்சுவடி (விஸ்வ கோடிய) சிங்ஹள ஒலி அரிச்சுவடி (சப்த கோஷ்), மஹா வங்ச வழங்கலுக்காக தொடர்ச்சியாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக கலாசார கலை நயங்களை இனங்காணல்.

அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் திணைக்களத்தால் மேற்கூறப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## கலாசார நிலையத்தைத் தாபித்தல்

சகல பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஒரு கலாசார நிலையமொன்றைத் தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2011 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பிரதேச செயலகப் பிரிவுகளில் 110 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

09 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 93.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும், 2019 பெப்ரவரி மாதம் வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

கலாசார நிலையத்தை நிர்மாணிக்கும் போது நிலம் மண்சரிவிற்கு உட்படல், யுத்த நிலைமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 03 நிலையங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 4.26 மில்லியன் தொகை அந்த நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தமையால் அந்த செலவினங்கள் பயனற்றதாகியிருந்தது.

## பெறுமதிசேர் வரி அறவிடப்படாமை

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தால் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய பெறுமதி சேர் வரி (VAT) உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுமதிசேர் வரி (VAT) செலுத்துதல் தொடர்பான மாதாந்த அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நீண்ட காலத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் போது 5.35 மில்லியன் தொகை பெறுமதிசேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த வரி அளவு சரியாக அரசாங்க வருமானத்திற்கு

செலவு வைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### நிர்மாண ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேலதிகமாகச் செலுத்துதல்

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்குரிய 06 நிர்மாண செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தம் மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 2.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## சிறைச்சாலைகள் புனரமைப்பு

தகவல் முறைமையினை அனைத்து சிறைச்சாலைகளிலும் நடைமுறைப்படுத்த தவறியமை

சிக்கனமற்ற செலவினம்

பதவியணியினர் பயிற்சிகள் அநேக ஊழியர்களிற்கு கிடைத்திருக்காமை

தண்டப் பணங்களை அறிவிட்டிருக்காமை

வாகன நிர்வாகம்

# சிறைச்சாலைகள் புனரமைப்பு, புனர்நிர்மாண மற்றும் மீள் குடியமர்த்தல்

பாதுகாப்பான கட்டுக்காப்பு மற்றும் பயனுள்ள திருத்தத்தின் மூலம் திருப்திகரமான பிரசையொருவரை உருவாக்குவது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவினால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறாக இருந்தது. அவ்வெதிர்பார்ப்பு நிறைவேறுவதுற்கு அமைச்சுடன் மேலும் 02 திணைக்களங்கள் மற்றுமொரு அதிகாரசபை என்பவற்றால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பணிப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- சமூக அடிப்படையிலான திருத்த செயற்திட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த, உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புகளுக்கு ஆளான நபர்களை மீளக் குடியமர்த்துதல் மற்றும் புனர்வாழ்வளிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்
- மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம், உதவி வழங்கும் பிரதிநிதித்துவ நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், மற்றும் சிவில் சமூகத்துடன் பணிகளை ஒருங்கிணைத்தல்
- இடம்பெயர்ந்தவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- மோதல்களால் பாதிப்புக்குள்ளான சொத்துக்களையும் நபர்களையும் மீண்டும் சமூகமயப்படுத்துவதற்கான உத்திகளை நடைமுறைப்படுத்தல்
- தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக மதரீதியான விழுமியங்களை மக்களிடையே வளர்க்கக் கூடிய கொள்கைத் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் வகுத்தல்.

அமைச்சு, திணைக்களம் மற்றும் அதிகாரசபை என்பவற்றால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வில் கீழ்வரும் குறைபாடுகள் வெளிவந்தன.

## சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவத் தொகுதியை நடைமுறைப்படுத்தல்.

2018 டிசம்பர் 31ம் திகதியாகும் போது சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவத் தொகுதியொன்றைத் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு 07 வருட காலம் கடந்திருந்தது. அதற்கென சுமார் ரூபா 101 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவத் தொகுதியை நடைமுறைப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையை வலையமைப்புச் செய்வதற்கு, ஸ்ரீ லங்கா டெலிகொம்மிடம் கையளிக்கப்பட்டு, அதற்கென ரூபா 957,978 செலவிடப்பட்டிருந்தது. 12 சிறைச்சாலை நிறுவனங்களை வலையமைப்புச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 30.51 மில்லியனுக்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும் 16 நிறுவனங்கள் எதிர்காலத்தில் வலையமைப்புச் செய்யப்படவிருந்தன. எவ்வாறாயிலும், மீளாய்வு ஆண்டின் இறுதியிலும் அத்தகவற் தொகுதி ஒட்டுமொத்த சிறைச்சாலைத் தொகுதியில் நடைமுறைப்படுத்தப்பட இயலாமற் போயிருந்தது.

## சிக்கனமற்ற செலவுகள்

2138 பதவி வெற்றிடங்கள் காணப்படுதல், திணைக்களப் பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக அமைந்திருந்தது. ஒழுங்கமைப்பாளர் பதவிக்கு 1,184 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களால் இணங்கப்பட்டவாறு ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு முறையின் கீழ் போட்டிப் பரீட்சையொன்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிரல் அமைச்சின் ஆலோசனைகளின்

அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் ஒழுங்கமைப்பு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டத்தை வகுத்து, அதற்கென ரூபா 4.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சரால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அவ்வாட்சேர்ப்புகள் இரத்துச் செய்யப்பட்டதால் செலவிடப்பட்ட செலவு விரயமக்கப்பட்டிருந்தது.

## பதவியணியை பயிற்றுவித்தல்

பணிக்குழுப் பயிற்றுவிப்புக்காக மீளாய்வாண்டில் ரூபா 3.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், 25 சிறைச்சாலை நிறுவனங்களின் 1831 உத்தியோகத்தர்களுக்கு எந்த வகையான பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 23 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ஆரம்ப சேவைப் பயிற்சிக்கு மேலதிகமாக வேறு எந்த பயிற்சி வாய்ப்பும் உரித்தாகாதிருப்பதுடன், பெரும்பாலான உத்தியோகத்தர்களுக்கு குறைந்தபட்சம் அண்மித்த 05 வருட காலத்துக்குள் கூட பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் உரித்தாகாதிருந்தன.

## அபராதக் கட்டணத்தை அறவிடாமை

இடமாற்றங்கள் மற்றும் குத்தகைக் கால எல்லை முடிவடைதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அரச வாசஸ்தலம் ஒன்றில் வசிப்பதற்கான தகைமைகள் செல்லுபடியற்ற பின்னரும் அரச வாசஸ்தலங்களில் தொடர்ந்தும் குடியிருக்கும் 13 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய 2.67 மில்லியன் ரூபாவுக்கான அபராதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## வாகனக் கட்டுப்பாடு

திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்படாது இயக்கப்படும் 21 வாகனங்கள் மற்றும் இயங்கக் கூடிய நிலையில் இல்லாத 32 வாகனங்கள் திணைக்கள வளாகத்தில் காணப்பட்டன. 2019 ஜனவரி மாதமளவில் செயற்படாத 03 மாதம் முதல் 09 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து காணப்படும் 43 வாகனங்கள் தொடர்பில் 2015 ஜூலை 10 ஆம் திகதியன்றுள்ளவாறான 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின்படி அவ்வாகனங்களைப் புதுப்பித்து இயக்குவதற்கு அல்லது அகற்றி விடுவதற்கு, மீளாய்வு ஆண்டு முடிவடையும் போதுகூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இவ் வாகனங்கள் இயற்கை ஊறுகளுக்கு உட்பட்டு அழிவடைந்தவாறு காணப்பட்டன. 01 முதல் 03 வருடங்கள் வரையான காலப் பகுதிக்குள் அகற்றி விடுதல் பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த 16 வாகனங்களை மீளாய்வு ஆண்டு பூர்த்தியடையும் நிலையிலும் அகற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 53 வாகனங்களுக்கு வாகனப் பதிவுச் சான்றிதழ், காப்புறுதிச் சான்றிதழ், மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் என்பன இல்லாதிருந்ததுடன் அவ்வாகனங்களுக்கிடையே 08 வாகனங்கள் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே மீளாய்வு ஆண்டு பூர்த்தியடையும் போது கடந்த வருடங்களுடன் ஏற்புடைய, சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்கள் 180 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்தன. அவ்விபத்துக்களால் ஏற்பட்டிருந்த இழப்புகளின் பெறுமதி ரூபா 43.26 மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாண்டில் 27 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த வாகன விபத்துக்களால் ரூபா 2.54 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. அவ்விழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இழப்புகளை அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து துண்டிப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தவறியிருந்தது

## ஓரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன்

ஓய்வூதியம் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கம்

நிதியங்களின் நிர்வாகம்

ஓய்வூதியம் கூடுதலாகச் செலுத்தப்படுதல்

நிதி மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

முகாமைத்துவ செயற்திறனின்மை

ஓய்வூதியம் பெறுவோரின் இறப்பை உாயி வேளையில் தெரிவித்தல்

வைப்புக்களை நிறுத்தி வைத்தல்

# அரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன்

அரச சேவை ஓய்வூதியக்காரர்களுக்கும் அவர்களது நலனாளிகளுக்காகவும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைமைளைப் பயன்படுத்துவதன் மூலமும், தனியார் மற்றும் அரச துறைகளுடன் இணைந்து அவர்களில் உயர்ந்த சேவை பெறுனர் மற்றும் சேவைப் வழங்குனர்களின் திருப்தியை உறுதிப்படுத்துவதனூடாக சட்டரீதியான நலன்களை கொடுப்பதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக திருப்திகரமான ஓய்வூதிய சமூகமொன்றை உருவாக்குதல் ஓய்வூதியத் திணைக்களத்தின் தூரநோக்கும் செய்பணியுமாகும்.


1934 பெப்ரவரி 05 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ஓய்வூதிய சட்டவிதிக்கோவையின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவும், 1898 இன் 01 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிய கட்டளைச் சட்டம் மற்றும் 1983 இன் 24 ஆம் இலக்க தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய சட்டத்தின் கீழ் தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவும் 1942 இன் 18 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அரச சேவைகள் சேமலாப நிதிய நிர்வாகம் மற்றும் கொடுப்பனவு செயற்பாட்டு ஒழுங்குபடுத்தல் ஓய்வூதிய திணைக்களத்தின் பிரதான பொறுப்பொன்றாக இருந்தது.

## ஓய்வூதியக் கொடுப்பனவின் பொருளாதாரத் தாக்கம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்தினால் செயற்பாட்டிலுள்ள 619,176 ஓய்வூதியம் பெறுவோருக்கு நலன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் ரூபா 224,853 மில்லியன் ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் 10.75 சதவீதமாக இருந்ததுடன் அது அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 11.71 சதவீதமாக இருந்தது.

2012 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை ஓய்வூதியம் பெறுவோர் 514,584 பேரில் இருந்து 619,176 பேர் வரை 104,792 பேரினால் அதாவது 20 சதவீதத்தினால் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு முறையே ரூபா 126,461 தொகை முதல் 224,853 தொகை வரை ரூபா 98,392 மில்லியனால் அதாவது 78 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.
அரச சேவையின் விரிவாக்கம், ஓய்வுபெறுவதில் புதிய ஏற்பாடுகள், ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்க்கை செலவினக் கொடுப்பனவு, அரச சேவையில் சம்பள அதிகரிப்பு மற்றும் அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணித்தல், ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குதல், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல் போன்ற காரணங்களினால் ஓய்வூதிய செலவினம் இடையறாமல் அதிகரித்திருந்தது. அது எதிர்காலத்திலும் இடையறாத வளர்ச்சி ஒன்று ஏற்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதனால் எதிர்காலத்தில் அரசாங்க செலவினத்தில் ஓய்வூதியச் செலவினங்கள் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

மீளாய்வாண்டு அடங்களாக கடந்த 06 வருடங்களுக்காக மொத்த ஓய்வூதிய செலவின அதிகரிப்பு வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது.




வரைபு 56 - ஓய்வூதிய செலவினம்
மூலம் -- ஓய்வூதிய தரவு முறைமை, நிதி நிலைமைக் கூற்று 2018

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

## நிதியத்தின் நிர்வாகம்

ஓய்வூதிய திணைக்களத்தினால் அரச சேவை ஓய்வூதியக் கொடுப்பனவு செய்வதுடன் மேலதிகமாக 05 ஓய்வூதிய நிதியங்கள் நிர்வகிக்கப்படுவதுடன் அதில் அரச சேவை சேமலாப நிதியம் மாத்திரம் செயற்படும் மட்டத்தில் காணப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் மாகாண அரசாங்க அரச உத்தியோகத்தர்களுக்கு, அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதியம் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் உரித்தாகியமையால் 1993 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியம், உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், உள்ளூராட்சி சேவை தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்காக புதிய அங்கத்தவர்கள் அதிகரிப்பொன்று இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு புதிய அங்கத்துவப் பணக் கிடைக்காததன் பேரில் கொடுப்பனவு செய்யப்பட போதியளவு பணம் நிதியங்களில் காணப்படாமை காரணமாக ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாடுகளின் மூலம் நிதியத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

அதனிடையே, 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சட்டக் கட்டளையின் இலக்கம் 04 இன் பிரகாரம் ஆசிரியர் விதவைகள் அநாதை பங்களிப்புத் தொகை மூலம் நிதியமொன்றை கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர் விதவைகள் அநாதை ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பங்களிப்புத் தொகையை சேகரித்தல் மற்றும் செலவினங்கள் மேற்கொள்வதற்காக நிதியத்திற்காக வங்கி கணக்கொன்று பேணப்படாமல் இருந்ததுடன் பங்களிப்பு தொகை ஓய்வூதிய திணைக்களத்தின் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை வங்கிக் கணக்கிற்கு சேகரிக்கப்பட்டிருந்தமையால் ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு ஏற்பாடுகளின் மூலம் மேற்கூறிய செலவுகள் செய்யப்படுவதால் அந்நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்துதல்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ஓய்வூதியத்தின் மிகைக் கொடுப்பனவுப் பெறுமதி ரூபா 591 மில்லியனாக இருந்தது. இது 10 நிதி ஆண்டுகளை விட கூடுதலான

காலம் முதல் காணப்பட்டு வந்த ரூபா 8 மில்லியன் தொகையும், 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை காலவீச்சில் காணப்படும் ரூபா 37 மில்லியன் தொகையும் மற்றும் 05 வருடங்களை விட குறைந்த காலம் முதல் காணப்படும் ரூபா 546 மில்லியன் தொகையும் அடங்கியிருந்தது.

## நிதி ஒழுங்கீனத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

சிவில் மற்றும் விதவை என 02 ஓய்வூதியங்கள் பெற்றுக் கொண்டிருந்த இறந்த ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தர் ஒருவர் இறந்த பின்னர் 55 மாதங்கள் வரை இறக்கும் போது பெற்று வந்த ஓய்வூதிய வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செலவு வைக்கப்பட்ட பணத்தில் ரூபா 2.70 மில்லியன் தொகை ATM அட்டையை பயன்படுத்தி இறந்தவரின் மகனினால் அகற்றப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 308,052 தொகை அவர் பின்னர் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்த போதிலும், மீதியான ரூபா 2.39 மில்லியன் இற்கான தொகை 2019 ஜூன் 30 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

பிரதேச செயலகங்கள் 2 இன் மூலம் தற்காலிக மற்றும் நிரந்தர இரண்டு ஓய்வூதியங்கள் 1991 ஜனவரி மாதம் முதல் 2016 பெப்ரவரி மாதம் வரை 20 வருட காலம் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒரு பிரதேச செயலகத்தினால் ரூபா 1.87 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 10 திகதி முதல் ஓய்வூதியம் செலுத்துவதை நிறுத்தியிருந்த போதிலும் மிகையாக செலுத்தியிருந்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஓய்வூதியத் தரவு முறைமையில் ஓய்வூதியம் பெறுவோரின் தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக மகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் போடப்பட்டு ஓய்வதியம் பெறுவோர் இறந்து 86 மாதகாலம் கடந்தும் இறந்த தாயின் ஓய்வூதியம் என ரூபா 1.56 மில்லியன் தொகை மகள் ஒருவரினால் தவறான முறையில் பெறப்பட்டிருந்தது. இந்த மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## முகாமைத்துவத் திறமையின்மை

நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹா, அலவ்வ, வரகாபொல மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலகங்களில் 2006 ஏப்ரல் 25 திகதிய 6/2006 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதிய திருத்தப்படாத கோவைகள் 669 காணப்பட்டன.

2011 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 1719/3 இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிட்டிருந்த பிறப்பின் போது பூரணமாக ஊனமுற்றிருக்காத நபர்களை 05 வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ சபைக்கு தொடர்படுத்த வேண்டியிருந்த போதிலும், நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹா, அலவ்வ மற்றும் ரம்புக்கன பிரதேச செயலகங்களில் பிறப்பில் ஊனமுற்றிருக்காத நபர்கள் எவரையும் எந்த நாளிலும் மருத்துவ சபைக்கு அனுப்பிருக்கவில்லை.

ஓய்வூதியம் செலுத்தப்படும் அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஓய்வூதியக் கோவை ஒன்று பேணப்பட்டு வர வேண்டியிருந்ததுடன் நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹா, அலவ்வ, வரக்காபொல மற்றும் வத்தளை ஆகிய 6 பிரதேச செயலகங்களில் கோவைகள் இன்றி 512 ஓய்வூதியப் பெறுவோருக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

## ஓய்வூதியம் பெறுவோர் இறத்தல் அவ்வபோது அறிவித்தல்

ஓய்வூதியம் பெறுபவர் இறந்துள்ள சம்பவம் பிரதேச செயலகம் அறிந்திருக்காமையால் இறந்திருந்த ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்ததுடன், கம்பஹா பிரதேச செயலகத்தில் 2016 ஆண்டின் போது ஓய்வூதியம் பெறுவோர் 10 பேருக்கு ரூபா 336,378 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆண்டில் இறந்திருந்த 07 ஓய்வூதியம் பெறுவோரிடம் ரூபா 750,390 தொகையினை முழுத் தொகையும் 2018 செப்தெம்பர் மாதம் அளவிலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## வைப்புக்கள்

திணைக்களத்தில் சேவையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் 05 பேர் வேறு சேவையொன்றிற்கு சென்றிருந்தமையால், அபிவிருத்தி சேவை மற்றும் ஆவண உதவியாளர் சேவைகளுக்கு வழங்கியிருந்த

மோட்டார் சைக்கிள்களுக்காக அறவீடு செய்யப்பட்ட ரூபா 696,500 இற்கான தொகை தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் 2018 அக்தோபர் மாதம் முதல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

# மாகாண சபைகளின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

மாகாண சபைகளின் அறிமுகம்

மாகாண சபைகளின் ஒன்றித்த நிதிச் செயலாற்றல் கூற்று

மாகாண சபைகளின் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்று

மாகாண சபைகளின் வருமானம்

மாகாண சபைகளின் செலவினம்

மாகாண சபைகளின் சொத்துக்கள்

# மாகாண சபைகளின் அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1087 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மாகாண சபைகள் தற்போது செயற்பட்டு வருகின்றன. பதிமூன்றாவது திருத்தித்தில் உள்ளடங்கியுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மாகாண சபைகள் நிறைவேற்றுதல் வேண்டும். ஆதற்கமைய, விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளுராட்சி மற்றும் சமூக சேவைகள் போன்ற துறைகள் உள்ளிட்ட அநேக துறைகளின் மாகாண மட்டத்திலான அதிகாரங்கள் இந்த மாகாண சபைகளிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுவதுடன் அங்குள்ள யாப்பியல் தலைவராக முதலமைச்சர் செயற்படுகின்றார். முதலமைச்சர் உள்ளிட்ட 04 அமைச்சர்களால் மாகாண சபைகளின் அமைச்சரவை நிறைவேற்று அதிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதான செயலாளர் ஒருவர் நிர்வாக அதிகாரியாக கருமமாற்றுவதுடன் சனாதிபதியினால் அவர் நியமிக்கப்படுகின்றார். ஒவ்வொரு மாகாண சபைக்குமென மாகாண நிதியமொன்றும் அவசர தேவை நிதியமொன்றும் காணப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் திரட்டு நிதியத்தினை பெருமளவிற்கு ஒத்ததாக காணப்படுகின்ற இந்த மாகாண நிதியத்திற்கு அரசாங்க மானியம், வரி வருமானம் ஈட்டுதல் மற்றும் ஏனைய வழிகளிலிருந்து நிதிகள் கிடைப்பதுடன் நிதியத்திலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன செவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சொன்றின் கீழ் கொண்டுவரப்படாது மாகாண சபை நிறுவனங்கள், மாகாண அமைச்சுக்களின் கீழ் கொண்டுவரப்பட்டு சகல திணைக்களங்களையும் உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகளும் நிதிக்கூற்றுக்களும் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அதற்கும் மேலாக, ஒவ்வொரு மாகாண சபையும் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களைக் காண்பித்து மத்திய அரசாங்கத்தின் கணக்கினைப் போன்ற நிதிக்கூற்றுக்களையும் தயாரிக்கின்றன.

ஆரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபைகளின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேல், வடமத்திய, சப்ரகமுவ, வடமேல், மத்திய, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா ஆகிய 9 மாகாணங்களின் 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு இந்த அத்தியாயத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## மாகாண சபைகளிற்கான 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

| விபரம் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| **வருமானம்** | | |
| **அரசாங்கத்திடமிருந்தான வருமானம்** | | |
| அரசாங்க மானியம் | 200,841,189 | 198,792,188 |
| வரி வருமானம் | 6,287,894 | 5,858,351 |
| **மாகாண வருமானம்** | | |
| வரிவ வருமானம் | 75,096,438 | 71,193,811 |
| வரியல்லாத வருமானம் | 10,127,500 | 9,481,133 |
| ஏனைய வருமானம் | 5,949,267 | 2,866,628 |
| **மொத்த வருமானம்** | **298,302,288** | **288,192,111** |
| **செலவினம்** | | |
| ஆளனி வேதனம் | 198,203,699 | 187,724,905 |
| ஏனைய வழங்கல் சேவைகள் | 17,165,910 | 14,545,706 |
| மானியத்திலிருந்து மாற்றல்களும் ஏனைய மீண்டுவரும் செலவினமும் | 50,231,703 | 49,406,673 |
| **மொத்த மீண்டுவரும் செலவினம்** | **265,601,312** | **251,677,284** |
| அபிவிருத்திச் செலவினம் | 31,868,875 | 31,876,011 |
| **மொத்தச் செலவினம்** | **297,470,187** | **283,553,295** |
| **செலவை விஞ்சிய வருமானம்** | **832,101** | **4,638,816** |

## மாகாண சபைகளிற்கான 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடி நிதி நிலைமைக் கூற்று

| விபரம் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 172,688,283 | 85,191,431 |
| பிணை வைப்பு முதலீடு | 28,906 | 24,951 |
| முதலீடுகள் | 6,665,533 | 7,689,392 |
| முடிவுறா வேலைகள் | 95,874 | - |
| அருவச் சொத்துக்கள் | 8,715 | - |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **179,487,311** | **92,905,774** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| இருப்புக்கள் | 51,065 | 58,774 |
| மாகாண அரசாங்க உத்தியோகத்தர் கடன் | 16,102,576 | 14,757,383 |


| | | |
|---|---|---|
| மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான கட்டுநிதிக் கணக்கு மீதிகள் | 1,081,887 | 1,199,250 |
| அங்கீகரித்த முற்பணக் கணக்குகளிற்கான முற்பணங்கள் | 497,884 | 496,057 |
| நிலையான வைப்புக்கள் மற்றும் குறுங்கால முதலீடுகள் | 3,075,655 | 2,234,018 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 1,914,208 | 1,737,818 |
| மாகாண திறைசேரி மற்றும் அவசர தேவை நிதியம் | 26,887 | 514,340 |
| மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான முற்பணங்கள் | 2,465,894 | 2,770,141 |
| மாகாண அவசர தேவை நிதியத்திற்கான முற்பணங்கள் | 3,582 | 3,581 |
| வர்த்தக முற்பணங்கள் | 94,735 | 80,482 |
| முற்செலுத்துகை | 106,073 | 22,417 |
| மாகாண வணிகங்களிற்கான மானியம் | 249 | 2,969 |
| மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து பெறவேண்டிய மீதி | 43,896 | 350,079 |
| ஏனைய பெறவேண்டிய மீதி | 1,912,999 | 1,192,006 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 15,425,105 | 18,662,063 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **42,802,695** | **44,081,378** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **222,290,006** | **136,987,152** |
| | | |
| திரட்டிய நிதியமும் ஒதுக்கமும் | | |
| பங்களிப்பு மூலதனம் | 195,894,215 | 107,553,674 |
| மிகை / குறை | (474,065) | 108,520 |
| அவசர தேவை நிதியம் | 24,139 | 21,683 |
| பெறுமானத்தேய்வு நிதியம் | 141,785 | 108,520 |
| சட்டரீதியான முதலீடு | 839,554 | - |
| ஒதுக்கம் | 10,455,659 | 5,994,077 |
| மூலதனச் சொத்துக்கள் கையேற்றல் மானியம் | 1,458,266 | - |
| | **195,586,074** | **117,205,741** |
| **நீண்டகால பொறுப்புக்கள்** | | |
| நிதிக் குத்தகை – வாகனங்கள் | 21,844 | 104,841 |
| பிணைதாரர்களின் பிணை வைப்பு | 20,250 | 18,551 |
| பிணை வைப்பு மீதான வட்டி | 8,656 | 6,401 |
| ஏனைய செலுத்த வேண்டியவை | 44 | 227 |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - |
| நிதிக் குத்தகை – வாகனங்கள் | 93,609 | 78,310 |
| வைப்புக் கணக்குகள் | 6,760,477 | 5,938,918 |
| ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 7,045,573 | 7,640,086 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **13,950,453** | **13,787,334** |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | **222,290,006** | **136,987,152** |

## மாகாண சபை வருமானம்

மாகாண சபை வருமானம் அரசாங்க மானியம், வரி மற்றும் வரியல்லாத வருமானங்களை உள்ளடக்கியதாகும்.

## அரசாங்க மானியம்


2018 ஆம் ஆண்டில் 09 மாகாணங்களிற்காக வழங்கப்பட்டிருந்த அரசாங்க மானியம் ரூபா 204 பில்லியனாக காணப்பட்டதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 2 பில்லியன் அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் அதிகூடிய மானியமான 15 சதவீதம் மத்திய மாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 30 பில்லியனாகும் அத்துடன், மேல் மாகாணத்திற்கு மிகைக் குறைந்த மானியம் வழங்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 17 பில்லியனாக காணப்பட்டு மொத்த மானியத்தில் 8 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த செலவினம் ரூபா 2,734 பில்லியனில் 7.4 சதவீதமான ரூபா 204 பில்லியன் அரசாங்க மானியமாக வழங்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழேயுள்ள உரு 58 இல் காட்டப்படுகின்றன.




உரு 58 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாகாண சபைகளிற்கு வழங்கப்பட்ட அரசாங்க மானியம்
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

## வரி வருமானம்

2018 ஆம் ஆண்டில் அனைத்து மாகாண சபைகளினதும் வரி வருமானம் ரூபா 75 பில்லியனாக காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ஏறத்தாழ 5 சதவீத அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் அதிகூடிய வரி வருமானமான ரூபா 43 பில்லியன் அல்லது 75 சதவீதம் மேல் மாகாண சபையால் சேகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரி வருமானமான ரூபா 1,784 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மாகாண சபைகளால் ஏறத்தாழ 4 சதவீதத்தை மாத்திரமே சேகரிக்க முடிந்திருந்தது. ஒவ்வொரு மாகாண சபையினாலும் 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டிருந்த வரி வருமான விபரங்கள் உரு 59 மற்றும் 60 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 59 மற்றும் 60 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம்
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்


## வரியல்லாத மற்றும் ஏனைய வருமானங்கள்

வரியல்லாத மற்றும் ஏனைய வழிகளிலிருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 22 பில்லியன் வருமானம் மாகாண சபைகளால் ஈட்டப்பட்டிருந்தது. இந்த வருமானத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 6 பில்லியன் வருமானமும் உள்ளடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் மேல் மாகாணம் ரூபா 4 பில்லியன் வரியல்லாத வருமானத்தை ஈட்டியிருந்தது. இருப்பினும், மாகாண சபைகளின் மொத்த வரியல்லாத வருமானம் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரியல்லாத வருமானத்தில் 4 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

## அரசாங்க மானியமும் மாகாண சபைகள் உழைத்த வருமானும்

2018 ஆம் ஆண்டில் மாகாண சபைகளிற்காக ரூபா 203 பில்லியன் அரசாங்க மானியம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கொப்பாக மாகாண சபைகளினால் ரூபா 97 பில்லியன் வருமானம் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. அதன்படி மாகாண சபைகளை நடாத்திச் செல்வதற்காக ஏறத்தாழ 47 சதவீதமான வருமானத்தை அரசாங்கம் வழங்கவேண்டியிருந்தது. விபரங்கள் கீழேயுள்ள உரு 61 இல் காண்பிக்கப்பட்டுள்ளது

.





உரு 61 மாகாண சபைகளின் வருமானச் சேர்க்கை
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

## மாகாண சபைகளின் செலவினம்

ஒவ்வொரு மாகாண சபையினாலும் ஆளனி வேதனம், ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள், பேணுகைச் செலவினம் உள்ளிட்ட மீண்டுவரும் செலவினமும் மூலதனப் பண்புடைய அபிவிருத்திச் செலவினமும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 300 பில்லியனாகும். அது நாட்டின் ஒட்டுமொத்தச் செலவினத்தில் 10 சதவீதமாகும்.

## மீண்டுவரும் செலவினம்


மீளாய்வாண்டில் மாகாண சபைகளால் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 265 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மாகாண சபைகளால் ரூபா 97 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தத. அதற்கமைய, மாகாண சபைகளால் ஈட்டப்பட்டிருந்த வருமானத்தை ரூபா 168 பில்லியன் அல்லது 273 சதவீதத்தால் மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 251 பில்லியன் மீண்டுவரும் செலவினம் செய்யப்பட்டிருந்தது. மாகாண சபைகளால் செய்யப்பட்டிருந்த மீண்டுவரும் செலவினம் 2018 இல் அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்த மீண்டுவரும் செலவினத்தில் 21 சதவீதமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு மாகாண சபையினாலும் ஈட்டப்பட்டிருந்த வருமானம் அவற்றின் மீண்டுவரும் செலவினத்தை மேற்கொள்வதற்கு போதாதிருந்ததுடன், அது 100 சதவீதம் முதல் 659 சதவீதம் வரையான வீச்சில் அமைந்திருந்தது. அவ்வாறே அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 203 பில்லியன் வருமானத்தைக் கணக்கிலெடுத்த பின்னரும் கூட மாகாண சபைகளின் மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு அது போதுமானதாக இருக்கவில்லை. அது ரூபா 63 பில்லியன் முதல் ரூபா 266 பில்லியன் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரங்கள் கீழேயுள்ள உரு 62 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 62. மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் அவற்றின் மீண்டுவரும் செலவினம்
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

## ஆளுக்குரிய வேதனங்கள்


2018 ஆம் ஆண்டில் ஆளுக்குரிய வேதனமாக ரூபா 198 பில்லியன் மாகாண சபைகளால் செலவிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 188 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாண சபையினாலும் முன்னைய ஆண்டைக் காட்டிலும் மீளாய்வாண்டில் அதற்காக கூடுதலாக செலவு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் கீழேயுள்ள உரு 62 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 62 மாகாண சபைகளால் செய்யப்பட்டிருந்த ஆளனிச் செலவினம் - 2017 - 2018
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

## அபிவிருத்திச் செலவினம்

மீளாய்வாண்டில் 09 மாகாண சபைகளால் அபிவிருத்திச் செலவினமாக ரூபா 34.8 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் இச்செலவினம் ரூபா 34.3 பில்லியனாகக் காணப்பட்டது. மாகாண சபைகளின் அபிவிருத்திச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் மொத்த முதலீடு ரூபா 625 பில்லியனாகக் காணப்பட்டது. மேல் மாகாண சபையினால் ஆகக்கூடிய அபிவிருத்திச் செலவினமாக ரூபா 12.6 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கிழக்கு மாகாண சபையால் ஆகக் குறைந்த அபிவிருத்திச் செலவினமான ரூபா 0.5 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் 9 மாகாண சபைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்திச் செலவினத்தை மீண்டுவரும் செலவினத்துடன் ஒப்பிடுகையில் மொத்த மீண்டுவரும் செலவினத்தில் அபிவிருத்திச் செலவினம் 13 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. மாகாண சபைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்திச் செலவினத்தை மீண்டுவரும் செலவினத்துடன் ஒப்பிட்டு உரு 63 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 63 மாகாண சபைகளின் அபிவிருத்தி மற்றும் மீண்டுவரும் செலவினம் - 2018
மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

## மாகாண சபைகளின் சொத்துக்கள்

2017 ஆம் ஆண்டில் ரூபா 136 பில்லியன் என இனங்காணப்பட்டிருந்த மாகாண சபைகளின் மொத்தச் சொத்துக்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 222 பில்லியன் என இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 63 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அளவு ரூபா 2,133 பில்லியனாகக் காணப்பட்டது. அதற்கமைய, 2108 ஆம் ஆண்டில் மாகாண சபைகளினதும் மத்திய அரசாங்கத்தினதும் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,355 பில்லியனாகும்.

## நடைமுறையல்லாத சொத்துக்கள்

2017 ஆம் ஆண்டில் மாகாண சபைகளில் காணப்பட்ட மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 93 பில்லியனாக இருந்தது. அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 86 பில்லியனால் அதிகரித்து ரூபா 179 பில்லியனாக மாற்றமடைந்திருந்தது. இந்த நடைமுறையல்லாத சொத்துக்களில் 08 மாகாண சபைகளினால் விலைமதிப்புச் செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 172.6 பில்லியனும் முதலீடுகள் ரூபா 7.7 பில்லியனும் உள்ளடங்கியிருந்தன. மீளாய்வாண்டில் மத்திய அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியிருந்த ரூபா 1,087 பில்லியன் நடைமுறையல்லாத சொத்துக்களுடன் இணைத்து மாகாண சபைகளினதும் மத்திய அரசாங்கத்தினதும் மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,266 பில்லியனாகும்.

# மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டுக்காக ரூபா 25,218 மில்லியன் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் உள்ளக வழிகளினூடாக ரூபா 51,766 மில்லியனுமாக ரூபா 76,984 மில்லியன் கூட்டுத்தொகை வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்திலிருந்து 2018 இன் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக முறையே ரூபா 61,119 மில்லியன் தொகையும் ரூபா 15,865 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தம் ரூபா 76,984 மில்லியன் செலவின மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அரசாங்க மானியமாக ரூபா 21,023 மில்லியன் தொகையும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 47,109 மில்லியன் தொகையுமாக ரூபா 68,132 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கு ரூபா 56,805 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்கு ரூபா 12,649 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்த ரூபா 69,454 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. ஓ்

## குறிக்கோள்களிற்கு முரணான செயற்பாடுகள்

மேமா/ஜய/மாலம்பே ஸ்ரீ ராகுல மகளிர் கல்லூரியின் 2015 சந்தை செயற்திட்டத்தின் மூலம் ரூபா 1.87 மில்லியனும் 2016 சந்தை செயற்திட்டத்தின் மூலம் ரூபா 1.43 மில்லியனுமாக மொத்தம் ரூபா 3.25 மில்லியன் வருமானம் உள்ளக வளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக திரட்டப்பட்டிருந்தது. அந்த நிதியிலிருந்து உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணித்தல் இடம்பெறாதிருந்ததுடன் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் திரட்டப்பட்டிருந்த ரூபா 3.30 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## சொத்துக்கள் முகாமைத்துவம்

2017 யூன் 27 ஆந் திகதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினால் குருதி உரைதல் பிரிவிற்காக 04 Dialysis Machine, 01 Ro Plant மற்றும் 02 Dialysis Bed ஆகியன கிடைத்திருந்தன. இருப்பினும், அந்த உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், அதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரையிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. வைத்தியசாலையின் வேண்டுகோளின்றி கிடைத்திருந்த இந்த உபகரணங்கள் அடங்கிய பெட்டிகள் புதிய கட்டிடத்தின் 6 ஆவது மாடியிலுள்ள வராந்தாவில் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தன. போதி உடைக்கப்படாத இந்த உபகரணங்களின் உத்தரவாதக் காலம் பயன்படுத்தப்படாது முடிவடைந்திருந்தது. அவ்வாறே இப்பிரிவின் செயற்பாடுகளிற்காக மூன்று மருத்துவர்களும், 2 தாதிகளும் கனிஷ்ட ஊழியர் ஒருவரும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

மினுவான்கொட ஆதார வைத்தியசாலையில் தேவையான ஏனைய வசதிகள் இன்மை காரணமாக 2015 ஆம் ஆண்டில் ஆய்வுகூடத்திற்குக் கிடைத்திருந்த 3 Part Ha matology, Semi – Auto mated Biochemistry Analyzer மற்றும் 1000 VA Isolation Transformer என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது பொதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் உத்தரவாதக் காலமும் பொதியினுள் இருக்கையிலேயே முடிவடைந்திருந்தது.

## விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

மாகாண குறித்துரைத்த மானியத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் மக்களின் தொழில்நுட்ப அறிவை முன்னேற்றி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாய ஆலோசகர்களிற்கு வழங்கப்பட்டிருந்த 45 டெப் கருவிகளிற்காக ரூபா 1.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் மாதம் வரை அவற்றிற்கான

தரவு இணைப்பை பெற்றுக்கொள்வதற்கென ரூபா 156,078 செலவிடப்பட்டிருந்தது. 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதிய WP/AG/PD/3/1/2-2018 ஆம் இலக்க கடிதத்தன் மூலம் அனைத்து டெப் கருவிகளும் மீளக் கையேற்கப்பட்டிருந்தன. 2019 சனவரி 30 ஆந் திகதியளவில் அனைத்து டெப் கருவிகளும் மீளப்பெறப்பட்டிருந்ததுடன் அனைத்து பெற்றரிகளும் செயலிழந்து காணப்பட்டன.

## ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

2017 யூன் 14 ஆந் திகதி உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதியில் 30 சதவீதமாகிய ரூபா 6.59 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டு கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் கர்ப்பிணி தாய்மார்களிற்கான கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நிர்மாணக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான காலம் முடிவடைந்து ஏறத்தாழ ஒரு ஆண்டு கடந்திருந்த போதிலும், அஸ்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 16 ஆந் திகதி பிணை முறியினை காசாக்கத் தவறியமையால் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியான ரூபா 2.67 மில்லியன் கழிக்கப்பட்ட பின்னர் ரூபா 3.92 மில்லியன் தொகையினை அறவிட முடியாது போயிருந்தது.

## முகாமைத்துவ செயற்திறனின்மை

பாடசாலைகளிலுள்ள வகுப்பறைக் கட்டிடத் தேவைகளைக் கருத்திற்கொள்ளாது ஏனைய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. யுடியன கனிஷ்ட வித்தியாலய மற்றும் பதுரலிய மகா வித்தியாலய மாணவர்கள் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகளில் கல்வி கற்கையில் அப்பாடசாலைகளில் ரூபா 42.38 மில்லியன் செலவில் அதிபர் மற்றும் ஆசிரியர்களிற்கான உத்தியோகபூர்வ இல்லங்களும் உணவுச்சாலையும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## மிகை அறவீட்டை விதித்தல

நிறைவேற்றுத் தரத்திலுள்ள 11 உத்தியோகத்தர்களிற்கு ஆளுநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் மீது உத்தியோகபூர்வ வதிவிட வாடகையாக மாதாந்தம் ரூபா 30,000 வீதம் 2017 நவம்பர் முதல் 2019 ஏப்ரல் வரை ரூபா 5.34 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இவர்களில் 10 உத்தியோகத்தர்கள் மேல் மாகாணத்தில் குடியிருப்போராக காணப்பட்டதுடன் அவர்களில் 08 பேர் நிரந்தர வீட்டு முகவரிகளில் குடியிருப்போராகவும் உள்ளனர்.

## கொள்வனவு

சிரம சவிய வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சுச் செயலாளரினால் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 7.50 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து 2018 இன் பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளடக்கப்படாதிருந்த விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதலை கொள்வனவு வழிகாட்டல்களிற்கு புறம்பாக மேற்கொண்டு அதற்காக ரூபா 7.44 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆக்கொள்வனவில் ரூபா 596,625 பெறுமதியான 35 புல்வெட்டும் இயந்திரங்களும் உள்ளடங்கியிருந்தன. அவ்வாறே, 2019 சனவரி 11 ஆந் திகதி மீண்டும் 85 புல்வெட்டும் இயந்திரங்கள் கொள்வனவு வழிகாட்டல்களிற்கு புறம்பாக ரூபா 1.71 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்டிருந்த 100 புல்வெட்டும் இயந்திரங்கள் “சிதமு” செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டோருக்கு தலைவரினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

# மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையினால் 2018 ஆண்டுக்காக ரூபா 8,741 மில்லியன் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் உள்ளக வழிகளினூடாக ரூபா 8,442 மில்லியனும் இணைந்த ரூபா 17இ 183 மில்லியன் வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த வருமானத்தில் ரூபா 34,176 மில்லியன் மீண்டுவரும் செலவீனங்களுக்கும் ரூபா 8,741 மில்லியன் மூலதன செலவீனங்களிற்கும் என கூட்டுமொத்தம் ரூபா 42,917 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 4,663 மில்லியன் மற்றும் உள்ளக வழிகளினூடாக ரூபா 7,967 மில்லியன் இணைந்த ரூபா 12,630 மில்லியன் வருமானமாக பெறப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கு ரூபா 32,278 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்கு ரூபா 4,663 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்த ரூபா 36,941 பயன்படுத்தப்பட்டிருந்தது.

தென் மாகாண சபை தொடர்பில் 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## நிதிகளைப் பயன்படுத்தாது முதலீடு செய்திருந்தமை

மத்திய மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,782.40 மில்லியன் தொகை மாகாண அபிவிருத்திக்காக செலவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்படாது குறித்த நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 163.21 மில்லியன் வட்டி வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. முாகாண சபையினால் பேணப்பட்டு வருகின்ற இரண்டு நடைமுறைக் கணக்குகளில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 413.38 மில்லியன் மீதியொன்று வைக்கப்பட்டிருந்தது. ஆரசாங்கம் 27 சதவீத வட்டியின் கீழ் மேலதிகப்பற்று வசதியினைப் பெற்று மாகாண சபைக்கு ரூபா 4,663 மில்லியன் அரசாங்க மானியமாக வழங்கியிருந்த போதிலும், மாகாண சபையினால் ரூபா 1,782.40 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 318.03 மில்லியன் தொகையினை அரசாங்கம் மேலதிகமாக செலவிட வேண்டியிருந்தது.

## அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள்

கண்டி சீதாதேவி மகளிர் கல்லூரிக்கு காணியினை கையேற்பதற்காக இழப்பீட்டையும் வட்டியினையும் செலுத்துகையில் காணி அமைச்சினதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் கட்டளையான 17 ஆவது தீர்மானத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிற்கு மாத்திரம் இழப்பீடும் வட்டியும் செலுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அத்தீர்மானத்தில் பெயர் குறிப்பிடப்படாத தரப்பினர்களிற்கு இழப்பீடாக ரூபா 1.47 மில்லியனும் வட்டியாக ரூபா 1.13 மில்லியனுமாக மொத்தம் ரூபா 2.60 மில்லியன் கண்டி பிரதேச செயலகத்தினால் அதிகாரமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது.

## நீர் வரவு வரி

தொலுவ பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றினால் டெல்ராவத்த மற்றும் ஸ்ரெலன்பேர்க் தோட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள இரண்டு சிற்றளவு நீர் மின்வலு ஆலைகளின் மூலம் 2016 ஆம் ஆண்டில் முறையே 5,222,056 மற்றும் 2,931,126 கிலோவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், காணி ஆணையாளர் நாயகத்தின் 2010 மார்ச் 11 ஆந் திகதிய 2010/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆண்டொன்றிற்கு 1 கிலோவொட் இற்கு ரூபா 100 வீதம் செலுத்த வேண்டிய நீர் வரவு வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## விளைவற்ற வளம்

- ஹங்குரன்கெத கோனகன்தென்ன பிரதேச மருத்துவமனை மற்றும் சிறுவர் சிகிச்சை

நிலையம் என்பன 2004 முதல் 2017 வரையான காலத்தில் 03 கட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 2019 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது காடு முளைத்திருந்தது. இவ்வாறு ஏறத்தாழ 2000 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய கீழ் மாடி 2003 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2004 பெப்ரவரி 15 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும், சிகிச்சையளித்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 6.92 மில்லியன் செலவில் முதலாம் மாடி நிர்மாணிக்கப்பட்டு கூரை பொருத்தப்பட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

- ஹங்குரன்கெத நகரத்தில் புதிய இரண்டு மாடி ஆயுர்வேத வைத்தியசாலையினை நிர்மாணிப்பதற்காக 2005 ஆம் ஆண்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு ரூபா 2.5 மில்லியன் செலவில் ஏறத்தாழ 1500 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய கீழ் மாடி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு கொங்றீட் தளம் இடப்பட்டிருந்தது. இருப்பினும், எஞ்சிய வேலைகள் பூரணப்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

## சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளாகின்ற அரசாங்க நிறுவனமாக இனங்காணப்பட்டிருந்த கொன்கஹவல பிரதேச வைத்தியசாலையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 2.74 மில்லியன் செலவில் அவசர விபத்துப் பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த வைத்தியசாலை மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் காணப்படுகின்றமையால் அந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக காணப்பட்டது.

- பல்லேபொல பிரதேச வைத்தியசாலையில் 2004 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய சிகிச்சையளித்தல் கட்டிடம் நிலத்தில் புதையுறும் நிலைக்கு உள்ளாகியிருந்தமையால் அக்கட்டிடத்தை திறப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## பாடசாலைக் கட்டிட நிர்மாணங்களைப் பிற்போடுதல்

மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 07 பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2016 முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியிலிருந்து முறையே ரூபா 45.58 மில்லியன், ரூபா 31.11 மில்லியன் மற்றும் ரூபா 37.71 மில்லியன் தொகை பிற்போடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அந்த நிதி ஏற்பாடுகளை வேறு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்த முடியாதுள்ளது.

## சிகிச்சையளித்தல் நிலையம் மூடப்படுதல்

வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் 1200 இற்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளர்கள் காணப்படுவதாகவும், அந்த நிலைமையினைத் தடுப்பதற்காக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ரூபா 41.46 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2017 மார்ச் 13 ஆந் திகதி பொது மக்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த மருத்துவ நிலையம் மத்திய மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய மருத்துவர்கள் இன்மை காரணமாக 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அக்கட்டிடம் எவ்வித பயன்பாடுமின்றி மூடப்பட்டிருந்தது.

## நட்டங்களும் இழப்புக்களும்

மாகாண கல்வி திணைக்களத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களின் படி 03 நிகழ்ச்சித்திட்டங்களிற்குரிய 181 நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட ரூபா 18.51 மில்லியன் நட்டங்களும் இழப்புக்களும் காணப்பட்டன. அவற்றில் 68 நிகழ்வுகளிற்குரிய ரூபா 6.08 மில்லியன்

நட்டங்களும் இழப்புக்களும் 5 ஆண்டுகளிற்கு மேலாகவும் 10 ஆண்டுகளிற்கு உட்பட்ட காலமாகவும் நிலவி வந்திருந்தது. 53 நிகழ்வுகளிற்குரிய ரூபா 3.57 மில்லியன் நட்டங்களும் இழப்புக்களும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிலவி வந்திந்தது. நீண்டகாலமாக நிலவி வருகின்ற இந்த நட்டங்களையும் இழப்புக்களையும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## முறையற்ற கடன் வழங்கல்

மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு நிதியத்திலிருந்து முறையற்ற விதத்தில் கடன்கள் வழங்கப்பட்டிருந்தமையால் 2018 திசெம்பர் திகதி வரை 01 முதல் 27 ஆண்டுகள் வரையான கால வீச்சில் நிலவிவருகின்ற ரூபா 17.12 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதி மீஜளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் உள்ளடங்கியுள்ள 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2.27 மில்லியன் கடன் மீதி முழுமையாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

## தேறிய மிகையினை மாகாண நிதியத்திற்கு செலவு வைத்திருக்காமை.

மாகாண சபை நிதி விதிகள் 378(2) இன் பிரகாரம் முற்பண நடவடிக்கையொன்றின் தேறிய மிகை மாகாண நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் மருந்துகள் முற்பண நடவடிக்கையின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 13.99 மில்லியன் திரண்ட நிதி மாகாண சபையின் வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## வாடகை அறவிடப்பட்டிருக்காமை

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 1.23 மில்லியன் பெறுமதியான பால் குளிரூட்டல் உபகரணம் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் உடுதும்பர மிருக வைத்திய அலுவலகத்திற்குச் சொந்தமான கட்டிடமும் குளிரூட்டல் உபகரணமும், நலன்புரிச் சங்கமொன்றிற்கு 2015 மார்ச் 25 ஆந் திகதி பாதுகாப்பு வைப்பின்றி உடன்படிக்கை கைச்சாத்திட்டு வழங்கப்பட்டிருந்தது. அச்சங்கத்தினால் வெளித்தரப்பினருக்கு ரூபா 6,000 மாதாந்த வாடகையின் கீழ் இரண்டு ஆண்டுகளிற்கு உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வாடகைக்கு விடப்பட்டுள்ளமை மிருக வைத்திய அலுவலகத்திற்கு ஏறத்தாழ 3 ½ ஆண்டுகளின் பின்னரே தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த ஆதனங்களை நலன்புரிச் சங்கத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஆதனங்கள் கையளிக்கப்பட்ட திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2018 தெசெம்பர் 31 வரையிலும் அரசாங்கத்திற்கு வருமதியான ரூபா 264,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

# தென் மாகாண சபை

தென் மாகாண சபையினால் 2018 ஆண்டுக்காக ரூபா 25,563 மில்லியன் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் உள்ளக வீதிகளினூடாக ரூபா 8,258 மில்லியனும் இணைந்த ரூபா 33,911 மில்லியன் வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த வருமானத்தில் ரூபா 28,950 மில்லியன் தொடர்ச்சியான செலவீனங்களுக்கும் ரூபா 4,761 மில்லியன் மூலதன செலவீனமாகவும் இணைந்த ரூபா 33,711 மில்லியன் ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 26,889 மில்லியன் மற்றும் உள்ளக வீதிகளினூடாக ரூபா 9,172 மில்லியன் இணைந்த ரூபா 36,061 மில்லியன் ரூபா வருமானமாக பெறப்பட்டது. 2018 ஆண்டு தொடர்ச்சியான செலவீனம் 30,147 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் செலவீனங்களை விஞ்சிய வருமானம் ரூபா 586 மில்லியன் ஆகும்.

தென் மாகாண சபையில் 2018 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் முக்கியமான சுருக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

## மின்சார வசதிகளை பெற்றுக்கொடுத்தல்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மித்தெனிய நெச்சூரல் பாக் தனியார் ஏல காணிக்கு 2015 ஒக்டோபர் 20 திகதி விநியோக உரிமைப்பத்திரத்தின் விண்ணப்பத்திற்கு அமைய மின்சார வசதிவாய்புக்கள் காணப்பட்டதாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எனினும் தென்மாகாண சபையின் மீன்பிடி , கால்நடை உற்பத்திகள் மற்றும் அபிவிருத்தி , சுற்றாடல் விவகார , கிராமிய தொழிற்துறை , மின்சக்தி மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 2018 ஜுன் 21 ஆம் திகதி குறித்த காணிக்கு மின்சார வசதியை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1.67 மில்லியன் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## மேலதிகமாக செலுத்துதல்

தென் மாகாண முதலமைச்சி , நிதி மற்றும் திட்டமிடல் , சட்டம் மற்றும் ஒழுங்கு , உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய, சுற்றுலா மற்றும் பொறியியல் சேவை அமைச்சின் வறுமை ஒழிப்பு மற்றும் விஷேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு 04 பௌசர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகளை கவனத்திற் கொள்ளாமல் கொள்முதல் குழுவினால் குறித்த கொள்வனவு நடவடிக்கை இடம்பெற்றமையினால் 9.63 மில்லியன் ரூபா கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது.

## பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாதல்

தென் மாகாண கல்வி , காணி மற்றும் காணி அபிவிருத்தி , பெருந்தெருக்கள் மற்றும் செய்தி அமைச்சி ஊடாக 659 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை ரூபா 3.00 மில்லியன் செலவிடப்பட்டுள்ளமையினால் ரூபா 1.06 மில்லியன நிதி ரீதியான நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## நட்டங்களை வசூலிக்காமை

தென் மாகாண கல்வி , காணி மற்றும் காணி அபிவிருத்தி , பெருந்தெருக்கள் மற்றும் செய்தி அமைச்சின் வாகனமொன்று மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு விபத்துக்குள்ளாகி காணப்பட்டது. அந்த விபத்தினால் வாகனத்திற்கு ஏற்பட்ட முழு நட்டம் ரூபா 1.63 மில்லியன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மாகாண அமைச்சின் செயலாளரினால் 2019 மார்ச் 22 திகதிக்குரிய கடிதத்தில் குறித்த நட்டம் ஏற்படுத்தப்பட்ட தரப்பிரனரிடமிருந்து அறவிடப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2019 மே 31 ஆம் திகதி வரை குறித்த

நட்டத்தொகையை அறவிடுக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதியை முறைக்கேடாக பயன்படுத்தியமை

தென் மாகாண பாடசாலை திணைக்களத்தின் காலி வலய கல்வி காரியாலத்திற்குரிய பாடசாலைகளின் நலன்புரி வசதிகளை மேம்படுத்துவதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கில் வைப்பிலிப்படவேண்டிய நிதிக்கு மேலதிகமாக ரூபா 846,000 மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகளினால் வைப்பிலிடப்பட்டது. குறித்த நிதி தென் மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை கல்வியை அறிவின் கேந்திரமாக கொண்டதாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு பெற்றுக்கொடுத்த ஒரு மில்லியன் ரூபா உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கில் காணப்பட்ட நிதியோடு இணைந்த 2.96 மில்லியன் ரூபா பாடசாலை அதிபரினால் முறைக்கேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

## முறையற்ற கொடுப்பனவு

தென் மாகாண ஆளுநர் செயலக அலுவலகத்தின் கௌரவ முன்னாள் ஆளுநரின் பிரத்தியேக பணியாளர் குழுவில் 2006 நவம்பர 01 ம் திகிதி முதல் கடமையாற்றிய பெண் ஊழியர் 2012 ஏப்ரல் 24 ம் திகதி முதல் தேசிய தொல்பொருள் திணைக்களத்தில், தொல்பொருள் உதவியாளராக கடமையாற்றியுள்ளார். குறித்த காலப்பகுதியல் அதாவது 2012 ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் 2015 ஜனவரி மாதம் வரை தென் மாகாண ஆளுநர் செயலக அலுவலகம் மற்றும் தேசிய தொல்பொருள் திணைக்களம் என்பவற்றில் சேவையாற்றிமைக்காக சம்பளமாக முறையே ரூபா 760,368 மற்றும் ரூபா 733,267 வழங்கப்பட்டுள்ளது.

# வடக்கு மாகாண சபை

வட மாகாண சபையானது அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 26,669 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,500 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 23,169 மில்லியன் தொகையான வருமானத்தை 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பிட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 23,323 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 4,966 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 28,289 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 21,788 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 4,956 மில்லியன் உள்ளடங்கலாக 2018 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 26,744 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானத்தில் 2018 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 22,109 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 3,463 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 25,572 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த செலவினம் 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்தது.

மாகாண சபையின் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## முறையற்ற நியமனங்கள்

- 2015 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமல் மின்னுயர்த்தி தொழிற்படுத்துபவர் நியமிக்கப்பட்டிருந்தனர் மற்றும் 2015 திசெம்பர் 31 தொடக்கம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான சம்பளமாக ரூபா 3.1 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்த கட்டடத்தில் எந்த விதமான மின்னுயர்த்திகளும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பத்து வகைகளிலான பணியாளர்களில் பதினாறு ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

- இருப்பினும், ஒரு சமையல்காரர், ஒரு மின்னுயர்த்தி தொழிற்படுத்துபவர், ஒரு தொழிலாளர், ஒரு உதவியாளர் மற்றும் மூன்று சுகாதார சேவை உதவியாளர்கள் உட்பட ஏழு ஊழியர்கள் கடமைப்பட்டியலுக்கு மாறாக தடுப்பூசி போடுவதற்கும் மற்றும் வாகனம் ஓட்டுவதற்கும் நியமிக்கப்பட்டனர்.

- 2014 ஆம் ஆண்டில் ஒரு பொறியியலாளர் மற்றும் ஒரு கால்நடை அறுவைச் சிகிச்சை நிபுணர் நியமனம் தொடர்பாக முறையான அனுமதிகள் பெற்றுக்கொள்ளாமல் மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். 2015, 2014 ஆம் ஆண்டுகளுக்கான மொத்த சம்பளம் மற்றும் பயணச்செலவினங்களாக ரூபா 1,135,309 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- கல்வி அமைச்சின் செயலாளரினால் 31 யூலை 2007 ஆம் தியதியன்று முன்னைய சேவையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரியருக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் முறையற்ற நியமனம் வழங்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் சம்பளக் கொடுப்பனவாக ரூபா 428,482 செலுத்தப்பட்டிருந்தன.

- 2017 செப்டம்பர் 07 ஆம் திகதி அன்று நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவில், இப்பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கான குழுக்களை நியமிப்பதற்கும் மற்றும் அந்த

நியமனத்தின் செல்லுபடியாகும் தன்மை பரிந்துரையை வழங்கவும் சிஏஓ(CAO)/ஏஓ(AO) பணிக்கப்பட்டிருந்தனர். இந்த நியமனமானது முறையற்ற நியமனம் என தெரிவு செய்யப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டன. இதன் விளைவாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அரசாங்கத்திற்கு நிதி நட்டமாக உள்வாங்கப்பட்டன.

- மேலும், வடக்கு மாகாணத்தின் மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவின் முன்னைய செயலாளரிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை நடத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தன. எனினும் அவர் மாகாண சேவையில் வேலை செய்வதற்கு மட்டுமே பொறுப்புடையவராவர்.

- ஆளுனரிடம் கையாளுதல் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல் காரணமாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு எதிரான பொது அதிகாரிகள் அடங்கிய பொருத்தமான ஆணைக்குழுவின் மூலம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவிற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.

## மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டில் ரூபா 2,934,429 பெறுமதியான காசு மோசடியானது நடைபெற்றுள்ளது. அந்த நிதி மோசடி தொடர்பில் ஒரு முகாமைத்துவ உதவியாளர் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் அவ் அலுவலகரிடமிருந்து ரூபா 320,000 மட்டுமே பெறப்பட்டிருந்தது. வழக்கினை முடிவுறுத்துவதற்கு நினைவூட்டல் நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக விசாரணை நடைபெற்றன. குற்றம் சட்டப்பட்ட முகாமைத்துவ உதவியாளரிடமிருந்து மோசடியில் மீதியாக உள்ள தொகை ரூபா 2,614,429 அறவீட்டுக்கொள்ளப்படவில்லை.

30 மே 2019 திகதியன்று மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், 2018 சனவரி தொடக்கம் 2019 மே காலப்பகுதியில் அபிவிருத்தி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட பண மோசடி காரணமாக ரூபா 592,750 நட்டமானது அவதானிக்கப்பட்டுள்ளது. வருமான சேகரிப்பு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடுகளில்லாத காரணத்தினால் அத்தகைய பண மோசடி செய்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது வங்கியில் வைப்புச் செய்தல் மற்றும் காசு சேகரித்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தனி ஒரு நபரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## வெளிப்படையான முறைமையீனங்கள்

மன்னார் வலயக்கல்வியின் 02 பாடசாலை அதிபர்கள், 151 ஆசிரியர்கள் மற்றும் 17 அலுவலகப் பணியாளர் வடமேற்கு மாகாணத்திலுள்ள (புத்தள மாவட்டம்) ஆறு பாடசாலைகளில் பணியாற்றுகின்றனர். 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான சம்பளம் மற்றும் ஏனைய படிகளுக்காக ரூபா 160.09 மில்லியன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2019 யூன் 28 ஆம் திகதி வரை வடமேற்கு மாகாணத்திலிருந்து அத்தொகையினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தினால் செலவு செய்யப்பட்டிருந்த தொகையானது வடக்கு மாகாண சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமையானது அவதானிக்கப்பட்டிருந்தன.

## குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

கடைத்தொகுதி, வாராந்த சந்தைகள், சிறுவர் பூங்காக்கள், அதிபர்களுக்கான விடுதிகள் மற்றும் சுற்றுலா கட்டடங்கள் போன்ற பதினெட்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு நெல்சிப், ஈஎன்ஆர்ஈபி, மற்றும் பிஎஸ்டிஜீ செயற்திட்டங்களிலிருந்து ரூபா 259.18 மில்லியன் கிரயமான நிதி பயன்படுத்தி அமைக்கப்பட்டவையானது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## வருமான முகாமைத்துவம்

2018 திசெம்பர் 31 இல் மாநகர சபை, 05 நகர சபை மற்றும் 28 பிரதேச சபைகளிலிருந்து முத்திரை தீர்வை வரி ரூபா. 774.02 மில்லியன், நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா. 220.98 மில்லியன், வரி ரூபா. 238.78 மில்லியன் மற்றும் ஏனைய வருமான நிலுவைகள் ரூபா. 118.3 மில்லியன் ஆகிய வருமான நிலுவையாக காணப்பட்டதன் காரணமாக ரூபா. 1,352.08 மில்லியன் பெறுமதியான சேகரிக்கப்படாத வருமானம் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

## ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 6.4 இன் பிரகாரம், அருகிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை (என்எஸ்பிஎஸ்) செயற்திட்டத்தின் கீழுள்ள 54 எண்ணிக்கையான பாடசாலைகளின் வேலை குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.2018 யூன் 21 கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 30 தொடக்கம் 559 நாட்கள் வரை காலதாமங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும் மதிப்பிடப்பட்ட தாமதக் கட்டணங்கள் ரூபா 53.13 மில்லியன் பெறப்பட்டிருக்கவில்லை.

## செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

செயற்திட்டத்தினை தொடங்குவதற்கு முன்னர் அப்பகுதிக்கான தேவைகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளாமல் வவுனியா மாவட்டத்தில் ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டில் கபடி ஆடுகள வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதுடன் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பிரதேச சபைகளுக்கு ரூபா 3,014,206 பெறுமதியில் 03 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஒப்பந்த காலத்தினுள் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,786,341 பெறுமதியான காசோலைகள் இத்திணைக்களத்தின் வருமானக்கணக்கில் 14 செப்டம்பர் 2016 வரவு வைக்கப்பட்டிருந்தன. ரூபா 1,984,824 பெறுமதியான 02 ஏனைய காசோலைகளும் இத்திணைக்களத்தின் பொது வைப்புக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தன.

## கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

கல்வி அமைச்சினால் அருகிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை செயற்திட்டத்தில் மூன்று பாடசாலைகளின் வேலைகள் ரூபா 31.7 மில்லியன் பெறுமதியில் ஆரம்பிப்பதற்கு முன்பே முழுமையாக கைவிடப்பட்டிருந்தன.

## பணியாளர்கள் நிர்வாகம்

03 மார்ச் 2009 ஆம் திகதியிடப்பட்ட என்பி/02/2009(7) ஆம் இலக்க மாகாண பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், ஒரு நிறுவனத்தில் ஒரு அதிகாரிக்கான அதிகபட்ச சேவைக்காலம் 05 ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும், யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையில் 27 ஊழியர்கள் 07 தொடக்கம் 34 ஆண்டுகளாக வரை தொடர்ந்து ஒரே அலுவலகத்தில் பணிபுரிக்கின்றனர்.

மருத்துவ அதிகாரிகளுக்காக 864 அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது 644 மருத்துவ அதிகாரிகள் மட்டுமே பணியாற்றுகின்றனர். அதன் விளைவாக பல புற எல்லை சார்ந்த மருத்துவமனைகளில் மருத்துவ அதிகாரிகள் ஆலோசனையின்றி செயற்பட்டு வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்காக 97 அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது 90 பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மட்டுமே 2018 ஆம் ஆண்டில் பணிபுரிந்து வந்தனர். ஆதன் விளைவாக மாகாணத்தில் 07 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை

# வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையினால் மீளாய்வாண்டுக்காக ரூபா 30,937.3 மில்லியன் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் உள்ளக வழிகளினூடாக ரூபா 9,290 மில்லியனுமாக ரூபா 40,227 மில்லியன் கூட்டுத்தொகை வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக முறையே ரூபா 32,058.5 மில்லியன் தொகையும் ரூபா 8,168.8 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தம் ரூபா 40,227.3 மில்லியன் செலவின மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அரசாங்க மானியமாக ரூபா 24,073 மில்லியன் தொகையும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 8,591 மில்லியன் தொகையுமாக ரூபா 32,669.3 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கு ரூபா 30,710.2 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்கு ரூபா 2,233.5 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்த ரூபா 32,943.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## நிலையான வைப்புக்களில் நிதியினை முதலீடு செய்தல்

பிரதம அமைச்சின் கீழ் மாகாண சபையினால் நியதிச்சட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானங்களிலிருந்து பொதுமக்களின் நலனுக்காக நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றாது ரூபா 196.99 மில்லியன் வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## ஏனைய பணிகளிற்காக ஆசிரியர்களை விடுவித்தல்

தாபனவிதிக் கோவையின் ஏ ஆம் அத்தியாயத்தின் 2.5.1 ஆம் பிரிவின் படி அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவர் வேறொறு சேவைக்கு 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலத்திற்கு விடுவிக்கப்படக் கூடாத போதிலும், வடமேல் மாகாணத்தின் 04 கல்வி வலயங்களிற்குரிய 24 ஆசிரியர்கள் முப்படைகளின் தொண்டர் படையின் முழுநேரச் சேவைக்காக விடுவிக்கப்பட்டு 02 ஆண்டுகள் முடிவடைந்திருந்தன. இருப்பினும், மீண்டும் ஆசிரியர் சேவைக்கு சமுகமளித்திருக்கவில்லை. அத்துடன், 1993 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இந்த 24 ஆசிரியர்களிற்காக ரூபா 61.14 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளம் வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## முத்திரைக் கட்டணமும் நீதிமன்றத் தண்டப்பணமும்

உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சமூக சேவைகளை நிறைவேற்றுவதற்காக 31 உள்ளூராட்சி மன்றங்களிற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை சேகரிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 323.23 மில்லியன் மற்றும் ரூபா 150.90 மில்லியன் முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப்பணங்களையும் பிரதம செயலகத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நிலுவை வருமானமும் விளைவுதிறன் வரியும்

பிரதம செயலகம், மாகாண வருமானத் திணைக்களம் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருமானக் குறியீடுகளிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 236.21 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் மற்றும் 14 பிரதேச செயலகங்களினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 65.49 மில்லியன் நிலுவை விளைவுதிறன் வரி மற்றும் காணிக் குத்தகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## பயனற்ற சொத்துக்கள்

உரிய சாத்தியவள ஆய்வு மற்றும் திட்டமிடல் இன்றி ரூபா 12.62 மில்லியன் பூரணப்படுத்தப்பட்டிருந்த மதுரன்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதியளித்தல் நிலையம் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது.

பிடவைகள் திணைக்களத்தின் ஜனசலு நிலையத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பல்வேறு அளவிகளிலுள்ள ரூபா 1.14 மில்லியன் பெறுமதியான நுல் இருப்பு காணப்பட்டது.

## தோல்வியடைந்த செயற்திட்டங்கள்

மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் கர்ப்பம் தரித்த பசுக்களை அதிகரிக்கச் செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 7.6 வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் இறுதிவரை அதில் ரூபா 6.61 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாட்டுத்தொழுவம் அமைக்கப்படாதிருந்ததுடன், விற்பனைக்காக ஒரு பசுவேனும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## காலங்கடந்த மருந்துகளும் தரக்குறைவான மருந்துகளும்

குருணாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழுள்ள 48 நிறுவனங்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 9.69 மில்லியன் பெறுமதியான 439 காலங்கடந்த மருந்துகளும் ரூபா 2.60 மில்லியன் பெறுமதியான 124 தரக்குறைவான மருந்துகளும் காணப்பட்டன.

## முகாமைத்துவ செயற்திறனின்மை

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வடமேல் மாகாண இராணுவ வீரர் ஞாபனச்சின்னத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 18.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2018 மே 11 ஆந் திகதி இடம்பெற்ற திறப்பு விழாவிற்காக கருதுகோள் அடிப்படை அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 7.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இராணுவ வீரர் ஞாபனச்சின்ன திறப்பு விழாவிற்கான செலவினம் அதனை நிர்மாணிப்பதற்கு ஏற்பட்ட செலவினத்தில் 38 சதவீதமாகக் க

# வட மத்திய மாகாண சபை

வடமத்திய மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டுக்காக ரூபா 18,199.92 மில்லியன் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் உள்ளக வழிகளினூடாக ரூபா 4,240 மில்லியனுமாக ரூபா 22,439.92 மில்லியன் கூட்டுத்தொகை வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்திலிருந்து மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக முறையே ரூபா 18,314.91 மில்லியன் தொகையும் ரூபா 3,921.31 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தம் ரூபா 22,236.22 மில்லியன் செலவின மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அரசாங்க மானியமாக ரூபா 14,013.10 மில்லியன் தொகையும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 3,961.30 மில்லியன் தொகையுமாக ரூபா 22,974.44 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கு ரூபா 18,635.37 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்கு ரூபா 9,764.70 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்த ரூபா 28,400.70 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,426.30 மில்லியனாகக் காணப்பட்டது.

வடமத்திய மாகாண சபையினால் 2018 இல் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் தீர்க்கப்படாதுள்ள கட்டுநிதி வரவு மீதியின் மொத்தம் ரூபா 29.03 மில்லியனாகக் காணப்பட்டதுடன் மாகாண சுகாதார திணைக்களத்தினால் தீர்க்கப்படாத கட்டுநிதி செலவு மீதி ரூபா 3.33 மில்லியனாகக் காணப்பட்டது. அதில் 04 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்குரிய 4 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாதுள்ள ரூபா 27.86 மில்லியன் மீதியின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## உள்ளுராட்சி மன்றங்களிற்கு தீர்க்கப்பட வேண்டிய வருமானம்

மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 288.06 மில்லியன் நீதிமன்றத் தண்டப்பணம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளுராட்சி மன்றங்களிற்கு ரூபா 190.02 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 98.04 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 26 உள்ளுராட்சி மன்றங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 149.74 மில்லியன் முத்திரைக் கட்டணம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளுராட்சி மன்றங்களிற்கு ரூபா 114.51 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, சேகரிக்கப்பட்ட முத்திகை கட்டணத்தில் ரூபா 35.23 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளுராட்சி மன்றங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## மாகாண பிரதம அமைச்சு நிதியம்

1992 இன் 05 ஆம் இலக்க பிரதம அமைச்சு நிதியக் கட்டளைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவினால் நிதியத்தின் முகாமைத்துவமும் நிர்வாகமும் அதன் ஆளுகைச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் ஆளுகைச் சபை, பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 06 நபர்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமென்பதுடன் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் நிதியம் பேணப்பட வேண்டிய முறை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்காமையால், மாகாண சபை கலைக்கப்பட்ட திகதியிலிருந்து நிதியம் செயற்பட்டிருக்கவில்லை.

## நிலுவை முத்திரைக் கட்டணம்

1990 இன் 13 ஆம் இலக்க வட மத்திய மாகாண நிதிச் சட்டத்தின் ஓஜஜ ஆம் அத்தியாயத்தின் 40(2) ஆம் பிரிவின் பிரகாரம் அசைவுறாத ஆதனங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கையளிப்பதற்குத் தேவையான படிவங்களிற்காக செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் அந்த படிவங்களில் கையொப்பமிடுகையில் செலுத்தித் தீர்த்தல் வேண்டும். 2018 ஆம் ஆண்டில் இரண்டு நொத்தாரிசுகளால் கைச்சாத்திடப்பட்டிருந்த 32 படிவங்களிற்காக ரூபா 728,250 தொகையான முத்திரைக் கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது. 2019 ஏப்ரல் மாதம் இறுதி வரையிலும் அந்த முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## பூரணப்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

வட மத்திய மாகாணத்தில் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப தரமுடைய விவரண விடியோ நிகழ்ச்சியொன்றை தயாரித்தல், கவர்ச்சிமிக்க புகைப்படங்களுடன் கூடிய தரமான புத்தகமொன்றை உருவாக்குதல் மற்றும் முறையான தகவல்களை உள்ளடக்கிய இணையதளம் ஒன்றை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக பிரதம செயலாளரினால் வழங்குனர் ஒருவருடன் ரூபா 15.80 மில்லியனுக்கு 2016 மார்ச் 23 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஊடன்படிக்கைத் தொகையில் 77 சதவீதமான ரூபா 12.14 மில்லியன் 2016 திசெம்பர் 26 ஆந் திகதியன்று செலுத்தி முடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2019 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரை செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டு மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் பிரதான அங்கமான உல்லாசப் பிரயாணிகளை கவரக்கூடிய இணையதளத்தை உருவாக்குவதற்கு வழங்குனருக்கு உள்ள தகைமை மற்றும் வழங்குனர் இதற்கு முன்னர் உருவாக்கியிருந்த இணையதளங்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளாது அத்துடன் திறந்த கூறுவிலையினைக் கோராது வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதி குறிப்பிடப்பட்டிருக்காமை உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகள் உடன்படிக்கையில் காணப்பட்டமையால் வழங்குனருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையினைக்கூட மேற்கொள்ள முடியாதிருந்தது.

## இரத்தக் கசிவு வடிகட்டல் இயந்திரம் பயனற்றுக் காணப்படுகின்றமை

கேபிதிகொல்லேவ ஆதார வைத்தியசாலையில் இரத்தக் கசிவுப் பிரிவொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1.37 மில்லியன் தொகை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினாலும், அந்தப் பிரிவிற்காக 04 இரத்தக் கசிவு வடிகட்டல் இயந்திரங்கள், 04 கட்டில்கள் மற்றும் RO நீர் வடிகட்டல் முறைமை உள்ளிட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை சுகாதார போசாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சினாலும் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, இரத்தக் கசிவு இயந்திரத்தினை பாதுகாத்து இரத்தக் கசிவுப் பிரிவை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு அதிகூடிய வலுகொண்ட மின்பிறப்பாக்கியொன்றும் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மருத்துவ நிபுணர் உள்ளிட்ட பதவியணியொன்று வழங்கப்பட்டிருக்காமை காரணமாக இரத்தக் கசிவுப் பிரிவு செயலிழந்து காணப்பட்டது. நாளொன்றுக்கு 16 சிறுநீரக நோயாளர்களின் இரத்தக் கசிவினை பரிசோதிக்கும் ஆற்றலுடைய இந்த இயந்திரம் செயற்பாடற்றுக் காணப்பட்ட 02 ஆண்டு காலத்தில் நோயாளர்களின் 11680 இரக்கசிவுப் பரிசோதனைகளை (Dialysis) மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

## பயனற்ற செலவினம்

நோயாளர்களின் தரவுகளை கணனிமயப்படுத்தல், மருந்துகளை விநியோகித்தல் குறைபாடுகளை குறைத்துக் கொள்ளல், வினைத்திறன் மற்றும் பயனுறுதியினை மேம்படுத்துதல் மற்றும் சிகிச்சைகளிற்காக வருகைதருகின்ற நோயாளர்களிற்கு குறுகிய காலத்தில் சிகிச்சையளித்தல் போன்ற நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் அதன்மூலம் சுகாதார சேவையின்

வினைத்திறனை முன்னேற்றக்கூடிய விதத்திலும் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 03 வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவினை கணனிமயப்படுத்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, 2012 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சாத்தியவள ஆய்வின்றியும் ஊழியர்களைப் பயிற்றுவிக்காதும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 12.35 மில்லியன் பெறுமதியான கணனி உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனி உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களில் ரூபா 9.68 மில்லியன் பெறுமதியானவை தொழில்நுட்ப ரீதியாக காலங்கடந்திருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடையப்பட்டிராமையால் செலவினம் பயனற்றதாகியிருந்தது.

## கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

வட மத்திய மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் மாகாண திணைக்களங்களில் பொறியியல் வேலைகளிற்காக மீளாய்வாண்டில் 473 செயற்திட்டங்களிற்காக செயற்திட்ட திட்டங்களை வகுத்தல், பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல் உள்ளிட்ட பொறியியல் மதியுரைச் சேவைகளுடன் தொடர்புடைய ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 1,777 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் ரூபா 977 மில்லியன் தொகைக்குரிய 192 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 800 மில்லியன் பெறுமதியான 282 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

# ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 23,887 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 19,567 மில்லியன் அரசாங்க மானியங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் ரூபா 4,320 மில்லியன் உள்ளக வழிகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் மீண்டெழும் செலவினமாக ரூபா 20,031 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக 3.855 மில்லியனாக பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 19,053 மில்லியன் கிடைத்திருந்ததுடன் உள்ளக மார்க்கமாக ரூபா 3,708 மில்லியனுமாக சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,307 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,937 மில்லியனுமாக மில்லியனுமாக செலவழிக்கப்பட்டிருந்தது.

ஊவா மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வாண்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## வருமான முகாமைத்துவம்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள 13 வருமான விடயங்கள் தொடர்பாக ஊவா மாகாண சபையின் நிதியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த நிதி சாசனத்தின் பிரகாரம் 05 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 147.88 மிலலியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கிவல்லை. அந்நிலுவை வருமானம் 22 ஆண்டு முதல் 01 ஆண்டு வரையான வீச்சில் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியில் அந் நிலுவை வருமான மீதிளை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## செயற்பாட்டு வினைத்திறனின்மை

திட்டவட்டமான மானியங்களைப் பயன்படுத்தி மாகாண சபை உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.
அச்செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தும் போது 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த திட்டவட்டமான மானியங்களிலிருந்து 30 சதவீதமான அளவு நிதிஏற்பாட்டைப் பயன்படத்தக்கூடியதாக இருந்த செயற்திட்டத்திற்கு அந்த எல்லையை மிகைத்து 46 சதவீதமான நதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது, மேலும் செயற்திட்டமொன்றின் செலவிடக்கூடிய எல்லையில் மொத்த திட்டவட்டமான நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் ஆக இருந்த போதும் அந்த எல்லையை விஞ்சி 19 சதவீதம் செலவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அச்செயற்திட்டத்திற்காக செலவிடக்கூடிய எல்லை ரூபா 41.77 மில்லியனால் மிகைத்து நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அத மிகை எஞ்சிய 03 செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டின் சேமிப்பிலிருந்து மேவுகை செய்யப்பட்டிருந்தது.

## முகாமைத்துவ செயற்திறனின்மை

2001 இன் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை தொடர்பான நியதிச் சட்டத்தின் பிரகாரம் ஊவா மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து சேவைகளையும், ஊவா மாகாணத்திற்கு பொருந்தும் வகையில் ஊவா மாகாணம் மற்றும் தொடர்புடைய மாகாணங்களுக்கு இடையே பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் முறைப்படுத்த வேண்டியிருந்தது. அச்செயற்பாடுடன் இணைந்த ஏனைய செயற்பாடுகளை முறைப்படுத்தும் நோக்கில் ஊவா மாகாண சபையின் ஊவா மாகாணத்திற்கு பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கான நியதிச் சட்டத்திற்கான பிரமாணங்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் எல்ல நகரின் சுரங்கத்தின் மேற்பகுதியின் நிலத்தை தயார்ப்படுத்தி பூஞ் செடிகள் நட்டு அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 700,200 செலவிடப்பட்டிருந்தது. எனினும் முறையாக பராமரிக்கப்படாமையால் 2018 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் நடப்பட்ட பூச்செடிகள் அதிகளவில் சேதமடைந்திருந்தன.

## பசு மாடுகள் மரணித்திருந்தமை

கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சினால் ரூபா 48.00 மில்லியன் 100 கருவுற்ற பசுக்களில் 2017 திசெம்பர் 24 ஆந் திகதி பொரலந்த கால்நடை பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்தன. சுகாதார பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பொருத்தமான மாட்டுத் தொழுவமொன்று பண்ணையில் காணப்படாமையால் ரூபா 3.84 மில்லியன் பெறுமதியான 8 மாடுகள் இறந்திருந்தன.

அவ்வாறே 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் சுகாதார பாதுகாப்பான வகையில் கன்றுகளை பராமரிக்காமையால் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பசுக்கள் ஈன்ற 89 கன்றுகளில் 45 கன்றுகள் மரணித்திருந்தன.

## விளைவற்ற மற்றும் குறைப்பயன்படுடைய சொத்துக்கள்

2016 ஆம் ஆண்டின் போது ரூபா 264,548 செலவிடப்பட்டு வேலைகள் பூர்ததி செய்யப்பட பண்டாரவல மாவட்ட வைத்தியசாலையின் உயிரியல் வாயு பிரிவு 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

மொ/கொவுல்ஆர்கம வித்தியலாயத்தில் 2 கணனி பயிற்சி பிரிவுகளில் இருந்த 50 கணனிகள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 04 ஆசிரியர் விடுதிகள் திருத்தம் செய்யப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமை

## உடமுல்ல கால்வாய் அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டில் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் கொஸ்லந்த உடமுல்ல கால்வாயை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக மாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால் ரூபா 1.1 மில்லியனுக்கு ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி விவசாய அமைப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2019 சனவரி வரையில் இந்த நிர்மாணத்தின் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்முன்னேற்ற அறிக்கையில் உரிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பௌதீக முன்னேற்ற 15 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது

## புத்தகலகஸ் ஆர குளத்தின் மீள்நிர்மாணம்

மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் 2018 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த புத்தகலகஸ் ஆர குளத்தை புனர்நிர்மாணம் செய்யும் வேலை ரூபா 4.23 தொகைக்கு 2018 யூலை 24 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஒக்தோபர் 24 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 சனவரி வரையிலும் இந்நிர்மாணத்தினது எவ்வித புனரமைப்பு வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## ஸ்பிரிங்வெலி வைத்தியசாலையின் நிர்மாணம்

சுகாதார அமைச்சின் தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஸ்பிரிங்வேலி வைத்தியசாலையின் 06 நிர்மாண செயற்பாடுகள் ரூபா 16.99 மில்லியன் பெறுமதிக்கு 2017 மார்ச் 10 ஆந் திகதி தனியார் நிர்மாண கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் 04 செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் 2017 யூலை 08 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 ஒக்தோபர் 04

ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 02 விவசாய அமைப்புக்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட 02 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பாக அவ்விசாய அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், வேறு விவசாய அமைப்புகளுக்கு அந்நிர்மாணங்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 3.89 ஆன நிதிஏற்பாடு பயன்படுத்த முடியாதிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

## எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை

ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கை தொடர்பான அமைசினால் 2017 ஆம் ஆண்டின் போது விவசாய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரம்புக்பொத கால்வாயின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளின் வேலைப் பெறுமதி ரூபா 1.82 மில்லியனாக இருந்தது. அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதி அடிப்படையில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1.17 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஓரச்சுவர் வளைந்து மீண்டும் ஆதாரமொன்று பொருத்தப்பட்டு தயார் செய்யப்பட்டிருந்ததுடன் பதுளை பிரதேச பொறியியலாளருடனான குழுவினால் இவ் வீதி வாகனப் போக்குவரத்திற்கு பொருத்தமற்றதென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீதியின் மத்தியில் அமைந்துள்ள 03 மின்சார தூண்கள் 2018 செப்தம்பர் 05 ஆந் திகதி வரை அகற்றப்பட்டிருக்கவில்லை.

# சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டுக்கான ரூபா 24,641 மில்லியன் அரச ஒதுக்கீடுகள் மூலமும், உள்ளக வீதிகளுள் ரூபா 4,995 மில்லியன் ரூபாவாகவும் மொத்தம் ரூபா 29,636 மில்லியன் வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு மீண்டெழும் செலவாக ரூபா 26,436 மில்லியனும் மூலதன செலவாக 3,200 மில்லியன் ரூபா என மொத்தம் ரூபா 29,636 மில்லியன் பயன்படுத்த மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு அரச ஒதுக்கீடாக ரூபா 23,772 மில்லியனும் உள்ளக வீதிகளிலிருந்து ரூபா 4,002 மில்லியன் என மொத்தம் ரூபா 27,774 மில்லியன் வருமானம் திரட்டப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு மீண்டெழும் செலவாக ரூபா 24,098 மில்லியன் மற்றும் மூலதன செலவாக ரூபா 1,964 மில்லியனுமாக மொத்தம் ரூபா 26,062 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண சபைக்கு 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகளின் தொகுப்பு கீழ் வருமாறு.

## சுற்றறிக்கை ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாமல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தமை

- சப்ரகமுவ மாகாண அரச சேவையில் ஆரம்ப நிலை கலைஞர்கள் அல்லாத சேவை பிரிவுக்காக ஸ்தாபனக் கோவையில் 02 ஆம் பிரிவின் படி மேற்படி சேவைப் பிரிவில் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரி சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளராவார். எனினும் சப்ரகமுவ மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆரம்பநிலை கலைஞர்கள் அல்லாத சேவைப் பிரிவில் 02 ஆம் தர இரண்டு தொழிலாளர் பதவிகளுக்கு அமைச்சின் செயலாளரினால் 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டு அன்று முதல் 2018 டிசம்பர் 31 வரை அவ்வதிகாரிக்கு மொத்தம் ரூபா 3.1 மில்லியன் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

- 2007 மே 11 ஆம் திகதிய 09/2017 ஆம் இலக்க, 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதி 27/2017 ஆம் இலக்க மற்றும் 2018 பெப்ரவரி 20 ஆம் திகதி 03/2018 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக 2014 மே 02 ஆம் திகதி முதல் 2018 ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை சப்ரகமுவ மாகாண சபையில் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் கணக்காளர் விஷேட தர அதிகாரியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவருக்கு மொத்தம் ரூபா 6,52,662 தொழில் கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் நிலுவை சம்பளம் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

## வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளின் வருமானம்

ஐந்து மாகாண வைத்தியசாலைகளுக்கு திரட்டப்பட்ட மாதாந்த சிற்றுண்டிச்சாலை வருமானம் மாகாண சபை வருமானத்தில் வரவு வைக்காமல் வைத்தியசாலைகளின் பிரத்தியேக கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டின் இறுதியின் அந்தக் கணக்குகளின் மிகுதி மொத்தம் ரூபா 7.7 மில்லியன் ஆகும். அம்பிலிபிட்டிய ஆதார வைத்தியசாலையினால் இவ்வருமானத்தில் ரூபா 8,40,605 சுற்றுலாக்கள், உபசரிப்புக்கள், தொலைபேசி கொள்வனவு, போக்குவரத்து செலவு ஆகியவற்றுக்கு அங்கீகாரமின்றி செலவிடப்பட்டுள்ளது.

## பிரகடனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட நிதியத்திற்கு சட்டக் கோவையொன்று ஏற்படுத்தப்படாமை

- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 2007 இன் 30 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க பிரகடனத்தில் 42(ஆ) சரத்தின் படி

கூட்டுறவு நிதியை முடிப்பது மற்றும் நிர்ணய நிதியை கட்டுப்படுத்துவதற்கு சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும், அவ்வாறான சட்ட கோவையொன்று ஏற்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

- 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 20(3) சரத்தின் படி ஆளுனர் அலுவலகத்தின் அவசர சந்தர்ப்ப நிதியத்திற்கு பணம் பெற்றுக் கொள்வது, நிதியத்திலிருந்து பணத்தை ஒதுக்குவதற்கு மற்றும் அது தொடர்பான சகல விடயங்களையும் முறையாக முன்னெடுப்பதற்கு ஆளுனரினால் சட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெறவில்லை.

## நிலுவை வருமானம்

மீளாய்வு ஆண்டு நிறைவில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டிய காணி வரி தொகை ரூபா 13.4 மில்லியனாக இருந்த போதிலும், அந்த மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கு மாகாண திணைக்களம் தவறியுள்ளது.

## செவிப்புல உபகரணங்களை கொள்வனவு செய்து விநியோகம் செய்தல்

சமூக நலன்புரி அமைச்சினால் தேவைகளை அடையாளம் காணாமல் சமூக சேவை நிதியத்தினால் செவிப்புலனற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஒப்பந்தமொன்றை செய்து கொள்ளாமல் 5.8 மில்லியன் ரூபா செலவில் 400 செவிப்புல உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவ்வுபகரணங்கள் களஞ்சியசாலைக்கு கிடைத்த தினமே சமூக சேவை திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாக மொத்த ஆவணங்களின் படி உறுதியாகியுள்ளது. எனினும் 2019 மே 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மொத்த பௌதீக பரிசோதனைகளின் படி ரூபா 411,700 பெறுமதியான அதிசக்தி வாய்ந்த 23 செவிப்புழு உபகரணங்கள் அலுவலக களஞ்சியத்தில் மற்றும் ரூபா 1.1 மில்லியன் பெறுமதியான மத்திய வலுவுள்ள 85 செவிப்புல உபகரணங்கள் விநியோக நிறுவனத்தில் காணப்பட்டன. அவ்வுபகரணங்கள் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 43 கருவிகள் காலாவதியானதன் பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்தன.

## செயலிழந்த மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான ஐந்து ஆண்டு முதல் செயலிழந்திருந்த ரூபா 5.3 மில்லியன் பெறுமதியான ஐந்து நெசவு நிலையங்களுக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் 12 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் செயலிழந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 0.55 மில்லியன் பெறுமதியான சியம்பலாபிட்டி கைத்தறி நிறுவனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களுக்கும் 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் முதல் இருந்து ரூபா 2.7 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் தவறியுள்ளது.

5 மாகாண வைத்தியசாலைகளுக்குரிய ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான 3 XRay கருவிகள் ரூபா 19.4 மில்லியன் பெறுமதியான Auto clave கருவிகள் 02 ரூபா 12.1 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூட மருத்துவ உபகரணங்கள் இரண்டும் ரூபா 4.8 மில்லியன் பெறுமதியான மின் பிரப்பாகி ஒன்றும் 4 மாதம் தொடக்கம் இரண்டு ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் செயலிழந்து காணப்பட்டது.

## நோக்கத்திற்கு முரணாக செலவிட்டமை

பிரதான அமைச்சு மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு ஒன்றை நிர்மாணித்துக்கொடுப்பதற்காக நிதியுதவி வழங்கும் நோக்கில் சரண செவன வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்நோக்கத்திற்கு முரணாக இத்திட்டத்தின் கீழ் காணியொன்றை கொள்வனவு செய்ய சகல வசதிகளையும் கொண்ட வீடு ஒன்றின் வரவேற்பு அறையை தயாரிப்பதற்கு, இரண்டு மாடிகளை கொண்ட வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட வீடு ஒன்றை திருத்துவதற்கும் கதவு

ஜன்னல்களை பொருத்துவதற்கும் குறைந்த வருமானம் பெறாத நபர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## திட்டமிட்ட வகையில் திட்டங்களை முன்னெடுக்காமை

- கரவனல்ல ஆதார வைத்தியசாலையின் ஐந்து மாடி கட்டடத்தை 18 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யும் நிபந்தனையின் அடிப்படையில் 2015 ஒக்டோபர் 16 ஆம் திகதி ரூபா 105.6 மில்லியன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அக்கட்டடத்தை 2018 டிசம்பர் 31 ம் திகதி பூர்த்தி செய்து ஒப்படைக்கவில்லை.

- எம்பிலிடி மாவட்ட வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தை நவீனமயப்படுத்த 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ரூபா 4.1 மில்லியன் பெறுமதிக்கு சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி ஆக்க மற்றும் இயந்திரவியல் அதிகார சபையினால் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் படி கைத்தொழில் துறையின் பணிகள் 2019 ஜனவரி 30 ஆம் திகதி பூர்த்தி செய்யவேண்டியிருந்த போதிலும் சுகாதார போசாக்குநல சுதேச மருத்துவ துறை அமைச்சினால் முதலாம் சிட்டையான ரூபா 1.78 மில்லியன் செலுத்தப்படாமையினால் ஒப்பந்தகாரரினால் நிர்மாணப்பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது.

- மீளாய்வு ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி ரூபா 37.7 மில்லியன் ஆகவும் விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான கரிவேப்பிலை விவசாய பயிற்சி நிலையத்தின் ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பது, மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் குளியல் அறை, சாப்பாட்டு அறை, மற்றும் மேல் மாடியை நிர்மாணிப்பதற்கும் ருவன்வெல்ல விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் நிர்மாணப்பணிகள் ஒப்பந்தகாரர்களினால் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமையினால் தாமதம் ஏற்பட்டது.

- மாகாண வீதி அமைச்சினால் மீளாய்வு ஆண்டில் முன்னெடுப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீட்டு செலவீனம் ரூபா 34.6 மில்லியனாகவும் நில அலங்காரம் 2 வீதி அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றுக்கு ஒப்பந்தகாரர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக அவை ஆரம்பிக்கப்படவில்லை.

- மாகாண விவசாய திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனம் ரூபா 35.9 மில்லியனாகவும் கரிவேப்பிலை விவசாய பயிற்சி நிலையத்தின் உத்தேச விடுதி கட்டடத்தின் முதலாம் கட்டத்தை நிர்மாணிக்கும் திட்டம் 2017 ஜூன் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வு ஆண்டின் இறுதியில் இதற்கென ரூபா 22.2 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டடத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்காக ரூபா 74.3 மில்லியன் பணி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 2018 ஒக்டோபர் 01 ஆம் திகதி அபிவிருத்தி ஆக்க இயந்திரவியல் அதிகார சபைக்கு அனுப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தகாரர்கள் உரிய முறையில் நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளாமையினால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. இதன் முதலாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியும் 2019 மே 31 ஆம் திகதி வரையும் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளாமையினால் செலவிடப்பட்ட பணம் பயனற்று போயுள்ளது. இதன் அடிப்படையில் இத்திட்டத்தினால் எதிர்பார்த்த நோக்கம் 2019 மே 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்ய முடியவில்லை.

- குருவிட்ட ஹல்பே சமஹி மாவத்தைக்கு குடிநீரை வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கத்தின் ஒதுக்கீடு மற்றும் வழிக்காட்டல்களின் கீழ் ஏற்பாடுகளுக்கு முரணாக சமுர்த்தி சங்கம் ஒன்றுக்கு ரூபா 1.7 மில்லியன் பெறுமதியான நேரடி ஒப்பந்தம் ஒன்றை குருவிட்ட பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளது. 2017 ஒக்டோபர் 5 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் நீரை பெற்று கொள்ள பொருத்தப்பட்டிருந்த நீர்பம்பி செயற்படுத்துவதற்கு தேவையான மின் வலு அப்பகுதியில் காணப்படாமையினால் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

## மேலதிக கொடுப்பனவு

- மாகாண வீதி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டிருந்த விளையாட்டு மைதானம் மற்றும் 08 வீதி அபிவிருத்தி திட்டங்கள், நிறைவேற்றப்படாத வேலைகள் பகுதிகளுக்கு என மொத்தம் ரூபா 1.1 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கொலன்ன பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 21 விளையாட்டு மைதான அபிவிருத்தி திட்டங்களுக்கும் செலுத்தப்பட்ட வேலை பிரிவுகள் மூலம் உள்ளடக்கப்பட்டிருந்த பணிகள் மேலதிக பணிகளாக சிட்டைகளில் உட்படுத்தப்பட்டு 38,872 கன மீட்டர் மண்ணுக்காக மொத்தம் ரூபா 5.9 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

- மாகாண வீதி அமைச்சினால் குருவிட்ட பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 2016 டிசம்பர் 31 ஆம் திகதி இரத்து செய்யப்பட்டிருந்த பரக்கடுவ வட்டப்பிடிய அருனலு கரபந்தாட்ட மைதானத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கென 2018 ஏப்ரல் 2 ஆம் திகதி ரூபா 1.3 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

- பிரதான அமைச்சினால் பலாங்கொட நிறைவேற்று பொறியியல் அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்ட பலாங்கொட ஆதார வைத்தியசாலையின் 5 மாடி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான பௌதீக பரிசோதனையில் பெற்று கொள்ளப்பட்ட அளவீட்டுடன் கூடிய கொடுப்பனவு சிட்டைகளை ஒப்பிடும் போது 9 பணிகளுக்காக ரூபா 3.6 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

- 2017 ஆம் ஆண்டு சப்ரகமுவ மாகாண வீதி அமைச்சின் மொத்த ஒதுக்கீடு ரூபா 1535.42 மில்லியனில் ரூபா 566.34 மில்லியன் அதாவது 37 சதவீதமான ஒதுக்கீடுகள் எம்பிலிபிடிய பிரதேச சபைக்கு 380 கைத்தொழில்களை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. சபை எல்லையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய துறைகள் தொடர்பாக விசேட அடையாளம் காணாமல் அப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 112.09 மில்லியன். 57 திட்டங்களில் 30 திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளை நிறைவேற்றாமல் 17.92 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. 3 திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 4.16 மில்லியன் பயனற்று போயுள்ளது.

## தாமதக் கட்டணங்களை அறவிடாமை

மாகாண கல்வியமைச்சினால் பிள்ளைகளுக்கான 3,000 பெரிய கதிரைகளை கொள்வனவு செய்ய ரூபா 5.7 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்றுடன் சிறுவர்களுக்கான 3000 பெரிய கதிரைகளை ரூபா 5.7 மில்லியனுக்கு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பொருட்களை ஒப்படைப்பதற்கான இறுதி திகதி ஒப்பந்தத்தில் உட்படுத்தப்படாத போதிலும் கேள்விமனு கோறும் போது ஆவணங்களில் உட்படுத்தப்பட்ட பொருட்களை பிரத்தியேக ஆவணம் ஒன்றின் படி 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் அப்பொருட்களை ஒப்படைக்க வேண்டியிருந்தது. 27 வாரங்கள் தாமதமடைந்த பின்னர் 2017 ஜுலை 14 ஆம்

திகதி பொருட்களை ஒப்படைக்க ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பொருட்களை வழங்க தாமதம் அடைந்தமையினால் குறித்த தாமத கட்டணமாக 1.1 மில்லியன் ரூபாவை ஒப்பந்தகாரரிடம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றாமை.

கிரிஎல்ல சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகரின் மாதாந்த அறிக்கையின் படி 2018 ஒக்டோபர் மாதத்தில் பாதுகாப்பற்ற கிணறுகளை பயன்படுத்திய வீடுகளின் எண்ணிக்கை 1972 ஆகும். மலசலகூட வசதிகளற்ற 7 வீடுகள் காணப்பட்ட போதிலும் அவர்களுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க மாகாண பிரதான அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை.

2 எலபாத்த பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளின் பொது சுகாதார பரிசோதகர்களின் மாதாந்த அறிக்கையை ஆராய்ந்த போது 2018 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு நிறைவின் மலசலகூட வசதியற்ற 55 வீடுகளும் உரிய சுகாதார வசதிகளற்ற மலசலகூடங்களை பயன்படுத்தும் 48 வீடுகளும் பாதுகாப்பற்ற கிணறுகளை பயன்படுத்தும் 364 வீடுகளும் காணப்பட்டன. அவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்க மாகாண பிரதான அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் இந்நிலை முறையே 139 சதவீதமாகவும் 50 சதவீதமாகவும் 14 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

## நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

சப்ரகமுவ மாகாண சபையின் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு மாகாண செயல் நிர்ணய அபிவிருத்திகளுக்காக ரூபா 2,746 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வொதுக்கீடுகள் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்ற வேண்டி இருந்த போதிலும் அதன் ஒரு நோக்கமான வளிமண்டலவியல் மாற்றங்கள் மற்றும் அதன் அழுத்தங்களுக்கு எதிராக துரிதமாக நடைமுறைப்படுத்தும் நோக்கங்கள் மாகாண சபையினால் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காணப்பட்ட 16 நோக்கங்களில் முக்கிய இலக்குகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. 2018 ஆம் ஆண்டு செயன் முன்னேற்ற அறிக்கையின் படி 2018 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்குகள் நிறைவேற்றப்படவில்லை.

# கிழக்கு மாகாண சபை

கிழக்கு மாகாண சபை அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 24,752 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 4,270 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 29,022 மில்லியன் தொகையான வருமானத்தை 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பிட்டிருந்ததுடன், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 24,752 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 3,603 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 28,335 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையினை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அரசாங்க மானியங்களிலிருந்து ரூபா 20,482 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,838 மில்லியன் உள்ளடங்கலாக 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 24,320 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 24,586 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 2,557 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 27,143 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்து.

கிழக்கு மாகாண சபை தொடர்பில் 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## மாகாண வருமான ஆணையாளர் நியமிக்கப்படாமை

2008 இன் 01 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் படி, மாகாண வருமான ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். 2011 திசெம்பர் 18 ஆந் திகதி முதல் மாகாண வருமான ஆணையாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக்குறிப்பின் 3.2 ஆம் பிரிவு மற்றும் கிழக்கு மாகாண, மாகாண வருமானத் திணைக்களத்தின்வின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் இந்தப் பதவியை நிரப்புவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்காதிருக்கவில்லை. 07 ஆண்டுகளாக மாகாண வருமான ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படாமையின் விளைவாக, கிழக்கு மாகாணத்தின் வருமானச் சேகரித்தலிற்கும், நிர்வாகத்திற்கும் உரிய செயற்பாடுகள் பாரிய அளவிற்கு தாக்கமளித்திருந்தன.

## பலவீனமான வருமானச் சேகரிப்பு

மாகாண வருமானத் திணைக்களம் 2008 நவம்பர் 18 ஆந் திகதி 54 பதவியணயினருடன் தனியானதோர் திணைக்களமாக தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 மாகாண சபை இத்திணைக்களத்தை கலைத்துவிட்டு திணைக்களத்தின் மாகாண வருமானச் சேவையிலுள்ள 54 பதவிகளையும் 23 இற்கு குறைத்திருந்தது. அவ்வாறு குறைக்கப்பட்ட பதவியணியில் 01 பிரதி ஆணையாளர், 07 வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் 19 வரி உத்தியோகத்தர் போன்ற முக்கியமான அங்கீகரித்த பதவிகள் உள்ளடங்கியிருந்தன. அதன்விளைவாக, மாகாணத்தின் வருமானச் சேகரிப்பும் வரி நிர்வாகமும் தொடர்ச்சியாக சிக்கலடைந்திருந்தது. திணைக்களத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இது தொடர்பில் இதுவைர திணைக்களம் எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

## வருமானச் சேகரிப்பிற்காக சட்டமொன்றை உருவாக்கத் தவறியமை.

மாகாண வருமானத் திணைக்களம் தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற அடகுபிடித்தல் நிலையங்களை பதிவுசெய்வதற்காகவும் அவற்றிற்கு வருடந்தோரும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காகவும் சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, குறிப்பிடத்தக்க வருமானம் மாகாண சபைக்கு இழப்பாகியிருந்தது.

## முத்திரை வரிச் சேகரிப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள காணிகளை காணிகள் பதிவகத்தில் பதிவுசெய்கையில் அவற்றிற்கான பதிவுக் கட்டணத்தை அறவிடுதல் தொடர்பில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் படி, 794 காணி உரிமையாளர்கள் குறைந்த முத்திரை வரிக் கட்டணத்தை செலுத்தும் நோக்கில் தங்களது காணிகளின் பெறுமதியினை குறைவாக குறிப்பிட்டு பதிவுசெய்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன்காரணமாக, அவ்வாறு குறைவாக மெறுமதியிடப்பட்டிருந்த ஆதனங்களின் மீது ரூபா 14 மில்லியன் மேலதிக முத்திரை வரி விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வாறு மேலதிக முத்திரை வரி விதிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து ரூபா 4.8 மில்லியன் முத்திரை வரியினை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாகாண வருமானத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## உறுதிகளை மதிப்பாய்வு செய்யத் தவறியமை

2012 முதல் 2018 வரையான காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த 7,616 உறுதிகளை மதிப்பாய்வுக்குட்படுத்தி குறைத்து பெறுமதியிடப்பட்டிருந்த காணிகளின் மீது மேலதிக வரியினை விதிப்பதற்காக அவை மாகாண வருமாணத் திணைக்களத்தினால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## காணிகளிலிருந்தான குத்தகை வருமான நிலுவை

09 பிரதேச செயலகங்களுடன் தொடர்புடைய ரூபா 208 மில்லியன் கூட்டுத்தொகையான அரசாங்கக் காணிகளிற்குரிய குத்தகை வருமானம் 1991 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்படுகின்றது. இருப்பினும், இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## பயனற்ற செலவினம்

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ரூபா 2.4 மில்லியன் செலவிட்டு கல்முனை மாநகர சபையினால் பேருந்து தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியில் அதிகாரசபையின் அலுவலகத்தை தாபிப்பதற்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கல்முனை மாநகர சபை இக்கட்டிடத்தின் உரிமையினைக் கையேற்று தனியார் வங்கியொன்றுக்கு வாடகைக்கு வழங்கியிருந்தது. அதன் காரணமாக இக்கட்டிடத்தை அதிகாரசபைக்கு பயன்படுத்த முடிந்திருக்கவில்லை.

## வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வீடுகளை நிர்மாணித்தல்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருந்த வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (2015 - 2019) படி, ரூபா 3,225 மில்லியன் மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் வீடற்ற குடும்பங்களிற்காக 6,600 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், கருதுகோள் அடிப்படை மானியத்தின் கீழ் 50 பயனாளிகளிற்கு ரூபா 10.6 மில்லியன் வீடமைப்பு உதவியும் 300 கழிவறைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 7.5 மில்லியன் நிதி உதவியும் வழங்கப்பட்டதனைத் தவிர்த்து, எதிர்பார்க்கப்படவாறு எந்தவொரு வீடும் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

## சொந்தமாக நிதியங்களை உருவாக்குவதற்குத் தவறியமை

கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளரினால் வெளியிடப்பட்ட G/EPC/B/14/R/H ஆம் இலக்க 2014 யூன் 20 ஆந் திகதிய கடிதத்தின் படி, மாகாண வீடமைப்பு அதிகாரசபை திரட்டிய நிதியத்தில் தங்கியிருக்காது தனக்குச் சொந்தமாக நிதியமொன்றை உருவாக்குதல் கட்டாயமானது என்ற நிபந்தனைக்குட்பட்டு 2014 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்களிற்காக நிதி கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அதிகாரசபை தாபிக்கப்பட்டு 04 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட தனது செலவினங்களை மேற்கொள்வதற்காக தனக்கென நிதியமொன்றை உருவாக்கி

வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

## விசேட கல்விக்காக ஆசிரியர்களை ஈடுபடுத்துதல்

42/2012 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2015 திசெம்பர் 17 ஆந் திகதிய ED/9/18/8/2/6 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், விசேட கல்விப் பாடங்களைக் கற்பிப்பதில் நிபுணத்துவம் பெற்ற ஆசியரியர்கள் அவர்கள் நிபுணத்துவம் பெற்ற பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், கிழக்கு மாகாணத்தின் 13 கல்வி வலயங்களில் விசேட கல்விக்குரிய பாடங்களைக் கற்பிப்பதில் நிபுணத்துவம் பெற்ற 45 ஆசிரியர்கள், அவர்களிற்குரிய விசேட பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபடுத்தப்படாது 2018 திசெம்பர் 31 வரையிலும் விசேடமற்ற பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## கால்வாய் ஒன்றின் குறுக்காக பாடசாலைக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.

வாய்க்கால் நீரை தடுப்பதனால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்பினைக் கருத்திற்கொள்ளாதும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன்கூட்டியஅ ங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் 459 ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களிற்கு இடவசதியினை வழங்கும் பொருட்டு மட்டக்களப்பு மத்திய வலயத்திலுள்ள காத்தான்குடி பாடசாலை ஒன்றில் ரூபா 11 மில்லியன் கிரயத்தில் கால்வாயை ஊடறுத்து இரண்டு மாடி பாடசாலைக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன்விளைவாக, கால்வாயில் பாய்ந்தோடும் நீர் வழிந்தோடாமையால் நுளம்புகள் பரவும் இடமாக மாறியுள்ளது.

## ஆரம்பப் பாடசாலைக் கல்வி

கிழக்கு மாகாணத்திலுள்ள 21 ஆரம்ப பாடசாலைகளிற்கு வழங்குவதற்காக கருதுகோள் அடிப்படை மானியத்தின் கீழ் 2017 இல் ரூபா 608,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்ற பொருட்கள் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை குறித்த பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், பொருட்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் ஆரம்பப் பாடசாலைக் கல்விப் பணியகத்தினால் 2017 ஆம் ஆண்டில் வழங்குனருக்கு பொருட்களிற்கான பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதன்விளைவாக, அரசாங்க நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தது.

## விளைவற்ற சொத்துக்கள்

நாள்பட்ட சிறுநீரக நோயாளர்கள் இன்மை காரணமாக நிந்தவூர் மற்றும் வாழைச்சேனை மருத்துவ மனைகளில் டயலைசிஸ் பிரிவுகள் காணப்படவில்லை. இருப்பினும், மாகாண சுகாதாரத் திணைக்களம் தேவையினைக் கருத்திற்கொள்ளாது அந்த வைத்தியசாலைகளிற்காக ரூபா 18.6 மில்லியன் கிரயத்தில் டயலைசிஸ் சிகிச்சைக்கான உபகரணங்களையும் ரூபா 6.15 மில்லியன் பெறுமதியான மருந்துகளையும் கொள்வனவு செய்திருந்தது. அதன் காரணமாக, குறித்த உபகரணங்கள் 2017 மார்ச் 22 முதல் இதுவரை பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஐந்து தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளிற்காக டிஜிரல் சுகாதாரச் செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூபா 12.32 செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 12.32 பெறுமதியுடைய மடிகணனிகள், அச்சு இயந்திரங்கள், எச்டீ புகைப்படக் கருவிகள், பார்கோட் ரீடர்ஸ் மற்றும் சேர்வர் போன்றன 2018 நவம்பர் 30 வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மாதிரி சேதனப்பசளை தோட்டத்தை தாபித்தல்

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 23 பாடசாலைகளில் அப்பாடசாலை மாணவர்களிடையே விவசாய அறிவை

விருத்திசெய்யும் நோக்குடன் ரூபா 4.2 மில்லியன் கிரயத்தில் மாதிரி சேதனைப்பசளை தோட்டங்களை தாபிப்பதற்குத் 2017 ஆம் ஆண்டில் தீர்மானித்திருந்தது. இருப்பினும், ரூபா 1.99 மில்லியன் பெறுமதியான உபகரணங்களும் இயந்திரங்களும் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டன.

## சிற்றளவு கைத்தொழில் பேட்டை கொத்தணிகளை தாபித்தல்

சிற்றளவு கைத்தொழில் பேட்டை கொத்தணிகளை தாபிப்பதற்கான செயற்திட்டப் பிரேரணையொன்று 2014 இல் முன்வைக்கப்பட்டதுடன் அரச தனியார் பங்குடமையின் கீழ் தனியார் துறையின் பங்குபற்றலுடன் கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தினால் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்தின் அனைத்து மூன்று மாவட்டங்களிலும் 06 சிற்றளவு கைத்தொழில் பேட்டைக் கொத்தணிகளை தாபிப்பதற்கு செயற்திட்டப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உடன்படிக்கையின் 1.4 ஆம் பிரிவின் படி, இந்த உடன்படிக்கைக் காலத்தில் உற்பத்திசெய்யப்படுகின்ற ஒவ்வொரு தொன்னிற்கும் ரூபா 3 கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்று ரூபா 2 வீதம் செலுத்தியிருந்தது. அதன்விளைவாக, மகாகாண சபை குறிப்பிடத்தக்களவு வருமானத்தை இழந்திருந்தது.

- உடன்படிக்கையின் 1.6 ஆம் பிரிவின் படி, மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் ஊடாக சமூகம் சார் அமைப்பினால் தாபிக்கப்பட்ட சமூக நிதியத்திற்கு பயங்களிப்புச் செய்வதற்காக தனியார் ஆடைத்தொழிற்சாலையிலிருந்து கிடைக்கின்ற கட்டணத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறை 0.25 சதவீதம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், சமூகம் சார் அமைப்பிற்கு பங்களிப்புச் செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.